
ஆயுத எழுத்து
சாத்திரி

# ஆயுத எழுத்து

சாத்திரி

திலிபன்
பதிப்பகம்

விலை : **இந்தியாவில் ரூ.400.00**

**ஐரோப்பாவில் 10 யூரோ.**

முதற் பதிப்பு : 2015



© உரிமை : பதிப்பகத்திற்கே



நூலின் பெயர் : ஆயுத எழுத்து

பக்கங்கள் : 392

வெளியீடு : திலீபன் பதிப்பகம்

# நாமார்க்கும் குடியல்லோம்!
# நமனை அஞ்சோம்!

திலீபன் பதிப்பகம்

# என்னுரை

**வாசகர்களுக்கு வணக்கம்,**

இதுவரை சிறுகதைகளையும் கட்டுரைகளையும் பத்திரிகைகளில் மட்டுமே எழுதிக்கொண்டிருந்த எனது முதலாவது நாவல் முயற்சி இது.

கடந்த 30 வருடங்களாக இலங்கைத் தீவில் சுதந்திரத் தமிழ் ஈழத்துக்கான ஆயுத விடுதலைப் போராட்டம் நடந்து முடிந்திருக்கும் நிலையில், அந்தப் போராட்டத்தில் நான் பார்த்த, கேட்ட, அறிந்த, நேரடியாக தொடர்புபட்ட முக்கியமான பல விஷயங்களை, 1983–ம் ஆண்டுக் காலப் பகுதியை தொடக்கமாக வைத்து இந்த நாவலுக்குள் அடக்கியிருக்கிறேன்.

இதில் வரும் சம்பவங்கள் அனைத்தும், ஒரே நபருடன் சம்பந்தப்பட்டவை அல்ல; பல நபர்கள் சம்பந்தப்பட்ட பல்வேறு சம்பவங்கள். ஆனால், இலகுவாக நாவலை நகர்த்துவதற்காக ஒரு கதாநாயகனை உருவாக்கி அவனூடாகவே இறுதிவரை நாவலை நகர்த்தியிருக்கிறேன். அதனால்தான் நாயகனுக்கு நான் பெயரே வைக்கவில்லை. நூலின் ஆரம்பத்தில் இருந்து இறுதிவரை ‘அவன்’ என்றே அழைத்திருக்கிறேன். அவன் என்பவன் பலர். அவன், ஒவ்வோர் ஊரிலும், ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு பெயரிலும் அழைக்கப்பட்டான். பல்வேறு கடவுச்சீட்டுகளில் பல நாடுகளுக்கும் பறந்து திரிந்தான். ஒவ்வொரு நண்பரிடமும் ஒவ்வொரு பெயர்களில்

அறிமுகம் ஆகியிருக்கிறான். எனவே, இந்தப் புத்தகத்தைப் படிக்கும் உங்களில் பலர், இதில் வரும் சம்பவங்களுடன் தொடர்புபட்டிருக்கலாம். பல சம்பவங்கள் உங்கள் நினைவுக்கும் வரலாம். அல்லது நீங்கள் இந்தச் சம்பவங்களைக் கேள்விப்பட்டிருக்கலாம். அப்போதெல்லாம் அவனும் ஒவ்வொரு பெயரில் உங்களுக்கு அறிமுகமாகியிருப்பான். ஆகவே, அந்தச் சம்பவங்கள் நினைவுக்கு வந்தவர்கள் 'அட... அவனா இவன்?' என்று தங்களுக்குத் தெரிந்த பெயரை நினைத்துக்கொள்வார்கள். இந்த நாவலைப் படிக்கும் உங்களுக்குள் கோபம், வெறுப்பு, ஆதங்கம், ஆச்சர்யம், சிரிப்பு, கவலை, சலிப்பு... என்ற ஏதாவது ஓர் உணர்வையாவது ஏற்படுத்தியிருப்பின், இந்தப் புத்தகத்தை நான் எழுதிய நோக்கத்தில் வெற்றிப் பெற்றிருக்கிறேன் என்றே எடுத்துக்கொள்வேன்.

கிழக்கு மாகாண சம்பவங்களின் தகவல்களைச் சரிபார்ப்பதற்கு உதவிய கிழக்கு மாகாணப் பத்திரிகையாளர்களாகப் பணியாற்றிய இரா.துரை ரத்தினம் (சுவிஸ்), நிராஜ் டேவிட் (சுவிஸ்) ஆகியோருக்கும், நாவலுக்கான அட்டை வடிவமைப்பை செய்து தந்த கார்த்திக் மேகாவுக்கும், பல பகுதிகளாக எழுதி முடித்த கதைகளைத் தொகுத்து ஒரு நாவல் வடிவம் கொடுத்த யோ.கர்ணனுக்கும், புத்தகத்தை வெளியிடும் திலீபன் பதிப்பகத்துக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் எழுதத் தொடங்கிய காலங்களில் எனது எழுத்துக்களைப் பிரசுரித்து, அதன் மூலம் வாசக நண்பர்களைப் பெற்றுத்தந்த யாழ் இணையம், ஒரு பேப்பர் பத்திரிகை (லண்டன்), பூபாளம் பத்திரிகை (கனடா), எதுவரை இணைய சஞ்சிகை (லண்டன்), மலைகள் (இந்தியா) ஆகியவற்றின் ஆசிரியர் குழுவினரையும் நன்றியோடு நினைவுகூர்கிறேன்.

என்னுடைய அனுபவங்களில் ஏறக்குறைய 40 சதவிகிதம் மட்டுமே இந்த நூலில் பதிவுசெய்துள்ளேன். மீதம் உள்ள 60 சதவிகித அனுபவங்களை, வெளிநாடுகளில் வாழும் பலரது தனிப்பட்ட பாதுகாப்பு கருதியும், பல்வேறு தருணங்களில் கிடைத்த அனுபவங்களை எழுதக்கூடிய சந்தர்ப்ப சூழ்நிலை இன்னமும் உருவாகவில்லை என்பதாலும் எழுதவில்லை. குறிப்பாக, புலிகளின் வெளிநாட்டு வலையமைப்பு பற்றிய பல விஷயங்கள் இதில் அடங்கும். நான் இந்த நாவலில் எழுதியுள்ள எனது அனுபவங்கள் குறைவு. ஆனால், ஒவ்வொரு வார்த்தையும் நிஜம். இந்த நாவலில் ஆயுதப் போராட்ட காலங்களில் நடந்து முடிந்த சம்பவங்களில் சரி, பிழை பார்ப்பதோ, அவற்றுக்குத் தீர்ப்புச் சொல்ல விழைவதோ எனது நோக்கம் அல்ல.

நான் எழுதாமல் விட்ட 60 சதவிகித சம்பவங்களை, இவற்றுடன் சம்பந்தப்பட்ட வேறு யாரோ ஒருவர் ஒரு நாளில் எழுதலாம். அல்லது

இந்த நூலின் இறுதியில் கார் விபத்தில் சிக்கிய ‘அவன்’ என்கிற கதாநாயகனைக் காயங்களோடு உயிரைக் காப்பாற்றி மீட்டுக்கொண்டு வந்து, நானே எனது வாழ்நாளின் இறுதிக்காலங்களில், ‘இனியென்ன... சாகப்போகிறேன். மீதியையும் எழுதிவிட்டு செத்துப்போகலாம்!’ என நினைத்து எழுதவும்கூடும். காலம் என்பது, வலியது. காலமும் இயற்கையுமே அனைத்தையும் தீர்மானிக்கின்றன. எனவே, இதையும் காலத்தின் கைகளிலேயே கொடுத்துவிட்டு விடைபெறுகிறேன்.

நன்றி... வணக்கம்!

**சாத்திரி.**

*நாவலைப் படித்தவர்கள் உங்கள் கருத்துக்களை*

sathiri@gmail.com *என்கிற மின்னஞ்சலுக்கு*

*அனுப்பி வையுங்கள்.*

# 1

***83*** –ம் ஆண்டு. இந்த நாவல் தொடங்கப்போகிற அந்த நாளும் வழமையான ஒரு நாளாகவே விடிந்தது. தவறான எந்த அசுமாத்தங்களையும் அவனால் உணர முடியவில்லை. வழக்கம்போல படுக்கையில் புரண்டு புரண்டு தாமதமாகவே விழித்து எழுந்தான். இதற்குள் ‘கோதாரில போவான்’ என நான்கைந்து முறை அப்பா புறுபுறுத்தும்விட்டார். அப்பா புறுபுறுக்க, இன்னும் கொஞ்ச நேரம் படுத்திருக்கலாம் எனத் தோன்றியது.

அடுப்படிக்குள் இருந்த அம்மாவுடன், அப்பா ஏதோ சண்டை பிடித்துக்கொண்டிருந்தார். “இவனொருத்தனை சோம்பேறியாய்ப் பெத்திருக்கிறீர். படிக்கிற பெடியன். இப்படிப் பொறுப்பு இல்லாமல் படுத்திருக்க, பார்த்துக் கொண்டிருக்கிறீர்!” – அப்பா – அம்மாவுக்கு இடையில் வழமையாகச் சண்டை இப்படித்தான் தொடங்கும். அவர்களின் சண்டைக்கு, பிள்ளைகளான நாங்கள்தான் காரணமாக இருப்போம். அப்பாக்களுக்கு, சண்டை பிடிக்க ஒரு காரணம் வேண்டும். அந்தக் காரணம் பெரும்பாலும் நாங்களாகத்தான் இருப்போம். சின்ன வயதில் ‘அப்பா’ என்றாலே பெரும் பயம். சாதுவான குலைப்பன் அடிக்கும். இப்போது அப்படி இல்லை. சின்ன வயதில் தொட்டதற்கெல்லாம் அடியும் பேச்சும்தான். இப்போது அதை நினைக்க நினைக்க அடி, நுனி எல்லாம் பத்தி எரியும். அத்தனை சம்பவங்களுக்கும் பழிவாங்க வேண்டும் என மனதுக்குள் கறுவிக்கொண்டிருப்பான். அப்பா புறுபுறுக்க, அவன் புரண்டு படுப்பதும் இதற்காகத்தான்.

ஒரு வகையான பழிவாங்கல்.

என்னவோ தெரியவில்லை ஓர் அக்கா, இரண்டு அண்ணன்கள், இரண்டு தங்கைகள், ஒரு தம்பி என ஏழு பேரைக்கொண்ட குடும்பத்தில், நான்காவதாகப் பிறந்த இவனுக்கு மட்டும்தான் இப்படித் தூங்குகிற பிரச்னை. அதுமட்டுமல்ல, நித்திரையில் உருளும் பிரச்னையும் இருந்தது. இரவில் ஒழுங்காகப் பாயில் படுத்தால், காலையில் பாய் ஓர் இடத்திலும், இவன் வேறோர் இடத்திலும் படுத்திருப்பான். இரண்டுக்கும் இடையில் சுமார் 20 அடி தூரமாவது இருக்கும். சில நேரங்களில் அக்கா, பாயைச் சுருட்டி வைத்துவிடுவார். இவன் எழுந்து பாயைத் தேடுவான். “நாய்க்கு எதுக்கடா போர்த்தேங்காய்... உனக்கு எதுக்கடா பாய்?” என்று அப்பா வழமைபோலச் சத்தம்போட தொடங்கியிருப்பார்.

அடுப்படி பக்கம் அப்பாவின் சத்தம் ஓய்ந்துவிட்டதுபோல் இருந்தது. எங்காவது வெளியில் சென்றிருக்கலாம். அனேகமாக கோயிலடி வாசிகச்சாலைக்குத்தான் போயிருப்பார். இப்போது அவர் வாசிகச்சாலைப் படிக்கட்டில் பரிவாரங்கள் புடைசூழ நடுநாயகராக உட்கார்ந்திருப்பார் என நினைத்துக்கொண்டான். ஊரில் அவருக்குத் தனி மரியாதை இருந்தது. அந்தக் காலத்திலேயே ஊரில் இருந்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்குப் படிக்கச் சென்ற ஆள் அவர். படிப்பில் சிங்கம். அதனாலேயே ஓர் அறிவாளியைப்போல ஊர் அவரைப் பார்த்தது. அவருக்கும் அதால ஒரு குண்டியில தட்டின புளுகம்.

எழுந்தான்... தலைகாணியை வைத்து, அதற்கு மேல் பாயைக் காலால் சுருட்டி வைத்துவிட்டு, முகம் கழுவச் சென்றான். அவன் முகம் கழுவிவிட்டு வருவதற்குள் அக்கா அனைத்தையும் எடுத்து ஒழுங்காக மடித்து வைத்துவிடுவார் என்பது அவனுக்குத் தெரியும். அடுப்படிக்குள் சென்று முதுகை முட்டுக்கொடுத்துச் சுவர் ஓரமாகச் சாய்ந்து உட்கார்ந்துகொண்டான். கண்கள் அதுவாக மூடிக்கொண்டன. “இரவிரவா நித்திரைகொண்டாலும் தூங்கிக்கொண்டுதான் இருப்பீங்களோ துரை?!” என அம்மா திட்டினார். “முகத்தைக் கழுவுடா, தேத்தண்ணி தாறேன்” என்றார். அவன் சிணுங்கிக்கொண்டே மறுபக்கமாகத் திரும்பி கண்களை மூடிக்கொள்ள. யாரோ முகத்தில் தண்ணீர் தெளித்தார்கள். கோபம்

உச்சந்தலைக்குள் சுள்ளென அடித்தது. கண் திறப்பதற்குள் உருவம் மறைந்துவிட்டது. ஆனால், கால் சலங்கை சத்தம் கேட்டது. தங்கச்சிதான். இப்போது அவள் பக்கத்தில் இருக்கும் சின்னம்மா வீட்டுக்குள் சென்றிருப்பாள் என்பது அவனுக்குத் தெரியும். அவளைப் பிறகு கவனிக்கலாம் என நினைத்துக்கொண்டு கிணற்றடிக்குப் போனான்.

முகத்தைக் கழுவிக்கொண்டு திரும்பி வந்து, மேசையில் அம்மா வைத்திருந்த தேநீரைக் குடித்துவிட்டு டியூஷனுக்குக் கிளம்பினான். இப்போது காலையில்தான் டியூஷன் வகுப்பு வைக்கிறார்கள். அவனுக்கு எரிச்சல் எரிச்சலாக வந்தது. இரண்டு வருடங்களாகத்தான் இப்படி. முன்னாடி வகுப்புகளைச் சற்றுத் தாமதமாகத்தான் வைப்பார்கள். ஒன்பதாம் வகுப்பு வரை தாமதமாக வகுப்புகள் வைத்துவிட்டு, இந்த வருடம் நேரம் காலத்துடன் வகுப்புகளை வைப்பதில் அவன் அதிகமாகவே சிரமப்பட்டான். சில சமயங்களில், ‘10–ம் வகுப்புக்கு எதற்காக வந்தேன்?’ என்றும் கவலைப்பட்டிருக்கிறான்.

சைக்கிளில் ஏறியதும் பஞ்சிக்குணம் பஞ்சாகப் பறந்துவிட்டது. மெல்லிய சீட்டியொலியுடன் சைக்கிளை மிதித்தான். முச்சந்தி கடந்து, பவா கடை பக்கமாகப் பிரதீஸ் வந்துகொண்டிருந்தான். அவன் கொஞ்சம் பரபரப்பாக இருப்பதுபோலப் பட்டது. அவன் நிரோஷியைக் காதலிக்கிறான். ஒருதலைக் காதல். அதனால் தினமும் ஏதாவது தலையிடியுடன்தான் திரிவான். ஒருநாள் அவளைக் காணவில்லை என்றால்கூட, மறுநாள் பேய் அறைஞ்ச மாதிரி வருவான். சிரித்தபடி அவனைப் பார்த்தவன் கிட்ட வந்து, “எப்பிடி அடி?” என்றான். அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. புரியாமல் ஒரு பார்வை பார்த்தான். அவன் தெரியாமல்தான் இப்படிப் பார்க்கிறானா அல்லது விளையாடுகிறானா என்பது தெரியாமல் பிரதீஸ் சிறிது நேரம் தடுமாறினான். “ஒன்றுமே தெரியாதா?” எனத் திரும்பத் திரும்பக் கேட்டான். அவனுக்கு எரிச்சலாகவும் இருந்தது. என்ன நடந்தது என்பதை அறியவேண்டும் என்ற ஆவலாகவும் இருந்தது. பிரதீஸின் அலப்பறையை ஒருவாறு சமாளித்துக்கொண்டு, விஷயத்தைக் கேட்டான்.

‘தின்னவேலிச் சந்தியில் நேற்று கண்ணிவெடி வெடித்துவிட்டது!’ என முகத்தில் எந்தவிதமான உணர்ச்சியும் இல்லாமல் சொன்னான்.

அவன் சொன்னதை இவனால் சரியாக விளங்கிக்கொள்ள முடியாமல் இருந்தது. கண்ணிவெடி வெடித்தால் என்ன நடக்கும் என்பது தெரியாதவனாக, “அது வெடிச்சதாலை என்ன பிரச்னை?” என்றான்.

“கண்ணிவெடியால நிறைய ஆமி குளோஸ்” – சொல்லும்போது அவனுக்கு அடக்க முடியாத புளுகம்.

இறந்துபோன ஆமிக்காரரின் தொகையை ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாகத் தமது கற்பனையின் அளவுக்கேற்ப சொல்லிக்கொண்டிருந்தார்கள். “குண்டு வெடித்த இடத்தில் பெரிய கிடங்கு, அதுல தண்ணி ஊத்தெடுக்குது” என்றார் ஒருவர். ‘எதற்கும் வகுப்பு முடிய, தின்னவேலிப் பக்கம் போய்ப் பாப்போம்!’ என மனதுக்குள் நினைத்தபடி சைக்கிளை மிதிக்கத் தொடங்கினான்.

‘யாழ்ப்பாண ரவுணில் ஆமிக்காரர் சனத்துக்குப் போட்டு அடிக்கிறாங்களாம்’ – சைக்கிளில் வந்த ஓர் ஐயா சொல்லிக்கொண்டு போனார்.

விஷயம் தெரியாமல் யாரும் ரவுணுக்குப் போய் மாட்டுப்பட்டுவிடக் கூடாது என்ற முன்னெச்சரிக்கை அது. டியூஷனுக்கு வந்தபோது வாசலில் அவனது நண்பர்கள் கூடிநின்று கதைத்துக்கொண்டிருந்தார்கள். அவன் எதிர்பார்த்ததுபோலவே அவர்களும் தின்னவேலியில் வெடித்த கண்ணிவெடியைப் பற்றித்தான் கதைத்துக்கொண்டிருந்தார்கள். நடந்தது என்ன என்பது யாருக்குமே சரியாகத் தெரியவில்லை. ஆளாளுக்கு எட்டிய கற்பனைப்படி கதை சொல்லிக்கொண்டிருந்ததால், பெரிய குழப்பமே மிஞ்சியது. ஆனால், ஏதோ பெரிய சம்பவம் ஒன்று நடந்தவிட்டது என்பது மட்டும் புரிந்தது. வகுப்பு முடிந்ததும் மத்தியானம் தின்னவேலிப் பக்கம் போய்ப் பார்க்கலாம் என முடிவு செய்தார்கள்.

இவர்கள் ஏழெட்டுப் பேர், ஒரு குழு. ஒன்றாகத்தான் திரிந்தார்கள். பாடசாலைக்குள் நுழையும்போதும் அப்படித்தான்; வெளியேறும்போதும் அப்படித்தான். ஒருவனுக்குக் காய்ச்சல் வந்தால் எல்லோருக்கும் சூடு பறக்கும். இந்தக் குழுவில் இன்னும் சிவா மட்டும் வந்தபாடில்லை. அவன் எப்போதும் இப்படித்தான்... பிந்தித்தான் வருவான்.

சற்றைக்கெல்லாம் அவன் வருவது தெரிந்தது. வளைவு

இல்லாத வீதி என்பதால், ஒருவர் *200* மீட்டர் தொலைவில் வரும்போதே ஆளை அடையாளம் கண்டுபிடிக்க முடிந்தது.

“சிவா வாறான். அவனும் ஏதும் புதினம் கொண்டருவான்” என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே, யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு மினி பஸ் வந்துகொண்டிருந்தது. அதே நேரம் மாதகல் பக்கம் இருந்து சண் மினி பஸ்சும் வந்துகொண்டிருந்தது. ‘சண் மினி பஸ்காரரன், விஷயம் தெரியாமல் யாழ்ப்பாணம் போகிறான், என மற்ற மினி பஸ்காரன் நினைத்து தனது வாகனத்தின் வேகத்தைக் குறைத்து, கோன் சத்தத்தை எழுப்பி எதிரே வந்துகொண்டிருந்த வாகனத்தை நிறுத்தும் சைகை வழங்கினான். இவனது எச்சரிக்கையைப் புரிந்தோ என்னவோ, எதிரே வந்த மினி பஸ்சும் தனது வேகத்தைக் குறைத்து நின்றது.

நின்ற வேகத்தில் மினி பஸ்சில் இருந்து ஆட்கள் குதித்தனர். அது சாதாரண ஆட்கள் அல்ல. சீருடை அணிந்த ராணுவத்தினர். குதித்த வேகத்தில், முன்னால் வந்த மினி பஸ்சின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினார்கள். பின்னர் வீதியில் நின்றவர்கள் மீதும் சுடத் தொடங்கினார்கள். அதே நேரம் பஸ்சில் இருந்த மற்றைய ராணுவத்தினரும் ஜன்னலால் கண்டமேனிக்குச் சுட்டனர். ஒரு கணம் திகைத்து நின்றவன், சைக்கிளைப் போட்டுவிட்டு அங்கு அடுக்கி வைக்கப்பட்டிருந்த விறகுக்கட்டைகளுக்குப் பின்னால் பாய்ந்து பதுங்கிக்கொண்டான். சனங்களின் அலறல் சத்தம்தான் எங்கும் நிறைந்திருந்தது.

எல்லாமே ஒருசில நிமிடங்கள்தான். சண் பஸ் யாழ்ப்பாணம் நோக்கிப் போய்க்கொண்டிருந்தது. மெதுவாகத் தலையை நிமிர்த்திப் பார்த்தான். சனங்கள் ஓடிக்கொண்டே இருந்தனர். சிலர் நிலத்தில் விழுந்துகிடந்தனர். தோள்பட்டையில் காயமடைந்த வயதான ஒருத்தர் ‘தண்ணி... தண்ணி...’ எனக் கத்தியபடியே ஓடிவந்து தேநீர்க் கடைக்குள் மயங்கி விழுந்தார். ரத்தம் சீறிக்கொண்டிருந்தது. ஒரு விநாடியில் இந்த உலகத்தில் இருந்து யாரோ அவனை வேறோர் உலகத்துக்குத் தூக்கி எறிந்துவிட்டது போன்றதொரு பிரமை. துப்பாக்கியால் சுடுவதையும் மனிதர்கள் விழுந்து இறந்துபோவதையும் அன்றுதான் முதன்முதலில் நேரடியாகக் கண்டிருந்தான். ஒரே ஓலமும் ரத்தமுமாக இருந்த வீதியில் தன்னைப் பழைய

*நிலைக்குக் கொண்டு வருவதற்கு முயன்றுகொண்டிருந்தான். கை, கால் எல்லாம் உதறின. விழுந்து கிடந்தவர்கள் இடையே சிவாவும் கிடந்தான். அவனது வெள்ளைச் சட்டை சிவப்பாகிப்போய் இருந்தது. அவனின் கொப்பிப் புத்தகங்கள் அவனுக்கு அருகில் சிதறிக்கிடந்தன. சிவா சண்டிலிப்பாய் மாகியம்பதியைச் சேர்ந்தவன். வம்பு தும்புக்குப் போகாத பையன். அவனோடுச் சேர்த்து மூன்று மாணவர்களும், சில பொதுமக்களும் அந்தச் சம்பவத்தில் இறந்துபோயிருந்தனர்.*

*நடுங்கியபடியே சைக்கிளை எடுத்துக்கொண்டு அங்கிருந்து ஓடியவன், மருதடி பிள்ளையார் கோயில் தேர்முட்டிப் படிகளில் போய்க் குந்தினான். அவனைச் சுற்றி நின்று கதைத்த மனிதர்கள் எல்லாம் மங்கலாகத் தெரிந்ததோடு சத்தம் மெதுவாகக் கேட்டது. "சண்டிலிப்பாயிலையும் கனபேரைச் சுட்டுப்போட்டிருக்காம். மாதகல்லையில் இருந்து வெளிக்கிட்ட ஆமி றோட்டு றோட்டா சுட்டுக் கொண்டுபோறாங்கள்" என ஆளாளுக்கு ஒவ்வொரு கதை சொன்னார்கள். சைக்கிளை எடுத்துச் சண்டிலிப்பாய்ப் பக்கமாக மிதித்தான். கட்டுடைச் சந்தியில் ஒருத்தரின் சடலம் கிடந்தது. சண்டிலிப்பாய் சந்தியைக் கடந்தான். ஒரு மினி பஸ் நின்றிருந்தது. அதில் ஏழு உடல்களுக்கு மேல் கிடந்தன. கொஞ்சத் தூரம் தள்ளி தலை சிதறி இறந்துகிடந்த ஒரு பெண்ணின் மூளையைக் காகம் ஒன்று கொத்தி இழுத்துக்கொண்டிருந்தது. ஊர் இளைஞர்கள் உடல்களை வைத்தியசாலைக்குக் கொண்டுபோவதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தனர். வாகனம் எதுவும் கிடைக்கவில்லை. உடுவில் மகளிர் பாடசாலைக்குப் பிள்ளைகளை இறக்கிவிட்டு சிங்கராசாவின் கார் திரும்பி வந்துகொண்டிருந்தது. காரை மறித்து, காருக்கு உள்ளும் டிக்கியிலுமாகச் சடலங்களைத் தூக்கிப் போட்டு வைத்தியசாலைக்கு அனுப்பினார்கள்.*

*அன்று ஊரெல்லாம் இதே பேச்சுத்தான். அன்றைய காலத்தில் ஊரில் யாராவது வயதானவர்கள் இறந்தாலே, ஊர் ஒரு வாரம் சோகம் கொண்டாடும். அப்படியான காலகட்டத்தில் இந்தக் கொலைகள் யாழ்ப்பாணத்தையே உலுக்கியிருந்தன. அவன் மனதில் மட்டும் ஒரே கேள்வி திரும்பத் திரும்ப வந்துகொண்டிருந்தது. இவர்கள் கொல்லப்படும் அளவுக்குச் செய்த குற்றம்தான் என்ன?*

மறுநாள் மாகியம்பதிக்கு, சிவாவின் மரண வீட்டுக்குச் சென்றிருந்தான். ஊரில் எந்தச் செத்த வீடு நடந்தாலும் சிங்கராசாதான் பாட்டுக்காரர். அங்கும் நல்லா தண்ணியடித்துவிட்டு, முழுக் கீறலில் பட்டினத்தாரின் 'ஒருமடமாதும் ஒருவனுமாகி...' பாடலை ராகம் இழுத்து பெரும் குரலில் பாடிக்கொண்டிருந்தார். சிவாவின் அம்மா அவனது நண்பர்களை ஒவ்வொருத்தராகக் கட்டிப்பிடித்து, "ஐயோ! இவன் என்னடா செய்தவன். உங்களை மாதிரித்தானே பள்ளிக்கு வந்தவன். இவனுக்கு மட்டும் ஏன் இப்பிடி? கடவுளே... உனக்குக் கண்ணில்லையா?" என்று மண்ணை அள்ளி ஆகாயத்தை நோக்கி வீசியெறிந்து கதறி அழுதுகொண்டிருந்தார். அந்தத் துயரக்குரல் பல நாட்களாகியும் அவனுக்குக் காதுக்குள்ளேயே தங்கிவிட்டிருந்தது.

அது மாகியம்பதியுடன் மட்டுமே முடிந்துவிட்ட துயரக்குரல் அல்ல. தமிழர்கள் வாழும் பகுதிகள் எங்குமிருந்து ஒலிக்க ஆரம்பித்தது. அது முடிவு இல்லாத மரணக்குரலாக நீண்டுகொண்டிருந்தது. எல்லாக் காலங்களிலும், எல்லா இடங்களிலும் இருந்தும் மரணக்குரல்கள் எழுந்தன. கொழும்பில் இருந்து மரணச்செய்திகள் வந்தன. வெலிக்கடையில் இருந்து வந்தன. மலையகம், அநுராதபுரம் என எல்லா இடங்களில் இருந்தும் படுகொலைச் செய்திகள் வந்தன. மரணம் மட்டுமே செய்தியானது.

இலங்கை வானொலியிலும் ரூபவாகினியிலும் தமிழ் செய்திகள் வாசித்தவர்கள்கூடக் காணாமல்போயிருந்தனர். காங்கேசத் துறையில் கப்பலில் தமிழர்கள் வந்திறங்கத் தொடங்கியிருந்தனர். அப்போது பல இளவயதுக் காரர்களைப் போலவே அவனும் யோசித்தான்.

இவையெல்லாம் என்ன... தடுக்க முடியாதா? அடிக்கிறவனைத் திருப்பி அடிக்க முடியாதா?

"முடியும்" என்றனர் ஊரிலுள்ள சில இளைஞர்கள். "நீங்களும் எங்களோடை சேருங்கோ கட்டாயம் திருப்பி அடிக்கலாம். அப்பதான் அவங்களுக்குப் புத்தி வரும்" என்றனர். அவனும் முடிவெடுத்தான் இயக்கதில் சேரலாம் என.

❍ ❍

# 2

மாலையில் டியூஷன் வகுப்புகளை முடித்துக்கொண்டு ஒரு குழுவாக சைக்கிளில் வீட்டுக்குச் செல்வார்கள். ஒவ்வொரு நண்பர்களாக வரும் வழியில் கழன்றுகொள்ள, இறுதியில் இவனும் குணேஸும் மட்டுமே இந்த வீதிக்குள் நுழைவார்கள். வீதியின் முடிவில் இவனது வீடு அதில் இவனும் கழன்றுவிட, இறுதியில் குணேஸ் மட்டும் தனியாகப் போவான்.

இவன் வீட்டுக்குள் நுழைந்தான், சண்டை சச்சரவுகளுடன் இருக்கும் வீடு கனத்த மௌனத்துடன் யாருடையதோபோல இருந்தது. இதற்கு முன் இப்படியொரு மௌனத்தை அந்த வீடோ அவனோ அனுபவித்தது இல்லை. வீட்டில் ஒரு விளக்குக்கூட ஒளிரவில்லை. பேய்வீடு போல இருந்தது. முற்றத்தில் இருந்தப் பிலா மரத்தின் கீழ் மூத்தமாமா சாய்மனைக் கதிரையில் படுத்திருந்தார். தலை அண்ணாந்து, கதிரையின் பின்சாய்வில் பிடரி படிந்திருந்தது. யாருடைய வரவையும் அவர் கவனிக்கும் நிலையில் இல்லை. முதலில் அவருக்குச் சாதுவான கீறலாக இருக்கலாம் என நினைத்தான். பின்னர்தான் கவனித்தான், மாமி முன் தூணில் தலையில் கைவைத்தபடி சாய்ந்திருந்தார். அருகில் அம்மா சோகமாகப் படுத்திருந்தார். அவர்களைத் தவிர வேறு ஆட்களின் நடமாட்டத்தை அவனால் உணர முடியவில்லை. நாய், சங்கிலியனுக்கு என்ன செய்வதென்றே தெரியாமல் பின்னங்கால்களை மடக்கி உட்கார்ந்து, மாமியையும் அம்மாவையும் மாறி மாறி நாறல் மீனைப்

பார்ப்பதுபோல ஒரு தினுசாகப் பார்த்துக்கொண்டிருந்தது.

'இவனுக்கு ஓர் இழவும் புரியவில்லை. ஏதாவது கோக்குமாக்கு பண்ணினேனா?' எனத் தன்னையே கேள்வி கேட்டபடி சைக்கிளை பின்பக்கமாகவிட்டுவிட்டு தயங்கித் தயங்கி அவர்களுக்கு அருகில் வந்தான்.

மாமாவுக்கு அருகில் வந்து 'க்கும்' எனச் செருமினான். அவர் இவனைக் கண்டுகொள்ளவே இல்லை. மாமிக்கு அருகில் போய் மீண்டும் 'க்கும்' எனச் செருமினான். மெல்லிய குரலில் "ராசா" என்றார். அவ்வளவுதான். அதற்குமேல் அவரிடம் இருந்து ஒரு வார்த்தையும் வரவில்லை.

சிறிது நேரம் பறையாமல் உட்கார்ந்திருந்தவனை என்ன பிரச்னை என்பதை அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல் புடுங்கித் தின்றது. ஆனால், யாரிடம் கேட்பது என்றுதான் தெரியவில்லை. கடைசியில் அலுப்பாகி, எழும்பி வெளியில் வந்தவன் வீட்டு வாசலில் பக்கத்து வீட்டு ரூபா அக்கா நிற்பதைப் பார்த்தான். அவளிடம் இதைப் பற்றி அறியும் பூராயம் இருந்ததை, அவளின் பார்வையிலேயே அறிந்துகொண்டவன் அவளிடம் சென்று விஷயத்தைக் கேட்டான். அவளோ, இவனை ஏற இறங்கப் பார்த்துவிட்டு "உன்ர இரண்டாவது அண்ணனைக் காணேலையாம். ஆரையும் பெட்டையளை இழுத்துக்கொண்டு ஓடிட்டான்போல. அதுசரி நீ எப்ப ஓடப்போறாய்?" என்றாள். இவனுக்கு "சீ..." என ஆகிவிட்டது. ஓடினதுதான் ஓடினான் ஆரோட ஓடி இருப்பான். என மூளையைக் கசக்கி சிந்தித்துப் பார்த்தான். ஒன்றும் அகப்படவில்லை.

இரவு முழுவதும் வீட்டில் பெரும் குழப்பம். அண்ணன் எங்கே போனான் என்பது யாருக்கும் தெரியவில்லை. இழவு வீடுபோல இருந்தது. அம்மா இடையிடையே பெருங்குரலெடுத்து "என்ர பரணீ! எங்கே ஐயா போன நீ..!" என்று அழுதுவிட்டு

"என்ர மகன் ஓடுகாலி இல்ல!" என்றார்.

"எல்லாம் உன்ர பிள்ளை வளர்க்கிற விறுத்தம்" என அப்பா அந்த ரணகளத்திலும் புறுபுறுத்துக்கொண்டிருந்தார்.

"அழாதையுங்கோ மச்சாள் அழாதையுங்கோ...

விடியப்பறம் பரணி வந்திடுவான்” என்று மாமி அம்மாவை அணைத்து சமாதானப்படுத்தினார். அதன் பின்னர் அம்மாவின் ஓலம் சிறிது நேரத்துக்கு அடங்கி மெல்லிய விசும்பல் ஒலியாகக் கேட்டது. என்றாலும், கொஞ்ச நேரத்தில் “என்ர பரணீ” எனப் பெருங்குரலெடுத்து மீண்டும் அழத்தொடங்குவார். இவனுக்கு நித்திரை வரவே இல்லை. இருந்தாலும் போர்வையை இழுத்து போத்திக்கொண்டு இருட்டை வெறித்தபடி படுத்திருந்தான். எப்போது உறங்கினான், எப்படிப் பொழுது கடந்தது என்பதே தெரியவில்லை. கண் விழித்தபோது நன்றாக விடிந்திருந்தது. அந்த விடியல் காணாமல்போனவன் பற்றிய மர்மங்களையும் அவிழ்த்தபடியேதான் விடிந்திருந்தது.

❍ ❍

# 3

பொழுது சரியாகப் புலராத சமயத்தில் தயங்கித் தயங்கி வந்த இருவர், பரணி தங்களது இயக்கத்தில் சேர்ந்துவிட்டான் எனச் சொல்லிவிட்டுப் போயிருந்தனர். அம்மா இடிந்துபோய் ஒரு மூலையில் பேய் அடித்ததுபோல உட்கார்ந்திருந்தார். அப்பாவும் எதுவும் பேசவில்லை. மூத்த மாமா காலையிலேயே கள் அடித்துவிட்டு ஏதோ திட்டிக்கொண்டிருந்தார். அவரை யாரும் சட்டை செய்யவில்லை. அண்ணனைப் பற்றித் தகவல் சொல்லிவிட்டுப் போனவர்கள் எந்த இயக்கம் என்று சொன்னார்களாம். ஆனால், அவர்கள் சொன்ன இயக்கத்தின் பெயர் வீட்டில் இருந்த யாருக்கும் தெரியாது. துக்கம் விசாரிக்க வந்த கந்தவனம் விதானையார், "குறுக்காலப் போறவன் ஊர் பேர் தெரியாத இயக்கத்தில் போய் சேர்ந்திருக்கிறான். பெரிய இயக்கத்தில் போய் சேர்ந்தாலும் பெருமையா நாலு பேருக்குச் சொல்லலாம். இந்தக் கிலிசுகேட்டுக்கு அவன் ஆரையாவது இழுத்துக்கொண்டாவது ஓடி இருக்கலாம் பே பெடியன் பாத்த பேய் வேலை" எனப் பலத்த சத்தம் போட்டு அவனைத் திட்டிக்கொண்டிருந்தார்.

கொஞ்ச நாள் கழித்து ஒருநாள் அண்ணன் திடீரென வீட்டுக்கு வந்தான். ஆளின் தோற்றம் நடை, உடை, பாவனை எல்லாம் அடியோடு மாறிப்போயிருந்தன. அவன் வந்ததுமே எதுவும் பேசாமல் துண்டை எடுத்துத் தோளில் போட்டபடி அப்பா வெளியில் போய்விட்டார். அம்மா வாயைப் பொத்தி விம்மினார். அக்கா, அண்ணனை, "அட... நாசமாப்போறவனே!" எனத் திட்டினார். அண்ணன் எதுவும் பேசாமல் முகட்டைப் பார்த்தான்.

அவனுடன் வந்த ஒருவன்தான், "அம்மா அழாதையுங்கோ இந்தளவு நாளும் உங்களுக்கு ஏழு பிள்ளையள். இனிமேல் கணக்கில்லாத பிள்ளையள். இதுக்கு சந்தோஷப்படுறதை விட்டுட்டு அழுறியளே.. அழாதையுங்கோ" என்று அன்போடு கதைத்தார். கொஞ்ச நேரத்தில் அவர் கெட்டித்தனமாக அம்மாவின் அழுகையை நிப்பாட்டியும்விட்டார். பிறகுதான் தெரிந்தது அவர்தான் அண்ணா சேர்ந்துள்ள இயக்கத்தின் தலைவர். பெயர் ஜெகன். அவரின் இயக்கத்தின் பெயர் 'டெலி'. (T.E.L.E- Tamil Eelam Liberation Extremists). ஜெகன் நல்ல வாட்டசாட்டமா இருந்தார். அவரை இவனுக்கு நன்றாகப் பிடித்துப்போய்விட்டது. காலப்போக்கில் அண்ணனும் இவனது இயக்க ஆட்களும் வீட்டுக்கு வரும்போது ஜெகன் பற்றிக் கதை கதையா சொன்னார்கள். அவனும் ஆவல் தீராமல் கேட்டு, பின்னர் நல்ல ஏற்ற இறக்கங்களுடன் கொஞ்சம் கூட்டிக் குறைத்து தனது சினேகிதர்களுக்குச் சொன்னான். ஆனால், அப்பாதான் அவர்களுடன் ஒட்டாமல் இருந்தார்.

ஒருநாள், அப்பாவை வீதியில் மறித்த ஜெகன், தமது டெலி இயக்கத்தின் அரசியல் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டிருக்கிறார். "ஒரு புத்தி ஜீவியை இவயின்ர சிறுபிள்ளை வேளாண்மைக்கு விளக்குப் பிடிக்கக் கூப்பிடுறான்.

"கவுழுவானுக்கு நக்கலைப்பாரன்" எனத் தனது கடைசிக்காலம் வரை அப்பா இதைச் சொல்லி திட்டிக்கொண்டேயிருந்தார்.

ஜெகனைப் பற்றி அவன் அறிந்து சில ஏற்ற இறக்கங்களுடன் நண்பர்களுக்குச் சொன்ன கதைகளின் சாராம்சம் இப்படி இருந்தன.

ஒரு தடவை ஜெகனது வீட்டைச் சுற்றி வளைத்த காரை நகர் கடற்படையினர், அவனைக் கைதுசெய்து கைகளை முன்பக்கமாகக் கட்டி ட்ரக் வண்டியில் ஏற்றி கடற்படை முகாமுக்குப் போய்க்கொண்டிருந்தனராம். வட்டுக்கோட்டைச் சந்தியில் ட்ரக் வேகத்தைக் குறைத்து மெதுவாகத் திரும்பிய வேளை தருணம் பாத்திருந்த ஜெகன், அவனுக்கு அருகில் இருந்த ராணுவத்தினரை காலால் எம்பி உதைந்து தள்ளிவிட்டு ட்ரக் வண்டியில் இருந்து குதித்துத் தப்பியோடிவிட ராணுவத்தினர் மலங்க மலங்க விழித்துக்கொண்டிருந்தனராம்.

அந்தக் காலத்தில் யாழ் நகரப் போக்குவரத்து இன்ஸ்பெக்டராக இருந்த பௌசர், சரியான அலுப்பன்.

தன்னுடைய போக்குவரத்து இன்ஸ்பெக்டர் வேலைக்கு மேலதிகமாக வேறு விஷயங்களில் மூக்கை நுழைத்து நாட்டாமை செய்து பலரது வயிற்றெரிச்சலையும் வாங்கிக் கட்டிக்கொண்டவர். யாழ்ப்பாணக் கடைகளில் மிரட்டி லஞ்சமும் வாங்குவது அவரது வாடிக்கை. தன் மீது அடுத்தவனுக்கு எப்போதும் பயம் இருக்க வேண்டும் என்பதற்காகத் திடீரென யாரையாவது வீதியில் போட்டு விளாசித்தள்ளுவார். மறிக்க யாராவது வந்தால் அவனையும் போட்டு மிதிப்பார்.

பௌசருக்குப் பாடம் படிப்பிக்க ஜெகன் ஒருநாள் முடிவெடுத்தான். பௌசர் கடைகளில் மிரட்டி லஞ்சம் வாங்கிவிட்டு யாழ் புதிய சந்தை பகுதியால் ‘மெள்ள நட... மெள்ள நட... மேனி என்னாகும்..?’ எனப் பாடிக்கொண்டு வந்தபோது, சுவரோடு மறைந்திருந்த ஜெகன், பௌசர் அவனைத் தாண்டும்போது பாய்ந்து முதுகில் வாகாக நான்கு மிதி மிதித்து அவரது கைத் துப்பாக்கியையும் மோட்டார், சைக்கிள் திறப்பையும் பறித்தெடுத்து, பௌசரை ஓடு எனக் கலைத்துவிட்டு, பௌசரின் மோட்டார் சைக்கிளிலேயே நவாலிக்குப் பறந்துவிட்டான். துப்பாக்கியைப் பறிகொடுத்தது, பௌசருக்குப் பெரிய அவமானமாகப் போய்விட்டது. பின்னாட்களில் அந்த மோட்டார் சைக்கிளில்தான் ஜெகன் ஊருக்குள் திரிவது வழக்கமாம்.

இஸ்ரேலில் பயிற்சி பெற்ற விசேட அதிரடிப் படையினர் அந்தக் காலத்தில் யாழில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அவர்கள் கறுப்புச் சீருடை அணிந்து ஜீப்பில் யாழ் நகரை வலம் வருவார்கள். கண்டமேனிக்குச் சுடுவார்கள். கறுப்புச் சட்டைக்காரர்கள் என்றாலே, அன்றைய சனங்களுக்குக் கிலி வந்துவிடும். அவர்களின் கொட்டமும் எல்லை மீறிப் போய்க்கொண்டிருந்தது.

ஒருநாள் ஜெகன் மட்டும் தன்னந்தனியனாக யாழ் வின்சர் தியேட்டருக்கு அருகில் ஒரு லாரியை இயக்கியபடி காவல் இருந்தான். எதிரே அதிரடிப் படையினரின் ஜீப் கண்ணுக்குத் தெரிந்த கணத்தில் லாரியை இயக்கி முழு வேகமெடுத்து நேராகக் கொண்டுபோய் ஜீப் மீது மோதவிட்டான் . ஜீப் சுக்கல் சுக்கலாக நொருங்கிப்போனது. அதில் வந்தவர்கள் சிலர் இறந்தும், மற்றவர்கள் காயமடைந்தும் வீழ்ந்தனர். லாரியில் இருந்து குதித்த ஜெகன், அதிரடிப் படையினரின் துப்பாக்கியை எடுத்து அதனாலேயே அதில் வந்த ஏழு

படையினரையும் சுட்டுக் கொன்றுவிட்டு அவர்களின் ஏழு ஏ.கே துப்பாக்கிகளையும் ஒரு சாக்குப் பையில் போட்டு எடுத்துக்கொண்டு சாவகாசமாக யாழ் நகரத் தெருவில் நடந்து போனானாம்.

பள்ளிக்கூடத்தில் ஒருநாள் விஞ்ஞான வாத்தியார் கேட்டார், “அடே, உன்ரை அண்ணன் எந்த இயக்கமடா?”

“டெலி சேர்”

வாத்தியார் கெக்கட்டம் போட்டு சிரித்துவிட்டு, “ஓ.. சங்கக்கடை இயக்கமா..? போன கிழமை அளவெட்டிச் சங்கம் உடைச்சாங்கள்.. நேற்று எங்கட தெல்லிப்பழை சங்கத்தை உடைச்சுப்போட்டாங்கள். களவாணி இயக்கம்” என்றார். எல்லாப் பொடியளும் விழுந்து விழுந்து சிரிக்க, இவனுக்குப் பெரிய பரிசுக்கேடாகப் போய்விட்டது. அடுத்த முறை ஜெகன் வீட்டுக்கு வந்தபோது பள்ளிக்கூடத்தில் நடந்த சம்பவத்தைச் சொல்லி, “சனத்தின்ட சங்கக் கடையை உடைக்கிறது சரியில்ல அண்ண” என்றான். ஜெகன் சிரித்துவிட்டு, “சங்கக் கடை சனத்தின்ர சொத்து இல்லையடா. அது அரசாங்கத்தின்ர சொத்து. இப்பிடி ஏதாவது செய்துதான் அரசாங்கத்தைப் பலவீனப்படுத்தலாம் மற்றது நாங்கள் கெரில்லா இயக்கம். அடிச்சுப்பறிச்சுத்தான் சாப்பிட வேணும். கண்டியோ” என்றான். அவனின் நியாயமும் இவனுக்குச் சரி எனப்பட்டது.

சில நாட்கள் நடு இரவுகளில் வீட்டுக்கு வரும் அண்ணனும் ஜெகனும் வெளித்திண்ணையில் படுத்துக்கிடந்துவிட்டு விடிவதற்கு முன்னர் காணாமல்போவார்கள். சில சமயங்களில் யாராவது புதியவரை அழைத்து வந்து கீச்சுக்குரலில் நீண்டநேரம் கதைத்துக்கொண்டிருப்பார்கள்.

இப்படித்தான் ஒருநாள் மாலையில், ஏழு எட்டுப் பேர் வீட்டில் படுத்திருந்தார்கள். வாகனம் ஒன்றும் வீட்டின் முன்னால் நின்றது. அம்மாவும் அக்காவும் ஓடியாடி அத்தனை பேருக்கும் சமைத்துப் போட்டார்கள். இவனும் ஓடியாடி அவர்களைக் கவனித்தான். தங்களைக் கவனிப்பதைவிட்டுவிட்டுப் போய்ப் படிக்கும் அலுவலைப் பார்க்கச் சொல்லி ஜெகனும் அண்ணனும் அவனைக் கலைத்துவிட்டார்கள்.

நடுச்சாமத்தில் வீட்டில் இருந்து அவர்கள் புறப்பட்டதன் அறிகுறியாக வாகனச் சத்தம் கேட்டுக் கண்ணை விழித்துப் பார்த்தபோது, நேரம் 11:20. பேசாமல் படுத்துவிட்டான்.

மறுநாள் காலை எழுந்தபோது, ஊர் பரபரப்பாக இருந்தது. யாழ்ப்பாணம் ரவுணில் இருந்த மக்கள் வங்கியைக் கொள்ளையடிக்க முயன்ற பொடியளுக்கும் ஆமிக்கும் பெரிய சண்டை என மக்கள் கதைவழிப்பட்டார்கள். இவனுக்குப் பள்ளிக்கூடம் போக பிடிக்காமல் வீட்டிலேயே நின்றுவிட்டான்.

மத்தியானம்போல வீட்டுக்கு வந்த அண்ணாவும் ஜெகனும் வேர்த்துக் களைத்துப்போய் பேசாமல் பறையாமல் வந்து திண்ணையில் படுத்தனர். ஜெகன் அடிக்கடி கைகளைப் பொத்தி நிலத்தில் குத்தியபடி, "ச்சா.. ச்சா" என்றபடி துள்ளியெழுந்து உட்கார்வதும், மீண்டும் படுப்பதுமாக நிலைகொள்ள முடியாமல் இருந்தார். அண்ணன், முகட்டைப் பார்த்தபடி தீவிரமாகச் சிந்தித்துகொண்டிருந்தார். விஷயத்தை அறிந்துகொள்ள வேண்டுமென்ற ஆர்வம் இவனைப் பிடித்துத் தின்றது. ஆனாலும் கேட்டால் அடிவிழும் என்ற பயத்தில் பேசாமல் உட்கார்ந்திருந்தான்.

சிறிது நேரத்தில் அவர்களாகவே நடந்தது என்ன ? அவர்கள் விட்ட பிழைகள் எவை? என்ன செய்திருக்க வேண்டும்? என்றெல்லாம் விலாவாரியாகப் பேசத் தொடங்கினார்கள். வாயை மூடாமல் அத்தனை விஷயங்களையும் கேட்ட அவனுக்கு அப்போதுதான் புரிந்தது, நகர மையத்தில் இருந்த மக்கள் வங்கியைக் கொள்ளையிடப்போனது இவர்கள்தான் என்பது. அவர்கள் சொன்னதன் பிரகாரம் நடந்தது இதுதான்.

வங்கிக் கொள்ளைக்குத் திட்டமிட்ட 'டெலி' இயக்கத்தினர், விடுதலைப் புலி உறுப்பினர் திலீபனிடம் வெடிமருந்து தந்துதவுமாறு கேட்டிருக்கிறார்கள். அவர்களும் 15 கிலோ பென்ரலைற் வெடிமருந்தைக் கொடுத்து உதவியுள்ளனர். அதில் 5 கிலோ அளவிலான வெடிமருந்தை குழாய்களிலும் தகரப் பேணிகளிலும் அடைந்து கைக்குண்டுகளாகத் தயாரித்த பின் மிகுதி வெடிமருந்தை வங்கியின் பாதுகாப்புக் கதவைத் தகர்ப்பதற்காக வைத்தார்கள். ஜெகன் தலைமையில் சென்ற இயக்கத்தினர், அதிகாலை ஒரு மணியளவில் வங்கிக் காவலாளியைக் கட்டிவைத்துவிட்டு, வங்கிக் கதவுகளைத் துப்பாக்கிகளால் சுட்டு உடைத்தார்கள். துப்பாக்கி சத்தம் கேட்டதுமே அருகில் இருந்த யாழ் கோட்டை, குரு நகர் ராணுவ முகாம்களில் இருந்து ராணுவம் பறந்து வந்தது. இவர்களும் லேசுபட்ட ஆட்கள் கிடையாதுதானே. சிறிய சிறிய குண்டுகளாகத் தயாரித்துக் கொண்டுபோன வெடி

பொருட்களைக் கொளுத்தி ராணுவம் மீது எறிந்தனர். அந்தச் சத்த வெடிக்கே பயந்த ராணுவம் வங்கிக்கு வருவதற்குப் பயந்து பண்ணை வீதிச் சந்தி மற்றும் பருத் துறை வீதி சந்தியிலேயே நின்றபடி ஆகாயத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்துகொண்டிருந்தார்கள். ஆனால், வங்கிக்குள் நுழைந்த ஜெகன் குழுவினர் வங்கியின் பாதுகாப்பு நில அறை கதவுகளை அடையும் முன்பாகவே அதை உடைப்பதற்காகவே கொண்டுபோயிருந்த வெடிமருந்துகளை முடித்துவிட்டிருந்தார்கள்.

இறுதிப் பிரதான இரும்புக்கதவை உடைப்பதற்கு வெடிமருந்து இல்லாமல் போய்விட்டிருந்தது. அங்கிருந்தபடியே மேலதிகமான வெடிபொருள் உதவி கேட்டு, ஜெகன் அவசரமாக இருவரை மோட்டார் சைக்கிளில் மற்ற இயக்கங்களிடம் அனுப்பினான். அவர்கள் எதிர்பார்த்த உதவி மற்ற இயக்கங்களிடம் இருந்து கிடைக்கவில்லை. விடுதலைப் புலிகள்தான் கொஞ்ச வெடிமருந்தை மீண்டும் கொடுத்திருக்கிறார்கள். வெடிமருந்து பற்றிய போதிய அறிவு இல்லாததால் சாதாரணமாக வைத்து வெடிக்க வைத்திருக்கிறார்கள். கதவு அசையவில்லை. வெடி பொருட்களும் முடிந்துவிட்ட நிலையில் கொள்ளை முயற்சி தோல்வியடைய, அங்கிருந்து வெளியேறிவிட்டார்கள். காலை நன்றாக விடிந்த பின்னர்தான் ராணுவம் வங்கிக்குள் நுழைந்திருக்கிறது. வங்கியில் கோடிக்கணக்கிலான நகைகள் உள்ளதாக அண்ணன் சொல்லிக் கவலைப்பட்டான். “அந்த நகைகளை மட்டும் எடுத்துவிட்டால் தமது இயக்கம் விரைவில் தனித்து நின்று தமிழீழத்தை எடுத்திருக்கும்” என்றான்.

இந்தக் கொள்ளை முயற்சி தோல்வியில் முடிந்த சில நாட்களில் ஜெகன் தனது குழுவினர் சிலரோடு மானிப்பாய் வீதியில் கை.ஏஸ் வானில் வந்துகொண்டிருந்தபோது எடக்கு மடக்காக ரோந்து வந்த ராணுவ அணியிடம் சிக்கிவிட்டார்கள். மானிப்பாய் அந்தோணியார் கோயிலுக்கு அருகில் ராணுவ தொடர் அணியை நிறுத்திய ராணுவத்தினர், ஜெகனின் வாகனத்தை நிறுத்துமாறு சைகை செய்தார்கள். ஆனால், ஜெகன் வாகனத்தை நிறுத்தாமல் வேகமெடுக்க, ராணுவத் தொடர் அணியில் நின்றிருந்த ஒரு ஜீப், வீதிக்கு குறுக்காக வந்து ஜெகனின் வேனை மறித்தது. ஜெகன் வேனை வேகமாகக் கொண்டுபோய் ஜீப்பின் மீது மோதிவிட்டு அனைவரும் இறங்கி ஓடத் தொடங்கும்போது ராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் நவாலியைச்

சேர்ந்த விக்னா என்பவர் இறந்துபோக மற்றவர்கள் தப்பிவிட்டனர். விக்னாவின் உடலை எடுத்த ராணுவம், அதை கொண்டுபோய் தெல்லிப்பளை வைத்தியசாலை சவக்காலையில் போட்டுவிட்டு, அதை யாராவது எடுக்க வந்தால் அவர்களைக் கைது செய்யலாம் என வைத்தியசாலையைச் சுற்றிப் பாதுகாப்புப் போட்டார்கள்.

விக்னாவின் உடலை எப்படியாவது எடுத்து வந்து ராணுவ மரியாதையுடன் தகனம்செய்ய நினைத்த ஜெகன், இன்னொருவனுடன் தெல்லிப்பளை வைத்தியசாலையை நோட்டம் விட்டவன், சுற்றிவர ராணுவப் பாதுகாப்பு போடப்பட்டிருந்ததை அறிந்துகொண்டான். தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு அருகில் இருந்த தனியார் கிளினிக்கில் போய் அங்கிருந்த வைத்தியர்களின் சீருடைகளையும் ஸ்டெதஸ்கோப்பையும் வாங்கிப் போட்டுக்கொண்டு வைத்தியசாலைக்குள் புகுந்து, சவக்காலை காவலாளியை கைத்துப்பாக்கியைக் காட்டி மிரட்டிக் கட்டிப்போட்டுவிட்டு விக்னாவின் உடலை கடத்திக் கொண்டுபோய் ஜீப்பில் ஏற்றிக்கொண்டு புறப்பட எத்தனித்த கணம், ராணுவம் இவர்களை அவதானித்துவிட்டு துரத்தத் தொடங்கினார்கள். நேர் வீதியில் ஓடிக்கொண்டிருந்தால் ராணுவத் தொடர் அணி கலைத்துப் பிடித்துவிடுவார்கள் என ஜெகன் தனது ஜீப்பை அளவெட்டி, அம்பனை பகுதிகளில் உள்ள பனங்கூடல் மற்றும் தோட்டவெளிகளுக்கு இடையில் ஓட்டத் தொடங்கியதும் ராணுவம் தடுமாறி பாதையைத் தவறவிட்டுவிட்டார்கள். விக்னாவின் உடலை நவாலிப் பகுதிக்குக் கொண்டுவந்து சேர்த்த ஜெகன், அன்றிரவு நவாலி மயானத்தில் ராணுவ மரியாதையுடன் தகனம் செய்தார்.

விக்னாவின் இழப்பு, ஜெகனை மிகவும் பாதித்தது. அதற்குப் பதிலடி கொடுக்க, காரை நகரில் இருந்து ரோந்து வரும் கடற்படையைத் தேர்வு செய்தார். கடற்படையினருக்குக் கண்ணிவெடி வைப்பதுதான் திட்டம். இந்த முறை ஜெகனுக்கான வெடிமருந்துகளைக் கிட்டு கொடுத்து உதவியிருந்தார். மறுநாள் மாலை ஜெகன் வேறு இருவருடன் சங்கரத்தை வயல்வெளியில் இருந்த ஒரு மதகு ஒன்றின் கிழே கண்ணிகளைப் புதைத்துவிட்டுச் சாவகாசமாக வயறை உறுமறைப்புச் செய்துகொண்டிருந்தான். அந்த மதகுக்கு அருகில் தோட்டம் வைத்திருந்தவர், விஷயம் தெரியாமல் கண்ணி வொயர்களை மண்வெட்டியால் கொத்தியிருக்கிறார். அவருக்கு ஜெகனை

முன்பின் தெரியாது. யாரோ ஒரு பொடியன் என நினைத்திருப்பார்போல. இதைப் பார்த்த ஜெகனுக்கு, பத்திக்கொண்டு வந்தது. ஆளைக் கூப்பிட்டு காதைப் பொத்தி நாலு விட்டு, கலைத்துவிட்டான். அடி வாங்கியவரின் நெருங்கிய சொந்தக்காரப் பொடியன் ஒருவன் புலிகளில் இருந்திருக்கிறான். "காதைப் பொத்திக்கொண்டு, நாவாலியில் இருந்த முகாமுக்கு ஓடிப்போனவர் இயக்கத்துக்குப் போராட ஆளை அனுப்பிய குடும்ப உறுப்பினர் ஒருத்தருக்கு மாற்று இயக்கக்காரன் கைவைத்திருக்கிறான். 'இனியும் பார்த்துகொண்டிருக்கிறீயளோ. நீங்களும் ஆம்பளையாளோ?' எனக் கேள்வி கேட்க முகாம் பொறுப்பாக இருந்த தவக்களையம்மானுக்கும் கோபம் அடியில் இருந்து நுனி வரை ஏறியிருக்கிறது.

அடி வாங்கியவரை தனது மோட்டார் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு, ஸ்பொட்டுக்கு வந்து, "எங்கட இயக்க சப்போட்டருக்கு ஏன் அடிச்சனி?" எனத் தவக்களையம்மான் கேட்க, "நாளைக்குச் சாகப்போறதுபோல இருக்கிற உந்த உறண்டல் எல்லாம் இயக்க சப்போர்ட்டரோ" என ஜெகன் நக்கல்விட, இருவருக்கும் வாய் தர்க்கமானது. இடையில் ஜெகன், தவக்களையம்மானை நெருங்க எத்தனித்திருக்கிறார். ஜெகன் கராத்தே கறுப்பு பட்டிக்காரன். கிட்ட வந்தால் என்ன நடக்கும் என்பது பற்றி நிறையக் கதை உலாவியதால் தவக்களையம்மான் கொஞ்சம் அலெர்ட் ஆகி "கிட்ட வர வேண்டாம்" என்று கத்தினார். ஜெகன் சிரித்தபடி கிட்டவர, தவக்களையம்மான் மின்னலாகப் பிஸ்டலை உருவி ஜெகனின் நெற்றியில் வெடிவைத்தார். ஜெகன் அப்படியே சுருண்டு விழுந்தான். டெலி இயக்கத்தின் கதையும் அத்தோடு முடிந்துபோனது.

❍ ❍

# 4

அன்றைய காலகட்டத்தில் புளொட் அமைப்புக்கே இளைஞர்கள் அள்ளுப்பட்டுப் போய்க்கொண்டிருந்தனர். அதற்கு முக்கியக் காரணம் யாழ்ப்பாணச் சமூகம். அது எப்போதும் சாதி, கல்வி இரண்டையும் அடிப்படையாக வைத்தே மற்றைய அனைத்தையும் எடைபோடும். அதன்படி புளொட் அமைப்பின் தலைவர் உயர் சாதிக்காரனாகவும், கல்வி கற்றவருமாகவும் இருந்தார். இவற்றுக்கு முன்னுரிமை கொடுத்தும், அதே நேரம் சந்ததியாரின் ஆளுமை மிக்க அரசியல் வேலைகள் பேச்சாற்றல் என்பவற்றாலும் புளொட் பெரும் வளர்ச்சியைக் கண்டிருந்தது. இவனால் புளொட்டுக்குப் போக முடியாது. காரணம், அவனது உறவுகள் பலர் புளொட்டின் முக்கியமானவர்களாக இருந்தனர். இவனைக் கண்டாலே, 'போய் ஒழுங்கா படியடா!' என்று குட்டி அனுப்பிவிடுவார்கள். அதுமட்டுமல்லாது ஏற்கெனவே புளொட்டுக்குப் போய் கை முறிந்து திரும்பி வந்த அவனது நண்பன் சுரேஷ் சொன்ன சில விஷயங்களும் புளொட் அமைப்பில் சேரும் எண்ணத்தைத் தடுத்தன.

அடுத்தத் தெரிவு ஈ.பி.ஆர்.எல்.எஃப். நவாலிப் பகுதியில் போய் ஜேம்ஸை சந்தித்தான். "வாங்கோ தோழர்" என்று வரவேற்றவன், அவனது கையில் செஞ் சீனம். கியூபா விடுதலைப் போராட்டம் என்ற இரண்டு புத்தகங்களைக் கொடுத்து, "இதைப் படிச்சிட்டு வாங்கோ தோழர். அதிலை சில கேள்வியள் கேட்பன். சரியா பதில் சொன்னால் உங்களைப் பயிற்சிக்கு அனுப்பலாம்.

*அடிக்கடி எங்கடை அரசியல் கூட்டத்துக்கும் வாங்கோ" என்று வழியனுப்பிவைத்தான்.*

*கோயில் மடத்தில் வந்து குந்தியிருந்து செஞ்சீனத்தைப் புரட்டினான். அதை விளங்கிக்கொள்ள இன்னொரு தமிழ் அகராதி தேவைப்பட்டது. கியூபா புரட்சியைத் தூக்கிப் பார்த்தான். புத்தகம் மொத்தமாக இருந்தது. என்ன செய்யலாம்... சுதுமலை பக்கம் போய் புலிகளின் அன்புவை சந்தித்தான். இடுப்பில் இருந்து கைக்குண்டு ஒன்றை எடுத்த அன்பு,*

*"இதுதான் கிளிப். இதை இழுத்திட்டு கையை நல்லா மேலை தூக்கி கிரிக்கெட் பந்து எறியிற மாதிரி எறிஞ்சிட்டு விழுந்து படுக்கவேணும்" என்றவன், இடுப்புப் பக்கம் இருந்து எடுத்த ரிவால்வரை அவன் கையில் கொடுத்து,*

*"இப்பிடி நீட்டி ஒற்றைக்கண்ணை மூடி தலையைச் சரிச்சு குறிவைத்து இந்த ட்ரிகரை அமத்தவேணும்".*

*ரிவால்வரை வாங்கியவன் இரண்டு கைகளாலும் பிடித்து முன்னே நீட்டி தலையைச் சரித்து இடக்கண்ணை மூடி எந்த இலக்குமின்றி வெளியை நோக்கி விசையை அழுத்தினான். கையை மெள்ள உதறி, சத்தத்தோடு குண்டு வெறியேறியது.*

*"எப்ப டிரெய்னிங்குக்கு அனுப்புவியள்?"*

*"முதல் எங்களோடை சேந்து வேலையள் செய். அதே நேரம் இங்கேயே வினோத் உனக்குப் பயிற்சியளும் தருவான். எல்லாத்துக்கும் முதல் நீ சோதனையை எடுத்தால் பிறகுதான் டிரெய்னிங்குக்கு அனுப்பலாம்" என்றான்.*

*அவனும் பயிற்சிக்குப் போவதற்காகச் சோதனைக் காலம் நெருங்கும் வரை காத்திருந்தான்.*

❍ ❍

# 5

**ப**ரந்து விரிந்திருக்கும் கொளத்தூர் மணி அவர்களின் பண்ணையின் ஒரு பகுதிதான் அவர்களது பயிற்சி முகாம். முதல் நாள் பயிற்சி பற்றிய சில விளக்கங்களுடன் பயிற்சிக்கான முதல் விசிலை பயிற்சி ஆசிரியர் ஊதினார். உடம்பில் எங்கெங்கு எத்தனை மூட்டுக்கள் இருந்ததோ அத்தனையிலும் நோவெடுக்கத் தொடங்கின. ஏனடா வந்தோம் என்றிருந்தது. அவனுக்கு மட்டும் அல்ல, அங்கே பயிற்சி எடுக்க வந்த அனைவருக்குமே இதுதான் நிலைமை. சில பேர் தப்பி ஓடலாமா என்றும் யோசித்தனர். ஆனால் அது முடியாது. அந்த ஒதுக்குப்புறமான கிராமப் பகுதியில் எங்கு ஓடினாலும் பிடிபடவேணும். அப்பிடிப் பிடிபட்டால் தண்டனையைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை.

ஆரம்பத்தில் பயிற்சி களைப்பினால் உடனேயே நித்திரையாகிவிடுவார்கள். சில நாள் செல்லத்தான் இரவு ஆரம்பித்ததுமே பிரச்னையும் ஆரம்பித்தது. சிலர் அருகில் படுத்திருந்தவர்களில் கை போட்டார்கள். "இந்தப் பிரச்னை எல்லாம், இயக்க பயிற்சி முகாம்களிலுமே இருக்கும் பொதுப் பிரச்னை மச்சான்" என முன்னரே பல இயக்கங்களுக்கும் போய் பயிற்சி எடுத்த பலர் சொல்லி கேள்விப் பட்டிருந்தான்.

பயிற்சிக் களைப்பிலும் யுரேகாவின் நினைவுகள் வந்து, சில இரவுகள் அவனது தூக்கத்தைக் கெடுத்துக்கொண்டிருந்தன.

"என்ன செய்திருப்பாள்... தற்கொலை..! சே.. அவள் நல்ல தைரியசாலி. அப்படியெல்லாம் செய்திருக்க மாட்டாள்" என்று தனக்குத்தானே கேள்வி கேட்டு, தனக்குத்தானே

சமாதானம் சொல்லிக்கொண்டவனுக்கு, பழைய ஊர் நினைவுகள் மனதில் சுழலத்தொடங்கியிருந்தன.

அவன் ஒன்பதாவது படித்துக்கொண்டிருந்தபோது அதுவரை திருகோணமலையில் ஆசிரியையாக இருந்த சின்னம்மா, ஊருக்கு மாற்றலாகி வந்திருந்தார். ஆரம்பத்தில் இவன் படிப்பில் புலியாகத்தான் இருந்தான். ஆனால், இடையில் கோட்டைவிடத் தொடங்கிவிட்டான். தொய்ந்துபோயிருந்த அவனது பாடங்களில் சின்னம்மா அதிகக் கவனம் எடுத்தார். அவனை மீண்டும் படிப்பில் புலியாக்கிவிட்டுத்தான் ஓய்வு என்பது சின்னம்மாவின் சபதம். பாடசாலையில், டியூஷனில் படித்தது போதாது என்று சின்னம்மாவும் வீட்டில் படிப்பிக்கத் தொடங்கினார். ஆரம்பத்தில் அவனுக்கு மட்டும்தான் சின்னம்மா படிப்பித்தார். சின்னம்மா ஓர் ஆசிரியை என்பதாலும், இவனுக்கு வீட்டில் வைத்துப் படிப்பிக்கிறார் என்ற கதை, அடிபடத் தொடங்கியதாலும், பலர் சின்னம்மாவிடம் வந்து “பிள்ளை கணக்கிலச் சறுக்குது, ஆங்கிலத்தில் சறுக்குது. நீங்கதான் சொல்லிக்கொடுத்து கரை சேர்க்கவேணும். பணமும் தருவோம்” எனக் கேட்டிருந்தார்கள். ஆனால், சின்னம்மா யாருக்கும் சொல்லிக்கொடுக்க மறுத்துவிட்டார்.

ஒருநாள் இவன் சின்னம்மாவிடம் படிக்கப் போனபோது, கால்களைப் பக்கவாட்டாக மடித்து, நிலத்தில் குனிந்திருந்து கொப்பியில் எதையோ எழுதிக்கொண்டிருந்தாள் ஒரு பெண். முன்னால் சின்னம்மா கண்களை மூடி எதையோ யோசித்துக்கொண்டிருந்தார். இவனுக்கு அதிர்ச்சியாகவும் அதே நேரம் மகிழ்ச்சியாகவும் இருந்தது. யாராக இருக்கும் என மூளையைக் கசக்கி யோசித்தான். ஒரு பெண்ணுடன் கூடப்படிப்பதில் சில கிளுகிளுப்புகள் இருந்தாலும், அவளுக்கு முன்னால் தினம் தினம் ‘மொக்கன்’ எனச் சின்னம்மாவிடம் திட்டு வாங்கவேண்டும் என நினைத்துப்பார்க்க, அவனது மனசு குறுகுறுத்தது. திரும்பிப் போய்விடுவோமா என்றும் யோசித்தான். ஆனாலும் அவர்களுக்குத் தெரியாமல் திரும்பிச் செல்ல முடியாத அளவுக்கு நெருக்கத்தில் வந்துவிட்டேன் என்பதைப் புரிந்து, சின்னம்மாவுக்கு அருகில் போனான். காலடிச் சத்தம் கேட்டு, அந்தப் பெண் சட்டெனத் திரும்பினாள். ‘அட யுரேகா!’ என மனதுக்குள் மெல்லிய ஆறுதல் பரவி படர்ந்தது. சின்ன வயதில் இருந்தே அவனுடன்தான் படிக்கிறாள். அருமையான பெட்டை. கிராமத்தில் இருந்த ஓரிரண்டு கிறிஸ்தவக் குடும்பங்களில் அவளது குடும்பமும் ஒன்று. எப்போதும்

துருதுருவென எதையாவது செய்தபடி இருப்பாள். சின்ன வயசில் ஆளையாள் கையைப் பிடித்துக்கொண்டு சென்று வருவார்கள். அடித்துப்பிடித்து விளையாடுவதைத் தவிர வேறு உணர்வுகள் அற்ற 'வெறும்' ஸ்பரிச நாட்கள் அவை. ஆனால், அந்த அழகிய நாட்கள் தொடர்வதில்லை. பராயம் எல்லைக்கோடுகளை வரைந்துவிடுகிறது. சற்று வளர்ந்த பிறகு அவள் தன் சினேகிதிகளுடன் சென்று வந்தாள். இவன் தன் சினேகிதர்களுடன் சென்று வந்தான். எப்போதாவது வீதியில் எதிர்ப்படுகையில் மெல்லிய முறுவலுடன் ஓரப்பார்வையுடன் கடந்து செல்வாள்.

என்னதான் குத்தி முறிஞ்சு படித்தாலும் கணக்கு மட்டும் அவனுக்குக் கைவரவேயில்லை. "யுரேகாவை பார் தம்பி, கணக்குல கலக்கிறாள்... நீயும் இருக்கிறாய்!" என்று சின்னம்மா குட்டு கொட்டி சொல்லிக்கொடுத்தார். ஆனாலும் அவன் மண்டையில் கணக்கு மட்டும் ஏறவே இல்லை. இவனுக்கு, கணக்கு கண்ணாமூச்சி காட்டியதுபோல... அவளுக்கு, தமிழும் விஞ்ஞானமும் கண்ணாமூச்சி காட்டின. அதனால் இருவரும் ஓய்வாக நேரங்களில் அவன் அவளுக்குத் தமிழும் விஞ்ஞானமும் சொல்லிக்கொடுப்பது என்றும், அவள் அவனுக்குக் கணக்குச் சொல்லிகொடுப்பது என்றும் ஓர் ஒப்பந்தம் போட்டனர். பாடசாலை ஆசிரியர்களும் சின்னம்மாவும் தலைகீழாக நின்று விளங்கப்படுத்தியும் புரியாத கணிதத்தை அவள் லேசாகப் புரியவைத்தாள். அவளுக்கு இணையாகப் படிக்க வேண்டும் என்பதற்காகச் சிரமப்பட்டாவது அவன் அவற்றைப் புரிந்துகொண்டான் என்றும் சொல்லலாம். மனசுக்கு அருகில் உட்கார்ந்திருப்பவளின் முன்பாக மொக்கனாக எப்படி இருக்க முடியும்?

ஒருநாள் அவள் கேட்டாள், "டேய், எனக்கொரு கட்டுரை வேணும் சொல்லித்தாவன்."

"என்னத்தைப் பற்றி?"

"மீனவர்கள் பற்றினது."

"சின்னப் பிரச்னை. சொல்லுறன் எழுது. அன்றாடம் உழைத்துப் பிழைக்கும் ஒரு மீனவன், மனைவி பிள்ளைகளிடம் விடைபெற்றுக் கட்டுமரம் ஏறினான்..." என்று தொடங்கியவன், அன்றைய காலத்தில் அவன் படிக்கத் தொடங்கியிருந்த மார்க்சியம், செஞ்சீனம், கியூபாவும் விடுதலையும், வியட்நாம், எரித்தியா, மாக்சிசம், நாசிசம், யூதாயிசம், சியோனிசம், அறிந்தது அறியாதது என

எதையெல்லாம் கலக்க முடியுமோ அதையெல்லாம் கலந்து ஒரு கட்டுரையைச் சொல்லி முடித்தான்.

கட்டுரையைப் படித்த அவளது தமிழாசிரியைக்குப் பெரிய குழப்பமாகிவிட்டது. இதை அவள்தான் எழுதினாளா என்பதைவிட, இதில் என்ன சொல்லப்பட்டுள்ளது என்ற குழப்பம்தான் பெரிதாக இருந்தது. “உண்மையிலேயே நீதான் எழுதினீயா?” என்று கேட்க, அவளும் ‘ஓ’வென தலையாட்டிவிட்டாள். ஆசிரியைக்குக் குழப்பம் தீரவில்லை. வேறு நாலைந்து ஆசிரியர்களிடம் காட்டிவிட்டுக் கடைசியில் ‘காலத்துக்கேற்ற கட்டுரை!’ என முதலாவதாகத் தேர்தெடுத்தார். அவளுக்கோ அளவிட முடியாத மகிழ்ச்சி.

அன்று அவனிடம் வந்தவள் நன்றி கூறிவிட்டு, “ஐயோ… உனக்கு ஏதாவது தரவேணுமே என்ன வேணுமடா?”.

“என்ன கேட்டாலும் தருவியா?”

“ஓமடா. அம்மாண என்ன வேணுமெண்டாலும் தாறன்!”

“என்ன வேணுமெண்டாலும்?”

“ஓமடா..”

“என்ன வேணுமெண்டாலும்?”

“எத்தினைத் தரம்தான் கேட்பாய். அப்பிடி என்னதான் வேணும். சொல்லு”

“சரி, அப்ப ஓர் அஞ்சு ரூபா குடு. குமார் கடையிலை போண்டாவும் ஒரு பிளேன் டீயும் அடிக்கவேணும்.”

அஞ்சு ரூபாவை எடுத்து நீட்டிவிட்டு, அவன் போவதையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

‘அடேய்… அடேய் மயிராண்டி! அஞ்சு ரூபா கேக்கிற நேரமா இது? இப்பவாவது உன்ரை காதலை சொல்லியிருக்கலாமே!’ என்று உள்மனம் அவனைத் திட்டியது. ஆனாலும் அவனுடை அன்றைய சந்தர்ப சூழ்நிலைகளாலும், அவளது குடும்பநிலையாலும் அவன் அடக்கிவாசிக்க வேண்டிய நிலை.

இன்னொரு நாள் அவனிடம், “டேய், எனக்கொரு கவிதை வேணும்!” என்றாள்.

“கவிதை எதைப் பற்றி?”

“காதல் பற்றி” அவள் குரல் கம்மியது.

*“காதலா?”*

*“யாரையாவது காதலிக்கிறீயா?”*

*“எனக்கு இல்லை... என்ர சினேகிதிக்கு. அவள் ஒருத்தனை லவ் பண்றாள். அதுதான் என்னட்டை கேட்டவள் எனக்கு எழுதத் தெரியாமல் உன்னட்டை கேக்கிறன்” என்றாள்.*

*“‘வேண்டாமடி இப்பிடித்தான் நான் என்ர சினேகிதப் பெடியன் ஒருத்தனுக்குக் காதல் கவிதை எழுதி குடுத்து, அது வாத்திட்டை பிடிபட்டு, அவனைவிட நான்தான் அதிகம் குனியவிட்டு குண்டியில அடி வாங்கினேன்” என்றான்.*

*“இல்ல. சினேகிதப் பெட்டை!” எனக் கண்களைக் கசக்கினாள்.*

*“சரி எழுது” என அவன் சொல்லச் சொல்ல அவள் எழுதினாள்.*

*சில நாள் கழித்து அவர்களுக்குக் கணித பாடம் கற்பிப்பதற்காகச் சின்னம்மா அவனது புத்தகத்தைப் புரட்டியபோது அதற்குள் இருந்த ஒரு கடிதத்தை எடுத்தவர், படிக்கத் தொடங்கினார். படிக்கப் படிக்க அவரது முகம் மாறிப்போனது. கடிதத்தைப் படித்து முடித்த சின்னம்மா அவனிடம், “டேய், இது எத்தனை நாளாக நடக்குது?” என்றார்.*

*இவள் இப்பிடித்தான் எங்கேயாவது மாட்டிவிடுவாள் தெரியும் என்று மனதில் நினைத்தபடி, “அவள்தான் யாரோ சினேகிதிக்கு எண்டு கேட்டாள். அதுவும் ஒருக்காத்தான் சொல்லிக்குடுத்தனான்” என்றான்.*

*சின்னம்மா ஒண்டும் புரியாமல் இரண்டு பேரையும் மாறி மாறி பார்க்க, அவள் கண்கள் கலங்க நடுங்கியபடி அங்கிருந்து எழும்பி ஓடிவிட்டாள். அவன் கடிதத்தை வாங்கிப் படித்தான். அதில் அவன் சொன்ன கவிதை வார்த்தைகளோடு யுரேகா அவனுக்காக எழுதியிருந்த காதல் கடிதம். ‘சே.. சொந்தமா ஒரு காதல் கடிதத்தைக்கூட எழுதத் தெரியாதவளா இருக்கிறாளே!’ என்று நினைத்தபடி, “வீட்டிலை எதுவும் சொல்லிட வேண்டாம்!” என்று சின்னம்மாவிடம் கெஞ்சிக்கேட்டுக்கொண்டான். இது தெரிஞ்சால் ‘படுத்த பாயைச் சுருட்டி வைக்கத் தெரியாத சோம்பேறிக்கு, காதல் கேக்குதோ?!’ என அப்பா தொடங்கிவிடுவார்.*

*காதல் கடிதம் பிடிபட்டதால் இருவரும் நடுக்கத்துடன்*

இருந்தனர். வீட்டில் நிச்சயம் பிரளயம் கிளம்பப்போகிறது என அவள் பயந்தாள். அவளது அப்பா மிகவும் கண்டிப்பானவர். காதல், கத்திரிக்காய் என்றால், பாய்ந்து விழுவார் என்றுதான் எல்லோரும் நினைத்தார்கள். இரண்டு நாட்களாக அவள் வீட்டில் அசாதாரண மௌனம் நிலவியது. தகப்பனும் தாயும்தான் வீட்டின் பின்புறம் இருந்த கொய்யாமரத்தின் கீழ் உட்கார்ந்திருந்து ஏதோ கதை பேசிக்கொண்டிருந்தனர். வீட்டுக்குள் இருந்து அவள் ஒளிந்து ஒளிந்து பார்த்தாள். அவர்களின் உருவம்தான் தெரியுமே தவிர, பேசும் விஷயங்கள் கேட்காது. பெரும்பாலும் இருவரும் தீவிர சிந்தனையில் இருந்தனர். இடையிடையே பேசிக்கொண்டனர்.

திடீரென ஒருநாள் அவளது அப்பா புறப்பட்டு அவனது வீட்டுக்கு வந்தார். அவர் வருவார் என அவனது வீட்டில் யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை. ஆரம்பத்தில் அம்மா அதிர்ச்சியடைந்துவிட்டார். வில்லங்கம் ஒன்று நடக்கப்போகிறது என்றுதான் நினைத்தார். ஆனால், பிரச்னையை ஊர் அறியவிடாமல் இருவீட்டாரும் சுமுகமாகப் பேசித் தீர்க்கவேண்டும் என ஆரம்பத்திலேயே சொல்லிவிட்டதால் பிரச்னைகள் எதுவும் இல்லை. நான்கைந்து நாட்கள் இரு வீட்டாரும் தொடர்ந்து பேசி ஓர் உடன்பாட்டுக்கு வந்தனர். இருவரும் தொடர்ந்து படித்துப் பல்கலைக்கழகம் சென்று, பல்கலைக்கழகக் கல்வியையும் முடித்துவிட்டால் திருமணம். அதுவரை இருவரும் சேர்ந்து சுற்றக் கூடாது. தேவை எனில், வீட்டில் இருந்து கதைக்கலாம். இதுதான் உடன்பாடு. தமது காதல் இத்தனை இலகுவாக வீடுகளில் சம்மதம் பெறும் என அவர்கள் நினைத்திருக்கவே இல்லை. எப்படியும் இரண்டு வீடுகளிலும் பூகம்பம் வெடிக்கும் என நினைத்தார்கள். ஆனால், விதி வேறு விதமாகச் சிந்தித்திருந்தது. பிள்ளைகளைச் சேதாரமின்றி நல்ல கரைகளில் சேர்ப்பித்துவிடவேண்டும் என்தற்காகப் பெற்றோர் ஆடும் சதுரங்கம்தானே பிள்ளைகளின் வாழ்க்கை!

இந்தக் காதல் இலகுவில் ஈடேறியதற்கு இன்னொரு காரணமும் உண்டு. யுரேகாவின் மூத்த சகோதரி கா.பொ.த உயர்தரம் படித்துக்கொண்டிருந்தபோது உடன் படித்தவன் ஒருவனைக் காதலித்திருந்தாள். அவன் சைவக்காரன். அந்தக் காதலை தடுக்க அவளது பெற்றோர் எவ்வளவோ முயன்று தோற்றுப்போய் இருந்தனர். கடைசியில் அவள் தற்கொலை முயற்சி வரை போய்விட்டாள். இறுதியில் அவர் இறங்கி

வந்து, திருமணத்துக்குச் சம்மதம் தெரிவித்தார். அப்போது அவள் பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருந்தாள். அது முடிந்ததும் கல்யாணம். அதனால் தகப்பன் கொஞ்ச நாள் வீதிக்கு இறங்காமல் வீட்டிலேயே முடங்கிக்கிடந்தார்.

ராணுவத்தனமான ஒழுங்குடன் பிள்ளைகளை வளர்த்து வந்தபோது இப்படியொரு சம்பவம் நடந்தது, அவரை நிலைகுலைய வைத்தது. அவர் மெதுமெதுவாகச் செயலிழந்தார். அவர் நீண்டநாள் உயிர்வாழ மாட்டார் என்றார்கள். ஆனால், அவர் அசாதாரணமான தைரியக்காரன். மீண்டு வந்துவிட்டார். 'யுரேகாவுக்காகத்தான் தான் உயிர்வாழ்கிறேன்' என்று அடிக்கடி சொல்வார். இப்படியான நிலையில், யுரேகாவின் வாழ்வுடனும் பகடையாட அவர் விரும்பவில்லை. அதற்காக அவள் காதலித்தேன் எனக் கைகாட்டுபவனை எல்லாம் கட்டிக்கொடுக்கவும் அவர் தயாராக இல்லை. ஆனாலும் இப்போது தன்னால் பழையபடி புதிய பாதைகள் எதனையும் அமைக்க முடியாது என்பதை அவர் நன்றாகத் தெரிந்துவைத்திருந்தார். தெரியும் வழிகளில் நம்பிக்கை வைத்து தொடரலாம் என்ற முடிவுக்காக வந்திருந்தார்.

அவனது பக்கத்தில் வேறுவிதமாகச் சிந்தித்திருந்தனர். வளர்ந்த பிள்ளைகளைக் கட்டுக்குள் வைத்திருக்கச் சில விஷயங்களைக் கண்டும் காணாமலும் விட்டுவிட வேண்டும் என்பது அவனது தகப்பனின் கொள்கை. அப்போது நாட்டு நிலவரம் மிக மோசமாகி ஊருக்கோர் இயக்கம் இருந்தது. ஏற்கெனவே வீட்டில் ஒருவன் இயக்கத்துக்குப் போய்விட்டான். இவனும் வீதிகளில் அவர்களுடன் திரிவதாக மெள்ள மெள்ள வீட்டுக்குக் கதைகள் வரத்தொடங்கியிருந்தன. யாராவது ஒருவர் அது பற்றி வீட்டில் எச்சரித்துக்கொண்டே இருந்தனர். அதனால்தானோ என்னவோ படிப்பிலும் அவனுக்கு அக்கறை இல்லாமல் போய்க்கொண்டிருந்தது. அவனது பாடப்புள்ளிகள் கீழிறங்கிக்கொண்டிருந்தன. அது வீட்டில் பெரிய தலையிடியை கொடுத்திருந்தது. எதையாவது அவனிடம் கேட்கப்போய் வில்லங்கமாகினால், சொல்லாமல் கொள்ளாமல் அண்ணனைப்போலவே தம்பியும் வீட்டைவிட்டு பறந்துவிடுவானோ எனப் பயந்தார்கள். இப்படித்தான் அவனது தகப்பனுடன் வேலை செய்யும் ஒருவர் வீட்டிலும் ஒரு வாரத்தின் முன்னர் நடந்திருந்தது. மகனை எதற்கோ கண்டித்திருக்கிறார். அடுத்த நாள் அவன் வீடு திரும்பவில்லை. பிள்ளைகள் வீடு திரும்பாத காலம்

ஒன்றின் பிரதிநிதிகளாகப் பெற்றொர் வாழத்தொடங்கிய காலம் அது.

இந்த நிலையில், அவனுக்கு ஒரு காதல் இருப்பது நல்லது என நினைத்தனர். அவள் ஒரு திசைக்காட்டியாக அவனுக்கு இருக்கலாம். வீட்டுடன் கட்டிப்போடும் ஒரு நுண்ணியக் கயிறாக இருக்கட்டும் எனக் காதலுக்குச் சம்மதித்தனர். அதே நேரம் அவனது இயக்கத்தின் தொடர்புகளைக் குறைக்கச் சொல்லி அவளது நச்சரிப்பும் கூடிக்கொண்டே போனது. அவளின் நச்சரிப்பு கூடும்போதெல்லாம் அவளது உதடுகளை இவனது உதடுகள் மூடிவிடும். ஆனாலும் ஒருநாள் அவள் விடவில்லை.

“நீ என்னை ஏமாத்துறாய். உண்மையா என்னை விரும்புறீயா?”

“உனக்கு எப்பிடி அதை நிரூபிக்கிறது?”

“அதை நீதான் செய்யவேணும்”.

வீட்டுக்குப் போயிருந்தவன் ‘எப்படி இவளுக்கு நிரூபிக்கிறது...’ என யோசித்தவன், வொயர் துண்டு ஒன்றைத் தேடி எடுத்தான். அதை வாயில் வைத்துக் கடித்து அதன் கம்பியை மட்டும் இழுத்தெடுத்து, அதன் நுனியை Y வடிவில் வளைத்து, அதை நெருப்பில் சூடாக்கி இடக்கை மணிக்கட்டில் மெதுவாக வைத்து அமத்தினான். ஸ்.. என்ற சத்தத்துடன் எரிந்தது. பொங்கிவந்த இடத்தில் தேய்த்தான். தேய்த்தபோது அந்த இடத்தில் Y என்ற அடையாளம் கொஞ்சம் நெளிந்து, U போலவும் தோலில் சிவப்பாகத் தெரிந்தது. இதுக்காக இன்னொரு தடவை கையில் சூடு வைக்க முடியாது என நினைத்தபடி கை மணிக்கட்டில் ஒரு துணியைச் சுற்றி கட்டிவிட்டு, இந்த நேரம் அவளின்ரை அப்பாவும் அக்காவும் நிக்கமாட்டினம் என்று நினைத்தபடி அவள் வீட்டுக்குப் போயிருந்தான்.

“ஐய்யய்யோ கையிலை என்ன காயமா?” பதறினாள்.

அவிழ்த்துக் காட்டினான். Y சிவப்பாக தெரிந்தது. “எனக்கு வேறை வழி தெரியல Yureka!” என்றவனுக்கு

“சும்மா ஏதோ கோபத்திலை சொல்லிட்டன். அதுக்குப்போய் இப்பிடி செய்திட்டியே” என்றவளின் கண்ணீர்த்துளி ஒன்று, Y எழுத்தின் மீது விழுந்தது. ஏற்கெனவே எரியுது. இதுக்கை இவள் வேறை கண்ணீர் ஊத்தி எரியவைக்கிறாள் எண்டு அவன் எரிச்சலை

கட்டுப்படுத்த முயன்றுகொண்டிருந்தபோது, டீ கொண்டுவந்து வைத்துவிட்டு கொடுப்புக்குள் ஒரு நமட்டு சிரிப்புடன் அவளது தயார் போனார். தன்ரை மகளைக் கையிலை குத்திட்டான். இனி கைவிட மாட்டான் என அவர் நினைத்திருக்கலாம்.

அடுத்த நாள் கோயிலில் அவனது கையைப் பார்த்த அவனது நண்பன் ஒருத்தன், "டேய், என்னடா கையிலை 'பூ'னா எண்டு சூடுவைச்சிருக்கிறாய்" என்றான்.

இவனுக்குப் பத்திக்கொண்டு வந்தது. "உன்ரையாளுக்கு என்னடா பேர்?"

"மலர்"

"மலரெண்டால்... 'ம' எண்டெல்லோ வரும் அதென்ன பு?"

"புஸ்பம் எண்டும் சொல்லலாம்".

"டேய், அது பல்லில்லாத வாத்தியின்ரை பழைய பகிடி. உண்மையைச் சொல்லடா."

"டேய், வெங்காயம். தமிழ்ல யோசிக்காமல் இங்கிலீஷ்ல யோசி.. கொஞ்சம் உத்துப்பாத்தவன், சீ... அட யுரேகாவா?" வாயைப் பிளந்தான்

❍ ❍

# 6

அன்று பரீட்சை நாள். கா.பொ.த சாதாரண தர இறுதிப் பரீட்சையை வாழ்க்கையின் பெரிய தடைக்கல்லாகச் சில மாதங்களின் முன்னர்வரை நினைத்திருந்தான். பெரும்பாலான சமயங்களில் அந்தத் தடையை நினைக்கவே அவனுக்குப் பெரும் பதற்றம் ஏற்பட்டுவிடும். பரீட்சை முடிவுகளின் அடிப்படையில்தான் பிள்ளைகளின் குடும்ப இருப்பே தீர்மானிக்கப்படுகிறது என்பது மாதிரியான எண்ணம் அவனுக்குள் தீவிரம் பெற்றிருந்தது. அது சாதாரணமாக உருவானது இல்லை. வீட்டில், அயலில், உறவுகளில் நடந்த சம்பவங்களின் அடிப்படையில் உருவான எண்ணம் அது.

அவனது அப்பா பிறந்த கிராமமான இணுவிலுக்கு எப்போதாவது சென்று வருவான். அப்பாவின் உறவுமுறையான ஜெயா மாமி அப்பா பிறந்த அடுத்த வருடம் பிறந்தவராம். அவரின் கணவன் லண்டனில் இன்ஜினீயராக இருந்ததால் ஜெயா மாமியின் வீட்டில் ஒரு பவிசு குடிகொண்டிருந்தது. அவரது நடை உடையில் ஒரு நளினம் தொற்றியிருந்தது. கடந்த முறை அப்பாவுடன் போனபோது, ஜெயா மாமியின் மகன் பிரேம் அண்ணன் வீட்டில் இல்லை. ஜெயா மாமியிடம் விசாரித்தான்.

“ஆருக்குத் தெரியும்.. காலமை வெளிக்கிட்டது. உங்கினைக்கதான் சுத்தித் திரியும் கழுதை.. நானும் கைகழுவி விட்டுட்டன்” என்றார்.

வரும்போது அப்பாதான் சொன்னார், “பிரேமுக்கு ஏ.எல் சோதினையில் நல்ல ரிசல்ட் இல்லை. அதாலை

பல்கலைக்கழகத்துக்குப் போக முடியேல்லை. குடும்பத்தோட ஒட்டுறவு இல்லாமல் ஊர் சுத்தித் திரியுறான் பாவம்" என்று. இப்படி இப்படி மெலிதாக உருவான எண்ணம் அது. ஆனால், இன்னோர் ஆச்சர்யமாக, மெதுமெதுவாக உருவான அந்த எண்ணம் விதைத்த அச்சத்தின் சுவடுகள் திடீரெனக் காணாமல்போய்விட்டன. திடீரெனப் பரீட்சை பற்றிய எந்த அச்சமும் அவனிடம் இல்லாமல்போய்விட்டது. முன்னர்தான் பரீட்சைக் களம் தப்பிக்கவே முடியாமல் சந்திக்கவேண்டிய சண்டைக் களமாக இருந்தது. இப்போது அப்படியல்லதானே. எந்த வழியையும் தவிர்த்துவிட்டுச் செல்வதற்கு இன்னொரு வழி உள்ளது என்பதை அவனும் தெரிந்துவைத்திருந்தான். இந்தப் பரீட்சை அவனில் எந்தவித சலனத்தையும் ஏற்படுத்தவில்லை. மகளிர் கல்லூரி ஒன்றின் விளையாட்டுப் போட்டியைப் பார்த்துவிட்டு வருபவனைப்போல மிகச் சாதாரணமாகச் சென்று எழுதிவிட்டு, மிகச் சாதாரணமாக வெளியில் வந்தான்.

நல்ல மழை கொட்டிக்கொண்டிருந்தது. நண்பர்களிடம் விடை பெற்றவன் சைக்கிளை மிதித்தான். அந்தோணியார் கோயிலின் முன்னால் இருந்த பஸ் நிலையத்தில் சைக்கிளோடு அவள் காவல் இருந்தாள். சைக்கிளைவிட்டு இறங்கியவன், அவளோடு சேர்ந்து நனைந்தபடி சைக்கிளை உருட்டினான். அவளிடம் குடை இருந்தது விரிக்கவில்லை.

"நல்லா எழுதினீயா?"

"ம்.. ஏதோ எழுதியிருக்கிறன்."

"இந்த நான்கு மாத லீவிலை என்ன செய்யப்போறாய்?"

"என்ரை எலெக்ட்ரானிக் சாமான் திருத்திற படிப்பைத் தொடருவம். ரிசல்ட் வந்த பிறகு யோசிப்பம்."

"டேய், இது எங்கடை வாழ்க்கைப் பிரச்னை. நீ சர்வசாதாரணமாகச் சொல்லுறாய்" – அவள் சீறி விழுந்தாள்.

"அதுக்கு என்னை என்ன செய்யச் சொல்லுறாய்?"

"நாங்கள் இரண்டு பேருமே யூனிவர்சிட்டி போனால்தான் எங்கடை வாழ்க்கையே" – சாதாரணமாகக் கதைத்துக்கொண்டிருந்தவள், திடீரென அழுவதைப்போலக் கதைக்க ஆரம்பித்தாள்.

"ஓ... ஃபெயில் ஆகிவிட்டால் கழட்டிவிட்டுடுவியா?"

“ஏன்டா இப்பிடி கதைக்கிறாய்? நான் எவ்வளவு கனவுகளோடை இருக்கிறன் தெரியுமா!”

“எனக்கும்தான் நிறையக் கனவுகள் இருக்கு!” என இழுத்தான்.

அப்போது அவர்கள், மருதடிப் பிள்ளையார் கோயிலின் முன்னால் வந்திருந்தார்கள். அவள் திடீரென நின்றாள். அவளுக்கு எல்லாம் புரிந்துவிட்டது என்பது அவனுக்கும் தெரிந்தது. அவனது கண்களைச் சில விநாடிகள் உற்றுப் பார்த்தாள். பார்வையின் தீவிரத்தை எதிர்கொள்ள முடியாமல் பார்வையைக் கோயில் பக்கமாகத் திரும்பினான். அவன் தோளில் மெதுவாகத் தட்டி தன் பக்கம் திருப்பியவள், “எனக்குத் தெரியும் நீ என்ன நினைக்கிறாயெண்டு.. எனக்கொரு சத்தியம் பண்ணு.”

“என்னெண்டு?”

“நீ இயக்கத்துக்குப் போக மாட்டனெண்டு என்ரை தலையிலை சத்தியம் பண்ணு.”

அவன் ஒரு நிமிடமும் யோசிக்காமல் அவளின் தலையில் கை வைத்தான். “அந்தோணியார் அறிய நான் இயக்கத்துக்குப் போக மாட்டன்.”

அவள் வெடுக்கெனக் கையைத் தட்டிவிட்டாள். “அந்தோணியார் வேண்டாம். பிள்ளையார் மேலை சத்தியம் பண்ணு.”

“அந்தோணியார்தானே உங்கடை கடவுள்?” என்று சிரித்தான்.

“அதாலைதான் சொல்லுறன். உங்கடை கடவுள்மேல பண்ணு.”

மருதடிப் பிள்ளையாரைத் திரும்பிப் பார்த்தபடி, ‘பிள்ளையாரே, உனக்குமேலை சத்தியம் பண்ண மனசுக்குக் கஸ்ரமாயிருக்கு’ என முணுமுணுத்தபடி, “பிள்ளை... ஆர் மேலையும் சத்தியமாக இயக்கத்துக்குப் போக மாட்டன்” என்று அவள் தலையில் அடித்தான்.

அவள் இருந்த உணர்ச்சி வேகத்தில் பிள்ளைக்கும் ஆருக்கும் இருந்த இடைவெளியைக் கவனிக்கவில்லை. கொம்பாசை திறந்து 10 ரூபாய்த் தாள் ஒன்றை எடுத்து நீட்டிவிட்டு அவன் போவதையே பார்த்தபடி நின்றிருந்தாள்.

பரீட்சை முடிந்ததும் எல்லா பெடி பெட்டையும்

*மகிழ்ச்சியில் திரிந்தார்கள். கடந்த சில மாதங்களாக வீட்டு அறைக்குள் முடங்கிக்கிடந்து படித்துப் படித்து அவர்களுக்கு மண்டை வீங்கி இருந்தது. ஒரு வாரத்தில் எழுத்தில் கொட்ட வேண்டியதற்காக ஓரிரண்டு வருடங்களாக அசையாமல் படித்த நிறைய நண்பர்களை அவனுக்குத் தெரியும். கட்டை முகுந்தன், பெட்டை முகுந்தன், பஞ்சு... இப்படிப் பலர். ஆரம்பத்தில் விளையாடித் திரிந்தாலும் கடைசி சில மாதங்களில் எல்லோரும் உட்கார்ந்து படிக்கத் தொடங்கிவிடுவார்கள். ஆரம்பத்தில் மெதுவாக ஓடினாலும், இறுதிக்கட்டத்தில் வேகம் எடுக்கும் மாரதான் ஓட்டக்காரர்களைப்போல.*

*ஆனால், இவன் மிகச் சாதாரணமாக இருந்தான். முன்னர் எனில் சாதாரணமாகப் பாடசாலையில் நடக்கும் தவணைப் பரீட்சைகளுக்கே பதறிக்கொண்டு திரிந்தவன், இப்போது ஆழ்ந்த யோசனையில் திரிந்தான். எதிர்காலம் பற்றிய தெளிவான சித்திரம் அவனது மனதில் கொஞ்சம் கொஞ்ச மாக வரையப்பட்டுக்கொண்டிருந்தது. சாதாரணமாக எல்லோரும் வரையும் சித்திரமல்ல அது; பாடசாலை, வீடு, கல்வி, காதல் பற்றிய பரபரப்புகளுக்கு அப்பாலான சித்திரம் அது. அவனாக வரைந்த சித்திரம். அது மெதுமெதுவாக மனதில் வடிவம் பெற, அவனது நடத்தையில் நிதானம் கூடியது. எது பற்றியும் அலட்டிக்கொள்ளவில்லை. பரீட்சை என்றாலும் சாதாரணமாகவே இருந்தான். காதலியைக் கண்டாலும் சாதாரணமாகத்தான் இருந்தான். அவனுக்கே தன்னை நினைக்க ஆச்சர்யமாக இருந்தது. 'இதெல்லாம் எப்படிக் கூடி வந்தது?' என யோசித்துக் கொள்வான்.*

*உட்கார்ந்திருக்கும் இடத்தில் இருந்து எழுந்து செல்வதென்றாலே ஒன்றுக்கு இரண்டு தடவையாகச் சிந்திக்கிறோம். உயிரின் வேர்கள் எல்லாம் பரவியிருக்கும் வீட்டில் இருந்து விலகி செல்வது என்பது சாதாரணமானதா? அதற்கான தயார்ப்படுத்தலில் மனது மெள்ள ஈடுபடுவதன் வெளிப்பாடாகவும் இந்தச் செயல்கள் இருக்கலாம் என நினைத்தான். அவனது நண்பர்கள் யாருக்கும் இது தெரியாது. இவன் அடியோடு மாறிவிட்டதில் அவர்களுக்கும் ஆச்சர்யம். எல்லாம் யுரேகாவின் கைங்கரியம் எனப் பேசிக்கொண்டனர். சிலர் அவளின் காதுபடவே பேசி, அவளைக் கோபமூட்டினார்கள். அவனது மனதில் என்ன ஓடியது என்பதை யாராலும் கண்டுபிடிக்கவே முடியவில்லை. சுரேஷ் ஒருவனுக்குத்தான் விஷயம் இறுதி நேரத்தில் தெரிய வந்தது. இவனிலும் நான்கு வயது*

மூத்தவன். எப்படியோ இவனது கூட்டாளியாகிவிட்டான். ஒன்றாகப் படிக்காவிட்டாலும் மாலை நேரத்தில் கோயில் வீதியில் ஒன்றாகக் கால்பந்து விளையாடுவதால் ஏற்பட்ட பழக்கம். சுரேஷ் நல்ல உதைபந்தாட்டக்காரன். சர்வதேச அணியொன்றில் இருந்திருக்கவேண்டியவன், இந்தக் கிராமத்து பனங்கூடலுக்குள் மாறிப் பிறந்துவிட்டதால் இழுபட வேண்டியிருக்கின்றது என்பது அவனது அசைக்க முடியாத நம்பிக்கை. .

அவனும் சில வருடங்களுக்கு முன்னர், திடீரெனக் காணாமல்போயிருந்தான். அந்தக் கிராமத்தில் இருந்து முதலில் 79–ம் ஆண்டே காணாமல்போனதுபோல் அண்ணைத்தான். அவர் கனகாலத்தின் பின்னர் துவக்குடன் திரும்பி வந்திருந்தார். அப்போதுதான் ‘இயக்கம்’ என்ற ஒன்றைப் பற்றிப் பலருக்குத் தெரியவந்தது. அதன் பின்னர் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சிலர் காணாமல்போனார்கள். சிலர் துவக்குடன் திரும்பி வந்தனர். சிலர் இன்னும் திரும்பி வரவில்லை. அப்போதுதான் சுரேஷும் காணாமல்போனான். போனவன் சில வருடத்தின் பின்னர், திரும்பி வந்தான். ஆனால், துவக்குடன் வரவில்லை. முறிந்த கையுடன் வந்தான். டிரெய்னிங்கில் கை உடைந்துவிட்டது என்றுதான் பலரும் நினைத்தார்கள். சுரேஷும் இன்று வரை அதைத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறான். ஆனால், சுரேஷ் போன இயக்கத்தில் இவர்களின் ஊரைச் சேர்ந்த செல்வன் இருந்ததால், அவர் சொல்லித்தான் விஷயம் வெளித்தது. அதாவது, எந்த இயக்கத்துக்குப் போவது என்ற குழப்பத்தில் இருந்த சுரேஷ் முன்னால் இருந்த பல தெரிவுகளில் புளொட்டைத் தேர்ந்தெடுத்தான். அவர்களின் ஊரில் இருந்து இயக்கத்துக்குச் சென்றவர்கள் பெரும்பாலானவர்கள் புளொட்டுக்குத்தான் சென்றிருந்ததால் ஊரவர்கள் இருக்கும் இடத்துக்குச் சென்றால் பாதுகாப்பு இருக்கும் எனச் சுரேஷ் நினைத்தான்.

ஊரில் நண்பர்களாக இருக்காவிட்டாலும், போன இடத்தில் முகம் பழக்கமானவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். தெரியாத இடத்தில் போய்ச் சில்லம்பப்படுவதைவிட, தெரிந்தவர்களுடன் இருப்பது நல்லது என முடிவெடுத்தான். அவனது ஊரில் இருந்து மட்டும் ஆறு பேர் புளொட்டில் இருக்கிறார்கள். அந்தப் அண்ணைதான் முதலில் புளோட்டுக்குப் போனவர். அவனுக்குத் தூரத்து வழியில் உறவினர். போனமாதம்

திடீரென வீட்டுக்கு வந்திருந்தார். முன்னர் தணிந்த குரலில் பயந்து பயந்து கதைப்பவரைப்போலக் கதைப்பார். இப்போது அப்படி அல்ல. ஆட்களுக்கு நடுவில் ஒரு நாயகரைப்போலப் பாவனைப் பண்ணிக்கொண்டு உரக்கக் கதைத்தார். கதைப்பதுகூட நல்ல ஏற்ற இறக்கத்துடன், ஒருவித பிரசங்க பாவனையில் இருந்தது. அவரைப் பார்க்கப் பார்க்க அவனுக்கு ஆச்சர்யம் தீராமல் இருந்தது. இயக்கத்தில் அரசியல் வேலைகள் செய்கிறாராம். அவரைப் பார்த்த நாள் தொடக்கம் புளொட்டுக்குப் போக வேண்டும் என்ற ஆசை கிளரத் தொடங்கிவிட்டது. இவனது சொந்தக்காரர்களைத் தவிர, அயலில் உள்ள ஐயர் பக்கத்தில் இருந்துகூட இரண்டு பேர் புளொட்டில் இருக்கிறார்களாம்.

அவனது ஊரில் இருந்து இயக்கத்துக்குப் போனவர்கள் பெரும்பாலும் புளொட்தான். தச்சர் பக்கத்தில் இரண்டு பேர் புலிகள் இருக்கிறார்கள். அவ்வளவுதான். வயல்வெளிக்கு அப்பால் இருக்கும் குடிசைக் குடிமனைகளில் இருப்பவர்களில் சிலர் ஈ.பி.ஆர். எல்.எஃப்–புக்குப் போயிருக்கிறார்கள். இவனது வீட்டின் தோட்ட வேலைகளுக்காக அவர்கள் வந்திருக்கிறார்கள். வேலைக்கு வரும் சமயங்களில் பவ்வியமாகக் கையைக் கட்டிக்கொண்டு நின்றவர்கள், இயக்கத்துக்குப் போன பின்னர் அடியோடு மாறிவிட்டனர் என அப்பா அடிக்கடி புலம்பக்கேட்டிருக்கிறான். அவர்களில் யாரும் அவருக்கு முன்னால் ஒருபோதும் நிமிர்ந்து நின்றதே கிடையாது. ஆனால், ஈ.பி.ஆர்.எல்.எஃப்–புக்குப் போனவர்கள் கொஞ்ச நாள் முதல் ஊருக்குள் வந்திருக்கிறார்கள். அப்பாவை எங்கோ எதிரே பார்த்துவிட்டு சிரித்து, "ஐயா, எப்பிடி சுகம்?" என்றுவிட்டுப் போனார்களாம். முன்னர் எதிரே வருவதற்குக்கூடப் பயந்துகொண்டு திரிந்தவர்கள், சரிக்குச் சரியாக முகத்துக்கு நேரே கதைத்துவிட்டுச் சென்றதாக அப்பா வீட்டுக்கு வந்து புளுங்கிக்கொண்டிருந்தார். அவர்களைத் தொடர்ந்து அந்தக் கிராமத்தில் இருந்து பலர் ஈ.பி.ஆர்.எல்.எஃப்–புக்குச் சென்றுகொண்டிருந்தார்கள். புளொட்டின் தலைவர் உமாமகேஸ்வரன், ஒரு வெள்ளாளன். அதனாலேயே சுரேஷும் புளொட்டுக்குப் போய்விட்டான்.

ஒன்றோ இரண்டு வருடங்கள் நன்றாகத்தான் ஓடியிருக்கின்றன. அதுவரை கிளிநொச்சியில் நின்றவனை இந்தியாவுக்கு அனுப்பினார்கள். அங்குதான் அவனுக்குச் சனியன் பிடித்தது. தி.நகரின் ஒதுக்குப்பறமான வீடொன்றில் நான்கு நாள் தங்க வைக்கப்பட்டான். அங்கிருந்த இரண்டு

பொடியன்கள் அவனுடன் ஒட்டிக்கொண்டுவிட்டனர். இருவரும் மாதகல் ஊர் பொடியன்கள். அப்போது புளொட் தலைவருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்ததாகக் கூறி, கொஞ்சப்பொடியன்கள் பல முகாம்களில் இருந்தும் பிடிக்கப்பட்டார்கள்.

ஒருநாள் திடீரென வாகனத்தில் வந்தவர்கள் மாதகல் பொடியன்கள் இருவரையும் தூக்கிப் போட்டுக்கொண்டு சென்றனர். புறப்படுவதற்காக வாகனத்தில் ஏறியவர்கள், திரும்பவந்து சுரேஷையும் தூக்கிப் போட்டுக்கொண்டு சென்றனர். அந்த இரண்டு பேருடன் ஒட்டிக்கொண்டு படுத்திருந்ததைத் தவிர, தான் வேறொரு குற்றமும் செய்யவில்லை என அவன் அடித்துச் சத்தியம் செய்தும் யாரும் கேட்கவில்லை. கண்களைக் கட்டி ஓர் இடத்தில் அடைத்துவைத்தார்கள். பல நாள் விசாரணையின் முடிவில், அவன் விடுவிக்கப்பட்டான். அதற்குள் அவர்கள் அடித்த அடியைத் தடுக்கப் போய் சுரேஷின் கை முறிந்துவிட்டிருந்தது. அடித்துக் கை முறிந்தவனை இயக்கத்தில் வைத்திருக்கக் கூடாது என நினைத்தார்களோ என்னவோ அவனை வீட்டுக்கு அனுப்பிவிட்டனர்.

முறிந்த கையுடன் திரும்பி வந்தவன் கொஞ்ச நாள் வீட்டுக்குள்ளேயே படுத்திருந்தான். தகப்பனுடன் பிரச்னை வந்ததும், வீட்டைவிட்டு வெளியில் காலை தொடக்கம் இரவு வரை கோயிலடி, வாசிகச்சாலைப் பகுதிகளையே சுற்றிச் சுற்றி வந்தான். அப்போதுதான் அவன் சுரேஷுடன் நெருக்கமானான். அவன் இயக்கத்துக்குப் போகப்போகிறேன் என்றதும், சுரேஷ் சொன்ன ஒரே ஆலோசனை, எந்தக் காரணத்தைக்கொண்டும் புளொட் பக்கம் தலைவைத்தும் படுக்காதே என்பதே. புளொட்டைத் தவிர்த்தால் அவனது அடுத்த தெரிவாக ஈ.பி.ஆர்.எல்.எஃப் இருந்தது. அவர்களும் கையில் பெரிய கம்யூனிச புத்தகங்களைப் படிக்கக் கொடுத்ததால் விடுதலைப் புலிகளோடு இணைந்துகொள்ள முடிவெடுத்திருந்தான்.

விடுதலைப் புலிகளில் இணைவது என முடிவுசெய்த நாட்களில்தான் அன்பு அறிமுகமானான். சுரேஷ் மூலம் இந்த அறிமுகம் ஏற்பட்டது. அறிமுகத்தைத் தொடர்ந்து அன்புவை இரண்டு, மூன்று தரம் சந்தித்துவிட்டான். மற்ற இயக்கங்களைவிட, விடுதலைப் புலிகளில் இணைவதே கொஞ்சம் சிரமமாக இருந்தது. இயக்கத்தில் சேர்ந்ததன் பின்னர், வீட்டை நினைத்து ஓடிவந்துவிடக் கூடாது என்பதற்காகவும், ராணுவத்திடம் உயிருடன் பிடிப்பட்டால்

ரகசியங்களைக் கக்கிவிடக் கூடாது என்பதற்காகவும் நிறைய உறுதி தேவை என்றும், அந்த உறுதி உள்ளதா என்பதைச் சோதிக்க நிறையப் பரிசோதனைகளும் வைத்தனர். அன்பு தனது கைத்துப்பாகியைக் கொடுத்து குறிவைத்துச் சுடச் சொன்னான். ரி.என்.ரி கைக்குண்டின் கிளிப்பை கழற்றிவிட்டு அவனது கையில் கொடுத்துக் கீழ்ப்பக்கம் கழற்றி அதன் டிக்னேற்றரை (கெற்பு) பாதுகாப்பாக அகற்றி மீண்டும் கிளிப்பைப் பொருத்தச் சொன்னான். இவையெல்லாம் அவனுக்குப் பிடித்திருந்தது. இவனை அன்புவுக்கும் பிடித்துவிட்டது. ஆனாலும் இயக்கத்தில் உடனடியாக இணைத்துவிடவில்லை. பரீட்சையை முடித்துவிட்டு வரும்படி கூறி அனுப்பிவிட்டிருந்தான். இன்று பரீட்சை இறுதி நாள். கொட்டும் மழையில் நடு வீதியில் வைத்து யுரேகா தலையில் கைவைத்து, பிள்ளை ..ஆர் மீது சத்தியம் செய்த பின்னர் நேராகக் கோயிலடிக்குப் போனவன், அங்கு மடத்தில் படுத்திருந்த சுரேஷிடம் சைக்கிளைக் கொடுத்து, மாலையில் வீட்டுக்குச் சென்று, சைக்கிளைக் கொடுத்துவிடச் சொன்னான். ஆரம்பத்தில் தயங்கியவன் இறுதியில் இவனது வற்புறுத்தலுக்குச் சம்மதித்துச் சைக்கிளை வாங்கிக்கொண்டான்.

மானிப்பாய் முகாமில் போய் அன்புவை சந்தித்தான். இவன் நிரந்தரமாக இயக்கத்தில் சேர வந்துவிட்டான் என்று அறிந்ததும், அன்பு ஒரு பக்கம் தலையை நன்றாகச் சாய்த்து இவனையே உற்றுப்பார்த்துவிட்டு மெல்லிதாகச் சிரித்தான். இவனுக்கு அவசரம். வீட்டில் இருந்து யாராவது தேடி வந்துவிடுவார்கள் எனப் பயந்தான். யாரும் வருவதற்கு முன்னர் இடம் மாறிவிட்டால் பிரச்னை இல்லை என நினைத்தான். முதல் நாளே வாசலில் நின்று அம்மா அழுவதைக் கண்டால் மனம் எந்தத் திசையில் செல்லும் என்பதைத் தீர்மானிக்க முடியாது என நினைத்தான். இவனது பிரச்னை மாதிரிதான் இயக்கத்துக்கு வரும் எல்லோரும் வருவார்கள் என்பதால், இவன் பிரச்னையைப் புரியவைக்க அதிகச் சிரமப்பட வேண்டிதில்லை. அன்புவுக்கு எல்லாம் புரிந்தது. உடனேயே அவனைக் கூட்டிக்கொண்டு புறப்பட்டான். அன்பு மோட்டார்சைக்கிள் ஓட்ட இவன் பின்னால் பதுங்கி இருந்தான். முன்னால் வருபவர்களுக்குத் தெரியாமல் இருப்பதற்கு நிறையப் பிரயத்தனப்பட்டுக் கெண்டிருந்தான்.

❍ ❍

# 7

மாதகல் பொறுப்பாக இருந்த பீட்டரிடம் அவனை ஒப்படைத்துவிட்டு அன்பு விடை பெற்றான். பீட்டர் அவனைப் பண்டத்தரிப்பு பற்றி மாதா ஆலயத்துக்குப் பக்கத்தில் இருந்த பாழடைந்த வீடு ஒன்றுக்கு அழைத்துச் சென்றான். மிகவும் பழைமையான வீடு. விசாலமாக இருந்தது. வழமையான இயக்க முகாம்களைப் போலவே அது இருக்கவில்லை. இன்னும் சற்றுக் கவனம் எடுத்தால் யாரையும் அச்சுறுத்தும் கட்டடமாக அதனை மாற்றலாம்.

அது முக்கியமான முகாமாக இல்லை என நினைத்தவன், பின்னர்தான் அவன் நினைத்தது சரி என்பதை தெரிந்துகொண்டான். புதிதாகச் சேர்பவர்கள் தங்கவைப்பதற்கும், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான படகு போக்குவரத்தில் ஈடுபடுபவர்களின் தங்குமிடம் மற்றும் களஞ்சியசாலையாக இருந்தது என்பதைப் பீட்டர் சொல்லி அறிந்துகொண்டான். விடுதலைப் புலிகளின் கடல் போக்குவரத்து மையம், சற்று தள்ளி மாதகலில் இருந்தது. அப்போது எல்லா இயக்கங்களையும்போல, விடுதலைப் புலிகளிடமும் பெரியளவில் கடற்போக்குவரத்து வசதிகள் இல்லை. இந்தியாவுக்குப் பயணம் செய்வதற்கு விடுதலைப் புலிகளிடம் சொந்தமாகப் படகுகள் இல்லை. மீனவர், படகுகளை வாடகைக்கு எடுத்தே இந்தியாவுக்குப் பயணம் செய்தனர்.

அவனது கெட்டகாலமோ என்னவோ, அந்த நாட்களில் கடலில் கடும் காற்றும், மழையும், அலைகளின்

வீச்சும் அதிகமாகக் காணப்பட்டன. மீனவர் படகுகள் கடலில் இறங்கவில்லை எனச் செய்திகள் கிடைத்தன. மீனவர்கள் குடிசைகளுக்குள்ளேயே முடங்கிக்கிடந்தனர். அல்லது கடற்கரை ஓரமாகப் பீடி குடித்தபடி சீட்டு விளையாடிக்கொண்டிருந்தனர். பீட்டர் ஒவ்வொரு நாளும் கடற்கரைக்குப் போய் நோட்டம் பார்த்து வருவான். பீட்டர் வீட்டைவிட்டு கிளம்பியதும் இவர்களின் கனவுகள் விரியத்தொடங்கும். பயிற்சிக்காகச் செல்வதற்கு அந்த வீட்டில் புதிய போராளிகள் ஏழு பேர் காத்திருந்தனர். பீட்டர் நம்பிக்கையான செய்தியுடன் திரும்பி வருவான் என ஒவ்வொரு நாளும் காத்திருப்பார்கள். இந்த இரவில் கடற்படையைச் சுழித்துவிட்டு கடலைக் கிழித்தபடி இந்தியாவைச் சென்றடையலாம் என்றும், அங்குப் பயிற்சி முகாம்களில் ஆயுதங்களை இயக்க அத்துபடியாகக் கற்றுக்கொண்டு விரைவில் ஒரு முழுப் போராளியாகி இலங்கைக் கரையில் கால் வைக்கவேண்டும் என்று அவன் அடிக்கடி நினைத்துக்கொள்வான். அந்த நினைப்பே அவனில் ஒருவித மயக்கத்தை உண்டாக்கியபடி இருந்தது. ஊரில் பம்பரம் அடித்தபடி திரிந்த வீதிகளில் துப்பாக்கியுடன் நடந்து செல்வதை நினைக்க, படுத்திருந்தவன் உற்சாகப் பெருக்கில் துள்ளியெழுந்து உட்கார்ந்துவிடுவான்.

ஆனால், ஒவ்வொரு நாளும் பீட்டர் உற்சாகம் இழந்து திரும்ப வருவான். அவனது விருப்பங்களுக்கு மாறாக இயற்கை சன்னதம் ஆடிக்கொண்டிருந்தது. பீட்டர் திரும்பி வந்ததும், அனைவரும் சோர்ந்துவிடுவார்கள். யாரிடமும் கனவுகள் இருக்காது. உற்சாகம் இருக்காது. பேசாமல் படுத்து விட்டத்தை வெறித்தபடி இருப்பார்கள். சற்றைக்கெல்லாம் புரண்டு புரண்டு படுக்கத் தொடங்கிவிடுவார்கள். செய்வதற்கு எதுவுமின்றி இருப்பதுதானே பெரிய கொடுமை. புரண்டு புரண்டு படுக்கும்போது அடுத்தவர் என்ன செய்கிறார் என்பதை மெதுவாக ஒவ்வொருவரும் கவனித்துக்கொள்வார்கள். ஆரம்பத்தில் கவனிப்பு வரும். கவனிக்கப்படுபவரதும் விழிகள் நேருக்குநேராகச் சந்தித்துகொண்டால் மிகுந்த சங்கடப்பட்டுச் சட்டெனப் பார்வைக் கோணத்தை மாற்றிவிடுவார்கள். அப்படியொரு சம்பவம் நிகழ்ந்த சற்று நேரத்தில் பின், நிச்சயம் அதே மாதிரியான இன்னொரு சம்பவம் நடக்கும். விட்டுவிட்டு தொடரும் இதன் தொடர்ச்சியில் இருவரும் பேசத் தொடங்கிவிடுவார்கள்.

அங்கு வருபவர்கள் தங்கள் சொந்தப்பெயர், விவரங்களை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளக் கூடாது என ஆரம்பத்திலேயே பீட்டர் சொல்லிவிட்டான். ஆனாலும் பேசுவதற்கு ஒன்றும் இல்லாமல் இருக்கும். இது மாதிரியான சம்பவங்கள், உத்தரவுகளை மீற வைத்துவிடும். ஒருவரோடு ஒருவர் தங்கள் குடும்பக்கதைகளைப் பேச ஆரம்பித்துவிடுவார்கள்.

அவர்களில் சங்கானைப் பெடியன் என்ற ஒருவன் இருந்தான். அவன் படிக்கும் காலத்தில் ஒருத்தியைக் காதலித்தானாம். அங்கு இருந்தவர்களில் அவனையும் சங்கானைப் பெடியனையும் தவிர வேறு எவருக்கும் காதல் அனுபவம் இல்லை. அதிலும் அவன் காதல் பற்றி வாயே திறக்கவில்லை. ஆகவே, மற்றவர்கள் சங்கானைப் பெடியனின் காதல் கதையை அறிந்துகொள்வதில் ஆர்வம் காட்டினார்கள். அவனும் சினிமா பாணியில் தனது காதல் கதையைச் சொல்லி மற்றவர்களின் பொழுதைப் போக்காட்டிக்கொண்டிருந்தான்.

இதற்குள் இருவர் தமது முடிவை மாற்றிக்கொண்டு வீட்டுக்கு போய்விட்டனர். ஒருநாள் காலையில் மெல்லிய விசும்பல் ஒலிதான் எல்லோரையும் எழுப்பியது. மெதுவாக எழுந்து பார்த்தால், ஒருவன் அழுதுகொண்டிருக்கிறான். ஆரம்பத்தில் ஏதேனும் வருத்தமாக இருக்கலாம் என நினைத்தார்கள். பின்னர்தான் தெரிந்தது வீட்டை நினைத்து அழுகிறான் என்பது. அவனைக் கண்டபடி திட்டி பீட்டர் வீட்டுக்குக் கலைத்துவிட்டான். பயிற்சிக்குப் போவதற்கு முன்னர் வீட்டுக்குச் செல்பவர்கள் சென்றுவிட வேண்டும் எனப் பீட்டர் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்க “நாட்டுப்பற்று இல்லாத உந்த மாதிரியான உறண்டல்களையும் எங்களையும் ஒன்றாகச் சேர்த்து கணக்குப்பண்ண வேண்டாம்” என்று அவன் பீட்டரிடம் கண்டிப்பாகச் சொன்னான். பீட்டரும் ஒரு நமட்டுச் சிரிப்புடன் போய்விட்டான்.

ஐந்தாவது நாளானதும் அடைமழை கொஞ்சம் ஓய்ந்திருந்தது. அன்று மாலை கடற்கரைக்குப் போயிருந்த பீட்டர் “இண்டைக்கு இரண்டு வண்டி போகுது. அதிலை ஒண்டிலை இடம் இருக்காம். இண்டைக்கு நீங்கள் போகலாம்”. அப்போதுதான் அவர்கள் முகத்தில் மகிழ்ச்சி. கனக்க உடுப்பு எடுக்க வேண்டாம். காற்சட்டைக்கு

மேலை ஒரு சாரம். ஒண்டுக்கு மேலை இன்னொன்றாக இரண்டு சேட்டு மட்டும் போடச்சொல்லியிருந்தான். வெளிநாட்டுக்குப் போவதுபோலச் சூட்கேஸில் உடுப்புகளுடன் ஒருவன் வந்திருந்தான். அவன்தான் கவலைப்பட்டது மாதிரித் தெரிந்தது. இரவு 8 மணியளவில் நான்கு பேரையும் பீட்டர் கடற்கரைக்கு அழைத்துப்போனான். அங்கு நின்றவர்களிடம் ஏதோ ரகசியமாகக் கதைத்துவிட்டு அவர்களைக் கடற்கரை ஓரமாக இருந்த கொட்டிலுக்குள் இருக்கச் சொன்னான். இவர்கள் கொட்டிலுக்குள் போனதும் "சத்தம் வரக் கூடாது" எனக் கீழ்க்குரலில் இறுக்கமாகச் சொன்னான். அவனது குரலில் கடுமை கூடியிருந்தது. இருவர் வள்ளங்களில் பொருட்களை ஏற்றி முடித்துவிட்டு அங்கிருந்து போய்விட்டிருந்தனர்.

நேரம் ஓடிக்கொண்டிருந்தது.

"இப்பிடியே எங்களைக் கடற்கரையிலை விட்டிட்டு போயிடுவானோ?" என்றான் ஒருத்தன்.

"சே.. பீட்டர் அப்பிடி எல்லாம் செய்ய மாட்டான். அவனை எனக்கு நல்லா தெரியும்" என்றான் இன்னொருத்தன். சில நேரம் "ஆமிக்காரன் வந்தால் என்ன செய்யுறது... எந்தப் பக்கமாக ஓடுறது?" என்றான் ஒருத்தன். அதற்குப் பிறகுதான் அப்படியோர் ஆபத்து இருப்பது எல்லோருக்கும் உறைத்தது. "ஆமி வந்தால் கடலுக்குள் ஓடலாம்" என்றான் ஒருவன். "ஐயய்யையோ! எனக்கு நீச்சல் தெரியாதே!" இப்படி மாறி மாறி மெல்லிய குரலில் குசுகுசுத்துக் கடைசியில் இப்பிடியே இருக்கிறதுதான் நல்லது. கேட்டால் நாங்கள் மீன்பிடிக்கிற மக்கள் எண்டு சொல்லுவம் என முடிவு செய்தார்கள்.

சற்று நேரத்தின் பின்னர் மெல்லிய இருளில் சிலர் நடந்து வருவது தெரிந்தது. கால்கள் தள்ளாட்டம் இல்லாமல் உறுதியாக ஆழமாகக் கடற்கரை மணலில் புதைந்து புதைந்து வந்தன. அருகில் வந்ததும், ஒரு செருமலுடன், "எல்லாரும் இருக்கிறீயளோ பொடியள்" என்றது பீட்டரின் குரல். அதன் பின்னர்தான் எல்லோருக்கும் நிம்மதியாக இருந்தது. பீட்டர் கைவிடவில்லை என்றான் ஒருத்தன் குசுகுசுப்பாக. பீட்டருடன் வேறு நான்கு பேரும் வந்திருந்தனர்.

"என்ன பயந்துட்டியளோ.. படக்கோட்டி ஒருத்தன் தண்ணியடிச்சிட்டு எங்கேயோ படுத்திட்டான். தேடி பிடிச்சுக் கொண்டுவர நேரம் போட்டுது. கெதியா வாங்கோ" என்றபடி

பீட்டர் வேகமாக நடந்தான். இரண்டு வள்ளங்களையும் ஒருமுறை மேலோட்டமாகப் பார்த்துவிட்டு, பொருட்கள் குறைவாக இருந்த வள்ளத்தில் மூவரும் மற்றையதில் ஒருவருமாக ஏறச்சொன்னான். அவனுக்கு இதுதான் முதல் கடற்பயணம். அவனுக்கு மட்டுமல்ல, அவனுடன் புறப்பட்டிருந்த மற்றவர்களுக்கும்தான்.

வள்ளம் புறப்படும் முன்னர் ஓட்டி அவர்களைப் பார்த்து, "பெடியள் கவனமா கேளுங்கோ. நல்லா முன்பக்கமாகப் போய் ஆளோடை ஆள் நெருக்கமாக இருங்கோ. யாருக்காவது சத்தி (வாந்தி) வந்தால் அப்பிடியே பின்னாலை வந்து இந்தக் கயித்தைப் பிடிச்சுக்கொண்டு கடலுக்கை எடுக்கவேணும் சொல்லிப்போட்டன். வள்ளத்துக்குள்ளை யாராவது சத்தியெடுத்தால் கடலுக்கை தூக்கியெறிஞ்சு போடுவன். சத்தியெடுத்தால் கடல் தண்ணியிலை வாயைக் கொப்பிளிச்சுபோட்டு, கொஞ்சம் குடியுங்கோ பிறகு வராது" என்று பயமுறுத்தும் பிரசங்கம் ஒன்றை வைத்துவிட்டு ஆகாயத்தை அண்ணாந்து பார்த்து நெஞ்சில் சிலுவை போட்டுக்கொண்டவன், வள்ளத்தில் பூட்டியிருந்த மூன்று இயந்திரத்தில் ஒன்றை இயக்கினான். அவர்களுக்குக் கைகாட்டிக்கொண்டிருந்த பீட்டரும் மாதகல் கடற்கரையும் மெள்ள மறையத் தொடங்கியிருந்தது.

சாறத்தால் கழுத்து வரை போத்திக்கொண்டு படகுக்குள் குந்தியிருந்தான். என்னதான் நாடு பற்றிய கனவுகள் இருந்தாலும், குடும்ப உறவுகள் அறுக்க முடியாத தளைகள் என்பது படகு கரையைவிட்டு தொலைவாகத் தொலைவாகப் புரிந்தது. உறவுகளும் கடந்த காலமும், கடக்க முடியாத ஒரு நினைவாக அவனின் மனதில் விஸ்பரூபம் எடுத்துகொண்டிருந்தது. நாட்டுக்காகப் போராடுவது எனில், உறவுகளை உதறவேண்டும் என அவன் ஊரில் சந்தித்த எல்லா இயக்கக்காரர்களும் அச்சுப்பிசகாமல் சொன்னார்கள். ஆனால், இப்போது தன்னால் அது முடியாது என்று நினைத்தான். மனசுக்குள் எல்லோரும் விஸ்வரூபம் எடுத்தனர். அம்மா.. அப்பா.. அக்கா, அண்ணன்கள், தங்கச்சி, தம்பி.. யுரேகா.. பள்ளிக்கூடம்,.. கோயிலடி! அவன் தலையை ஒருமுறை உதறினான். 'இவர்களை எல்லாம் உதறிவிட்டுத் தன்னால் வாழ முடியுமா?' என நினைத்தான். சட்டென மனசு கனத்தது. அது பொய் என்பதும் புரிந்தது. நாட்டுக்காக உறவுகளை உதறுவது என்பதெல்லாம் பொய். தேவையெனில்,

உறவுகளிடம் இருந்து சற்று ஒதுங்கி இருப்பது என வைத்துக்கொள்ளலாம் எனப் புதிய விளக்கம் அளித்துத் தன்னைத்தானே சமாதானப்படுத்திக்கொண்டான்.

ஐந்து நாட்களாகிவிட்டன. எப்படியும் ஊருக்கே விஷயம் தெரிந்திருக்கும். அம்மா என்ன செய்வார்? அழுதிருப்பாரா? சாப்பிட்டிருப்பாரா? படுத்த படுக்கையாகவே கிடப்பாரா? அவனுக்கு நன்றாகத் தெரியும், அம்மாவுக்கு இதுவொரு கடக்க முடியாத துயரமாக இருக்கும் என. அவன் சிறுவனாக இருந்தபோது. ஐந்தாம் வகுப்பாக இருக்க வேண்டும். பாடசாலை முடிந்ததும், சினேகிதங்களுடன் பனங்கூடலுக்குப் போய்விட்டான். கள்ளன் – போலீஸ் விளையாட நல்ல இடம் என இவன் சொல்லி, எல்லோரையும் கூட்டிக்கொண்டு போனான். இவன் கள்ளனாகவும் போலீஸாகவும் மாறி மாறி உருவம்கொண்டதில் நேரம் போனதே தெரியவில்லை. இருள் நன்றாக ஏறிய பின்னர்தான் வீட்டுக்கு வந்தார்கள். அவன் தெருவில் நுழையும்போதே வீட்டுவாசலில் கூட்டம் கூடி நின்றது. என்ன பிரச்னையாக இருக்கும் என நினைத்தபடி போனான். முற்றத்தில் இருந்த பிலா மரத்துடன் சாய்ந்து அம்மா கண்களை மூடி பிள்ளையார் கோயில் பக்கமாகக் கைகூப்பிக் கும்பிட்டபடி இருந்தவர் இவனைக் கண்டதும் சிறிய உந்தலுடன் எழுந்து, அப்படியே மயங்கி சரிந்துவிட்டார்.

பிறகுதான் அவனுக்குத் தெரியவந்தது அவனைக் காணாமல் அம்மா துடி துடித்துப்போனது. அம்மாவின் கோலத்தைச் சகித்துக்கொள்ள முடியாமல், அப்பா, அக்கா, அண்ணனும் சைக்கிளில் தேடுதல் நடத்த புறப்பட்டுவிட்டார்கள். இவர்களுடன் அயலட்டையில் இருந்த நாலைந்து பேரும் புறப்பட்டு ஆளுக்கொரு திசையில் சென்றிருந்தனர். அம்மாவின் முகத்தில் தண்ணீர் தெளித்து எழுப்பியாயிற்று. கண் விழித்ததும் அம்மா எழ முயன்று விழுந்தார். அவரை எழுப்ப வேண்டாம் எனக் கூடியிருந்தவர்கள் அழுத்திப் பிடித்துக்கொண்டனர். அவர்களின் பிடியில் இருந்த விடுபடத் திமிறி திமிறி அவனை நோக்கி அம்மா வர முயன்றுகொண்டிருக்க, அவனை அருகில் போகச் சொல்லி பெரியம்மா சொன்னார். அவன் அருகில் போனதும் அவனை அணைத்தபடி அம்மா கண்களை மூடினார். நீண்ட நேரம் அப்படியே இருந்தார்கள். பிறகு, அம்மா மெதுவாக எழ, அவன் கைத்தாங்கலாக வீட்டுக்குள் கூட்டிச் சென்று படுக்கவைத்தான். அவனைத்

தேடி சென்றவர்கள் ஒவ்வொருவராகத் திரும்பி வந்தனர். ஒவ்வொருவர் வரும்போதும் வீடு இரண்டுபட்டது. அவனை உரத்த குரலில் திட்டித்தீர்த்தனர். அம்மா மெல்லிய குரலில் அவர்களை அமைதிப்படுத்தினார். பேசாமல் இருக்கச் சொன்னார். நிச்சயம் அடி விழும் என நினைத்தான். ஆனால், அம்மாவின் ஈனஸ்வரம் அந்த முரட்டுக்குரல்களைக் கட்டிப்போட்டுவிட்டது.

இப்போது அம்மாவை நினைக்க நினைக்க மனது வெடித்துவிடுவதுபோல இருந்தது. உட்கார்ந்திருந்தபடியே மெள்ள நெளிந்தான். இது இயல்பாகவே நடந்தது. சங்கடங்களினால் மனசு நிறையும்போதெல்லாம், இந்த நெளிவு உடலை இலகுவாக்கும் என மனசு நினைத்திருக்க வேண்டும். பெருமூச்சாகத் துயரம் வெளியில் கசிந்தது. யுரேகாவுக்கும் தெரிந்திருக்கும். என்ன செய்திருப்பாள்? அழுதிருப்பாள். சில நேரம் தற்கொலை முயற்சி ஏதும்..! சே..சே.. அப்பிடியெல்லாம் அவள் போக மாட்டாள். சரியான அழுத்தக்காரி. ஒரு சொல்லுக்கூடச் சொல்லேல்லை என்று கோவத்தில் என்னை மறந்திடுவாளோ? என்னை மறக்க மாட்டாள். நான் வரும் வரைக்கும் காத்திருப்பாள். அவள் காத்திருந்தாலும் ஒரு பிரயோசனமும் இல்லை. நான் அவளுக்குச் செய்து குடுத்த சத்தியம் எல்லாத்தையும் மீறிட்டன். அவள் தொடர்ந்து படிப்பாள். என்ரை படிப்பு இதோடை முடிஞ்சுது. அதோடை இயக்கத்தில் காதலிக்கக் கூடாது எண்டு சட்டம்வேறை. அவளைக் காதலிக்காமலேயே இருந்திருக்கலாம். சரி, ஏதோ நடக்கிறது நடக்கட்டும் என மனதைத் தேற்றிக்கொண்டான். வள்ளத்தின் மூன்றாவது இயந்திரமும் இயக்கப்பட அது கடல் நீரை இன்னும் வேகமாகக் கிழித்தபடி வேகமெடுக்கத் தொடங்கிருந்தது. அந்தக் கும்மிருட்டில் இடக்கையின் மணிக்கட்டில் Y தெரிகிறதா எனப் பார்த்தான். ஒன்றும் தெரியவில்லை. வலது கையால் அந்த இடத்தில் தடவிக்கொண்டான்.

❍ ❍

# 8

வளசரவாக்கத்தில் உள்ள மோர் கடைக்கு மதியங்களில் அவன் கட்டாயம் வருவான். அங்கு இருப்பவர்களில் அவனை விடுதலைப் புலி இயக்கமாகத் தெரிந்தவர்கள் மோர் கடையை வைத்திருக்கும் சுந்தரம் அண்ணனையும், மீனாட்சி அக்காவும்தான். மீனாட்சி அக்காவின் வீடு, மோர் கடைக்குப் பக்கமாகச் செல்லும் சந்துக்குள் இருந்தது. புருஷன்காரன் லாரி டிரைவராக இருந்தவன். வாரம் ஒருமுறை வீட்டுக்கு வந்து போய்க்கொண்டிருப்பான். சில நேரம் மாதம் ஒருமுறை வந்தான். செலவுக்குப் பணம் கொடுப்பதும் குறைந்துபோனது. சில சமயங்களில் இரண்டு மாதம் கழித்து வந்தான். ஒரு மாதம் கழித்து வந்தாலும் சரி, இரண்டு மாதம் கழித்து வந்தாலும் சரி ரொம்பச் சாதாரணமாக வந்து சென்றது மீனாட்சி அக்காவுக்கு என்னவோ மாதிரி இருந்திருக்கிறது. ஏதாவது கேட்டால் சண்டை வந்து அந்தப் பக்கமே வராமல் விட்டுவிடுவான் என்ற பயத்தில் அவளும் எதுவும் பேசுவது இல்லை. அவன் வருவது குறைந்து குறைந்து கடைசியில் நின்றேவிட்டது. பொறுக்க முடியாமல் ஒருநாள் சுந்தரம் அண்ணனிடம் பேசிக்கொண்டிருக்கும்போது விஷயத்தைச் சொல்லி அழுதிருக்கிறாள்.

சுந்தரம் அண்ணை யாரோ ஒரு டிரைவரை தேடிப்பிடித்து விஷயத்தை அறிந்துவிட்டார். அவன் வட இந்தியக்காரி ஒருவருடன் வேறோர் ஊரில் குடும்பம் நடத்துவது தெரியவந்திருந்தது. ஒருநாள் மனதைத் திடப்படுத்திக்கொண்டு மீனாட்சி அக்காவிடம் விஷயத்தைச் சொன்னார். அவளும் வெடித்துவரும் அழுகையைக் கட்டப்படுத்த உதடுகளைப்

பற்களால் இறுக அழுத்திக்கொண்டு நின்றிருக்கிறாள். பிறகு எதுவும் பேசாமல் வீட்டுக்குச் சென்றுவிட்டாள்.

சுந்தரம் அண்ணைக்குக் கடையில் இருக்க இருப்புக்கொள்ளவில்லை. 'ஒரு பொம்பளையின் வாழ்வில் இப்படியோர் இடி விழ வேண்டுமா?' என அந்தரப்பட்டுக்கொண்டிருந்தார். எப்படியாவது ஆறுதல் சொல்லாவிட்டால் அவரது மனம் ஆறாது. அப்படியொரு மனசு அவருக்கு. ஆனால், கடைக்குத் தொடர்ந்து ஆட்கள் வந்துகொண்டிருந்தார்கள். கொஞ்சம் தாமதமாகிவிட்டது. ஆட்கள் குறைந்ததும், மீனாட்சி அக்காவின் வீட்டுக்குப் போயிருக்கிறார். அங்கு, மீனாட்சி இரண்டு பிள்ளைகளையும் தயார்ப்படுத்தி, மாற்று உடைகளைச் சிறிய பொதியாக்கிகொண்டு இருந்தார். விசாரித்ததில், புருஷனைத் தேடிப்பிடித்து வரப்போவதாகச் சொல்லியிருக்கிறார். சுந்தரம் அண்ணைக்கு அயர்ச்சியாக இருந்தது. அவரை உட்காரவைத்து இதெல்லாம் சாத்தியமே இல்லை என்பதைப் புரியவைத்ததோடு அவளின் வருமானத்துக்குத் தனது கடையிலேயே இட்லி சுட்டு விற்க ஏற்பாடுகள் செய்துகொடுத்திருந்தார். அதன் பின்னர் மீனாட்சி அக்கா கணவனைத் தேடி வெளிக்கிடவில்லை. சுந்தரம் அண்ணைதான் மீனாட்சி அக்கா வீட்டுக்குள் வந்துவிட்டிருந்தார்.

இப்படி இரண்டு பேரும் கடையில் நின்ற ஒரு நாளில்தான் அவன் அந்தக் கடைக்கு முதன்முதலாகப் புகுந்து அவர்களோடு அறிமுகமாகி இருந்தான். அதுவும் சுவாரஸ்யமான பரபரப்பான தருணங்கள். ஏற்கெனவே தமிழகத்தில் வந்து அடிப்படை பயிற்சி பெற்றுவிட்டுச் சென்றவன்தான். ஆனால், அப்போதெல்லாம் இதுமாதிரி வெளியில் திரிய முடியாது. புதிய போராளிகள், முகாமைவிட்டே வெளியில் வர முடியாது. பயிற்சி முடிந்ததும், நேராக யாழ்ப்பாணத்தில் கொண்டுபோய் இறக்கிவிட்டனர். அங்குக் கொஞ்ச நாள் இருந்தபோதுதான், மீண்டும் இந்தியாவுக்கு வரும் சந்தர்ப்பம் வாய்த்தது. ஜொனி தலைமையில் வெடிபொருள் பயிற்சிகளுக்காக விஷேச அணி ஒன்று உருவாக்கப்பட்டது. அதில் அவனையும் சேர்த்தார்கள். மேலதிக பயிற்சிக்கு என மீண்டும் தமிழகம் வந்தார்கள். இப்படி வந்தவர்கள் நான்கைந்து இடங்களில் தங்கவைக்கப்பட்டிருந்தனர். இந்த நாட்களில்தான் தமிழகத்தின் தெருக்கள் மனதில் பதியத்தொடங்கியிருந்தன.

அன்று வீட்டிலேயே சும்மா இருக்கப் போரடித்ததால்

கொஞ்சம் வெளியே சுற்றிவிட்டு வரலாம் எனக் கிளம்பியிருந்தான். ஜொனி கைச்செலவுக்குப் பணமும் கொடுத்திருந்தான். கொஞ்ச நேரம் வீதிகளில் புதினம் பார்த்தபடி அலைந்து திரிந்துவிட்டுப் பசியெடுக்க ஒரு கடையினுள் புகுந்து சாப்பாட்டை ஓடர் கொடுத்தான். இவனது பேச்சுத்தமிழைக் கேட்டு எதிரே இருந்த ஒருவர், "தம்பி மலையாளமா?" என்றார்.

"இல்லை சிலோன்" என்றதும் அவரும் அனைத்துத் தமிழகத் தமிழர்களைப்போல உடனேயே ஊர் பிரச்னைகளைக் கேட்கத் தொடங்கியிருந்தார். 'நிம்மதியா சாப்பிடக்கூட விடுறாங்கள் இல்லை'யென்று மனதுக்குள் திட்டியபடி அவருக்கும் ஏதோ கொஞ்சம் பிரச்னையைப் புரியவைக்க முயற்சித்தபடி சாப்பிட்டுக் கை கழுவி பேப்பரில் துடைத்தபடி ஒரு பீடாவை வாங்கி வாயில் போட்டபடி வெளியே வந்தபோது கடைக்கு எதிர்ப்பக்கமாக ஒருவன் அவனையே கவனித்தபடி நின்றிருந்தான். சட்டென்று அவனுக்கு எதிரே நிற்பது மதன் என அடையாளம் கண்டுபிடித்தவன், மதன் நின்ற தோரணையில் இவனைத்தான் எதிர்பார்த்து நிற்கிறான் என்பதைப் புரிந்துவிட்டான். இன்றைக்கென்று ஓர் ஆயுதமும் இல்லாமல் வந்தது மூளைக்குள் மின்னலாக அடித்தது. இடுப்பை மெதுவாகச் சொறிவது மாதிரியும், இடுப்பில் இருந்து கைத்துப்பாக்கியை உருவுவது மாதிரியும் பார்ப்பவர்களுக்குக் குழப்பம் தரும் விதமான ஒரு பாவனைச் செய்தபடி கீழ்க்கண்ணினால் மதனைக் கவனித்தான். இவன் துப்பாக்கியை எடுக்கிறான் என மதன் நினைத்திருக்க வேண்டும். சைக்கிளை வைத்தபடி நின்ற வயோதிகர் ஒருவரின் பின்னால் மறைந்தான். இந்தக் கணத்தில் சட்டென வீதியில் இறங்கி நடக்கத் தொடங்கினான். கால்கள் இயந்திரத்தனமாக இயங்கின. மதன் நிச்சயம் ஏதாவது செய்வான் என உறுதியாக நம்பினான். ஏனெனில், மதனது புளொட் இயக்கம் இவனது இயக்கத்தில் கொலைவெறியில் உள்ளது. யாரையாவது ஒருவனைப் போட்டுத்தள்ளும் அல்லது அடித்து முறிக்கும்.

நான்கு நாட்களுக்கு முன்னர்தான் மதனது இயக்கக்காரன் ஒருவனை இவர்கள் பிடித்தார்கள். மெரினா கடற்கரைப் பக்கம் போன இவர்களது உறுப்பினர் ஒருவனைக் காரணம் இல்லாமல் அடித்ததற்காகப் பிடித்து வந்தார்கள். அரை நாள் முகாமின் இருட்டு அறையில் அடைத்துவைத்து அடித்துவிட்டு அனுப்பிவிட்டார்கள். பதிலுக்குப் பதில் கிடைக்கும் என்ற செய்தியை அவர்கள் ஏற்கெனவே அனுப்பிவிட்டனர்.

மதனை அவனுக்குப் பல வருடங்களாகத் தெரியும். நல்ல நண்பனும்கூட. அவர்களது முகாமுக்கு அடிக்கடி சென்றும் வந்திருக்கிறான். ஆனால் என்ன நட்பு இருந்தாலும் இயக்க நிலைப்பாட்டுக்கு பின்னர்தானே எல்லாமும்.

இந்த நிலையில் தனியாக வந்தது லூஸுத்தனமான வேலை. எப்படியாவது தப்பிக்க வேண்டும் என்பதே குறியாக இருந்தது. திரும்பிப் பார்த்து பார்த்து நடந்தான். மதனும் ஓட்டமும் நடையுமான ஒரு வேகத்தில் பின்னால் வந்துகொண்டிருந்தான். அவனோடு வேறு சிலரும் பின்தொடர்வதுபோல இருந்தது. மதனிடம் துப்பாக்கி இருக்கிறதா இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. வெடி வைப்பவனாக இருந்தால் இந்நேரம் வைத்திருக்க வேண்டும். அதை நினைக்க முதுகுக் கூசியது. சிறிய சந்து ஒன்றில் ஏறினான். கூட்டம் அதிகமாக இருந்தது. வலது பக்கமாக இருந்த கடைத் தொகுதியின் முன்பாகக் கூட்டம் இருந்தது. விரைவாக ஓடி அதற்குள் புகுந்தான். உடலில் ஓர் அசுரவேகம் பிறந்தது. எதிர்ப்பட்டவர்களை எல்லாம் இடித்துத் தள்ளி வழி ஏற்படுத்திக்கொண்டு ஓடினான். அந்தப் பகுதி அவனுக்குப் பரிச்சயமானது அல்ல. முட்டுச்சந்துகளுக்குள் இறங்கினால் வழி தவறிவிடுவான். ஆனால், அது இப்போது முக்கியம் அல்ல. எப்படியும் தப்பிப்பது ஒன்றே குறி. மதனது நோக்கம் தெரியவில்லை. அனேகமாகப் பிடித்து முகாமுக்குக் கொண்டுசெல்வதாக இருக்க வேண்டும். அல்லது தனிமையில் கொண்டுபோய் நான்கு சாத்து சாத்துவதாகவும் இருக்கலாம்.

எதிர்ப்பட்ட சந்து ஒன்றில் புகுந்து ஓடினான். அவனது பயிற்சிகளுக்கு இப்போதுதான் முதன்முறையாக வேலை வந்தது. மூச்சு இரைக்க ஓடினான். சிறிது நேரத்தின் பின்னர் திரும்பி பார்த்தான். பின்னால் யாரும் இல்லை. மதன் சனக்கூட்டத்தில் சிக்கி வழி தவறவிட்டிருப்பான் என நினைக்கும்போதே மீண்டும் தூரத்தில் மதன் அங்குமிங்கும் பார்த்தபடி வந்துகொண்டிருந்தான். சுற்றிவரப் பார்த்தான். ஒருவர் கடைக்குள் இருந்து மோரை இழுத்து ஆத்திக்கொண்டிருந்தார். அருகில் இன்னொரு பெண். சட்டெனக் கடைக்குள் பாய்ந்தான். அவர்கள் அலற தயாராவதற்குள் வாயில் கை வைத்து "உஸ்... சத்தம் போடாதேங்கோ ப்ளீஸ்..." என்றபடி, வெளியில் இருப்பவர்களுக்குத் தெரியாதபடி பாதியாக மடிந்து, அவர்களது காலடியில் உட்கார்ந்து, தனக்கு ஆபத்து என்பதைப்போல வெளிப்பக்கமாகக் கைகாட்டினான்.

அவர்களது முகத்தில் கலவரம் அடங்காதபோதும், வந்தவனால் ஆபத்து இல்லை. ஆபத்துக்கு அடைக்கலம் புகுந்தவன் என்பதைப் புரிந்துகொண்டார்கள். அதுதான் சுந்தரம் அண்ணையும் மீனாட்சி அக்காவும் அவனுக்கு அறிமுகமான பரபரப்பான தருணங்கள்.

இப்போதும் உறுதியாக நம்புகிறான், அன்று தான் உயிர் தப்பியதற்கு சுந்தரம் அண்ணையும் மீனாட்சி அக்காவும்தான் காரணம் என. அவர்கள் தங்கள் வீட்டிலேயே உணவு கொடுத்து தங்கவைத்து அவன் சொன்ன அடையாளங்களை வைத்து அன்று இரவு முகாமுக்குச் சுந்தரம் அண்ணை கொண்டுபோய் விட்டிருந்தார். பின்னர் இரண்டு இயக்கமும் கதைத்து மாறி மாறி அடிபடுவதில்லை என ஓர் உடன்பாட்டுக்கு வந்தார்கள். அதன் பின்னர் கொஞ்ச காலம் அடிதடி எதுவும் இருக்கவில்லை. அதன் பின்னர் தினமும் சுந்தரம் அண்ணையின் மோர் கடைக்கு வந்துபோனான். மற்ற இயக்கக்காரர் சிலரும் வருவார்கள். ஒரு சினேகபாவத்துடன் பார்த்துச் சிரித்துக்கொள்வார்கள். சமயங்களில் உட்கார்ந்து அரசியல் கதைப்பதும் உண்டு. சில நேரங்களில் ஈ.பி.ஆர்.எல்.எஃப்–காரர் அகப்பட்டால் கதை மணிக்கணக்காகப் போகும். சுந்தரம் அண்ணையும் தன் பங்குக்கு எதையாவது எடுத்துவிடுவார். அதில் இருந்த எல்லோரும் தாங்கள் அரசியலில் கற்று தேர்ந்த பெரிய மேதைகள் என நினைத்து விவாதம் அனல் பறக்கும். இந்திரா காந்தி எப்போது தமிழீழம் தருவார், சோவியத் யூனியன் தனியாக இறங்கி நாட்டைப் பிரித்துத் தருமா? அல்லது சீனா, கியூபாவுடன் இணைந்து இறங்கி அடிக்குமா?, தமிழீழத்தில் விவசாயப் பண்ணை முறை ஏற்படுத்தப்படும்போது, தமது இயக்க போராளிகளை போல மற்ற இயக்க போராளிகளும் இணைந்து பண்ணையில் வேலை செய்வார்களா? என்ற ரீதியில் விவாதம் செய்வார்கள். இவன் மோருக்குள் மிதக்கும் வெங்காயத்தைக் கடித்து ரசித்துக் குடித்துக்கொண்டிருப்பான். மீனாட்சி அக்காவோ பாவம் பேந்தப் பேந்த முழித்தபடி அனைவரையும் மாறி மாறிப் பார்ப்பார்.

இப்படித்தான் ஒருநாள், மற்ற இயக்கக்காரன் ஒருவனிடம் மோர் கடையில் அகப்பட்டுவிட்டான். அந்த இயக்கக்காரன் பொழுதுபோக்க வந்திருக்க வேண்டும். “தோழர் அரசியல் விவாதத்துக்கு வாங்கோ” என வலுக்கட்டாயமாகப் பக்கத்தில் உள்ள கோயிலடிக்கு இழுத்துக்கொண்டுபோனான். கோயிலின் பக்கவாட்டில் பெரிய ஆலமரம் கிளை விரித்திருந்தது. அதன்கீழ் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். தமிழகத்தில்

போராளிகளை அணிதிரட்டிக்கொண்டு படகுகளில் திடீரென இலங்கைக்குள் புகுந்து தாக்கி ஓரிரு நாட்களில் தமிழீழத்தை மீட்டெடுப்பதே தமது திட்டம் என்றும், அதற்கெனத் தமிழகத்தில் நிறைய அரசியல் வேலைகள் செய்வது தமிழக இளைஞர்களையும் திரட்டிக்கொண்டிருப்பதாக அரை மணித்தியாலமாகக் கையைத் தலையை ஆட்டி சொல்லிவிட்டு அவனை உற்றுப்பார்த்தான். இவன் பேசாமல் கேட்டுகொண்டிருந்துவிட்டுச் சாதாரணமாகச் சொன்னான் “எங்களிட்ட அப்பிடியோர் அதிரடி திட்டமும் இல்லை. இங்கு பயிற்சியெடுத்து, எங்கட குரூப்புகள் அங்க போய்க்கொண்டிருக்கின்றன. எல்லாம் முடிய எத்தனை காலமாகும் எண்டு சொல்லத்தெரியாதுதானே. ஆனால், எங்கட பொடியள் மெது மெதுவாகக் கெரில்லா போரை தீவிரப்படுத்தவாங்கள். இப்ப ஒரு முன்னூறு பொடியள் டிரெய்னிங் எடுத்து அங்க நிற்கிறாங்கள். அதைவிட வன்னியிலயும் மட்டக்களப்பிலயும் நாங்களே டிரெய்னிங் காம்புகளைத் தொடங்கிவிட்டம். என்ன இருந்தாலும் இந்தியா அயல்நாடுதானே. நாளைக்கு என்ன நடக்கும் என்பதை சொல்ல ஏலாது” என்று சொன்னதை அவன் அவ்வளவு அக்கறையாகக் கேட்கவில்லை. நாடியை வருடிக்கொண்டிருந்தவன், திடீரென

“என்ன... உங்கட தலைவர் கலியாணம் கட்டப் போறாராம்” என்றான்.

இவனுக்குத் தூக்கிவாரிப்போட்டது. ஆத்திரத்தில் உடம்பு துடித்தது. அவனை அப்படியே தூக்கி மரத்துடன் அடிக்கலாமா என்று நினைத்தான். இப்பதான் இரண்டு இயக்க பிரச்னையும் ஓரளவு தணிந்தள்ளது. வீண் பிரச்னையை உண்டாக்கக் கூடாது எனப் பல்லைக் கடித்துக்கொண்டான். இயக்கத்தின் விதி, திருமணம் செய்யக் கூடாது என்பது. இயக்க விதிகளை இறுக்கமாகப் பின்பற்றுவதில் தலைவர் முன்னுதாரணமானவர் என்பதில் அவனுக்குத் துளி அளவுக்குச் சந்தேகமும் இல்லை. ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு, நிதானமாக அவனுக்குச் சொன்னான். ஆனாலும் அவனும் விடாப்பிடியாக நின்றான். தமது இயக்க முக்கியப் பொறுப்பாளர் ஒருவர் சொன்னதாகவும், அவர் சொன்னால் பிழையாக இருக்காது என்றும் வாதாடினான். அவனுடன் என்ன வீண் கதை என எழுந்து வந்துவிட்டான்.

முகாமுக்கு வந்து இவனது கூட்டாளி பரதனை தேடினான். அவன்தான் எதையும் மறைக்காத நண்பன். பரதன் மாடியில்

இருப்பதாக நசீம் சொன்னான். மாடியில், பரதனும், சசியும், காமினியும் ஏதோ குசுகுசுத்துக்கொண்டிருந்தனர். இவனைக் கண்டதும் மற்றவர்கள் பேச்சை நிறுத்திவிட, பரதன்தான் அவர்களைப் பார்த்து, ‘இவன் நம்ம ஆள் பிரச்னை இல்லை’ என்பதையொத்த சைகை ஒன்று காட்டிவிட்டு விஷயத்தைச் சொன்னான். சற்றுமுன் மற்ற இயக்கக்காரன் சொன்ன அதே தகவல். “தகவல் பிழையாக இருக்கலாம்” என்று இவன் சொன்னான். பரதன் இறுக்கமாக இவனது கையைப் பிடித்து நிதானமாகச் சொன்னான். “இயக்கம் போராளிகளிடம் உத்தியோகபூர்வமாக அறிவித்துவிட்டதாம். இந்த விஷயம் கடந்த சில நாட்களாக இயக்க மேல்மட்டத்தில் பெரிய பிரச்னையாக இருந்தது. தற்போது ஓரளவுக்கு அடங்கிவிட்டது” என்று. பொறுப்பாளர்கள் ஆரம்பத்தில் எதிர்த்தபோதும், பிறகு அடங்கிவிட்டார்களாம். பாலா அண்ணர்தான் எல்லோரையும் சமாதானப்படுத்தியிருக்கிறார். அவர் நல்ல கதைகாரன். எந்தப் பெரிய கொம்பனையும் கதைத்தே மடக்கிவிடுவார் என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம்தான்.

ஆனால், அடுத்த மட்ட போராளிகளைச் சமாதானப்படுத்த இயக்கம் வேறொரு ப்ளான் பண்ணியிருந்ததைத்தான் அவனால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. தமிழகத்தில் உள்ள பொடியள் அனைவரையும் ஓர் இடத்தில் ஒன்று கூட்டிவிட்டு பாலா அண்ணைக் கதைப்பார் என்றுதான் அவன் உறுதியாக நம்பினான். சிலபேரிடம் அதனை அடித்துக் கூறியும் இருந்தான். அந்தக் கூட்டத்தில் வைத்து பொடியளின் அபிப்பிராயங்களைச் சொல்லுங்கோ என்றுவிட்டு, பாலா அண்ணை எல்லோரது மண்டைகளையும் கழுவிவிடுவார் என்றதான் நினைத்தான். ஆனால், இயக்கம் வேறுவிதமாக யோசித்திருந்தது.

தமிழகத்தில் உள்ளவர்களை ஒருநாள் ஒன்று கூடுமாறு அறிவிப்பு வந்தது. எல்லோரிடமும் பரபரப்புத் தொற்றியிருந்தது. இயக்கம் உருவாக்கிய ஒழுக்க நெறியை தலைவரே கடந்து செல்கிறார் என்றால், சாதாரண விஷயமா? அவன் அறிந்த வரையில் பல போராளிகள் கடுமையான கோபத்தில் இருந்தனர். தலைவர் வந்தால் நேருக்கு நேராகக் கேட்டுவிடுவதென்ற முடிவுடன் பலர் இருந்தனர். இந்தப் பிரச்னை முற்றி, இயக்க மேல் மட்டத்துக்குள்ளேயே ஒருவித குழப்பம் நிலவுவதாகவும், தலைமைப் பதவியில் இருந்து விலகவும் தயாராக உள்ளதாகத் தலைவர் அறிவித்துவிட்டதால் புதிய தலைவர் பற்றிய

தீவிர ஆலோசனை நடந்துவருவதாகவும், அனேகமாக ராகவன் அண்ணையின் பெயர்தான் அடிபடுவதாகவும் பரதன் சொன்னான். அவன் யாரிடமிருந்து இந்தத் தகவல்களைப் பெற்றான் என்பது தெரியவில்லை. ஆனால், அவன் சொன்னால் உண்மையிருக்கும் என நம்பினான். இதனால் இன்றைய கூட்டம் நிச்சயம் அனல்பறக்கும். அதே நேரம் அவன் மனதுக்கும் கஷ்டமாகத்தான் இருந்தது. தலைவரின் திருமணத்தை ஏற்பதா அல்லது இயக்கத்தைவிட்டு வெளியேறுவதா என எந்த முடிவுக்கும் வரமுடியாதவனாக, பொறுத்திருந்து பார்க்கலாம் என முடிவெடுத்திருந்தான். இதற்கிடையில் தலைவரின் திருமணத்தை ஏற்றுக்கொள்ளாதவர்கள் அனைவரும் கையெழுத்திட்டு தரும்படியும், அதனைத் தலைவருக்கு அனுப்பி வைப்பதாகச் சொல்லி ஜொனி கோடிட்ட ஒரு கொப்பியையும் (நோட்டு) பேனாவையும் கொண்டுவந்து முகாமில் கொடுத்துவிட்டுப் போயிருந்தார்.

தலைமைக்கு எதிராகக் கையெழுத்து வைக்கப் பலரும் யோசித்தார்கள். காரணம் அதே காலகட்டத்தில் புளொட் அமைப்பில் தலைமைக்கு எதிராகக் கதைத்த சிலர் கொல்லப்பட்டதாக அறிந்திருந்தார்கள். அதைப்போல இங்கும் தலைமைக்கு எதிராகக் கையெழுத்து வைப்பவர்கள் கொல்லப்படலாம் என ஓர் அச்சம் இருந்தது. என்ன செய்யலாம் என யோசித்தபோதுதான் அவன் ஒரு யோசனை சொன்னான். அதாவது “கடதாசிகளில் பல வட்டங்களைப் போட்டுவிட்டு வட்டத்தைச் சுற்றி கையெழுத்துப் போடலாம்” எனச் சொன்னான். மற்றவர்கள் எதுக்கு வட்டம் போட வேண்டும் என்றபடி அவனை வினோதமாகப் பார்த்தார்கள். “தலைமைக்கு எதிராகக் கையெழுத்து போடும் எல்லோரையும் இயக்கம் கொலை செய்ய முடியாது. அதே நேரம் யாரும் கையெழுத்து போடாமலும் இருக்க முடியாது. தலைமையே உருவாக்கிய இயக்க விதியை தலைமையே மீறும்போது அதற்கு எமது எதிர்ப்பையும் காட்ட வேண்டும். கையெழுத்தை மேல் இருந்து கீழாக வரிசையாகப் போட்டால் யார் தலைமையைத் தீவிரமாக எதிர்க்கிறார்களோ அவர்களே முதலில் கையெழுத்திட்டிருப்பார்கள். எனவே, முதலில் கையெழுத்திட்ட பத்துப் பேரைத் தூக்கிவிட்டால் மற்றவர்கள் தாங்களாக அடங்கிவிடுவார்கள். எனவேதான் வட்டத்தைப் போட்டு அதனைச் சுற்றி கையெழுத்து வைத்தால் யார் முதலில் கையெழுத்து வைத்தது என்று இங்குள்ள யாராவது ஒருவர் சொல்லாதவரை தலைமைக்குத் தெரியாது”

என்றான். அனைவருக்கும் அது பிடித்திருந்தது. கொப்பியில் வட்டங்கள் போட்டு கையெழுத்து வைத்து அனுப்பிவிட்டுக் காத்திருந்தார்கள். அதே நேரம் பாலா அண்ணை எவ்வளவுதான் அரசியலை கரைத்து குடித்து மற்றவர்களைச் சமாளிக்கும் வல்லமை வாய்ந்தவராக இருந்தபோதும், இன்றைய சூழலை எதிர்கொள்ளச் சிரமப்படுவார் என்றே கணக்குப் பண்ணியிருந்தான். பாலா அண்ணர் தனியாக வருவாரா அல்லது தலைவரும் உடன் வருகிறாரா என்பதை யூகிக்க முடியாமல் இருந்தது. யாராவது சில நேரம் பாலா அண்ணையுடன் ஏறுக்குமாறாகக் கதைத்தும்விடுவார்கள் என நினைத்துகொண்டிருந்தபோது, வாசலில் ஒரு வாகனச் சத்தம் கேட்டது. ஜன்னலுக்குள்ளால் எட்டிப் பார்த்தான். தூரத்தில் அம்பாசிடர் கார் ஒன்று அசைந்தது.

வீட்டில் இருந்தவர்களிடம் ஒருவிதமாகப் பரபரப்புத் தொற்றிக்கொண்டுவிட்டது. படுத்து தூங்கிக் கொண்டிருந்தவர்கள், உட்கார்ந்து அரட்டையடித்துக் கொண்டிருந்தவர்கள் அனைவரும் அவசர அவசரமாக எழுந்து அங்குமிங்குமாக ஓடிக்கொண்டிருந்தனர். சாரத்துடன் இருந்தவர்கள் பதறியடித்துக் காற்சட்டைக்குள் உடலை புகுத்த முயன்றுகொண்டிருந்தார்கள். பொறுப்பாளர் பகீர் அண்ணை விரைவாகத் தயாராகுமாறு அவசரப்படுத்திக் கொண்டு வாசலைப் பார்த்துக்கொண்டு நின்றார்.

தலைவர் வருகிறாரா எனப் பரபரப்புடன் வாசல் பக்கம் வந்தான். ஆனால், அவர் வரவில்லை. நல்ல உயரமாக வாட்டசாட்டமாகப் பொன்னம்மான்தான் சிரித்துக்கொண்டு உள்ளே வந்தார். நல்ல உயரமாகவும் வாட்டசாட்டமாகவும் வழமைபோல் முகத்தில் மழிக்கப்படாத லேசான தாடி படர்ந்திருந்தது. அவரது வாட்டசாட்டமான உருவத்துக்குப் பொருத்தமான முகம். உணர்ச்சிகள் அற்ற முகம் அது. பயிற்சி முகாமைவிட்டு வெளியேறிய பின்னர் இன்றுதான் மீண்டும் அவரைக் காண்கிறான். அவரை நன்கு தெரிந்தவர்களுக்கு அவரைப் பற்றித் தெரியும். அவரைப் ‘பிலாப்பழம்’ எனத்தான் அனைவரும் அழைப்பார்கள். வெளிப்பார்வைக்குத்தான் சற்று கடினமானவராகத் தெரிவார். தமிழகத்துக்குப் பயிற்சிக்குப் போன எல்லாப் பொடியளுக்கும் அவர் ஒரு தந்தையைப்போலவும், தாயைப்போலவும் இருந்தார். அதனால் அவர் என்ன சொன்னாலும் போராளிகளிடம் மறு பேச்சுக் கிடையாது அப்படியே கேட்பார்கள்.

இதனால் தமிழகத்தில் இருந்த போராளிகளைச் சமாதானப்படுத்த பொன்னம்மானைப் பயன்படுத்த

தலைமை நினைத்திருக்கலாம். அதேபோல நாட்டில் இருந்தவர்களைச் சமாதானப்படுத்த பண்டிதரை தலைமை ஏற்பாடு செய்திருந்தது. காரணம் இந்த இருவருமே ஆரம்பகாலங்களில் பெரியளவு பொருளாதார வசதிகளற்ற இயக்கத்தில் இவர்களது பொறுப்பில் இருந்த முகாம்களில் அனைத்து போராளிகளும் சாப்பாடு, உடைகள், மருத்துவம் என எந்தக் குறைகளும் இல்லாமலும் சிக்கனமாகவும் கவனித்துக்கொள்வார்கள். மற்றவர்கள் உணவுப்பொருட்களை வீணாக்கிவிடுவார்கள் என்பதால் பெரும்பாலும் இவர்களே சமைப்பார்கள். அனைவரும் சாப்பிட்ட பின்னரே இவர்கள் சாப்பிடுவார்கள். பழகுவதற்கும் இனிமையானவர்கள். எனவே, இவர்கள் பேச்சை மற்றவர்கள் நிராகரிக்க மாட்டார்கள் என்பது தலைமைக்கு நன்றாகவே தெரியும்.

எல்லோரும் முன்கூடத்தில் அமைதியாக உட்கார்ந்திருக்க, பொன்னம்மான் மட்டும் தனியாக ஆயுதங்கள் எதுவுமின்றிக் கையில் ஒரு டேப்ரெக்கார்டரைத் தூக்கியபடி புன்சிரிப்புடன் வந்தார். அவரது சிரிப்பு வசீகரம்மிக்கதாக இருந்தது. “என்ன பொடியள் எப்படி இருக்கிறியாள்?” என்றார். கூட்டத்தில் சலசலப்பு தோன்றியது. அவரது கேள்விக்குக் கூட்டம் சரியாகப் பதில் அளிக்கவில்லை என்றுதான் அவனுக்குப்பட்டது. பிறகு, அந்தச் சலசலப்பும் அடங்கியது. பொன்னம்மான் மெல்லிய முறுவலுடன் கூட்டத்தை நன்றாக உற்றுப் பார்த்தார். ஆனால், கூட்டம் இறுக்கமான மௌனத்துடன் உட்கார்ந்திருந்தது. ஒரு வசனம் பிசகினாலும் ஏடாகூடான பிரச்னையாகிவிடலாம். இயக்கமே உடைந்துவிடலாம். யாராவது ஒரு போராளி ஆத்திரமடைந்தால் பொன்னம்மானின் உயிர்கூடப் போகலாம். காரணம் சிலரிடம் ஆயுதங்கள் இருந்தன.

தொண்டையை ஒருமுறை செருமிய பொன்னம்மான், அனைவரையும் ஆழமாகப் பார்த்தபடி, “இங்கே பிரபாகரனை நம்பி, பிரபாகரனுக்காக மட்டுமே போராட இயக்கத்துக்கு வந்தவர்கள் கையைத் தூக்குங்கோ” என்றார். அந்த ஒரே கேள்வி நிலைமையைத் தலைகீழாக்கிவிட்டது. பொடியளின் இறுக்கமான மௌனம் கலைந்து ஒரு குசுகுசப்புப் பரவியது. அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த கலீசம்மான், மெதுவாகத் தலையைத் தாழ்த்தி “பொன்னம்மான் கவிழ்த்திட்டான்ரா” என்றார். இதைப் பொன்னம்மான் கவனித்துவிட்டார். சிரித்தபடி கலீசம்மானை முன்னால் வரச்சொல்லி கூப்பிட்டார். கலீசம்மான் தயங்கித் தயங்கிப் போனான். சொல்வது எதுவானாலும் பரவாயில்லை,

எல்லோருக்கும் கேட்கும்படி சொல்லச் சொன்னார். கலீசம்மான் ஒரு கணம் என்ன செய்வது எனத் தெரியாமல் திணறி, பிறகு சமாளித்துக்கொண்டு “நாங்கள் மக்களுக்காகப் போராட வந்தனாங்கள். தனியொருத்தரை நம்பி அவருக்காகப் போராட வரயில்லை” என்றான். அந்த வார்த்தை நிலைமையைச் சுமுகமாக்கியது. எல்லோரிடமும் இறுக்கம் தளர்ந்து லேசான ஒரு நிலை தெரிந்தது. பொன்னம்மானும் சிரித்தபடி “இந்தச் சின்னப் பிரச்னைக்கா இவ்வளவு டென்ஷனாக இருந்தனீங்கள்? நீங்கள் என்னத்துக்காக இயக்கத்துக்கு வந்தீர்களோ அதில உறுதியாக இருங்கோ. இடையில பிரபாகரன் கலியாணம் செய்தார். பொன்னம்மான் இயக்கத்தைவிட்டுப் போனார் என்ற பிரச்னைகளில் கவனத்தைச் சிதறவிடாதேங்கோ” என்றுவிட்டு, தன்னுடன் எடுத்து வந்திருந்த டேப்ரெக்கார்டரை இயக்கினார். அதில் தலைவரின் சிறிய உரை ஒன்று பதிவுசெய்யப்பட்டிருந்தது. திருமணச் சர்ச்சை தொடர்பில் தலைவர் அதில் உரையாற்றியிருந்தார்.

தலைவரும் அதில் மிகச் சுருக்கமாகவும் தெளிவாகவும் பேசியிருந்தார். தான் திருமணம் செய்வதால் தமிழீழக் கொள்கையில் இருந்தோ போராட்டத்தில் இருந்தோ பின்வாங்குவதாக அர்த்தமல்ல. திருமணம் தனது கொள்கையில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது என்றும், ஒருவேளை தான் அப்படிப் போராட்ட லட்சியத்தில் இருந்து வழி தவறினால் உங்களில் ஒரு போராளி தன்னைச் சுட்டுக் கொன்றுவிட்டுப் போராட்டத்தைத் தலைமைத் தாங்கலாம் என உறுதியான குரலில் தெரிவித்திருந்தார். அதனைக் கேட்டபோது சிலருக்கு மெய்சிலிர்த்தது. “இவங்கள் தங்கடை வசதிக்கேற்ற மாதிரி சட்டத்தை மாத்துவாங்கள்” என ஒருவர் புறுபுறுத்தார். கடைசியாகப் பொன்னம்மான் விடைபெறும்போது, “பெடியள் நீங்கள் வட்டத்தைச் சுற்றி போட்ட கையெழுத்தைப் பார்த்து ‘எங்கள் பெடியங்கள் புத்திசாலியள்’ எனத் தலைவர் ரசித்துச் சிரித்தார்” என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். சில நாட்களில் ஜொனி தலைமையிலான அணி மேலதிக வெடிபொருள் பயிற்சிக்காகப் புறப்பட்டிருந்தார்கள்.

❍ ❍

# 9

இந்தியாவில் வேறொரு மாநிலத்தில் வெடிபொருள் பயிற்சிகளை முடித்துவிட்டுத் தமிழகம் திரும்பியிருந்த நாட்கள் அவனுக்குக் கிட்டத்தட்ட நரகமாக இருந்தன. எந்த வேலையும் இல்லை. முகாமில் சாப்பிடுவதும் படுப்பதும்தான் வேலை. தமிழீழத்தைப் பிடிக்க வெளிக்கிட்டிட்டு, இந்தியாவில் ஊர்சுற்றிக்கொண்டு படம் பார்த்துக்கொண்டிருப்பது காவாலித்தனம் என நினைத்தான். கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக இந்த எண்ணம் அவனுக்குள் ஊறி ஊறி, இப்போது விஸ்வரூபம் எடுத்திருந்தது. பொடியளுடன் அடிக்கடி இது பற்றிக் கதைத்திருக்கிறான். ஆனால், ஒரு பொடியளும் பிடி கொடுத்து கதைப்பதே இல்லை. இயக்கத்தில் சேர்ந்ததில் இருந்து திரும்பத் திரும்பச் சொல்லித்தந்த ஒரே விஷயம், 'இயக்கம் சொன்னதைச் செய்ய வேண்டும்' என்பதே. 'இயக்கம் சொல்வதைக் கேள்வி கேட்பதென்றால் சாதாரண விஷயமா?' இப்படிப் பிடி கொடுக்காமல் கதைத்துத் திரிபவர்களைக் கண்டால் இவனுக்கு எரிச்சலாக வரும்.

தலைமையிடம் இருந்து ஏதாவது கட்டளைகள் வரும் என்று பொறுத்துப் பார்த்தான், வரவில்லை. ஒருநாள் தலைவருக்குக் கடிதம் எழுதினான். ஒவ்வொரு பக்கத்தின் மேல் பகுதியிலும் 'சிவமயம்' போட்டு ஆரம்பிக்கப்பட்ட கடிதத்தில், 'தற்போதைய நிலையில் தாயகம் எதிர்கொள்ளும் சாவல்களையும் ஆக்கிரமிப்பாளர்களும் துரோகிகளும் அங்குப் புரியும் அட்டகாசங்களையும், இவன் போன்றவர்கள் அங்கு நிற்கவேண்டியதன் அவசியத்தையும் எதுகை மோனை வீரவசனங்களோடு மிக விஸ்தாரமாக நான்கு பக்கங்களில்

எழுதி, புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' என முடித்துக் கையெழுத்தும் வைத்து அனுப்பினான்.

மூன்றாம் நாள் தலைவர் கூப்பிட்டார். என்னவோ ஏதோவென்று பதற்றத்துடன் போனான். அவர் வலு கூலாக இருந்தார். சிலபேர் இப்பிடித்தான், என்ன மூட்டில் இருக்கிறார் என்பதை ஆரம்பத்தில் மட்டுக்கட்ட முடியாது. தன்னைக் கவிழ்க்கும் ஏதேனும் ஐடியாக்களுடன் இருந்து இப்படி ஆரம்பிக்கிறாரோ தெரியவில்லை என யோசித்தவன், எதற்கும் ராஜதந்திரமாக நடந்துகொள்ள வேண்டும் என மனதை தயார்படுத்திக்கொண்டிருக்க, தலைவர் இருக்கையைவிட்டு எழுந்து வந்து அவனது தோளில் தட்டி "இப்பிடி அரசியல் தெளிவுள்ள நல்லா பேச, எழுதக்கூடிய பொடியள்தான் எங்களுக்கு நாட்டிலை உடனே தேவை. நாளைக்கே யாழ்ப்பாணம் போகலாம்" என அனுமதி தந்தார்.

அவனுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. ஓடியோடி எல்லோரிடமும் விஷயத்தைச் சொன்னான். மத்தியானம் மோர் குடிக்கப் போகவில்லை. இரவு ஏறத் தொடங்கியபோது சுந்தரம் அண்ணை வீட்டுக்குப் போனான். விஷயத்தைச் சொன்னதும், மீனாட்சியக்கா ஒப்பாரி வைத்து, சேலைத் தலைப்பில் மூக்கை சீறியபடி அழுதாள். சுந்தரம் அண்ணை அவனை இறுகக் கட்டிப்பிடித்தார். பிடியை விடவேயில்லை. காதுக்குள் மெதுவாக அவரது விசும்பொலிகள் கேட்டது. தண்ணியடித்திருந்தார் என்பது புரிந்தது. பிறகு, முதுகில் சூடான கண்ணீர்த்துளி விழுந்து வழிந்து இறங்கியது. அடிக்கடி இந்தியா பக்கம் வரவேண்டும் எனச் சொன்ன மீனாட்சி அக்காவை, சென்னை என்ன வேளச்சேரியிலா இருக்கு எனச் சுந்தரம் அண்ணைத் திட்டினார். அவரை முறைத்துவிட்டு கொப்பி ஒன்று கொண்டுவந்து அவனது வீட்டு விலாசத்தைக் கேட்டு எழுதினார். வாயில் வந்த விலாசம் ஒன்றைச் சொல்லி யாழ்ப்பாணம் என்று முடித்தான். அதன் பக்கம் ஒன்றைப் பாதியாகக் கிழித்துத் தங்கள் விலாசத்தை எழுதிக்கொடுத்து "ஊருக்குப் போனதும் மறக்காமல் லெட்டர் போடு தம்பி" எனக் கை அசைத்தார்.

அடுத்த நாள் இரவு நகர்ந்துகொண்டிருந்த படகில் அவனோடு பெருந்தொகையான பிரசார நோட்டீஸுகளும் அடுக்கிவைக்கப்பட்டுப் பாலித்தீனால் சுற்றப்பட்டிருந்தது. வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தபோது, மீனாட்சி அக்காவும் சுந்தரம் அண்ணையும்தான்

நினைவில் நின்றனர். வேறெதுவுமே தோன்றவில்லை. வீட்டைவிட்டு வந்து இயக்கத்தில் சேர்ந்த சமயத்திலோ, யாழ்ப்பாணத்தைவிட்டு இந்தியாவுக்குப் புறப்பட்ட சமயத்திலோ இப்படியொரு மனச்சஞ்சலத்தை உணர்ந்தது இல்லை. மனதை சஞ்சலத்தில் ஆழ்த்த விரும்பாமல் அடிக்கடி தலையை உதறி வானத்தில் இருக்கும் நட்சத்திரங்களைப் பார்ப்பான். ஆனால், மனம் அவனது பிடியில் இருந்து தப்பித்து மீண்டும் சுந்தரம் அண்ணையிடமும் மீனாட்சி அக்காவிடமும் சென்றுவிடும்.

அவன் மாதகலில் வந்து இறங்கியபோது, வரவேற்றது பீட்டர். தெரிந்த முகம் ஒன்று வரவேற்றதில் அவனுக்கு மகிழ்ச்சி. தான் அனுப்பிய பொடியன் விசேஷப் பயிற்சிகள் பெற்றுக் கைத்துப்பாக்கி சகிதம் குப்பியுடன் திரும்பி வந்ததில் பீட்டருக்கும் பெருமை. பீட்டரோடு சேர்ந்து அவன் அரசியல் வேலைகள் செய்வதோடு கொண்டுபோன நோட்டீஸ் அனைத்தையும் தமிழர் பகுதிகளில் விநியோகிக்க வேண்டும். அன்றிரவு பீட்டரும் அவனும் நெடுநேரம் கதைத்துகொண்டிருந்தனர். இயக்கத்துக்குச் சேர்ந்த பயிற்சிக்குப் போவதற்காக அன்று படுத்திருந்த அதே வீடுதான். ஆனால், முன்பக்கத்தில் ஆயுதத்தோடு காவல் போடப்பட்டிருந்தது. உள்அறையில் இயக்கத்தில் சேருவதற்கு வந்த பலர் படுத்திருக்கிறார்கள் எனப் பீட்டர் சென்னபோது, ரோச்லைட்டை எடுத்துக்கொண்டு உள்ளே சென்று அவர்களின் முகத்தில் அடித்துத் தெரிந்தவர்கள் யாராவது இருக்கிறார்களா எனப் பார்த்தான். வெளிச்சம் முகத்தில் பட்டதும் அவர்கள் கைகளால் முகத்தைப் பொத்தினார்கள். யாரும் தெரிந்த முகமாக இல்லை. திரும்ப வந்திருந்து பீட்டருடன் கதைத்தான். இங்கிருந்து இந்தியாவுக்குப் போகும் முன்னர், பீட்டருடன் கதைக்கும்போது, சற்று தள்ளி நின்று ஒருவித பவ்வியத்துடன்தான் கதைத்தான். அப்போது அவன் இயக்கத்தில் சேர வந்தவனாக இருந்தபோதும், இன்னமும் பயிற்சியை முடிக்காதவன். இப்போது அப்படியல்ல. முழு இயக்கமாகிவிட்டான். பீட்டரை சரிசமமாகப் பாவித்துக் கதைத்துகொண்டிருந்தான். ஒருவித மனத் திருப்திக்காகத்தான் அன்றிரவு நெடுநேரம் பீட்டரை இருத்திவைத்து கதைத்தேனோ என்ற குழப்பம் அவனுக்குப் பின்னாளில் வந்தது உண்டு.

சில நாட்களிலேயே இவனும் பீட்டரும் நல்ல கூட்டாளிகளாகிவிட்டனர். முகாமில் இருந்த பழைய

சைக்கிளில் ஒன்றாகவே திரிந்தனர். எப்போதும் பீட்டர்தான் சைக்கிள் ஓட்டுவான். அவன் நல்ல உயரமானவன். அவனை முன்னால் இருத்தி இவனால் ஓட்ட முடியாது. முன்னால் ஒன்றும் தெரியாது. அதனால் பீட்டர்தான் நிரந்தர ஓட்டுநர். பீட்டருடன் ஊருக்குள் இறங்கத்தொடங்கி இரண்டு, மூன்று நாட்களிலேயே பீட்டரின் செல்வாக்கைக் கண்டுகொண்டான். பீட்டர் தெருவில் இறங்கினால் சனங்கள் ஒரு மரியாதையுடன் ஒதுங்கிகொண்டது இவனுக்குப் பெரும் ஆச்சர்யமாக இருந்தது. ஆளாளுக்குத் தங்கள் வீடுகளுக்கு அழைத்துத் தேநீரும் குடிக்கவும் சாப்பிடவும் கூப்பிடுவார்கள். சின்னப் புன்னகையோடு அவற்றை மறுத்துவிட்டுப் போவான். பீட்டர் என்றால் சனங்கள் உயிரைவிடவும் தயாராக இருந்தார்கள். அவன் நல்ல கதைக்காரன். சிரித்துச் சிரித்துக் கதைத்தே ஆட்களைக் கவிழ்த்துவிடுவான்.

இந்தியாவுக்கான படகுப் பாதையை ஒழுங்குசெய்வது சாதாரணக் காரியம் அல்ல என்பதை வந்த சில நாட்களிலேயே தெரிந்துகொண்டான். கொஞ்சம் கவனயீனமாக இருந்தால் போதும், உள்ளூர் உளவாளிகள் மூலம் ராணுவம் மோப்பம் பிடித்துவிடும். ஏற்கெனவே சில இயங்கங்கள் இப்படி அடி வாங்கியிருக்கின்றன. பீட்டர் மிகத் திறமையானவன். ஒவ்வொரு முறையும் ராணுவத்தை ஏமாற்றியபடியே இருந்தான். இந்தியாவுக்குப் பயிற்சிக்கு அனுப்பும் அணியொன்று கடந்த இரண்டு நாட்களாக அந்த வீட்டில் தங்கியிருந்தது. பன்னிரண்டு பொடியள். அவர்களை அனுப்புவதற்குள் போதும்போதும் என்றாகிவிட்டது. ‘எப்ப இந்தியா போகலாம்?’ என ஒவ்வொரு மணித்தியாலமும் கேட்டுக்கொண்டிருந்ததனால், இருவரும் முகாமில் தங்கியது குறைவு. படகு ஒன்றைப் பிடித்து அவர்களை அனுப்பிவிடுவதிலேயே பொழுது கழிந்துவிட்டது. அன்றைய நாள் பின்னிரவில்தான் வந்து படுத்து அடித்துப்போட்டதைப் போல அசதியில் தூங்கிக்கொண்டிருந்தார்கள்.

யாரோ திடீரென அவனை உலுப்புவதாகப்பட்டது. எல்லாம் கனவில் நடப்பதைப்போல் இருந்தது. மறுபக்கம் திரும்பிப் படுத்தான். மறுபடியும் உலுப்பல். உலுப்பலின் ஆவேசம் மெள்ள மெள்ள அவனை விழிப்புக்குக் கொண்டுவந்தது. உறக்கம் கலைந்த சந்தர்ப்பத்தில், அவனது வலது கையைப் பிடித்து யாரோ இழுத்து எழுப்பி உட்கார்த்தினார்கள். சில்லென்ற தண்ணீர்

முகத்தில் அறைய கோபத்தில் இமைகளைப் பாதித் திறந்தான். இமைகளின் மெல்லிய விரிவில் எதிரே கஸ்ரோ நின்றது தெரிந்தது. தலைபோகும் அவசரக்காரன் போலப் பதறிக்கொண்டிருந்தான்.

கண்ணைத் திறக்கவே விருப்பம் இல்லாதவனாக, கைகளைப் பின்னால் நன்றாகச் சாய்த்து ஊன்றியபடி இருந்தான். கஸ்ரோ விடுவதாக இல்லை. "மிக முக்கியமான இயக்க வேலை உள்ளது, இப்படிப் பொறுப்பில்லாமல் இருக்கின்றாயே!" எனத் திட்டினான். இயக்க வேலை என்றதும், தூக்கம் பறந்தது. கைளால் முகத்தை அழுத்தித் துடைத்துவிட்டு, தலையை ஒருமுறை பலமாக உதறிவிட்டு, நிமிர்ந்து உட்கார்ந்தான். பீட்டரையும் அழைத்துப் பக்கத்தில் உட்காரவைத்துவிட்டு, கஸ்ரோ சுற்றி வர பார்த்துவிட்டு, கீழ்க்குரலில் பேசத் தொடங்கினான். இருவரது முகத்தையும் மாறி மாறி பார்த்து ஒவ்வொரு வார்த்தையையும் விட்டான். ஒன்றுவிட்ட ஒரு வார்த்தைக்கு ஒருமுறை இவர்களை மாறி மாறிப் பார்த்தான்.

கஸ்ரோ சொன்ன விஷயம் இதுதான். யாழ்ப்பாண ரவுணில் உள்ள இயக்கத்தின் சப்போர்ட்டரான செட்டியார் என்கிற பணக்காரருக்கு ஒரு சின்னச் சிக்கலாம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருந்த அவரது ஒரே மகள் படிக்கப்போன இடத்தில் 'லவ்'–வில் விழுந்திட்டாளாம். பொடியன் கல்வியங்காட்டுப் பக்கம். விஷயம் பெட்டையின் தகப்பனுக்குத் தெரியவர, பெட்டையை வீட்டை விட்டே வெளியில் செல்லவிடாமல் தடை விதித்துவிட்டார். எப்படியோ பெட்டை காதலனை தொடர்புகொண்டு அவனுடன் ஓடிவிட்டாள். தகப்பன்காரன் விஷயம் வெளியில் போவதற்கு முன்னர்க் காதும் காதும் வைத்த மாதிரி விஷயத்தை முடிக்க விரும்பி நேராகக் கஸ்ரோவிடம் வந்துள்ளார். தான் இயக்கத்துக்குச் செய்த பங்களிப்புகளை விலாவாரியாகச் சொல்லி, தனக்கு இப்படியொரு கஸ்ரம் வந்தவிட்டதே என அழுது புலம்பியுள்ளார்.

இயக்கம் நிதி சேகரிப்பை ஆரம்பித்தபோது, அவர் மூன்று லட்சம் ரூபா கொடுத்திருந்தாராம். விஷயத்தைக் கேட்ட கஸ்ரோவுக்கும் மனம் கேட்கவில்லை. ஒரு தீவிர ஆதரவாளருக்குக் கஸ்ரம் வந்தபோது, தீர்த்துவைப்பது இயக்கத்தின் கடமை என வாதிட்டான். "காதல் பிரச்னை, பெட்டைப் பிரச்னை, குடும்பப் பிரச்னைகளைத் தீர்த்துவைக்க அண்ணை இயக்கம் தொடங்கவில்லை.

பேசாமல் போய் அலுவலைப் பார்” என அவன் திரும்பிப் படுத்துக்கொண்டான்.

கஸ்ரோ, பீட்டரின் கையைப் பிடித்து வெளியே இழுத்துச் சென்றான். அவன் படுத்திருந்தபடி பார்த்துகொண்டிருந்தான். வெளியில் சிறிது நேரம் மெல்லிய குரலில் கதைத்துகொண்டார்கள். பிறகு, வோக்கியில் பீட்டர் மெயினைத் தொடர்புகொள்ள முயன்றுகொண்டிருந்தான். மெயினில் இருந்த வோக்கிக்காரன் நித்திரையில் இருந்தானோ அல்லது யாருடனாவது கதைத்துகொண்டிருந்தானோ தெரியவில்லை, சிறிது நேரமாக லைனில் வரவேயில்லை. “மெயின் மெயின் குப்பு வீடு” எனப் பீட்டர் தொண்டைத் தண்ணீர் வற்ற கத்திக்கொண்டிருந்தான். சற்று நேரத்தில் மெயின்காரன் பிடிபட, விஷயத்தை விலாவாரியாகச் சொல்லி அவசரமாகப் பொறுப்பாளரிடம் சொல்லச் சொன்னான். பொறுப்பாளரிடம் விஷயத்தைச் சொல்லி, பதில் பெற்றுத்தருவதாக மெயின்காரன் சொன்னான்.

பீட்டரும் கஸ்ரோவும் முன்பகுதியில் பொறுப்பாளரின் பதிலுக்காகக் காத்திருந்தார்கள். இவனுக்கு உள்ளே படுத்திருக்க முடியவில்லை. அவர்கள் என்ன திட்டமிடுகிறார்கள் என்பதைக் கேட்க வேண்டும்போல் இருந்தது. வெளியே வந்து அவர்களின் பக்கத்தில் உட்கார்ந்தான். அவன் வந்து உட்காருவதைக் கஸ்ரோ ஒரு நக்கல் பார்வை பார்த்தான். இவன், கவனிக்காதது மாதிரியே இருந்துகொண்டான்.

சிறிது நேரத்தில் மெயினில் இருந்த அழைப்பு வந்தது. அந்த ஆதரவாளரைக் கூட்டிக்கொண்டு, இவனையும் கஸ்ரோவையும் உடனடியாக மெயினுக்கு வருமாறு பொறுப்பாளர் சொல்லிவிட்டிருந்தார். வோக்கிக்காரன் பிழையாகத் தகவல் சொல்லியிருக்க வேண்டும் அல்லது பீட்டர் வோக்கியில் கதைத்ததை வைத்து, பீட்டர் மூலமே அந்த ஆதரவாளர் தொடர்புகொண்டதாக அவன் நினைத்திருக்க வேண்டும். கஸ்ரோவையும் அழைத்துச் செல்வதா அல்லது இவர்கள் மட்டும் செல்வதா எனச் சிறிது நேரம் யோசித்தார்கள். நேரம் போனால் பொறுப்பாளர் திட்டுவார், விரைவாக முடிவெடுக்கும்படி பீட்டர் அவசரப்படுத்திக்கொண்டிருந்தான். பொறுப்பாளரின் கோபம் வெகு பிரசித்தம். வாய்க்குவந்தபடி கெட்டவார்த்தைகளால் திட்டுவார். சில நேரம் அடியும் விழும். ஆயிரம்தான் இருந்தாலும் நல்ல மனுஷன் எனப் பொடியள் அபிப்பிராயப்பட்டார்கள். அந்த நேரம்

அவர்தான் சனங்களின் ஹீரோ.

கஸ்ரோ உடனடியாக மோட்டார் சைக்கிளில் ரவுணுக்கு போய் இயக்க சப்போர்ட்டரைக் கூட்டி வருவது என்றும், இவன் பீட்டருடன் சைக்கிளில் சென்று மெயினில் காத்திருப்பது என்றும் முடிவுசெய்தனர். கஸ்ரோ மோட்டார் சைக்கிளில் பறந்தான். இவர்கள் கைத் துப்பாக்கிகளைச் சரிபார்த்து இடுப்பில் செருகியபடி சைக்கிளை மிதிக்கத் தொடங்கினார்கள். மெயினுக்குப் பக்கத்தில் உள்ள சந்தியில் சற்றுநேரம் காத்திருக்க, கஸ்ரோ மோட்டார் சைக்கிளில் பறந்து வந்தான். பின்னால் பருத்த உடம்புக்காரன் ஒருவர் பவ்வியமாக உட்கார்ந்திருந்தான். இவர்களைக் கண்டு மெல்லிய சிரிப்பொன்று சிரித்தார். அனைவரும் மெயினுக்குச் சென்றனர். அவர் சிரமப்பட்டு மோட்டார் சைக்கிளில் இருந்து இறங்கினார். தோளில் தொங்கிய பெரிய தோள் பையை வலு கவனமாக உடம்புடன் அணைத்துப்பிடித்தபடி நடந்து வந்தார். முகாமின் முன்பகுதியில் இருந்த கொட்டிலில் அனைவரும் காத்திருந்தனர். பொறுப்பாளர் வெளியில் சென்றுவிட்டதாகவும், சற்று நேரத்தில் வந்துவிடுவார் என்றும் காவலில் நின்றவன் சொன்னான். ஒரு மணித்தியாலத்தின் பின்னர் வீதியில் Honda 200cc ஒன்று உறுமிக் கேட்டது. சென்ரிக்கு நின்றவன் ஓடிப்போய்க் கதவைத் திறந்தான். மோட்டார் சைக்கிளில் நேராக இவர்கள் இருந்த பகுதிக்கு வந்து, “என்ன மாதிரியண்ணை” என ஆதரவாளரைப் பார்த்து சிரித்தபடி இறங்கி வந்தார். ஆதரவாளரும் பவ்வியமாக எழுந்து நின்றார். இவர்களும் எழும்பி நின்றுகொண்டார்கள். பிறகு, பொறுப்பாளரும் ஆதரவாளரும் உட்கார்ந்து கதைக்கத் தொடங்கினார்கள்.

இயக்கம் நிதி சேகரிக்கத் தொடங்கிய காலத்தில் மூன்று லட்சம் காசு தந்ததை நினைவுபடுத்திய ஆதரவாளர், தொண்டையை ஒருமுறை செருமிவிட்டு, நிதானமாகத் தன்னுடன் இறுக்கிப் பிடித்து வைத்திருந்த தோள் பையைத் தூக்கி, பொறுப்பாளரின் முன்பாக வைத்தவர். “அம்மான், இதுல ஏழு லட்சம் இருக்குது. எனக்கு என்ர மகள் வேணும். 24 மணித்தியாலத்தில் வேணும். வேலையை முடிச்சுத் தாங்கோ. நான் இன்னுமொரு மூன்று லட்சம் இயக்கத்துக்குத் தருவன்” என்றார். பொறுப்பாளரின் கண்கள் ஒருமுறை அகல விரிந்ததை அவன் பார்த்தான். சிரித்தபடி சொன்னார். “ஒன்றுக்கும் யோசிக்காதையுங்கோ அண்ணை.. நாங்கள் பார்த்துக்கொள்ளுறம். மகளின்ரை

படம் இருக்கா” என்றதும், அவர் மகளின் புகைப்படம் ஒன்றை பொறுப்பாளரிடம் எடுத்து கொடுத்துவிட்டுப் போனார். முகாமில் இருந்த நான்கைந்து பொடியளையும் கூப்பிட்டு, அவர்களுடன் பீட்டரையும் அவனையும் சேர்த்து ஆதரவாளரின் மகளைக் கண்டுபிடிக்கும் அணியைப் பொறுப்பாளர் நியமித்து, எங்கிருந்தாலும் உடனடியாகப் பிடித்து வர உத்தரவிட்டார்.

அவர்களின் வேன் நேராகப் பொடியனின் வீட்டுக்கு முன்னால் போய் நின்றது. காதலித்தவனின் தாய்–தந்தையர் தூக்கப்பட்டு மானிப்பாய் பண்ணை முகாமில் வைத்து விசாரிக்கப்பட்டனர். ஆனால், உண்மையில் அவர்களுக்கு எதுவும் தெரிந்திருக்கவில்லை. அதே நேரம் இன்னொரு குழு காதலனின் நண்பர்கள் அனைவரையும் கைதுசெய்து விசாரிக்கவேண்டிய முறையில் விசாரித்தனர். அவர்களது குழுவில் ஒருவனை மட்டும் காணவில்லை. அவனது வீட்டுக்கு சென்று விசாரித்தபோது அவன் கொக்குவிலில் உறவினர் வீட்டுக்குப் போயிருந்ததாகக் கூறினார்கள். அவனது வீட்டில் இருவரைத் தங்கவைத்துவிட்டுத் தேடுதல் தெடர்ந்தது. இருள் கவியத் தொடங்கியிருந்தது. எனவே, அவர்கள் கூறிய கொக்குவில் வீட்டுக்கு வேகமாகச் சென்றபோது காதலர்கள் அங்குத் தங்கியிருந்தது தெரியவந்தது. ஆனால், ‘எங்கே போனார்கள் என்று தெரியவில்லை’ என்றார்கள். ஓரளவுக்குக் காதலர்களை நெருங்கிவிட்டதாக அவர்களுக்குப் புரிந்தது. சாவகச்சேரியில் காதலர்களை கொண்டுபோய்விட்டவர் வீட்டுக்கு வந்ததும் அங்குக் காத்திருந்தவர்கள் அவரைக் கட்டிப்போட்டு வீட்டுக்காரர்களைச் சத்தம் போடக் கூடாது என மிரட்டிவிட்டுத் தேடுதலில் திரிந்த வாகனத்துக்கு வோக்கி மூலம் தொடர்புகொள்ள அங்கு வந்த வேனில் கைதுசெய்தவனைத் தூக்கி எறிந்தனர். வந்திருப்பது புலிகள். எனவே, இனி வேறு வழி இல்லை எனப் புரிந்துகொண்டவன், நடந்தது அனைத்தையும் கூறத்தொடங்கினான்.

தப்பி ஓடிய காதலர்கள் அன்றைய பகல் முழுதும் கொக்குவில் பகுதியில் ஒரு நண்பனின் வீட்டில் தங்கிவிட்டு அங்கு உடைகளை மாற்றிவிட்டுக் கொஞ்சம் இருட்டியதும் உசனுக்குப் போனது தெரிய வந்தது. ஓடிப்போனவள் கழுத்து நிறைய நகைகளை அணிந்திருந்தாகவும் ஒரு தரவு கிடைத்தது. பொடியனின் நண்பன் ஒருவனது உறவினர்கள் விசுவமடுவில் விவசாயம் செய்துகொண்டிருந்தார்கள்.

அவர்களிடம் ஏற்கெனவே போய்க் கதைத்து விவரம் சொல்லி வைத்திருக்கிறார்கள். அந்த நண்பன் மட்டும் காதலர்களோடு சாவகச்சேரி வரை போய், அங்கு உசனில் இருந்து வந்து காத்திருக்கும் தனது உறவினரிடம் காதலர்களை ஒப்படைத்துவிட்டு உடனடியாக அவன் வீடு திரும்பியிருக்கிறான். உசன் பகுதியில் இருந்த உறவினர் வீட்டுக்கு வழிகாட்ட ஆரம்பித்தான். பொறுப்பாளருக்கு வோக்கி மூலம் தகவலைச் சொல்லியவர்கள், உசன் நோக்கி வாகனத்தைச் செலுத்தினார்கள்.

உசன் பகுதியில் இருந்த சிறிய வீட்டின் அறையில் போடப்பட்டிருந்த பாயில் கட்டியணைத்தபடி படுத்திருந்த காதலனும் காதலியும் தங்கள் எதிர்காலத் திட்டங்கள் பற்றிக் கதைத்துக்கொண்டிருந்தார்கள். கொஞ்ச நாள் அங்குத் தங்கிவிட்டு, கொண்டுவந்த நகைகளை விற்றுவிட்டு விசுவமடுப் பகுதிக்கு சென்று விவசாயம் செய்து பிழைக்கலாம் என அவன் கூறிக்கொண்டிருக்கும்போதே வேனைத் தூரத்தே நிறுத்திவிட்டு சத்தமின்றி வந்தவர்கள், மின்னலாக வீட்டுக்குள் பாய்ந்தவர்கள், இருவரும் படுத்திருந்த அறைக் கதவை உடைத்துக்கொண்டு உள்நுழைந்தனர். பனையோலைப் பாயில், அவளை இறுக அணைத்தபடி படுத்திருந்தவர்களின் முன்னால் போனவன், காதலனை கொத்தாகப் பிடித்து இழுத்தான். அவள் அழுது கதறியபடி தங்களை விட்டுவிடும்படி கெஞ்சினாள். ஒருவன் அவளது கன்னத்தில் ஓர் அறை விட்டான். அவள் அதனை எதிர்பார்த்திருக்கவில்லை. கன்னத்தில் கையை வைத்தபடி, அதிர்ந்துபோய் நின்றாள். அடுத்த கணம் சுதாகரித்தக்கொண்டு “யாரடா நீங்கள்?, என்னடா நினைச்சுக்கொண்டிருக்கிறீயள்?, என்ர அப்பா யார் தெரியுமோ?” என்றபடி ஓர் அடி முன்னால் வந்தவளுக்கு, சட்டெனக் கையை மாற்றி மற்ற கன்னத்தில் ஓர் அறை விட்டவன் “உன்ர கொப்பர்தான் எங்களை அனுப்பினவர்” என்றான். அவள் வெலவெலத்துப் போய் நின்றாள்.

இருவரையும் வாகனத்தில் தூக்கிப் போட்டுக்கொண்டு யாழ் ரவுணுக்கு வந்தனர். கோப்பாய் சந்தி கடந்தபோது, விஷயத்தைப் பொறுப்பாளருக்கு அறிவித்தார்கள். தங்களை விடும்படியும், இல்லையென்றால் தற்கொலை செய்தவிடப் போவதாகவும் பெட்டை மிரட்டினாள். பீட்டர், சினந்தபடி “என்ன செய்யிறதெண்டாலும் வீட்டை போய்ச் செய்யுங்கோ. எங்களுக்கு வந்த ஓடர் உங்களை கொண்டுவரச் சொல்லி. அதைச் செய்யுமட்டும் பேசாமல்

இருங்கோ” என்றான். இவர்களது வாகனம் மெயினுக்குள் நுழைய, முற்றத்தில் பொறுப்பாளரும், பெண்ணின் தந்தையான ஆதரவாளரும் நின்றார்கள். ஆதரவாளர் பரபரத்துக்கொண்டிருந்தார். வாகனம் நின்றதும், பொறுப்பாளர் வந்த வாகனத்தில் பக்க கதவை திறந்து எட்டிப்பார்த்துவிட்டு, “அண்ணை நாங்கள் சொன்னதைச் செய்திட்டம்” எனச் சிரித்தார். ஆதரவாளரின் முகம் இறுகிப்போயிருந்தது. வாகனத்தைவிட்டு அவள் இறங்க, வேகமாக அவளிடம் போனார். போன வேகத்தில் நாலு அறை விடுவார் என இவன் பார்க்க, அவர் சட்டெனக் கால்களை மடித்து அவளின் முன்பாக முழங்காலில் இருந்து அழுதபடி இறைஞ்சும் பாவனையில் அவளை நோக்கி இரண்டு கைகளையும் நீட்ட. அவளும் கதறிக்கொண்டு ஓடிவந்த தகப்பனின் கைகளுக்குள் புகுந்தாள்.

வெளியில் நின்ற வாகனத்தில் மகளை ஏற்றிவிட்டு, திரும்பவும் முகாமுக்குள் வந்தவர், பொறுப்பாளரின் அருகில் வந்து, “சொன்ன மாதிரி மிச்சத்தொகை காலையிலயே தருவன். நம்பிக்கையான ஓராளை அனுப்பிவிடுங்கோ” என்றவர், பார்வையைத் தாழ்த்தி, கீழ்க்குரலில், “பிள்ளையை இந்தக் கிழமைக்குள்ள இந்தியாவுக்கு அனுப்பிப் போடுவன். அதுவரை ஒரு ஹெல்ப். மகள் இந்தியா போகும் வரை இந்தப் பொடியனை வெளியில விடவேண்டாம்” என்றுவிட்டுப் போனார்.

அன்றிரவு முகாமில் படுத்திருக்கும்போது, பீட்டர் இவனின் மேல் காலைத் தூக்கிப் போட்டான். இவன் தட்டிவிட்டுப் புரண்டு படுத்தான். தோளைப் பிடித்து இடித்துத் தனது பக்கம் திருப்பினான். இன்டைக்கு இரவு நித்திரைகொண்ட மாதிரித்தான் எனப் புறுபறுத்தபடி திரும்பினான். பீட்டர் எப்பவும் இப்படித்தான். நித்திரை வராத இரவுகளில், ஏதாவது முக்கிய விஷயம் பேச வேண்டுமெனில், இப்படித்தான் நடந்துகொள்வான்.

கண்ணை முழிக்காமலேயே பீட்டரின் பக்கம் திரும்பி படுத்தபடி “ம்... சொல்லு” என்றான்.

“அந்தக் காதல் ஜோடியை நினைக்கப் பாவமாக இருக்கடா.”

இவன் சலித்தபடி நிமிர்ந்து படுத்தான்.

“லவ் பண்ணுறவனுக்குத்தான்ரா இந்தக் கஸ்ரம் விளங்கும்.”

*"ஸ்..!" தலையைச் சொறிந்தான்*

*"மச்சான் இங்க பார்.. உனக்கொரு விஷயம் சொல்லட்டா"*

*"சொல்லு."*

*"ஒருத்தரிட்டயும் சொல்ல மாட்டியே!"*

*"இல்லை"*

*"இயக்கமாணை..."*

*"இயக்கமாணை..?"*

*"நான் ஒருத்தியை லவ் பண்ணுறன்"*

*இவனின்ர தலைக்குள் யாரோ குண்டு வைத்த மாதிரி இருந்தது. திடுக்கிட்டு எழுந்தான். கண்ணைக் கசக்கிக்கொண்டு பீட்டரைப் பார்த்தான். அவன் வீட்டுக்கூரையைப் பார்த்தபடி படுத்திருந்தான். இயக்கத்தில் லவ் பண்ணும் விஷயத்தைப் பெரிய விஷயமாகப் பார்ப்பார்கள். இவன் மொக்கு முடிவு எடுத்திருக்கிறானே என நினைத்தான். யாரிடமும் விஷயத்தைச் சொல்ல வேண்டாம் எனப் பீட்டர் இவனது கையைப் பிடித்தான். இவன் ஆதரவாகப் பீட்டரின் கைகளை இறுக்கினான். மாதகலில் உள்ள பெட்டை. பீட்டரின் சாகசங்களில் மயங்கினாளா? அல்லது அவளில் இவன் மயங்கினானா எனத் தெரியவில்லை. எப்படியோ காதல் கொண்டுவிட்டான். பெட்டையின் வீட்டிலும் சாடைமாடையாக விஷயம் தெரியும். இயக்கப் பொடியனைப் பெட்டை காதலிப்பதால் அவர்களுக்கும் மெல்லிய சந்தோஷமும் இருந்தது. நிச்சமற்ற வாழ்வின் பயமும் அழுத்தியது.*

*மறுநாள் இவனைக் கூட்டிக்கொண்டு பீட்டர் போனான். மாதகல் சந்திக்கு கிட்டவாக உள்ள தையல் நிலையம் ஒன்றில் தையல் பழகிறாளாம். சந்திக்குப் பக்கத்தில் இருந்த கடையில் நின்றனர். இவர்கள் வந்ததைப் பார்த்த கடைக்காரன் பவ்வியமாக நின்றான். இன்று மாதகலில் யாருக்கோ வெடிவிழப்போகிறது என அவன் நினைத்திருக்க வேண்டும். சிறிது நேரத்தில் இவனது கையைப் பிடித்து இழுத்தபடி பீட்டர் தெருவுக்கு இறங்கினான். பீட்டரின் இழுப்பில் இழுபட்டபடி சென்றவனின் காதுக்குள் சொன்னான் "வலது பக்கம் வாற நீலச்சட்டை" .*

*பீட்டரின் பிடியை உதறிவிட்டு. நடுத்தெருவில் நின்றபடி வலது பக்கம் வந்தவளை நிதானமாகப் பார்த்தான்.*

அவளுக்கும் விஷயம் விளங்கிவிட்டது. வாய்க்குள் நிறைந்த சிரிப்பை சிரமப்பட்டுக் கட்டுப்படுத்திக்கொண்டு கடந்து சென்றாள்.

அதன்பிறகு ஒருநாள் ஆள் அரவமற்ற தெருவில் அவளை மறித்துப் பீட்டர் கதைத்தான். இவன் சற்று தள்ளி நின்றுகொண்டான். போகும்போது இவன் அருகில் வந்து சைக்கிளை நிறுத்தி, "போயிற்று வாறன் அண்ணா" என்றுவிட்டுப் போனாள். பிறகு ஒருநாள் இரவொன்றில் அவள் வீட்டுக்கு இருவரும் போனார்கள். இவர்களை உட்காரச் சொல்லிவிட்டு அவளது தந்தையார் கடற்கரைக்கு ஓடிப்போய் மீன் எடுத்து வந்தார். இரவு மீன் குழம்பு, மீன் சொதி, மீன் பொரியல், மீன் வறுவல் என அமர்களப்பட்டது விருந்து. அவள் பீட்டருடன் பேசவில்லை. இவனருகில் உட்கார்ந்தபடி பேசிக்கொண்டிருந்தாள். அடிக்கடி இவனுக்குக் கதை சொல்லும் சாக்கில் பீட்டருக்கும் கதை சொல்லிக்கொண்டிருந்தாள். பீட்டரும் இவனுக்குக் கதை சொல்லும் சாக்கில் அவளிடம் பேசிக்கொண்டிருந்தான். இந்தக் காதல் விளையாட்டு ரசிக்கும்படியாக இருந்தது. விடைபெறும்போது அவள் முகம் சோகமாக மாறிவிட்டிருந்ததை அவன் கவனிக்கத் தவறவில்லை.

அன்று இரவு முழுவதும் பீட்டருக்குத் தூக்கம் வரவில்லை. அவள் முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டிருந்ததை ஏதோ பெரிய விஷயமாகக் கற்பனை பண்ணி தனக்குள்ளாகப் புழுங்கிக்கொண்டிருந்தான். காதல் என்றால் இப்படியான கண்றாவிகளையும் காணத்தான் வேண்டும் என நினைத்தபடி படுத்துவிட்டான். மறுநாள் விடிகாலையில் பீட்டர் இவனை அடித்து எழுப்பினான். இன்னமும் இவனுக்குத் தூக்கத்தில் எழும்புவது பிரச்னையாகத்தான் இருந்தது. கண்களைப் பாதித் திறந்து பார்க்க, முன்னால் பீட்டர் எங்கோ செல்வதற்குத் தயாராக நின்றான். விடிகாலைகளில் அடித்துப் போட்டதைப்போல நித்திரை கொள்பவன், இந்நேரம் எங்குப் போகிறான் என யோசிக்க, மாதகல் மட்டும் போய்விட்டு வருவதாகவும், அவளது வாடிய முகம் தனது மனதை என்னவோ செய்வதாகவும் கூறினான். இவனும் 'சரி' என்றுவிட்டுப் புரண்டு படுத்துக்கொண்டான். பீட்டர் போனானா இல்லையா என்பதையும் இவனால் நிதானிக்க முடியவில்லை. அதிகாலை நித்திரை மயக்கத்தில் சுருண்டிருந்தான். வெளியில் ஏதோ இரைச்சல் சத்தம் கேட்டது. கனவா நினைவா என்பதைப் பிரித்தறிய முடியாத மயக்கத்தில் கிடந்தான். திடீரென யாரோ அவனை

உலுக்கினார்கள். திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தான். இயக்கத்தில் சேர்வதற்குப் புதிதாக வந்திருந்த ஒருவன் பரபரத்தபடி நின்றிருந்தான். விஷயத்தைச் சொல்லுமாறு கேட்க, "பொறுப்பாளர் வந்திருக்கிறார்" என்றான். இவன் பதறியடித்தபடி எழுந்து, சாரத்துக்குள்ளால் காற்சட்டையைக் கொழுவியபடி முன்பக்கம் ஓடிப்போக, "என்னடாப்பா.. இந்த முகாமிலை எல்லாருக்கும் மத்தியானம்தான் விடியுதோ" என்றபடி வழக்கம்போல அவரது மக்னம் ரிவால்வரை விரல்களுக்குள் வைத்து சுழற்றியபடி வந்த பொறுப்பாளருக்கு இவனது கோலத்தைப் பார்த்ததும் சிரிப்பு வந்தவிட்டது. "பீட்டர் எங்கே?" என விசாரித்தார். இந்தக் கேள்வியை அவன் எதிர்பார்க்கவில்லை. பீட்டர் காதலியிடம் போனதை சொல்ல முடியாது. சட்டென எந்தப் பொய்யும் வரவில்லை. தடுமாறினான்.

"சரி சரி.. பீட்டர் வந்ததும் மெயினுக்கு வரச் சொல்லு" என்றவர் முகாமை கூட்டித் துப்புரவாக வைத்திருக்கும்படி அங்கு நின்றவர்களிடம் சொல்லிவிட்டுத் திரும்பிப் போய்விட்டார். பீட்டர் வந்ததும் விஷயத்தைச் சொன்னான். இவன் தடுமாறியதற்குப் பீட்டர் திட்டினான். நாளைக்கு ரோட்டில ஆமி மறிச்சாலும் இப்பிடித்தான் தடுமாறுவியா? அவன் சொல்வதும் சரிதான். இனி பொய்ச் சொல்லிப் பழக வேணும் என நினைத்தான். பொறுப்பாளரை சமாளிப்பது பெரிய விஷயமல்ல. இந்தியாவுக்கு ஆட்களை அனுப்ப படகு விஷயமாகக் கதைக்கப் போனதாகச் சொல்லலாம் என்றுவிட்டுப் போனான். அதன் பின்னர் இவன் தன் வேலைகளைக் கவனிக்கத் தொடங்கிவிட்டான். வேலைப்பராக்கில் பீட்டர் இவன் நினைவில் இருந்து மறைந்து இரவு சாப்பிடும்போதுதான் நினைவில் வந்தான். முகாமில் விசாரித்தான். பீட்டர் வரவில்லை எனச் சொன்னார்கள். உடனடியாக மெயினுக்கு வோக்கியில் தொடர்புகொண்டு பீட்டர் பற்றி விசாரித்தபோது, வோக்கிக்காரன் அது பற்றிக் கதைக்காமல் இவனை முகாமில் நிற்கும்படியும் பொறுப்பாளர் சந்திக்க வருவார் எனவும் சொன்னான். அன்றிரவு பீட்டர் வரவில்லை. இவனுக்கு ஒரு மாதிரியாக இருந்தது. பீட்டரின் அறிமுகம் கிடைத்த பின்னர் இன்றுதான் இவ்வளவு நீளமான பிரிவை சந்திக்கிறார்கள். கடந்த நான்கு மாதங்களாக அறிமுகமான உறவுதான். ஆனால், இத்தனை ஆழமாக மனதுக்குள் பீட்டர் வேர்விட்டிருக்கிறான் என இப்போதுதான் உணர்ந்தான். அடுத்த நாளும் அவன் வரவில்லை.

*வலிகாமம் ஏரியா பொறுப்பாளர் லலித் அண்ணைதான் வந்தார். "கிட்டண்ணை அனுப்பி வந்தனான்" என்றார். இவன் பீட்டரைப் பற்றித்தான் விசாரித்தான்" அவன் கிடந்தான். பெட்டைப் பிரச்னையாமடா.. பொறுப்பாளர் நேரே கண்டிருக்கிறார். அங்க மெயினில், குப்பிப் பிஸ்டலை பறிச்சு வைச்சிட்டு ஆளை பனிஸ்மன்றில் விட்டிருக்கிறார்" என்று சுரம் இல்லாமல் சொன்னவர், "நீ வெளிக்கிடடா.. அப்பையா அண்ணை மானிப்பாயிலை ஆயுதத் தொழிற்சாலை தொடங்கியிருக்கிறார். இனி மச்சான் உதுகள்தான் எங்களுக்குத் தேவை. நிறையக் கண்ணிவெடிகள் தயாரிக்கவேணும் அதுகளை வெச்சு ஆமிக்கார் முகாமைவிட்டு வெளிக்கிடவிடாமல் உள்ளையே முடக்கவேணும். இனி உனக்கு அங்கேதான் வேலை. வா போலாம்" என அவனை மோட்டார் சைக்கிளில் ஏறச் சொன்னார். அறிந்த தெரிந்த ஒருசில அயலவர்களுக்காவது பிரியாவிடை சொல்ல விரும்பினான். ஆனால், லலித் அண்ணை விடவில்லை. அவனைக் கையுடன் கூட்டிச் செல்லப் போவதாக நின்றார். அவசர அவசரமாக நான்கு வரியில் ஒரு கடிதம் எழுதி முகாமில் நின்றவனிடம் கொடுத்து, பீட்டர் வந்தால் அவனிடம் கொடுக்கச் சொல்லிவிட்டு ஆயுதத் தொழிற்சாலைக்குப் போய்விட்டான்.*

*ஒரு வாரம் கழித்து . பீட்டர், குப்பிக் கடித்துச் செத்துவிட்டதாகச் செய்தி வந்தது. அன்று முழுவதும் உறங்காமல் விட்டத்தையே வெறித்தபடி படுத்திருந்தான்.*

**பி.கு:** *பீட்டர் காதலித்த குற்றத்துக்காகக் கிட்டுவால் வழங்கப்பட்ட தண்டைனையை அவமானமாகக் கருதியே குப்பி கடித்துத் தற்கொலை செய்திருந்தான். அவனது பெயர் மாவீரர் பட்டியலிலும் இணைக்கப்பட்டிருக்கவில்லை. அதேபோலத் தீவுப்பகுதிப் பொறுப்பாளர் ஞானமும் கிட்டுவோடு ஏற்பட்ட முரண்பாட்டால் குப்பிக் கடித்துத் தற்கொலை செய்திருந்தார்.*

❍ ❍

# 10

அன்று ஞாயிற்றுக்கிழமை. லீவு நாள். அப்பையாண்ணைக் காத்தாலையே எழும்பி தனது வீட்டுக்குப் போய்விட்டார். பாபு அவனது கைத் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு எங்கேயோ போய்விட்டான். தொழிற்சாலையில் அவனும் சிவாவும் மட்டுமே இருந்தார்கள். அவன் காலையில் குளித்துவிட்டு, நல்லதொரு சேட்டையும் போட்டுக்கொண்டு வந்து அலுவலக மேசையின் பின்னால் இருந்து பத்திரிகைகளைப் புரட்ட தொடங்க, சிவா பாட்டுக்கேட்டபடி ஏ.கே–யை எடுத்துக் கழற்றி துடைக்கத் தொடங்கியிருந்தான். “டேய் இருக்கிற ஒரு ஏ.கே–யையும் கழற்றி வைச்சிருக்கிறாய். டக்கெண்டு ரெலோக்காரர் பூந்தா என்னடா செய்யுறது?” என்றதற்கு “நிறையக் குண்டுகள் கிடக்குத்தானே. கழட்டி எறியலாம்” என்றபடி தனது வேலையைத் தொடர்ந்தான்.

இப்பவெல்லாம் புளொட்டோடை முறுகல் குறைந்து ரெலோவோடு முறுகல் நிலை தொடங்கியிருந்தது. இரண்டு நாளைக்கு முன்னர்தான் மருதனார் மடத்தில் இரவுக் காவலில் நின்ற ஒருத்தன் ஒரு வாகனத்தை மறிக்க அதில் வந்த ரெலோக்காரர் அவனைச் சுட்டுக்கொன்றுவிட்டுப் போயிருந்தார்கள். அவன் பத்திரிகைளை புரட்டிக்கொண்டிருந்தபோதே ஒருவர் சைக்கிளில் உள்ளே நுழைந்தார். அவர் சிங்கராசரின் பின் காணிக்காரன் அழாத குறையாக வந்தான். அந்தாளைப் பார்க்கவே அவனுக்குச் சரியான கவலையாக இருந்தது. வந்தவர் அவனிடம் “தம்பி ஒரு பிரச்னை. சிங்கராசா பழையபடி வேலியடைக்கத்

தொடங்கிட்டான்" என்றார்.

"அண்ணை பக்கத்திலைதான் ஏரியா மயூரனின்ரை கேம்ப் இருக்கு. அங்கே போய்ச் சொல்லுங்கோ" என்றதும்,

"தம்பி, அங்கே போயிட்டுத்தான் வாறன். ஒரு சின்னப் பெடியதான்தான் நிக்கிறார். மயூரனைக் காணேலை. நீங்கள் ஒருக்கா வந்து சொன்னால் சிங்கராசா கேட்பான்" என்று தலையைச் சொறிந்தார்.

மயூரன் ஆற்றயாவது வீட்டிலை போய்ச் சாப்பிட்டிட்டுப் படுத்திருப்பான். அப்பையாண்ணைப் போகும்போது வோக்கியையும் கொண்டுபோய்விட்டார். பாபு வந்ததும் அவனை இங்க விட்டுட்டு போலாம் என நினைத்தவன் அவரிடம், "அண்ணை நீங்கள் போங்கோ. நான் கொஞ்ச நேரத்திலை வாறன்" என்று அனுப்பிவைத்தான். சிங்கராசா அவனுக்குத் தெரிந்தவர்தான். 83–ம் ஆண்டு அவனது சினேகிதனின் செத்த வீட்டில் பட்டினத்தார் பாடலை பெருங்குரலெடுத்துப் படித்தது இப்போதும் அவனது கண்ணுக்குள் நின்றது. சிங்கராசரில் அவ்வளவாக விஷயம் இல்லை. அவர் வைத்திருந்த ஏ–40 ரகக் காரினால்தான் விசேஷமானார். 'கார்க்கார சிங்கராசா' என்றால்தான் ஊருக்குத் தெரியும். உடுவில் மகளிர் கல்லூரிக்குப் போகின்ற சிறுமிகளைக் காலையில் அழைத்துக்கொண்டுபோய்த் திரும்பவும் கொண்டுவந்து விடுவதுதான் இவரது பிரதான தொழில்.

அவர் குளிச்சு வெளிக்கிட்டு, காரை கழுவி துடைச்சு சாம்பிராணி குச்சியைக் கொளுத்தி உள்ளே வெளியே எல்லாம் சுத்தி காட்டி காருல ஏறியிருந்து ஸ்டேரிங்கை இரண்டு கையாலையும் தடவி தலைக்குமேலை கையைக் கொண்டுபோய்க் கும்பிட்டுவிட்டு வீட்டில் இருந்து புறப்படும்போதே காரின் ஹோர்னை அடித்தபடிதான் புறப்படுவார். வீட்டு வாசல்களில் தயாராக நிற்கும் சிறுமிகளை ஏற்றிக்கொண்டு போய்ப் பாடசாலையில் இறக்கிவிட்டு, பிறகு மாலை அவர்களைத் திரும்ப ஏற்றும் வரை ஊருக்குள் கலியாண வீடு, வருத்தகாரருக்கு, பிள்ளைப் பேறுக்கு வைத்தியசாலை, செத்த வீடு இப்பிடி எல்லாத்துக்கும் அவரின்ரை கார்தான் ஓடும். மனுஷன் என்னதான் தண்ணியடிச்சிட்டுப் படுத்திருந்தாலும் எந்தச் சாமத்திலையும் போய் அவசரம் எண்டு எழுப்பினால், உடனே காரை எடுத்துக்கொண்டு வருவார். அதைவிட

மரண வீடுகளில் தண்ணியடித்துவிட்டு பட்டினத்தார் பாடலை பெருங்குரலெடுத்து ராகத்தோடு படிப்பார். அதற்காகக் காசு வாங்க மாட்டார். சாராயம் வாங்கிக் குடுத்தால்போதும். அவருக்கு வருமானம் கூடினதாலையும் பாடசாலைக்குப் போகும் பிள்ளைகளின் எண்ணிக்கை கூடியதாலையும் ஒரு ரொயோட்டா வேன் ஒன்றை வாங்கிருந்தார். அவர் வேன் வாங்கினதும் பல பேர் அவரின்ரை காரை விலை கேட்டு வந்திருந்தனர். ஆனால், “அந்தக் கார் என்ர இரண்டாவது மனிஷி. அதை ஒருத்தருக்கும் குடுக்க மாட்டான்” என்றார்.

இவருக்கு மூன்று மகன்கள் மூத்தவன் நன்றாகப் படித்துக் காங்கேசன் துறை சிமெண்ட் தொழிற்சாலையில் மின் பொறியாளராக வேலை பார்த்தான். காங்கேசன் துறை சிமெண்ட் ஆலையை இலங்கை ராணுவம் பிடித்து அதன் செயற்பாடுகள் நின்றுபோனதும் வெளிநாட்டுக்குப் போய்விட்டான். இரண்டாவது மகன் சீலன் கொஞ்சம் குழப்படிக்காரன். படிப்பை இடையில் நிறுத்திவிட்டுச் சண்டிலிப்பாயில் இருந்த அபிமன்யு கார் கராச்சில் வேலை செய்துகொண்டிருந்தான். அவன் தண்ணியடிக்கத் தொடங்கியது மட்டுமல்ல, தண்ணியடித்துவிட்டு சிங்கராசருக்கு பயந்து வீட்டுக்குப் போகாமல் கோயில் மடத்தில் படுத்திருப்பான். மூன்றாமவன் சிறியவன் படித்துக்கொண்டிருந்தான். எல்லாமே பெடியள் எண்டதாலையும் சிங்கராசருக்கு ஒரு பெருமை. அவர் ஊரில் இரண்டு விஷயத்தால் பிரபல்யமாகியிருந்தார். ஒன்று கார். மற்றது அவரது காணியின் பின்பக்க வேலி எல்லையோடு நின்ற புளியமரம். சாதாரணமாக இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை அடைக்கும் வேலியை புளியமரத்துக்காகவே வருடா வருடம் பிரிச்சு அடைப்பார். ஒவ்வொரு வருடமும் வேலி அடைக்கும்போது புளியமரத்தைத் தனது காணிக்குள்விட்டு புளியைச் சுத்தி வேலியை அடைப்பார் பக்கத்து வீட்டுக்காரனுடன் சண்டையாகும்.

அந்தப் புளியமர வழக்கு 70–களில் மல்லாகம் கோட்டில் தொடங்கி நீண்ட காலம் இழுபட்டது. யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகம் இல்லாமல்போய் இயக்கங்களின் கைகளில் வந்த பிறகு வழக்கும் இயக்கங்களின் கைகளில் மாறிக்கொண்டிருந்தது. அந்த வழக்கை புளொட், ரெலோ என்று தொடங்கிச் சிறிய செம் படை, நாகப் படை வரை

யாழ்ப்பாணத்தில் இருந்த 32 இயக்கங்களும் தீர்க்க முயற்சி செய்து தோற்றுப்போனார்கள். ஒவ்வொரு வருடமும் புளியமரம் வரை வந்த இரண்டு பக்க வேலியும் மரத்தை முட்டாமல் அப்படியே நிற்கும். அன்றைய காலத்தில் உள்ளூர் பிரச்னைகளில் புளொட் அல்லது ஈ.பி.ஆர். எல்.எஃப்–வும்தான் பெரும்பாலும் தலையிடுவார்கள். புலிகள் உள்ளூர் பிரச்னைகளில் ஒதுங்கியே இருந்தார்கள்.

தன்ரை சொந்தபந்தங்களைக் கூப்பிட்டு சாராயப் போத்தல்களும் வாங்கி அடுக்கிவிட்டு சிங்கராசர் அந்த வருடமும் வேலி அடைக்கத் தொடங்கினார். மானிப்பாய் அரசியல் பொறுப்பாளர் மயூரனையும் தொடர்புகொள்ள முடியவில்லை. உடனே போக நினைத்தான். முகாமில் காவல்விட்டுப்போக யாரும் இல்லாததினால் பாபு வந்ததும் போகலாம் எனக் காத்திருந்தான். மதியத்தின் பிறகுதான் பாபு வந்தான். வெளிக்கிடும்போது பிஸ்டலை எடுத்துச் சிவா தனது இடுப்பில் செருகிக்கொண்டான். அவனுக்குப் பிஸ்ட்லை செருகிக்கொண்டு ஊருக்குள் திரிவது என்றால் அலாதி பிரியம். இவன் சைக்கிளை மிதிக்க, சிவா முன்பக்கமாகத் தொற்றி ஏறிக்கொண்டான். சிங்கராசர் வீட்டுப் படலையில் மோதி சைக்கிளை நிறுத்தினான். சிவா நன்கு வளர்ந்தவன். படலைக்கு மேலாக எட்டிப்பார்த்து, “ஐயா... ஐயா...” எனக் குரலில் ஒரு மரியாதையைக் கூட்டி அழைத்தான். சிங்கராசர் வீட்டில் இருந்து ஆட்கள் வருவதற்குள் பின்காணிக்காரன் குடும்பத்துடன் தெருவுக்கு வந்துவிட்டான். சிங்கராசர் குடும்பத்துக்கு நல்ல பூசை நடக்கப்போகிறது என விடுப்புப் பார்க்க குடும்பத்தையே கூட்டி வந்திருக்கலாம். வீட்டுக்கு பின்பக்கத்தில் இருந்து யாரோ ஒரு பெண்மணி வந்தார். “சிங்கராசர் அண்ணையிட்ட வந்தனங்கள்” என்றான் சிவா. முகத்தில் சிறு சலனத்தையும் காட்டாமல் அந்தப் பெண்மணி திரும்பிச் சென்றார். அவரது முகம் இறந்துவிட்டதோ என்றும் அவன் நினைத்தான்.

போன வேகத்தில் திரும்பி வந்த மனிஷி, “அவர் பின்னால வேலையா நிற்கிறார் உங்கள அங்க வரட்டாம்” எனப் படலையைத் திறந்துவிட்டார் . சிவா ஒரு முறை இவனைத் திரும்பிப் பார்த்துவிட்டு, கண்ணைக் காட்டினான். சிங்கராசன் விளையாட்டுக் காட்டுறான். ‘வா.. இன்றைக்கு ஒரு கை பார்த்துவிடலாம்’ என்ற தோரணை அது. ஸ்டாண்ட் இல்லாத சைக்கிளை பாடு பார்த்து வேலியுடன்

சாத்திவிட்டுப் போவதற்குள் சிவா விறுவிறுவென உள்ளே நடக்கத் தொடங்கிவிட்டான். சைக்கிளை நிப்பாட்டிவிட்டு, இவன் போவதற்குள் பின்னால் பெரிய சத்தம் கேட்டது. சிவாவின் குரல்தான் அது. கொஞ்சம் வேகத்தைக் கூட்டி உள்ளே போனான். புளியமரத்தை சூழ சிவந்த கண்களுடன் எட்டுப்பத்து ஆண்கள் உட்கார்ந்திருந்தனர். சிங்கராசரும் இன்னும் சிலரும் சிவாவின் முன்பாக நின்று வாய்த்தர்க்கப்பட்டுக்கொண்டிருந்தனர்.

"எந்தப் பேச்சுக்கும் இடம் இல்லை. உடனடியாக வேலியை பிரித்துப்போட்டுவிட வேணும்" என்று சிவா நின்றான். சிங்கராசர் மறுத்தான்விட்டுக்கொண்டிருந்தார். தொடைக்கு மேலே சாரத்தைத் தூக்கி சண்டிக்கட்டுக் கட்டிக்கொண்டிருந்தது, இயக்கப் பொடியனுடன் மட்டுமரியாதை இல்லாமல் கதைத்துகொண்டிருந்தது இவனுக்கு எரிச்சலாக இருந்தது. ஆத்திரம் பொறுக்க மாட்டாமல் போக, "ஏய்.. ஒருத்தரும் இஞ்சை திருப்பிக் கதைக்கக் கூடாது. நாங்கள் சொல்றதை மட்டும் செய்யுங்கோ.. அடுத்தவன்ர வேலிக்குள்ள புடுங்கிறதுக்கு நில்லுங்கோ. அங்க உங்கள வேலியளை மொத்தமா சிங்களவன் தள்ளிக்கொண்டு வாறான். கடைசியில் ஒன்றும் இல்லாமல்தான் இருக்கப்போறியள்" என்றபடி முன்னால் போனான். இவன் முன்னால் நகர்ந்ததைப் பார்த்த சிங்கராசரின் இரண்டாவது பொடியன் சீலன் சட்டென இவனின் முன்னால் வந்து நெஞ்சோடு நெஞ்சை முட்டியபடி நின்றான். ஓர் அடி எடுத்து வைத்தால் அடி விழும் என்பதைப்போல அவனது செய்கை இருந்தது. இவனுக்கு அடிமுடி எல்லாம் பற்றி எரிந்தது.

"இயக்கமென்டால் என்ன.. உங்களோட கள்ளு குடிக்கிற ஆட்கள் என்டு நினைச்சியளோடா மசிராண்டியள்" என்றபடி அவனைத் தள்ளிவிட்டு சிங்கராசரின் முன்னால் வந்தான். தள்ளப்பட்டதால் நிலைகுலைந்துபோன சீலன், பின் பக்கமாக இவனுக்குக் காதைப் பொத்தி ஒன்று விட்டான். இவனுக்குத் தலை ஒருமுறை சுற்றியது. சிவா இடுப்பில் இருந்த பிஸ்டலை உருவ, மின்னலாகப் பாய்ந்த சீலன் அதனையும் பறித்துக்கொண்டான். புளியமரத்துக்குக் கீழே உட்கார்ந்திருந்த யாரோ ஒரு வெறிக்குட்டி கெக்கட்டமிட்டுச் சிரித்தது.

இவனுக்குச் சரியான வெட்கமாகப் போய்விட்டது.

அடுத்து என்ன செய்யலாம் என யோசித்த கணத்தில், சிவா இவனது கையைப்பிடித்து இழுத்துக்கொண்டு வெளியில் வந்தான். பிஸ்டலை இப்பிடிப் பொது சனத்திடம் விட்டுவிட்டுப் போவதில் இவனுக்கு உடன்பாடு இல்லை. பிஸ்டலை எப்பிடித் திரும்ப வாங்குவது என்ற சிவாவின் கேள்விக்கு விடையும் இல்லை. இருவரும் எதுவும் பேசாமல் சைக்கிளில் முகாமுக்குச் சென்றனர். வழியில் ஒரு வார்த்தையும் பேசிக்கெள்ளவில்லை.

முகாமுக்குப் போனதும் வோக்கியில் மெயினைத் தொடர்புகொண்டு விஷயத்தைச் சொன்னார்கள். சற்று பொறுத்திருக்கும்படியும், வெளியில் நிற்கும் பொறுப்பாளருடன் கதைத்துவிட்டுச் சொல்வதாக மெயின்காரன் சொன்னான். இருவரும் நன்றாகப் பயந்துபோயிருந்தனர். பிஸ்டலை சனத்திடம் பறிகொடுத்துவிட்டு வந்ததைப் பொறுப்பாளர் எப்பிடி எடுத்துகொள்வார் என்பதை யூகிக்க முடியாமல் திண்டாடினார்கள். பொறுப்பாளர் இப்ப கொஞ்ச நாளாகத்தான் யாழ்ப்பாணப் பொறுப்பை எடுத்திருக்கிறார். ஆனால், எடுத்த கொஞ்ச நாட்களிலேயே ஆமிக்குச் சிம்மசொப்பனமாகிவிட்டார். யாழ்ப்பாணத்தில் இருந்த சிங்கள ஆமியை முகாம்களுக்குள் முடக்கிய பெருமை அவரைத்தான் சேர்ந்தது. இந்தக் காலத்தில் ஆமியிடமிருந்து நிறைய ஆயுதங்களையும் எடுத்திருந்தார். அவரது பொறுப்பில் இருந்த யாராவது ஆயுதங்களைப் பொதுச் சனத்திடம் இழந்தார்கள் என்றால், அவருக்குக் கோபம் ஏறிவிடும் என நினைத்தார்கள். கொஞ்ச நேரத்தில் மெயினில் இருந்து அழைப்பு வந்தது. இருவரையும் தயாராக நிற்கும்படியும், மானிப்பாய் பண்ணை முகாமில் இருந்து வாகனத்தில் ஆட்கள் வருவார்கள் என்றும், அவர்களுடன் போய்ச் சிங்கராசரின் வீட்டை காட்டுமாறு சொன்னான்.

சற்றைக்கெல்லாம் வெள்ளை நிற ஹைஏஸ் ஒன்று வந்து வழுக்கிக்கொண்டு நின்றது. வாகனத்துக்குக் கிட்ட போகவே இவனுக்குச் சரியான வெட்கமாக இருந்தது. பொதுசனத்திடம் பிஸ்டலை பறிகொடுத்தது என்றால் வெட்கக்கேடுதானே.

அவன் நினைத்த மாதிரியே நடந்தது. வாகனத்துக்குள் எட்டுப் பேர் ஆயுதங்களோடு இருந்தனர். ஆளாளுக்கு நக்கலடித்தார்கள். யாரோ ஒருவன் பின்னால் இருந்து

“அம்மான் உங்களுக்குப் பிஸ்டலால சுடத் தெரியுமா?” என்றான். இவனுக்குப் பெரிய பரிசுக்கேடாக இருந்தது. என்ன செய்யிறது. அப்பிடியொரு சம்பவம் நடந்துவிட்டதால் பொறுத்துக்கொள்ளத்தானே வேண்டும். யன்னலுக்குள்ளால் வெளியில் பார்த்தபடி இருந்தான். போன வேகத்தின் சிங்கராசர் வீட்டுப் படலையை மோதித்தள்ளுவதைப்போல வாகனம் நின்றது. சடசடவெனத் துப்பாக்கிகளுடன் குதித்தவர்கள், வீட்டை சுற்றிவளைத்தனர். ஏதோ ஒரு விபரீதம் நடக்கலாம் என வீட்டில் எதிர்பார்த்திருக்க வேண்டும். அயலட்டையிலுள்ள பெண்கள் எல்லோரும் வீட்டில் கூடியிருந்தனர். பெண்கள் அழுது குழறினால் இயக்கத்தைச் சமாளிக்கலாம் எனச் சிங்கராசர் கணக்குப் போட்டிருக்கலாம்போல. யாரோ ஒருத்தி முன்னால் வந்து, யாரும் உள்ளே போக முடியாதபடி கைகளை விரித்துப் பிடித்தபடி, “தம்பியவை திரும்பிப் போயிடுங்கோ.. துவக்கைத் தந்திடுறம். போங்கோ ராசாக்கள்” என்றாள். முன்னால் சென்றவன், ஒரு கணம் தயங்கி, பலத்தையெல்லாம் ஒன்று திரட்டி அவளது கன்னத்தில் ஒன்று விட்டான். “உதெல்லாம் இயக்கத்துக்குக் கை நீட்டுறதுக்கு முதல் தெரிஞ்சிருக்க வேணும். விலத்தடி” எனத் தள்ளிவிட்டு உள்ளே போனான். அந்த அறை எல்லோரையும் நிலைகுலைய வைத்திருக்க வேண்டும். சுவர் ஓரமாக எல்லாப் பெண்களும் ஒதுங்கிக்கொண்டனர். சிங்கராசரின் மனிஷி மட்டும் எந்த உணர்ச்சியையும் காட்டாத முகத்துடன் வந்து பிஸ்டலை கொடுத்தாள். சிவா ஓடிப்போய் வாங்கிக்கொண்டான்.

வீட்டு அறை ஒன்றுக்குள் முடங்கிக்கிடந்த சிங்கராசரின் இரண்டாவது மகனை இழுத்து வந்தார்கள். வாசலில் வைத்து அவனது கையைப் பின்பக்கமாக மடக்கிக் கட்டினார்கள். சிங்கராசரின் மனிஷி ஒப்பாரி வைக்கத்தொடங்கினாள். அதனைக் கணக்கில் எடுக்காமல் அவனை வாகனத்தில் தூக்கிப் போட்டுக்கொண்டு புறப்பட்டார்கள். இயக்கத்தின் துவக்கைப் பறிக்கிறாயா எனக் கேட்டு, வாகனத்துக்குள்ளேயே அவனுக்கு அடிவிழத் தொடங்கியது. இரண்டும் நாள் சுதுமலை முகாமில் வைத்து அவனுக்கு நல்ல அடி விழுந்தது. ஏன் துவக்கைப் பறித்தான்... வேறு இயக்கங்களுடன் தொடர்பு இருக்கா? என விசாரணையும் நடந்தது. அடியில் அவன் சோர்ந்துவிட்டான். இனி இயக்கத்துக்கு மரியாதை கொடுப்பன் என அழத் தொடங்கினான்.

இரண்டு நாள் விசாரணையின் பின்னர், இயக்கத்தின் பண்ணையில் வேலை செய்ய வேண்டும் என்ற தண்டனை விதிக்கப்பட்டது. மானிப்பாயில் இருந்த பண்ணையில் சிங்கராசரின் இரண்டாவது மகனைகொண்டுபோய் விட்டனர்.

அந்தப் பண்ணைக்குப் பக்கத்தில்தான் அவன் தங்கியிருந்த அப்பையா அண்ணையின் ஆயுதத் தொழிற்சாலை இருந்தது. ஆயுதத் தொழிற்சாலையில் பணியாற்றுபவர்களுக்கான சாப்பாடு தயாரிப்பது மற்றும் ஆயுதத் தொழிற்சாலைக்கான சில வேலைகள் என்பன பண்ணையில் உள்ளவர்களின் வேலையாக இருந்தது. இலங்கைப் போக்குவரத்து சபையின் பேருந்துகளை கொண்டுவந்து வெட்டி அலுமினியம் எடுப்பது, கடைச்சல் பட்டடைகளிலும் வாகன திருத்தும் இடங்களிலும் எறியும் கழிவு இரும்புகளைத் தரம் பிரிப்பதுவும் நடக்கும். ஊரில் ஏதாவது குற்ற செயல்களில் ஈடுபட்டவர்களை கொண்டுவந்து அவர்களுக்குத் தண்டனையாக இந்த வேலைகள் கொடுக்கப்படும். இங்கு ஒரு மாதம் வேலை செய்வதுதான் சிங்கராசரின் மகனுக்குத் தண்டனை.

பிஸ்டலை பறிகொடுத்த சிவாவுக்குத் தண்டனையாக அவனது பிஸ்டல் பறிக்கப்பட்டு ஆயிரம் தோப்புக்கரணம் போடும்படி பொறுப்பளர் கூறியிருந்தார். கூடப்போன குற்றத்துக்காகச் சிவா போடும் தோப்புக்கரணத்தை இவன்தான் பக்கத்தில் நின்று சரியாக எண்ணவேண்டும். பின்னர் அவன் அப்பையா அண்ணையின் தொழிற்சாலைக்குச் சென்றிருந்தான். நான்காம் நாள், பண்ணை முகாமில் இருந்து அப்பையா அண்ணையின் தொழிற்சாலைக்கு ஒருவன் ஓடிவந்து, சிங்கராசரின் இரண்டாவது மகன் செத்துவிட்டான் என்ற தகவலை சொன்னான். அவனிடம் இருந்து மேலதிக தகவல் எதையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. நன்றாகப் பயந்துபோய் இருந்தான். அந்த நேரம் பண்ணைப் பொறுப்பாளரும் முகாமில் இல்லை. அவசரமாக இன்னொருத்தனை ஏற்றியபடி மோட்டார் சைக்கிள் பண்ணை முகாமுக்குள் சென்றது. ஓர் அறையில் சீலனின் உடல் கிடந்தது. தொட்டுப்பார்த்தான். உடல் குளிர்ந்துபோய் இருந்தது. என்ன நடந்தது என்றதற்கு ஒருத்தன் தயங்கியபடி விஷயத்தைச் சொன்னான், “சாப்பிட்டு முடிய சிகரெட் வேணுமெண்டு கேட்டவன். அதுக்கு இங்கே சிகரெட்

எல்லாம் கிடையாது எண்டு சொல்ல, சிகரெட் தந்தால்தான் வேலை செய்வன் எண்டு அவன் சொல்ல பிரச்னையிட்டுது. நான்தான் இரும்புக் குழாயால் அடிச்சன். அதை அவன் பறிச்சுபோட்டான். அந்தக் கோவத்தில நாங்கள் மூண்டு பேரும் அவனைக் கட்டி போட்டிட்டு அடிச்சனாங்கள். நான் அடிச்ச ஓர் அடி கழுத்துப் பின் பக்கத்திலை முள்ளந்தண்டிலை பட்டிட்டுது. மயங்கின மாதிரி கிடந்தான். அவன் நடிக்கிறானாக்கும் எண்டு திரும்பவும் அடிச்சம். ஆள் அசைவேயில்லை" என்று நடுங்கியபடி சொல்லி முடித்தவனின் காதைப் பொத்தி அறைந்தவன், "சிகரெட் கேட்டால் வாங்கிக் குடுக்கிறதுதானே. சிங்கராசர் சும்மாவே பிரச்னையைக் கிழப்பிற ஆள். இதுக்கை நீங்கள் வேறை" என்றபடி வோக்கியில் மெயினைத் தொடர்புகொண்டு பொறுப்பாளரிடம் பிரச்னையைச் சொன்னான். அடித்த மூன்று பேரையும் அழைத்துக்கொண்டு வருமாறு அவனுக்குக் கட்டளை வந்தது.

இவர்கள் மெயினுக்குள் போக, அங்க பொறுப்பாளர் கோபத்தில் சன்னதம் ஆடிக்கொண்டிருந்தார். பொதுமகன் ஒருவனை அடித்துக்கொன்றது சனத்திடம் பெரிய பிரச்னையாகப் போகிறது என்ற கோபத்தில் அவர் வாயில் இருந்து தூசணங்களாகவே வந்து விழுந்தது. சீலனை அடித்துக் கொலை செய்தவர்களுக்குப் பனை மட்டையால் மாறி மாறி அடிகள் விழுந்தன. அடித்தபடியே, "இப்ப சடலத்தை என்ன செய்யலாம்?" என இவனைப் பார்த்து பொறுப்பாளர் கேட்டார். இவனுக்கு என்றால் தலைசுற்றத் தொடங்கியது. தவறுதலாக நடந்தது அல்லது தப்பி ஓட முயற்சிக்கும்போது சுடப்பட்டான் என்று சிங்ராசரிடம் உடலை கொண்டு போய் கொடுக்க முடியாது. உடலை கொண்டு போகிறவர்களைச் சிங்கராசர் கட்டாயம் வாளால் வெட்டுவார் அல்லது அடிப்பார். அதோடை பிரச்னை பெரிதாகும். அப்பிடியே உடலை புதைத்துவிட்டு தெரியாத மாதிரியும் விடமுடியாது கைது செய்ததன் பிறகு, சீலனின் தாயார் வந்து அவனைப் பண்ணை முகாமில் பார்த்துவிட்டுப் போயிருந்தார். இவனுக்கு என்ன சொல்வது எனத் தெரியாமல் தடுமாறினான். இவன் ஒன்றுக்கும் இலாயக்கில்லாதவன் எனப் பொறுப்பாளர் திட்டினார்.

அந்தச் சமயத்தில், ஒருவன் நல்லதொரு ஐடியா சொன்னான். "அண்ணை அவன் கொஞ்சம் குளப்படிகாரன்தானே. இவனுக்கு இலங்கை அரசோடை

தொடர்புகள் இருந்தது என்று விசாரணையின்போது தெரியவந்ததால் மரணதண்டனை குடுத்ததாக முடிச்சுவிடலாம்” என்றான். பொறுப்பாளரின் கண்கள் மின்னின. மெல்லிய சிரிப்புடன், “கெட்டிக்காரன்” என்றார்.

நள்ளிரவு தாண்டிய நேரம் சீலனின் உடல் வானில் ஏற்றப்பட்டது. சண்டிலிப்பாயில் சன நடமாட்டம் அதிகம் இல்லாத பகுதியான கல்வளைக்கு இறங்கும் இரண்டாவது சிறிய வீதியில் உள்ள மைல் கல்லுக்குப் பக்கத்தில் உடலை போட்டுவிட்டு சுட்டுவிடுவது என்று முடிவாகியது. சுட்டால் இறந்து பல மணி நேரமாகிய உடலில் இருந்து அதிக ரத்தம் வராதே என ஒருவன் சொன்னான். அதற்கு இன்னொருவன் ஐடியா சொன்னான். அவனது யோசனைப்படி, பண்ணையில் இருந்த பெரிய சேவல் ஒன்றை பிடித்து உரப்பையில் போட்டுக் கட்டினார்கள். வாகனம் சண்டிலிப்பாயை நோக்கி பயணித்தது. குறிப்பிட்ட இடத்தில் நின்றதும் அவனது உடலை இழுத்து மைல் கல்லுக்குப் பக்கத்தில் கிடத்தினார்கள். பாரத்தின் எஸ்.எம்.ஜி. உடலின் தலையைக் குறிவைக்க அவன் அதைத் தாழ்த்தி மார்புக்கு நேரே இறக்கிவிட்டான். துப்பாக்கி சில குண்டுகளைத் துப்பியது. வாகனத்தில் இருந்த சேவலை எடுத்தவன், அதன் கழுத்தை ஒரே வெட்டில் அறுத்து, சீறிய ரத்தத்தை உடலின் மார்பு பகுதியெங்கும் வழியவிட்டவன், சேவலையும் துண்டாடப்பட்ட தலையையும் மீண்டும் உரப்பையினுள் போட்டு வாகனத்தில் ஏற்றிக்கொள்ளத் தேசத்துரோக குற்றத்துக்காக மரணதண்டனை என்று எழுதி தயாராக வைத்திருந்த ஒரு கடுதாசியை அங்கு வீசிவிட்டு பரத்தும் வாகனத்தில் தாவினான். வாகனம் புறப்பட்டுப் போய்விட்டது.

மறுநாள் காலை செய்தி ஊரெங்கும் பரவியது. செய்தி கேள்விப்பட்ட சிங்கராசர் வந்து பார்த்தவர், பெயர்ப்பலகைக் கல்லுக்கு அருகில் எறும்புகளும் இலையான்களும் மொய்த்தபடி மகனின் உடலை பதை பதைத்தபடி பூவரசங் குளைகளைப் பிடுங்கித் தட்டித் துடைத்தவர், தனது காரின் போனற்றில் தூக்கிக் கிடத்திவிட்டு காரின் ஹோர்னை அடித்தபடியே “என்ரை மகனை கொண்டிட்டாங்கள். கொலைகாரப் பாவியள். என்ரை மகனைக் கொண்டிட்டாங்கள்” என்று கத்தி அழுதபடியே ஊரை சுற்றி வந்துகொண்டிருந்தார். ஊர் சனங்கள் வீதியில் வந்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க

மானிப்பாயில் இருந்த புலிகளின் முகாமுக்குச் செய்தி போனது. இதற்கிடையில் இந்தச் சம்பவத்தைத் தங்களுக்குச் சாதகமாக்கி புலிகளுக்கு எதிரான பிரசாரமாக்க புளொட் முயற்சி செய்துகொண்டிருந்தது.

அங்கு வந்துசேர்ந்தவன், ஊரில் உள்ள ஆசிரியர்கள் மற்றும் சமாதான நீதவான் ஆகியோரை சந்தித்துச் சிங்கராசரை சமாதானப்படுத்தி உடலை வீட்டுக்குக் கொண்டுபோகச் செய்யும்படி கேட்டான். அதன்படி சண்டிலிப்பாய் பாடசாலைக்கு அருகில் கோபத்தோடு கத்தியபடி மகனின் உடலோடு நின்றிருந்த சிங்கராசரை போய்ச் சந்தித்தவர்கள், அவரைச் சமாதானப்படுத்தி அடுத்தக் காரியங்களைக் கவனிக்கும்படி அனுப்பிவைத்தார்கள். சிங்கராசரின் மகனை இயக்கம் சுட்டதால் அவனது மரண வீட்டுக்குப்போனால் தங்களுக்கும் ஏதாவது வீண் பிரச்னைகள் வரலாம் என நினைத்து ஊர்க்காரர்கள் பலர் போகவில்லை. அவரது சமூகத்தைச் சேர்ந்தவர்களே பெரும்பாலும் கலந்துகொண்டிருந்த மரண வீட்டில், சிங்கராசர் பட்டினத்தார் பாடலை பெருத்த சத்தத்தோடு பாடியபடியும் புலிகளைத் திட்டியபடியும் சுடலைக்கு மகனின் உடலை எடுத்துச்சென்று கொள்ளி வைத்தார்.

மகனின் மரணத்துக்குப் பிறகு சிங்கராசர் பெரிதும் உடைந்துபோயிருந்தார். மாலை நேரமானதும் தண்ணியடித்துவிட்டு சந்திக்கு வந்து புலிகளைத் திட்டித் தீர்ப்பது அவரது அன்றாட வேலைகளில் ஒன்றாகிப்போனது. அன்றைய காலகட்டத்தில்தான் புலிகள் சண்டிலிப்பாயை தனி அலகாகப் பிரித்து அதற்கு ஓர் அரசியல் பொறுப்பாளரையும் நியமித்தார்கள். சண்டிலிப்பாய் ராசா பாடசாலைக்கு முன்னால் கனடாவுக்குக் குடும்பமாகப் போய்விட்டிருந்த சோதி டீச்சரின் வீடுதான் அவர்களது அரசியல் அலுவலகமாக மாறியிருந்தது. அரசியல் பொறுப்பாளராகச் சிவநேசன் என்பவரை நியமித்திருந்தனர். இவருக்கு ‘அரளிக்கொட்டை’ என்றொரு பட்டப்பெயரும் இருந்தது. காதல் தோல்வியால் தற்கொலை செய்வதற்கு அரளிக்கொட்டையை அரைத்து குடித்தவர், அவரது குடும்பத்தால் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு உயிர் தப்பிவிட, அதே விரக்தியில் இயக்கத்துக்கு வந்து சேர்ந்திருந்தார். இவர்தான் இப்போது சண்டிலிப்பாய் அரசியல் பொறுப்பாளர். இவருக்குச் சிங்கராசரைப் பற்றிய விவரங்கள் தெரியாது. சந்தியில் நின்று புலிகளைத்

திட்டிக்கொண்டிருந்த சிங்கராசரை இழுத்துப்போய் அறையில் போட்டு அடித்துவிட்டு தடுத்து வைத்திருந்தார்கள். தற்செயலாக அந்த வழியில் வந்தவனுக்கு ஊர்காரர் சேதியைச் சொல்ல சிவநேசனின் அலுவலகத்துக்குப் போய் அவனைப் பேசிவிட்டு, சிங்கராசரையும் விடுவித்தான். அவனது மோட்டார் சைக்கிளிலேயே சிங்கராசர் வீட்டுக்கு அழைத்துப்போய் இறக்கிவிட்டு அவரது மனைவியிடம், “இனிமேல் ரோட்டு வழியில் நிண்டு கத்தவிடாதையுங்கோ. இண்டைக்கு நான் கண்ட படியால் பிரச்னையில்லாமல் போயிட்டுது. ஆனால், தொடர்ந்து இப்பிடி ரோட்டில் நிண்டு கத்திக்கொண்டிருந்தால் உங்கடை மகனுக்கு நடந்த மாதிரித்தான் நடக்கும்” என்று மிரட்டிவிட்டுப் போனான். சில நாட்களின் பின்னர் தனது வானையும் வீடு காணிகளையும் விற்றுவிட்ட சிங்கராசர் தனது ஏ–40 காரை விற்க மனம் இல்லாமல் அதனைத் தனது உறவுக்காரர் ஒருவரிடம் கொடுத்துவிட்டுத்தான் ஊருக்குத் திரும்பி வருவன். வரும்போது காரைத் திருப்பித் தரவேண்டும் என்று எழுதி வாங்கிக்கொண்டு குடும்பத்தோடு மூத்த மகனிடம் ஃபிரான்ஸுக்குப் போயேவிட்டார்.

❍ ❍

# 11

**தொ**ழிற்சாலையில் சிறிதாக வெட்டப்பட்டிருந்த அலுமினியத் தகடுகளை உலையுள் தள்ளி துருத்தியை கண்ணன் இயக்க, காய்ச்சிய ஈயம் படாமல் இருக்கக் காலில் சாக்குகளைச் சுற்றிக் கட்டியபடி உலையில் உருகிக்கொண்டிருந்த ஈயத்தை நீண்ட இரும்புக்கரன்டி ஒன்றினால் அள்ளி எறிகணை அச்சுக்களில் நிரப்பியபடி இருந்தான். இவர்களைக் கவனித்தபடியே கைகுண்டுகளுக்குக் கெற்புக்களைப் பொருத்திக்கொண்டிருந்தார் அப்பையாண்ணை. ஒரு மோட்டார் சைக்கிள் தொழிற்சாலைக்குள் நுழைந்தது. அவரும் பார்வையை வாசல் பக்கம் திருப்ப, தலையைச் சரித்தபடி கண்ணாடி போட்ட மெல்லியதோர் உருவம் மோட்டார் சைக்கிளில் உள்ளே வந்துகொண்டிருந்தது.

"அட... திலீபன்" என்றார் அப்பையாண்ணை.

இந்தியாவில் இருந்து வந்த பின்னர் இன்றுதான் திலீபனை மீண்டும் பார்க்கிறான். இந்தியா போவதற்கு முன்னர் அவன் திலீபனோடு சேர்ந்து போஸ்டர்கள் ஒட்டுவது, பாடசாலைகளுக்குப் போய்த் துண்டுப்பிரசுரங்கள் கொடுப்பது, மாணவர்களுக்குப் போராட்டம் பற்றி வகுப்பு எடுத்தல்... எனப் பல வேலைகளைச் செய்திருக்கிறான். அவன் பயிற்சி முடித்து வந்ததும் மீண்டும் தன்னோடு வந்து வேலை செய்யச் சொல்லி திலீபன் கேட்டிருந்தான். ஆனால், அவன் திரும்ப வந்ததும் பீட்டரோடு ஒட்டிக்கொண்டு திரிந்ததால் பேசாமல் இருந்துவிட்டான். இன்று அவனைத் தேடி வந்திருந்தான். வந்ததுமே அப்பையாண்ணையிடம் "அண்ணை அவனை என்னோடை அனுப்புங்கோ. கனக்க

வேலை இருக்கு" என்றான்.

"என்ன ஊர் ஊராகப் போய் நாங்கள் ஏன் போராட வேண்டும் என்று வகுப்பு எடுக்கிறதா? நான் வரேல்லை. அந்தா ஒருத்தர் சும்மாயிருந்தபடி அலுப்புத் தந்துகொண்டிருக்கிறார். அவரைக் கூட்டிக்கொண்டு போ.." என்று அப்பையாண்ணையை நோக்கி கையைக் காட்டினான்.

"இல்லை இது வேறை வேலை. கெதியாய் வெளிக்கிட்டு வா" என்று அவசரப்படுத்தினான்.

"நான் வரேல்லை... வரேல்லை" என்றதும்,

"சரி, நான் சொன்னா நீ கேக்க மாட்டாய். பொறுப்பாளரிட்டை சொல்லுறன்" என்றபடி திலீபன் அலுவலகத்தில் இருந்த வோக்கியை எடுக்கப்போனதும், "எதுக்கடா அந்தாளை கூப்பிடுறாய். நானே வாறன்" என்றுவிட்டு குளித்து உடை மாற்றிக்கொண்டு திலீபனின் மோட்டார் சைக்கிளில் அமர்ந்தான்.

அது இயக்கத்தின் தாவடி தும்புத் தொழிற்சாலையில் போய் நின்றது. மோட்டார் சைக்கிளைவிட்டு இறங்கியதும் "அண்ணை ஆயுதங்கள் வாங்கிறதுக்காக அவசரமாய்ப் பெரிய தொகை நிதி அனுப்ப சொல்லி கேட்டிருக்கிறார். அதுக்காக நாங்கள் இப்ப அவரமாக நிதி சேகரிக்கிற வேலையில் இறங்கப்போறோம். அந்த நிதியை அனுப்பி வாங்கிற ஆயுதத்தால்தான் முக்கிய ஆமி கேம்ப் ஒன்றை அடிக்கப்போறோம்" என்றவனிடம்,

"சரி, நிதி எப்படிச் சேகரிக்கிறது. அதை முதல்லை சொல்லு" என்றான்.

"வா... காட்டுறன்" என்று அழைத்துப்போனவன் அங்கு வரிசையாக நின்றிருந்த சைக்கிள்களைக் காட்டினான். சைக்கிள்களின் பாரில் பல தும்புத் தடிகள் கட்டப்பட்டிருந்ததோடு அதன் கரியர்களில் கட்டியிருந்த பெட்டிகளில் சவர்காரமும் ஜாம் போத்தல்களும் நிரப்பியிருந்தன. திலீபனை புரியாமல் பார்த்தான்.

"இதுகளை வீடு வீடாகக் கொண்டுபோய் விக்கப்போறம். இண்டைக்கு நீ பண்டத்தரிப்பில இருந்து சங்கானை வரைக்கும் போகவேணும்" தலையில் கைவைத்தபடி கீழே இருந்தவனிடம்,

"என்னடா வெக்கமா இருக்கா? நான் நவாலியிலையிருந்து

தொடங்கிச் சங்கானை வரை வருவன். இரண்டு பேரும் அங்கே சந்திக்கலாம். உனக்கு மட்டுமில்லை கனபேரிட்டை குடுத்திருக்கிறன். எங்கடை போராட்டத்துக்குத் தேவையான நிதியை எங்கடை மக்களிட்டையிருந்துதான் பெறலாம். அதுவும் சும்மா இல்லை. எங்கடை தயாரிப்புப் பொருள்களை வித்துப் பெறுகிறோம். போய் ஒரு சைக்கிளை எடு" என்றதும் இது ஒரு கிழிஞ்ச யாவாரம் என்று அவனுக்குத் தெளிவாகப் புரிந்தது. கையில் துப்பாக்கியோடு பந்தாவாக வலம் வந்த தெருக்களில் தும்புத்தடியோடை அலையவிட்டுட்டானே. போற போக்கிலை வைர மாளிகை மாதிரி சுவீப்டிக்கெட் விக்கச்சொல்லுவான் போல இருக்கு. யாராவது கூடப் படிச்ச பெட்டையள் பார்த்தால் என்ன நிலைமை என்று யோசித்தபடி ஒரு சைக்கிளை எடுத்தான்.

தும்புத்தடி ஓரளவுக்குக் கூட்டும். ஆனால், ஜாமை கரண்டியால் சுரண்டி எடுக்க முடியாது. கத்தியால் வெட்டித்தான் எடுக்கலாம். சவர்க்காரத்தில் வாசனையும் இருக்காது. நுரையும் வராது. ஆனால், மக்களிடம் கை நீட்டி பணத்தை வாங்கும்போது எதையாவது கொடுக்க வேண்டும். அதே நேரம் உள்ளூர் தயாரிப்புகளை ஊக்குவிக்க வேண்டும் என்ற நோக்கத்துக்காகவே அதை நடைமுறை படுத்தவேண்டியிருந்தது. ஆனால், அவற்றை சனத்துக்கு விற்பது பெரும்பாடாக இருந்தது.

முதலாவது விற்பனைக்காகப் பண்டத்தரிப்புப் பகுதியில் இருந்த ஓர் ஆசிரியரின் வீட்டுக்குப் போனவன், "சேர் நான் என்னை ஞாபகம் இருக்கா?" என்று தன்னை இயக்கம் என அறிமுகம் செய்துவிட்டுச் சவர்க்காரம் வாங்கும்படி அவரிடம் இரண்டு கட்டி சவர்க்காரத்தை நீட்டினான். ஆனால் வாத்தியாரோ, "தம்பி, எதுக்கு இயக்கத்துக்குப் போனாய்... எண்டு தொடங்கி நீங்கள் சின்னப் பெடியள் இவ்வளவு பலத்தோடை ஆயுதங்களோடை இருக்கிற ஆமியோடை சண்டை போட்டு வெல்லுவியளோ..?" எண்டு கேட்க, அவனும் அவருக்கு வியட்நாமில் இருந்து தொடங்கி கியூபா, நமீபியா, எரித்திய எண்டு கதை சொல்லிக்கொண்டேயிருந்தான். நேரம்தான் போய்கொண்டே இருந்ததே தவிர வாத்தியார் சவர்க்காரம் வாங்கிற மாதிரி தெரியவில்லை. அதுவும் அவர்வேற சரித்திரம் சமூகவியல் வாத்தியார். சும்மாவிடுவாரா? அவரும் தன்ரை வித்துவத்தைக் காட்டிக்கொண்டேயிருந்தார். அவனது கை வியர்வையில் சவர்க்காரம் கரையத் தொடங்கியிருந்தது. அந்த நேரம் வீதியில் வாகனச் சத்தம் கேட்க, வாத்தியார்

முகத்தில் பயம் தெரிந்தது. உடனே, "தம்பி உள்ளை வா... ஆமிக்காரன் வாறான் போலை" என்று கூப்பிட்டபடி வீட்டுக்குள் ஓடிவிட்டார். ஆனால், நல்லவேளையாக அது ஆமியில்லை. சாதாரண லாரி ஒன்று வீதியில் போனது. ஒரு சவுக்காரத்தை விக்கிறதக்காக ஒரு மணித்தியாலமாக உலக விடுதலைப் போராட்டங்களைப் பற்றியெல்லாம் வாத்தியாருக்கு வகுப்பு எடுத்துக்கொண்டிருந்தவன், வாத்தியாரை பாத்து, "பார்த்தீங்களா, இப்பிடிப் பயந்து எத்தனை நாளைக்கு வாழப்போறீங்கள். நாங்கள் எங்கடை முத்தத்திலை சுதந்திரமாக நிண்டு கதைக்கிறதுக்காகவாவது போராட வேணும். அதுக்கு ஆயுதம் வேணும். அதுக்குப் பணம் வேணும். அதுக்காக நீங்கள் ஒரு சவக்காரமாவது வாங்கவேணும்" என்று மூச்சுவிடாமல் சொல்லி முடிக்க வாத்தியருக்கு ஏதோ ஞான ஒளி அவரது மண்டைக்குள் இறங்கியதைப்போல உடனடியாக இரண்டு சவுக்காரத்தை வாங்கினவர், மணந்து பார்த்திட்டு "மணம்தான் இல்லை; நுரையாவது வரும்தானே?" என்று கேட்டார். அதற்கு அவன் வாத்தியார் மணம் நுரை வராட்டிலும் ஊத்தை நல்லா போகும். போட்டுத் தேச்சு பாருங்கோ என்று விடை பெற்றவனுக்கு, இப்பிடி சவுக்காரம் தும்புத்தடி வித்து ஆயுதம் வேணாம் ஒரு துப்பாக்கி ரவையைக்கூட வாங்க முடியாது என்பது தெளிவாகியிருந்தது.

இப்படிச் சவர்க்காரம் விக்கவே படாத பாடுபட்ட காலத்தில்தான் முதல் முதலாக வீட்டுக்கு வீடு கால் பவுண் தரவேண்டும் எனப் புலிகள் அறிவித்தல் ஒன்றை விடுத்ததோடு அதற்கான பிரசாரங்களையும் செய்தார்கள். புலிகள் அமைப்பின் முதலாவது பவுண் மற்றும் நிதி சேகரிப்பு அதுதான். இலங்கை பணத்தை வெளியே கொண்டுசென்று மாற்றினால் பெறுமதி அதிகம் இருக்காது. அதேவேளை அன்றைய காலங்களில் இந்தியாவைவிட இலங்கையில் பவுணின் விலை மலிவாகவும் இருந்தது. எனவே, நகைகளாக இந்தியாவுக்குக் கொண்டுபோய் அவற்றை அங்கு விற்றால் நிறைய லாபம் கிடைக்கும். எனவேதான் பவுண் தரசொல்லி மக்களிடம் கோரிக்கை வைக்கப்பட்டது. எதிர்பார்த்த அளவுக்கு இல்லாவிட்டாலும் ஓரளவுக்கு மக்கள் புறு புறுத்தபடி நகைகளைக் கொடுத்திருந்தார்கள். ஆனால், யாழின் பெரு முதலாளிகளிடம் புலிகள் பெருமளவு நிதியை திரட்டினார்கள். இப்படியாகப் பெரு முதலாளிகளிடமும் வாங்கித் தலைமை கேட்ட தொகையை அனுப்பிவிட்டு பருத்தித் துறை முகாமை தாக்குவதற்கான ஆயுதங்களுக்காகக் காத்திருந்தார்கள். மாதங்கள் போய்கொண்டிருந்ததே தவிர,

ஆயுதங்கள் வந்தபாடில்லை. சுமார் ஏழு மாதங்கள் கடந்த நிலையில் ஆயுதம் வாங்கும் முயற்சி தோல்வியில் முடிந்து பணமும் போய்விட்டது. எனவே, மீண்டும் பெருமளவு பணம் தேவை என் தலைமையிடம் இருந்து தகவல் வந்தது.

கிட்டு, மயிரில்லாத தலையைச் சொறிந்தார். பருத்தித் துறை முகாமை எப்படியாவது அடிக்கவேணும். ஏனென்றால், அது பெரும் தலையிடியாக இருந்தது. கடற்கரையோரமாகத் துறைமுகத்தோடு அமைந்திருந்த இந்த முகாமில் இருந்து ராணுவத்தினர் அடிக்கடி பருத்தித் துறை நகரத்தினுள் புகுந்து அட்டகாசம் செய்வது வழைமையாகவே மாறிவிட்டிருந்தது. நகரச் சந்தையில் வந்து பொருட்களை வாங்கிவிட்டுப் பணம் கொடுக்க மாட்டார்கள். அல்லது கண்மூடித்தனமாகச் சுடுவார்கள். இளைஞர்களைக் கைது செய்துகொண்டு போவார்கள். இவர்களது அட்டகாசத்தைத் தடுப்பதற்காகப் புலிகள் அமைப்பு அந்த முகாமை கட்டுப்படுத்த முயற்சித்துக் கடற்கரை வீதியில் காவல் அரண் ஒன்றையும் அமைத்தார்கள். ஆனால், குறுகிய காலத்திலேயே அடிக்கடி ராணுவத்துக்கும் புலிகளுக்கும் நடந்த சண்டையில் பெருமளவான போராளிகளுக்கும் சனத்துக்கும் உயிரிழப்பு ஏற்பட்டது. அதை அடிக்க ஆயுதம் வாங்குவதற்குத் திரும்பவும் சனத்திடம் பவுண் பணம் என்று போக முடியாது. முதலாளிகளிடமும் முடிந்தளவு வாங்கியாகிவிட்டது. எமது சமூகம் போராட்டத்துக்கு நிதியென்று போனால் 10 ரூபாய்த் தருவதற்கு 10 தரம் யோசிப்பார்கள். ஆனால், யாராவது ஒரு கள்ள சாமியார் உனக்குத் தோஷம் என்று சொல்லிவிட்டால் கண்ணை மூடிக்கொண்டு அதற்காக ஆயிரக்கணக்கில் செலவழிப்பார்கள். எனவே, என்ன செய்யலாமென யோசித்தபோதுதான் கிட்டுவுக்கு அந்தத் திட்டம் உதித்தது.

கொள்ளை அடிக்கலாம். ஆனால், இயக்கங்களின் கொள்ளைக்குப் பயந்து வங்கிகள் எல்லாமே இயங்காமல் விட்டிருந்த காலம் அது. எங்கே போய்க் கொள்ளை அடிப்பது? யாழில் வங்கிகளுக்கும் அதிகமாகப் பிரபலமான கோயில்களில்தான் தங்கநகைகள் இருந்தது. கோயில்களைக் கொள்ளையடிக்கலாம் எனத் திட்டம் போடப்பட்டது. அப்படி அடித்தாலும் அது புலிகளின் தலையில் விழாது. அதற்கான காரணமும் இருந்தது. ரெலோ அமைப்பானது அப்போதுதான் இரண்டு கொள்ளைகளை நடத்தி முடித்ததோடு மட்டுமல்லாமல் அது ரெலோதான் என்றும் தெரிய வந்திருந்தது. முதலாவது கொள்ளை மூளாய் சந்தியில்

இருந்த பிரபலமான துரையப்பா அடைவு கடை. அந்தக் கடையைக் கொள்ளையடித்துப் பெருமளவான நகைகளை எடுத்துச் சென்றிருந்தார்கள். அங்குக் கொள்ளையடிக்கப் போனவர்களில் கடைக்காரரின் உறவினர் ஒருவரும் போயிருந்ததால் வீட்டுக்காரப் பெண் அவரை அடையாளம் கண்டு பேரைச் சொல்லிக் கூப்பாடு போட அவரைத் தாக்கிவிட்டுப் போயிருந்தார்கள். அதனால் அதைச் செய்தது ரெலோ என்று ஊருக்கே தெரியவந்திருந்தது. இரண்டாவது நவக்கிரி நிலாவரைப் பகுதியில் இருந்த ஒரு சுருட்டு கொம்பனி முதலாளி. இவரும் நகை அடகு பிடிப்பவர். இவரது வீட்டில் கொள்ளை அடித்துவிட்டு வாகனத்தில் போய்கொண்டிருந்தபோது நிலாவரை சந்தியில் காவல் கடையில் நின்றிருந்த புலி உறுப்பினர் ஒருவர் கைக்குண்டை எறிந்ததில் அது வெடித்து ரெலோ உறுப்பினர் ஒருவர் படுகாயமடைந்திருந்தாலும் புலி உறுப்பினரை சுட்டுவிட்டு அவர்கள் தப்பிப் போயிருந்தார்கள். இந்த அடுத்தடுத்த இரண்டு கொள்ளைகள் பற்றியும் ரெலோ பற்றியும் யாழ்குடாவெங்கும் பேச்சாக இருந்த காரணத்தினால், அடுத்த கொள்ளைகளும் ரெலோவின் பெயரிலேயே சுலபமாக விழும். இதுதான் கிட்டு போட்ட திட்டம்.

யாழ்குடாவில் மிக வசதியான கடவுள் என்றால், கண்ணை மூடிக்கொண்டு நல்லூர் முருகன் என்று சொல்லிவிடலாம். அங்குக் கையை வைக்க முடியாது. காரணம் அந்தச் சுற்று வட்டாரத்தில் புலிகளின் மூன்று முகாம்களும் காவல் நிலைகளும் இருந்தன. அதே நேரம் கோயில் நிர்வாகி புலிகளுக்குத் தொடர்சியான நிதி உதவியும் செய்பவர். அதற்கு அடுத்ததாக உள்ள கோயில்கள் அன்றைய காலத்தில் பிரபலமானது. அதுவும் பெண்களால் பிரபலமான கோயில். துர்க்கை அம்மன் கோயில். துர்க்கை அம்மன் கோயிலுக்குப் பிறகு வண்ணார் பண்ணை சிவன் மற்றும் பெருமாள் கோயில். வண்ணார் பண்ணை சிவன் கோயில் நகைகள் பெரும்பாலும் வங்கியில் வைக்கப்பட்டிருந்தன. அதுவும் டெலி ஜெகனின் கொள்ளை முயற்சிக்குப் பின்னர் யாழ் கோட்டைக்குள் கொண்டுபோய்விட்டிருந்தார்கள். எனவே, துர்க்கை அம்மனிடமும் பெருமாளிடமும் அருள் பெறுவது எனத் தீர்மானிக்கப்பட்டது. ஆனாலும் ஒரு சிக்கல். கிட்டு, கடவுள் நம்பிக்கை அற்றவர் என்பது அனைவருக்கும் தெரிந்ததுதான். இயக்கத்தில் இணைந்த பலருக்கும் கடவுள் நம்பிக்கை இல்லை. அதற்கு தமிழ்நாட்டில் பெரியார் திராவிடக் கட்சிக்காரர்களின் தொடர்பும் ஒரு காரணம். ஆனால், பிரபாகரன் அம்மன் மீதான பக்தி உடையவர்.

இதனால்தான் இந்தியப் படை ஒப்பந்த ஆரம்பத்தில் இவரது மக்கள் முன்னாலான முதலாவது உரை சுதுமலை அம்மன் ஆலயத்தின் முன்னால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. எனவே, துர்க்கை அம்மன் கோயிலில் கை வைக்கப்போவது தெரிந்தால் மறுத்துவிடுவார். அதனால் நடவடிக்கைகளை முடித்துவிட்டு பிரபாகரனுக்குத் தெரிவிப்பது என்றும் முடிவானது. பெருமாள் கோயிலுக்குப் போவதற்கு ஒரு குழுவும், துர்க்கை அம்மன் ஆலயத்துக்கு ஒரு குழுவும் தயார்ப்படுத்தப்பட்டது.

சவர்க்காரம் வித்தும் வீட்டுக்கு வீடு கால் பவுண் கேட்டும் களைத்துப்போய் மீண்டும் தொழிற்சாலையில் அலுமினியத்தைக் காச்சி ஊத்திக்கொண்டிருந்தவனுக்கு மெயினில் இருந்து பொறுப்பாளரின் அழைப்பு வந்தது. துர்க்கை அம்மன் கோயிலுக்குப் போகும் குழுவில்தான் அவனும் நியமிக்கப்பட்டிருந்தான். கோயிலின் கடைசி நேர வருமானத்தையும் எடுத்துவிட வேண்டும். பொறுப்பாளரின் திட்டம் பெருமாளுக்கு வெள்ளிக்கிழைமைகளில்தான் மக்கள் அதிகம் வருவார்கள். துர்க்கை அம்மனுக்குச் செவ்வாய்க்கிழைமைதான் விசேஷ நாள். அதனால் முதல் வந்த வெள்ளிக்கிழைமை பெருமாள் கோயிலுக்கான குழு தனது முயற்சியை முடித்துவிட்டிருந்தது. அங்கு எதிர்பார்த்த அளவுக்குத் தேறவில்லை. பிச்சையெடுத்ததாம் பெருமாள் அதைப் பறிச்சதாம் புலிகள் என்கிற கதையாகப் போய்விட்டது. மறுநாள் பொறுப்பாளரே போய் கொள்ளை பற்றிக் கோயில் நிர்வாகத்திடம் விசாரணைகளும் நடத்தினார்.

அடுத்ததாக, துர்க்கை அம்மன் கோயில் இலக்கு வைக்கப்பட்டது. இரவு பன்னிரண்டைத் தாண்டிய நேரத்தில் தங்கம்மா அப்பாக்குட்டியம்மா வீட்டின் முன்னால் வந்து நின்றது வேன். வேனில் இருந்த அனைவரும் தங்கள் முகங்களைத் துணியால் மறைத்துக் கட்டியிருந்தார்கள். அதே நேரம் யாரும் கதைக்கக் கூடாது என்பது கட்டளை. சைகை மற்றும் சங்கோதமாக மெதுவாக விசிலடித்தல், சங்கேத விசில் முறைகள் முதலிலேயே அனைவருக்கும் சொல்லிக் கொடுக்கப்பட்டு ஒத்திகை பார்க்கப்பட்டிருந்தது. வானில் இருந்து இறங்கியவர்கள் துப்பாக்கி முனையில் கோயில் திறப்பு மற்றும் பாதுகாப்புப் பெட்டகங்களின் திறப்புகளையும் எடுத்துக்கொண்டு குட்டியம்மாவை வானில் ஏற்றிவிட்டு வேலைக்காரியைச் சத்தம் போடக் கூடாது என மிரட்டி ஓர் அறையில் விட்டுப் பூட்டிவிட்டார்கள். வாகனம்

இப்போது குட்டியம்மா உதவியாளர் வீட்டுக்கு முன்னால் நின்றது. காரணம், கோயில் பாதுகாப்பு பெட்டகத்தின் இன்னொரு திறப்பு அவரிடம்தான் இருந்தது. இரண்டையும் போட்டால்தான் அதனைத் திறக்கலாம். மற்றைய திறப்போடு உதவியாளரும் வாகனத்தில் ஏற்றப்பட வாகனம் கோயில் வீதியில் வந்து நின்றது. கோயில் முகப்பில் இருவர் காவலுக்கு நிறுத்தப்பட்டனர். கோயிலுக்குள் போனதும். உதவியாளர் கட்டிப்போடப்பட்டார். குட்டியம்மா வாகன சாலைக்கு அருகில் இருந்த ரகசிய அறையைத் திறந்து அங்கிருந்த பெட்டகங்களையும் திறந்த பின்னர் அவரை அவன் கொடிக்கம்பத்துக்கு அருகில் அழைத்து வந்து துப்பாக்கி முனையை அவரது கழுத்துக்குக் கீழாக அமத்திவைத்து பிடித்தபடி நின்றுகொண்டிருந்தான். சிறிய அளவில் தங்கம் மற்றும் வெள்ளியினாலான ஏராளமான நாகப்பாம்பு உருவங்கள், தகடுகள், கண்கள் போன்றவை, நகைகள், துணிப்பைகளில் கட்டி வைக்கப்பட்டிருந்த பணம், சில்லறைகள் என அனைத்தையும் உரப்பைகளிலும், சாக்கிலும் அள்ளிப் போட்டார்கள். அங்கு அவர்கள் எதிர்பார்த்ததைவிட அதிகமாகவே கிடைத்திருந்தது.

அவனின் துப்பாக்கி முனை அழுத்தப்பட்டிருந்தாலும் குட்டியம்மா கண்களை மூடி அதில் இருந்து கண்ணீர் சொரிய, ‘ரட்ச ரட்ச ஜெகன் மாதா... சர்வ சக்தி ஜெய துர்க்கா...’ என்று பாடிக்கொண்டிருந்தார். பாடலில் ‘படைப்பவள் அவளே காப்பவள் அவளே அழிப்பவள் அவளே சக்தி’ என்ற வரி வரும்போது அவன் மேலும் கொஞ்சம் துப்பாக்கி நுனியை அழுத்தியவன் உஸ்ஸ்ஸ்... சத்தம் போடக் கூடாது என்று சைகையில் செய்தான். அவரது சத்தம் குறைந்து முணு முணுப்பாக மாறியது. அனைத்தையும் அள்ளிப்போட்டு வேனில் ஏற்றியவர்கள், அவனை வரும்படி விசில் அடித்தார்கள். அதற்கிடையில் ஒருவன் ஓடிவந்து குட்டியம்மா கைகளில் இருந்த காப்புகளை உருவியெடுக்க முயற்சித்தான். மொத்தமாக இருந்த அவரது கைகளில் இருந்து காப்பு வர மறுக்கிறது. தம்பி இழுக்காதை நானே கழட்டித் தாறன் என்றபடி கோயில் சட்ட விளக்கில் இருந்த எண்ணெயை எடுத்துக் கைகளில் பூசியவர் காப்புகளை உருவியெடுத்து உருவ முயன்றவனின் கைகளில் கொடுத்தார். அனைவரும் வானில் ஏறிக்கொள்ள வான் அங்கிருந்து கிழம்பிவிட்டது.

அடுத்தநாள் உள்ளூர் பத்திரிகைகளில் கோயில் கொள்ளை என்று மட்டும் செய்தி வெளியாகியிருந்தது. இப்படிக்

கோயில் கொள்ளைகள் ஒருபுறம் நடந்துகொண்டிருக்க மறுபக்கம் முதலாவது நிதி சேகரிப்பின்போது பணம் தர மறுத்த சில வர்த்தகர்களும் கடத்தி பணயம் வைக்கப்பட்டுப் பணம் வாங்கப்பட்டனர். அவர்களில் முக்கியமானவர் தாவடியைச் சேர்ந்த புடவைக் கடை மணியம். மணியம்ஸ் என்ற பெயரில் யாழ் நவீன சந்தையில் புடவைக் கடை வைத்திருந்தவர். மானிப்பாயில் நகைக் கடை வைத்திருந்த ஒருவரும் கடத்தப்பட்டார். இவரின் நகைக் கடை மானிப்பாய் வைத்தியசாலைக்குப் பின்னால் இருந்தது. இருவரிடமும் பணத்தைப் பெற்றுக்கொண்டு விடுவித்தார்கள். இதில் மானிப்பாய் நகைக் கடைக்காரர்தான் கடத்தப்பட்ட கோபத்தில் இலங்கை அரசுக்குப் புலிகள் பற்றிய தகவல் கொடுத்ததால் அவர் கண்டுபிடிக்கப்பட்டு பின்னர் மானிப்பாய் வைத்தியசாலைக்கு முன்னால் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார். இப்படியாக மீண்டும் பெரியதொரு தொகையைப் பணமாகவும் தங்க நகைகளாகவும் திரட்டி அவை தமிழ்நாட்டுக்குப் பகுதி பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அனுப்பப்பட்டுக்கொண்டிருந்தது. அப்போதுதான் துர்க்கை அம்மன் கோயிலும் களவாடப்பட்டதைத் தலைவர் தெரிந்துகொள்கிறார்.

இப்படியாக நகைகளைத் தமிழ்நாட்டுக்குச் சென்று ஒப்படைத்துவிட்டு ஆயுதங்களை ஏற்றிய வள்ளங்களில் புலிகள் அமைப்பின் ஆரம்பகாலப் போராளியும் தளபதியுமான அருணாவும் பயணிக்கும்போது அந்தப் படகானது இலங்கைக் கடல் எல்லைக்குள் வைத்து இலங்கைக் கடற்படையின் தாக்குதலுக்கு உள்ளாகியது. தாக்குதலில் வள்ளம் மூழ்கடிக்கப்பட்டு அதில் பயணம் செய்த நால்வரும் கொல்லப்பட்டனர்.

❍ ❍

# 12

**அ**ன்று இரவு முகாமில் கொத்துரொட்டி ஸ்பெஷல். கொத்துரொட்டி வார இறுதியில் ஏதாவதொரு நாள் போடப்படும். அன்றைய தினம் கொண்டாட்டமாக இருக்கும். இயக்கத்தில் வரும் நல்ல சாப்பாடுகளில் ஒன்றாகக் கொத்துரொட்டியும் இருந்தது. மாலையில் இருந்தே எல்லோரும் வாயைச் சப்புக்கொட்டிக்கொண்டிருந்தனர். கொத்துரொட்டி நாளில் கொஞ்சம் சாப்பாடு பிந்துவது வழமை. கொத்து ரொட்டிக்காகக் காத்திருந்த வேளை வேகமாக வந்த வாகனம் ஒன்று வாசலில் சடன் பிரேக் அடித்தது. உட்கார்ந்திருந்த இடத்தில் இருந்து இவன் எட்டிப்பார்க்க, யாரோ துவக்குடன் முன்னால் ஓடிவருவது தெரிந்தது. அவன் ஓடிவந்த பரபரப்பில், பின்னால் பொறுப்பாளர் வருகிறார் என்பது புரிந்தது. பொறுப்பாளர் இப்படி அறிவிக்காமல் கொள்ளாமல் வந்தால் ஏதோ பிரகண்டம் இருக்கு என்பது அர்த்தம். மனதுக்குள் மெல்லிய பதற்றம் அலைக்கழிக்க எழும்பி வெளியில் வந்தான். பொறுப்பாளர் மெல்லிய ஓட்டத்தில் வந்தவர், எதிர்படுபவர்களையெல்லாம் "நீ வெளிக்கிடு.. நீ வெளிக்கிடு" என்றபடி வந்தவர், அப்பையாண்ணையிடம் அண்ணை இருக்கிற கிரானைட்டுகளையெல்லாம் வாகனத்தில் ஏத்தச்சொல்லுங்கோ என்றபடி கைக்குண்டுகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பெட்டியை எடுத்து வாகனத்தில் வைத்தார். ஏற்கெனவே முன்னால் சென்ற பரணி, பாபு, தக்காளி ஆகியோரை வெளிக்கிடச் சொல்லிவிட்டார்.

*வெளியில் வந்தவன், சடாரெனை நின்று, பின்பக்கமாக நடந்து உள்ளே சென்றான்.*

*“வேற யார் காம்பில நிற்கிறது?” எனப் பொறுப்பாளர் கேட்டார்.*

*பாபு சத்தமாக இவனைக் கூப்பிட்டான். இனி ஒளிக்க முடியாது, ‘பாபு வைச்சிட்டான் ஆப்பு’ என நினைத்தபடி வெளியில் வந்தான். இவனையும் வெளிக்கிடச் சொன்னார். எல்லோரும் ரைபிள் கோள்சர் கட்டிக்கொண்டு வர, ஓடிப்போய் வாகனத்தில் ஏறச் சொன்னார். ஏன் எதற்கு ஒன்றும் புரியாமல் ஓடிப்போய் ஏறினார்கள். வாகனம் பறப்பட்டது. வழியில்தான் விஷயத்தைச் சொன்னார். இந்தியாவில் இருந்து திரும்பி வரும்போது, கடலில் நடந்த சண்டையில் தளபதி அருணாவும் வேறு சிலரும் மரணம் அடைந்திருக்கிறார்கள். அருணாவின் இழப்புப் பேரிழப்பு எனச் சொல்லி, பொறுப்பாளர் கொஞ்ச நேரம் மௌனமாக இருந்தார். அருணாவின் மரணத்துக்கு அவசரமாக எங்களைக் கொண்டுபோய் என்ன செய்யப்போகிறார். வாழைத் தோரணம் கட்ட விடப்போறாரோ? எதுவும் தெரியாமல் இவர்கள் ஆளையாள் பார்த்துகொண்டார்கள்.*

*“முழுசாதையுங்கோடாப்பா.. இப்ப வேற பிரச்னை.. உவங்கள் செம்மறியளுக்கு எங்களோட கனநாளா ஒரு சேட்டை. நாங்களும் பார்த்து பார்த்து வந்தம். இனி பொறுக்க ஏலாது” என்றுவிட்டு, கைகளினால் துடையில் தட்டிக்கொண்டார். அவர் டென்ஷனாக இருக்கிறார் என இவன் நினைத்தான். பின்னால் இருந்த பொறுப்பாளரின் வோக்கிக்காரன் “உவங்கள் ரெலோகாரர் சேட்டை விடுறாங்கள்” என்றான்.*

*அவன்தான் மிச்ச விஷயத்தைச் சொன்னான். கல்வியங்காட்டில் மக்கள் தோரணங்கள் கட்டி அருணாவின் உருவப்படங்களை வைத்து அஞ்சலி செலுத்திக்கொண்டிருக்கிறார்கள். திடீரென அங்கு வந்த ரெலோக்காரர் தோரணங்களை அறுத்தெறிந்து உருவப்படங்களையும் கிழித்தெறிந்து பொது மக்களையும் தாக்கியிருக்கிறார்கள். விஷயம் பொறுப்பாளருக்கு அறிவிக்கப்பட அவர் உடனடியாக ஸ்பொட்டுக்குப் போகுமாறு முரளிக்கும் பசீர்க்காக்காவுக்கும்*

அறிவித்திருக்கிறார். விஷயத்தை அறிவதற்கு ஸ்பாட்டுக்குப் போன முரளிக்கும் பசீர்க்காக்காவுக்கும் எதிர்பாராத சம்பவம் ஒன்று நடந்தது. சனங்களிடம் பிரச்னையை விசாரித்துகொண்டிருந்த இருவரையும் ரெலோக்காரர் சுற்றிவளைத்த பிடித்தனர். "எங்கட ஏரியாவுக்குள் வந்து தோரணம் கட்டுறீங்களா?" எனக் கேட்டுக் கேட்டு நல்ல அடியும் போட்டனர். ரெலோ தவைர் சிறிசபாரத்தினத்தின் ஊர் கல்வியங்காடு. சனங்களுக்கு என்ன செய்வது எனத் தெரியாமல் போய்விட்டது. தமது வாகனம் ஒன்றில் இருவரையும் தூக்கிப் போட்டுக்கொண்டு போய், சிறிசபாரத்தினம் இருந்த முகாமில் கட்டிவைத்துவிட்டனர். விஷயம் பொறுப்பாளருக்குத் தெரிந்ததும், நெருப்பாக மாறிவிட்டார். இரண்டு பேரையும் எடுக்க ஒன்றில் சமரசப் பேச்சுக்கு வர வேண்டும் அல்லது சண்டைக்கு வர வேண்டும். இரண்டில் எதற்கு வந்தாலும் வருபவர்களைப் போட்டுத்தள்ளும் முடிவுடன் ரெலோக்காரர் நிற்பதாகப் பொறுப்பாளருக்குத் தகவல் வந்தது. ஊர் சனமும் அதைத்தான் சொன்னார்கள்.

ரெலோக்காரர் நல்ல ஆயுதங்களுடன் யாரையோ எதிர்பார்த்திருக்கிறார்கள். அனேகமாகக் கோட்டை ஆமியா இருக்கலாம் என ஒருவன் சொன்னான் எனச் சொல்லி வோக்கிக்காரன் சிரித்தான். வாகனம் மெயினுக்குப் போனது. பல இடங்களில் இருந்தும் போராளிகள் வரவழைக்கப்பட்டிருந்தனர். மெயினில் போராளிகள் நிறைந்திருந்தனர். இவர்களை இறக்கிவிட்டு, அலுவலகத்துக்குள் போன பொறுப்பாளர் நீண்டநேரமாக வெளியில் வரவில்லை. அலுவலகத்தில் இருந்து வெளியில் வந்த ஒருவன் "பொறுப்பாளர் அண்ணையோட கதைச்சுக் கொண்டிருக்கிறார். அம்மன் கோயில்ல கை வைச்சது தலைக்குப் பிடிக்கேல்லை. பொறுப்பாளருக்கு நல்ல பேச்சு விழுது" என்றான்.

சிறிது நேரத்தின் பின்னர் சுவாரஸ்யம் இல்லாதவராகப் பொறுப்பாளர் வெளியில் வந்து, எல்லோரையும் அமைதியாக ஒன்றுகூடுமாறு சொன்னார். கூட்டம் உடனடியாக ஒன்றுகூடியது. ஒருமுறை கூட்டத்தைச் சுற்றிவரப் பார்த்துவிட்டு "வணக்கம் பெடியள். எங்கட ரெண்டு பேரை ரெலோக்காரர் பிடிச்சு வைச்சிருக்கிறார்கள்.

எங்கட பொடியள நாங்கள் சும்மா விட்டிட்டு இருக்கேலாதுதானே. எனக்கென்றால் ஓர் அடிபோட்டு எடுக்கிறதுதான் சரி யெண்டமாதிரிப்பட்டது. ஆனால், தலை வேண்டாம் என்றார். அவர்தான் இப்ப கதைச்சவர். என்ன விஷயமெண்டாலும் பேசித் தீர்க்கச் சொல்லுறார். பேசிறதுக்கு அவரே ஓராளை அனுப்பியும் விடுறார். இன்டைக்கு லிங்கம் இந்தியாவிலிருந்து வெளிக்கிடுது. லிங்கத்துக்கும் சபாரத்தினத்துக்கும் பழக்கம் இருக்கிறதால விஷயம் முடிஞ்சிடும் எனத் தலை அபிப்பிராயப்படுறார். நீங்கள் எல்லாரும் முகாம்களுக்குப் போங்கோ. ஆனால், எந்த நேரமும் அலேட்டா இருங்கோ" என்றார்.

இவர்கள் முகாமுக்குத் திரும்பி வந்திறங்க இரவு 10:30. கொத்துரொட்டி கிடந்ததுதான். ஆனால், நன்றாக ஆறிப்போய்க் கிடந்தது.

மறுநாள், மாலையில் மீண்டும் பரபரப்பு. பேசப்போன லிங்கத்தை ரெலோகாரர் சுட்டுக் கொன்றுவிட்டார்கள் என்ற செய்தி வந்தது. போராளிகள் எல்லோரும் கொதித்துப்போனார்கள். ரெலோவுக்கு நல்ல அடி கொடுக்க வேண்டும் என இவனும் சொன்னான். சற்றைக்கெல்லாம் வாகனம் வந்திருந்தது. நேற்று வந்தவர்களை ஏற்றி வருமாறு பொறுப்பாளர் சொல்லியிருந்தார். பரபரப்பாக இவர்களும் ஏறிக்கொள்ள வாகனம் மெயினுக்குப் பறந்தது. நேற்றுப்போலவே இன்றும் நிறையப் போராளிகள் நின்றனர். பொறுப்பாளர் இடுப்பில் தனது மக்னம் லுக்றாவை கட்டியபடி தாக்குதல் திட்டத்தைச் சொன்னார். மறுநாள் காலைச் சூரியன் ரெலோ தலையில் நெருப்பாக விடிந்தது. யாழ்ப்பாணத்தில் பரவலாக எல்லா இடங்களிலும் ரெலோவுக்கு அடி தொடங்கி அப்படியே வன்னி மன்னார் கிழக்கு எனப் பரவியது. இவர்களின் அணி, கல்வியங்காட்டுக்குள் புகுந்தது. திடீர் தாக்குதலை எதிர்பார்க்காத ரெலோக்காரர் தப்பி ஓடினார்கள். அறை ஒன்றுக்குள் அடைத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் முரளியும் பசீர்க்காக்காவும் மீட்கப்பட்டனர்.

இவனின் வெடிமருந்து மூளைக்கும் வேலை வந்தது. ஓடி.... ஓடி... கண்ணிவெடிகள் வைத்தான். கல்வியங்காடு ராச பாதை வீதியில் ரெலோ போக்குவரத்து அதிகம் என்பதால்

*அங்கு ஒரு கண்ணிவெடி புதைத்தான். சற்றைக்கெல்லாம் சீறிக்கொண்டு வந்த ரெலோவின் வாகனம் ஒன்று தூக்கி எறியப்படுகிறது. சிறிது நேரத்தில் தெல்லிப்பளைச் சந்தியில் மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு ரெலோக்காரரை மதி ரோட்டில் வைத்து உயிரோடு டயர் போட்டுக் கொளுத்தியதாக வோக்கியில் அறிவித்தார்கள். அதே நேரம், அவன் யாழ் பிரதான வீதி பழைய பூங்காவுக்கு அருகில் அரியாலை நோக்கி செல்லும் வீதியிலும் ஒரு கண்ணிவெடி வைத்தான். அதிலும் ஆட்களுடன் வந்த ரெலோ வேன் ஒன்று அகப்பட்டு, அது தூக்கி எறியப்பட்டது. அதில் வந்தவர்கள் கொல்லப்பட்டிருந்ததோடு அதே சமயத்தில் சைக்கிளில் வந்துகொண்டிருந்த ஒருவரும் தூக்கி எறியப்பட, அவரின் சைக்கிள் அங்கு இருந்த மலைவேம்பு மரத்தின் கிளையில் தொங்கிக்கொண்டிருந்தது. கொல்லப்பட்டவர்களின் உடல்களை எரிப்பதற்காகச் செம்மணி சுடலைக்கு அனுப்பிவிட்டு நின்றபோது வோக்கியில் பொறுப்பாளரின் அழைப்பு வந்தது.*

*வோக்கியில் அவனை அழைத்த பொறுப்பாளர், “டேய், உனக்கு வளலாய் இடைக்காட்டுப் பக்கம் வடிவா தெரியும்தானே?!” என்றார்.*

*“தெரியும்” என்றான்.*

*“அங்க ஒரு ரெலோ கேம்ப் இருக்காம். அதுக்குப் பொறுப்பாளர் ஆரோ ஜெனாவாம். அமுதன் ஆட்களோடு போனவன், அடிக்க ஏலாமல் தடுமாறிக்கொண்டிருக்கிறான். உடனே அங்க போ. என்ன செய்வியோ ஏது செய்வியோ எனக்கு இன்னும் ஒரு மணித்தியாலத்துக்குள்ளை ‘அந்தக் கேம்பை அடிச்சாச்சு’ எண்டு செய்தி, வோக்கிலை வரவேணும்” இதுதான் பொறுப்பாளரின் கட்டளை.*

*இவனுக்கும் ஜெனாவை தெரியும். ஆள் சரியான மொக்கதான், “அவனின்ரை தம்பி எங்கடை இயக்கத்திலைதான் அல்பேட் வீட்டிலை இருக்கிறான். பேர் ஜீவன்” அப்போதுதான் அவனது தலையில் ஒரு பொறித் தட்டியது.*

*“சரி எனக்கு உடனே சினைப்பர் மயூரனும் ஜீவனும் தேவை. அவையளை நான் என்னோடை கூட்டிக்கொண்டு*

போறன்” எனப் பொறுப்பாளரிடம் கூறிவிட்டு, மயூரனைத் தொடர்புகொண்டு சினைப்பருடன் அச்சுவேலிச் சந்திக்கு வரச்சொல்லிவிட்டு கட்டைப்பிராய் சந்தியில் நின்றிருந்த அல்பேட் முகாம் குழுவில் நின்றிருந்த ஜீவனைப் போய்த் தனது மோட்டார் சைக்கிளில் ஏத்திக்கொண்டு அச்சுவேலிக்கு வந்தவன், மயூரனையும் அழைத்துக்கொண்டு வளலாய் பகுதிக்குப் போய்ச் சேர்ந்திருந்தான். அமுதனின் தலைமையில் ஓர் அணி ரெலோ முகாம் மீது தாக்குதலை நடத்த முயற்சித்தபோது இருவர் காயமடைந்து அவர்கள் ஏற்கெனவே அச்சுவேலி சந்திரபாலா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டிருந்தனர். அமுதனிடம் நிலைமைகளைக் கேட்டறிந்தான். முகாமுக்குள் 40 பேருக்கு மேல் இருந்தார்கள். அமுதனின் அணியில் 16 பேரே இருந்திருந்தார்கள். அதிலும் இருவர் காயமடைந்துவிட்டார்கள். முகாமின் இரு பகுதிகள் தோட்டத்தையும் மற்றைய பக்கங்கள் வீடுகள் இருந்தாலும் ரெலோக்காரர் இருந்த வீடு மற்றைய வீடுகளுடன் நெருக்கமாக இல்லாமல் தனியாகவே இருந்தது. அதன் முகப்பில் வீதியோடு மண்மூடைகள் அடுக்கியிருந்த பாதுகாப்பு அரணில் ஜெனா எல்.எம்.ஜி–யை வைத்துப் புலிகள் மீது தாக்குதலை நடத்திக்கொண்டிருந்தான்.

முகாம் பகுதியை நோட்டம்விட்டவன், வீதியின் வளைவு ஒன்றில் இருந்த வீட்டில் இருந்து பார்க்கும்போது முன் காவல் அரண் தெளிவாகத் தெரிந்தது. அந்த வீட்டின் வேலியின் பூவரசு மரம் ஒன்றோடு மயூரனை நிலையெடுக்க வைத்துவிட்டு, அமுதனின் அணியில் இருந்தவர்களை மற்றைய வீடுகளுக்குள்ளால் முன்னேறி ரெலோ முகாமுக்கு அருகில் நிலையெடுக்க வைத்தான். வீடுகளில் இருந்தவர்களையும் வீட்டைவிட்டு வெளியே வரவேண்டாம் என எச்சரிக்கை கொடுக்கப்பட்டது. சத்தத்தை நன்றாகக் குறைத்து வோக்கி ஒன்றை ஜீவனின் இடுப்பில் செருகினான்.

“உன்ரை அண்ணையோடை கதைச்சு சரணடைய வைக்கத்தான் இந்த ஏற்பாடு. நீ கையை உயர்த்தி காட்டி கதைக்கப்போறம் எண்டு கத்தினபடிபோய். உன்ரை அண்ணனோடை கதைச்சு சரணடையச் சொல்லு. இல்லாட்டி வீணாகச் சாகவேணும். ஆனால், இடையிலை ஏதும் சிக்கல் எண்டால் நான் என்ரை வோக்கியை

விட்டுவிட்டு அமத்துவன். அதின்ரை இரைச்சல் வந்ததும் நீ கீழைவிழுந்து படுத்திடவேணும். ஆனா, கடைசிவரை திரும்பி பாக்கக் கூடாது" என்றபடி தனது வோக்கியையும் ஒரே அலைவரிசைக்குகொண்டு வந்து, ஜீவனைப் போ என்று அனுப்பிவிட்டான். இரண்டு கைகளையும் தலைக்கு மேல் உயர்த்தியபடியே "அண்ணை, உன்னோடை கதைக்கவேணும். சுடாதை" என்று கத்தியபடி நடக்கத் தொடங்கினான்.

இதைப் பார்த்த ஜெனாவுக்கு அதிர்ச்சி. காப்பரணில் இருந்தபடி சில ரவைகளை வானத்தை நோக்கிச் சுட்டபடி "கிட்ட வராதை" எனக் கத்தினான். ஆனால், ஜீவன் நிற்கவில்லை. "அண்ணைச் சுடாதை கதைக்கவேணும்" என்றபடி முன்னேறிக்கொண்ருந்தான்.

காப்பரணை விட்டுக் கொஞ்சம் தலையை நிமித்திய ஜெனா, "டேய்... வராதை" எனப் பெரிதாகக் கத்தினான்.

இப்போது மயூரனின் சினைப்பர் குறிப் பார்வைக்குள் ஜெனாவின் தலை தெரியத் தொடங்கியிருந்தது.

"அண்ணை... வெளியிலை வா கதைக்க வேணும்" என்றபடி ஜீவன் முன்னேறிக்கொண்டிருந்தான்.

"டேய்... கதைக்க ஒண்டுமில்லை. வராதை" என்றபடி வெளியில் வந்த ஜெனாவின் தலை முழுவதுமாகச் சினைப்பர் வட்டத்துக்குள் வந்தது.

மயூரன் கை விரலை உயர்த்துகிறான். அந்தக் கணத்துக்காகத்தான் இவன் காத்திருந்தான். தனது வோக்கியில்ஜீவனுக்குச்சைகைகொடுத்தான்.ஜீவன்நிலத்தில் விழுந்து படுக்கும் அதே கணத்தில் மயூரனின் சினைப்பர் விசை இழுபடுகிறது. குறி தப்பவில்லை. ஜெனா தலை சிதறி நிலத்தில் விழுந்த அதே நிமிடம், "அடியுங்கோடா" எனக் கத்துகிறான். தயாராக நிலையெடுத்திருந்தவர், சுட்டபடி முன்னேறுகிறார்கள். ஆறு பேர் கொல்லப்பட, மற்றவர்கள் தோட்டங்களால் தப்பியோடினார்கள். பின்னர் நடந்த தேடுதலில் அவர்களும் கைதுசெய்யப்பட்டனர். நேரத்தைப் பார்த்தான். ஒரு மணித்தியாலம் ஆகியிருக்கவில்லை. வோக்கியின் அலைவரிசையை மாற்றிப் பொறுப்பாளரை அழைத்து 'ஓவர்' என்று சொல்லிக்கொண்டிருக்கும்போது

இடைக்காட்டுச் சந்தியில் ஜீவன் ஏ.கே ரக துப்பாக்கியைக் கையில் வைத்திருந்தபடி "எங்களுக்குக் கொள்கைதான் முக்கியம். நாட்டுக்காக எதையும் செய்வம். அண்ணன்–தம்பி எண்டெல்லாம் பார்க்க மாட்டோம். உறவைவிட உரிமைதான் முக்கியம்" என்று சொல்லிக்கொண்டிருந்தான்.

❍ ❍

# 13

**ஒ**ளிந்துள்ள ஒரு ரெலோக்காரனையும் முக்கியமாக ரெலோவின் பெருந்தலைகளை விடக் கூடாது எனப் பொறுப்பாளர் சொன்னார். ரெலோ தலைவர் சிறிசபாரத்தினத்தைப் பொறுப்பாளர் இலக்கு வைத்தார். “லிங்கம் தெரிந்தவன் என்றும் பார்க்காமல் சுட ஓடர் போட்டவனை விடக் கூடாது” என்று பொறுப்பாளர் சொல்லிக்கொண்டிருந்தார். ரெலோ வேட்டைக்குப் போன ஆட்கள் எல்லோரும் மீளவும் அழைக்கப்பட்டு, புதிதாகத் திரட்டப்பட்டவர்களும் இணைக்கப்பட்டார்கள். பெரும் அணியாகக் கல்வியங்காட்டை மையமாக வைத்துப் பெரிய சுற்றிவளைப்பு செய்தனர். கொக்குவில், கோண்டாவில், தின்னவேலி, கோப்பாய் பகுதிகள் முழுமையாகச் சுற்றிவளைக்கப்பட்டன. சபாரத்தினம், பொபி, ஜீவா ஆகியோரை மடக்கிப் பிடிப்பதுதான் இலக்கு. இவர்களின் படங்கள் எல்லா இடங்களிலும் நின்ற அணிகளுக்கும் அனுப்பப்பட்டது. தெருக்களிலும் ஒட்டப்பட்டது.

ஒலிபெருக்கியில் தலைமறைவானவர்களைச் சரணடையுமாறு அறிவிக்கப்பட்டது. ஒலிபெருக்கி பொருத்திய வாகனம் கிராமம் கிராமமாகப் புகுந்து சரணடையும் அறிவித்தலை வெளியிட்டுக்கொண்டிருந்தது. அறிவிப்பவனாக இருந்த பொடியன் நாலு அந்தியேட்டி செத்த வீட்டுக்கு அறிவித்தவனாக இருந்திருக்க வேண்டும். நல்ல ஏற்ற–இறக்கங்களுடன் பேசினான். இரண்டு நாளாகியும் சபாரத்தினம் அகப்படாததால், வீடு வீடாகத்

தேடுதல் நடக்கத் தொடங்கியது. இவனது அணிக்குக் கோண்டாவில் பகுதி கிடைத்தது. வீடுகளுக்குள் போகும்போது வலு டீசன்டாக போக வேணும் என இவனது அணி முடிவெடுத்தது. வாசலில் நின்றே அனுமதி கேட்டு, உள்ளே சென்று வந்தார்கள்.

கோண்டாவில் பெட்டையள் நல்ல வடிவடா. எல்லா வீட்டிலும் நல்ல அழகான பெட்டையள் இருப்பதாகப் பரணி சொன்னான். அவனுக்குக் கண் பிரச்னை எனச் சிவா நக்கலடித்தான். இப்படிப் பகிடியும் விளையாட்டுமாகத் தேடுதல் கழிந்துகொண்டிருந்தது. சில வீடுகளில் வயதானவர்கள்தான் இருந்தார்கள் என ஒருவன் அலுத்துக்கொண்டான். உள்ளே போய்த் தேடுதல் செய்தும் பலன் இல்லை என்று அலுத்தபடி ஒருவன் வாசலில் நின்றுகொண்டான். இவனும், பரணியும், சிவாவும் உள்ளே போனார்கள். இவன்தான் வாசலில் நின்று கூப்பிட்டான். உள்ளே அமைதியாக இருந்தது. கதவு திறந்திருந்ததால், ஆட்கள் நிற்கிறார்கள் என்று தெரிந்தது. இவன் கதவின் அருகில் போய் உள்ளே எட்டிப்பார்த்துக் கூப்பிட்டான். அது சற்று பெரிய வீடு. உள்ளே இருந்த நடுத்தர வயதுக்காரர் ஒருவர் ஓடி வந்தார். அவர் மிகுந்த பதற்றமாக இருந்தார். பெயரைக் கேட்டான். “இளையப்பா” என்றார். வீட்டைச் சோதனையிட வேண்டும் என்றான். தாராளமாக என்றவர், ரெலோக்காரரை கண்டபடி திட்டினார். பிறகு, இப்பிடியான நடவடிக்கைகளினால் சனங்கள் எவ்வளவு சிரமப்படுது எனப் புறுபுறுத்தவர், தேடுதல்காரரை விரைவில் அங்கிருந்து அனுப்புவதிலேயே குறியாக இருந்தார். அங்கு சந்தேகமான எந்த விஷயமும் இல்லை. இவனும் விரைவாக வீட்டில் இருந்து வெளியில் வந்துவிட்டான்.

வீதிக்கு வந்தபோதுதான், பரணி சொன்னான், “என்னவோ இடிக்கிற மாதிரி இருக்குது. இந்தாளின்ர நடத்தையில் எனக்கு டவுட் இருக்கு. ஒருக்கால் வடிவா திரும்பச் செக் பண்ணத்தான் வேணும்” என்றான்.

எல்லோரும் வீதியில் நின்றுவிட்டார்கள். இளையப்பாவும் அடிக்கு ஒருமுறை வெளியில் வந்து பார்த்துப் பார்த்துப் போவதை கவனித்தான். பரணி திரும்பவும் வீட்டுக்குள் போனான். வீட்டு வாசலில் உட்கார்ந்து

பார்த்துகொண்டிருந்த இளையப்பா, பரணியை உள்ளே விடவில்லை. “திரும்பத் திரும்ப எதற்கு வருகிறீர்கள்?” எனச் சத்தம்போட்டார். உள்ளே போக முயன்ற பரணிக்கு குறுக்கே வந்து நின்றுவிட்டார். பரணி, திரும்பி ரோட்டுக்கு ஓடிவந்தான்.

இளையப்பா மறித்த சமயத்தில் தான் உள்ளே எட்டிப்பார்த்ததாகவும், யாரோ ஒருவன் வேட்டியுடன் மறைந்தாகவும் சொன்னான். எல்லோரும் சிரித்தார்கள். இப்போதுதான் தேடுதலை முடித்துவிட்டு வந்திருக்கிறோம். யார் உள்ளே இருப்பார்கள் என ஒருவன் கேட்டான். ஆனால், பரணிவிடவில்லை. வேட்டியுடன் யாரையோ கண்டதாக அடித்துச் சொன்னான். உடனடியாக விஷயம் மெயினுக்கு அறிவிக்கப்பட்டது. அந்தப் பகுதியை சற்று அவதானமாகச் சோதனையிடச் சொல்லி பொறுப்பாளர் அறிவித்தார்.

அந்தப் பகுதியில் நின்ற மேலும் கொஞ்சப் போராளிகள் வரவழைக்கப்பட்டுச் சோதனை நடந்தது. வீட்டு வளவை சல்லடையிட்டதில், சின்னச் சந்தேகம் வந்தது. வீட்டின் வளவில் நிறையக் காலடித்தடங்கள் கிடந்தன. அவையெல்லாம் வீட்டின் பின்னால் விரிந்திருந்த தோட்டத்துக்குச் சென்றன. தோட்டத்தில் வேலை செய்பவர்கள் வந்து செல்வார்கள் என இளையப்பா சொன்னார். வீட்டின் பின்னால் பெரிய தோட்டம் விரிந்திருந்தது. வீட்டுக்கு அடுத்ததாக மரவள்ளியும், பெரும்பாலான இடங்களில் புகையிலையும் நடப்பட்டிருந்தன. தோட்டத்துக்குள்ளும் தேடுதல் அணிகள் இறங்கின. புகையிலைத் தோட்டத்துக்குள் நுழைந்த ஒருவன், திடீரென ‘ஓடுறாங்களடா..!’ எனக் கத்தியபடி நான்கைந்து தடவை சுட்டான். எல்லோரும் அங்கு ஓடிப்போனார்கள். ஆனால், யாரும் அகப்படவில்லை. இதற்குள்ளாகத்தான் ஓடினான் எனச் சுட்டவன் கத்தினான். இங்கு ஏதோ மர்மம் உள்ளது என்று புரிந்தது. உடனடியாக விஷயம் பொறுப்பாளருக்கு அறிவிக்கப்பட்டது. பரந்துவிரிந்து இருந்த தோட்டப் பகுதி சுற்றிவளைக்கப்பட்டுச் சல்லடையிடப்பட்டது. சற்றைக்கெல்லாம் பொறுப்பாளரும் வந்து இறங்கிவிட்டார்.

புகையிலை தோட்டத்தில் தேடுதல் நடத்துவது

சுலபமாக இல்லை. இடுப்பு அளவுக்கு வளர்ந்திருந்த புகையிலைகளை வெட்டும்படி பொறுப்பாளர் உத்தரவு பிறப்பித்தார். நான்கைந்து பொடியன்கள் கத்திகளுடன் இறங்கி, புகையிலைகளை மளமளவென வெட்டியபடி முன்னேறினார்கள். பாதி அளவுக்குப் புகையிலை வெட்டப்பட்டிருக்கலாம். தோட்டத்துக்குள் யாரோ பதுங்கியிருக்கிறார்கள் என்பது தெரிந்தது. ஆள்–அரவங்கள் கேட்டன. எல்லோரும் உஷாரானார்கள். பொறுப்பாளர் உற்சாகமாக அருகே ஓடிவந்தார். “ஒளிஞ்சு இருக்கிறவங்க எல்லாம் வெளியில் வா... நீங்களா வெளியில் வந்தால் ஒரு பிரச்னையும் இல்லை. உடனே வெளியில் வா” – ஒருவன் கத்தினான்.

எல்லோரும் துப்பாக்கிகளை நீட்டிப் பிடித்தபடி நின்றனர். கனத்த மௌனம் நிலவியது. அடுத்து என்ன நடக்கும் என்பது பெரும் மர்மமாக இருந்தது. சில விநாடிகள்தான் என்றபோதும் பெரும் பதற்றத்தைக் கூட்டியது. பிறகு, தோட்டத்தின் மையத்தில் சிறிய சலசலப்பு. புகையிலைகள் அசைந்தன. யாரோ எழும்புகிறார்கள் என்பது புரிந்தது. எல்லோருடைய துப்பாக்கிகளும் அங்குக் குறிவைத்தன. யாரும் எழும்பவில்லை. புகையிலைகளின் அசைவு நகர்ந்துகொண்டிருந்தது. ஆட்கள் தப்பிச் செல்கிறார்கள் என்பதைப் புரிந்ததும் ஒருவன் கைக்குண்டு ஒன்றை கழற்றி விசினான். எல்லோரும் படுத்தார்கள். குண்டு வெடித்துச் சிதறல்கள் தலைக்கு மேலாக விசிலடித்தபடி சென்றதும் எழுந்து பார்க்க, நான்கு பேர் தோட்டத்துக்குள்ளே எழுந்து ஓடிக்கொண்டிருந்தார்கள். முன்னால் நின்ற பரணி, தனது துப்பாக்கியை எடுத்து அவர்களை நோக்கிச் சுட்டான். வேறும் இரண்டொரு துப்பாக்கிகள் சடசடத்தன. ஒருவன் சுருண்டு வீழந்தான். மற்றவர்கள் திக்குத்திக்காகச் சிதறி ஓடித் தோட்டத்துக்குள் மறைந்துவிட்டனர். “இனியும் பொயிலை வெட்டிக்கொண்டு இருக்கலாகாது” என ஒருவன் கத்தினான். தோட்டத்துக்குள் இறங்கி சல்லடைபோடும்படி பொறுப்பாளர் உத்தரவிட்டார்.

எல்லோரும் உற்சாகமாகத் தோட்டத்துக்குள் இறங்கினார்கள். இவனும் நான்கைந்து பேரும் ஒன்றாக இறங்கி ஒரு திசையில் சென்றார்கள். தோட்டத்தின் ஒரு பக்கத்தில் புகையிலைகள் வெட்டி

சீராக அடுக்கப்பட்டிருந்தன. புகையிலை கட்டுடன் ஒட்டியபடி ஓர் இளைஞன் குந்தியிருந்தான். அவன் மிக மெலிந்தவனாகவும் நெடியவனாகவும் இருந்தான். சுருள் முடிகள் சற்றே ஸ்டைலாக வளர்க்கப்பட்டிருந்தது. அவன் தோற்றத்துக்குப் பொருத்தம் இல்லாததாக, பழைய வேட்டி ஒன்று கட்டியிருந்தான். அவன் குந்தியிருந்த தோரணை, பார்ப்பதற்கு ஒரு மாதிரியாக இருந்தது. அந்தப் பகுதிக்குத் துப்பாக்கிகளுடன் வந்தவர்களை அவன் நிமிர்ந்தே பார்க்கவில்லை. முழங்கால்களுக்குள் தலையைப் புதைத்தபடி குந்தியிருந்தான்.

முன்னால் சென்ற சுரேஷ் அவனுக்கு அருகே சென்று, “டேய்.. நீ யார் இங்கு என்ன செய்கிறாய்?” என்றான்.

தலையைக் குனிந்தபடி உட்கார்ந்திருந்தவன், மெதுவாகத் தலையை நிமிர்த்தினான். அவனது கண்கள் பிரகாசமாக இருந்தன. அவற்றில் என்னவென்று சொல்ல முடியாத மர்மம் புதைந்திருந்ததாக இவனுக்குப்பட்டது. எதற்கும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் எனத் தனக்குள்ளாகச் சொல்லிக்கொண்டபோது, “நான்தான் சிறி” என்றபடி சட்டெனத் துள்ளி எழும்பியவன். எழுந்த வேகத்தில் மின்னலாகச் சுரேஷ் மீது பாய்ந்தான். பாய்ந்த வேகத்தில் சுரேஷின் தோளில் கொழுவியிருந்த எம்–16 துப்பாக்கியைப் பிடித்து இழுத்தான். துப்பாக்கி சுரேஷின் தோளில் கொழுவியிருந்ததால் சிறியின் கைகளுடன் செல்லவில்லை. சுரேஷும் துப்பாக்கியை இறுகப்பிடித்துச் சிறியின் கைகளுக்குத் துப்பாக்கி சென்றுவிடாமல் இருக்கப் போராடிக்கொண்டிருந்தான்.

தாங்கள் தேடிய ரெலோ தலைவர் தங்களின் முன்னால் இந்தக் கோலத்துடன் நிற்பார் என யாருமே நினைத்திருக்கவில்லை. எல்லோரும் ஆரம்பக்கணங்களில் திகைத்து நின்றுவிட்டார்கள். அதற்குள் சிறியே பாய்ந்து இப்படியான அதிரடி வேலைகளில் இறங்குவார் என்றும் நினைத்திருக்கவில்லை. சில கணங்களின் பின்னர் டொச்சன்தான் முதலில் தன்னைச் சுதாரித்துக்கொண்டு தனது ஏ.கே–யால் சிறியின் கால்களில் சுட்டான். மிக அருகில் சிறி நின்றதால், டொச்சனின் சூடுகள் துல்லியமாக இருந்தன. சிறி, வேர் அறுபட்ட மரத்தைப்போல

தொப்பெனக் கீழே விழுந்தவர், பற்களை நறுவியபடி உடலைச் சுருட்டி கைகளால் கால்களைப் பிடித்தபடி ரத்தம் வழிந்தோடிக்கொண்டு இருந்ததை வெறித்துப் பார்த்தபடி இருந்தார். சிறி கிடைத்த உற்சாகத்தில் தப்பியோடிய மற்றவர்களைத் தேடும் பணியை நிறுத்திவிட்டு, எல்லோரும் அந்த இடத்தில் குவிந்தனர். சத்தம் கேட்டு பொறுப்பாளரும் அந்த இடத்துக்கு ஓடிவந்துவிட்டார்.

சிறிசபாரத்தினம் கைதுசெய்யப்படலாம் என்றுதான் அவன் நினைத்தான். இந்த நடவடிக்கை ஆரம்பித்தபோது அனைவரும் தமக்குள் கதைத்துக்கொண்டபோது, அப்படி நடக்கத்தான் வாய்ப்பு உள்ளதாகவே நினைத்தனர். அதனால்தான் டொச்சன், சிறியின் கால்களில் சுட்டான். ஓடிவந்த பொறுப்பாளரையே எல்லோரும் பார்த்தனர். அருகில் வரும்போதே தனது மக்னம் ரிவால்வரை உருவிக்கொண்டு வந்தவர், அருகே வந்ததும், ரிவால்வரை நீட்டியபடி சிறியை நன்றாக உற்றுப்பார்த்துக்கெண்டிருக்க "வேண்டாம் கிட்டு சுடாதை.. என்னை விட்டிடு. நான் தம்பியோடை கதைக்கவேணும். தம்பி என்னைச் சுடச் சொல்லியிருக்க மாட்டான்" என்று சிறிசபாரத்தினம் கத்தினார். பொறுப்பாளரின் முகம் இறுகிக்கொண்டு சென்றது. திடீரென "நீ துரோகி" எனக் கத்தியபடி ரிவால்வரை இயக்கத் தொடங்கினார். ரிவால்வரில் இருந்த குண்டுகள் அனைத்தும் சிறிசபாரத்தினத்தின் உடலைத் துளைத்தன. உட்கார்ந்த நிலையிலேயே எந்த அசைவுமின்றி சிறி விழுந்தார். "சுடுங்கடா" எனத் தன்னைச் சுற்றி நின்றவர்களைப் பார்த்து பொறுப்பாளர் கத்தினார். மற்றவர்களின் துப்பாக்கிகளும் சிறிசபாரத்தினத்தின் உடலைச் சல்லடைபோட்டன..

அப்போது திடீரெனப் பின்பக்கத்தில் அழுகுரல்கள் கேட்டன. எல்லோரும் திடுக்கிட்டு திரும்பிப்பார்த்தனர். "டேய்... அவரை விடுங்கோடா" எனக் கத்தியபடி இளையப்பாவின் மகள் ஓடிவந்தார். அவரின் பின்னால் அவரது கணவன் தயங்கித் தயங்கி வந்தார். சிறியின் சடலத்துக்கு அருகில் போக வேண்டாம் எனப் பரணி மறித்தான். இளையப்பாவின் மகள் கேட்கவில்லை. 'கிட்டப்போவேன்' என அடம்பிடித்தார். சற்றுநேரம் யோசித்த பொறுப்பாளர், இருவரையும் விசாரணை

செய்யவேண்டியிருப்பதால், வீட்டுக்கு அழைத்து வரச்சொல்லிவிட்டுப் போனார். இருவரையும் சிறியின் உடலுக்கு அருகே போகவிடாமல் தடுத்து, அவர்களது வீட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இருவரையும் பொறுப்பாளர் விசாரித்தார். சிறியை எப்படித் தெரியும், எத்தனை நாளாகத் தெரியும், எத்தனை நாளாகப் பதுங்கியிருந்தார்கள் என்ற விசாரணைகளை முடித்தபின்னர், "சிறி சபாரத்தினத்துக்கு உணவு கொடுத்து பாதுகாத்ததற்காகத் தண்டனை அனுபவித்தே தீரவேண்டும்" என்றார். அவர்கள் பயந்துபோயிருந்தனர். அன்று முழுவதும் வீட்டு முற்றத்தில் இருவரையும் முழங்காலில் இருக்கும்படி பொறுப்பாளர் கட்டளையிட்டார். பொறுப்பாளரின் உத்தரவு வந்த கணத்திலேயே அவள் தலையைக் குனிந்தபடி முழங்காலில் இருந்தாள். அவளை ஓரக்கண்ணால் பார்த்த கணவன் அவள் இருந்ததும் தானும் இருந்தான். அவர்களைக் கண்காணிக்கும்படி இவர்களது அணிக்கு உத்தரவிட்டுவிட்டு பொறுப்பாளர் தனது மோட்டார் சைக்கிளில் ஏறிப் போய்விட்டார்.

**பி.கு.:**

- ✪ ***டொச்சன் வடக்கு புன்னாலைக் கட்டுவன் கிராமத்தை சேர்ந்தவன். 1992–ம் ஆண்டு பலாலி காவல் அரண்கள் மீதான தாக்குதலை வழிநடத்தியபோது தாக்குதலில் மேஜர் டொச்சனாக இறந்துபோனான்.***

- ✪ ***சினைப்பர் மயூரன். மல்லாகத்தைச் சேர்ந்தவன். தெரியும் தலைகளைச் சினைப்பர் தாக்குதலால் சுட்டுத் தள்ளி யாழ் கோட்டை ராணுவத்துக்குப் பெரும் தலையிடியாக இருந்தவன். 86–ம் ஆண்டு, கட்டுவன் பகுதியில் ராணுவத்தின் சினைப்பர் தாக்குதலில் இறந்துபோனது முரண் நகையானது.***

❍ ❍

# 14

அதன் பின்னர் ரெலோவை இயக்கம் மிக நுணுக்கமாகக் கவனித்து வந்தது. நாட்டில் இருந்து தப்பியோடிய முக்கிய உறுப்பினர்கள் இந்தியாவுக்குத் தப்பிச் சென்றுவிட்டனர். அங்குப் புதிய தலைவராகச் செல்வம் நியமிக்கப்பட்டார். ரெலோவைத் தீவிரமாகக் கவனித்து வந்த சமயத்தில் விடுதலைப் புலிகளைப் பழிவாங்கும் நடவடிக்கை ஒன்றுக்காக ரெலோவுக்கு றோ ஊக்கமளித்து வந்தது என்ற முக்கியமான செய்தி கிடைத்தது. இந்தியாவில் இருந்த ரெலோகாரர் 150 பேர் வரையில் ஒன்று திரட்டப்பட்டு அவர்களுக்கு ரோவினால் விசேஷப் பயிற்சி வழங்கப்பட்டது. தலைவர் பிரபாகரன் அப்போது இந்தியாவில் இருந்ததால், கிட்டுதான் களத்தை வழிநடத்திக்கொண்டிருந்தார். கிட்டுவை முடித்துவிட்டால் எல்லாம் சரியென ரெலோ சொன்னதை றோ நம்பியது. கிட்டு மீதான தாக்குதலை நடத்துவதற்காகத் தகவல்களைச் சேகரிப்பதற்கு முதலில் ஐந்து பேர் கொண்ட குழு ஒன்றை அனுப்பியிருந்தார்கள்.

அவர்களில் மூவர் யாழ்ப்பாணத்திலும் இருவர் மன்னாரிலுமாகச் செயற்பட யாழில் உள்ளவர்கள் கிட்டு பற்றியத் தகவல்களை அக்குவேறு ஆணிவேறாகத் திரட்ட வேண்டும். எல்லாம் சரி என்றதும் இந்தியாவில் பயிற்சி பெற்றவர்கள் மன்னார் வழியாக வந்து யாழில் தாக்குதலை நடத்த வேண்டும். அப்படி மன்னார் வழியாக வருபவர்களுக்கு மன்னாரில் நின்ற இருவரும் புலிகளின்

நடமாட்டங்களைக் கவனித்து அதற்கேற்ற விதத்தில் புதிய மார்க்கங்களைக் கண்டுபிடித்து, அவர்களைக் கரை சேர்க்க வேண்டும். பின்னர் யாழ்ப்பாணம் வரை அவர்களைப் பத்திரமாகக் கொண்டுவந்து சேர்க்க வேண்டும். யாழ் வந்து சேர்ந்தவர்கள் யாழ்ப்பாணத்தில் தகவல் திரட்டியவர்களின் வழிகாட்டலில் கிட்டு இருந்த பிரதான முகாம் மீதான தாக்குதலை நடத்தினால். கிட்டு க்ளோஸ். இதுதான் அவர்களது திட்டம்.

வட்டுக்கோட்டை மாவடி முருகன் கோயிலடியைச் சேர்ந்த யேசப்பாவும் இந்தப் பிளானுடன்தான் யாழ்ப்பாணம் வந்தார். இந்தியாவுக்குப் படிப்பதற்காகச் சென்றவனை விதி ரெலோ பக்கம் இழுத்தது. அந்த அமைப்பில் சேர்ந்தவர் தமிழ்நாட்டிலேயே தங்கிவிட்டார். ஊர்ப்பக்கம் வந்ததே கிடையாது. தன்னை ரெலோக்காரன் என ஊரில் ஒருத்தருக்கும் தெரிந்திருக்காது என்று நம்பினார். ஆனால், புலிகள் அவரை மணந்து பிடித்துவிட்டார்கள். அவரை மானிப்பாய் முகாமுக்குக் கொண்டுபோய் விசாரித்தவர்கள், அவர் ரெலோ உளவாளி என்பது உறுதியானதும், மேல் விசாரணைகளுக்காக நாச்சிமார் கோயிலடிக்கு அருகில் இருந்த முகாமுக்குக் கொண்டுசென்றார்கள். அதுதான் அந்தக் காலத்தில் முக்கியமான விசாரணை முகாமாக இருந்தது.

யேசப்பா ஒரு கல்லூளிமங்கனாக இருந்தார். இடையிடையே வாயைத் திறந்து மெல்லிய குரலில் “அம்மா” என்றும், தண்ணீர் என்றும் முணுமுணுத்தாரே தவிர, வேறொன்றும் சொல்லவில்லை. விசாரித்த பொடியளும் அடித்துக் களைத்துவிட்டார்கள். சிலர் நாடியைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்துவிட்டார்கள். களைத்து உட்கார்ந்தவர்களுக்கு யேசப்பாவைப் பார்க்கப் பார்க்க ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்தது. திரும்பவும் எழுந்து வந்து அடித்தார்கள். அதில் ஒருவன், கடந்த வாரம் பார்த்த ஆங்கிலப் படத்தில் செய்யப்பட்ட சித்ரவதைகளையும் செய்து பார்த்தான். கடைசியாக, ஒரு சுத்தியலை எடுத்து யேசப்பாவின் கால் பெருவிரலில் ஓங்கி அடித்தான். பெருவிரல் சிதறி ரத்தம் பீறிட்டதே தவிர, யேசப்பா வாயே திறக்கவில்லை. திறந்தாலும் தண்ணீர்தான் கேட்டார்.

இது சரிப்பட்டு வராது என்பதைத் தெரிந்துகொண்ட விசாரணையாளர்கள், வேறொரு திட்டம் தீட்டினார்கள். யேசப்பாவின் வாயால் தகவல்களைத் திரட்டாமல், தகவல்களைத் திரட்டிவிட்டு, அவற்றை யேசப்பாவைக்கொண்டு உறுதி செய்யலாம் என்பதுதான் திட்டம். யேசப்பாவின் வீட்டுக்கு பக்கத்தில் ஒரு ரேடியோ கடை இருந்தது. கடைக்காரன் நல்ல இயக்க சப்போர்ட்டர். அவரது கடைக்குள் இரண்டு பொடியள் பதுங்கியிருந்தார்கள். கண் இமைக்காமல் யேசப்பா வீட்டை நோட்டம்விட்டபடி இருந்தனர். இரண்டு நாள் காத்திருந்த பின்னர், சந்தேகத்துக்கு இடமான ஒருவனை வீட்டு வாசலில் வைத்து அமுக்கினார்கள். யேசப்பாவை தேடி வந்துவிட்டு திரும்பிய ஆளை நாவாலி முகாமுக்குக் கொண்டு சென்று விசாரித்தார்கள். அவன் அடிதாங்க மாட்டாத சீவன். கையை ஓங்கினாலே ஒப்பாரி வைத்தான். ஒரு பச்சை மட்டை உரிவதற்குள்ளாகவே எல்லாவற்றையும் சொல்லிவிட்டான். மன்னாரில் இருந்த இரண்டு பேரையும் பற்றி அவன் விவரமாகச் சொல்லிவிட, அவர்களும் அமுக்கப்பட்டார்கள்.

ஒரு நாள் நாச்சிமார் கோயிலடி முகாமில் இரவு சென்டிக்கு நின்ற பொடியனுக்கு வயிற்றைக் கலக்கத் தொடங்கிவிட்டது. நித்திரையில் இருந்த ஒருவனை எழுப்பித் துப்பாக்கியைக் கொடுத்துவிட்டு போகிற அவசரத்தில் அவனிடம் இருந்த கைக்குண்டை யேசப்பா அடைத்து வைக்கப்பட்டிருந்த இரும்புக் கூண்டுக்கு அருகில் தனது தொப்பியுடன் வைத்துவிட்டு கழிவறைக்கு ஓடிவிட்டான். இவை அனைத்தையும் பின்பக்கம் கைகள் கட்டப்பட்ட நிலையில் படுத்திருந்தபடியே கவனித்துக்கொண்டிருந்த யேசப்பா, அப்படியே தவழ்ந்து வந்து பின்பக்கமாகத் திரும்பி கம்பிக்கு வெளியே கைகளைவிட்டு சிரமப்பட்டுக் கைக்குண்டை எடுத்து தன்னோடு சேர்த்து வெடிக்கவைத்தான்.

சத்தம் கேட்டு. கழிவறைக்குள் இருந்தவன் கழுவாமலே ஓடிவந்தபோது, யேசப்பா சின்னாபின்னமாகிக் கிடந்தார். நித்திரையில் இருந்த பலரும் திடுக்கிட்டு எழும்பியிருந்தார்கள். அவர்கள் காதுக்குள் கீ... என்ற இரைச்சல் மட்டுமே கேட்டுக்கொண்டிருந்தது.

மன்னாரில் மற்றைய ரெலோ உறுப்பினர்களைக் கைதுசெய்து அவர்களை வைத்தே இந்தியாவில் இருந்த ரெலோ உறுப்பினர்களுக்குத் தகவல்களை அனுப்பிக்கொண்டிருந்தார் ராதா. இந்தியாவில் இருந்து இரண்டு தொகுதியாக ரெலோ அமைப்பினர் ஆயுதங்களுடன் தாக்குதலுக்குத் தயாராக மன்னாருக்கு வரும் நாளும் இடமும் தேர்வு செய்யப்பட்டது. அவர்கள் வந்து சேரவேண்டிய இடத்துக்கு ராதா தனது அணியினருடன் சென்று தயாராக நிலையெடுத்துக் காத்திருந்தார். இரண்டு ரோலர்களில் வந்துகொண்டிருந்த ரெலோ அமைப்பினர் கரையை நெருங்கி டார்ச் வெளிச்சம் மூலம் சைகை கொடுத்தார்கள். தங்கள் பக்கம் வரும்படி ராதா குழுவினரும் டார்ச் லைட் மூலம் சிக்னல் கொடுத்தனர். பொறியில் இரை சிக்கியதும், ராதாவின் அணி தாக்குதலைத் தொடங்கியது. தாங்கள் பொறிக்குள் அகப்பட்டது புரிந்து, மீண்டும் ரோலர்களைக் கடலுக்குத் திருப்பித் தப்பியோட தொடங்குவதற்குள் வந்தவர்களில் 30 பேருக்கு மேல் இறந்துபோனார்கள். கடைசியில் பருத்தித் துறை முகாமை தாக்குவதற்காக வந்திறங்கிய ஆயுதங்களால் ரெலோவை அடித்து முடித்திருந்தார்கள்.

ரெலோ சண்டை முடிந்ததும் இவனது பெயர் இயக்கத்தில் பரவலாக அடிபடத் தொடங்கியிருந்தது. அதே நேரம் இவனில் அப்பையா அண்ணைக்கும் நல்ல பிடிப்பாகிவிட்டது. தன்னை மாதிரியே எந்த நேரமும் ஆமிக்கு அதிக இழப்பை ஏற்படுத்தக்கூடிய மாதிரி கண்ணிவெடிகளைச் செய்யும் ஆராய்ச்சியிலேயே ஈடுபட்டிருக்கிறான். இவன் வலு கெட்டிக்காரனாக வருவான் என முகாமுக்கு வந்து போகும் எல்லோரிடமும் சொல்லிக்கொண்டிருந்தார்.

ஒருமுறை இப்படித்தான் பொறுப்பாளர் வந்திருந்தார். அவரிடமும் அப்பையாண்ணைக் கெட்டிக்காரன் கதையைச் சொன்னார். பொறுப்பாளர் சிரித்துவிட்டு, “ஆரோ ஒரு சனத்திட்ட பிஸ்டலை பறிகுடுத்திட்டு வந்தவன்” என்றிருக்கிறார். அப்பையாண்ணை விடவில்லை. பொறுப்பாளருடன் இவனுக்காகச் சண்டை பிடித்திருக்கிறார். வேறு யாருமென்றால் பொறுப்பாளருடன் அப்படிக் கதைத்திருக்க மாட்டார்கள். அப்பையாண்ணை

வயசு மூத்தவர், இயக்கத்தின்ர முக்கியமான ஆள் என்பதால் அவருக்கென்று ஒரு தனி மரியாதை இருந்தது.

இவனுக்கும் அப்பையாண்ணையில் நல்ல விருப்பம். அவரென்றால் உயிரையும் விடுவான். என்ன... சில நேரங்களில் விசர்க்கதை கதைப்பார், அவ்வளவுதான். அடுத்த நிமிஷமே அதை மறந்துவிடுவார். அவருக்கு எல்லாப் பொடியளும் பிள்ளையள்தான். அதிலும் சிலரில் கொஞ்சம் விருப்பம் வைத்துவிட்டால், சொல்லத் தேவையில்லை. ஆனால், அவருக்கு ஒரு சங்கடம் இருந்தது. அந்த நேரம் இயக்கத்தில் இருந்ததெல்லாம் பொடித்தரவளியள். கனபேருக்க அப்பதான் மீசை முளைக்கத் தொடங்கியது. தாடி வளர்ந்தவன் எல்லாம் அதை வழிக்காமல் ஆசை ஆசையாக வளர்த்துக்கொண்டான். தாடி வளர்த்தால் ஒரு லுக் இருப்பதாகக் கனபேர் நினைத்தார்கள். இயக்கங்களை, சனங்கள் 'பொடியள்' என்றுதான் கூப்பிடுவார்கள். சனங்கள் கூப்பிடுறதிலயும் பிழை சொல்ல முடியாது. இந்தப் பொடியள் என்கிற அடைமொழிக்குள் தானும் வாறது என்றதுதான் அவருக்குக் கொஞ்சம் சங்கடமாக இருந்தது. ஏனென்றால், அப்போதே அவரது பிள்ளைகள் பெரியவர்களாகிவிட்டனர். அந்தாள் மட்டும் இயக்கம் இல்லாமல், சாதாரணச் சனமாக இருந்திருந்தால் "ஐயா" என்றுதான் பொடியள் கூப்பிட்டிருப்பார்கள்.

அந்த ஆள் இயக்கத்துக்கு வந்தது ஒரு விபத்து மாதிரி. காங்கேயன் துறை சிமெண்ட் தொழிற்சாலையில் வெடிபொருள் பிரிவு தொழில்நுட்பவியலாளராக இருந்த மனுஷன் இயக்கத்தில சேர்ந்து கண்ணிவெடிகள் வைக்கும் என யார்தான் நினைத்தார்கள்? அவர் இயக்கத்துக்குச் சேர்ந்த கதையை இப்போதும் சொல்லிச் சொல்லி சிரிப்பார். 1982–ம் ஆண்டுப் புலிகளின் ஆரம்பகால உறுப்பினரான சீலன் வெடிமருந்து விஷயத்தில் ஈடுபாடு உள்ளவராக இருந்தார். வெடிமருந்துகளை எப்படியாவது எடுத்துவிடத் தீவிர முயற்சிகள் செய்துகொண்டிருந்தவருக்குக் காங்கேசன் துறை சிமென்ட் தொழிற்சாலையைப் பற்றி யாரோ சொல்லிவிட்டார்கள். அவரது இலக்காகச் சிமென்ட் தொழிற்சாலை மாறிவிட்டது. அங்கே வெடிமருந்து பிரிவில் அப்பையாண்ணை முக்கியப் பொறுப்பில் இருந்தார். எப்படியோ சீலன் அந்தப் பிரிவுக்குள்

நுழைந்துவிட்டார். வெடிமருந்துகளைக் கடத்தும் நேரம் பார்த்து அப்பையாண்ணைக்கு விஷயம் தெரிந்துவிட்டது. ஒருநாள் தொழிற்சாலைக்குள் வந்த சீலனின் கையைப் பிடித்து ஒதுக்குப்புறமாகக் கூட்டிச்சென்றவர், “எதுக்கப்பா கடத்திக் கஸ்ரபடுகிறாய்? உனக்குத் தேவை வெடிமருந்துதானே.. எவ்வளவு தேவை.. சொல்லு.. நான் தாறன்” என்றொரு வெடிகுண்டை வீசியுள்ளார். சீலன் அதிர்ந்து போய்விட்டார். இந்தாள் கொக்கிபோட்டு பிடிக்க முயற்சி செய்வதாக நினைத்த சீலன், அப்படியொன்றும் தேவையில்லை என மறுக்க, இல்லை வெடிமருந்தை கொண்டு போ என அப்பையாண்ணை வற்புறுத்த அது ஒரு பெரிய நகைச்சுவைக் காட்சியாக நீண்டுள்ளது.

இறுதியில் வெடிபொருள்களுடன் வந்து சேர்ந்த சீலனுக்கு, அதை முறையாகப் பயன்படுத்த தெரியவில்லை. வெடிமருந்து அறிவுடன் இயக்கத்தில் வேறு ஆட்களும் இருக்கவில்லை. வெடிமருந்தை வைத்துக்கொண்டு கொஞ்ச நாள் இயக்கம் சரியான கஸ்டப்பட்டது. இறுதியில், வேறு வழி இல்லாமல் அப்பையாண்ணையிடமே மீண்டும் போய்ச் சேர்ந்தது. அப்பையாண்ணைச் செய்த முதலாவது கண்ணிவெடி பொன்னாலைப் பாலத்தில் வைக்கப்பட்டது. காரை நகரில் இருந்துவரும் கடற்படைதான் இலக்கு. அப்பையாண்ணையும் கொஞ்சப் பேரும் கண்ணிவெடியில் பொருத்திய மின்சார வொயருடன் பதுங்கியிருந்தனர். கண்ணிவெடிக்குத் தேவையான மின்சாரத்தை வழங்க அவர்களிடம் அப்போது இருந்தது ஜெனரேட்டர் ஒன்றுதான். இலக்கைக் கண்டால் உடனடியாக ஜெனரேட்டரை இயக்கி மின்சாரத்தை வழங்கி வெடிக்கவைக்க வேண்டும். சாதாரண விஷயமல்ல அது. இன்னும் கொஞ்சப் பேர் துப்பாக்கிகளுடன் பதுங்கியிருந்தனர். கண்ணிவெடியில் தப்பிய சிப்பாய்களைப் போட்டுத்தள்ளுவது அவர்களின் வேலை.

பொன்னாலைப் பாலத்தில் கடற்படையின் டிரக் வண்டி ஏறியதும், ஒருவன் ஓடிப்போய் ஜெனரேட்டரை இயக்கினான். அவசர அவசரமாக வொயரை ஜெனரேட்டரில் பொருத்தினார்கள். டிரக் வண்டி பாலத்தைக் கடந்து போய்க்கொண்டிருந்தது. கண்ணிவெடி வெடிக்கவில்லை. தாக்குதலுக்குத் தயாராக இருந்தவர்கள்

என்ன எதுவுமே வெடிக்கவில்லையே என யோசித்துவிட்டு, தமது பங்குக்கு டிரக் மீது சுட்டுவிட்டு ஓடினார்கள். இப்படியொரு சம்பவத்தைக் கடற்படை எதிர்பார்க்கவே இல்லை. டிரக்கில் இருந்து குதித்து நான்கு திசையிலும் துப்பாக்கிகளால் சுட்டுவிட்டு, தேடுதலில் இறங்கினார்கள். பாலத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடியை புதினமான பொருளைப் பார்ப்பதைப் போலப் பார்த்த ராணுவம், கண்ணிவெடியில் இருந்த நீண்டு சென்ற வொயரைப் பிடித்தபடியே சென்றனர். அது ஜெனரேட்டர் இயங்கிகொண்டிருந்த வீட்டுக்குச் சென்றது. இதன்பின்னர், “சிமென்ட் தொழிற்சாலையில் கல்லுக்க வெடி வைக்கிறது வேற... ஆமிக்கு கண்ணிவெடி வைக்கிறது வேறு” எனப் பொடியள் அவரை நக்கல் அடிக்கத் தொடங்கினார்கள். அதனைச் சவாலாக எடுத்து அவர் செய்த கண்ணிவெடிதான் திருநெல்வேலியில் வெடித்து இலங்கைத் தீவின் வரலாற்றையே புரட்டிப்போட்டது.

அப்பையாண்ணையின் தொழிற்சாலைக்கு அவன் வந்த பிறகு எறிகணைகள் செய்யும் முயற்சிகள் தொடங்கின. அப்போது ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புக்கு இங்கிலாந்தில் இருந்து வந்து இணைந்திருந்த சின்னன்னை தமிழ்நாட்டில் வைத்து எறிகணையை வெற்றிகரமாகப் பரீட்சித்துப் பார்த்திருந்தார். அந்தச் செய்தி இவர்களுக்கும் வந்து சேர அப்பையா அண்ணை உஷாரானார். “டேய் பெடியள்.. ஈ.பி–க்காரர் இந்தியாவுல மோட்டார் செல் செய்து அடிச்சுப் பாத்திட்டாங்கள். அவங்கள் இஞ்சைகொண்டு வந்து அடிக்கிறதுக்கு முதல் யாழ்ப்பாணக் கோட்டையில போய் விழுற முதல் செல் எங்களுடையதாக இருக்கணும். அதுக்கேற்ற மாதிரி வேலை செய்யவேணும்” என்று அவர்களை உசுப்பிவிட்டார்.

அப்பையாண்ணைக்குக் கடுப்பேற்றும் விதத்தில் தாம் மோட்டார் செல்லை கண்டுபிடித்துவிட்டதாகவும், விரைவில் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவந்து யாழில் உள்ள அனைத்து ராணுவ முகாம்களையும் தரை மட்டமாக்கிய பின்னர் கிழக்கு நோக்கி நகர்வோம். விரைவில் தமிழீழம் என்று பிரசாரங்களை ஈ.பி.ஆர். எல்.எஃப்–பும் தொடங்கிவிட்டிருந்தனர்.

*அவர்களின் தீவிர முயற்சியின் பின்னர் அலுமினியத்தால் ஆன எறிகணை ஒன்று தயாராக இருந்தது. பழைய பீரங்கிகளின் பொறிமுறைதான். குழாயினுள் எறிகணையை இறக்கி அதன் பின்னால் உள்ள திரியில் நெருப்பை மூட்ட வேண்டும். எறிகணையின் வால் பகுதியில் உள்ள கரிமருந்தின் வெடிப்பில் உருவாகும் உந்து சக்தியில் எறிகணை கிளம்பும். இவர்களது தயாரிப்பு வெற்றிகரமாக வானத்தில் கிளம்பினால் எறிகணைத் தயாரிப்பு வெற்றியடைந்துவிடும். எறிகணையில் வெடிமருந்துக்குப் பதிலாக அதே அளவு மணல் நிரப்பப்பட்டது. எறிகணைக் குழாயையும் செல்லையும் ஒரு டிராக்றரில் ஏற்றி நவாலி வெளிக்குப் போனவர்கள், குழாயை 40 பாகையளவில் நிமிர்த்திவைத்து அதனுள் எறிகணை இறக்கினர். குழாயின் அடியில் இருந்த துவாரத்தின் வழியாக எறிகணையின் திரியில் நெருப்பை வைத்தார்கள். வெடிச் சத்தத்துடன் எறிகணை வானில் கிளம்பியது. இவர்களின் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஆளையாள் கட்டிப்பிடித்துத் துள்ளிக் குதித்தார்கள். எறிகணை 700 மீட்டர் தூரத்தில் போய் விழுந்தது. ஆனால், பிரச்னை என்னவெனில் 1,500 மீட்டர் தூரமாவது போனால்தான், ராணுவ முகாம்களைக் குறிவைக்க முடியும். கோட்டை முகாமுக்கும் புலிகளின் காவல் அரண்களுக்கும் இடைப்பட்ட தூரமே 1,000 மீட்டர்கள் இருந்தது. ஆனாலும் பரிசோதனை வெற்றி. எறிகணை போகும் தூரத்தை அதிகரிக்க அதன் வால் பகுதியின் விட்டத்தை அதிகரித்ததோடு நீளத்தையும் அதிகரித்தார்கள். அடுத்த பரிசோதனையில் 1,500 மீட்டர் தூரத்தைத் தாண்டியது.*

*யாழ் கோண்டாவில் பஸ் நிலையத்தில் இருந்த இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துகள் அனைத்தும் கட்டியிழுத்து வரப்பட்டு, அடித்து நொறுக்கி உருக்கப்பட்டன. மண்ணில் செய்த எறிகணை அச்சுகளில் ஊற்றப்பட்டுக் கடைச்சல் இயந்திரங்கள் மூலம் அவை மெருகேற்றப்பட்டன. பென்ரலைற் வெடிபொருள் நிரப்பப்பட்டுக் கோட்டைக்குள் எறிவதற்குத் தயார் நிலையில் இருந்தன.*

*ஒருநாள் இரவு, எறிகணைகளை ஏற்றிய வாகனம் கோட்டைக்கு மிக அருகில் இருந்த புலிகளின் காவலில்*

இருந்த நிம்மர் மண்டபத்துக்கு அருகில் எறிகணைக் குழாய் நிமிர்த்தப்பட்டு அதனடியில் மண் மூடைகள் அடுக்கப்பட்டுத் தயார் நிலையில் இருந்தது. அனைவரும் பாதுகாப்பு நிலை எடுத்த பின்னர், "தம்பி, செல்லை போடுடா" என்று கட்டளையிட்டார். ஒருவன் கம்பியில் கட்டிய எறிகணையைக் குழாயினுள் இறக்கி கம்பியை உருவிவிட்டு நிலையெடுக்க அவன் திரியில் தீக்குச்சியைத் தொடும்படி வைத்துத் தீப்பெட்டியில் உரசினான். தீக்குச்சி சீறிய நேரம் திரியும் சீறத் தொடங்கியது. எறிகணை, கோட்டைக்குள் விழுந்தது. அனைவரும் மனதுக்குள் ஒன்று, இரண்டு... என்று எண்ணியபடியே மெல்லிய வெளிச்சத்தில் கை மணிக்கூட்டையும் பார்த்தார்கள். 30 விநாடிகள் தாண்டிய நிலையில் வெடிச்சத்தம் கேட்டது. "பெடியள்.. ஈ.பி–காரருக்கு முதல் நாங்கள் அடிச்சிட்டமாடா" என்று மகிழ்ச்சியில் கத்திய அப்பையா அண்ணையை எல்லாரும் கட்டிப்பிடித்துத் தூக்கினார்கள்.

அடுத்த நாள் உள்ளூர் பத்திரிகைகளில் முதல் பக்க செய்தி அதுதான். ஊர் சனங்களின் வாய்களிலும் அதுதான் பேச்சு. அது வழைமைபோல் 'யாழ்ப்பாணம் கோட்டை இடிஞ்சிட்டுதாம்; அகழி உடைஞ்சிட்டுதாம்' என்று வதந்திகளும் உலாவத் தொடங்கியது. அடுத்தடுத்து கோட்டைக்குள் புலிகளின் எறிகணை விழத் தொடங்கியது. நீண்ட தூரம் போவதற்காக வால் பகுதி நீட்டப்பட்டதால் எறிகணைகளின் பாரம் கூடியிருந்தது. அது வால் அறுந்த பட்டம்போல ஆகாயத்தில் ஆடியபடியே எழும்பி வால் பக்கமாகவே போய் விழுந்து வெடிக்கத் தொடங்கியது. பல வெடிக்காமலும்போனது. அது ஆடியசைந்து போவதால் இலங்கை ராணுவம் அதற்கு 'பேபி' என்று பட்டப்பெயரும் வைத்திருந்தது. செல் கிளம்பும் சத்தம் கேட்டதும் 'எல்.டி.டி. பேபி வருது' என்றபடியே பங்கருக்குள் போய்ப் பதுங்கத் தொடங்கினார்கள். ஒரு தடவை புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் நடந்த கைதிப் பரிமாற்றத்தின்போது புலிகள் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டு யாழ் கோட்டையில் சிறை வைக்கப்பட்டிருந்த தளபதி அருணா மற்றும் காமினி ஆகியோரை மீட்டெடுத்தனர். அந்தப் பேச்சுவார்த்தைகளின்போது அன்று யாழ் மாவட்டத் தளபதியாக இருந்த கொத்தலாவல இவனது

பொறுப்பாளரிடம் நகைச்சுவையாக ஒரு விஷயம் சொல்லியிருக்கிறார். “இரண்டு லாரிகளை அனுப்பி வையுங்கள். உங்கள் அலுமினியம் நிறையச் வைச்சிருக்கிறன்”.

தொடர்ச்சியான முயற்சிகளால் திரி கொளுத்தாமல் குழாயில் போட்டதும் தானாகக் கிளம்பிப்போகும் மூன்று அங்குல எறிகணைகளும் உருவானது. அதுமட்டுமல்லாது கண்ணிவெடிகளிலும் பல புதிய நுட்பங்களைப் புகுத்தினார்கள். அப்பையாண்ணைச் சும்மா இருக்கவில்லை. தொடர்ந்து எதையாவது செய்துகொண்டிருந்தார். கடல் கண்ணிகள், காட்டுப் பொறிவெடிகள் எனத் தொடங்கி, விமானம் செய்யும் ஆசையும் அவருக்கு வந்தது.

கடும் பிரயத்தனப்பட்டு விமானம் ஒன்றை அப்பையாண்ணைச் செய்தார். அது இரண்டு தடவை நடந்த பரீட்சார்த்தங்களில் பறப்புகளுக்கு முயற்சித்து இருந்தது. முதலாவது தடவை மானிப்பாய் நவாலி ரோட்டில் ஓடி மேலே கிளம்ப முதலேயே நிலை தடுமாறி பூவரசு மரத்தோடு மோதி உடைந்துபோனது. இரண்டாவது முயற்சி சிறிது தூரம் மேலே எழும்புவதும் விழுவதுமாக ஓடிய விமானம், சில மீட்டர்கள் உயரத்தில் பறந்து கீழே விழுந்து உடைந்துபோக, அதனை இயக்கிய பாலாவும் காயமடைந்திருந்தான். பின்னர் இலங்கையில் இந்தியப் படைகளின் வருகையோடு விமானப் பறப்பு முயற்சிகள் நிறுத்தப்பட்டன.

# 15

இரண்டாவது தடவையாக நிதி சேகரித்து முடித்து பல நாட்களின் பின்புதான் முதலாவது தடவை ஆயுதங்களுக்காகச் சேர்த்து அனுப்பிய நிதிக்கு என்ன நடந்தது என்ற விஷயம் அப்பையாண்ணைச் சொல்லி இவனுக்குத் தெரியவந்தது. தலைவருக்கு நண்பரான சங்கர் என்பவர் கனடாவில் இருந்து தமிழ்நாட்டுக்கு வந்து தனக்குத் தெரிந்த அல்ஜீரிய ஆயுத வியாபாரி ஒருவர் இருப்பதாகவும் அவர் மூலமாக நவீன ஆயுதங்களை வாங்கலாம் எனச் சொன்னதற்கு இணங்கவே பெரும் பணம் சேகரித்து அனுப்பப்பட்டிருந்தது. ஆயுதக் கொடுக்கல்–வாங்கல்கள் பேரம் பேசல் என்பன லண்டனில் நடந்தன. ஆயுதம் தருவதாகச் சொன்ன அல்ஜீரிய வியாபாரி, பாதிப் பணத்தை வாங்கிக்கொண்டு புலிகளின் கப்பலை சூயெஸ் கால்வாயில் எகிப்துக்கு அருகே கொண்டுவரும்படியும் அங்குக் கடலில் வைத்து ஆயுதங்கள் கப்பலில் ஏற்றப்படும் எனவும் சொல்லியிருந்தார். மீதிப் பணம் லண்டனில் புலிகள் இயக்க ஆதரவாளர் ஒருவரின் கைகளில் இருந்தது. கப்பலுடன் வந்த சங்கர் சூயெஸ் கால்வாயில் மாதக்கணக்காகக் காத்திருந்தார். ஆயுதம் வந்தபாடில்லை. அல்ஜீரிய வியாபாரியும் ‘இதோ வருகிறது அதோ வருகிறது’ எனப் போக்குக் காட்டிவிட்டு லண்டனைவிட்டு ஓடிவிட்டார். அவரது தொடர்புகளும் பின்னர் இல்லை. சுமார் ஆறு மாதங்களுக்கு மேலாகக் கடலில் காத்திருந்துவிட்டுச் சங்கரும் ஏமாற்றத்துடன் திரும்ப அல்ஜீரிய வியாபாரி ஏமாற்றிவிட்டான் என அறிந்த லண்டன்வாசியோ தன்னிடம் இருந்த மீதிப் பணத்தைச் சுருட்டிவிட்டு தனது

வீட்டை உடைத்து களவெடுத்துவிட்டார்கள் எனப் புலிகளுக்கு அறிவித்திருந்தார்.

அன்றைய காலப் பகுயில் அவர் சுருட்டியது பணத்தின் தொகை அரை மில்லியன் பவுண்ஸுகள். காலப்போக்கில் அந்தப் பணம் களவு போகவில்லை. அவரே சுருட்டியதாகப் புலிகள் அறிந்தார்கள். ஆனால், சுருட்டியவரின் சகோதரர்–சகோதரிகள், புலிகள் அமைப்பில் முக்கியப் பொறுப்புக்களில் இருந்ததால் புலிகள் அவரை ஒன்றும் செய்யாமல் விட்டுவிட்டார்கள்.

சிறிசபாரத்தினம் இறந்து ஒரு மாதம் கடந்துவிட்ட நிலையில் அன்று இரவு புதிய பிரச்னை தொடங்கியது. ஆரம்பத்தில் ஒருவருக்கும் விஷயம் தெரியவில்லை. வெளிமுகாம் ஒன்றில் நின்ற பாபுதான் விழுந்தடித்து ஓடி வந்து விஷயத்தைச் சொன்னான். ஈ.பி.ஆர்.எல்.எஃப்–காரர் சபாரத்தினத்துக்கு அந்திரட்டி செய்து ஸ்பீக்கர் கட்டி மானிப்பாயில் ஊர் ஊராகத் திரிந்து கவிதையும் பாடி, அஞ்சலி செய்கிறார்களாம் என்று சொல்லும்போதே, அவன் கோபத்தால் மெதுவாக நடுங்கினான். கேட்ட பொடியளுக்கும் அடிமுடியெல்லாம் பற்றி எரிந்தன. “ஒரு துரோகிக்குச் சப்போர்ட் பண்ணி, எங்களோட கொளுவிறதுதான் ஈ.பி–க்காரன்ரை பிளான்” என ஒருவன் கத்தினான்.

ஆனால், பொறுப்பாளரின் ஓடர் இல்லாமல் எதையும் செய்ய முடியாது. மெயினுக்கு அறிவித்துவிட்டுக் காத்திருந்தார்கள். பதில் வரவில்லை. இரவு வெளிவேலையாகச் சென்ற பரதன், அப்படியே மெயின் பக்கம் போய்ப் பொறுப்பாளரைக் கண்டு ஈ.பி–காரரின் வேலையைச் சொல்லி, உதை உப்பிடியேவிட்டு வைக்கக் கூடாது எனக் குமுறினான். பொறுப்பாளர் சிரித்துவிட்டு, ‘பல்லியை அடிச்சுப் பாவத்தைத் தேடக் கூடாது’ எனச் சொன்னாராம்.

பரதன் வந்து விஷயத்தைச் சொன்னபோது பொடியள் எல்லோருக்கும் சப்பென்று இருந்தது. “பொறுப்பாளர் முந்திமாதிரி இல்லை” என்று ஒருவன் சொன்னான். இரண்டு, மூன்று நாள் இதே கதையுடனேயே கழிந்தது. பொடியள் ஈ.பி.ஆர்.எல்.எஃப் மீது பெரிய கறளுடன் இருந்தார்கள். ஒருநாள் விடிகாலையில் பொடியள் எல்லோரும் நல்ல நித்திரை தொலைவில் துப்பாக்கிச் சத்தங்கள் கேட்டன. சென்றியில் இருந்தவன் அவசரமாக

எல்லோரையும் அடித்து எழுப்பினான். அனேகமாக ஆமிக்காரன் எங்காவது புகுந்திருப்பான் என்றுதான் எல்லோரும் நினைத்தனர். ஆனால், யாருக்கும் எதுவும் புரியவில்லை. வோக்கிகளும் அலறிக்கொண்டிருந்தன. எல்லோரும் மெயினின் அலைவரிசைக்கு வந்துவிட்டார்கள். என்ன நடந்தது, எங்கு நடக்கிறது என்றுதான் ஆளாளுக்கு விசாரித்துகொண்டிருந்தார்கள். அதனால் அந்த அலைவரிசையில் தொடர முடியாததால் மெயின்காரன் திண்டாடிக்கொண்டிருந்தான். திடீரென அந்த அலைவரிசையில் வந்த பொறுப்பாளர் கண்டபடி தூசணத்தால் பேசி எல்லோரையும் கலைத்தார். மெயினுக்குத்தான் அடி விழுகிறது என்றும், எல்லோரம் இங்கே கும்மாளம் அடித்துக்கொண்டிருந்தால் தன்னால் ஒழுங்குபடுத்தல்களைச் செய்ய முடியாது என்றும் கத்தினார்.

ஆரம்பத்தில் ஆமியாக இருக்கலாம் என்றுதான் நினைத்தார்கள். பின்னர்தான் அது ஈ.பி.ஆர்.எல்.எஃப் என்று தெரியவந்தது. ஆண்கள், பெண்கள் என இரண்டு அணியும் வந்து முகாமை முற்றுகையிட்டு தாக்குதல் நடத்தியது. பொறுப்பாளரை முடித்துவிடுவதுதான் அந்தத் தாக்குதலின் இலக்கு என்று பின்னர்தான் அறிந்துகொண்டார்கள். முகாமைச் சுற்றிவளைத்து விடிகாலையில் சரமாரியாகத் தாக்கத் தொடங்கிவிட்டார்கள். ஆனால், முகாமில் இருந்தவர்கள் பதில் தாக்குதல் நடத்தாமல் உள்ளே பதுங்கிவிட்டார்கள். மறுபக்கம் கனத்த மௌனம் நிலவியது ஈ.பி.ஆர்.எல்.எஃப்–காரர்களுக்குச் சந்தேகத்தைக் கொடுத்துவிட்டது. உள்ளே ஆட்கள் இருக்கிறார்களா இல்லையா என்பதைத் தீர்மானிக்க முடியாமல் நீண்ட நேரம் திண்டாடினார்கள். உள்ளேயிருந்து பதில் தாக்குதல் வரவில்லை என்றதும் இந்த மௌனம் தங்களின் புதைகுழிக்கான அழைப்பா என்ற சந்தேகமும் அவர்களிடம் இருந்துகொண்டிருந்தது. ஆனால், நீண்ட நேரமாக வெளியில் நின்றவர்கள், மீண்டும் ஒரு சுற்று துப்பாக்கிச் சூடு நடத்திப் பார்த்தார்கள். பதில் இல்லை.

இப்போது உண்மையிலேயே ஈ.பி.ஆர்.எல்.எஃப்–காரர்களுக்குச் சந்தேகம் பிடித்துவிட்டது. ஆளே இல்லாத கடையில் நின்று, தேநீர் ஆற்றிக்கொண்டிருக்கிறோமா என்ற குழப்பத்தில் இருந்த சமயத்தில், முகாமுக்குள் இருந்தபடி அவர்களுக்கான வலையை பொறுப்பாளர் விரித்துக்கொண்டிருந்தார். சற்று

தள்ளி அமைக்கப்பட்டிருந்த வேறு இரண்டு முகாம்களுக்கு விஷயத்தை அறிவித்து, அவர்களை வந்து ஈ.பி.அர். எல்.எஃப்–காரரை சுற்றிவளைக்குமாறு பொறுப்பாளர் உத்தரவிட்டார். சண்டைகளில் இப்படியான ஓர் உத்தியைப் பாவிக்கலாம் என்பது இயக்கத்துக்குக் கொஞ்ச காலத்தின் முன்னர்தான் தெரிந்தது. ஓர் அனுபவப் பாடமாகவே அமைந்துவிட்டது அந்த உத்தி.

கொஞ்ச காலத்தின் முன்னர், பொறுப்பாளர் சுதுமலையில் ஒரு முகாமில் தங்கியிருந்தார். ஜொனி உட்பட. மொத்தம் 15 வரையானவர்கள் அங்கு இருந்தார்கள். இதனை எப்படியோ மோப்பம் கண்டுபிடித்துவிட்டது இலங்கை ராணுவம். அந்தக் காலத்தில்தான் இஸ்ரேல் ராணுவப் பயிற்சிகளை இலங்கைக்கு வழங்கத் தொடங்கியிருந்தது. இஸ்ரேல் பயிற்சி பெற்ற கொமாண்டோக்களை வைத்து, அங்கிருந்த முக்கியத் தளபதிகளை அழித்துவிட ராணுவம் திட்டமிட்டது.

அதிகாலை 5 மணியளவில் உலங்குவானூர்திகளில் வந்த கொமாண்டோக்கள் சுதுமலை வயல்வெளிகளில் தரையிறங்கினார்கள். அப்படியொரு சம்பவத்தை ஈழப்போர் அதற்கு முன்னர் கண்டதில்லை. இப்படியொரு தாக்குதல் முறை பற்றி அறியாததால் முகாமில் இருந்தவர்களும் அலட்சியமாக இருந்துவிட்டனர். கொமாண்டோக்கள் அருகில் வந்து தாக்குதலைத் தொடங்கும் வரை முகாமில் இருந்தவர்களுக்கு விஷயமே தெரியவில்லை. ஆனாலும் அவர்களுக்கு அதிஷ்டம் இருந்தது. கொமாண்டோக்கள் வரும்போது, முகாமின் அடையாளத்துடன்தான் வந்திருக்க வேண்டும். வந்து பார்த்தால் அந்தப் பகுதியில் இருந்த வீடுகள் எல்லாம் பெரும்பாலும் ஒரே தோற்றம் உடையவை. இதனால் கொமாண்டோக்கள் குழம்பிவிட்டனர். இறுதியில் குத்துமதிப்பாகத் தாக்குதலைத் தொடங்கினார்கள்.

அவர்கள் தாக்குதல் தொடங்கியது முகாமுக்குப் பக்கத்து வீட்டில். இந்த முகாமில் இருந்தவர்கள் உஷாராகி, வீட்டில் இருந்து வெளியேறி அருகில் இருந்து வீடுகளுக்குள் சென்றுவிட்டார்கள். பாதுகாப்பான இடங்களைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு. கொமாண்டோக்களின் மீது பதில் தாக்குதல் நடத்தினார்கள். இதற்குள் பொறுப்பாளர், அரியாலை முகாமுக்கு விஷயத்தை அறிவித்து, அங்கிருந்து உதவி அணியை அழைத்துவிட்டார்.

அரியாலையில் இருந்து இரண்டு வாகனங்களில்

உதவி அணிகள் புறப்பட்டன. உதவி அணிகள் வேகமாக வந்துகொண்டிருந்ததை, வானத்தில் வட்டமிட்டுக்கொண்டிருந்த தாக்குதல் உலங்குவானூர்தி ஒன்று அடையாளம் கண்டுவிட்டது. உதவி அணிகள் சுதுமலையைப் போய்ச் சேரவிடக் கூடாது என்பதில் குறியாக இருந்த உலங்குவானூர்தி அவர்களை நகரவிடாமல் கடுமையாகத் தாக்குதல் நடத்தியது. உலங்குவானூர்தி தாக்குதலில் அல்பேட் மரணமானான். அரியாலைக்கும் சுதுமலைக்கும் இடையில் தூரமும் அதிகமாக இருந்ததால் உதவி அணியால் நினைத்த நேரத்தில் வந்து சேர முடியவில்லை. தாக்குதல் சிறிது நேரம் நீடிக்கவே, தாவடியில் இருந்த T.E.A இயக்கமும் குளப்பிட்டியில் இருந்த ரெலோ இயக்கமும், நவாலியில் முகாமிட்டிருந்த ஈ.பி.ஆர். எல்.எஃப்–வும் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்துவிட்டன.

ராணுவம் தரையிறங்கிய விஷயத்தைப் புரிந்துகொண்ட இயக்கங்கள் அனைத்தும், ராணுவத்தின் மீது கடுமையான தாக்குதல்களைத் தொடங்கின. திடீரென ஏற்பட்ட இந்த மாற்றத்தை எதிர்பாராத கொமாண்டோக்களுக்கு வேறு மார்க்கம் எதுவும் இல்லை. ஒன்று, இறக்க வேண்டும் அல்லது பின்வாங்க வேண்டும். அவர்கள் இரண்டாவதைத் தெரிவுசெய்தனர். இந்த அனுபவத்தால் பொறுப்பாளர் மெயினுக்கு அருகில் பல முகாம்களை அமைத்து வைத்திருந்தார். இவர்களது முகாமுக்கும் தகவல் வந்தது. துப்பாக்கிகளைத் தூக்கிக்கொண்டு இவர்கள் பறந்தார்கள். அருகில் இருந்த வேறு சில முகாம்களில் இருந்தும் அணிகள் வந்திருந்தன. இவர்கள் சென்று ஈ.பி.ஆர்.எல்.எஃப்–பை சுற்றிவளைத்துக்கொண்டார்கள்.

இவர்கள் தாக்குதலை தொடங்கியதும், நூறுக்கும் மேற்பட்ட ஆட்கள் இருந்தாலும் ஈ.பி.ஆர்.எல்.எஃப்–காரர் நிலை தடுமாறி அகப்பட்ட திசையினால் தப்பியோட தொடங்கினார்கள். அங்கொன்றும் இங்கொன்றுமாக சிலர் அகப்பட்டனர். ஒவ்வொரு திசையில் இருந்தும், பொறுப்பாளருக்குப் பிடிபட்டவர்கள் பற்றிய தகவல் வந்துகொண்டிருந்தது. புன்சிரிப்புடன் பொறுப்பாளர் நின்றார். பிடிபட்டவர்களை மெயினுக்குக் கொண்டு வரச் சொன்னார். பொடியளும் உற்சாகமாக நின்றனர்.

“எங்களிலயே கை வைக்கத் துணிச்சிட்டாங்கள். சண்டியனுகளைக் கெதியாகொண்டு வாங்கோ அவங்களைப் பார்ப்பம்” என்று சிவா பரபரத்தபடி இருந்தான்.

எல்லா திசைகளில் இருந்தும் ஆட்கள் கொண்டுவரப்பட்டனர். ஆறு பெண்களும், ஏழு ஆண்களும் அகப்பட்டிருந்தனர். பொறுப்பாளர் சலனம் இல்லாத முகத்துடன் அவர்களைப் பார்த்துக்கொண்டு நின்றுவிட்டு, தனது அறைக்குள் சென்றுவிட்டார். உதவிப் பொறுப்பாளரை அழைத்து சில உத்தரவுகளை மட்டும் கொடுத்தார். அதன்படி, பெண்கள் அனைவரும் சில நாட்களிலேயே வீடுகளுக்கு அனுப்பப்பட்டனர். மீண்டும் ஈ.பி.ஆர்.எல்.எஃப்-வில் இணைய மாட்டோம் என்ற உறுதிமொழியை எழுத்து மூலம் கொடுத்தார்கள். ஆண்களுக்கு மன்னிப்பு கிடைக்கவில்லை. அவர்களின் தலையில் வெடி விழுந்தது.

❍ ❍

# 16

**கோ**ப்பாயில் உள்ள முகாம் ஒன்றுக்கு அவசரமாக ஆயுதங்கள் தேவையாக உள்ளதாக அப்பையாண்ணைக்கு அறிவித்தல் வந்தது. முகாமில் தயாரிக்கப்படும் எறிகணைகள் வெடிமருந்துகளை வெளிமுகாம்களுக்கு அனுப்பவது என்றால் அப்பையாண்ணை இவனைத்தான் அனுப்புவார். இவனுக்கும் அந்த வேலை நன்றாகப் பிடித்திருந்தது. இன்றும் இவனைத்தான் போகச் சொன்னார். ரக்ரர் பெட்டியில் சாமான்களை ஏற்றிக்கொண்டு போனான். அவனுக்கு இரண்டு பக்கத்திலும் ரதனும் பாபுவும் நின்று வந்தனர். ரதன், பிஸ்டல் கட்டியிருந்தான். பாபு, எஸ்.எம்.ஜி கொழுவியிருந்தான். மாலை வேளையில் சனத்துக்குள்ளால் போவது உற்சாகமாக இருந்தது. ரக்ரர் பெட்டியில் இருந்த சாமான்கள் மூடிக்கட்டியிருந்தன. அதைப்பார்த்துச் சனங்கள் ஏதும் பெரிதாக நினைத்திருப்பார்கள் என அவனுக்கு உறுதியாகத் தெரிந்தது. பெட்டையள் வெட்கத்தைவிட்டு நன்றாக முகம் கொடுத்துப் பார்த்தார்கள். இவன் இன்னுமின்னும் ஆக்சிலேட்டரை மிதித்தான்.

வேகத்தைக் குறைக்காமலேயே கோப்பாய்ச் சந்தியால் வெட்டித் திருப்பினான். அது ‘ட’ வடிவில் உள்ள திடீர் திருப்பம். இவனும் கொஞ்சம் அவதானமாகத்தான் இருந்திருக்க வேண்டும். எல்லாம் முடிந்துவிட்டது. எதிர்பக்கமாகச் சைக்கிளில் வந்த வயதானவர் ஒருவரை மெல்லிதாகத் தட்டிவிட்டான். அவர் நிலை தடுமாறி நிலத்தில் விழுந்துவிட்டார்.

உடனே ரக்ரரில் இருந்து குதித்து ஆளைத்தூக்கி பிரதான வீதிக்குகொண்டு வந்தார்கள். பெரிய பிரச்னை ஒன்றுமில்லை. ஆனால், அந்த தாள் கொஞ்சம் பயந்தவராக இருக்க வேண்டும். நடுங்கியபடி அழத் தொடங்கிவிட்டார்.

பருத்தித் துறையில் இருந்து சனங்களை ஏற்றிக்கொண்டு மினி பஸ் ஒன்று வந்தது. துவக்குகளுடன் நின்று மறித்ததால் பிரச்னை இல்லை. அதில் ஆளை ஏற்றி யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவிட்டு, நிம்மதியாக மூச்சுவிட, வோக்கி அலறியது. மெயினில் இருந்து பொறுப்பாளரே அழைத்துத் திட்டத் தொடங்கினார். 'இந்தாளுக்கு ஞானக்கண் ஏதும் உள்ளதோ?!' என இவன் குழம்பத் தொடங்கினான். போன காரியத்தை முடித்துவிட்டு உடனடியாகத் திரும்பி மெயினுக்கு வரச் சொல்லிவிட்டு, வோக்கியை கட் பண்ணினார். இன்றைக்கு நல்ல திருவிழாதான் என நினைத்தான். ரக்ரரை திருப்பும்போதுதான் கவனித்தான், கோப்பாயில் இருந்து செல்லும் பக்கமாக ஒரு சென்ரிக்காரன் நின்றிருந்தான். அவன்தான் மெயினுக்கு உடனே வோக்கியில் தகவல் கொடுத்திருக்க வேணும். வெடிபொருட்களைக் கோப்பாய் முகாமில் இறக்கிவிட்டு மெயினுக்குப் புறப்பட்டான். கூடப்போன குற்றத்துக்காகத் தங்களுக்கும் அடி விழும் என்று பயத்தில் ரதனும் பாபுவும் கோப்பாய் முகாமிலேயே நின்று விட்டார்கள்.

மெயினுக்குக் கிட்டப்போகப் போக இவனுக்கு லேசாக நடுக்கம் பிடிக்கத் தொடங்கிவிட்டது. ராக்ரரை மெதுவாக ஓட்டிக்கொண்டு போனான். பின்னால் யாரோ மோட்டார் சைக்களில் வந்து ஹார்ன் அடித்தார்கள். ரக்ரரை ஒதுக்கி வழிவிட்டு திரும்பிப் பார்த்தான். அப்பையாண்ணை. மோட்டார் சைக்கிளை வெட்டித் திருப்பி, ரக்ரரின் முன்னால நிற்பாட்டினார். அதற்கு இடையில், 'இவருக்கும் தகவல் போயிட்டுதா?' என நினைத்தபடி அவரைப் பார்த்தான். வழமையான சிரிப்பு அவரது முகத்தில் இல்லை. மோட்டார் சைக்கிளில் இருந்து இறங்கியபடி, "டேய், பாத்து ஓடத் தெரியாதா? செல்லுகள் வெடிச்சிருந்தால் நிலைமை என்ன?" என்று கூறிவிட்டு முகத்தைக் கடுமையாக வைத்திருந்தார். 'இந்த நிலைமையை நீடிக்க விடக் கூடாது' என நினைத்தான். அப்பையாண்ணையை வழிக்குகொண்டு வந்தால்தான் தப்பிக்கலாம் என்பது தெரிந்தது.

"எல்லாம் ஒரு நம்பிக்கைதான் அண்ணை" என்றான் சிரித்தபடி.

"என்னடா நம்பிக்கை?"

"உங்கட செல்லுகள் வெடிக்காதெண்ட நம்பிக்கைதான்!"

அப்பையா அண்ணைக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை. விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கினார். ஆனாலும் அப்பையாண்ணைக் காரியத்தில் கண்ணாக இருந்தார். "இந்தத் தரம் உனக்குப் பணிஸ்மெனட் கட்டாயம் தரணும். கெதியா உள்ளை வா" என்றார்.

வீதியில் ராக்ரரை நிறுத்திவிட்டு மெயினுக்குள் நுழைந்தான். பொறுப்பாளர், "அண்ணை உங்களை வளர்ப்பு செய்த வேலையைப் பாத்தீங்களா? நீங்களே என்ன செய்யலாமெண்டு சொல்லுங்கோ" என்றதும், "டேய்... நீ பிஸ்டலைக் கழட்டித் தந்திட்டு கோப்பாய் பண்ணைக்கு ஒரு மாதம் போய் வேலை செய்திட்டு வா" என்றார்.

பிஸ்டலைக் கழற்றிக் கொடுப்பதென்றதும் இவனுக்குச் சரியான கவலையாகிவிட்டது. அதை வைச்சே எல்லாரும் நக்கலடிப்பாங்கள். தயங்கி நின்றான். அப்பையாண்ணை நேரம் போவதாகச் சீறினார். மனதைத் திடப்படுத்திக்கொண்டு, பிஸ்டலைக் கழற்றி அவரிடம் கொடுத்துவிட்டு, அப்பையாண்ணையின் மோட்டார் சைக்கிளின் பின்னால் ஏறி உட்கார்ந்தான். அவர் கொண்டுபோய்க் கோப்பாய் பண்ணையில் விட்டுவிட்டுப் போனார்.

கோப்பாய் பண்ணை, பசுமைப் புரட்சி ரூட் அமைப்பின் கீழ் இயங்கியது. இங்கு நூற்றுக்கணக்கான மாடுகள் பன்றிகள், ஆயிரக்கணக்கான லைக்கோன் கோழிகள் ஆகியவற்றோடு பல ஏக்கரில் தோட்டங்களும் பரந்து விரிந்துகிடந்தன. அது அவனுக்குப் புதுவிதமான அனுபவம். பயிற்சிக்காகப் போக–வரும் போராளிகள் முதலில் அங்குப் பண்ணைகளில் வேலை செய்வார்கள். பண்ணை வேலை கஷ்டம் எண்டு அழுதுகொண்டு பயிற்சி எடுக்காமல் திரும்பப் போகிறவர்களும் உண்டு. அதே நேரம் பயிற்சி முகாமில் பயிற்சி கஷ்டம் என்று வீட்டுக்குப் போறதாக அழுபவர்களும் தண்டனைக்காகப்

பண்ணைக்கு வருவதுண்டு. காலை எழும்பி கோழிகளுக்குச் சாப்பாடு போட்டு முட்டைகளைச் சேகரிப்பதும், மாலை நேரத்தில் தோட்டத்தில் வேலை செய்வதும்தான் அவனுக்கான தண்டனை. அவனும் காலை எழுந்ததும் 10 முட்டைகளையாவது உடைத்து குடித்துவிட்டு அதன் கோதுகளை உமிக்குள் மறைத்துவிட்டு வேலையைத் தொடங்குவான்.

அங்கு சாணத்தில் இயற்கை எரிவாயு தயாரிக்கும் திட்டத்துடன் இரண்டு வட்டவடிவமான கிடங்குகளையும் மற்றவர்கள் வெட்டிக்கொண்டிருந்தார்கள். அதைச் செய்தவர்கள் பயிற்சிக்குப் போக வந்திருந்தவர்கள் என்பதால் கிடங்கை வெட்டும்போது வரும் பாறைகளை உடைப்பதற்கு அவர்களுக்குக் கரி மருந்தும் அதை வெடிக்க வைக்கத் திரியும் கெற்பும் குடுத்திருந்தார்கள். அவர்களோ ஒருநாள் முழுவதும் அலவாங்கால் பாறையில் ஓட்டையைப் போட்டு அதில் கரி மருந்தை அடைந்து வெடிக்கவைத்தால் சிறுதுண்டு பாறையே உடைந்துகொண்டிருந்தது. இரண்டு நாளாக இதைக் கவனித்தவனுக்கு எரிச்சல்தான் வந்தது. முன்னிரவு நேரம் அப்பையா அண்ணைத் தொழிற்சாலையில் இருக்க மாட்டார் என்றதால் களவாகத் தொழிற்சாலைக்குப் போனான். பாபுவிடம் விஷயத்தைச் சொல்லி, சக்தி வாய்ந்த வெடி மருந்தையும், அதை வெடிக்க வைக்க மின் கெற்புகளையும் எடுத்துக்கொண்டு வந்தான். மறுநாள் பயிற்சிக்கு வந்த பொடியள் வழமைபோலப் பாறையை உடைக்க ஓட்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். வேறு அலுவலாக அந்தப் பக்கம் போனவனைப்போலப் பாவனைப் பண்ணிக்கொண்டு அங்கு போனவன், ஒன்றும் தெரியாத மாதரி கிடங்கை எட்டிப்பார்த்தான். “ஏன் இப்பிடி கஸ்ரப்படுறியள்?” எனப் பொடியளிடம் கேட்டான். அவர்களுக்கும் வேறு வழிகள் தெரியவில்லை. “இயக்கத்துக்கு வந்திட்டு மூளையைப் பாவிக்கத் தெரியாமல் இருக்கிறியள்” என்று செல்லமாகத் திட்டிவிட்டு, பாறையைப் பெயர்க்கும் பொறுப்பை எடுத்தான். உடல் அலைப்பு இல்லாமல் பாறையைப் பெயர்க்கலாம் என்றால் யார்தான் வேண்டாம் என்று சொல்வார்கள். பொடியளுக்கும் நல்ல மகிழ்ச்சி. பாறையில் ஓட்டை போடாமல் பாறைக்கு அருகில் கிடங்கை மட்டும் வெட்டிவிட்டுப் போகச் சொன்னான்.

மாலை அந்தக் கிடங்கில் சக்கையை வைத்து இணைப்பைக் குடுத்தான். அதற்கு மேல் மண்ணைப் போட்டு இறுக்கி சிறிய மணல் மூட்டையைப் போட்டான். கிடங்குக்கு வெளியே வந்து வொயரை ஓடவிட்டு அனைவரையும் படுத்துக்கொள்ளச் சொல்லிவிட்டு மின் இணைப்பைக் கொடுத்தான். பொடியள் காதைப் பொத்திக்கொண்டு படுத்தார்கள். பாரிய சத்தத்துடன் பாறை வெடித்துச் சிதறியது. கோப்பாய் கிராமம் ஒருமுறை அதிர்ந்தது.

சாப்பிட்டுவிட்டு குட்டி தூக்கம் போட்டுக்கொண்டிருந்த பண்ணைப் பொறுப்பாளர் சோதி, திடுக்கிட்டு எழும்பி ஓடிவந்தார். படுத்திருந்தவர்களும் எழும்பி வந்து பார்த்தார்கள். பாறை வெடித்திருந்தது. ஆனால், அவர்கள் அத்தனை நாளாகச் சிரமப்பட்டு அழகாக வட்டவடிவில் வெட்டிய கிடங்கு தூர்ந்துபோயிருந்தது. மீண்டும் வோக்கி அலறியது. பொறுப்பாளர் அலைவரிசையில் வந்தார். தண்டனைக்குப் போயிருந்தவனுக்கு மீண்டும் தண்டனை. இப்போது யாழ் பழைய பூங்கா பயிற்சி முகாமில் சமையல் வேலை. உடுப்பைத் தூக்கிக்கொண்டு பழைய பூங்கா பயிற்சி முகாமுக்குப் போனான். அங்கு சுந்தர் மற்றும் செல்வராசா வாத்தியார் தலைமையில் பயிற்சி முகாம் நடந்துகொண்டிருந்தது. பயிற்சி முகாம் சமையல் பெரிய கஸ்ரமில்லை. காலையில் பெரிய அண்டாக்களில் பயறு அல்லது கொளப்பியை அவிக்க வேண்டும். அதோடை வெறும் தேத்தண்ணி. மத்தியானம் சோறு ஒரு கறி. நிறைய மஞ்சள் அள்ளிப் போட்டு ஒரு சொதி. இரவு மீண்டும் பயறு அல்லது கொளப்பி. அவ்வளவுதான்.

இங்கு போன இடத்தில் சுந்தருடன் நல்ல பழக்கமானது. அவன் அந்தப் பயிற்சி முகாமில் உடற்பயிற்சி ஆசிரியன். பனிஸ்மனற்காரருடன் கூடித்திரியப் போராளிகள் கொஞ்சம் பஞ்சிப்படுவார்கள். ஆனால், சுந்தரிடம் அப்படியான தயக்கங்கள் இல்லை. வேலை நேரங்கள் தவிர, இரண்டு பேரும் ஒன்றாகத்தான் திரிந்தார்கள். பழைய பூங்கா பயிற்சி முகாமுக்கு முன்னால் சைனிஸ் உணவகம் ஒன்று இருந்தது. அந்தச் சைனிஸ் உணவகத்துக்கு இரவில் களவாக அவனும் சுந்தருமாகப் போய்ப் பியர் அடித்து, பிரியாணி சாப்பிட்டுவிட்டு வருவார்கள். தண்டனை மேல் தண்டனை பெற்றுப் பயிற்சி முகாமுக்குச் சமைக்கப்போனவனுக்கு

அங்கும் தண்டனை பெறவேண்டிய நிலை வந்தது.

பயிற்சிப் போராளிகளில் ஒருவன் பயிற்சிக்கு வருவதற்கு முதலேயே பலாலி முகாம் காவல் அரண் ஒன்றில் காவல் கடைமையில் நின்றிருக்கிறான். அப்போது ராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டில் காலில் காயமடைந்திருந்தான். அதற்கான சிகிச்சை இன்னும் முடியவில்லை. பயிற்சி முகாமிலும் தொடர்ந்தது. அவனால் உடல்நிலையைக் கருத்தில்கொண்டு, காலையில் கடுமையான பயிற்சிகளில் இருந்து விலக்கப்பட்டிருந்தான். பயிற்சிகள் இல்லையே தவிர, பயிற்சி நேரத்தில் சமையல் வேலையைப் பார்க்க வேண்டியிருந்தது. அவனைப் பார்த்து கனபொடியளுக்கு வயிறு எரிந்தது. பயிற்சியில் ஓட முடியாமல் சிரமப்பட்டு முதுகுத்தோல் உரிய அடி வாங்குபவர்களுக்கு, தமது பயிற்சி முகாமில் ஓர் ஆளாகச் சுற்றித் திரிந்துவிட்டு குப்பியை வாங்கப் போகிறான் என்பது எரிச்சலாக இருந்தது. அவனை மாதிரியே ஜாலியாகச் சுற்றித்திரிய பலர் ஐடியாப் போட்டனர். அப்படியான ஒருவன், இவனிடம் வந்து அகப்பட்டுக்கொண்டான்.

காலையில் தன்னால் ஓட முடியாமல் இருப்பதாகவும், பயிற்சி எடுக்காமல் சமையலறைக்குள் சுற்றித் திரிபவனைப்போல, தானும் சுற்றித் திரிய வேண்டும் என்றும், அதற்கு ஏதாவது ஐடியா தருமாறும் கேட்டான். அவன் மிகவும் அப்பாவியாக இருந்தான். "அல்சர் வருத்தத்தைப் பற்றி அறிந்திருக்கிறானா?" என்று கேட்டான். அவன் மிகவும் அப்பாவியாக இருந்தான். 'இல்லை' எனத் தலையாட்டினான். இவன் ஒரு திட்டம் போட்டுக் கொடுத்தான்.

அவன் சொன்னபடியே அந்த அப்பாவியும் நடந்துகொண்டான். காலையில் பயிற்சிக்காக விசில் ஒலித்தது. சொல்லித்தரப்பட்டதைப்போலவே காலை நொண்டி நொண்டி, முகத்தையும் ஒரு மாதிரியாக வைத்துக்கொண்டு மைதானத்துக்குப் போனான். அவனது நொண்டலைக் கவனித்த செல்வராசா வாத்தியார், முன்னால் வரச் சொல்லிக் அழைத்தார். முகத்தை அப்பாவியாக வைத்தபடி முன்னால் சென்றவன், தனக்குக் காலில் அல்சர் வருத்தம் எனவும், ஓட முடியாது எனவும் சொல்லித்தரப்பட்டதை

ஒப்பித்தான். வரிசையில் நின்ற பொடியள் எல்லோரும் விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கினர். செல்வராசா வாத்திக்குக் கோபம் வந்துவிட்டது. பச்சைமட்டை எடுத்து அவனை விளாசத் தொடங்கினார். "ஐயோ..! மாஸ்ரர். எனக்கு ஒண்டும் தெரியாது. அவர்தான் இப்பிடி சொல்லச் சொன்னவர்" என்று அவனை நோக்கிக் கையைக் காட்டினான். செல்வராசா வாத்தியார் கோபமாகக் கிச்சனுக்கு வந்து இவனுடன் எகிறிப்பாய்ந்தார். இவனும் இயக்கத்தில் இருந்ததினால் அவர் ஒன்றும் செய்ய முடியவில்லை. விஷயத்தைப் பொறுப்பாளருக்கு அறிவித்தார். உடனடியாகவே பொறுப்பாளர் அவனைக் கூட்டிவர ஆள் அனுப்பினார்.

❍ ❍

# 17

பொறுப்பாளர், அவனை யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னாருக்கு அனுப்பிவிட்டார். அப்போது விக்டர் மன்னார் பொறுப்பாளராக இருந்தார். மன்னாரில் வெடிமருந்துகளை இயக்கத் தெரிந்தவர்கள் தேவையாக இருப்பதாக விக்டர் மேலிடத்துக்கு அறிவித்ததால், இவனுக்கு அந்த இடமாற்றம் கிடைத்தது.

இவன் யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னாரில் இறங்கியபோது, இந்தியாவில் இருந்து பெண்கள் அணியினர் பயிற்சி முடிந்து கடல் வழியாக மன்னாரில் இறங்கியிருந்தார்கள். அவர்களை, கரன் பொறுப்பாகக் கொண்டுவந்து இறங்கியிருந்தார். இயக்கத்தின் முதலாவது ஆயுதப் பயிற்சி பெற்ற பெண்கள் அணி அது. இவனுக்கும் அவர்களைப் பார்க்கப் புதினமாக இருந்தது. இயக்கம் பெண்களுக்குப் பயிற்சி கொடுப்பதை அறிந்து வைத்திருந்தபோதும், அவர்கள் பயிற்சிகளை முடித்து இப்படி ஜீன்ஸ் ஷர்ட் போட்டு துப்பாக்கியும் கையுமாக வந்து நின்றபோது கொஞ்சம் ஆச்சர்யம் கலந்த அதிர்ச்சியாக இருந்தது.

அவர்களில் ஒருத்தி அவனைத் தெரிந்துவந்து கதைத்தாள். ஜீன்ஸ் ஷர்ட்டுடன், தலையையும்

பின்னால் பின்னி கட்டி ஆளே மாறியிருந்ததால் இவனால் அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை. அவள் தன்னை ‘அஜந்தி’ என்ற பின்னர்தான் அவனுக்கு நினைவு வந்தது. இவர்களின் ஊர்ப்பெட்டைதான். அவ்வளவு பழக்கமோ சொந்தமோ இல்லைதான். ஆனால், தெரியாத இடங்களில் எவ்வளவு தூரத்தவர்கள் என்றாலும் மனதுக்கு நெருக்கமாக, ஒருவித கூட்டிணைவுடன் இயங்குவதைப் பின்னாளில் பலமுறை உணர்ந்திருக்கிறான். அப்படி ஏதாவது உணர்வு உந்த அவள் வந்து கதைத்திருக்கலாம்.

அவள் ஆரம்பத்தில் ரெலோ அமைப்பில் இணைவதற்காகச் சென்றிருக்கிறாள். அப்போது ரெலோ பெண்களையும் தம்முடன் இணையுமாறு தீவிர பிரசாரம் செய்யத் தொடங்கியது. இந்தப் பிரசாரத்தில் அவர்களுக்கும் ஈ.பி.ஆர்.எல்.எஃப்–புக்கும் இடையில் சரியான போட்டி இருந்தது. அவளைப்போல மேலும் 30 பெண்கள் ரெலோவில் இணைய வந்திருந்தார்கள். அவர்களுக்குப் பயிற்சி கொடுப்பதாகக் கூறி தமிழ்நாட்டுக்கு அழைத்துச் சென்று வீடு ஒன்றில் தங்கவைத்த ரெலோ சில நாட்களிலேயே அவர்களைக் கைவிட்டுவிட்டது. அந்தரித்து நின்ற பெண்களுக்கு உதவுவதற்கு ஒரு பாதிரியார் முன்வந்தார். அவர்கள் பற்றிய தகவலை புலிகளிடம் கொடுத்து, அவர்களின் பராமரிப்புக்கு உதவுமாறு கேட்க, புலிகளும் அவர்களை ஏற்றுக்கொண்டனர். அவர்களை அடேல் தலைமையில் பிரபாகரன் பராமரித்ததோடு பின்னர் புலிகள் அமைப்பில் இணைந்தவர்களையும் சேர்த்து தமிழ்நாடு சிறுமலை என்னும் கிராமப் பகுதியில் ஆயுதப் பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தது. அவர்கள்தான் பயிற்சிகள் முடித்து நாடு திரும்பியிருந்தனர்.

மன்னாரில் பெண்கள் பயிற்சி முடித்துக் களத்துக்கு வந்தபோதும், யாழ்ப்பாணத்தில் அவனது பொறுப்பாளர் பெண்களை இயக்கத்தில் எடுக்க அவ்வளவாக அக்கறை காட்டாதது அவனுக்கு ஏன் என்று விளங்கவில்லை. அவர் பொறுப்பாக இருந்த காலத்தில் பெண்கள் மருத்துவம் போன்ற பணிகளுக்குத்தான் எடுக்கப்பட்டனர். பின்னர் தீப்பொறி குழுவினரின் கைக்குண்டு தாக்குதலில்

பொறுப்பாளர் காயமடைந்து இந்தியா சென்ற பின்னர்தான் பெண்கள் யாழ்ப்பாணத்தில் சேர்க்கப்பட்டனர்.

இவன் மன்னாருக்கு வந்த பின்னர், அங்கும் கண்ணிவெடிகள் வெடிக்கத் தொடங்கியிருந்தன. அவனும் தெரிந்தெடுத்தவர்களுக்குப் பயிற்சிகள் கொடுத்தான். அன்று அவன் பெண்கள் அணியில் நாலு பேருக்கு வெடி பொருள் பற்றிய பயிற்சி கொடுக்க வேண்டும். பொறி வெடிகளை வைத்து அவற்றை உரு மறைப்பது எப்படி என்ற பயிற்சி அந்தப் பெண்களுக்குக் கொடுப்பதற்காகத் தெரிவுசெய்திருந்த பற்றைக்காடுகள் அமைந்திருந்த இடத்துக்குத் தயாராகப் போயிருந்தான். கட்டம் போட்ட சேட், ஜீன்ஸ். நிமிர்ந்த நடை. பிஸ்டல் கட்டியிருந்த இடை. அவனைப் பார்த்ததும், "ஓ நீங்களா...! உங்களை ஏற்கெனவே பார்த்திருக்கிறனே" என்றாள் அநாயாசமாக.

இளவயது பெண்கள் என்றாலே ஓர் ஆணுக்கு முன்னால் வெட்கப்பட்டுத் தலைகுனிந்து வளைந்து நெளிந்து அல்லது மிரண்டு கதைக்கும் பெண்களை மட்டுமே பார்த்துப் பழகிப்போன அவன், ஆங்கிலப் படங்களில் மட்டுமே பார்த்த ஆயுதம் தரித்த கம்பீரமான முகத்துக்கு நேரே நிமிர்ந்து கதைக்கும் பெண் ஒருத்தியை இப்போதுதான் முதன்முதலாக நேரில் பார்க்கிறான். அவளைப் பார்த்துக்கொண்டே இருந்ததில் வார்த்தைகள் வரவில்லை.

"என்ன வாயுக்கை கொழுக்கட்டையோ?" என்றுவிட்டு சிரித்தாள். அப்போதுதான் சுதாரித்தவன்

"ஆ..! என்னையா... எங்கே... எப்ப?" – தடுமாறினான்.

"பாவம் குழந்தை இப்பதான் கதைக்கப் பழகுதுபோல. வெருட்டாதையடி" என்று சொல்லிச் சிரித்தாள் இன்னொருத்தி.

"நீங்கள் ஒருக்கா அங்கிள் வீட்டை (ஆன்டன் பாலசிங்கம் அவர்கள் வீடு) வந்தனீங்கள்தானே?"

"ஓ... ஓம்..." மீண்டும் அவனில் தடுமாற்றம்.

"அங்கேதான் உங்களைக் கண்டனான்" – பதில்

சொல்லாமல் அவளையே மீண்டும் ஒரு தடவை கண்ணால் அளந்தான். அவனைவிட நான்கு அல்லது ஐந்து வயது அதிகமானவளாக இருக்கலாம். உயரம் அவன் அளவுதான் வரும். கறுப்பான ஆனால் எடுப்பான தோற்றம். ஆயுதப் பயிற்சி எடுத்ததன் மிடுக்கு உடலில் தெரிந்தது. அவன் பார்த்துக்கொண்டேயிருக்க இடுப்பில் இருந்த பிஸ்டலை உருவியவள், அதைத் தடவி பார்த்தபடி, "என்ன... வந்த வேலை மறந்தாச்சோ?" என்றாள். உடனே சுதாரித்தவன் கொண்டுவந்த பொருட்களை எடுத்தபடி, "இண்டைக்குப் பொறி வெடியள் வைக்கிற முறையும் அதை உருமறைப்புச் செய்யுறது எப்பிடி எண்டு சில முறையளைப் பாப்பம். அது முதல் உங்கடை பெயருகளைத் தெரிஞ்சு கொள்ளலாமே" என்றான்.

ஒவ்வொருத்தரின் பெயராக அவர்களைக் காட்டிச் சொல்லிக்கொண்டு வந்தவள், கடைசியாக தனது பெயர் "சுதா" என்றாள்.

அன்றைய பயிற்சிகள் முடிந்துவிட்டது. அதற்குப் பின்னர் முயற்சி செய்து மீண்டும் இரண்டு தடவை அவளைச் சந்தித்திருந்தான். அவள் மீது ஏதோ ஓர் ஈர்ப்பு வந்துவிட்டதை மட்டும் அவன் உணர்ந்திருந்தான். ஆனால், காதல் என்று உறுதிசெய்ய முடியவில்லை. அதே ஈர்ப்பு அல்லது காதல் அவளிடமும் வந்திருக்குமா என்ற கேள்வியும், இயக்கத்தில் இருக்கும் ஒரு பெண்ணிடம் காதலைச் சொல்லப் போய் அவளுக்குப் பிடிக்காமல் அது இயக்கதுக்குத் தெரிய வந்தால் என்னவெல்லாம் நடக்கும் என்று கொஞ்சம் கற்பனையும் பண்ணிப் பார்த்தான். ஒரு துப்பாக்கியின் நுனி ஒன்று அவனது தலையை அழுத்துவது போன்றதொரு பிரமை. அதற்குப் பின்னர் மன்னாரில் மோதல்கள் அதிகரிக்க அவளையும் பார்க்க முடியாத நிலை.

அடம்பன் சண்டையில் விக்டர் கொல்லப்பட இரண்டு

*ராணுவத்தினர் கைதிகளாவும் பிடிபடுகிறார்கள். அந்தச் சண்டையில் இறந்துபோயிருந்த யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த ஏழு பேரது உடல்களோடு அவன் மீண்டும் யாழ்ப்பாணத்துக்குத் திரும்புகிறான்.*

*யாழ் போன பின்னர்தான் அவனுக்குள் இருந்தது வெறும் ஈர்ப்பு அல்ல, காதல் என்று புரிய ஆரம்பித்தது. மீண்டும் அவளைப் பார்க்க வேண்டும்போல் இருந்தது. விக்டர் இறந்த பின்னர் மன்னார் மாவட்டத்துக்கு ராதா பொறுப்பாளர் ஆகிறார். மீண்டும் அவன் மன்னாருக்குப் போயிருந்தாலும் அவளைச் சந்திக்கும் வாய்ப்புகள் கிடைக்கவில்லை. அவளது அணியினர் மாத்தையாவின் பொறுப்பின் கீழ் வன்னிக்குச் சென்றிருந்தார்கள்.*

# 18

இப்போ அவன் பலாலி ராணுவ முகாமை அண்மித்த ஒட்டகப்புலம் பகுதியில் புதிய முகாம் அமைத்துத் தங்கியிருந்தான். பச்சைக்கிளி டீச்சருக்கு அவனின் நல்ல விருப்பம். டீச்சர் வீட்டுக்குப் போனால் சாப்பிடாமல் போகவிட மாட்டார். விதம்விதமாகச் சமைத்துப் போடுவார். ஏதாவது அவசரம் என்று இவன் போக வெளிக்கிட்டாலும் டீச்சரின் இரண்டு மகள்மாரும் விட மாட்டார்கள். ஒருத்தி வாசலின் குறுக்கே நின்றுகொள்வாள். இன்னொருத்தி மோட்டார் சைக்கிளில் ஏறி இருந்துவிடுவாள். அவன் என்றாலே அந்தக் குடும்பமே உயிரைவிடும் எனப் பொடியள் பகிடியாகச் சொல்வார்கள்.

ஐயனினால்தான் பச்சைக்கிளி டீச்சர் அவனுக்கு அறிமுகமானார். அவனது நெருங்கிய சொந்தக்காரர்கள் ஒருநாள் எதேச்சையாகத்தான் அந்த வீட்டுக்கு வந்தார்கள். சொந்தக்கார வீடுகளைப் பார்த்து, உள்ளடுவதற்கு ஆரம்பத்தில் ஒரு காரணம்தான் இருந்தது. வயிற்றுப் பசி. ஆரம்பத்தில் சமையல் ஏற்பாடுகள், பரிவர்த்தனைகள் எல்லாம் முறையான ஒழுங்குக்கு வரவில்லை. பெரிய முகாம்களைத் தவிர்த்துத் தொலைவில் தங்கியிருப்பவர்கள் பாடுதான் பிரச்னை. அதனால்தான் இப்படியான இடங்களை வைத்திருந்தார்கள்.

ஐயனினால் அறிமுகமான பின்னர் விரைவிலேயே டீச்சர் வீட்டுக் குடும்பத்தில் ஒருவனாகிவிட்டான். டீச்சர்

வீட்டுச் சாப்பாட்டுக்காகவே அடிக்கடி வசாவிளானுக்கு வந்துபோனான். ஒருநாள் சாப்பிட்டுவிட்டு, முன்விறாந்தையில் எல்லோரும் கதைத்துகொண்டிருந்தபோது வோக்கி இரைந்தது. மெயினில் இருந்து அவசரமாக அழைத்தனர். அவசரமாகப் பழைய பூங்காவுக்கு வருமாறு பொறுப்பாளர் உத்தரவிட்டிருப்பதாகச் சொன்னார்கள். ஒரு நிமிடம் தாமதிக்காமல் மோட்டார் சைக்கிளில் ஏறிப் பறந்தான்.

பழைய பூங்காவில் பெரும்பாலான அனைத்து பொறுப்பாளர்களும் உறுப்பினர்களும் ஆயுதங்களோடு குவிந்திருந்தார்கள். பழைய பூங்கா அப்போது புலிகளின் பயிற்சி முகாமாகவும் இருந்ததால் பயிற்சி எடுப்பவர்கள் கீழே மைதானக் கொட்டில்களில் தங்கியிருக்க, பழைய உறுப்பினர்கள் மட்டும் பூங்கா கட்டடத்தின் மேல் மாடிக்கு அழைக்கப்பட்டார்கள்.

பொறுப்பாளர் பேசத் தொடங்கினார்.

“பெடியள் ஈ.பி இரண்டு நாளில் முடிஞ்சுது. அடுத்தது தம்பாதான் மிச்சம் இருக்கு. என்ன செய்யலாம் அடிக்கலாமா கதைச்சு பாப்பமா” என்கிறார்.

‘தம்பா இயக்கத்தை என்ன செய்யலாம்?’ என்ற கேள்விக்கு, ‘ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு அவர்களைச் சரணடைய சொல்லலாம். மறுத்தால் அடிக்கலாம்’ என்பதே பெரும்பாலானவர்களின் கருத்தாக இருந்தது. தம்பா இயக்கத்தை அடிக்க வெறும் ஐந்து நிமிடங்கள் போதுமானது என்பது எல்லாருக்கும் தெரிந்ததுதான். ஆனால், சும்மா இருந்த இயக்கத்தை அடிக்கக் கூடாது எனப் பொடியள் நினைத்தனர். கதைக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது. அதற்காக அவர்களது பிரதான முகாமில் நந்தனோடு போய்க் கதைப்பதற்காகப் பொறுப்பாளரின் வலது கரமாக இருந்த ஊத்தை ரவியை அனுப்புவதாக முடிவுசெய்யப்பட்டது.

சுத்தமாக தாடி வழித்து வாசனை திரவியங்கள் பாவிக்கும் ஒருவராக ரவி இருந்ததால், அவருக்கு ‘ஊத்தை ரவி’ என்ற பட்டப்பெயர் ஒட்டிக்கொண்டிருந்தது. நந்தன் தங்கியிருந்த தமிழீழ விடுதலை ராணுவத்தின் தலைமை

முகாமுக்கு ஊத்தை ரவி போனார். இயக்கத்தின் நிலைப்பாட்டைச் சொல்லி, சரணடையச் சொன்னபோது, நந்தன் சிறிது நேரம் வானத்தைப் பார்த்துகொண்டிருந்தார். அவரது முகம் பலவிதமான உணர்ச்சிகளை வெளிப்படுத்திக்கொண்டிருந்தது. இரண்டு கைகளாலும் முகத்தை ஒருமுறை அழுந்த துடைத்துவிட்டு, எங்கோ பார்த்தபடி “சரி” என்றார்.

உடனடியாகப் பழைய பூங்காவில் நின்றிருந்த பொறுப்பாளருக்கு வோக்கியில் ரவி தகவலைச் சொன்னதும், “பெடியள் தம்பா சரணடைஞ்சிட்டுது. நீங்கள் உங்கடை முகாம்களுக்கு போலாம்” என்றுவிட்டு பொறுப்பாளரும் போய்விட்டார்.

அவனும் முகாமுக்குத் திரும்பிக்கொண்டிருந்தவன், கோப்பாய் சந்தியைக் கடக்கும்போது அவனுக்குச் சுமதியின் ஞாபகம் வந்தது.

கொஞ்ச நாளாகவே சுதாவைப் பற்றிய நினைவுகளோடு அவளை எப்படியாவது பார்த்துவிட வேண்டும் என்று ஏங்கிக்கொண்டிருந்தவனுக்கு சுமதியிடம் அவள் பற்றிய தகவல்கள் ஏதாவது கிடைக்கலாம் என நம்பினான். சுமதி மாத்தையாவின் நம்பிக்கைக்குரிய பெண் போராளி. அவனுக்கும் நல்ல சினேகிதி. கனகாலமாகச் செயற்பட்டு வருகிறாள். கோப்பாய் பகுதியில் இருந்த சுதந்திரப் பறவை அலுவலகத்துக்குச் சென்றால் அவளைச் சந்திக்கலாம் என அங்குப் போனான். அலுவலகத்தில் விசாரித்தால், அவள் அங்கு இல்லை எனவும் பக்கத்தில் உள்ள சிறுவர் இல்லத்தில் நிற்பதாகவும் சொன்னார்கள். அங்கு போனபோதுதான் இயக்கம் சிறுவர் இல்லம் ஒன்றை தொடங்கியிருந்ததும் தெரிந்தது. அதற்குப் பொறுப்பாக அவளை நியமித்திருந்தனர்.

இவன் ஒருவித தயக்கத்துடன் அலுவலகத்துக்குள் நுழைந்தான். அலுவலகத்தில் இரண்டு பெண்கள் இருந்தார் கள். அவனை வரவேற்று உட்காரவைத்தவர்கள், விஷயத்தை உள்ளேயிருந்த சுமதியிடம் சொன்னார்கள்.

உள்ளேயிருந்த சுமதியின் அலுவலகத்துக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டான். சிரித்தபடி வரவேற்ற சுமதியிடம்,

“என்னடி அவ்வளவு பெரியாளாயிட்டியா? காக்கவைத்து பார்க்கிற அளவுக்கு நிலைமை” என்றபடி அமர்ந்தான். அவளுடன் இன்னொரு பெண்ணும் பதுமை மாதிரி உட்கார்ந்திருந்தாள். பல விஷயங்களைப் பற்றியும் கதைத்துகொண்டிருந்தார்கள். திடீரென அவள்,

“டேய், மாத்தையாண்ணைக் கலியாணம் கட்டினது தெரியும்தானே. அவரின்ரை குடும்பத்துக்குப் பாதுகாப்புப் பொறுப்பை எடுக்கிறியா? நம்பிக்கையான ஓர் ஆளைத் தேடுகினம். எனக்குத் தெரிந்து நீ நல்ல நம்பிக்கையான பெடியன்” என்றாள்.

இதென்ன வில்லங்கமா இருக்கு, சுதாவை தேடி வந்தால் இவளென்ன புதுக்கதை கதைக்கிறாள் என நினைத்தபடி

“மாத்தையாவுக்கு விளக்கு பிடிக்க நான் இயக்கத்துக்கு வரவில்லை” என்றபடி கோபமாக எழுந்து வந்துவிட்டான்.

அவளைக் காணவே மாட்டேனோ என்ற பயம் அவனுக்கு வந்துவிட்டது. எல்லோருடனும் இதனைக் கதைக்க முடியாது. நம்பிக்கையான தெரிந்த ஓரிரண்டு பேருடன் கதைத்துப் பார்த்தான். யாருக்கும் அவளைத் தெரிந்திருக்கவில்லை. மாத்தையா மீதான பயத்தால் யாரும் கொஞ்சமும் ரிஸ்க் எடுக்க விரும்பவில்லை.

அவனுக்குக் கொஞ்ச நாளிலேயே அதிர்ஷ்டம் அடித்தது. ராதா யாழ் மாவட்ட தளபதியானதும், வன்னியில் இருந்த பெண்கள் அணியினரும் யாழ்ப்பணத்துக்கு வரவழைக்கப்பட்டனர். அவர்களின் முகாம் கோப்பாய்ப் பகுதியில் அமைக்கப்பட்டது. யாழ் கோட்டை சாந்தி தியேட்டர் பகுதி காவல் பொறுப்பும் அவர்களிடம் கொடுக்கப்பட்டது.

விஷயத்தை அறிந்ததும் இவனுக்கு இருப்புக்கொள்ள வில்லை. இரண்டொரு தரம் கோட்டைப் பக்கம் போய்ப் பார்த்தான். அவள் எதிர்ப்படவே இல்லை. எல்லோரிடமும் விசாரிக்க முடியாது. ஆனாலும் விடாமல் அந்தப் பக்கம் போய்க்கொண்டிருந்தான். அவனது முயற்சிக்கு ஒருநாள் பலன் கிட்டியது. கையில் எம்–16 துப்பாக்கியோடு மிடுக்காக நடந்து வந்த அவளை மீண்டும் கண்டுவிட்டான். கிடைத்த கொஞ்ச நிமிடங்களுக்குள் அவளின் காவல் கடமை நேரம்

என்னென்ன நாட்கள் என்றெல்லாம் விவரங்களைத் தெரிந்துகொண்டான்.

அவனுடன் கதைக்கும்போது அவளுக்குள் இருந்த படபடப்பு, பயம் எல்லாத்தையும் வைத்து யோசித்ததில் அவளுக்குள்ளும் அது வந்திருக்கும் என்றே உறுதியாக நம்பியிருந்தான். ஆனாலும் நேரே கேட்க பயம். கடிதமாக எழுதலாம் என்று முடிவெடுத்திருந்தான். ஆனால், எப்படி எழுதுவது? வாயால் கேட்டு அவள் மறுத்துவிட்டு ஒருத்தரிடமும் சொல்லாமல் விட்டால் பிரச்னை அதோடு முடிந்துவிடும். ஆனால், கடிதம் எழுதி யாரிடமாவது பிடிபட்டால் எழுத்து மூல ஆதாரம் வேறு? மண்டை வெடிதான்.

என்ன செய்யலாம் என யோசித்தவனுக்கு வித்தியாசமான ஐடியா தோன்றியது. அவளுக்குப் பிடித்தமான 'மாமரத்து பூவெடுத்து மஞ்சம் ஒன்று போடவா...' என்ற பாடலை மட்டும் ஒரு ஓடியோ கசட்டில் இரண்டு பக்கமும் பதிவுசெய்தவன், ஒரு கடுதாசியில் 'ஆம்... இல்லை..' என்று மட்டும் எழுதி, "அதில் புள்ளடி மட்டும் போட்டால் போதும். பிடிக்காட்டி கிழித்தெறிந்துவிடு" என்று சொல்லி அவள் கையில் திணித்துவிட்டுப் போய்விட்டான்.

அடுத்த தடவை அவளை காவல் அரண் பகுதியில் சந்திக்கும்போது அவள் ஒரு கன்டொாஸ் சாக்லேட் பையை நீட்டினாள். அதைக் கொண்டுபோய்ப் பிரித்துப் பார்த்தான். அதற்குள் அவன் கொடுத்திருந்த கடுதாசியில் 'ஆம்' என்றதற்கு மேல் புள்ளடியிட்டிருந்தது. அவனுக்கு அன்றிருந்த மகிழ்ச்சியில் பலாலி ஆமிக்காம்புக்குக் கொஞ்ச செல்களை அடித்துவிட்டான். அதில் ஒன்று பாதிரியார்களின் தோலகட்டி நெல்லிரச யூஸ் தொழிற்சாலைக்குள்ளும் விழுந்து வெடித்தது பிறகுதான் தெரியவந்திருந்தது.

இந்தக் காதல் இப்படியே வளர்ந்துகொண்டு சென்றது. கோட்டையைச் சுற்றி நிலைகள் அமைத்திருந்த புலிகளின் பின் தளங்களில் அவர்கள் காதலை வளர்த்தனர். ஒருநாள் அவளைச் சந்தித்துவிட்டு சைக்கிளை உருட்டியபடி வைத்தியசாலை பிரதான வீதியில் ஏறியபோது, இரவு ரோந்தில் வந்த டீமிடம் அகப்பட்டுவிட்டான். அவர்கள்

*விஷயத்தை ராதாவிடம் சொல்லிவிட்டார்கள். ராதா அவனைக் கூப்பிட்டு பேசினார். ராதா அவனுடன் நல்ல மாதிரி. அதனால்தான் இந்தளவுடன் தப்பித்தான்.*

*இது நடந்த கொஞ்ச நாளில், ஒரு பின்மதியத்தில் வோக்கியை தலைமாட்டில் வைத்துவிட்டுப் படுத்திருந்தான். அவனது அலைவரிசையும் இணைக்கப்பட்டிருந்த நிர்வாகத்துக்குட் பட்ட நிலையங்களுக்கு இடையில் வழமையான சம்பா ஷணை நடந்துகொண்டிருந்தது. அவற்றைச் சுவாரஸ்யம் இல்லாமல் கேட்டுக்கொண்டிருந்தான்.*

*அப்போதுதான் ராதா கட்டுவன் பகுதியில் இறந்துவிட்ட செய்தியை மெயின் யாருக்கோ அறிவித்தது.*

❍ ❍

# 19

இயக்கத்தில் இருந்த முக்கியமான வெடிமருந்துக் காரர்களை எல்லாம் அவசர அவசரமாக ஒன்றுகூடுமாறு ஒருநாள் அழைப்பு விடுக்கப்பட்டது. வழமையான ஏதாவது விஷயமாக இருக்கும் என்றுதான் நினைத்துப்போனான். ஆனால், அது முக்கியமான கூட்டமாக இருந்தது.

புதிய பொறுப்பாளரான குமரப்பா கூட்டத்தைத் தலைமைத் தாங்கினார். “பெடியள் எல்லா இயக்கத்தையும் நாங்கள் தடை செய்திட்டம். இனி மற்ற இயக்கங்களால் பிரச்னை வராது. அடுத்ததா யாழ்ப்பாணத்தில் ராணுவம் பெரிய நடவடிக்கையைச் செய்யப்போகிது” என எடுத்த எடுப்பிலேயே சொன்னவர், இயக்கம் புதிய தந்திரோபாயம் ஒன்றை கைக்கொள்ளப்போவதாகக் கூறினார். அதாவது, “பெருமெடுப்பில் ராணுவம் மேற்கொள்ளும் படை நடவடிக்கையை எதிர்கொள்ளவல்ல ஆள்பலம் இயக்கத்திடம் இல்லாத காரணத்தினால், வெடிமருந்துகளின் மூலம் சிங்களவனைச் சந்திக்கப்போகிறோம்” என்றார்.

இதன்படி அணிகள் பிரிக்கப்பட்டு வடமராட்சியின் பல பகுதிகளிலும் இரவு–பகலாக வேலை செய்தனர். வடமராட்சிதான் ராணுவத்தின் இலக்காக இருக்கலாம் என இயக்கம் நம்பியது. ராணுவம் முன்னேறலாம் எனக் கருதப்பட்ட வீதிகளில் கண்ணிவெடிகள் பொறிவெடிகளை வைத்து வெடிப்பதற்குத் தயாராக்கி, அந்தப் பகுதிகளில் நிலைகொள்ளும் தாக்குதல் அணிகளிடம் பொறுப்பை ஒப்படைப்பதுதான் இவனது அணியின் வேலை.

பல இடங்களிலும் சிதறியிருந்த இயக்கப் போராளிகள்

ஒன்று திரட்டப்பட்டுத் தாக்குதல் அணிகளாக்கப்பட்டு, வடமராட்சிக்கு அனுப்பப்பட்டனர். வன்னியில் இருந்து மாத்தையாவின் குழுவும் வந்திருந்தது. மாத்தையாவின் குழுவுக்குத் தலைமைத் தாங்கி வந்த அருண் மாஸ்ரரை கனநாளின் பின்னர் கண்டு கட்டிப்பிடித்துக் கதைத்தான். இவனைக் காண வேண்டும் எனத் தான் இரண்டு நாளாகத் தேடியதாகவும், நல்லவேளையாக இப்போது நேரில் சந்தித்ததாகவும் கூறினார். சுற்றிவரப் பார்த்தவன் தனியாக அழைத்துச் சென்று இவனின் கையைப் பிடித்துக் கதைக்கத் தொடங்கினான்.

'இவன் கவனம் இல்லாமல் நிற்கும் தருணம் பார்த்து இவனைப் போட்டுதள்ள வேண்டும்' என அங்கு வந்திருந்த குழுவில் ஒருவனுக்கு மாத்தையா கட்டளையிட்டிருப்பதாக அருண் மாஸ்ரர் சொன்னார்.

மாத்தையாவுக்குத் தன்னில் அப்பிடி என்ன கோபம் என்பது இவனுக்கும் தெரியவில்லை. அருண் மாஸ்ரருக்கும் தெரியவில்லை.இதென்ன புதுத் தலையிடி என மண்டையைப் பிய்த்துக்கொண்டிருக்க, ராணுவம் முன்னேற்றதைத் தொடங்கிவிட்டது. இவனுக்கு முன்னரண் பக்கமே செல்ல யோசனையாக இருந்தது. அதனால் இவனுடன் நின்ற ஆறு பேருடன் இயன்ற வரை தனிமையான பகுதிகளைத் தேர்ந்தெடுத்தே கண்ணிவெடிகளை வைத்தான். அவனைப் பழிவாங்கும் எண்ணம் ஏன் மாத்தையாவிடம் வந்தது என்று சில நாட்களின் பின்னர்தான் இவனுக்குத் தெரியவந்திருந்தது. கோப்பாயில் சுமதியின் அலுவலகத்தில் மாத்தையாவை இவன் திட்டும்போது, சுமதியுடன் பக்கத்தில் இருந்ததுதான் மாத்தையாவின் மனைவி கல்பனாவாம்.

எப்போதும் பின் பக்கத்தில் இருந்து வெடி விழலாம் என்ற பயம்தான் அவனுக்குக் கூடிக்கொண்டிருந்தது. இதனால் ஒழுங்காக வேலை செய்ய முடியாமல் கஷ்டப்பட்டான்.

பருத்தித் துறையின் மூன்று பிரதான வீதிகள் இணையும் சந்தியான தென்மராட்சி மற்றும் வலிகாமம் பிரியும் சந்தியில் வெடிபொருட்களைப் புதைத்துக்கொண்டிருந்த வேலைகளை நிறுத்திவிட்டு, தனது ஆறு பேர் கொண்ட சிறிய அணியைப் பின்நகர்த்தத் திட்டமிட்டு தனது வோக்கியின் அலைவரிசையை மாற்றி அச்சுவேலிப் பகுதியை நோக்கி பின்வாங்கத் தொடங்கியிருந்தான்.

தொண்டைமானாறு முகாமில் இருந்து ராணுவம் இப்போது புறாப் பொறுக்கிச் சந்தி வரை முன்னேறி

பருத்தித் துறை வீதியால் வரும் ராணுவத்தோடு இணைந்து அச்சுவேலிப் பகுதிக்கு முன்னேறுவதற்காகக் காவல் அரண் அமைத்து காத்திருக்கிறார்கள். அவன் வடமராச்சிக்குப் போக முன்னரேயே முன்னேற்பாடாக வல்வை பாலத்துக்குக் கண்ணிவெடியை தயார்செய்து கொடுத்துவிட்டுப் போயிருந்தான். இப்போது வல்வை வெளியையும் தொண்டைமானாற்றையும் கடக்க வேண்டும் வீதியால் போக முடியாது, நேரம் அதிகாலை 3 மணியைத் தாண்டியிருந்தது; நடக்கத் தொடங்கியிருந்தார்கள்.

ஆமிக்காரன் அவ்வப்போது பராலைட் அடிப்பதும் சுடுவதுமாக இருந்தான். அவனது குழு பரா அடிச்சதும் விழுந்து படுப்பதும் பிறகு ஓடுவதுமாக இருந்தார்கள். இப்போது தொண்டைமானாற்றைக் கடக்க வேண்டும். அதைக் கடந்துகொண்டிருக்கும்போது பராலைட் வெளிச்சம் ஒன்று வெளிச்சத்தைப் பாச்சியது துப்பாக்கி சூடு சிறிய பற்றைகளில் இருந்து வந்தது. அப்போதுதான் ராணுவம் வல்லை வெளியிலும் பரவி நிலையெடுத்திருந்தது புரிந்தது. தொடந்து பரா வெளிச்சம் ஏவப்படப் பலாலியில் இருந்து இரண்டு உலங்குவானூர்தி அங்கு வந்து தாக்குதலை தொடங்கியிருந்தன. அச்சுதனுக்கு வெடி விழுந்து இறந்துவிட்டிருந்தான். அடுத்ததாக அவனின் இடது காலை குண்டுகள் துளைத்துப் போகக் கீழே விழுந்தான். நடக்க முடியவில்லை. காலை, கையால் தூக்கிப் பார்த்தான். ரத்தம் சீறியது. காலை நிலத்தில் ஊன்ற முடியவில்லை.

“டேய், வெடி விழுந்திட்டுதடா!” என்று கத்தினான். டொச்சன் ஓடிவந்து அவனைத் தோளில் தூக்கியபடி ஓடினான்.

வல்லை பாலம் பெரும் சத்தத்துடன் வெடித்துச் சிதறுகிறது. சில செக்கன்கள் மேலெழுந்த கற்கள் மழைபோலக் கீழே கொட்ட மறுபக்கம் காவலில் நின்றிருந்த புலிகள் உலங்குவானூர்தி மீதும் பாலத்தை நோக்கியும் சுடத் தொடங்குகிறார்கள். ராணுவத்தின் தாக்குதல் குறைந்துபோக உலங்குவானூர்தி பலாலி நோக்கி திரும்பியதும் பலாலியில் இருந்தும் தொண்டைமானாற்று முகாமில் இருந்தும் செல்கள் ஏவத்தொடங்குகிறார்கள். வெளியை கடந்து அச்சுவேலி பகுதிக்கு அவனைச் சுமந்தபடி டொச்சனும் அவனது அணியும் வந்து சேர சீறியபடி வந்து விழுந்த செல் ஒன்று வெடித்து அதன் துண்டு ஒன்று டொச்சனின் கழுத்தை அறுத்துச் செல்ல அவனைத் தாங்கியபடி டொச்சனும் நிலத்தில் விழுகிறான்.

மறுபக்கம் நின்றிருந்த ரஞ்சனின் அணியில் நீக்கிறோ பாபு அவர்களை இழுத்துப் போகிறான்.

மறுநாள் யாழ் வைத்தியசாலையின் ஆறாவது வார்ட்டில் அவன் கண் விழித்துப் பார்க்கிறான். பெரும்பாலும் காயமடைந்த இயக்க உறுப்பினர்களாலேயே ஆறாம் வார்டு நிறைந்திருந்தது. அவனுக்குக் காலில் தொடை வரை அசையாமல் மாக்கட்டுப் போட்டு, காலை ஒரு கம்பியில் கட்டியிருந்தார்கள். கால் வலி தொடங்கியிருந்தது. கால் எலும்பு உடைந்து பொருத்தியிருக்கிறார்கள் என்பது அப்போதுதான் புரிந்தது. அவனுக்கு இரண்டு கட்டில் தள்ளி டொச்சனை கிடத்தியிருந்தார்கள். டொச்சனின் மயக்கம் தெளிந்திருக்கவில்லை. குளுக்கோஸும், சுவாசிப்பதற்கு இலகுவாகக் குழாய்கள் செருகியிருந்தார்கள். அவனது கழுத்தைச் செல் துண்டு அறுத்துச் சென்றிருந்தாலும் சுவாசக் குழாய் அறுபடாததால் உயிர் தப்பியிருந்தான். செய்தியறிந்து அவனது உறவுகள் நண்பர்கள் வந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள். மறுநாள் சாதாரண உடையில் அவளும் சோதியாவும் அவனைப் பார்க்க வந்திருந்தார்கள். அவளிடம் நடந்தது எதையும் அவன் சொல்லவில்லை. கவனமாக இரு என்று மட்டும் சொல்லிவைக்கிறான். ஒரு கண்டொஸ் பையை அவனிடம் கொடுத்துவிட்டுப் போவதற்குப் புறப்பட்டவளின் கையை அவன் பிடித்ததும் நிலை குலைந்து லேசாக அவன் மீது சாய்ந்ததை அங்கிருந்த பல கண்கள் கவனிக்கத் தவறவில்லை.

வடமராட்சிச் சண்டை உக்கிரமாக நடந்துகொண்டி ருந்ததால் ஏராளமான போராளிகள் காயமடைந்து யாழ் வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட, அங்கு ஏற்பட்ட இடநெருக்கடி காரணமாக ஆரம்பச் சிகிச்சை பெற்ற போராளிகள் உடனடியாகக் கோப்பாய்ப் பகுதியில் இருந்த ‘பாப்பா வீடு’ என்ற முகாமுக்கும், பெரியளவு மோசமான காயக்காரர்கள் தமிழ்நாட்டுக்கும் அனுப்பட்டுக்கொண்டிருந்தனர். அதேபோல இரண்டு வாரம் வைத்தியசாலையில் கழித்தவனைப் பாப்பா வீட்டுக்குக் கொண்டுபோவதற்குத் தயாராகியிருந்தார்கள். மீண்டும் மாத்தையாவினால் ஏதாவது பிரச்னை வரலாம் என யோசித்தவன், நண்பர்களின் உதவியுடன் தனது வீட்டுக்கே போயிருந்தான். அதன் பின்னர் திடீரென இந்திய ராணுவம் உணவுப் பொதிகளை யாழ்ப்பாணத்தில் வீசியதோடு இந்தியாவின் அழுத்தத்தால் சண்டை நிறுத்தப்பட்டுப் பேச்சுவார்த்தைகள் தொடங்கின.

அதன் பின்னர் ஒருதடவை மட்டுமே அவளை அவன் சந்தித்திருந்தான். மீண்டும் இந்திய ராணுவத்தினருடன் மோதல்கள் ஏற்பட, அவள் தனது குழுவுடன் வன்னிக்கு சென்றுவிட்டிருந்தாள். அதன் பின்னர் அவளை அவன் சந்திக்கவே இல்லை.

இயக்கத்துக்குப் போய் மூன்று ஆண்டுகளின் பின்னர் காயமடைந்து வீட்டுக்கு வந்திருந்தான். மூத்த அண்ணன் மேற்படிப்புக்காக லண்டன் போயிருந்தான். இரண்டாவது அண்ணனுக்குச் சவுதியில் வேலை. அக்காவுக்கும் சொந்தத்துக்குள் சவுதிப் பெடியனுடன் திருமணமாகி ஒரு மகளும் பிறந்திருந்தாள். இவையெல்லாம் யாராவது தகவல்களாகச் சொல்லி அவனுக்குத் தெரிந்திருந்தது. எந்தக் குடும்ப நிகழ்வுக்கும் அவன் வந்திருக்கவில்லை. அவன் வந்ததில் இருந்து அப்பாவின் நச்சரிப்புத் தாங்க முடியவில்லை. பொறுத்துக்கொண்டு பேசாமல் இருந்தான். இடையிடையே அம்மா குறுக்கிட்டு அப்பாவை வாய் அடைக்கச் செய்தது கொஞ்சம் நிம்மதியாக இருந்தது. “எப்பிடித்தான் இந்தாளுக்கு ஏழு பிள்ளையளைப் பெத்தனி?” என்று அம்மாவிட்டை கேக்க வேணும்போல இருந்தாலும், அம்மா கண்ணைக் கசக்க தொடங்கிடுவார் எண்டதால் பேசாமல் பொறுத்துக்கொண்டிருந்தான்.

மத்தியானம் அளவில் கதிரையைத் தூக்கி முற்றத்தில் போட்டு அமர்ந்திருந்தான். காலில் போட்டிருந்த மாக்கட்டு உள்ளே அரிக்கத் தொடங்கியிருந்தது. ஒரு குச்சியை எடுத்து உள்ளே செருகிக் கொஞ்சம் சொறிந்துகொண்டிருந்தான். எதிரே அம்மா சுளகில் இருந்த அரிசியில் நெல்லை பொறுக்கிப்போட்டுக்கொண்டிருந்தார். “டேய், கலியாணத் துக்கும் வரேல்லை. இந்தா மருமகளையாவது தாலாட்டு” என்றபடி அக்கா மகளைக் கொண்டுவந்து அவனின் மடியில் கிடத்திவிட்டு துணி துவைக்கப் போய்விட்டாள். முன்னாலை கோழியள் அம்மா எறிந்த நெல்லைக் கொத்திக்கொண்டிருக்க, ஒரு கோழியைச் சேவல் மடக்கிக் கொண்டிருந்தது.

வெளி கதவு திறந்து சத்தம் கேட்க “நான் அப்பவும் சொன்னான். இந்தியாவாலதான் எங்களுக்குத் தீர்வு கிடைக்குமெண்டு. யார் கேக்கிறாங்கள். இந்தா இந்தியா வத்திட்டுது. நாடு பிடிக்கப்போறம் எண்டு போய்க் காலை உடைச்சதுதான் மிச்சம். மூத்தவன் லண்டனில் அடுத்தவன் சவுதி. இவன் ஒண்டுக்கும் உதவாத தண்டச்சோறு” என்று சத்தம் போட்டபடி அப்பா சைக்கிளை நிப்பாட்ட

அவனுக்குக் கோபம் பொத்துக்கொண்டுவர பின்னால் இடுப்பில் செருகியிருந்த கைத்துப்பாக்கியை எடுத்தான். பெட்டைக்கோழியை அமுக்கி முடிந்துகொண்டையைச் சிலிர்த்து நிமிர்ந்து நின்ற சேவலைப் பார்த்து குறிவைத்து விசையை இழுக்க ‘டுமீல்’ என்ற சத்தம் சேவல் சுருண்டு விழுந்தது. சத்தம் கேட்டதும் அம்மா பயத்தில் சுளகைப் போட்டுவிட்டு ஓடிப்போய் அப்பாவை வீட்டுக்குள் இழுத்துக்கொண்டு போக, வேகமாக ஓடிவந்த அக்கா வீரிட்டு அழுதுகொண்டிருந்த குழந்தையைத் தூக்கியபடி அவனது முதுகில் ஓங்கிக் குத்தி, “நீ திருந்தவே மாட்டியா. போடா வீட்டைவிட்டுப் போடா..” என்று கத்தினாள். வேகமாக எழுந்தவன் கெந்தியபடி போய், மோட்டார் சைக்கிளை தொழிற்சாலை முகாமை நோக்கி இயக்க ஆரம்பித்தான். என்னதான் சண்டித்தனம் காட்டினாலும், இண்டைக்கு வீட்டிலை கோழி கறியாயிருக்கும். சாப்பிடாமல் வந்திட்டமே என்று சாதுவான கவலையாகவும் இருந்தது அவனுக்கு.

❍ ❍

# 20

முகாமில் பொடியள் எல்லோரும் பேய் அடித்தது மாதிரி இருந்தார்கள். பாபு முகம் குப்புறப் படுத்திருந்தான். சில நேரங்களில் அவனைப் பார்க்க, இறந்த சடலத்தை நினைவூட்டினான். இவனுக்கு மனசு கனத்தது. இவனது தலையும் விறைத்துப்போய்தான் இருந்தது. முகாமுக்குள் இருந்தால்தான் பிரச்னை, வெளியில் போய் வரலாம் என்றால் அது இன்னும் பெரிய தலையிடியாக இருந்தது. முகாமில் இருக்க மாட்டாமல் கனபொடியள் இப்படித்தான் வீதியில் அலைந்து திரிந்தார்கள். அவர்களுடன் கதைத்தால், இன்னும் பெரிய தலையிடியாக இருக்கும். விரக்தியும் அவநம்பிக்கையும் கலந்த முகத்துடன் அலைந்தார்கள். எதிரே வருபவர்களை மறித்து அவநம்பிக்கையை விதைத்துச் சென்றார்கள்.

பாபுவை மெதுவாகத் தட்டி எழுப்பினான். பாபு உணர்ச்சியற்ற முகத்துடன், திரும்பிப் பார்த்துவிட்டு, பழையபடியே படுத்துக்கொண்டான். மீண்டும் முதுகில் தட்டினான். பாபு மெல்லிய குரலில் “மச்சான், நான் வீட்டை போகப்போறன்” என்றான்.

இவனுக்கு என்ன சொல்வதென்றெ தெரியவில்லை. சற்று நேரம் மௌனமாக இருந்தான். இந்த நாட்களில் வீட்டுக்குப் போகப்போகிறேன் என, கனபேர் சொல்லக் கேட்டிருக்கிறான். இதுவரை காலமும் உயிராலும் ரத்தத் தாலும் கட்டி வளர்க்கப்பட்ட கனவு, கானலாகப்

போவதாக நேற்று பரணி ஏற்ற – இறக்கங்களுடன் சொன்னான். அவன் நல்ல கதைக்காரன். எப்போதும் எதுகை மோனையாகத்தான் கதைப்பான். அவன் கடந்த இரண்டு நாட்களாக அவநம்பிக்கைகளை மட்டுமே ஏற்ற–இறக்கமாகக் கதைத்துக்கொண்டிருந்தான்.

இப்போது பாபுவுக்கு என்ன சொல்வது எனத் தெரியாமல், "கொஞ்சம் பொறு, தலை ஏதாவது முடிவெடுக்கும். அதுவரை பேசாமல் இருப்பம்" என்று ஆறுதல் படுத்தினான். இந்தப் போராட்டம் எங்கே போய் முடியப்போகிறது என, கடந்த இரண்டு நாட்களாக இவனுக்கும் பெரிய குழப்பம். இயக்கத்தின் அடிப்படையே ராணுவபலம்தான். அதனை இழப்பது நாங்கள் சரணடைவதற்குச் சமம் எனப் பரணி காலையில் சொன்னது திரும்பத் திரும்ப எதிரொலித்துக்கொண்டிருந்தது.

இயக்கம் ஆயுதங்களை ஒப்படைக்கச் சம்மதித்துவிட்டதாம் என்ற தகவல் கிடைத்தபோது, இவனுக்குத் தலை விறைத்தது. அது சும்மா கதையாக இருக்கும் என்றுதான் ஆரம்பத்தில் நினைத்தான். பின்னர் அவசரச் சந்திப்பு ஒன்றுக்காகப் பழைய பூங்காவுக்கு முகாம் பொறுப்பாளர்கள் அனைவரும் தலைமையில் அழைக்கப்பட்டிருந்தனர். அவர் முகத்தைத் தொங்கப்போட்டுகொண்டு வந்திருந்தார். காலையில் வந்த செய்தி உண்மை என்பதையும், இயக்கம் ஆயுதங்களை ஒப்படைக்கப்போகிறது என்பதைக் கூட்டத்தில் உறுதிப்படுத்தினார்.

இந்தியன் ஆமி வந்ததே கனபொடியளுக்குப் பிடிக்கவில்லை. இயக்கம் தேவையில்லாமல் இந்தியா சொல்வதற்குத் தலையாட்டுகிறது என்று இவனும் அபிப்பிராயப்பட்டான். கூட்டத்தில் இவனும் இன்னும் பலரும், அது பற்றிக் காரசாரமாகக் கதைத்துத் தலைவரிடம் வாங்கிக்கட்டினார்கள். இந்தியா சொல்வதை எப்படி நம்பலாம் என்பதுதான் இவர்களின் கேள்வி. பொறுத்திருந்து பார்க்கலாம் என்ற அறிவித்தலோடு கூட்டம் முடிந்துவிட்டிருந்தது. மறுநாள் காலையில் முகாம் பொறுப்பாளரிடம் போன பரணி, அவரிடம் ஒன்று கேட்டிருக்கிறான்.

"ஊரில யாருக்காவது கடன் கொடுப்பது என்றால்

என்ன செய்வினம்?"

"ம்.. தெரியேல்லை.. சொல்லு"

"இல்லை.. ஒரு பொறுப்பாவது கேட்க மாட்டினமோ?"

"ம்.. கேட்பினம்"

"கொஞ்சம் காசு குடுக்கிறதுக்கே இப்பிடி பொறுப்புக் கேட்க. ஒன்றும் இல்லாமல் எங்கட ஆயுதங்களை ஒப்படைக்க எப்பிடி முடிவெடுத்தனீங்கள்?"

பொறுப்பாளர் தலையில் கை வைத்துக்கொண்டு உட்கார்ந்துவிட்டார். அவர் பாவம். அவர் வெறும் முகாம் பொறுப்பாளர்தான்.

மாலையில் அரசியல் பொறுப்பாளர் வந்தார். "எல்லா முகாம்களிலும் பொடியள் இப்படி இடி விழுந்துபோய் இருக்கிறார்கள் என்றும், ஏன் இப்படி இருக்கிறியள்?" என்றும் ஒன்றுமே தெரியாததைப்போலக் கேட்டார். பொடியளுக்கு எரிச்சலாக இருந்தது. இந்தாளுக்கு ஒன்றுமே தெரியாதுபோல என ஒருவன் முணுமுணுத்தான். சிறிய அமைதி நிலவியது. இவன்தான், பிரச்னையைச் சொன்னான். இந்தியாவுடனான ஒப்பந்தம், ஆயுத ஒப்படைப்புப் பற்றி எல்லாம் சொல்லிவிட்டு, "நாங்கள் இனி வீட்டுக்குப் போகலாமா?" என்றான்.

அவர் சிரித்துவிட்டு, "இதுவும் போராட்டம்தான்" என்றார். "போராளிகள் புத்திசாலிகளாகவும், ஆயுதப்போர் மற்றும் அரசியல் பேச்சு இரண்டிலுமே வல்லவர்களாக இருக்க வேண்டும்" என்றார். இயக்கத்துக்கு எல்லாம் தெரியும் என்றும், இப்படிக் குழப்பமடைவர்களைத் தெளிவுபடுத்துவதற்காகத்தான் தலைவர் தன்னை முகாம்களுக்குப் போகச் சொன்னதாகச் சொன்னார். "ஒருவரும் குழம்ப வேண்டாம். ஆயுத ஒப்படைப்பு என்ற பெயரில் நடக்கப்போவது ஒரு சம்பிரதாயம்" என்றார். "இந்தியன் தந்த பழைய துவக்குகள் வைப்பதற்கு இடம் இல்லாமல் கிடக்கின்றன. அதுகளை அவங்களிடமே குடுப்பம். அதை ஈ.பி–க்கும் புளொட்டுக்கும் குடுக் கட்டும்" என்று சொல்லி சிரித்தார். பொடியளுக்கு இந்தப் பேச்சு நம்பிக்கையைக் குடுத்த மாதிரி இருந்தது.

குசுகுசு எனக் கதைத்துகொண்டார்கள். எல்லோருமே ஒரு பிடிக்காகத்தான் காத்திருந்திருக்கிறார்கள். அது கிடைத்ததும், பற்றிக்கொண்டுவிட்டார்கள். ஒரு நம்பிக்கை மிக்கச் சொல்லில் இருந்து, தங்கள் குழப்பங்களைத் தீர்த்துகொண்டனர்.

இயக்கம் அடுத்தச் சில நாட்களில் ஆயுதங்களை ஒப்படைத்தது. அதனைப் பார்க்கப் பார்க்க இவனுக்குச் சிரிப்பாக இருந்தது. முகாம்களில் இருந்த பழைய துப்பாக்கிகள், இரும்புக் குழாய்கள், பழுதடைந்த அயிட்டங்கள் என வைத்து பராமரிக்க முடியாதவற்றை யெல்லாம் வாகனங்களில் ஏற்றிக்கொண்டுபோய் பலாலியில் இந்தியர்களிடம் கொடுத்தார்கள். அவர்களும் சிரித்தபடி வாங்கி, படம் எடுத்து பத்திரிகைகளிலும் தொலைக்காட்சியிலும் பிரசுரித்தனர்.

ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு, பழையபடி துப்பாக்கி களுடன் வெளியில் திரிய முடியாதுதானே. அதனால் துப்பாக்கிகளுடன் யாரும் வெளியில் நடமாடக் கூடாது என இயக்கம் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்திருந்தது.

வெறும் சயனைட் குப்பிகளை மட்டும் அணிந்தே வெளியில் திரிந்தார்கள். சனங்கள் ஒருவித இரக்கத்துடன் பொடியளை பார்த்தனர். இப்பிடி எல்லாத்தையும், இந்தியனிட்ட கொடுத்திட்டு வெறுங்கையாக அலையுறாங்களே. நாளைக்கு ஏதும் நல்லது கெட்டதென்றால்... எப்பிடிச் சமாளிக்கப்போறாங்கள்? என வெளிப்படையாகவே அங்கலாய்த்தார்கள். இவன் ஒருநாள் பச்சைக்கிளி டீச்சர் வீட்டுக்குப் போக, அவனைக் கண்டதும் அவர் சுவரோட சாய்ந்திருந்து குலுங்கிக் குலுங்கி அழுதார். வயிறு நிறைய ஒரு பிடி பிடிக்கலாம் எனப் போனவனுக்கு அவரை ஆறுதல் படுத்துவதோடு பொழுது கழிந்தது.

இப்படியே சில நாட்கள் கழிந்தன. நிலைமைகள் குழம்பத் தொடங்கின. இந்தியாவை நம்ப முடியாது என இயக்கம் வெளிப்படையாகக் கதைக்கத் தொடங்கியது. இந்தியாவின் போக்கு, சனங்களுக்கும் ஏமாற்றத்தைக் கொடுத்தது. இந்தியாவுக்கு எதிரான கவிதைகள், அனேக இடங்களில் துண்டுப் பிரசுரங்களாகவும், மதில்களில் வசனங்களாகவும் முளைத்துகொண்டிருந்தன. வடக்கில்

நிலைமை இப்படியிருக்க, கிழக்கின் நிலைமை வேறாக இருந்தது.

அங்கு இந்தியப் படைகளின் வருகையின் பின்னர் களத்தில் எதுவும் செய்ய முடியாமல் திண்டாடிய புளொட், இலங்கைப் பாதுகாப்பு அமைச்சகத்துடன் கைகோத்துக்கொண்டு மன்னாரில் களம் இறங்கியது. அந்தச் சமயத்தில் மன்னாரில் புலிகள் அமைப்பு மீது புளொட் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டது. அந்தத் தாக்குதலில் கில்மன், அர்ச்சுனா, ரஞ்சன் என்ற மூன்று விடுதலைப் புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டார்கள். புலிகள் மீது புளொட் உறுப்பினர்கள் காலாகாலமாகக் கொண்டிருந்த பகை உணர்வின் வெளிப்பாடாக அந்தத் தாக்குதல் இருந்தாலும், ஸ்ரீலங்காப் படையினரைத் திருப்திப்படுத்துவதற்காகவே புளொட் அந்தத் தாக்குதலை அப்போது மேற்கொண்டது.

தமது உறுப்பினர்கள் மீது புளொட் அமைப்பு மேற்கொண்ட தாக்குதல்கள் பற்றி இந்தியப் படையினரிடம் தமது முறைப்பாட்டைத் தெரிவித்த புலிகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரினார்கள். இந்தியப் படை எந்த நடவடிக்கையும் எடுக்க முன்வராத காரணத்தினால், புலிகள் புளொட்டுக்கு பதிலடி கொடுக்கத் தயார் ஆனார்கள். மன்னாரில் புளொட் அமைப்பு மீது புலிகள் மேற்கொண்ட பதில் தாக்குதலில் 50–க்கும் அதிகமான புளொட் உறுப்பினர்கள் கொல்லப்பட்டார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் மட்டக்களப்பிலும் புளொட் அமைப்புக்கு எதிராகத் தாக்குதல்களை நடத்த வேண்டும் என்ற முடிவை புலிகள் எடுத்தார்கள். அதிலும் புளொட் அமைப்பின் ஒரு குறிப்பிட்ட முக்கியஸ்தரைக் குறிவைத்து தாக்குதலை மேற்கொள்ள வேண்டும் என்று மட்டக்களப்பில் உள்ள புலிகள் தீர்மானம் எடுத்தார்கள். அந்தக் குறிப்பிட்ட புளொட் முக்கியஸ்தரைக் குறிவைத்து அவர்கள் தேடித் திரியவும் ஆரம்பித்தார்கள்.

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத் தளபதியாக இருந்த கருணாவினால் அந்த நேரத்தில் குறிவைக்கப்பட்ட புளொட் முக்கியஸ்தின் பெயர்: பவானந்தன். அந்த நேரத்தில் புளொட்

*அமைப்பின் மட்டக்களப்பு பொறுப்பாளராக இருந்தார் பவானந்தன். அவரது இயக்கப் பெயர் சுபாஸ். 1978–ம் ஆண்டில் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்திருந்த பவானந்தன், தனிப்பட்ட ரீதியில் பல கொள்ளை நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டுப் புலிகள் அமைப்பில் இருந்து விலக்கப்பட்டார். புலிகளால் தேடப்பட்ட நிலையில் ஸ்ரீலங்கா அரசாங்கத்திடம் சரணடைந்து சிறையில் இருந்தார். 1983–ம் ஆண்டு மட்டக்களப்புச் சிறை உடைப்பில் தப்பித்து இந்தியா சென்று புளொட் அமைப்பில் தன்னை இணைத்துக்கொண்டார். புலிகள் அமைப்பில் இருந்து ஏற்கெனவே பிரிந்து புளொட் அமைப்பை ஸ்தாபித்திருந்த உமாமகேஸ்வரனுடன் அவருக்கு இருந்த அறிமுகத்தைப் பயன்படுத்தி, புளொட் அமைப்பில் தன்னை நிலைப்படுத்திக்கொண்டார்.*

*இந்தியப் படையின் வருகையைத் தொடர்ந்து மட்டக்களப்பில் தங்கியிருந்த பவானந்தன், புலிகள் அமைப்புக்கு மிகுந்த சாவாலாகவே செயல்பட்டார். அதுவும் ஸ்ரீலங்கா அரச படைகளின் தொடர்பு, பின்னணி என்பன இவருக்கும், இவர் சார்ந்த பிரிவினருக்கும் இருந்ததால், மட்டக்களப்பில் புலிகளுக்கு மிகுந்த அச்சுறுத்தலை இவரால் தொடர்ந்து ஏற்படுத்த முடிந்தது.*

*இந்தச் சந்தர்ப்பத்தில் மட்டக்களப்பு சித்தாண்டிப் பகுதியில் பவானந்தனுக்கும், புலிகள் அமைப்பின் மட்டக்களப்புத் தளபதியாக இருந்த கருணாவுக்கும் இடையில் ஒரு சந்திப்பு இடம்பெற்றது. கருணாவுக்கு அந்த நேரத்தில் 21 வயது. கருணாவையும், புலிகள் அமைப்பையும் மிகக் கேவலமாக விமர்சித்தார் பவானந்தன். ஒரு சந்தர்ப்பத்தில் வாக்குவாதம் முற்றி கருணாவை சுட்டுவிடும்படி தனது போராளிகளுக்குக் கட்டளை பிறப்பித்தார் பவானந்தன். கருணாவுடன் துணைக்குச் சென்ற அர்ஜுனா என்கிற போராளி நிலைமையைச் சமாளித்துக் கருணாவை அழைத்துக்கொண்டு திரும்பி வந்தார். இந்தச் சம்பவம் கருணாவை மிகவும் பாதித்து இருந்தது. பவானந்தனை எப்படியாவது பழிவாங்க வேண்டும் என்று நினைத்த கருணா, பவானந்தனை குறிவைக்கும்படி தனது போராளிகளுக்குக் கட்டளை பிறப்பித்தார்.*

பவானந்தனின் நடமாட்டங்கள் பற்றிய தகவல்கள், புலிகளின் புலனாய்வுப் பிரிவினரால் கவனமாகத் திரட்டப்பட்டன.

1987–ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தின் ஆரம்பத்தில் இந்தியப் படைகள் வெளியேற வேண்டும் என்ற கோரிக்கையைப் புலிகள் பகிரங்கமாக வெளியிட ஆரம் பித்திருந்தார்கள். திலீபன், யாழ் கோட்டையில் ஆற்றிய உரையில் இதனை முதன்முதலில் வெளியிட்டார். அதேவேளை வடக்குக் கிழக்கு முழுவதிலும் இந்தியப் படையினருக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள், பொதுக் கூட்டங்கள் நடைபெற்று வந்தன. மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் புலிகள் பெரிய ஒரு பொதுக்கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார்கள். புலிகள் அமைப்பின் பிரதித் தலைவர் மாத்தையா, அரசியல் துறைப் பொறுப்பாளர் யோகரட்ணம் 'யோகி' போன்றவர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள ஏற்பாடாகி இருந்தது. ஆனால், இரண்டு காரணங்களினால் இந்தப் பொதுக்கூட்டம் கைவிடப்பட்டது. முதலாவது காரணம், இந்தப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ள வருகை தரும் விடுதலைப் புலி முக்கியஸ்தர்களைப் படுகொலை செய்யப் புளொட் அமைப்புத் திட்டமிட்டு இருந்ததாகப் புலிகளின் புலனாய்வுத் துறை தெரிவித்திருந்தது. அந்த நேரத்தில் புலிகள் அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளராக இருந்த திலீப் மற்றும் நீலன் போன்றோர் இந்தத் தகவலை புலிகளின் தலைமைக்கு அறிவித்தார்கள். புலிகளின் தலைவர்களைப் படுகொலை செய்யும் நோக்குடன் புளொட் அமைப்பின் ராணுவச் செயலாளர் கண்ணன் மட்டக்களப்புக்கு வருகை தந்திருப்பதாகவும் அந்தத் தகவல்களில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அடுத்ததாகப் பொதுக்கூட்டம் நடைபெற இருந்த தினத்தில் ஸ்ரீலங்கா அரசாங்கம் ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்து இருந்தது. இந்தக் காரணங்களினால் புலிகள் ஏற்பாடு செய்த பெரிய பொதுக்கூட்டம் தடைப்பட்டிருந்தது. இதுவும் மட்டக்களப்பில் புலிகள் அமைப்புக்குப் புளொட் மீது பெரிய கோபத்தை ஏற்படுத்தியிருந்தது.

புளொட் அமைப்பினருக்குச் சரியான பாடம் கற்பிக்க வேண்டும் என்று தீர்மானம் எடுத்தார்கள் புலிகள். 1987–ம்

ஆண்டு செப்டம்பர் மாதம் 13–ம் தேதி பவானந்தன் தனது நண்பர்களுடன் பாசிக்குடா சென்று திரும்புவதாகக் கருணாவுக்குத் தகவல் கிடைத்தது. அந்த நேரத்தில் கிராண் பிரதேசத்துக்குப் பொறுப்பாக இருந்த கேப்டன் ரதீஷ் மற்றும் சாண்டோ என்கிற போராளி உள்பட ஒரு சிறு குழு பவானந்தன் பயணம் செய்த வாகனம் மீது தாக்குதலை மேற்கொண்டார்கள்.

கொல்லப்பட்ட புளொட் உறுப்பினர்களின் உடல்கள் கிராண் சந்தியில் கருணாவினால் பார்வையிடப்பட்டது. பவானந்தனைத் தவிர மற்றவர்களைப் புலிகளுக்குத் தெரியவில்லை. மட்டக்களப்பில் இருந்து கிராணுக்கு வந்த அரசியல் துறைப் போராளிகள்தான் கொல்லப்பட்டவர்களில் புளொட் அமைப்பின் அரசியல் துறைச் செயலாளர் வாசுதேவாவையும் மற்றய சிலரையும் அடையாளம் காண்பித்தார்கள். கொல்லப்பட்டவர்களில் புளொட் அமைப்பின் ராணுவத் துறைச் செயலாளர் கண்ணனும் அடங்கியிருந்தது, பின்னரே புலிகளுக்குத் தெரியவந்தது. பொதுக்கூட்டத்துக்கு வருகை தர இருந்த புலி முக்கியஸ்தர்களைப் படுகொலை செய்வதற்காகக் கண்ணன் மட்டக்களப்புக்கு வருகை தந்துள்ளதாகப் புலிகளின் புலனாய்வுத் துறை ஏற்கெனவே வழங்கியிருந்த தகவலை, கண்ணனின் உடல் ஊர்ஜிதப்படுத்தியது. இதனைத் தொடர்ந்து மட்டக்களப்பில் புளொட் அமைப்புக்கு எதிராக புலிகள் பெரிய தாக்குதல் நடவடிக்கையை ஆரம்பித்தார்கள். இந்த நடவடிக்கையில் 70–க்கும் அதிகமான புளொட் உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர். மட்டக்களப்பில் புளொட் உறுப்பினர்கள் துரத்தித் துரத்தி புலிகளால் வேட்டையாடப்பட்டார்கள். இந்தியப் படையினரைப் பொறுத்தவரையில், இந்த இரு அமைப்புக்களுமே அவர்களுக்கு வேண்டப்படாத அமைப்புகளாகவே இருந்ததால், புலிகளால் புளொட் அமைப்பின் மீது மேற்கொள்ளப்பட்ட அந்தத் தாக்குதலை இந்தியப் படை வேடிக்கை பார்த்தபடி இருந்தது.

அந்தச் சமயத்தில் திடீரென திலீபனின் உண்ணாவிரத அறிவித்தல் வெளியாகி எல்லோருக்கும் அதிர்ச்சியைக் கொடுத்தது. திலீபனின் உண்ணாவிரதத்தை இந்தியா தலையிட்டு இரண்டொரு நாளில் நிறுத்திவிடும்

என எல்லோரும் அபிப்பிராயப்பட்டனர். இவனும் அப்படித்தான் நம்பினான். “இந்தியாவுக்கு அகிம்சையைப் பற்றி யாரும் படிப்பிக்கத் தேவையில்லை” என, பரணி ஒருநாள் இரவு உறுதியாகச் சொன்னான். அவன் சொன்னதைக் கேட்க, நம்பும்படியாகத்தான் இருந்தது. ஆனால், நடந்தது வேறு. திலீபனின் உயிர் பிரிந்தது. எல்லோரும் அதிர்ச்சியில் உறைந்துபோனார்கள். அதைவிட ஆற்றாமை பெருகியிருந்தது. இயக்கத்துக்குள் ஒருவித இறுக்கம் நிலவியது. திலீபனின் மரணம் பலராலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. திலீபனை அனேகமாக எல்லோருக்கும் பிடிக்கும். மெல்லிய.. கலைந்த தலையுடனான அந்த உருவம் நீண்ட நாட்களுக்கு இவனது கண்களின் முன் நடமாடித் திரிந்தது.

இது நடந்த கொஞ்ச நாளிலேயே அடுத்த அதிர்ச்சி. இந்தியாவில் இருந்து வந்துகொண்டிருந்த இயக்கத்தின் படகை வழிமறித்த இலங்கைக் கடற்படை, சிலரை கைது செய்தது. கைது செய்யப்பட்டவர்கள் பலாலிக்குக் கொண்டு செல்லப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டனர். அவர்களைக் கொழும்புக்குக் கொண்டு செல்ல இலங்கைப் பாதுகாப்பு அமைச்சர் உத்தரவு பிறப்பித்திருந்தார். இயக்கம் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தது. தமது பாதுகாப்புக்கு உத்தரவாதமளித்த இந்தியா, அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என இயக்கம் கோரியது. இந்தியா எதுவும் செய்யாமல் வேடிக்கை பார்த்தது. திட்டமிட்டபடி, கைது செய்யப்பட்டவர்களைக் கொழும்புக்குக் கொண்டு செல்ல முயன்றபோது அவர்கள் சயனைட் கடித்து மரணமானார்கள்.

இந்தச் சம்பவம் இயக்கத்திடம் மிச்சம் இருந்த கொஞ்ச நஞ்ச பொறுமையையும் இல்லாமல் ஆக்கிவிட்டது. பொடியள் கொந்தளித்துகொண்டிருந்தனர். இந்தியாவை இனியும் நம்ப முடியாது என, சனங்களும் கொந்தளித்தார்கள். சில எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட இயக்கம் தீர்மானித்தது. புலிகளுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையைக் குழப்ப இலங்கை தீட்டிய சதித்திட்டம் பெருமளவில் வெற்றியடைந்து வந்தது. இலங்கைக்குப் பாடம் படிப்பிக்க நினைத்த புலிகள், தம்மிடம் கைதியாக இருந்த ஸ்ரீலங்கா சிப்பாய்கள் ஆறு பேரை கொண்டுவந்து

யாழ்ப்பாண மத்திய பேருந்து நிலையத்தில் வைத்து சுட்டுக் கொன்றார்கள். அதே நாளில் காங்கேசன் துறை சிமென்ட் தொழிற்சாலை ஊழியர்கள் இரண்டு பேரையும் கொலை செய்து சிமென்ட் தொழிற்சாலை முன்னால் வீசினார்கள். சுன்னாகத்தில் நீண்ட காலம் பேக்கரி வைத்திருந்த ஒரு சிங்களவரும் சுட்டுக் கொல்லப்பட்டார். யாழ்ப்பாணத்தில் விவரணம் ஒன்றை தயாரிப்பதற்காக வந்த இலங்கை ரூபவாகினி கூட்டு ஸ்தாபனத்தின் பத்திரிகையாளர் மற்றும் ஊழியர்கள் நான்கு பேரை கடத்தி கொலை செய்து ஆரிய குளம் சந்தியில் கொண்டுவந்து போட்டார்கள்.

வடக்கில் நிலைமை இப்படியிருக்க, கிழக்கிலும் நிலைமை சூடானது. மட்டக்களப்பில் 'சிறிபால' என்ற கட்டடம் சிங்கள முதலாளி ஒருவருக்குச் சொந்தமானது. அதில் கடைகள் மற்றும் குடியிருப்புகளும் இருந்தன. 6–ம் தேதி நள்ளிரவு அங்கிருந்த சிங்களர்களை வெட்டியும் சுட்டும் கொலை செய்தார்கள். அதே நேரத்தில் மட்டக்களப்பு ஜெயந்தி புர சிங்கள கிராமத்திலும் புகுந்து சிங்கள மக்களைக் கொலை செய்தார்கள். மறுநாள் 7–ம் தேதி கொழும்பில் இருந்து மட்டக்களப்புக்கு வந்த ரயிலை மறித்து, ரயிலில் இருந்த 40 சிங்களர்களைச் சுட்டுக் கொன்று, ரயில் பெட்டியில் போட்டுக் கொளுத்திவிட்டார்கள். கல்குடாவிலும் 25 சிங்களர்கள் கொல்லப்படுகிறார்கள். வாழைச்சேனை மற்றும் கல்குடா பகுதியில் சிங்கள மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலைப் பார்வையிடுவதற்காகச் ஸ்ரீலங்கா அரசாங்கக் குழு ஒன்று பல வாகனங்களில் புறப்பட்டது. ஸ்ரீலங்கா விசேஷ அதிரடிப் படையினருக்குப் பாதுகாப்பு வழங்க, இந்த விசேஷக் குழு மட்டக்களப்பு நகரில் இருந்து புறப்பட்டது. ஸ்ரீலங்கா ராணுவ அதிகாரிகள் பெருமளவில் தொடரணியாக வரும் தகவல்கள் புலிகளுக்குக் கிடைத்தன. உடனடியாகக் காரியங்கள் நடந்தன. தொடரணி இலக்கு வைக்கப்பட்டது. மட்டக்களப்புக் கொழும்பு நெடுஞ்சாலையில் கொம்மா துறையில் ஒரு கண்ணிவெடித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

❍

போராளி மேஜர் அகத்தியனால் கச்சிதமாக மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதலில் ஸ்ரீலங்கா விசேஷ

அதிரடிப் படையின் மாவட்ட இணைப்பு அதிகாரி நிமால் டிசில்வா உள்பட ஸ்ரீலங்கா விசேஷ அதிரடிப் படையினர் எட்டு பேர் கொல்லப்பட்டார்கள். விசேஷ அதிரடிப் படை வாகனத் தொடரணியில் பயணம் செய்த மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் அந்தோணிமுத்து உள்பட ஐந்து அரசாங்க அதிகாரிகளும் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டார்கள்.

நிலைமை மோசமடைய, கொழும்பு குழம்பியது. 9–ம் தேதி இந்திய அதிகாரிகளை அழைத்த ஜெயவர்த்தனே "என்ன செய்யப்போகிறீர்கள்?" என்று சீறி விழுந்தார். அன்றிரவு ராஜீவ் காந்தியே ஜெயவர்த்தனேவை தொடர்புகொண்டு பிரபாகரனை கைதுசெய்ய உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவித்தார். அதனை புலிகள் ஒட்டுக்கேட்டுவிட்டார்கள். புலிகளோடு நெருக்கமாக இருந்த ஓர் இந்திய ராணுவ அதிகாரியும் புலிகளிடம் அதை உறுதிப்படுத்தினார். இந்தச் சம்பவம் புலிகளைக் கொதிப்படைய செய்தது. இலங்கையில் இந்தியப் படைகளுக்குத் தலைமைத் தாங்கிய திபீந்தர் சிங்குக்குப் புலிகளோடு மோதுவது பிடிக்கவில்லை. புலிகள் இந்திய ராணுவத்திடம் பயிற்சிபெற்ற காலங்களில் இருந்தே அவர் புலிகளோடு நெருக்கத்தைக்கொண்டிருந்தவர். நிலவரத்தைச் சமாளிக்கலாம் என அவர் நம்பினார்.

புலிகளுக்கு நிலைமையைப் புரியவைத்து ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு சரணடைய வைப்பதற்கான முயற்சி ஒன்றை மேற்கொள்ளத் திட்டமிட்டார். திபீந்தர் சிங்கும், இந்தியப் படைகளின் 54–வது படைப் பிரிவின் கட்டளையிடும் அதிகாரியான மேஜர் ஜெனரல் ஹரிக்கிரத் சிங்கும், புலிகளின் தலைவரைச் சந்திக்கத் திட்டமிட்டுத் தகவல் அனுப்பினார்கள். புலிகளும் அவர்களைச் சந்திக்கச் சம்மதம் தெரிவித்தனர். இந்திய விமானப் படை ஹெலிகாப்டரில் யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் வந்து இறங்கினார்கள். விடுதலைப் புலிகள் தங்களிடம் உள்ள ஆயுதங்களை இந்தியப் படையினரிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற வேண்டுகோளை விடுப்பதே அந்த அதிகாரிகளின் நோக்கமாக இருந்தது. ஹரிக்கிரத் சிங்கும் ஒப்பந்தத்தின் பின்னர் விடுதலைப் புலிகளுடன் அன்னியோன்னியமாகப் பழகியவர்தான். இருவரும் இந்த நாட்களில் விடுதலைப் புலிகளின் திருமணச் சடங்குகள்

உள்படப் பல குடும்ப நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு புலிகளுடன் நெருக்கமான நட்பைப் பேணி வந்தவர்கள்.

இந்தியப் படையினரின் ராணுவ பலம் பற்றி விவரித்து, பலவந்தமாகப் புலிகளிடம் இருந்து ஆயுதங்களைக் களைவதற்குத் தாம் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கும் விஷயத்தை விளக்கி, இந்தியப் படையினரிடம் ஆயுதங்களை ஒப்படைக்கும்படி புலிகளை வற்புறுத்துவதே அவர்களின் திட்டமாக இருந்தது. புலிகள் தமது ஆயுதங்களை ஒப்படைக்கத் தவறும்பட்சத்தில் இந்தியப் படையினருடன் அவர்கள் மோத வேண்டி இருக்கும் என்பதுடன், அதன் காரணமாகப் புலிகள் அமைப்பு முற்றாகவே அழிக்கப்பட்டுவிடவும் சந்தர்ப்பங்கள் உள்ளன என்பதையும் அவர்கள் புலிகளின் தலைவரிடம் தெளிவுபடுத்த விரும்பினார்கள்.

இந்தியப் படைத் தளபதிகளைச் சந்திக்க, பிரதித் தலைவர் மாத்தையாதான் வந்தார். தலைவரைச் சந்திக்க வந்த படை அதிகாரிகளுக்கு ஏமாற்றம். தலைவர் பிரபாகரன் அங்கு இல்லை என்பதைத் தெரிவித்து, இந்திய அதிகாரிகள் தலைவரைத் தேடி வந்ததன் காரணத்தை மாத்தையா விசாரித்தார். இந்தியப் படை அதிகாரிகள் தாம் அங்கு வந்த நோக்கத்தை விளக்கினார்கள். புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்கத் தவறும்பட்சத்தில் இந்தியப் படைகள் அவற்றைப் பலவந்தமாகக் களைய நேரிடும் என்பதையும், அவ்வாறு ஒரு சந்தர்ப்பம் ஏற்படும் பட்சத்தில் புலிகள் அதிக இழப்புகளைச் சந்திக்க வேண்டி வரும் என்றும் புலிகள் அமைப்பின் அரசியல் எதிர்காலம் இதனால் பாதிக்கப்பட்டுவிடும் என்று விளக்கிய அதிகாரிகள், இந்த முறுகல் நிலையைத் தவிர்த்துப் புலிகள் அரசியல்ரீதியாக எவ்வாறு நகர்வுகளை மேற்கொண்டு வெற்றிபெறலாம் என்றும் ஆலோசனைகள் வழங்கினார்கள்.

அனைத்தையும் கேட்ட மாத்தையா, “நாங்கள் சாகத் துணிந்துவிட்டோம். மரியாதையை இழந்து வாழ்வதைவிடச் சாவை அணைத்துக்கொள்வது மேல்” என்றார். தொடர்ந்து பேசுவதற்கு அங்கு எதுவுமே இல்லை. இரண்டு தரப்பினரும் கைகுலுக்கி விடைபெற்றார்கள். இரவு இலங்கை ஒலிபரப்புக் கூட்டு ஸ்தாபனத்தின் மாலைச்

செய்தியறிக்கை நிலைமையின் தீவிரத்தை யாழ்ப்பாண மக்களுக்கு விளக்கியிருந்தது. புலிகளுக்கு எதிராக இந்தியப் படைகள் போர் பிரகடனம் செய்திருக்கும் விஷயம் செய்தியறிக்கையில் வெளியிடப்பட்டிருந்ததோடு, 'புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களை உயிருடனோ அல்லது பிணமாகவோ பிடிக்கும் ஒருவருக்கு ஒரு மில்லியன் ரூபாய் பணம் பரிசாக வழங்கப்படும்' என்ற ஜே.ஆரின் அறிவித்தலும் வெளியிடப்பட்டது.

இனி பேச ஒன்றுமில்லை என்ற நிலை வந்ததும், இந்தியர்கள் சூட்டோடு சூடாகக் காரியத்தில் இறங்கினார்கள். பிரவுன் வீதியில் பிரபாகரன் தங்கியிருக்கும் வீட்டை இந்தியப் படைகள் சுற்றி வளைத்தார்கள். ஆனால், முகாமில் எவரும் இல்லை. பிரபாகரனைத் தேடும் முயற்சிகள் பலன் அளிக்கவில்லை. ஏமாற்றத்தோடு தகவலை டெல்லிக்கு தெரியப்படுத்தியதும், பிரபாகரனைக் கைதுசெய்ய முடியாவிட்டால் சுட்டுக் கொன்றுவிடுங்கள் என ஆத்திரத்தோடு ராஜீவ் உத்தரவிட்டார்.

10–ம் தேதி காலை மராட்டிய ரெஜிமெண்ட் யாழ்ப்பாணத்தின் பிரபல பிராந்திய பத்திரிகைகளான ஈழமுரசு, முரசொலி மற்றும் ஈழநாடு பத்திரிகைக் காரியாலயங்களைச் சுற்றி வளைத்த இந்தியப் படையினர், அந்தப் பத்திரிகை அலுவலகங்களைக் குண்டு வைத்துத் தகர்த்தனர். அத்துடன் அதன் ஊழியர்களையும் கைதுசெய்து கோட்டையில் சிறை வைத்தனர். இந்தச் சுற்றிவளைப்புத் தேடுதல்களில் பல புலி உறுப்பினர்களும் கைதுசெய்யப்பட்டனர். அன்றே இலங்கையில் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை இந்தியப் படை ஆரம்பித்து விட்டதாக இந்திய வானொலி மலைச் செய்தியின் பின்னர் அதிகாரபூர்வமாக அறிவிக்கிறது. மேலதிகமாக இந்தியப் படையினரும் ஆயுதங்களும் பலாலியில் வந்து இறங்கத் தொடங்கின. வடக்குக் கிழக்கில் மட்டும் சுமார் ஒன்றரை லட்சம் இந்தியப் படைகள் வந்து இறங்கியிருந்தன. இதே தினத்தில் சென்னையில் புலிகளின் அலுவலகங்கள் சிலவற்றைச் சுற்றி வளைத்த இந்தியப் போலீஸார், புலிகளுக்குச் சொந்தமான ஆறு தொலைத்தொடர்பு கருவிகளையும் கைப்பற்றி இருந்தார்கள். 11–ம் தேதி அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் எம்.ஜி.ஆருக்குப்

புலிகள் அமைப்பின் நிலைமைப் பற்றி அவசரக் கடிதம் ஒன்றை எழுதி அனுப்பிய பிரபாகரன், புலிகள் அமைப்பின் பொறுப்பாளர்கள் அனைவரையும் அழைத்து அவசரக் கூட்டம் ஒன்றையும் நடத்தினார்.

தலைவரின் அவசரக் கூட்டத்துக்காக அவனையும் அழைத்துப் போக அவனது போராளி நண்பன் வந்திருந்தான். அன்றையக் கூட்டம் உடுவில் பகுதியில் முக்கியப் பொறுப்பாளர்களோடு இறுக்கமாக அமைந் திருந்தது. அனைவரையும் பார்த்த பிரபாகரன் "இந்திய ராணுவத்தோடு மோத வேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டுள்ளோம். கைதாகி அவமானப்பட்டுச் சிறையில் அடிவாங்கிச் சாவதா? அல்லது அகப்படாமல் சயனைடு அடிப்பதா? அல்லது போராளிக்கே உரிய போர்க்குணத்துடன் இறுதிவரை போராடிச் சாவதா? நான் போராடிச் சாவது என முடிவெடுத்துவிட்டேன். நீங்கள் உங்கள் முடிவுகளைச் சொல்லலாம். மற்றவர்கள் போய்விடலாம்" என்றவர் அமைதியாக எல்லோரையும் பார்த்தார். அப்போதுதான் சாகும் வரை போராடுவது என முடிவெடுக்கப்பட்டது. அதே கேள்வியைப் பொறுப்பாளர்கள் மற்ற போராளிகளிடமும் தெரியப்படுத்தி, போராட விரும்பாதவர்கள் இயக்கத்தைவிட்டு போய்விடலாம் என அறிவிக்கச் சொல்லியிருந்தார்.

பொறுப்பாளர்கள் அனைவரும் தங்கள் பொறுப்பில் இருந்த போராளிகளிடம் நிலைமையை விளக்கினார்கள். வடக்கு கிழக்கில் 2000–க்கும் குறைவான புலிகள் அமைப்பு ஒன்றரை லட்சம் இந்தியப் படைகளோடு மோதிவிடுவதாக முடிவெடுக்கிறது.

நவம்பர் 12–ம் தேதி இரவு இலங்கையின் இந்தியக் கட்டளைத் தளபதிக்கே தெரியாமல் இந்திய உளவுப் பிரிவினர் ஒரு நடவடிக்கையில் இறங்கினார்கள். இந்தியாவின் குவாலியர் (மத்தியப்பிரதேசம்) ராணுவ அதிரடிப் படை முகாமில் இருந்து 70 பேர் அடங்கிய பெரிய கொமாண்டோ படை அணி ஒன்றைக் கொண்டு வந்து பிரவுன் வீதியும், திருநெல்வேலி வீதியும் இணையும் இடத்துக்கு அருகில் உள்ள கொக்குவில் கிராம சபைக்கு அருகில் நள்ளிரவு தரை இறக்கப்பட்டது. இதற்கு

*இலங்கை வான் படை வழிகாட்டலில் ஈடுபட்டது. கொமாண்டோக்கள் அதிகாலை 1 மணியளவில் தரை இறக்கப்பட்டுத் தயார் நிலையில் இருக்கின்றனர். அதன் பின்னர் அதிகாலையில் இன்னொரு படை அணி சீக்கிய காலாட்படையின் 13–வது சிறப்புப் படையினர் 30 பேர் யாழ் பல்கலைக்கழக மருத்துவப் பீடத்துக்கு அருகில் இறக்கப்படுகின்றனர். இவர்களுக்கு றோ அதிகாரிகள் இட்ட கட்டளை, ‘பிரபாகனை முடிந்தால் கைது செய்யுங்கள் அல்லது சுட்டுக் கொன்றுவிடுங்கள்’ என்பதுதான்.*

*இவை இப்படி நடந்துகொண்டிருக்க, பிரபாகரன் இருக்கும் வீடு என, பிரம்படி வீதியில் இந்தியா குறிவைத்த வீட்டில் அவர் இல்லை. அங்கு அவர் இந்திய அதிகாரிகளைச் சந்திப்பதை மட்டுமே நடத்தியிருந்தார். அவர் உடுவில் பகுதியில் ஒரு வீட்டிலேயே தங்கிருந்தார். இந்திய ராணுவம் இறங்கிய பகுதியில் மாத்தையா மற்றும் ஆன்டன் வாத்தி ஆகியோரது முகாம்கள் இருந்தன. முதலாவது ஹெலி அதிகாலை 1 மணிக்கு இறங்கியதுமே அவர்கள் ஊஷாராகி யாழ் பல்கலைக் கழகக் கட்டடம் மற்றும் மரங்களில் நிலையெடுத்துவிட்டனர். அதிகாலையில் இரண்டாவது சீக்கிய காலாட் படையணி இறங்க தொடங்கியதும் புலிகள் தாக்குதலை நடத்தத் தொங்கினார்கள். தரை இறங்கிய 30 பேரில் 29 பேர் இறந்துபோக, ஒருவர் கைது செய்யப்பட்டார். மறுபுறம் தரை இறங்கிய 70 பேரில் 40 பேர் இறந்தார்கள். வெற்றிச் செய்திக்காகக் காத்திருந்த இந்திய உயர் அதிகாரிகள் தங்கள் திட்டம் பிழைத்துப்போனதை உணர்ந்தார்கள்.*

*நிலைமை விபரீதமாகியதால், அவசரமாகப் பலாலியில் இருந்த இந்தியப் படை தளபதி தர்பீந்தர் சிங்கை தொடர்புகொண்டு புலிகளிடம் சிக்கியிருக்கும் தங்கள் படையினரை மீட்கச் சொல்லி கட்டளையிட்டார்கள். பலாலியியில் இருந்து காலாட் படையும் இன்னோர் இந்தியப் படையின் மேஜர் அனில்கவுல் என்பவர் தலைமையில் இந்தியப் படைக்குச் சொந்தமான யுத்த டாங்கிகள் சகிதம்* (main Battle tanks) *மீட்பு அணியும் காங்கேசன் துறை முகாமில் இருந்து ரயில் தண்டவாளம் ஊடாக நகர்ந்து வந்து மற்றவர்களை மீட்டுக்கொண்டு போனார்கள். இவர்களது மீட்பு நடவடிக்கைக்கு ஆதரவாக யாழ் கோட்டையில்*

இருந்து பிரம்படி பகுதியில் புலிகள் பதுங்கியிருக்கும் இடங்கள் என அடையாளம் காட்டப்பட்ட இடங்களுக்கு சரமாரியாக இலங்கை ராணுவம் எறிகணைகளை ஏவிக்கொண்டிருந்தது. இந்தத் தாக்குதல் நடவடிக்கையில் சுமார் 40 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

தோல்வியில் முடிந்த இந்த நடவடிக்கைக்கு இந்தியப் படைகள் 'ஒப்பிரேசன் பவான்' என்று பெயர் வைத்திருந்தார்கள். இந்தத் தோல்வி பற்றிப் பின்னைய நாளில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த தளபதி ஹரிகிரத் சிங், இலங்கைத் தூதுவர் ஜி.என்.தீக்ஷித் ராணுவத்தினருக்குக் கட்டளையிட்டு நெறிப்படுத்தியதே காரணம் எனத் தெரிவித்தார். அதற்குப் பதில் கொடுத்த தீக்ஷித், நடவடிக்கை தோற்றது "இந்தியப் படையின் முட்டாள்தனம்" என்றார்.

மறுநாள் பலாலி படைத்தளத்தில் புலிகளை இரண்டு நாட்களுக்குள் துடைத்தது அழித்துவிடும் நோக்கத்தோடு ஒரு படை நடவடிக்கையைக் கட்டளைத் தளபதி திபீந்தர் சிங் படையணிகளை ஒழுங்குபடுத்தினார்.

கள நடவடிக்கைகளுக்காக இந்திய ராணுவத்தின் பின்வரும் படையணிகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தன:

18–வது காலாட் படைப் பிரிவு.

41–வது காலாட் படைப் பிரிவு.

72–வது காலாட் படைப் பிரிவு.

91–வது காலாட் படைப் பிரிவு.

115–வது காலாட் படைப் பிரிவு.

65–வது கவச வாகனப் பிரிவு.

831–வது இலகு மோட்டார் படைப் பிரிவு.

25–வது படைப் பிரிவு

10–வது கொமாண்டோ படைப் பிரிவு

என்பன புலிகளுடனான யுத்தத்துக்குத் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன.

இவற்றுக்கு மேலதிகமாக, 13-வது சீக்கிய கொமாண்டோ அணியினரும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தார்கள். குவிக்கப்பட்டிருந்த இந்திய ஜவான்கள் முன்னிலையில் தமது தாக்குதல் திட்டத்தை விவரித்த திபீந்தர் சிங், இரண்டு நாட்களுக்குள் இந்தியப் படை தமது பிரதான நோக்கத்தை நிறைவு செய்துவிட வேண்டும் என்று தெரிவித்தார். (இந்தத் தகவல்களைப் பின்னர் திபீந்தர் சிங் எழுதிய நூலில் எழுதியிருந்தார்).

பல்கலைக்கழகத் தரையிறக்கத் தாக்குதலில் பொட்டம்மான் காயமடைந்தார். அடுத்தடுத்த நாள் மோதலில் புலிகளின் அடுத்த மூத்த தளபதிகளில் ஒருவரான சந்தோசமும் கோப்பாய் பகுதியில் மரண மானார். புலிகளின் பெண்கள் அணியில் முதலாவது மாவீரர் மாலதியும் கோப்பாய் பகுதியில் மரணமானார். பலாலியில் இருந்தும் யாழ் கோட்டையில் இருந்தும் இரண்டு நாட்களுக்குள் புலிகளை ஒழித்துச் சண்டையை முடிந்துவிடலாம் என முன்னேறிய இந்திய ராணும், ஒரு வாரமாகியும் பலாலி யாழ் வீதியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாமல் முழத்துக்கு முழம் வெடித்த கண்ணிவெடிகளால் திண்டாடிக்கொண்டிருந்தது. ஒரு வாரம் கழித்துப் பலாலி, காங்கேசன் துறை, கோட்டை ஆகிய முகாம்களில் இருந்து புறப்பட்ட படைகள், மருதனார் மடம் சந்தியில் சந்தித்துக்கொண்டபோதுதான் இந்திய உளவுப் பிரிவினருக்கு ஒரு சந்தேகம் தோன்றியது. அதாவது பிரபாகரன் சுதுமலை அம்மன் கோயிலில் ஒளிந்திருக்கலாம் என்பதுதான் அந்தச் சந்தேகம்.

❍ ❍

# 21

இந்திய பஞ்சாப்பில் தனி நாடு கேட்டு போராடிய காலிஸ்தான் போராளிகள் பொற்கோயிலை தங்கள் மறைவிடமாகவும் தளமாகவும் பாவித்தத்தைப்போலப் பிரபாகரனும் சுதுமலை அம்மன் கோயிலை தளமாகப் பாவிக்கிறார் என்ற சந்தேகம் இந்திய உளவுத் துறை அதிகாரிகளுக்கு ஏற்பட்டிருந்தது. அதற்கான காரணம் இல்லாமலும் இல்லை. அதற்குக் காரணம் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின்போது பிரபாகரன் முதன்முதலாக மக்கள்முன் தோன்றி உரையாற்றியது சுதுமலை அம்மன் கோயிலில்தான். அதே நேரம் இந்திய ராணுவ அதிகாரிகள் புலிகளைச் சந்திக்க வந்து இறங்கியது இந்தியாவில் இருந்து பிரபாகரன் வந்து இறங்கியது எல்லாமே சுதுமலை அம்மன் கோயில் சுற்றாடலில்தான். பிரபாகரன், அம்மன் மீது பக்தி கொண்டவர் என்பதோடு அதே சுற்றாடலில் புலிகளின் இரண்டு பெரிய ஆயுதத் தொழிற்சாலைகளும் அப்பையா அண்ணைத் தலைமையில் இயங்கியது. இந்த விஷயங்கள் இந்திய உளவுத் துறையினருக்குத் தெரியும்.

அதே நேரம் மெதுவாக முன்னேறி வரும் இந்தியப் படையிலும் சில மாற்றங்களைச் செய்தனர். ஏனெனில், சமாதான காலத்தில் இந்திய ராணுவ அதிகாரிகள்

புலிகளுடன் நல்லதொரு நட்போடு பழகியதாலும் தென்னிந்திய பட்டாலியன்கள் குறிப்பாக மெட்ராஸ் பட்டாலியன்களும் (தமிழ்நாட்டு ராணுவத்தினர்) முன்னணி நகர்வுப் படைகளில் இருப்பதால்தான் புலிகளை அழிப்பதற்குத் தாமதமாகிறது என நினைத்தவர்கள் புலிகளுடன் நெருக்கமாக இருந்த அதிகாரிகளை மாற்றித் தென்னிந்திய பட்டாலியன்களைப் பின்நகர்த்திவிட்டு வட இந்திய பட்டாலியன்களான சீக்கிய மராட்டிய குர்கா படையணிகளை முன்னணிக்கு நகர்த்தினார்கள்.

அதே நேரம் சீக்கியர்களின் காலிஸ்தான் போராட்டத்தில் இறுதியாகப் பொற்கோயில் தாக்குதலில் கட்டளையிடும் அதிகாரியாகத் திறைமையாகப் பணியாற்றிய தெய்வேந்திர சர்மாவை இலங்கைக்கு அனுப்பி, சுதுமலை அம்மன் கோயில் நடவடிக்கைக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டார். திபீங்தர் சிங்கின் கட்டளைகளுக்குக் கீழ்படியாமல் தன்னிச்சையாகவே நடவடிக்கைகளை எடுக்கும் சுதந்திரம் அவருக்குக் கொடுக்கப்பட்டது. பலாலியில் வந்து இறங்கிய தெய்வேந்திர சம்மா உடனடியாகவே சுதுமலை அம்மன் கோயிலை பிடிக்கும் நடவடிக்கையைப் பொறுப்பேற்றார். காலாட் படையணிகளுக்கு அவர் இட்ட முக்கியக் கட்டளை

“என்னென்ன பொருள்கள் அசைகின்றதோ அத்தனையையும் சுட்டுத்தள்ளியவாறு முன்னேறுங்கள்” என்பதுதான்.

புலிகளின் மோசமான கண்ணிவெடித் தாக்குதலில் இருந்து தப்பிக்க, முன்னேறும் ராணுவத்தினருக்குக் கனரக டாங்கி படையினர் பாதைகளின் தடைகளை அகற்றிக்கொடுக்குமாறும், எந்தத் தடைகள் வந்தாலும் தாங்கிகளால் தகர்த்தபடி முன்னேறும்படி கட்டளையிட்டார். சர்மாவின் கட்டளைகளின்படி இந்திய ராணும் தமிழர் பகுதிகளில் பல அழிவுகளைக்

கொடுத்தபடியே முன்னேறியது. அசைந்த பெருள்களான நாய், பூனை, ஆடு, மாடு, மனிதர்களை எல்லாம் காலாட்படை சுட்டுத்தள்ள, அசையாது நின்ற கட்டடங்கள், மரம் செடி எல்லாவற்றையும் டாங்கிகள் தகர்த்தபடி முன்னேறின.

சர்மா தலைமையில் ஏழு முனைகளில் இந்திய ராணுவம் சுதுமலை அம்மன் கோயிலை நோக்கி நகர்ந்தது. 21–ம் தேதி நள்ளிரவு சுது மலை மானிப்பாய் பகுதி முழுவதையும் சுற்றி வளைத்த ராணுவத்தினர், அனைவரது வீடுகளிலும் புகுந்து அங்கு இருந்தவர்களை ஓர் அறையில் போட்டு பூட்டிவிட்டு அந்தப் பகுதி முழுவதையும் தங்கள் கட்டுப்பாட்டுக்குகொண்டு வந்தார்கள். அம்மன் கோயிலுக்குள் நுழைவதற்குக் காலை வரை காத்திருந்தனர். நல்ல வெளிச்சம் இருந்தால்தான், பிரபாகரனை தப்பியோட விடாமல் மடக்கிப் பிடிக்கலாம் என நினைத்திருக்க வேண்டும். அதிகாலை ஆனதும் மெள்ள நகர்ந்த டாங்கி படையணியினர், அம்மன் கோயிலை சுற்றி வளைத்து நிறுத்தப்பட்டனர். காலை 5:30 மணியளவில் டாங்கிகளின் குண்டுகள் அம்மன் கோயிலை நோக்கிச் சீறிப்பாய்ந்தன. கோயிலின் வடக்குக் கோபுரம், மணிக்கூண்டு கோபுரம், தெற்கு மதில் சுவர் எல்லாம் சிதறின. கோயிலின் பின்னால் இருந்த நூற்றாண்டு கடந்து பரந்து விரிந்திருந்த ஆலமரத்தின் கிளைகளும் முறிந்து விழுந்தன. அதுவரை காலமும் சனி விரதத்துக்குப் போடும் சோத்தையும் பலிபீடத்து புக்கையையும் கொத்தி சாப்பிட்டுவிட்டு சந்தோஷமாக அந்த ஆலமரத்தில் கூடுகட்டி வாழ்ந்த காகங்கள் பலதும் செத்துவிழ மீதி காகங்களோ ‘காலங்காத்தாலை எந்தச் சனியன்கள் எங்கடைக் கூட்டை பிரிச்சது?’ எண்டு நினைத்தபடி ‘கா... கா...’ எண்டு திட்டியபடியே பறந்து போனதே தவிரக் கோயிலுக்குள் இருந்து எந்தப் பதில் தாக்குதலும் வரவில்லை.

சில நிமிட இடைவெளி விட்டு மீண்டும் ஒரு தாக்குதலை நடத்தியவர்கள் ஆச்சர்யத்தோடு கோயிலின் உள்ளே நுழைந்து தேடினார்கள். யாரும் அங்கு இல்லை. சர்மாவுக்குச் சரியான கோபம். "யாரடா இந்தக் கோயிலின்ரை பூசாரி தேடிப்பிடிச்சு இழுத்து வாங்கோ" என்று கட்டளையிட்டார். அந்தக் கோயில் பூசாரி, பக்கத்திலேயேதான் குடியிருந்தார். அவர் சின்ன வயதில் போலியோ நோயால் தாக்கப்பட்டுக் கால்கள் சூம்பிப்போய்ச் சரியாக நடக்க முடியாதவர். அவரைத் தேடிப்பிடித்து இரண்டு ராணுவத்தினர் தூக்கிக்கொண்டு வந்து சர்மாக்கு முன்னால் போட்டார்கள். சர்மா, பூசாரியிடம், "எங்கே எல்.டி.டி? எங்கே ஆயுதம்?" எண்டு ஆங்கிலத்தில் கத்த, பூசாரிக்கு ஒண்டும் விளங்கேல்லை. உடனே ஒரு தமிழ் ஆமி ஓடிவந்து "எல்.டி.டி எங்கே? ஆயுதம் எங்கே ஆயுதம்?" எண்டு கேட்டார்.

பூசாரியும், "எல்.டி.டி–யை... நீங்களும் அவையளும் இந்தக் கோயிலுக்கு முன்னாலை சந்திச்சு கதைக்கேக்குள்ளைதான் கடைசியாய்க் கண்டனான்" என்றார்.

கோயில் வீதியில் பல இடங்களில் கிடங்கு தோண்டிப் பார்த்துவிட்டு அங்கு ஒரு சிறிய படையணியை நிறுத்திக் காவல் அரண் அமைத்தார்கள். எஞ்சிய ராணுவத்தினர் படை நடவடிக்கையைத் தொடர்ந்தார்கள். காரை நகரில் இருந்து மூளாய் வரை முன்னேறிய ராணுவத்தினரோடு தொடர்பை ஏற்படுத்த மானிப்பாய் காரை நகர் வீதியால் முன்னேறத் தொடங்கினார்கள். சுதுமலை அம்மன் கோயிலில் பிரபாகரன் இல்லாததால் கோபமடைந்த சர்மா, பொதுமக்களைக் கேடயங்களாக்கியபடி முன்னேற்றத்தைத் தொடர்ந்தார். அதன்படி முன்னேறி முக்கிய இடங்களை அடைந்ததும் பிடித்து வந்தவர்களை ஓடச்சொல்லிவிட்டு பின்னால் இருந்து

*சுட்டுவிடுவார்கள்.*

*பெரும்பாலனவர்கள் இறந்துபோகச் சிலர் மட்டும் தப்பியோடிய சம்பவங்கள் ஏராளம். அதுமட்டும் இல்லாமல் புலிகளின் இலக்கு என்றோ அல்லது புலிகள் தாக்குதல்கள் நடத்தாமலேயே பல இடங்களில் பொதுமக்களைப் படுகொலை செய்தார்கள். ஆனால், புலிகள் நவாலி, சண்டிலிப்பாய், அளவெட்டி, மூளாய், அராலி மற்றும் வடலியடைப்புப் பகுதிகளில் சிறு சிறு குழுக்களாகப் பிரிந்து தாக்குதல்களைத் தொடுத்துக்கொண்டிருந்தார்கள். அது இந்திய ராணுவத்துக்குப் பெரும் இழப்பையும் கொடுத்தது. கெரில்லாக்களுக்குப் பொதுவாகக் காடுகளும் மலைகளுமே பதுங்கும் பாதுகாப்பு அரணாக விளங்குவது வழைமை. ஆனால், இவை இரண்டுமே இல்லாத யாழ்ப்பாணக் குடா நாட்டில் புலிகளுக்குப் பாதுகாப்பாக விளங்கியது யாழ்ப்பாணத்தின் ஒழுங்கையமைப்புகள்தான்.*

*இந்திய ராணுவம் தங்கள் படை நடவடிக்கைக்கு ஏதுவாக இலங்கை அரசின் சுற்றுலாத் துறையினரால் 80–ம் ஆண்டு தயாரிக்கப்பட்ட வரைபடத்தை வைத்துக்கொண்டு தாக்குதல்களை வழிநடத்தினார்கள். அதில் யாழ்குடாவின் ஒழுங்கைகள் எதுவுமே வரையப்பட்டிருக்கவில்லை. புலிகள் ஒழுங்கைகளால் வந்து தாக்கியது அவர்களுக்குப் பெரும் தலையிடியைக் கொடுத்தது. மருதனா மடம் சந்தியில் இருந்து முன்னேறி உடுவில் அரிசி ஆலையில் முகாம் அமைத்திருந்த சர்மா, புலிகளின் நடமாட்டத்தை அறிய மேஜர் பரமேஸ்வரன் என்கிற தமிழ் அதிகாரி ஒருவரின் கீழ் ஒரு பட்டாலியன் ராணுவத்தைத் தயார்ப்படுத்தி ஊர் பொதுமக்களிடம் விவரம் கேட்டறிந்து புலிகளைத் தேடித் தாக்கி அழிக்கும்படி கட்டளையிட்டிருந்தார். அதன்படி பரமேஸ்வரனும் சண்டிலிப்பாய் பகுதியில் பெருமளவில் நின்றிருந்த புலிகளைத் தாக்குவதற்காக*

உடுவில் சண்டிலிப்பாய் டச்சு வீதி ஊடாக நகர்வை மேற்கொண்டார். அவரது வரைபடத்தில் டச்சு வீதியில் மானிப்பாயில் இருந்து குறுக்காகக் கந்த ரோட்டை செல்லும் இரண்டு சிறிய வீதிகள் இல்லை. அவரது படைகள் சண்டிலிப்பாயை அண்மித்ததும் கந்த ரோட்டையில் இருந்தும் மானிப்பாய் கட்டுடைப் பகுதியில் இருந்தும் புலிகள் இடையே புகுந்து தாக்கியதில் பரமேஸ்வரன் உள்பட 40–க்கும் மேற்பட்ட இந்திய ராணுவத்தினர் இறந்துபோனார்கள்.

இந்திய ராணுவத்தின் டாங்கி புலிகளுக்குப் பெரும் தலையிடியாக இருந்தது. ஒரு வாரமாகவே தொடர்ந்து வெடித்த கண்ணிவெடிகள் எதிலுமே இந்திய ராணுவ டாங்கிகள் சேதமடையாமல் லேசாக உலுங்கிய பின்னர் தொடர்ந்து நகர்ந்துகொண்டிருந்தது. கண்ணிவெடிகளைப் புதைத்துக்கொண்டிருந்த அவனுக்கும் சவாலான விஷயமாகப் போய்விடப் புதியதொரு பொறிமுறையைப் பாவிக்க நினைத்தான். சண்டிலிப்பாய்க்கும் சங்கானைக்கும் இடையில் மல்லாகம் சந்தி பிரியும் வீதியில் கண்ணிவெடியைப் புதைப்பதற்காகக் கிடங்கை வெட்டியவன், கிடங்கினுள் V வடிவில் இரும்புத் தகட்டைப் பொருத்தி வெடிமருந்துகளை நிரப்பியதோடு பக்கத்தில் இருந்த உரக்கடையை உடைத்து இரண்டு யூரியா பைக்கற்றையும் தூக்கிப் போட்டுக் கிடங்கை மூடி, உருமறைப்பு செய்துவிட்டு அருகே பக்கவாட்டாகத் தாக்கக்கூடியதாக நான்கு பண்டி சாச்சர் என்கிற புலிகளின் தயாரிப்பு கண்ணிகளையும் இணைத்து அனைத்துமே ஒரே நேரத்தில் வெடிக்கும்படி இணைப்பை கொடுத்தான். இந்தத் தடவையும் டாங்கி தப்பினால் இந்தியனின்ரை டாங்கியை அடிக்கிறதுக்கு ஏலாது. அதுக்கு சக்தி வாய்ந்த பிளாஸ்டிக் வெடிபொருட்கள்தான் தேவை என்று சொல்லி அந்தப் பகுதியில் சண்டையில் நின்றிருந்த அணியிடம் கையளித்துவிட்டான்.

சண்டிலிப்பாயில் இருந்து சங்கானை நோக்கி முன்னேறிய இந்திய அணியினரின் டாங்கி ஒன்று முதலாவதாக வந்துகொண்டிருக்க, கண்ணி வெடியும் வெடித்தது. டாங்கி சில மீட்டர் தூரம் பக்கவாட்டாகத் தூக்கி எறியப்பட, அதனுள் இருந்த ஏழு ராணுவத்தினர் கொல்லப்பட்டார்கள். அவர்களுக்கு மகிழ்ச்சி. அந்தச் செய்தி நடைபேசி ஊடாகப் புலிகளின் அனைத்து தரப்புக்கும் பரிமாறப்பட்டது. அதன் பின்னர் அதே பொறிமுறையில் அராலி பகுதியிலும் பின்னர் வன்னியில் கொக்குவெளி என்று பரவலாக அனைத்து இடங்களிலும் இந்திய ராணுவத்தின் டாங்கிகள் தகர்க்கப்பட்டன.

சுமார் 50 நாட்கள் வரை யாழ்குடா நாட்டில் புலிகள் பலத்த எதிர்பைக் காட்டிவிட்டு, கட்டம் கட்டமாக வன்னி பெரு நிலப்பரப்பின் காட்டுப் பகுதிகளுக்குள் பின்வாங்கத் தொடங்கினார்கள்.

இரண்டே நாளில் அனைத்தையும் முடித்துவிடலாம் என நினைத்துத் தொடங்கப்பட்ட ‘ஒப்பிரேசன் பவான்’ நடவடிக்கை 50 நாட்களையும் கடந்து தொடர்ந்தது. இதில் 35 நாட்கள் ஊரடங்கு தொடர்ச்சியாக அமல்படுத்தப்பட்டது. இந்தியப் படைகள் பலத்த இழப்புகளோடு பெருமளவான பொதுமக்களைப் படுகொலை செய்து, யாழ்குடாவை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். பிரதான வீதி எங்கும் ஒவ்வொரு மீட்டருக்கும் ஒரு ராணும் காவல் கடைமையில் நிறுத்தப்பட்டனர். ஆனாலும் சிறிய அளவில் இரண்டு பேராகப் பொதுமக்களோடு மக்களாகக் கலந்து திரிந்த பிஸ்டல் அணியினரும் அடிக்கடி வெடித்த கண்ணிகளும் தொடர்ந்தும் இந்திய ராணுவத்துக்குத் தொந்தரவாகவே இருந்தது. அப்படி யாழ்குடாவில் தங்கியிருந்த ஒருசில போராளி களோடு அவனும் தங்கியிருந்தான். பாடசாலை சீருடைகளிலும் வியாபாரிகள், பூசாரிகள் போன்று

பல வேடங்களிலும் வந்த புலிகள் தாக்குதல்களை நடத்திக்கொண்டிருந்ததால், போராளிகளையும் பொதுமக்களையும் தரம் பிரிப்பதற்கு இந்தியப் படைகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர். இதைச் சமாளிக்கத்தான், புலிகளால் தடை செய்யபட்ட இயக்கங்களில் இருந்து தப்பியோடி வெளிநாடுகளுக்குப் போக முடியாமல் இந்தியாவிலும் கொழும்பிலும் தங்கியிருந்த மாற்று இயக்கக்காரர்களை உள்ளடக்கிய '3 ஸ்டார்' அமைப்பை இந்திய உளவுப் பிரிவினர் உருவாக்கினார்கள். புளொட்டில் இருந்து பிரிந்து ராஜன் தலைமையில் இயங்கிய ஈ.என்.டி.எல்.எஃப்., ரொலோ, ஈ.பி.ஆர்.எல்.எஃப். ஆகியவற்றை ஒன்றிணைத்து '3 ஸ்டார்' என்ற பெயரில் கிளிநொச்சியிலும் யாழிலும் மட்டக்கிளப்பிலும் கொண்டுவந்து இறக்கினார்கள்.

புலிகளையும் மக்களையும் பிரித்து இனம் கண்டறிவதற்காக இந்திய ராணுவத்துடன் சேர்ந்து இயங்கத் தொடங்கினார்கள். ஆரம்பத்தில் இந்தியா, ஈ.என்.டி.எல்.எஃப் அமைப்பையே முதன்மைப்படுத்தியது. ஆனால், பிந்திய காலங்களிலேயே ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பினை முதன்மைப்படுத்தி வரதராஜப்பெருமாளை முதலமைச்சர் ஆக்கினார்கள். இந்தச் சமயத்தில்தான் இவர்களது தமிழ்த் தேசிய ராணுவத்துக்கான கட்டாய ஆட்சேர்ப்பு நடத்தப்பட்டது. இந்தியப் படையினர் பிடிபட்டவர்களைத் துணியால் மூடிக் கட்டிவிடுவார்கள். அவர் வீதியால் போகிறவர்களைப் பார்த்து மேலும் கீழுமாகத் தலையாட்டினால் அவர் புலி. அவருக்குச் சனி பிடித்துவிடும். இடம் வலமாகத் தலையாட்டினால் வீதியால் போகிறவருக்குக் கண்டம் தீர்ந்தது. தலையையே ஆட்டாமல் பேசாமல் நின்றால் தலையாட்டிக்கு சனியன் பிடிக்கும். அடி விழும். இப்படித் தலையாட்டிக்குப் பிடிக்காதவர்கள் எல்லாம் புலியாகி ஆமியிடம் அடி வாங்கிய கதைகளும் நிறைய நடந்தன. இந்தியப் படை காலத்தில்தான் பிடிபட்ட

*புலிகளை, சந்திகளில் இருந்த தங்கள் காவல் அரண்களில் தலையாட்டிகளாகப் பயன்படுத்தினார்கள். புலி உறுப்பினரின் தலையைக் கண்கள் மட்டும் பார்க்கக் கூடியதாக இரண்டு ஓட்டையைப் போட்ட சாக்குப் பிரபல்யம் ஆகியிருந்தது.*

**பி.கு:**

**இந்திய ராணுவத்தினரால் நடத்தப்பட்ட மோசமான படுகொலைகள் சில:**

1. *21.10.1987 – யாழ் வைத்தியசாலைப் படுகொலைகள், சுமார் 60 பொதுமக்கள்.*
2. *10.10.1987 – பிரம்படி (கொக்குவில்) படுகொலைகள், சுமார் 40 பொதுமக்கள். இவர்கள் டாங்கிகளாலும் ஏற்றிக் கொல்லப்பட்டார்கள்.*
3. *10.10.1987 – கொக்குவில் இந்துக் கல்லூரி படுகொலைகள், சுமார் 35 பொதுமக்கள்.*
4. *26.10.1987 – அளவெட்டி இந்து ஆச்சிரம படுகொலைகள், சுமார் 17 பொதுமக்கள்.*
5. *27.10.87 – சாவகச்சேரி படுகொலைகள், சுமார் 67 பொதுமக்கள்.*
6. *19.01.1989 – வல்வை மற்றும் ஊறணி வைத்தியசாலைப் படுகொலைகள், சுமார் 65 பொதுமக்கள் மற்றும் கிழக்கு மாகாணத்தில் பெருமளவான முஸ்லிம்கள் என, பல படுகொலைகளை நடத்தி முடித்திருந்தனர்.*

# 22

இந்தியப் படையின் கைகளில் யாழ்குடா முழுவதுமே வீழ்ந்துவிட்டது. புலிகளும் பெரும்பாலும் கடல்வழியாகவும் தரையாலும் வன்னி பெரு நிலப்பரப்புக்கு சென்றுவிட்டனர். இறுதியாக வெளிமாவட்டங்களைச் சேர்ந்த 20 பெண் போராளிகள் உள்பட சுமார் 60 பேராளிகள் தங்கியிருந்தனர். அவர்களையும், அன்றைய அரசியல் துறை பொறுப்பில் இருந்த லோறன்ஸ் திலகரையும் வெளியேற்றும் பொறுப்பு அவனிடம் கொடுக்கப்பட்டது. திலகர் ஆயுதம் தாங்கிய சண்டை பிடிக்கும் போராளி இல்லை என்பதால் அவரைச் சண்டிலிப்பாய் கல்வளை பகுதியில் ஒரு வீட்டில் தங்கவைத்தான். சண்டிலிப்பாய் தேனிப் புளியடியில் ஒரு பகல் பொழுதை பழைய வீடு ஒன்றில் கழித்துவிட்டு, மாலை ஆனதும் நகரலாம் என நினைத்துத் தங்கியிருந்தான். ஆனால் எதிர்பாராதவிதமாக, மதியமளவில் அந்த ஒழுங்கையால் இந்திய ரோந்து அணி வந்தவிட்டது. வேறு வழியில்லை. அவர்களுடன் மோதவேண்டியதாகிவிட்டது. நடந்து முடிந்த மோதலில் ஒரு பெண் போராளி தொடைப் பகுதியில் காயமடைந்தார். அவரையும் ஒரு வீட்டில் தங்கவைத்துவிட்டு, தென்மராச்சி நோக்கி நகரத் தொடங்கியினார்கள். அங்கு நடந்த மோதலில் 14 ராணுவத்தினர் இறந்துபோனார்கள். மேலதிகமாக அங்கு வந்த படையினர் அந்தப் பகுதியில் இருந்த 20–க்கும் மேற்பட்ட வீடுகளைத் தரைமட்டமாக்கினார்கள். ஊரடங்கு நடைமுறையில் இருந்ததாலும் மக்கள் கோயில்களில் தஞ்சம்

அடைந்திருந்ததாலும் உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டிருந்தது.

தென்மராட்சி கச்சாய் பகுதி வரை போராளிகளோடு வந்துவிட்டான். கேப்டன் நந்தனின் பொறுப்பில் போராளிகளை ஒப்படைத்தான். போராளிகளைப் பத்திரமாக நகர்த்திச் செல்லும் பொறுப்பை அவனும் எடுத்துகொண்டான். இவன் மீண்டும் ஏழாலைப் பகுதிக்குச் சென்றான். யாழ்ப்பாணத்தில் தங்கிருந்த போராளிகளுடன் கிராமம் கிராமமாகத் தலைமறைவு வாழ்க்கையைத் தொடரத் தொடங்கினான். அன்றைய காலப் பகுதியில் 87–ம் ஆண்டு தீபாவளியன்று வல்வையில் இந்தியப் படைகள் ஓர் இடத்தில் படுகொலைகளை நடத்தி முடித்த செய்தி அவர்களுக்குக் கிடைத்திருந்தது. இரண்டு நாள் கழித்து 22–ம் தேதியே அவனின் கிராமம் இந்திய ராணுவத்தின் கட்டுப்பாட்டில் வந்திருந்தது.

அதன்பின்னர் அவன் கிராமம் மட்டுமல்ல யாழ்குடா எங்கும் ஒரே இந்திய ராணுவ மயமாகத்தான் இருந்தது. கோயில்களிலும் பாடசாலைகளிலும் அகதிகளாகத் தஞ்சம் புகுந்திருந்த மக்களை விசாரணை, கைதுகள் என்று தொடர்ந்து துன்புறுத்திக்கொண்டிருந்தது. ஊரடங்குச் சட்டம் நடைமுறையிலேயே இருந்தது. மக்கள் தங்கள் வீடுகளுக்குச் செல்ல அனுமதிக்கபடவில்லை. அவனின் வீடு பிரதான வீதிக்கு அருகில் இருப்பதால் அந்தக் கிராமத்தில் எல்லோரையும் போலவே அவனின் குடும்பமும் ஒதுக்குப்புறமாக இருந்த பிள்ளையார் கோயிலில் தஞ்சம் அடைந்திருந்தனர். அங்கு சுமார் 200 பேரளவில் இருந்தனர்.

கோயிலின் சுற்றாடலில் இருந்த வீடுகளில் எடுத்த பொருட்கள் மற்றும் அங்கு கிடைத்த தேங்காய், மாங்காய், புளியங்காயும் தண்ணீரும்தான் ஒரு வார காலமாக அங்கிருந்தவர்களின் உணவாக இருந்தது. 22–ம் தேதி குண்டுச் சத்தங்கள் ஓரளவு ஓய்திருந்தபடியால், அங்கிருந்த மக்கள் அங்குக் காவல் கடமையில் நின்றிருந்த ராணுவத்திடம் தங்கள் நிலைமையை விளக்கி தாங்கள் வீடுகளுக்குப் போய் உணவுப்பொருட்களையும் மாற்றுத்துணிகளை எடுத்து வரவும் அனுமதி கேட்டனர். ஒரு குடும்பத்தில் ஒருவர் போவதற்கும் அதே நேரம் மொத்தம் ஐந்து பேருக்கு மட்டுமே அனுமதி என்ற நிபந்தனையுடன்

ராணுவம் சம்மதம் வழங்கியது. அங்கு இருந்தவர்களில் அவனது தந்தையுடன் வேறு யார் போவது என அவர்கள் யோசித்துக்கொண்டிருந்தபோது அவனுடைய மூத்த சகோதரியும் புறப்பட்டாள். பெண்களுக்கேயான இயற்கை பிரச்னை. எனவே, வீட்டுக்குப் போய்க் குளித்துத் துணி மாற்றிவிட்டுப் பிள்ளைகளுக்கு உணவும் எடுத்து வருவதற்காக அவர்களுடன் அடம்பிடித்துச் சேர்ந்துகொண்டாள்.

அவளுக்கு அடுத்ததாக பக்கத்து வீட்டுக்காரர் ரஞ்சன் என்பவர். இவர் சவுதி அரேபியாவில் வேலை பார்த்து வந்தார். அவருக்கு மகன் பிறந்திருந்ததால் விடுமுறையில் வந்திருந்தார். அடுத்ததாக சிங்கம் என்கிற ஆசிரியர். கந்தைய்யா என்கிற இன்னுமொருவருடன் சேர்த்து ஐந்து பேரும் யாருடையதோ ஒரு சால்வையைக் கிழித்து ஒரு தடியில் கட்டி, வெள்ளைக் கொடியுடன் புறப்பட்டுப் போய்விட்டார்கள்.

அவர்கள் போய் ஒரு மணி நேரம் கழித்து, துப்பாக்கி வெடிச்சத்தங்கள் கேட்டன. போனவர் களுக்கு ஏதாவது நடந்துவிட்டதோ என்று கோயிலில் இருந்தவர்களுக்கெல்லாம் பதற்றம். மணித்தியாலங்கள் கடந்துகொண்டிருந்தன. போனவர்கள் திரும்பவில்லை. அவர்களைத் தேடி மற்றவர்கள் போவதற்கும் அங்கிருந்த ராணுவம் அனுமதிக்கவில்லை. அனுமதி கேட்டவர்களை “பேசாமல் இருக்கவும் இல்லாவிட்டால் சுட்டுவிடுவோம்” என்று மிரட்டியிருந்தனர். அதே நேரம் சிறு குழுக்களாகப் பிரிந்து இந்திய ராணுவத்துக்கு எதிராகக் கெரில்லா தாக்குதல்களை நடத்திக்கொண்டிருந்தவர்களில் அவனும் ஒருவன். இரண்டு நாட்கள் கழித்து, ஏழாலை கிராமத்தில் நண்பர்களுடன் தலைமறைவாக இருந்த அவனுக்கு வெளியில் இருந்து செய்தி கொண்டுவருபவர் ஒருவர் தேடிவந்து, அவனுடைய தந்தையையும் அக்காவையும் வேறு சிலரையும் இந்திய ராணுவம் சுட்டுக்கொன்றுவிட்டதாகவும், ஆனால் செய்தி உறுதியாக சொல்ல முடியவில்லை என்று சொல்லிவிட்டுப் போயிருந்தார்.

அங்கிருந்த அவனுடைய கிராமத்தைச் சேர்ந்தவர்களான பிரேம் மற்றும் ராஜன் இருவரையும் அழைத்துக்கொண்டு தற்காப்புக்காக ஆளுக்கொரு கைத்துப்பாக்கிகளையும் சில

கைக்குண்டுகளையும் எடுத்துகொண்டு கிராமத்துக்குப் புறப்பட்டார்கள். அவனின் வீட்டுக்காரர்கள் கோயிலில்தான் இருக்கிறார்களா? அல்லது வீடுகளுக்குத் திரும்பிவிட்டார்களா? என்று சரியாகத் தெரியாத நிலையில், அவன் வீட்டுக்கே போவது என்று முடிவுசெய்தான். ராணுவத்தின் கண்களில் படாதவாறு பதுங்கியபடியே பின்புறமாகச் சென்று வீட்டை அடைந்தார்கள். ஆனால், வீட்டில் யாரும் இல்லை. அங்கு இருந்தபடி வீட்டுக்கு வரும் பாதையைக் கவனித்தபோது அங்கு சில மீட்டர் தூரத்திலேயே சில உடல்கள் கிடந்தன. அவை அவனுடைய தந்தை, சகோதரியின் உடல்களாக இருக்கலாம் என நினைத்தாலும், உடனேயே அருகில் போய்ப் பார்க்க முடியவில்லை. காரணம், ராணுவத்தினர் பிரதான வீதியில் சில மீட்டர்கள் தூரத்திலேயே பாதுகாப்பு அரண் அமைத்து அதற்குள் இருப்பது தெரிந்தது. எனவே, இருளும் வரை அங்கேயே பதுங்கியிருந்துவிட்டு இரவானதும் அருகில் போய்ப் பார்த்தார்கள். ராணுவத்தினர் நான்கு உடலங்களை ஒன்றாகப் போட்டு ஒரு டயரை போட்டுக் கொளுத்தியிருக்கிறார்கள். அவை அரைகுறையாக எரிந்தபடி நாற்றமெடுத்துக்கொண்டிருந்தன.

இரவாகவும் இருந்ததனால் உடல்களை அடையாளம் காண்பதும் சிரமமாக இருந்தது. அவற்றை அருகில் இருந்த வீட்டுக் காணியில் புதைக்கலாம் என முடிவுசெய்தனர். மண்வெட்டி தேவை. மண்வெட்டியைத் தேடி கொண்டுபோனபோது, வீட்டின் விறாந்தையில் இன்னோர் உடல் தனியாகக் கிடந்தது. அருகில் போய்ப் பார்த்தான். அது அவனுடைய சகோதரியின் உடல். துணி எதுவும் இன்றித் தலைப் பகுதி சிதறிப்போய்க் கிடந்தது. அக்காவுக்கு என்ன நடந்திருக்கும் எனப் புரிந்தது. அதைப் பார்த்ததுமே பிரேம் உணர்ச்சிவசப்பட்டுவிட்டான். தன்னுடைய கைத்துப்பாக்கியை உருவியபடி “டேய்… சென்றியிலை இருக்கிற ஆமியை போடுவம்” என்று புறப்பட்டான். இவனுடைய ஆத்திரம், இயலாமை எல்லாவற்றையுமே அடக்கிக்கொண்டு பிரேமை சமாதானம் செய்தான். அதற்கான நேரம் இது இல்லை. அதைப் பிறகு பார்க்கலாம். எனவே, ஐந்து உடல்களையும் கிடங்கு வெட்டி புதைப்பது இயலாத காரியம். பக்கத்தில் நிற்கும் ராணுவம் எந்த

நேரமும் வரலாம்.

வீட்டில் தோட்ட வேலைகளுக்கும் வாகனங்களின் தேவைக்கும் இவனுடைய தந்தை மண்ணெண்ணெய் மற்றும் பெட்ரோல் எப்போதும் சேமித்துவைப்பது வழைமை. அவற்றை எடுத்து வந்து வீட்டின் உள் பகுதியில் குப்பைகள் போடுவதற்காக வெட்டப்பட்டிருந்த கிடங்கினுள் எல்லா சடலங்களையும் போட்டு கொளுத்துவது என முடிவுசெய்தனர். அங்கிருந்த சாக்கு ஒன்றில் மேல் உடல்களை ஒவ்வொன்றாக வைத்து இழுத்துக்கொண்டு போய்க் கிடங்கினுள் போட்டார்கள். பின்னர் அதற்குள் மண்ணெண்ணையையும் பெட்ரோலையும் நிரப்பினார்கள். நிண்ட பெருமூச்சுகளாக உணர்ச்சிகள் வெளிவந்துகொண்டிருந்தன. செய்வதற்கு ஒன்றுமில்லை. பொறுமையாக இருக்கச் சொல்லி மனது சொல்லியபடியிருந்தது. துணி ஒன்றை எடுத்து நெருப்பைப் பற்றவைத்துக் கிடங்கில் எறிந்தான். நெருப்பு பெரிதாகப் பற்றி எரிய ஆரம்பித்தது. அவர்கள் அங்கிருந்து வெளியேறி இருளில் மறைந்துபோனார்கள். நெருப்பு எரிந்த திசையை நோக்கி காவலில் இருந்த ராணுவத்தினர் சுடத்தொடங்கினார்கள்.

சில நாட்களின் பின்னர் தாய், சகோதரங்களைச் சந்தித்தபோது நடந்தவற்றைச் சொன்னான். இறந்தவர்களின் உடல்களைக்கூடக் கண்களால் காண முடியவில்லையே என்ற ஆதங்கத்திலும் எல்லோருமே கதறியழுதார்கள். அவனது குடும்பம் மட்டுமல்ல, ஈழத்தில் பல்லாயிரம் குடும்பங்கள் யாரோ ஒருவரை இழந்து கதறினார்கள். எங்கள் கதறல்கள் யாவுமே அவர்கள் தேசத்தின் காற்றிலேயே கரைந்துபோனது; யார் காதிலும் விழவில்லை.

# 23

மழை பெய்துகொண்டிருந்த ஓர் இரவுப்பொழுதில் இரண்டு பேருடன் ராமின் வீட்டுக்குப் போனான். துவாயைக் கொண்டுவந்து மற்றவர்களுக்குக் கொடுத்த பவானியக்கா, அவனது அப்பாவும் அக்காவும் இறந்துபோன செய்தி அறிந்திருந்தாள். அது பற்றித் துக்கம் விசாரித்துவிட்டு, "உங்களுக்கு ஏன்டா இந்த வேண்டாத வேலையள்?" என்று வழைமை போலத் திட்டியபடியே அவனை இழுத்து தலையைத் துடைத்துவிட்டார். அவசரமாக வீட்டில் இருந்த உணவுகளை எடுத்துக் குழைத்து உருண்டையாக்கி அவர்களில் கைகளில் வைத்தவர், திட்டுவதை மட்டும் நிறுத்தவில்லை.

"பிள்ளை அவங்களுக்குத் திட்டித் திட்டி சாப்பாடு குடுக்காதை. உடம்பிலை ஒட்டாது" என்று அவளது அம்மா அவளைத் திட்டினார்.

"நான் திட்டினா மட்டும் இவங்கள் கேக்கப்போறாங்களா... எருமை மாடுகள்" என்று அதற்கும் திட்டு விழுந்தது. சாப்பிட்டுவிட்டுப் புறப்படும்போது, "பொறுங்கோடா. அந்தக் குறுக்காலை போவார் நிக்கிறாங்களோ எண்டு பாத்திட்டு வாறன்" என்றவர் தலையில் துணியைப் பிடித்தபடி போய் வீதியில் ராணுவம் நிக்கிறதா என்று பார்க்கப் போனார். நின்ற இடத்தில் இருந்து சட்டென வேகமாகச் சில காலடித்தடங்கள் வைத்து பவானியக்காவுக்குப் பக்கத்தில் வந்தான்.

"அக்கா... ராம் மருதனாமடம் இந்தியனாமி காம்பிலை ஆமியோடை வந்து நிக்கிறதா எங்களுக்குத் தகவல் வந்திருக்கு. வீட்டுக்கும் அடிக்கடி வந்து போறானாம். அவனைப் பிடிச்சு கெதியா எங்கேயாவது வெளிநாட்டுக்கு அனுப்பிவிடுங்கோ. நான் நிக்கிறபடியா பிரச்னை இல்லை. ஆனா, வேறை எங்கடையாக்களின்ரை காதிலை கதை போனால் பிரச்னையாயிடும்" என்றான் மெதுவாக.

பவானியக்கா பதறியவராக, "டேய், கன வருசத்துக்குப் பிறகு அவனைக் கண்ட சந்தோசத்திலை நாங்கள் இருக்கிறம். வெளிநாட்டுக்கு அனுப்பத்தான் அலுவல் பாத்துக்கொண்டிருக்கிறன். இன்னும் கொஞ்ச காசு பிரட்ட வேணும். அதே நேரம் அவனாலை உங்கடையாக்களுக்குப் பிரச்னை வராது. அவன் உங்களுக்குப் பயப்பிடுறான். வீட்டை வந்து இருக்க மாட்டானாம். காம்பிலை இருக்கிறதுதான் தனக்குப் பாதுகாப்பு எண்டுறான். இன்னும் கொஞ்சநாள்தான் எப்பிடியாவது அனுப்பிடுவன். ஆனா, உங்கடை ஆக்களாலை அதுவரைக்கும் அவனுக்கும் ஒண்டும் நடக்காத மாதிரி நீ பாத்துக்கொள்ளடா" என்று கெஞ்சுவதைப் போல அவனது கையைப் பிடித்தவர், உன்னைப் பற்றியும் விசாரிச்சவன் என்றார். பவானியக்காவை நிமிர்ந்து பார்க்க முடியாமல் தலையைக் குனிந்தபடி அவரது கையை விடுவித்தவன் சைக்கிளை மிதிக்கத் தொடங்கினான்.

இவனும் ராமும் சின்ன வயதில் இருந்து நல்ல சினேகிதர்கள். படிக்கிற காலத்தில் அனேக நாட்கள் ராமின் வீட்டில்தான் மதியச் சாப்பாடு சாப்பிட்டிருக்கிறான். அங்கேயே சாப்பிட்டுவிட்டு, அவனோடு சேர்ந்து ஊர் சுற்றிவிட்டு மாலைதான் வீட்டுக்குப் போவான். அவர்கள் படித்த பாடசாலைகள் வேறு வேறானாலும், இருவரும் நல்ல நண்பர்கள். ராமுக்கு மூத்த இரண்டு சகோதரிகள். அவனும் ராமின் வீட்டுக்கு அடிக்கடி போய் வருவான். ராமின் தாய்–தந்தை மட்டுமல்ல, சகோதரிகளும் அவனுடைய சகோதரிகளைப் போலவே மிகவும் பாசமாகப் பழகுவார்கள். காலத்தின் மாற்றங்கள் இயக்கங்கள் தொடங்கிய காலங்கள். ராம் முதல்லேயே புளொட்டுக்கு போய்விட்டான்.

வீட்டில் ஒரேயோர் ஆண் பிள்ளை இயக்கத்துக்குப்

போனதால் அவனது வீடே சோகமாகியிருந்தது. அவனை எப்படியாவது தேடிப் பிடித்துவிடலாம் என நினைத்து அவனது வீட்டுக்காரர்கள் புளொட் முகாம்கள் எங்கும் அலைந்தார்கள். ஆனால், ராமை கண்டுபிடிக்க முடியவில்லை. அவன் இந்தியாவுக்குப் போய்விட்டான். ராம் இல்லாவிட்டாலும், அவனது வீட்டுக்கு போய் வருவதை இவன் நிறுத்தவில்லை. ராமின் பாசத்தையும் சேர்த்தே அவர்கள் அவனைக் கவனிப்பார்கள். “டேய், நீயும் தம்பி மாதிரி இயக்கங்களுக்குப் பின்னாலை போயிடாதையடா” என்று ராமின் மூத்த சகோதரி பவானி அடிக்கடி அவனிடம் சொல்லுவார். ஆனால், அவனும் ஒருநாள் இயக்கத்துக்குப் போய்விட்டான்.

இயக்கத்தில் பயிற்சி முடித்து மீண்டும் நாட்டுக்குப் போயிருந்த ஒரு நாளில் சுமார் ஒன்பது மாதங்கள் கழித்து அவன் ராமின் வீட்டுக்குப் போனான். அவனைக் கண்டு ஓடிவந்து அணைத்த ராமின் தாயார் அழுதபடி “தம்பி, நீயும் இந்தியவிலைதானே நிண்டனி அவனைப் பற்றி ஏதாவது தெரியுமோ?” ராமைப் பற்றி விசாரித்தபோதுதான் ராம் இன்னமும் வீட்டுக்குத் திரும்பவில்லை என்று தெரிந்தது. அதே நேரம் ‘நீயும் ஏன்டா இப்படிச் செய்தனி?’ என்று பவானி அக்கா அவனுக்குத் திட்டி, அடித்துச் சாப்பாடும் போட்டு அனுப்பியிருந்தார். 85 ஆண்டு பவானி அக்காவின் திருமணத்தில் அவனே ராமின் இடத்தில் மாப்பிளைத் தோழனாகவும் இருந்து திருமணம் நடந்து முடிந்திருந்தது. இயக்கத்தில் அன்றைய காலத்தில் தங்க நகைகள் அணிய முடியாது என்ற இயக்க விதி இருந்ததால், முகாமுக்குப் போகும்போது மோதிரத்தைக் கழற்றி பவானி அக்காவிடமே கொடுத்துவிட்டுப் போயிருந்தான். ராம் இந்தியாவில் புளொட் முகாமில் பயிற்சியாளனாகவும் பின்னர்ப் புளொட் உள்கட்சி மோதல்களில் வெளியேறிவிட்டிருந்தாகச் செய்திகள் மட்டும் கிடைத்துக்கொண்டிருந்தன. நீண்ட காலத்தின் பின்னர், தான் இயக்கத்தைவிட்டு விலகிவிட்ட தாகவும், விரைவில் ஊருக்கு வரப்போவதாக வீட்டுக்கும் ஒரு கடிதம் எழுதியிருந்தான். ஆனால், பதில் போடுவதற்கு எந்த விலாசமும் இல்லை.

பிறகு எப்படியோ இந்தியனாமியுடன் சேர்ந்துவிட்டான். இப்போது சந்தியில் நின்று தலையாட்டி வேலை

*பார்க்கிறான் எனத் தகவல் வந்ததால், இயக்கம் அவனையும் கவனிப்பதற்குத் தயாராகிவிட்டது. அன்று மாலை மயங்கி இரவாகிக்கொண்டிருந்த வேளை, சங்குவேலிப் பகுதிக்கு பிறேமோடு வந்தவன் அப்படியே ராம் வீட்டுக்கும் போகலாம் என நினைத்தான். பின்னால் பிரேமை வரச் சொல்லிவிட்டு டச்சு வீதியில் சைக்கிளை இறக்கி மிதித்தான். தபால் பெட்டி சந்தியைக் கடந்து வளைவில் திரும்பியபோது எதிரே ஒருவன் சைக்கிளில் வந்துகொண்டிருந்தான். அது ராமா? அவனது மூளை வேகமாக வேலை செய்தது. ஓ...! அவனேதான். சைக்கிளை மிதித்துக்கொண்டிருந்த ராமின் இடுப்புப் பகுதியில் ஏதோ ஒன்று செருகியிருந்தது. அது பிஸ்டலாகத்தான் இருக்கும் என்று தீர்மானித்தான். ராமின் சைக்கிளுக்கும் அவனது சைக்கிளுக்கும் இப்போது இடைவெளி வெறும் 5 மீட்டர்தான் இருக்கும்.*

*ராமின் வலது கை சைக்கிளின் காண்டிலைவிட்டு விலகியது. பிஸ்டலை எடுக்கப்போகிறானா? என நினைத்தவன் தனது சைக்கிளை ராமை நோக்கி உருட்டிவிட்டவிட்டு மின்னலாகக் குதித்தான். எப்போதும் தயாராக பின் பகுதியில் செருகி இருக்கும் பிஸ்டலை உருவி, ராமை நோக்கிச் சுட்டான். சைக்கிளோடு ராம் கீழே விழுந்தான். அருகில் போய்ப் பார்த்தான். ராமின் உயிர் பிரிந்திருந்தது. அவனது சட்டையை விலக்கிப் பார்த்தான். இடுப்பில் டார்ச் லைட் ஒன்று செருகியிருந்தது. சட்டைப் பையில் ஒரு கட்டாகப் பணம் இருந்தது. ஐயைய்யோ! பெரிய தவறு செய்திட்டனே என்று மனம் அலறியது. நிமிர்ந்து பார்த்தான். வீதியில் போய்கொண்டிருந்தவர்கள் அச்சத்தோடு அவனைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். பையில் இருந்த பணத்தை எடுத்தவன், அருகில் இருந்த கடைக்குப் போனான். கடைக்காரரிடம் பணத்தைக் கொடுத்து "இந்தக் காசை பவானி அக்காட்டைக் குடுத்துவிடுங்கோ" என்று நீட்டியதும் பயத்தோடு கடைக்காரர் பணத்தை வாங்கினார். "கட்டாயம் குடுக்கவேணும் இல்லாட்டி தெரியும்தானே" என்று கடைக்காரரை நோக்கி பிஸ்டலை நீட்டினான். நடுங்கியபடி "ஓ..! தம்பி கட்டாயம் குடுக்கிறன்" என்றார்.*

*அதற்குப் பிறகு அவன் ராம் வீட்டுப் பக்கம் போகவே இல்லை. சில நாட்களின் பின்னர் ஒருநாள் தற்செயலாகப்*

பவானியக்காவை வீதியில் சந்தித்துவிட்டான். அவனைக் கண்டதுமே, “டேய், திண்ட கோப்பைக்குள்ளை பேண்டிட்டியேடா. கள்ள நாயே. உன்னையும் குடும்பத்திலை ஒருத்தனாதானே பாத்தனாங்கள். அவனை எங்கேயாவது வெளிநாடு போகச் சொல்லி அண்டைக்குத்தானேடா காசு குடுத்து அனுப்பிவிட்டிருந்த நாங்கள் அனியாயமாய் கொண்டிட்டியேடா. நீ நாசமாய்ப் போவாய்” என்று மண்ணை அள்ளி அவனை நோக்கி எறிந்து திட்டினார்.

❍ ❍

# 24

யாழ்குடா நாடு இந்திய ராணுவத்தின் கட்டுப்பாட்டுக்கு வந்த பின்னர் ஒவ்வோர் ஊருக்கும் ஒவ்வொரு ராணுவத் தளபதிகளை நியமித்து ராணுவமே நிர்வகிக்கத் தொடங்கியது. அதன்படி மானிப்பாய்க்குப் பொறுப்பாக அணில்குமார் என்கிற கன்னடர் இருந்தார். இவர் சமாதான காலத்தில் புலிகளோடு நெருக்கமாகப் பழகிய காரணத்தால் தொடர்ந்தும் புலிகள் விஷயத்தின் மென்மைப் போக்கையே கடைப்பிடித்தார். புலிகள் எங்காவது மறைந்திருக்கிறார்கள் என்று தகவல் கிடைத்தால் உடனே யாரிடமாவது தகவலை புலிகளுக்கு அனுப்பிவிட்டு, புலிகள் அங்கிருந்து தப்பிச் சென்ற பின்னரேயே அந்தப் பகுதியில் சுற்றி வளைப்பு நடைபெறும். தேவையில்லாமல் யாரையும் கைது செய்யவும் மாட்டார். அதுமட்டுமல்ல, மானிப்பாய் யாழ் வீதியில் சோதனைக் கெடுபிடிகளும் அதிகம் இல்லை. அதே நேரம் கடும் போக்காளரும் ராணுவ நகர்வின்போது மக்களுக்குப் பெரும் இழப்பை ஏற்படுத்தியவரான தெய்வேந்திர சர்மா மருதனார் மடம் உடுவில் பகுதிக்கு பொறுப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார்.

உடுவில் அரிசி ஆலையில் ராணுவம் முகாம் அமைத்திருந்தாலும் சில மீட்டர் தூரத்தில் இருந்த வசதியான ஒரு வீடுதான் அவரது தங்குமிடமாக இருந்தது. இவரின் பொறுப்பின் கீழ் இருந்த பிரதேசமும் சண்டிலிப்பாய் கந்தரோடை வழியாகச் சுன்னாகம் வரை பெரியது. இவரது பகுதிகளில் அடிக்கடி சுற்றி வளைப்பு கைது நடைபெறுவது மட்டுமல்லாமல், கைதானவர்களின்

விசாரணை முறைகளும் கடும் சித்ரவதைகளாக இருக்கும். கைதானவர்களை அணு அணுவாக ரசித்துச் சித்ரவதை செய்வதில், சர்மா கில்லாடி. இவரது சித்ரவதை வகைகள் ஒருவரை அவரது இரண்டு கை பெருவிரல்களையும் நைலோன் கயிற்றால் கட்டி மரக்கிழையில் தொங்கவிட்டு விடுதல் அல்லது கால்கள் இரண்டிலும் இரண்டு கயிற்றைக் கட்டி இரண்டு பேரிடம் கயிற்றைக் கொடுத்து இரண்டு திசைகளில் கவடு கிழியும் வரை இழுத்தல், தண்ணீர் நிரப்பப்பட்ட ஒரு தகர டிரம்மில் ஆளை இறக்கி மின்சாரத்தை விட்டுவிட்டு பாச்சுதல் போன்றன. ஆனால், புலி என்ற சந்தேகத்தில் அழகான பெண்கள் யாராவது அகப்பட்டால் சித்ரவதை விசாரணை எதுவும் கிடையாது அவரது வீட்டுக்கு அனுப்பிவிட வேண்டும். அப்படி அவரது வீட்டுக்குப் போனவர்கள் பலர் விடுதலையாவார்கள். சிலர் காணாமல்போவார்கள்.

சர்மாவுக்குக் குறி வைக்கப்பட்டது. சர்மா ஒவ்வொரு நாள் காலையிலும் உடற்பயிற்சிக்காகத் தனது வீட்டில் இருந்து மருதனாமடம் சந்தி வரை வெள்ளை காற்சட்டை, வெள்ளை டீஷர்ட் அணிந்து இடுப்பில் பிஸ்டலை செருகியபடி ஓடுவது வழைமை. அதுமட்டுமல்ல, அந்தப் பகுதியில் பிரபல்யமான இரண்டு பெண்கள் கல்லூரிகளான உடுவில் மகளிர் கல்லூரியும், மருதனார்மடம் ராமநாதன் கல்லூரியும் இருந்தன.

இரண்டு கல்லூரி மாணவிகளின் எண்ணிக்கை ஆயிரக்கணக்காக இருக்கும். காலையில் தாக்குதலை எப்படிச் செய்வது என்பதில்தான் பிரச்னை. சர்மாவும் கெட்டிக்காரன். கண்ணிவெடி வைக்க முடியாதவாறு மருதனா மடத்தில் இருந்து மானிப்பாய் வரை வீதி இரு பக்கமும் மூன்று மீட்டர் வரை பற்றைகள் வெட்டி வீட்டு வேலிகள் மதில்கள் எல்லாமே இல்லாமல் தரையைச் சுத்தமாக்கி வைத்திருந்தான். அதற்கும் அப்பால் இரவில் யாராவது புகுந்தாலும் சத்தம் வருகிற மாதிரி கம்பி வேலிகளில் கற்கள் போட்டுத் தகரப் பேணிகள் கட்டப்பட்டிருந்தன. தானியங்கி வெடிபொருள் அல்லது ரிமோட் கண்ணி எதையாவதும் வைக்க முடியாது. அடிக்கடி ரோந்து போகும் ராணுவம் புதிதாக எதையாவது பார்த்தால், நின்று சோதனை செய்துவிட்டுதான் போகிற உயர் பாதுகாப்பு வலயமாக இருந்தது. எனவே, சர்மாவை

நேரடியாகப் போடுவதைத் தவிர வேறு வழி இல்லை. எப்படித்தான் போடுவது?

அவனும் பிரேமும் ராஜனும் வெள்ளையுமாகச் சேர்ந்து திட்டத்தைத் தீட்டத் தொடங்கினார்கள். உடுவில் மகளிர் கல்லூரிக்கு அருகில் பிரதான வீதியை ஓர் ஒழுங்கை குறுக்காகக் கடக்கும். அந்த ஒழுங்கை ஒரு பக்கம் சங்கு வேலிக்கும், மறுபக்கம் மல்வத்தை ஊடாகச் செல்கிற ஒழுங்கையாகும். பிரதான வீதியில் இருந்து இந்த ஒழுங்கை சங்கு வேலிப் பக்கமாக சுமார் 50 மீட்டர் தூரத்தில் ஒரு வளைவு வருவதால் அந்த வளைவில் நின்று புலிகள் தாக்கிவிட்டு ஓடலாம் என நினைத்த சர்மா, அந்த வளைவிலும் ஒரு காவல் அரணைப் போட்டிருந்தான். பாடசாலை நாட்களில் காலையும் மாலையும் பாடசாலைச் சீருடையோடு அவனும் வெள்ளையும் மாறி மாறி அந்த ஒழுங்கையால் போய்ச் சர்மாவின் நடமாட்டத்தையும் சர்மாவை எப்படிப் போடலாம் எனவும் நோட்டம்விட்டவர்களுக்கு ஒரு வழி பிறந்தது. அது சங்கு வேலிப் பக்கமாக வளைவில் இருந்த காவல் அரணில் காலை வேளைகளில் காவல் கடமையில் இருக்கும் முரளி என்கிற தமிழர் மூலம் வந்தது.

மாணவன் போலச் சீருடையில் இருந்த வெள்ளை முரளியோடு பழக்கத்தை ஏற்படுத்தியதோடு முரளிக்குச் சிகரெட் வாங்கிக் குடுக்கும் அளவுக்கு நட்பாகிறது.

இப்போது திட்டம் தயார். ஆனால், பாடசாலை நாளில் அந்த வீதி பெருமளவு மாணவிகளும் பொதுமக்களுமாக இருக்கும் என்பதால், சர்மாவை போட முடியாது. லீவு நாளான ஞாயிறும் உடுவில் தேவாலயத்துக்குப் போகும் மக்கள். எனவே, சனிக்கிழைமை தெரிவு செய்யப்பட்டது. திட்டத்தை அவனும் வெள்ளையும் பிரேமும் ஒரு தடவை சண்டிலிப்பாய் சங்கபுலவு மயானத்தின் கிணற்றடியில் இருந்து நிலத்தில் வரைபடம் கீறி சரி பார்த்துக் கொண்டார்கள். அதாவது மல்வத்தைப் பக்கமாக இருந்து பிரேம் ஓடுகிற சைக்கிளின் கரியரில் பின்புறமாகத் திரும்பியிருந்தபடி தனது பிஸ்டலை தயாராக வைத்தபடி அவன் அமர்ந்திருப்பான். சர்மா பிரதான வீதியில் ஓடிவந்து ஒழுங்கைய அண்மிக்கும்போது ராஜன் சைகை செய்வான். பிரேம் சைக்கிளை மிதிக்க, ஒழுங்கையில் இருந்து புறப்பட்ட சைக்கிள் வீதியை கடக்கும்போது குறைந்தது 10 மீட்டர்

தூரத்துக்குள் சர்மா ஓடி வந்துகொண்டிருப்பான். அதுவும் தனது வீட்டில் இருந்து மருதனார்மடம் வரை ஓடியவன் திரும்பி ஓடிவரும்போது களைத்து ஓடும் வேகம் குறைந் திருக்கும். அதே நேரம் அவனின் துப்பாக்கி இயங்கும். சில வேளை அவனது கைத்துப்பாக்கி இயக்க மறுத்தால், சுடுவதற்குத் தயாராக இன்னொரு கைத்தப்பாக்கி பிரேமின் இடுப்பில் செருகப்பட்டிருக்கும். இவன் அதனை உருவிச் சுடலாம்.

இப்போது ராஜன் சைகை செய்கிறான். பிரேம் சைக்கிளை மிதிக்கத் தொடங்க ஓடிவந்து பாய்ந்து பின் கரியரில் ஏறியவன், திரும்பி அமர்ந்தபடி தனது துப்பாக்கியைத் தயாராக்கிக்கொள்கிறான். சைக்கிள் ஒழுங்கையைவிட்டு வீதியைக் கடக்கிறது. சர்மா ஓடியபடி வந்துகொண்டிருக்கின்றார். அதே நேரம் வெள்ளை சங்குவேலி பக்கமாக இருந்து சைக்கிளில் முரளியின் காவல் அரனை நோக்கி வந்துகொண்டிருக்கிறான். தன்னுடைய நண்பன் சிகரெட் கொண்டு வருகிறான் என்று நினைத்து முரளி வெள்ளையைப் பார்த்து சிரிக்கிறார். சர்மாவை நோக்கி அவன் துப்பாக்கியை நீட்டி சரமாரியாக இயக்குகிறான். சர்மா விழுகிறார். சத்தம் கேட்டு முரளி பிரதான வீதி பக்கம் அவரது எஸ்.எல்.ஆர். துப்பாக்கியைத் திருப்புகிறார். அதற்கிடையில் முரளியின் காவல் அரனுக்கு வந்த வெள்ளையின் கைத்துப்பாக்கி முரளியை நோக்கி இயங்க முரளி சரிகிறார். வெள்ளை முரளியின் எஸ்.எல். ஆரை இழுத்து எடுத்தக்கொள்ள அனைவரும் அங்கிருந்து மறைந்துபோகிறார்கள். இப்படித்தான் அந்தத் திட்டம் நிறைவேறியது. பின்னர் சர்மாவுக்கு அவர் கொல்லப்பட்ட இடத்தில் இந்திய ராணுவம் நினைவுசின்னம் எழுப்பியது.

❍ ❍

# 25

**1988**-ம் ஆண்டு, சித்திரை மாதம். யாழ்குடாவின் சண்டிலிப்பாய் கிராமம். ஒருநாள் மாலை நேரம் திடீரெனத் துப்பாக்கி வெடிச்சத்தங்கள் கேட்கிறது. இந்தச் சத்தங்கள் அந்தக் கிராமத்துக்கு ஏன் ஈழத்தின் எந்தக் கிராமத்துக்கும் புதியதல்ல. சத்தம் கேட்ட சில நிமிடங்கள் மக்கள் பரபரப்பாவார்கள். ஏதாவது ஒரு மரண செய்தி வரும். அது போராளியாகவும் இருக்கலாம். பொதுமக்களாகவும் இருக்கலாம். சில நிமிடங்களில் மக்கள் வழைமை போலத் தங்கள் வேலைகளைப் பார்க்க போய்விடுவார்கள். இது தினமும் நடக்கும் நிகழ்ச்சிகள் என்பதால், எல்லோருக்கும் பழகிப்போய்விட்டது.

அன்றும் அப்படித்தான். சத்தம் கேட்டதும் மக்கள் ஒருவரையொருவர் பார்த்து “யாரோ மாட்டுப் பட்டிட்டாங்கள் போலை. வெடி விழுந்தது ஆமிக்கா பெடியளுக்கா எண்டு தெரியேல்லையெண்டு” என்றுவிட்டு தங்கள் வேலைகளில் கவனமானார்கள். ஆனால், அந்தக் கிராமத்தில் இந்தியப் படை காலத்தின் இக்கட்டான சூழலிலும் போராளிகளுக்கு ஆதரவளித்து அரவணைத்த சில வீடுகளில் ஒரு வீட்டில் அந்தத் தாய் மட்டும் சத்தம் கேட்டது முதல், நிம்மதி இல்லாமல் வீட்டு படைலையை எட்டிப் பார்ப்பதும் வீட்டுக்குள் போவதுமாக இருந்தார்.

அவர் மனதில் ஒரு பதைபதைப்பு இண்டைக்குப் பெடியள் வாற நாள். வெடிச்சத்தம் வேறை கேட்டது. யார் வந்தாங்களோ? அவங்களுக்கு ஏதும் நடந்துதோ? கடவுளே

அவங்களுக்கு ஒண்டும் நடந்திருக்கக் கூடாது என்று மனதில் நினைத்தபடி மகளைப் பார்த்து சொன்னார் “பிள்ளை ரதி ஒருக்கா ரோடு வரைக்கும் போய்ப் பார் பிள்ளை” என்று சொன்னவர், பின்னர், “வேண்டாம். பிறகு உன்னைத் தேடி நான் வர ஏலாது. நானே போய்ப் பாக்கிறன்” என்றவர் வீட்டைவிட்டு ஒழுங்கையால் வந்து பிரதான வீதியை எட்டிப் பார்த்தார். வீதியில் சன நடமாட்டம் இல்லை. ‘ஏதாவது செய்தி கேட்பம் எண்டா வீதியிலையும் யாரையும் காணவில்லையே’ என நினைத்தபடி விட்டை நோக்கி நடந்தார்.

சில நிமிடங்களுக்குப் பின்னர் வெள்ளை கைத்துப்பாக்கியை ஒரு கையில் இறுக்கி பிடித்தபடி அவனது ஷர்ட்டைக் களற்றி அதில் கைக்குண்டைச் சுற்றி இடுப்பில் கட்டிக்கொண்டு தாண்டி தாண்டி மூச்சிரைக்க ஓடிவந்தான். அவனது உடல் எங்கும் கீறல் காயங்கள். அதில் இருந்து ரத்தம் கசிந்துகொண்டிருந்தது. அவனைக் கண்டதும் அந்தத் தாயார் பதறியபடி, “தம்பி, என்னடா அப்பவும் சத்தம் கேட்கேக்கை நான் நினைச்சனான். நீங்களாதான் இருக்குமெண்டு. உனக்கு வெடிபட்டிட்டுதே” என்றபடி அவனை அணைத்துப் பிடித்தபடி கேட்கவும் வெள்ளைக்கு மூச்சிரைத்ததில் பேச்சு வரவில்லை. அப்படியே நிலத்தில் அமர்ந்தபடி கையால் தனக்கு ஒன்றுமில்லை என்று சைகை காட்டியவன் “த...தண்ணி....” என்று தட்டுத்தடுமாறியபடி கேட்டான்.

அதற்கிடையில் மகள் ரதி தண்ணீரைக் கொண்டோடி வந்து கொடுக்கவும் அதை வாங்கி மடக்கு மடக்கென்று குடித்தவன், மிகுதி தண்ணீரை தலையில் ஊற்றிவிட்டுக் கொஞ்சம் அமைதியடைந்தான். தன்னை ஆசுவாசப்பத்திக்கொண்டு நடந்ததைச் சொல்ல தொடங்கினான். அவனும் பிரேமும் அளவெட்டிக்குப் போய்த் தும்பனை சந்தித்துவிட்டு வந்துகொண்டிருந்தார்கள். தொட்டிலடியில் மெயின் ரோட்டை கடக்கம்போது ஆமிகாரன் திடீரென வந்துவிட்டார்கள். இவர்களை மறித்திருக்கிறார்கள். இவர்கள் சைக்கிளை போட்டுவிட்டு, பக்கத்து வேலியினால் பாய்ந்துவிட்டார்கள். நல்ல வேளையாக வெடி பிடிக்கவில்லை. பிரேம் வேறு பக்கத்தில் ஓடிட்டான். அவனுக்கும் ஒன்றும் நடந்திருக்காது என நினைத்தான். இவனது கஸ்ரகாலம். இவன் பாய்ந்த வேலி

முள்முருக்கை வேலி. உடம்பெல்லாம் கீறிவிட்டது. அந்த வேதனையிலும் சிரித்தபடி சொன்னான்.

அவனின் பெயர் வெள்ளை என்று எல்லோரும் அழைத்ததே அவனது நிறத்தால்தான். நல்ல வெள்ளை. உயரமான உறுதியான உடல். காலிலையும் என்னவோ குத்திப்போட்டுது என்றபடி காலை திருப்பிப் பார்த்தான். ரத்தம் கசிந்துகொண்டிருந்தது.

“பொறுங்கோ அண்ணை, நான் பாக்கிறன்” என்றபடி ரதி அவனது காலை பார்த்தாள். மரக்கட்டை ஏதோ குத்தியிருக்கு. “பொறுங்கோ தண்ணி கொண்டு வாறன். காலை கழுவிட்டுப் பார்ப்பம்” என்றபடி தண்ணீரால் காலை சுத்தம் செய்து பார்த்தாள். தடி ஒன்று ஆழமாகக் குத்தியிருந்தது. அதை மெதுவாக எடுத்துவிட்டு அந்தக் காயத்துக்குக் கைவசம் அவர்களிடம் இருந்த கை மருந்தாகக் கோப்பிதூளை வைத்து கட்டிவிட்டு, “சரி எல்லாம் கீறியிருக்கு மேலை கழுவிட்டு வாங்கோ. நான் தேத்தண்ணி போடுறன்” என்றவாறு ரதி அடுப்படி பக்கம் போய்விட, ஒரு சேட்டையும் சாரத்தையும் கொடுத்து அந்தத் தாயார் சொன்னார், “தம்பி, உன்ரை சாரமும் கிழிஞ்சிருக்கு. இந்தா இதை மாத்து. இந்த உடுப்புகளைப் போட இந்த வீட்டிலை இனியார் இருக்கினம்?” என்று அவள் தனது கணவரின் உடைகளைக் கொடுத்தார்.

அந்தத் தாயாரின் கணவனையும் ஏற்கெனவே இந்திய ராணுவம் வீதியில் வைத்துச் சுட்டுகொன்றுவிட்டது. குளித்துவிட்டு உடைகளை மாற்றி, கைத்துப்பாக்கியை இடுப்பில் செருகிக்கொண்டு கண்ணாடியின் முன் நின்று பார்த்த வெள்ளை சிரித்தபடி சொன்னான், “அம்மா சேட்டு சரியான பெரிசா இருக்கு ஏதோ காச்சல்காரர் மாதிரியிருக்கு எண்டாலும் பரவாயில்லை இதுக்கை பிஸ்டல் என்ன? ஏ.கே–யையே மறைச்சுக்கொண்டு போகலாம்” என. எல்லோரும் சிரிக்கவும் அந்தத் தாயாரும் சிரித்தபடி சொன்னார். அடுத்த முறை உனக்கு அளவான ஷர்ட்டு தைச்சு வைக்கிறன் என்றபடி மகளைப் பார்த்து சொன்னார் “பிள்ளை வெள்ளையின்ரை அளவை எடுத்துவை. நான் பிறகு துணி வாங்கித் தைக்கிறன்” என்றார்.

“உங்களுக்கு எதுக்கம்மா கரைச்சல். நான் வசதி கிடைச்சா அடுத்த முறை துணி வாங்கிகொண்டு வாறன்.

இல்லாட்டி யாரிட்டையாவது குடுத்துவிடுறன். தைச்சு வையுங்கோ'' என்றான். தேநீரைக் குடித்துவிட்டு "சரி, நான் போட்டுவாறன் சில நேரம் பிரேம் எங்கேயாவது ஓடி ஒழிச்சு இங்கே வந்தா சொல்லுங்கோ. நான் ஏழாலைக்குப் போறன். அங்கே வரச் சொல்லுங்கோ" என்றபடி காலில் கட்டை குத்திய வலியை தாங்கியபடி தாண்டித் தாண்டி நடக்கத் தொடங்கினான். அதைப் பார்த்த ரதி, அவனிடம் "அண்ணை... இப்பிடி தாண்டிகொண்டு என்ணெண்டு ஏழாலைக்குப் போகபோறீங்கள். வேணுமெண்டா என்ரை சைக்கிளைகொண்டு போங்கோ'' என்று கூறவும், "வேண்டாம் தங்கச்சி. இடையிலை எங்கேயாவது ஆமிமறிச்சால் நான் சைக்கிளை போட்டிட்டுதான் ஓடவேணும். பிறகு சைக்கிளை வைச்சு உங்களை அடையாளம் பிடிச்சாங்கள் எண்டால் பிறகு உங்களுக்குச் சைக்கிளும் இல்லை. உங்களையும் கொண்டு போடுவாங்கள். உங்களுக்குதான் கரைச்சல்'' என்றபடி அந்த ஒழுங்கையைக் கடந்து மறைந்தான்.

சில நாட்கள் கழித்து, பிரேமும் அவனும் கையில் ஒரு பையுடன் அந்த வீட்டுக்கு வந்தார்கள். அதில் இரண்டு துணிகள். அதைக் கொடுத்து அம்மா வெள்ளை இதை உங்களிட்டை குடுத்து ஷர்ட்டு தைச்சு வைக்கச் சொன்னவன். எங்களுக்கு ஒரு முக்கியமான சில செய்திகள் வன்னியிலை இருந்து வந்திருக்கு. அந்த அலுவலா நிக்கிறதாலை வெள்ளை இண்டைக்கு வரேல்லை. வார கிழமை வருவம் தைச்சு வையுங்கோ என்று என்றுவிட்டுப் போய்விட்டார்கள். சில நாட்கள் கழித்து வெள்ளையும் பிரேமும் அவனுமாக அங்கு வந்தனர். அவர்களிடம் ஒரு துணிப்பையில் நிறையத் துண்டு பிரசுரங்கள் இருந்தன. வந்தவர்கள் அன்று அவசரமாகவே காணப்பட்டார்கள். "தம்பியவை சாப்பிட்டயளோ?'' வழைமைபோல அந்தத் தாயின் விசாரிப்பு.

"அம்மா சாப்பிட்டம். தேத்தண்ணி தாங்கோ. அதோடை கன வேலை இருக்கு. வன்னியிலை தலைவரிட்டை இருந்து யாழ்ப்பாண மக்களுக்குச் சில செய்தியள் பிரசுரமா அடிச்சு அனுப்பியிருக்கினம். இந்த இக்கட்டான நிலைமையிலை எங்கடை திட்டங்கள் மற்றும் இந்தச் சிக்கலான சூழ்நிலையிலை மக்கள் எப்பிடியான செயல்பாட்டை முன்னெடுக்கவேணும் எண்டு இதிலை இருக்கு. படிச்சு பாருங்கோ" என்று சில பிரசுரங்களை அந்தத் தாயிடம்

நீட்டினான்.

"நீங்கள் படிச்சிட்டு உங்களிட்டை வாறவையிட்டையும் இதுகளை குடுங்கோ" என்றான் வெள்ளை.

"சரி தம்பி" என்று அதைப் பெற்றுகொண்டவர், "இந்தாப்பு இரண்டு பேருக்கும் சேட்டு தைச்சாச்சு. போட்டு பாருங்கோ" என்று அவர் கொடுத்த ஷர்ட்டினை வாங்கிப் போட்டுப் பார்த்துகொண்ட வெள்ளையும் பிரேமும், "சரியம்மா நல்ல அளவாயிருக்கு. நாங்கள் இந்தப் பிரசுரங்களை எல்லா ஊருக்கும் கொண்டுபோய்க் குடுக்க வேணும். இப்ப நாங்கள் உடுவிலுக்குப் போக வேணும். அதாலை அடுத்த தரம் வரேக்கை ஆறுதலாய்க் கதைப்பம்" என்றபடி வெள்ளையும் மற்றவர்களும் புறப்படத் தயாரானார்கள்.

அதில் பிரேமும் மூன்றாவதாக வந்த போராளியும் மானிப்பாய்ப்பகுதியைச்சேர்ந்தவர்கள்.எனவே,அவர்களுக்கு அந்தப் பகுதி மக்கள் நல்ல பரிச்சயமானவர்கள். எனவே, அவர்களில் யாராவது ஒருவர் முன்னே சென்றால்தான் ராணுவ நடமாட்டத்தைப் பொதுமக்கள் அவர்களுக்குத் தெரிவிப்பார்கள். எனவே, மூன்றாவது போராளி முன்னே செல்ல நடுவில் வெள்ளை தனது சைக்கிளில் துண்டு பிரசுரங்களுடனும், பின்னே பிரேமும் போவது எனத் தீர்மானித்து மூவரும் தங்கள் கைத்துப்பாக்கிகளை ஒருமுறை இயங்கு நிலையில் இருக்கிறதா எனச் சரி பார்த்துவிட்டு அங்கிருந்து விடை பெற்றுகொண்டு சைக்கிள்களை மிதித்தனர்.

பிரதான வீதிகள் எங்கும் இந்திய ராணுவம் பரவியிருந்ததால் உடுவில் பகுதிக்கு உட்பாதை ஒழுங்கைகள் ஊடாகச் செல்வதுதான் பாதுகாப்பு. எனவே, அவர்கள் கல்வளை ஊடாக அந்திரான் சங்குவேலி வயல்பாதைகளின் ஊடாகச் செல்வது எனத் தீர்மானித்துப் போகிற பாதைகளில் எதிர்படுகின்ற மக்களிடம் ராணுவ நடமாட்டம் இருக்கின்றதா என விசாரித்தபடியே போய்கொண்டிருந்தனர். சங்குவேலி வயற்பகுதிக்கு வந்ததும் டச்சு வீதியில் சில விநாடிகள் சைக்கிள்களை நிறுத்தி வயல்வெளியை நோட்டம்விட்டனர். ஏனெனில், அந்த வீதி சண்டிலிப்பாய் உடுவில் மற்றும் கந்தரோடை என்று ஒரு முக்கோண வடிவில் அமைந்திருந்த கிராமங்களை

இணைக்கின்ற வீதி.

இந்த மூன்று இடங்களிலும் இந்திய ராணுவத்தின் பெரிய முகாம்கள் அமைந்திருப்பதால் திடீரென எந்த நேரமும் ராணுவம் வரலாம். ராணுவத்தின் நடமாட்டம் இருப்பதற்கான அறிகுறி எதுவுமில்லை. வயல்களில் பலர் வேலை செய்துகொண்டும் தண்ணீர் பாச்சிகொண்டும் நின்றனர். அப்போ எதிரே சைக்கிளில் வந்துகொண்டிருந்த ஒருவரிடம் கேட்டார்கள்

"அண்ணை அங்காலை ஆமி நிக்கிற சிலமன் இருக்கோ?" வந்தவர் சொன்னார், "நான் சண்டிலிப்பாய் பக்கமா இருந்து வாறன் தம்பியவை. அந்தப் பக்கம் இல்லை" என்றபடி போய்விட மூவரும் மிக அவதானமாகச் சில மீட்டர்கள் இடைவெளிவிட்டு உடுவில் பக்கமாகச் சைக்கிளை மிதித்தனர். சங்குவேலி வயல்வெளி முடிந்து ஊர்மனைகளை அண்மித்துகொண்டிருந்த வேளை எதிரே மண்வெட்டியுடன் வந்துகொண்டிருந்த வயதான ஒருவர் இந்தப் போராளிகளை அடையாளம் கண்டு கண்களால் சைகை செய்கிறார்.

முன்னே சென்றுகொண்டிருந்த அவனுக்கு ராணுவம் நிற்கிறது என்று புரிந்துவிட்டது. சைக்கிள் வேகத்தைக் குறைத்தபடி கையால் பின்னுக்கு வந்துகொண்டிருந்த வெள்ளைக்குச் சைகை காட்டியபடி ராணுவம் 'எங்க நிற்கிறது?' என்று கண்களால் துளாவ "ஸ்ரொப்" என்றொரு சத்தம் கேட்டது. அவனுக்கு, சில மீட்டர் தூரத்தில் வேலி ஒன்றினுள் பூவரச மரங்களினுள் உருமறைப்புச் செய்துகொண்டிருந்த ஒரு ராணுவத்தின் துப்பாக்கி அவனை நோக்கி குறிபார்த்தபடி இருந்ததைக் கவனித்துவிட்டான். "டேய், ஆமி பக்கத்திலையடா பாயுங்கோடா" எனக் கத்தியபடி அவன் தோட்டங்களினுள் பாயவும் பிரேம் பின்னால் தூரத்தில் வந்தபடியால் அவன் சைக்கிளை திருப்பிக்கொண்டு சண்டிலிப்பாய் பக்கமாக ஓடிவிட, வெள்ளை சைக்கிளை போட்டுவிட்டு அதில் இருந்த பிரசுரங்களையும் எடுத்துகொண்டு ஓட முயற்சித்தான்.

ஆனால், பிரசுரங்கள் இருந்த துணிப்பை சைக்கிளில் மாட்டிவிட்டது. அவன் அதை இழுத்துக்கொண்டிருக்க ராணுவத்தின் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். அந்தக் குண்டுகள் வெள்ளையின் தொடை பகுதியைத் துளைத்து

செல்ல, அவன் காலை தாண்டியபடி தோட்டங்களின் ஊடாக ஓடத் தொடங்கினான். வெள்ளைக்குச் சூடு பட்டுவிட்டதைக் கவனித்தவன், வெள்ளையை எப்படியாவது காப்பாற்றிவிடலாம் என நினைத்து திரும்ப வெள்ளையை நோக்கி வர தொடங்கவும் 50–க்கும் மேற்பட்ட ராணுவத்தினர் தேடியபடி தோட்டங்களினுள் இறங்கிகொண்டிருந்தனர். இனி அந்தப் போராளியாலும் ஓட முடியாது. அவர்கள் கண்டுவிடுவார்கள். எனவே, அங்கு தோட்டத்துக்குப் பசளைக்காகத் தாழ்ப்பதற்குக் குவித்து வைக்கப்பட்டிருந்த பூவரசம் குளைகளின் உள்ளே புகுந்து மறைந்துகொண்டான்.

இந்திய ராணுவத்தினர் கிந்தியில் கதைப்பது அவனுக்குத் தெளிவாகக் கேட்டது. அருகில் வந்துவிட்டார்கள். இனி தப்ப முடியாது என நினைத்தபடி தயாராக இருந்த கைத்துப்பாக்கியை தனது நெற்றியின் அருகே வைத்து பிடித்தபடி அசையாமல் படுத்திருந்தான். அப்போது “இந்தா இருக்கிறான். ஓடிவா... ஓடிவா” என்று ஒருவன் இந்தியில் கத்துவது தெளிவாகக் கேட்டது. அதைத் தொடர்ந்து ஒரு துப்பாக்கி வெடிக்கும் சத்தம் அது வெள்ளையின் கைத்துப்பாக்கி வெடித்த சத்தம்தான். அவன் ஒரு கணம் கண்களை மூடிகொண்டான். என்ன நடந்திருக்கும் என்று அவனால் ஊகிக்க முடிந்தது. ஆம், ராணுவத்தினர் வெள்ளையைக் கண்டுகொண்டதும் வெள்ளை தனது துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டு தன்னுயிரைப் போக்கிக்கொண்டான்.

❍ ❍

# 26

**வெ**ள்ளை இறந்துவிட்டதால் இப்போது **அவனும்** பிரேமும் மட்டுமே ஊரில் மறைந்து திரிந்தார்கள். ரவி, அவர்களுக்கு ஊரில் நடக்கும் விஷயங்களைச் சொல்லிவிட்டுப்போவது மட்டுமல்ல, அவர்களின் செலவுக்குப் பணமும் சில நேரங்களில் உணவும் கொண்டுவந்து கொடுத்துவிட்டுப்போவான். ரவி அவனோடு ஒரே வகுப்பில் படித்தவன். அவன் மட்டுமல்ல, வகுப்பில் பலரும் ரவியை ‘ரோஸ்’ என்றுதான் அழைப்பார்கள். அது அவனது பட்டப்பெயர். காரணம், பார்ப்பதற்கு நல்ல வெள்ளையாக இருந்தாலும், வகுப்பில் வாத்தியாரிடம் அடிவாங்கி அழும்போதோ அல்லது கோபம் வந்தாலோ அவனது முகம் சிவந்து ரோஸ் நிறமாக மாறிவிடும். மெதுவாகத்தான் கதைப்பான். அவனது பழக்கவழக்கங்கள் கொஞ்சம் பெண்மைத்தன்மை கலந்ததாக இருக்கும். கதைக்கும்போதும் அடிக்கடி நாக்கால் கீழ் உதட்டை ஈரமாக்கிக்கொள்ளும் பழக்கமும் உண்டு. அவனின் சொந்தப்பெயர் ரவீந்திரன்.

சங்கானை ஏழாம் கட்டையடியைச் சேர்ந்தவன். அவனது தந்தை விபத்தில் இறந்துபோக, தாயார் இன்னொருவருடன் காதல் ஏற்பட்டு அவர் வழியில் போய்விட, ரவீந்திரனையும் அவனது தம்பியையும் அவனது தந்தையின் தாயார் அப்பம்மாவே கவனித்ததோடு படிப்பித்துக்கொண்டிருந்தார். அவருக்கு நிரந்தர வருமானம் எதுவும் கிடையாது கூலி வேலைகள்

செய்துதான் குடும்பத்தை ஓட்டிக்கொண்டிருந்தார். அவனும் ரவியும் ஒரே வகுப்புதான். அவர்கள் ஒன்பதாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தபோது ரவியின் அப்பம்மா காச நோயால் பாதிக்கப்பட, ரவி படிப்பை நிறுத்திவிட்டு வேலைக்குப் போகவேண்டிய கட்டாயம். சங்கானை சந்தியில் காரை நகர் வீதியில் இருந்த புடவைக் கடையில் வேலைக்குச் சேர்ந்திருந்தான். அவனது குடும்ப நிலை கருதி வகுப்புக்களுக்கு வராமலேயே அவன் சோதனை எடுக்கப் பாடசாலை நிர்வாகம் வசதி செய்துகொடுத்திருந்தது. பகலில் வேலை. இரவில் ஏழாம்கட்டை பற்குணம் டீச்சர் இலவசமாகவே பாடம் சொல்லிக் கொடுத்ததால் 10–ம் வகுப்பு வரை முடித்தவனுக்கு அதற்குமேல் தொடர முடியவில்லை. வேலையைத் தொடர்ந்துகொண்டிருந்தான். அவனும் ரவியின் கடைக்கோ அல்லது வீட்டுக்கோ சென்று இடைக்கிடை சந்தித்துக் கதைப்பது வழமை. காலப்போக்கில் அதுவும் குறைந்துபோயிருந்தது. இப்பொது அவனும் பிரேமும் ஊருக்கு அருகில் வயல்வெளிப் பக்கம் உள்ள கோயில் ஒன்றில் பதுங்கியிருந்ததால், ரவி பயந்து பயந்து அவர்களிடம் வந்து போவான்.

அன்றைக்கும் அவர்களைச் சந்திக்க வந்தவன், "டேய், எங்கடை யாழ்தேவி கந்தையாவை இந்தியனாமி சுட்டிட்டாங்கள்" என்று சொல்லிவிட்டு, அவர்களுக்கான உணவைக் கொடுத்துவிட்டுப் போயிருந்தான்.

யாழ்தேவி கந்தையா என்றொருவர் மானிப்பாய் பக்கத்தில் பிரபலமாக இருந்தார். அவரைத் தெரியாதவர்கள் கிடையாது. அவர் யாழ்தேவி என்ற புகைவண்டி ஓட்டுநர் இல்லை; அவர் சாதாரண மாட்டுவண்டி ஓட்டுநர்தான். மானிப்பாய் இந்துவின் முன்னால் நிற்கும் பெரிய மலை வேப்ப மரத்தடிதான் அவரது மாட்டுவண்டி தரிப்பிடம். நாங்கள் பாடசாலை போகிற நேரமே 8 மணிக்கெல்லாம் அங்கு வந்துவிடுவார். வந்து மாடுகளை அவிழ்த்து விட்டுவிட்டு வண்டியின் கீழே கட்டப்பட்டிருக்கும் சாக்கில் இருந்து வைக்கோலை எடுத்து மாடுகளுக்குப் போட்டுவிட்டு, யாராவது சாமான்கள் ஏத்த சவாரிக்கு வருவார்களா எனக் காத்திருப்பதுதான் அவரது வேலை.

அவருக்கு அவரது வண்டிலை, 'வண்டில்' என்று யாரும் சொல்லக் கூடாது; 'யாழ்தேவி' என்றுதான்

சொல்லவேண்டும். அப்போ யாராவது தெரியாதவர்கள் அவரிடம், ‘அய்யா வாடகைக்கு வண்டில் வருமா?’ என்று கேட்டுவிட்டால் போதும், கந்தையாக்குக் கோபம் பொத்துக்கொண்டு வரும். வண்டில் என்று கேட்கக் கூடாது, ‘யாழ்தேவி வருமா?’ என்றுதான் கேட்க வேண்டும். அப்படிக் கேட்டால் அவர் சிரித்தபடியே சந்தோஷமாக, ‘ம்... ம்... வாறன்’ எண்டபடி போவார். காரணம், கந்தையாவுக்கு யாழ்தேவி புகையிரதத்தைவிட தனது வண்டில் மாடுகள் வேகமாக ஓடும் என்றோர் அசைக்க முடியாத நம்பிக்கை.

தனது வண்டிலும் யாழ்தேவி புகையிரதமும் அநுராதபுரத்தில் இருந்து யாழ்ப்பாணம் வரை போட்டிக்கு ஓடி, தனது வண்டில்தான் முதலாவதாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது என்று அடிக்கடி மற்றவர்களுக்கு வண்டிலும் விடுவார். அதைவிடக் காசு கிடைக்கிறது என்பதற்காகத் தனது மாடுகளைப் போட்டு வதைக்கவும் மாட்டார். ஒரு நாளைக்கு ஓரிரு சவாரி கிடைத்தால்போதும். அதற்குப் பிறகு யார் வந்து கேட்டாலும் போக மாட்டார். மிகுதி நேரத்தில் அதில் வருபவர்கள் தெரிந்தவர்களிடம் அன்றைய காலகட்டத்தில் அதிகமாகப் பேசப்பட்ட பாலஸ்தீனப் போராட்டத்தில் இருந்து வியட்நாம், கியூபா என்றும் அமெரிக்கா பொருளாதாரத்தில் இருந்து ரஷ்யா பொதுவுடைமை, இந்தியா ஈழத் தமிழரைக் காப்பாற்ற வருமா? என்ற உலக அரசியல் அனைத்தையும் அலசி ஆராய்வார். ஆனால், கந்தையாவுக்கு இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி ஈழத்துக்கு இந்திய ராணுவத்தை அனுப்பி ஈழத்தைப் பிரித்துத் தரும் என்று அசையாத நம்பிக்கைகொண்டிருந்தார். அவரது அரசியல் ஆய்வில் நாங்கள் சிலரும் பொழுபோக்காகப் பாடசாலை இடைவேளைகளின்போது பங்குபெறுவது உண்டு. அப்போ அங்கு ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்களும் வருவார்கள். அவர்களை கந்தையாவுக்குத் தெரியும். அவர்களிடம் கந்தையா சொல்வார், “தம்பியவை நீங்களடா சின்னப் பெடியள். உங்களால இலங்கை அரசோடை ஒண்டும் செய்ய ஏலாது. பாருங்கோ அம்மா இந்திரா, ஆமியை அனுப்பி எங்களைக் காப்பாத்துவா” என்று அடித்துச் சொல்வதோடு, “பேசாமல் நீங்கள் படிக்கிற வேலையைப் பாருங்கோ” என்றுவிட்டு “எங்களுக்கும் பெடியள் நீங்களும் இவங்களோட சேர்ந்து திரியாமல்

*படிக்கிற அலுவலைப் பாருங்கோ" எண்டு புத்திமதியும் சொல்வார்.*

*யார் போனாலும் அங்குச் சைக்கிள் திருத்தும் கடை வைத்திருந்தவர், பாவம் சைக்கிள் டியூப்பை தண்ணி வாளிக்குள் அழுத்தி, எங்காவது ஓட்டை இருக்கிறதா எனத் தேடியபடி கந்தையாவின் கதையைக் கேட்டேதான் ஆக வேண்டும். மத்தியானம் ஆனதும் மாடுகளுக்குச் சாப்பாடு போட்டுத் தண்ணி வைத்துவிட்டு அந்தச் சைக்கிள் கடைக்காரரிடம் யாருடையதாவது சைக்கிள் நின்றால் அல்லது எங்கள் யாரிடமாவது ஒரு சைக்கிளை வாங்கிகொண்டு மானிப்பாய் எழுமுள்ளியில் உள்ள கள்ளுக்கடையில் போய் ஒரு போத்தல் அடித்துவிட்டு அவரது வீட்டுக்குப் போய்ச் சாப்பிட்டுவிட்டு வந்து வண்டிலில் படுத்து ஒரு குட்டித் தூக்கம். பின்நேரமளவில் ஏதாவது சவாரி கிடைத்தால் சரி, இல்லாவிடில் மாலை 6 மணியளவில் மாடுகளை வண்டிலில் பூட்டிவிட்டு "ஏய்..." என்பார். மாடுகளுக்குத் தெரியும் எங்குப் போவது என்று. அவை எழுமுள்ளி தவறணையை நோக்கி போய்க்கொண்டிருக்கும். இதுதான் யாழ்தேவி கந்தையாவின் அன்றாட நிகழ்ச்சிகள்.*

*இப்படி இருந்த காலகட்டத்தில் இந்திரா காந்தி கொல்லப்பட்ட செய்தி கேள்விப்பட்டதும் அவரில் நம்பிக்கை வைத்திருந்த மற்றைய, ஈழத் தமிழர்களைப் போலத்தான் கந்தையாவும் இடிந்துபோனார். இந்திரா காந்திக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக மக்கள் மானிப்பாய் இந்து கல்லூரி சந்தியில் நினைவாலயம் அமைத்து அவரது படமும் வைத்து வாழைத் தோரணம் கட்டிக்கொண்டிருந்தோம். அப்போ கந்தையாவும் அவர்களுக்கு உதவியாக தெரிந்த வீடுகளில் போய் வாழைமரம் தென்னோலை என்று வாங்கித் தனது வண்டிலில் கொண்டுவந்து கட்டிவிட்டு தனது வண்டிலிலும் நான்கு பக்கமும், நான்கு குட்டிவாழையும் கட்டி தோரணமும் கட்டிவிட்டு அங்கு இந்திரா காந்தியின் படங்களை வைத்துக்கொண்டிருந்த ஒருவனிடம் போய் வந்து, "தம்பி எனக்கு இந்திரா அம்மான்ரை இரண்டு படம் தாடா. என்ரை யாழ்தேவிலை இரண்டு பக்கமும் ஒட்ட வேண்டும்" என்றார்.*

*அவனும் படத்தைக் கொடுக்க அதை வண்டிலில் ஒட்டியவர்*

அதனைக் கொஞ்ச நேரம் பார்த்துவிட்டு, “தம்பியவை நான் நினைக்கிறன். உங்கள் சிங்களவரும் சேர்ந்துதான் ஏதோ சதி பண்ணி அம்மாவை கொன்டிட்டாங்கள். இனி ஆர் வந்து எங்களைக் காப்பாத்தப்போறாங்களோ?” எண்டவர், “ஏன்டா தம்பியவை வேறை ஏதும் நாடுகள் எங்களுக்கு உதவி செய்யாதோ?” என்று உலக அரசியலையே அலசும் கந்தையா அப்பாவியாக அங்கு நின்ற இளைஞர்களிடம் கேட்டார்.

மத்தியானம் ஆனதும் அங்கு நின்ற ஒருவனிடம் தம்பி உன்ரை சைக்கிளை ஒருக்கா தாடா என்று வாங்கிப் போனவர் ஒரு மணித்தியாலதில் அதை உருட்டிக்கொண்டு சற்று தள்ளாடிய நடையில் வந்துகொண்டிருந்தார். பார்த்தபோதே விளங்கியது அன்று கொஞ்சம் கூடுதலா அடிச்சிட்டார் எண்டு. வந்தவர் சைக்கிளை விட்டுவிட்டு அங்கிருந்த இந்திராவின் படத்தின் முன்னால் போய் நிண்டு “எங்களையெல்லாம் தவிக்க விட்டிட்டு போயிட்டியே அம்மா!” என்று ஒரு குழந்தையைப்போல விக்கி விக்கி அழ தொடங்கிவிட்டார்.

அவரை அன்று சமாதானம் செய்து அனுப்பிவைக்கவே அங்கிருந்தவர்களுக்குப் பெரும்பாடாகப் போய்விட்டது. அந்தக் காலகட்டங்களில் அவனும் பாடசாலையை விட்டு வெளியேறிவிட்டதால் எங்காவது, எப்போதாவது வீதிகளில் சில சமயம் கந்தையாவை கண்டால் “கந்தையாண்ணை எப்பிடி இருக்கிறியள்?” என்பான்.

அவரும், “ஓமடா தம்பி, ஓம் என்ன யுனிவர்சிட்டி முடிச்சிட்டியோ?” என்பார்.

காரணம், கந்தையாவுக்கு மானிப்பாய் இந்துவில் இருந்து யார் வெளியேறினாலும் அவர் நேராக அடுத்தது யாழ் பல்கலைக்கழகம்தான் போகிறார்கள் என்கிற நினைப்பு. காலங்களும் நகர இந்திய இலங்கை ஒப்பந்தக் காலகட்டம் வந்தது. இந்திய அரசின் அதிகாரிகளும் ராணுவமும் யாழ் வந்தபோது அவர்களை மக்கள் வீதி வீதியாக மாலை போட்டு வரவேற்றனர். அப்போது மானிப்பாய் சந்தியில் நடந்த வரவேற்பில் கந்தையாவும் சனங்களுக்கு மத்தியில் முண்டியடித்துக்கொண்டு போய் அவர்களுக்கு ஒரு மாலையைப் போட்டுவிட்டு “இந்தியா வாழ்க. இந்திரா மகன்

வாழ்க” என்று கையை உயர்த்திக் கத்திவிட்டுத் தூரத்தில் அந்தோணியார் கோலடியில் நின்று இவற்றைப் புதினம் பார்த்துக்கொண்டு நின்ற அவனிடம் வந்து, “பாத்தியளா இந்தக் கந்தையா சொன்னதுதான் நடந்தது. இந்தியனாமி வந்திட்டுது. இனி சிங்களவன் வேணுமெண்டால் புடுங்கிப் பார்க்கட்டும். அசைக்க ஏலாது எங்களை” எண்டு சொல்லிவிட்டு எங்களையும் ஏளனமாகப் பார்த்துவிட்டுப் போனார்.

அந்நாள் நேற்றிரவு கள்ளடிச்சிட்டு போயிருக்குதுபோல. நவாலி ரோட்டில் படுத்திருந்த இந்தியனாமி போட்டுத்தள்ளியிருக்கிறார்கள். ஒரு கணம் கந்தையா இந்திராவின் படத்துக்கு முன்பு எங்களையெல்லாம் விட்டிட்டு போயிட்டியே அம்மா என்று புலம்பியதும் இந்திய அதிகாரிகளுக்கு மாலை போட்டுவிட்டு ‘இந்தியா வாழ்க’ எனக் கத்தியதும் நிழலாக வந்து போனது. சில கணம் கண்களை மூடி பெருமூச்சு ஒன்றை விட்டுக்கொண்டான்.

❍ ❍

# 27

அடுத்த நாள் கொஞ்சம் பரபரப்போடு வந்த ரவி, "டேய், நீங்கள் இதுக்குள்ள ஓடித்திரியிறீங்கள். அவங்கள் இண்டைக்கு எல்லா பக்கமும் நிக்கிறாங்கள். கவனமடா" என்றபடி சாப்பாட்டு பார்சலை எடுத்து நீட்டியவனிடம்.

"எங்களை விடு. நீ இப்பவும் புடவைக் கடையிலை துணி கிழிக்கிற வேலைதானோ?"

"ஓமடா... என்ன செய்ய அப்பம்மாக்கும் இப்ப துப்பரவா ஏலாது. உந்த புடவைக் கடை சம்பளத்திலை ஒண்டும் செய்ய ஏலாது. அதுதான் சவுதிக்குப் போறதெண்டு முடிவெடுத்திருக்கிறன். கொஞ்ச காசும் சேத்து வைச்சிருக்கிறன். முதலாளியும் கொஞ்சம் உதவி செய்யிறதாகச் சொல்லியிருக்கிறார். போய்ச் சேந்திட்டனெண்டால் தம்பியையும் வடிவா படிப்பிச்சிடுவன். அப்பம்மாவையும் கடைசிக் காலத்திலை நல்லபடியா பாக்கவேணும். அதுதான் என்ரை ஆசை."

"சரியடா சவுதி போனதும் எங்களை மறந்திடாதை. கடிதத்திலை எங்களுக்கும் ஒரு வசனம் எழுதிவிடு."

"உங்களை எப்பிடி மறப்பனடா? அதுசரி, நீங்கள் எவ்வளவு காலத்துக்கு இப்பிடி திரியப்போறியள்?"

"ஆருக்கு தெரியும். சரி நாளைக்கு வாறன்" என்றபடி விடைபெற்றான்.

அடுத்தநாள் ரவி வருகிற நேரத்துக்குக் காணவில்லை.

ஏதும் அலுவலாக இருக்கும் கொஞ்சம் பொறுத்துப் பார்க்கலாம் என்றிருந்தான். நேரம் போய்கொண்டிருந்தது. அவனுக்குக் கொஞ்சம் பதை பதைப்பாக இருந்தது. சில நேரம் 'ஆமியிட்டை மாட்டியிருப்பானோ. சே! அப்படி மாட்டியிருந்தால் ஓர் அடி போட்டதுமே எங்கடை இடத்தைக் காட்டிக்குடுத்திருப்பான். ஆமி சுற்றி வளைக்குமே?' என்றும் யோசித்தான். எதுக்கும் கொஞ்சம் பாதுகாப்பா கோயிலடியைவிட்டு பக்கத்து தென்னங் காணிக்குள் போயிருப்பம். இரவாகட்டும். ரோட்டுக்கு இறங்கிப் போய்ப் பார்க்கலாம் என்று அவனும் பிரேமும் பொறுத்திருந்தார்கள். ஆனாலும் இருப்புக்கொள்ளவில்லை. கொஞ்ச நேரம் கழித்து வீதியில் இறங்கி அங்கு எதிர்ப்பட்ட ஒருவரிடம் விசாரித்தார்கள்.

"ரவி மருந்து குடிச்சுச் செத்திட்டானாம். பாவம், பேத்தியார்காரி விழுந்து பிரண்டு அழுதுகொண்டிருக்காம்" என்றான்.

"மருந்து குடிச்சவனா... எதுக்காம்?" அவனுக்கு ஆச்சர்யம்.

"சங்கானை மீன் கடை சந்தி சீக்கியனாம்!"

அந்தச் சென்றியிலை இருக்கிற சீக்கியனை பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறான். பின்னேரங்களிலை கசிப்படிச்சிட்டு ரோட்டிலை போற வாற எல்லாருக்கும் அடிக்கிறவனாம். பெட்டையளோடையும் சேட்டையாம். அதாலை பெட்டையள் அந்தப் பக்கத்தாலேயே போறேல்லையாம்.

"ரவிக்கு என்னதான் நடந்ததாம்?"

"அது வடிவாய்த் தெரியாது. ஆனால், பக்கத்து சைக்கிள் கடையிலை வேலை செய்யிற பெடியன்தானாம் ரவியை வீட்டிலை கொண்டுபோய் விட்டவன். அவனைக் கேட்டால் முழுக்கத் தெரியும்" தகவல் சொன்னவன் போய்விட்டான்.

அவனும் பிரேமும் சைக்கிள் கடை பெடியனின் வீட்டை நோக்கி சைக்கிளை மிதித்தார்கள்.

சைக்கிள் கடையில் வேலை செய்யும் பெடியன் மிரட்சியோடு நடந்ததை விவரிக்கத் தொடங்கினான்.

*"அண்ணை அண்டைக்கும் சீக்கியன் நல்லா கசிப்படிச்சிட்டு இருந்தவன். ரவியண்ணை மத்தியனம் தன்னை சைக்கிள் டியூப் ஒட்டத்தந்திட்டு வேலை முடிஞ்சு சைக்கிளை எடுக்க வந்தவர். அந்த நேரம் அந்தச் சீக்கியன் ரவியண்ணையைச் செக் பண்ணவேணும் எண்டு சென்றி பொயின்ருக்குள்ளை கூப்பிட்டான். ரவியண்ணைச் சென்றி பொயின்றுக்கை போன உடனை சாக்காலை வாசலை மூடிப்போட்டான். பிறகு, கொஞ்ச நேரத்தாலை மேலை சேட்டு இல்லாமல் துவக்கோடை வந்து கடையிலை இருந்த கிறீஸ்பேணியை (டப்பா) தூக்கிக்கொண்டு போனான். முதலாளியும் கடையைச் சாத்திப்போட்டு என்னைப் போகச்சொல்லிட்டார். ரவியண்ணையின்ரை சைக்கிள் நிண்டதாலை நான் அதை எடுத்துக்கொண்டு கொஞ்ச தூரத்திலை வந்து காவல் நிண்டனான்.*

*"என்னது கிறீஸ்பேணியா? இவங்கள் மனிசரே இல்லை. பிறகு என்ன நடந்தது?"*

*ரவியண்ணை "நோ சேர்.. ப்ளீஸ் சேர்" எண்டு கெஞ்சின சத்தம் கேட்டது. கொஞ்ச நேரத்தாலை அழுதபடி உடுப்பை போட்டபடி நடக்க ஏலாமல் நடந்து வந்தவர். தன்னாலை சைக்கிள் ஓட ஏலாது தன்னை வீட்டில் கொண்டுபோய் விடச்சொன்னார். கொண்டுபோய் விட்டனான். அடுத்த நாள்தான் ரவியண்ணை மருந்து குடிச்சிட்டா ரெண்டு கேள்விப்பட்டனான்."*

*"அதுசரி, சீக்கியனுக்கு ஆர் கசிப்பு வாங்கிக் குடுக்கிறது?"*

*கொஞ்சம் தயங்கியபடி "நான்தானண்ணை" என்றான்.*

*"காசு தாறவனோ?"*

*"ரோட்டிலை போறவையிட்டை பறிச்சுத் தருவான்."*

*"யாரிட்டை போய் வாங்கிறனி?"*

*பெயரை சொன்னான். "சரி, நீ போ" என்றவன் பிரேமை திரும்பிப் பார்த்தான். பிரேம் தலையை அசைத்தான்.*

*அன்று மாலை பிரேமும் அவனும் சைக்கிளில் நாகநாதன் டிஸ்பென்சரிக்கு முன்னால் வந்திறங்கி நோட்டம் விட்டனர். அவர்கள் நின்ற இடத்தில் இருந்து சுமார் 600 மீட்டர் தூரத்தில்தான் அந்தக் காப்பரண் இருந்தது. சிறிய*

குடில்போல் அமைக்கப்பட்டு மண்ணால் மெழுகியிருந்தது. சீக்கியன் பிரதான வீதியை கவனித்தபடி இருந்தான். டிஸ்பென்சரிக்குள் நின்றிருந்த மருத்துவத் தாதி தேவியக்கா வெளியில் எட்டிப்பார்த்தவர்.

“டேய், பெடியள் என்ன இந்தப் பக்கம்?” என்றபடி வெளியே வந்தார்.

“காய்ச்சல் மருந்து எடுக்கவேணும். அதுக்குத்தான் வந்தனாங்கள்.”

“உங்களைப் பாத்தால் காய்ச்சல்காரர் மாதிரி தெரியேல்லை. இரண்டு பேரிலை யாருக்குக் காய்ச்சல்?”

“காய்ச்சல் எங்களுக்கு இல்லை, உங்களுக்குத்தான். இன்னும் கொஞ்ச நேரத்திலை வரப்போகுது” சிரிக்கிறார்கள்.

“குறுக்காலை போவாரே. என்னடா செய்யப் போறியள். என்னத்தையெண்டாலும் செய்யுங்கோ டிஸ்பென்சரிக்குள்ளை மட்டும் கால் வைக்கக் கூடாது சொல்லிப்போட்டன்” செல்லமாகத் திட்டியபடி உள்ளோ போகிறார்.

“தேவதையிளம் தேவீ... ஊரை சுற்றும் ஆவி!

காதலான கண்ணீர் காணவில்லையா... ஓஓஓ நீ இல்லாமல் நானா..” – பாடுகிறான்.

“காய்ச்சல் துன்பம் எண்டால் என்னட்டைதானே வருவியள். வாங்கோடா. அப்ப நஞ்சு ஊசிதான் அடிப்பன்” என்று திரும்பிப் பார்த்து சொல்லிவிட்டு உள்ளே போனார்.

சிறிது நேரம் காத்திருந்தார்கள். முழங்காலில் ஒரு பிளாஸ்டிக் கேனைத் தட்டியபடியே சைக்கிள் கடைக்காரச் சிறுவன் வந்தான். கிட்ட வந்த பின்னர்தான் அவர்களைக் கண்டான். அவனது கண்களில் மிரட்சி ததும்பியது.

“அண்ணை என்ன இங்கே நிக்கிறீயள்?”

“எங்கே கசிப்பு வாங்கத்தானே..!”

“ஓமண்ணை.”

“கேனை என்னட்டைத் தா..!”

*"அண்ணை, ஒண்டும் செய்துபோடாதேங்கோ. பிறகு, சீக்கியன் எனக்கு அடிப்பான் அண்ணை."*

*"பயப்பிடாதை" என்றபடி கானை வாங்கியவன், டிஸ்பென்சரிக்குப் போனான். டிஸ்பென்சரிக் கிணற்றில் தண்ணீர் அள்ளி கேனைப் பாதி நிறைத்தான். டிஸ்பென்சரிக்குள் சில நிமிடங்கள் தாமதித்தான். அந்தச் சமயத்தில் யாருடனும் பேசாமல் மூச்சை நன்றாக உள்ளிழுத்து, வானத்தைப் பார்த்துக்கொண்டான். அவன் தீவிரமான காரியங்களில் ஈடபட முன்னர் இப்படித்தான், தன்னை ஒருநிலைப்படுத்துவான். அந்தச் சமயத்தில் யாருடனும் பேச மாட்டான். பேச்சு செயலின் எதிரி என்பதைப் பழக்கிய இயக்கத்தின் போராளி அல்லவா. பிஸ்டல் தயார் நிலையில் இருக்கிறதா எனப் பார்த்து உறுதிசெய்து பின்பக்கத்தில் செருகிக்கொண்டான். டிஸ்பென்சரியைவிட்டு வீதிக்கு இறங்கினான். சிறுவனைக் கூப்பிட்டு, "இந்த இடத்திலேயே நிற்கவேணும்" என்று குரலை சற்று கடுமையாக்கிச் சொன்னான். "பிரேம் நீ சைக்கிளை சரியா இடத்துக்குக்கொண்டு வா" என்றுவிட்டுக் காவல் அரணை நோக்கி நடக்கத் தொடங்கினான்.*

*காவல் அரணிக்கு முன்னால் வந்தான். உள்ளம் எக்கச்சக்கமாக அடித்துகொண்டது. என்றாலும் அவனில் அது தெரியாமல் இருக்க மிகப் பிரயத்தனப் பட்டுக்கொண்டான். வெகு அலட்சியமாக நடந்து வந்தான். தான் கொடுத்துவிட்ட கேனுடன் ஒருவன் நடந்து வருவதைக் கண்ட சீக்கியனின் முகத்தில் ஒரு சினேக பாவம் முளைத்தது. வழமையான ராணுவத்தனமாக எச்சரிக்கை உணர்வு அவனில் தெரியவில்லை என்பதைக் கண்ட பின்னர்தான் அவனுக்குள் நிம்மதி பரவியது.*

*அவனையும் கையில் இருந்த கேனையும் மாறி மாறி பார்த்துவிட்டு, "சோட்டா லடுக்கா ககாகே?" (சின்னப் பையன் எங்கே?) என்றான். இவன் வெகு நிதானமாக ஒருமுறை சீக்கியனைப் பார்த்தான். சட்டென வேகம் கொண்டு கையில் இருந்த பிளாஸ்டிக் கேனை சிக்கியனை நோக்கி பலம்கொண்ட மட்டும் எறிந்தான். "சோட்டா லடுக்கா உன்ரை கொம்மாவை தேடி போயிருக்கிறான்" என் கத்திக்கொண்டு, பின்னால் இருந்த பிஸ்டலை உருவி*

வெடிவைத்தான்.

ரோட்டில் போய்க்கொண்டிருந்த பலரும் விழுந்து படுக்க, பலர் ஒழுங்கைகளுக்குள்ளால் விழுந்து ஓடினார்கள். 100 மீட்டர் தூரத்தில் இருந்த அடுத்த காவல் அரணில் இருந்த ஆமிக்காரன் முகாமை நோக்கி ஓடத் தொடங்கினான். அவனது பிஸ்டல் இயங்கி முடிக்கவும் பிரேம் சைக்கிளைக் கொண்டுவந்து அவனருகில் பிரேக் அடிக்கவும் சரியாக இருந்தது. சைக்கிளில் ஏறப்போனவன், ஏதோ நினைத்தவனாகச் சட்டென நின்றான். சைக்கிளில் தொங்கிய துணிப்பையில் இருந்த கைக்குண்டு ஒன்றை எடுத்து "கீறீசா பூசுறாய்" என்று சரிந்துகிடந்த சீக்கியனின் தொடைகளுக்கு இடையில் வைத்து, கிளிப்பை உருவி எறிந்துவிட்டுச் சைக்கிளில் பாய்ந்து ஏறினான். காவல் அரண் அதிர்ந்து அடங்கியது. அவர்கள் சங்கானைச் சுடலையைக் கடந்து சைக்கிளில் போய்க்கொண்டிருந்த போது ரவீந்திரனின் கனவுகள் கற்பனைகளோடு அவனது உடலும் எரிந்து முடிந்து சாம்பலில் இருந்து புகைமட்டும் வெளிவந்துகொண்டிருந்தது.

# 28

**யா**ழிலேயே சுற்றித் திரிந்தவனைத் திடீரென வன்னிக்குள் அழைத்தார்கள். வன்னியில் நின்ற காலங்களில் அவனிடம் ஒரு பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. புளொட் மாணிக்கதாசனைப் போட வேண்டும். அவனும் வவுனியா பூந்தோட்டப் பகுதியில் தங்கியிருந்து அதற்கான தயார்ப்படுத்தலைச் செய்யத் தொடங்கியிருந்தான். வவுனியாவில் ஈரப் பெரிய குளம் இலங்கையின் ஜோசப் வான் படைத்தளத்தில் முகாம் அமைத்திருந்த மாணிக்கதாசனாலும் புலிகளுக்குப் பெரும் தலையிடியாக இருந்தது. வவுனியா ஊடாகப் பயணம் செய்யும் புலிகள் அமைப்பின் குடும்ப உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் என்று பலரையும் கைது செய்து சித்ரவதை செய்து கொன்றுவிடுவது அல்லது பெருந்தொகை பணத்தைக் கப்பமாக வாங்கிக்கொண்டு விடுதலை செய்வதே மாணிக்கத்தாசனின் வேலையாக இருந்தது.

அன்றைய காலப் பகுதியில்தான் புலிகளின் பின்னைய காலத்து அரசியல் துறைப் பொறுப்பாளராக இருந்த ஒருவரின் மூத்த சகோதரர் வவுனியா ஊடாகக் கொழும்பு போய்க்கொண்டிருந்த வேளை, ஈரப் பெரிய குளத்தில் வைத்துப் புளொட்டினால் கைது செய்யப்பட்டார். அவர் கைது செய்யப்பட்டதை அறிந்ததும் புலிகள் அமைப்பின் வவுனியா பொறுப்பாளராக இருந்த தேசன், ஓர் அதிரடி நடவடிக்கை எடுத்தார். தாண்டிக்குளம், கொக்குவெளி, ஓமந்தை, சேமமடு ஆகிய பகுதிகளில் இருந்த புளொட்

உறுப்பினர்களின் சுமார் 50–க்கு மேற்பட்ட குடும்பங்களை ஒட்டுமொத்தமாகக் கைது செய்துகொண்டு போய்ப் பன்றிக்கெய்த குளம் முகாமில் தடுப்புக் காவலில் வைத்தார். நிலைமை விபரீதமாகியதை உணர்ந்த புளொட், உடனடியாகவே அரசியல் துறை பொறுப்பாளரின் சகோதரரை விடுவித்தது.

அதே நேரம் சங்கானையைச் சேர்ந்த ரமேஷ் புளொட்டில் இருந்து விலகித் தனியார் பேருந்து ஒன்றில் நடத்துனராக வேலை செய்துகொண்டிருந்தார். அவருக்கு முதலாளி ஆசை வந்தது. ஊரில் பலரிடம் கடன் வாங்கி மினி பஸ் ஒன்றை வாங்கி யாழ் மாதகல் பகுதி சேவையில் விட்டிருந்தார். அவரது கஸ்ரகாலம் பஸ் வாங்கிய சில காலத்திலேயே விபத்தில் சிக்கி ஓட முடியாமல்போனது. ஊரில் கடன்காரர்களின் தொல்லை தாங்க முடியாமல் ஓடிப்போய் ஈரப் பெரியகுளத்தில் மாணிக்கதாசனுடன் ஒட்டிக்கொண்டார். அதே நேரம் மாணிக்கதாசனுடன் இருந்தவர்கள் எல்லாம் நீண்ட காலம் இந்தியாவிலும் கொழும்பிலும் இருந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு உள்ளூர் நிலவரங்கள் யார் புலிகள், யார் புலி ஆதரவாளர்கள் என்பது பெரியளவில் தெரிந்திருக்கவில்லை. அவர்களுக்கு ஊருக்குள் இருந்து வந்த ரமேஷின் வரவு பெரும் உதவியாக இருந்தது. ரமேஷ் முன்காவல் அரனில் நின்றுகொண்டு யாழில் இருந்து வரும் புலிகள் அமைப்பின் குடும்ப உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் மட்டுமல்லாமல் அவருக்குக் கடன் கொடுத்து அதைத் திரும்பப் பெறுவதற்காக மிரட்டியவர்கள் எல்லாரையும் பிடிக்கத் தொடங்கியிருந்தார். விரைவிலேயே மாணிக்கதாசனின் வலதுகரமாகவும் மாறிவிட்டார்.

மாலை நேரத்தில் மாணிக்கதாசனும் ரமேஷும் மோட்டார் சைக்கிளில் வவுனியா நகரத்துக்கு உள்ள பிறிஸ்ரல் (சிகரெட்) நிறுவனத்துக்கு வந்து சிகரெட் வாங்கிவிட்டு வவுனியாவை நகர்வலம் வருவது வழமை. அப்படி நகர் வலம் வரும் மாணிக்தாசனையும் போட வேண்டியதுதான் அவனிடம் கொடுக்கப்பட்ட பொறுப்பு. வவுனியா நகரம் பாதி இலங்கை ராணுவத்தின் கட்டுப்பாட்டிலும், பாதி இந்திய ராணுவத்தின் கட்டுப்பாட்டிலும் இருந்தது. புளொட், இலங்கை ராணுவத்தோடும், ரெலோ இந்திய

ராணுவத்தோடும் சேர்ந்து இயங்கிக்கொண்டிருந்தனர். இதற்கு இடையில் வவுனியா நகரப் பகுதியில் புகுந்து ஒருவரை போடுவது என்பது சிரமான காரியம். அதே நேரம் சுட்டுவிட்டு தப்பியோட முடியாத அளவுக்குப் பாதுகாப்பு நிறைந்த இடம். எனவே, நேரக் கணிப்புக்குண்டு அல்லது தானியங்கி (ரிமோட்) மூலம் இயங்கும் குண்டு மூலமே அதனைச் செய்து முடிப்பது சாத்தியம். எனவே, மாணிக்கதாசன் மற்றும் ரமேஷின் நடமாட்டம் என்பன வவுனியாவுக்கு வியாபாரத்துக்காகப் போய் வரும் ஓமந்தை புது வீட்டுத் திட்டத்தில் குடியிருக்கும் புலி ஆதரவாளர் ஒருவர் மூலம் திரட்டப்பட்டது. அவர் கொடுத்த தவல்களின்படி மாணிக்கதாசன் மாலை நேரத்தில் ஒரு குறிப்பிட்ட நேரத்துக்கு வருவதில்லை. மாலையில் அவர் விரும்பிய நேரத்துக்கு வந்து போவார். எனவே, நேரம் குறித்த குண்டு வைக்க முடியாது. ரிமோட் மூலம் இயங்கும் குண்டு வைப்பது என முடிவானது. ஆனால், இந்த ரிமோட் மூலம் இயக்கும் குண்டு என்பது புலிகள் அமைப்புக்குள் அப்போதுதான் பரீட்சார்த்த முயற்சியாக இருந்தது. இந்தியப் படை காலத்தில் முதன்முதலாகச் சுன்னாகத்தில் ஒரு புளொட் உறுப்பினரை போடுவதற்காக மீன் பெட்டி ஒன்றில் வைத்து இயக்கியதில் அது சரியாக வெடித்திருந்தது. பின்னர், அதே முறையைத் திருநெல்வேலி சந்தியில் சுபாஷும் தாடி சிறியும் முயற்சி செய்தபோது அது தவறுதலாக வெடித்ததில் இருவரும் இறந்துபோனார்கள். அதனால் மாணிக்கதாசனுக்கான தானியக்கி மூலம் வெடிக்க வைக்கும் குண்டைத் தயாரித்து வேறு ஒருவரிடம் கொடுக்காமல் தானே நேரடியாகக் கொண்டுபோய் வைப்பதாக அவன் முடிவெடுத்தான்.

சைக்கிள் ஐஸ் பழ பெட்டி ஒன்றினுள் குண்டைப் பொருத்தி அதனைப் பிறிஸ்ரல் கம்பெனி முன்னால் நிறுத்தி வைத்து மாணிக்கதாசனும் ரமேஷும் வரும்போது வெடிக்க வைப்பது என முடிவு செய்யப்பட்டது. அதற்காக ஐஸ் பழப் பெட்டி ஒன்றும் தயார் செய்யப்பட்டது. வவுனியா ரெயில்வே பக்கத்தில் இயங்கிய ஒரு ஐஸ்க்ரீம் கம்பெனியின் பெயர் படம் எல்லாம் ஐஸ் பழப் பெட்டியில் கீறி தயார் செய்யப்பட்டது. வெடிபெருட்களும் இணைக்கப்பட்டு வவுனியா பூந்தோட்டம் வழியாக வவுனியா நகருக்குள்

அனுப்பியாகிவிட்டது. அவனும் வவுனியா நகருக்குள் நுழைந்துவிட்டான். ஐஸ் பழப் பெட்டியில் ஐஸ் பழங்கள் நிரப்பப்பட்டுப் பிறிஸ்ரல் நிறுவனத்தின் முன்னால் கொண்டுவந்து அவனிடம் கொடுக்க வேண்டும் என்பதே திட்டம். அவன்தான் ஐஸ் பழ வியாபாரி. மாணிக்கதாசனும் ரமேஷும் மோட்டார் சைக்கிளில் அங்கு வந்து மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டுச் சிகரெட் வாங்கபோகும் இடைவெளிக்குள் ஐஸ் பழப் பெட்டி கட்டிய சைக்கிளை அவர்களின் மோட்டார் சைக்கிளுக்கு அருகில் கொண்டுபோய் நிறுத்திவிட்டு, அவர்கள் திரும்ப வந்து மோட்டார் சைக்கிளை எடுக்கும்போது குண்டை வெடிக்க வைக்க வேண்டும்.

ஐஸ் பழப் பெட்டியோடு ஆதரவாளர் வரவேண்டும். குறித்த நேரத்தில் கடையோரமாக அவருக்காகக் காத்திருந்தான். சற்று வேகமாக வந்த ஆட்டோ ஒன்று அவனருகில் கிறீச்சிட்டபடி பிரேக் அடித்தது. திரும்பிப் பார்த்தான். ஆட்டோவுக்குள் இருந்து மின்னலாக மூன்று பேர் குதித்தனர். முன்னால் இறங்கியவன், தனது கைத் துப்பாக்கியை எடுத்து அவனது முகத்தை நோக்கி நீட்ட, மற்ற இருவரும் அவனை நிலத்தில் விழுத்தினார்கள். அவனுக்கு எதிர்ப்பு தெரிவிக்க ஒன்றுமே இல்லை. எதுவும் செய்ய முடியாது. அவனது சட்டையைக் கழற்றி கைகளைக் கட்டி அதே ஆட்டோவில் இழுத்துப் போட்டார்கள். ஒருவன் அவனது அடையாள அட்டையை எடுத்து புரட்டிப் புரட்டி பார்த்துக்கொண்டிருந்தான். அதனை அவன் எதிர்பார்க்கவில்லை. தப்பியோடும் சூழ்நிலையும் இல்லை. எல்லாமே ஒருசில விநாடிகளில் நடந்து முடிந்துவிட்டன.

மாணிக்கனை போட வந்து புளொட்டிடமே அகப்பட்டுட்டோமே. கொண்டுபோய் அடித்துக் கொல்வார்களா? அல்லது சுட்டுக் கொல்வார்களா? என்ற கேள்வி மட்டும்தான் அவனில் எழுந்திருந்தது. ஆனால், ஆட்டோ ஜோசப் படை முகாமுக்குப் போகாமல் குருமண் காட்டுப் பக்கத்தை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது. ஆட்டோவில் இருந்த ஒருவன் அவனது இயக்க பெயரை சொல்லி அழைத்து, “என்னடா என்னைத் தெரியுதா?” என்று கேட்டான். இந்தப் பெயருக்கும் தனக்கும் சம்பந்தமே இல்லை என்பதைபோல இவன் பாவனைக் காட்ட

அடிவிழுந்தது.

குருமண் காட்டில் ரெலோ முகாமுக்குள் ஆட்டோ போய் நுழைந்த பின்னர்தான், பிடிபட்டது புளொட்டிடம் இல்லை ரெலோவிடம் என்பது புரிந்தது. முகாமில் ஆட்டோ நின்றதுமே, கீழே இழுத்து போட்டு உதைக்கத் தொடங்கினார்கள்.

வயிற்றில் விழுந்த உதைகளால் தாக்கமடைந்து விடாமல் இருக்க வயிற்றை இறுக்கமாக்கிக்கொண்டான். முகாமின் முற்றத்தில் போட்டு உருட்டி எடுத்துக்கொண்டிருக்கும்போதே வேன் ஒன்று வேகமாக மிதந்து வந்து நின்றது. கதவைத் திறந்துகொண்டு பரபரப்பாகச் சிலர் இறங்கினார்கள். மூக்கு, வாய் எல்லாம் உடைந்து ரத்தம் ஒழுகிய நிலையில் இருந்த ஒருத்தனை இழுத்து கீழே தள்ளினார்கள். அந்த மனிதனால் நடக்கவே முடியவில்லை. கைகளைப் பிடித்துத் தரதரவென இழுத்துப் போய் அறையில் போட்டார்கள்.

வாகனத்தின் முன்பகுதியில் இருந்து இறங்கிய முகாம் பொறுப்பாளர், முற்றத்தில் கிடந்த ஒரு கொட்டானை கையில் எடுத்தார். அதுவரை அடிவாங்கி நிலத்தில் கிடந்தவனைப் பார்த்து தூசண வார்த்தைகளால் திட்டியவன், “உள்ளை இழுத்துக்கொண்டு வாங்கோடா” என்று கட்டளையிட்டான். இரண்டு பேர் ஓடிவந்து அவனையும் இழுத்துக்கொண்டு போய் அதே அறையில் தள்ளினார்கள். கட்டையோடு வந்த பொறுப்பாளர் “நாயே, எங்களிட்டை இருந்து தப்பியா ஓடுகிறாய்” என்றபடி வானில் இருந்து இழுத்து வந்தவனின் உச்சந்தலையில் கட்டையால் ஓங்கி அடித்தார். அடிவாங்கியவனிடம் இருந்து மெல்லிய முனகல் மட்டும் வந்தது. மூக்கில் இருந்து குமிழி குமியாக ரத்தம் ஒழுகத் தொடங்கியது. “டேய், கண்ணன் ஆள் முடிஞ்சுது இழுத்துக்கொண்டு போய்த் தாழுங்கோ” என்ற பொறுப்பாளர், அவனுக்கும் கட்டையால் ஓங்கி இடுப்புப் பகுதியில் ஓர் அடி போட்டார். “இவனிட்டை விவரங்களை எடுத்திட்டு இரவு ஆளை போட்டுவிடுங்கோடா” எனக் கட்டளையிட்டபடி வெளியில் போனார்.

இறந்தவனைச் சிலர் வந்து தூக்கிகொண்டுப் போனார்கள். திருகோணமலையைச் சேர்ந்த யாரோ ஒரு புலி உறுப்பினர் வவுனியா ஊடாகப் போகும்போது

இவர்களிடம் பிடிபட்டுத் தப்பியோடியபோது மதவாச்சிப் பகுதியில் வைத்து திரும்பவும் பிடிபட்டிருந்தான் என்பது மட்டும் உரையாடல்களின்போது புரிந்தது. அவனைத்தான் அந்தப் பொறுப்பாளர் அடித்துக் கொன்றார்.

அங்குக் காவல் கடமையில் இருந்த சின்னப் பொடியன் ஒருவனிடம் மெள்ளக் காதை கொடுத்தான். அவன்தான் பொறுப்பாளரின் பெயரை 'செல்வம்' எனச் சொன்னான்.

செல்வத்தின் வலது கையாக இருந்த கண்ணன்தான் அதன் பின்னர் அவனிடம் விசாரணை செய்தான். தேசன் பற்றியும் ஓமந்தை பகுதியில் புலிகளின் முகாம் எங்கு இருக்கின்றது என்பது பற்றியும்தான் திரும்பத் திரும்பக் கேட்டான். அவன் சாதாரணமாகக் கேட்கவில்லை. வொயரால் அடித்து அடித்தே கேட்டான். பின்னர், தான் பாதிப் புகைத்த சிகரெட்டை அவனது மார்பில் வைத்து அழுத்தினான். எரிவு ஒரு பக்கம். தோல் கருகிய மணம் குமட்டிக்கொண்டு வந்தது.

வயிற்றுப் பகுதியில் தொடர்ந்து வாங்கிய அடியால் ஏற்கெனவே உடையோடு வயிற்றால் போயிருந்தது. இப்போது சத்தியும் எடுத்துவிட்டான். இருந்தாலும் அவனிடமிருந்து அவர்களால் ஒன்றையும் கறக்க முடியவில்லை. வெளிநாடு போவதற்காகக் கொழும்பு போக வந்தாகவும், புலிகளுக்கும் தனது பரம்பரைக்குமே தொடர்பு இல்லை எனச் சத்தியம் செய்துகொண்டிருந்தான்.

“இண்டைக்கு இரவுக்கிடையிலை எல்லாத்தையும் சொல்லிப்போட வேணும்” என்றபடி அவனது மலத்திலும் சத்தியிலுமே, அவன் முகத்தைக் கண்ணன் தேய்த்தான். கொஞ்ச நேரத்தில் களைத்துப் போய்ப் போய்விட்டான். முகாம் காவலர்கள் வந்து அவனை அம்மணமாக்கினார்கள். அம்மணமாகவே முற்றத்தில் போட்டு தண்ணீரை ஊற்றி அவனைச் சுத்தம் செய்தனர். அறையையும் சுத்தம் செய்து மீண்டும் அம்மணமாகவே கைகள் கட்டிய நிலையில் அறைக்குள் தள்ளி கதவைப் பூட்டினார்கள்.

அவனுக்குக் காய்ச்சல் பிடித்துவிட்டது. சாதாரணக் காய்ச்சல் அல்ல. உடம்பு நடுங்கத் தொடங்கிவிட்டது. உடல்வலி ஒரு பக்கம். காய்ச்சல் நடுக்கம் ஒரு பக்கம்.

உடம்பைக் குறுக்கிக்கொண்டு படுத்திருந்தான். இரவாகியிருக்க வேண்டும். நேரம் பற்றிய சிந்தனை எதுவும் அவனுக்குள் இல்லை.

கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டது. தன்னைப் போடுவதற்காகக் கொண்டுபோகப் போகிறார்கள் என நினைத்தான். வேறொன்றும் சிந்திக்க முடியவில்லை. உடலும் உணர்வுகளும் மரத்துப் போயிருந்தன. உடலையும் அசைக்க முடியவில்லை. சிந்தனையும் நகரவில்லை. சோர்வால் நித்திரையாகிப் போனான்.

யாரோ அவனது சொந்தப்பெயரை சொல்லிக் கூப்பிட்டது கேட்டது. அரை மயக்க நிலையில் ஒரு கனவுபோல இருந்தது. எங்கேயோ பாதாள உலகத்தில் இருந்து ஒரு குரல் மிதந்து வருவதைப்போல் இருந்தது. யாரோ தொட்டு உலுக்குவதைப்போல் இருந்தது. மெதுவாகக் கண்ணைத் திறந்து பார்த்தான்.

நிழலாகத் தெரிந்த முகத்தை நினைவைத் திரட்டி அடையாளம் காண முயன்றான். மங்கலாகச் சுதனது முகம் நிழலாடியது. அட நம்ம சுதன். இவனது ஊர்க்காரன். இவனைவிட ஒரு வயது மூத்தவன்தான் என்றாலும் இருவரும் ஊரில் நல்ல கூட்டாளிகள். பின்னேரங்களில் ஒன்றாகக் கிரிக்கெட் விளையாடுவார்கள். சுதன் கிரிக்கெட்டில் வலு கெட்டிக்காரன். அவன்தான் அந்தப் பகுதியில் கிரிக்கெட் ஹீரோ. எல்லோரும் வளர்ந்து ஆளுக்கொரு திசையாக ஒவ்வோர் இயக்கத்துக்குப் போய்க்கொண்டிருக்க, சுதன் ரெலோவுக்குப் போனான்.

காலம் வேகமாக ஓடி புலிகள், ரெலோ மீது தாக்குதலை நடத்தி முடித்திருந்தார்கள். பலர் கைது செய்யப்பட்டனர். கைதானவர்களிடம் தீவிர விசாரணை நடத்தது. விசாரணையின் முடிவில், அவர்களைத் தேடி வந்த பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர். பொறுப்பேற்க யாரும் வராதவர்களை டம்மி முகாமுக்கும் (சுட்டுக் கொல்லும் முகாம்) அனுப்பிக்கொண்டிருந்தார்கள். அளவெட்டி ரெலோ முகாமில் சுதன் கைதாகியிருந்தான். அவனை எங்கே போய் விடுவிப்பது என்று தெரியாமல் சுதனின் குடும்பம் தடுமாறிக்கொண்டிருந்தது. அவர்கள்

விஷயம் விளங்காமல் இவனது வீட்டில் வந்து அழுதுவிட்டுப் போனார்கள்.

ஒருநாள் தற்செயலாக வீட்டுக்குப் போனபோதுதான், சுதனின் விஷயம் தெரியவந்தது. இரண்டொருவரிடம் விசாரிக்க, சுதன் நாச்சிமார் கோயிலடி முகாமில் இருப்பது தெரிய வந்தது. உடனே சுதனின் வீட்டுக்குப் போனான். இவனைக் கண்டதும் சுதனின் அம்மா ஓடிவந்து கையைப் பிடித்துக் கதறத் தொடங்கிவிட்டார். அவனுக்கு இரண்டு தங்கைகள் இருந்தனர். அவர்களும் சுவரோடு முகத்தை வைத்து ஆளுக்கொரு திசையாக நின்று அழுதுகொண்டிருந்தனர். அவர்களை நாச்சிமார் கோயிலடி முகாமுக்குப் போகும்படியும் பின்னர் தான் வந்து சுதனை விடுவிக்கச் சிபாரிசு செய்வதாகவும் சொன்னான். விஷயத்தைக் கேட்டதும் சுதனின் தாயார் உடனேயே வெளிக்கிட்டார். தாயின் அவசரத்துக்கு ஈடுகொடுத்து, தந்தையும் வெளிக்கிட்டார். விஷயத்தை எப்படிச் சொல்வது என ஆரம்பத்தில் தயக்கமாகத்தான் இருந்தது. ஒரு செக்கெண்டு தாமதித்தாலும் சுதனின் பெற்றோர் புறப்பட்டுவிடுவார்கள் என்பதால் சொன்னான். பெற்றொர் இருவரையும் போக வேண்டாம் என்றும், தங்கைமார் இருவரையும் போகச் சொன்னான். அழுது வடியும் முகத்துடன் போகாமல், நன்றாகச் சீவிச்சிங்காரித்துக்கொண்டு போகச் சொல்ல, தாய் அவனை ஒரு மாதிரியாகப் பார்த்தார். இவன் பேசாமல் வந்துவிட்டான்.

முகாமில் கைது செய்யப்பட்டிருந்தவர்களின் உறவினர்களிடம் கடிதம் எழுதி வாங்கிக் கையெழுத்திட்ட பின்னர், அவர்கள் வெளிநாடுகளுக்குப் போய்விட வேண்டும் அல்லது இயக்கத்துக்கு எதிராக எந்தச் செயற்பாடுகளிலும் ஈடுபடக் கூடாது என்று மிரட்டிவிட்டு ஊத்தை சிலரை விடுதலை செய்திருந்தார். முகாமுக்குப் போயிருந்த சுதனின் சகோதரிகள் சுதனை விடுதலை செய்துவிடும்படி கெஞ்சிக்கொண்டிருக்கும்போதே ஏதேச்சையாக அங்குப் போகிறவனைப் போலப் போனவன், தனக்கும் சுதனை தெரியும். நல்ல பெடியன். குடும்பத்தில் ஒரே ஆண் பிள்ளை. கொஞ்சம் வறுமையான குடும்பம். விட்டுவிடலாம் என ஊத்தையிடம் சிபாரிசு செய்தான். ஊத்தையும் சுதனின் சகோதரியிடம் கடிதம் எழுதி வாங்கிவிட்டு சுதன் ஊரில்

தங்கியிருந்தால் வாரத்துக்கு ஒருமுறை மாணிப்பாயில் அமைந்திருந்த புலிகளின் அரசியல் முகாமான மயூரனின் முகாமில் போய்க் கையெழுத்திட வேண்டும் என்று எச்சரித்து விடுதலை செய்தான். சுதனை எங்காவது வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கலாம் என நினைத்த அவனது குடும்பத்தினரும் கடன்பட்டு ஒரு முகவரிடம் பணத்தைக் கொடுத்து அனுப்பியிருந்தார்கள். ஆனால், அந்தப் பயண முகவரோ சுதனை மும்பை வரை கொண்டுபோய், அங்கு அவனை ஏமாற்றிவிட்டு ஓடிவிட எப்படியோ தமிழ்நாடு வந்து சேர்ந்தவன், ஊருக்கும் போக முடியாமல் சுதன் அங்கு அகதியாகப் பதிந்து இருப்பதாக அவன் அறிந்திருந்தான். அந்த சுதன்தான் இப்போது அவன் முன்னால் நிற்பவன்.

சுதன் அருகில் வந்து அவனைத் தொட்டுப் பார்த்தான். உடம்பு காய்ச்சலால் கொதித்துக்கொண்டிருந்தது. அவனது கைகளை அவிழ்த்துவிட்டான். உள்ளே போய் ஒரு சாரத்தைக் கொண்டுவந்து போத்தினான். பிறகு, பேசாமல் வெளியில் சென்றான். சிறிது நேரம் கழித்துக் காலடிச் சத்தம் கேட்டது. மெதுவாகக் கண்ணைத் திறந்து பார்த்தான். அவன்தான். பாணும் வாழைப்பழமும். பனடோலும் ப்ளேன் சோடாவும் வாங்கி வந்து பக்கத்தில் வைத்தான். பிறகு மெதுவாக "யாரோ ஓர் ஊர்காரன் பிடிபட்டிக்கிறான் எண்டு கேள்விப்பட்டுப் பார்க்க வந்தனான். அது நீயா இருப்பாயெண்டு நான் நினைக்கேல்லை. இண்டைக்கு இரவு எனக்கு இங்கேதான் சென்றி. திரும்ப வருவன் சாப்பிட்டு பனடோலை போட்டிட்டு இரு" என்றுவிட்டு, இவனது பதிலுக்குக் காத்திருக்காமல் புறப்பட்டான். வெளியில் பூட்டு பூட்டும் சத்தம் கேட்டது.

சாரத்தை எடுத்துக் கட்டிவிட்டு, பாணைக் கடித்துச் சாப்பிட முயன்றான். முடியவில்லை. வாழைப்பழத்தைச் சாப்பிட்டுவிட்டு பனடோலைப் போட்டு, பாதிச் சோடாவை குடித்தான். உடம்பில் இருந்த சிகரெட் எரி காயங்களில் மீது மீதி சோடாவை ஊற்றினான். காயங்கள் இருந்த இடங்களில் சோடா அதிகமாக நுரைத்து மேலதிகமாக எரிந்தது. ஆனால், அது அவனை மீண்டும் சோர்ந்து போகவிடாமல் வைத்திருந்தது. அரை மணித்தியாலமளவில் மீண்டும் கதவு திறந்தது. முதுகில் தொங்கிய ஏ.கே துப்பாக்கியோடு சுதன்

வந்தான்.

திடீரெனப் பெரிய குரலில் "என்ன டாய்லெட் போகவேணுமா.. வா" என்றான். இவனுக்கு ஒன்றும் புரியவில்லை. மலங்க மலங்க விழித்தபடி சுதனைப் பார்த்தான். இவனது பதிலை எதிர்பாராமல் "எழும்பு" என்றான். இவனும் எழும்பி சுதன் பின்னால் நடக்கத் தொடங்கினான். இருவரும் வெளியில் செல்வதை உள்ளேயிருந்து ஒருவன் பார்த்துகொண்டிருந்திருக்கிறான். பாய்ந்து ஓடி வந்தான். "அண்ணை இவன் முக்கியமான ஆளாம்.. கவனம்" என்றான்.

"எல்லாம் எனக்குத் தெரியும்.. பேசாமல் போ.." எனச் சுதன் அவனை மிரட்டினான்.

சுதன் முக்கியப் பொறுப்பில் இருக்கிறான்போல என அவன் நினைத்துக்கொண்டான். முகாமுக்கு வெளியே அவனை அழைத்து வந்தவன், குருமண் காட்டு குளக்கட்டுக்கு அருகில் வந்துவிட்டார்கள். "டாய்லெட்டுக்கு அங்கே போய் இருந்திட்டு, குளத்திலை கழுவிட்டு வா" என்றுவிட்டுப் பேசாமல் நின்றான். இவன் பேசாமல் முழித்துக்கொண்டு நிற்க, "விசரா நேரத்தை வீணாக்காமல் போ... ஓடு" என்றான். சுதன் தப்பியோட சொல்லுவான் என இவன் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை. உண்மையில் தப்பியோட சொல்கிறானா அல்லது ஓடும்போது பின்னால் இருந்து சுட்டுவிடப் போகிறானா என்று குழம்பினான்.

குளக் கட்டுப் பக்கமாகப் போனவன், கொஞ்சம் வேகமாக மேலும் நடக்கத் தொடங்கினான். முதுகு பக்கத்தில் வெடி விழலாம் என நினைத்தவனுக்கு முதுகு கூசுவதுபோல் இருந்தது. சுதன் பேசாமல் நின்றிருக்க, இன்னும் கொஞ்சம் வேகமாக நடக்கத் தொடங்கியவன் திரும்பி பார்த்தான். சுதன் இருளில் மங்கலாகத் தெரிந்தான். அதற்குப் பின்னர் ஓடத் தொடங்கினான். சில வெடிச் சத்தங்கள் கேட்டன. அவனுக்குப் பழகிப்போன இடங்கள் என்பதால் ஓமந்தை பகுதியை நோக்கி தண்டவாளம் வழியாக ஓடத் தொடங்கினான். சிறிது தூரம் தாண்டிக்குளம் வரை வந்ததும் அதற்குப் பின்னர் இந்திய ராணுவம் ரெயில் பாதையிலும் படுத்திருக்கலாம் என நினைத்து காட்டுப் பகுதியை அண்டி ஓடத் தொடங்கினான். அப்போதுதான்

யாருடையாவது செருப்பைக் காலில் கொழுவிக்கொண்டு ஓடிவந்திருக்கலாம் எனத் தோன்றியது. காலில் குத்த தொடங்கிய முட்களை முடிந்தளவுக்கு இழுத்தெடுத்துவிட்டு ஓடிக்கொண்டிருந்தான். நேரம் என்பது எத்தனை என்று எல்லாம் சரியாகத் தெரியவில்லை. வெளிச்சம் வரத் தொடங்கியிருந்தது. மாணிக்கர் வளவு வரை வந்துவிட்டான். அதற்கு மேல் ஓட முடியவில்லை.

தேசனின் முகாம் இருந்த பன்றிக்கெய்த குளம் முகாமுக்குப் போவதானால் இன்னும் 10 கிலோமீட்டராவது போகவேண்டும். அதைவிட ஓமந்தை இலங்கை ராணுவ சோதனைச் சாவடிகளை வீதியால் கடக்க முடியாது. வயல்களால் ஒழித்தே கடக்க வேண்டும். அந்தளவுக்குத் தெம்பு இல்லை. மாணிக்கர் வளவு கடந்ததும் ஒரு பேக்கரி இருந்தது. கட்டுவனைச் சேர்ந்தவர்களுடையது. பேக்கரிக்கு அருகிலேயே அவர்களது வீடும் அதே வளவினுள் இருந்தது. அவர்கள் அவனுக்குத் தூரத்து உறவினகள்கூட. அவர்கள் வீட்டுக்கு சில முறை போயிருக்கிறான். உறவுக்காரனாக மட்டுமே அவனை வரவேற்பார்கள். காரணம், அவர்களது மகன் புளொட் அமைப்பில் மத்தியக் குழு உறுப்பினர் என்பதோடு மட்டுமல்லாமல் பயிற்சி ஆசிரியர் வேறு கருணை அவரது பெயர். வவுனியா புளொட் அரசியல் துறை பொறுப்பாளர் நடேசன் இவர்களது வீட்டுக்கு வந்துவிட்டு போகும்போது புலிகளின் ஜெசி குழுவால் மாணிக்க வளவுப் பகுதியில் வைத்து சுட்டுக் கொல்லப் பட்டிருந்தார் என்பதோடு யாராவது புளொட்காரர்கள் அவர்கள் வீட்டுக்கு வருகிறார்களா என்று புலிகளால் கண்காணிக்கப்பட்டுக்கொண்டும் இருந்தது. புலிகள் மீது அந்தக் குடும்பத்தினர்களுக்கு வெறுப்பு இருந்தாலும் அவனோடு அன்பாகப் பழகுவார்கள். அவர்களது வீட்டுக்குப் போவதைத் தவிர அவனுக்கு வேறு வழி இல்லை. ரயில் தண்டவாளத்தைத் தண்டி அவர்களது வீட்டின் பின் வேலி வழியாக உள்ளே போய் வீட்டின் விறாந்தையில் கிடந்ததுமே அவனை அடையாளம் கண்டு வீட்டுக்காரர்கள் தூக்கிச் சாக்குக் கட்டிலில் கிடத்திவிட்டு நடந்த விஷயங்களை அறிந்துகொண்டார்கள். கால்களில் முட்கள் குத்திய இடங்களில் இருந்து ரத்தம் கசிந்தபடி கால்கள் வீங்கிப்போயிருந்தன. அவர்களின் மகள்

சுவேதா இளம் சுடுநீரில் கால்களைச் சிறிது நேரம் கழுவி முடிந்தளவு முட்களை ஊசியால் தட்டி எடுத்துவிட்டாள். ஆனாலும் காலில் ஆழமாகப் பாய்ந்து முறிந்திருந்த முட்களை எடுக்க முடியாததால் பாவட்டம் குளைகளைப் பிடுங்கிவந்து நெருப்பில் லேசாக வாட்டி கால்களில் வைத்து கட்டிவிட்டாள். இண்டு நாட்கள் கழித்து முட்கள் குற்றிய இடங்கள் சீழ் பிடித்திருந்தது. அந்த இடங்களில் மெதுவாக அழுத்தியதும் சீழோடு சேர்ந்து முட்களும் இலகுவாக வெளியே வந்தன. ஆனாலும் எவராவது உதவியோடுதான் நடக்க முடிந்தது. காய்ச்சலும் கால்களும் குணமடைய 10 நாட்களுக்கு மேலாகியிருந்தது. அதுவரை அவர்கள் பேக்கரியில் வேலை செய்தவர்களுக்கே தெரியாமல் அவனை வீட்டின் உள்ளேயே ஒளித்துவைத்துப் பராமரித்தார்கள்.

அதற்கிடையில் அவன் ரெலோவிடம் கைதாகித் தப்பியோடிய செய்தி, புலிகளுக்குத் தெரியவந்துவிட்டது. தப்பியோடியவனைக் காணவில்லை என்றதும் காட்டுப்பாதைகளால் எங்காவது ஓடி வேறு முகம்களுக்கும் போய்ச் சேரலாம் என்பதால் தேசன் வவுனியா பகுதியை அண்டியிருந்த அனைத்து புலிகளின் முகாம்களுக்கும் தகவல் அனுப்பியிருந்தான். 10 நாட்களுக்கு மேல் சென்றுவிட்ட நிலையில் ஓரளவு குணமடைந்தவன், தன்னை வைத்து பராமரித்தவர்களுக்கு நன்றி தெரிவித்துவிட்டு புறப்பட்டான். வீதியில் வந்த லாரி ஒன்றை மறித்து அதில் ஏறி பன்றிக்கெய்த குளம் சந்தியில் இறங்கி தேசனின் முகாமுக்குப் போய்ச் சேர்ந்தான்.

இவன் தப்பி வந்து பேக்கரி வீட்டில் தங்கியிருந்தாகக் கூறியதும் தேசனால் நம்ப முடியவில்லை. “உன்னை அவங்கள் ஆமிட்டை பிடிச்சுக் குடுக்காமல்விட்டதே பெரிய விஷயம் என்று ஆச்சர்யத்தோடு கூறினான். அவர்கள் புளொட்காரர்கள் என்கிற காரணத்தால் மாத்தையா வன்னி பொறுப்பில் இருந்த காலத்தில் அவர்கள் ஓமந்தை சந்தியில் நடத்திய உணவுவிடுதியை நடத்தவிடாமல் தடை போட்டு வைத்திருந்தார். எனவே, அவர்கள் மீண்டும் அந்தக் கடையை நடத்த அனுமதி கொடுக்கும்படி தேசனை அவன் கேட்டதற்கிணங்க அவர்களுக்கான அனுமதியையும் தேசன் கொடுத்திருந்தான்.

அவனால் மீண்டும் வவுனியா நகருக்குப் போக முடியாது. எனவே, மாணிக்கதாசன் மற்றும் ரமேஷ் மீதான தாக்குதல் திட்டம் அப்போதைக்குக் கைவிடப்பட்டது.

சில நாட்களின் பின்னர் அவனை அலம்பில் பகுதிக்கு வரச்சொல்லி கிடைத்த கட்டளையை அடுத்து ஆறு பேர் கொண்ட ஒரு குழுவோடு அலம்பில் பகுதி நோக்கி புறப்பட்டான்.

சிறிது காலங்கழிந்த பின்னர் அவனை வவுனியாவுக்கு அழைத்துச் சென்ற புலி ஆதரவாளர் இரட்டை முகவர் என்பதும் அவனை ரெலோக்காரர்களிடம் அந்தப் புலி ஆதரவாளரே பிடித்துக் கொடுத்திருந்தார் என்பதும் தெரிய வந்தது. அவரைக் கைது செய்த தேசன், ஓமந்தை சந்தியில் வைத்து பொது மக்கள் முன்னால் வைத்து சுட்டுக் கொன்றான்.

**பி.கு: மேலதிக தகவல்கள்.**

ஆரம்ப காலத்தில், புளொட் அமைப்பானது அளவுக்கு அதிகமான போராளிகளை உள்வாங்கிவிட்ட நிலையில் அவர்களின் உணவுத்தேவைகளையே கவனிக்க முடியாமல் தடுமாறிக்கொண்டிருந்த அமைப்பினுள், உள் முரண்பாடுகளும் தலைவிரித்தாட அரம்பித்திருந்தன. திறமையான பல போராளிகள் புளொட் அமைப்பினுள் காணப்பட்டிருந்தபோதிலும், சரியான வழி நடத்தல்கள் இல்லாத காரணத்தால் புளொட் அமைப்பு சரியான முறையில் இயங்க முடியாத ஓர் அமைப்பாகவே இருந்தது. உட்படுகொலைகள், தலைமைத்துவ ஊழல்கள், கீழ்மட்டப் போராளிகள் இடையேயான வறுமை, கந்தசாமி அணியினர் ஆடிய தாண்டவம் என்பன, புளொட் அமைப்பை பல வழிகளிலும் செயற்பட முடியாத ஓர் அமைப்பாக மாற்றியிருந்தது.

கட்டுப்பாடு இழந்த நிலையில் விரக்தியுடன்கூடிய பல போராளிகள் தமிழ்நாட்டில் சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபட ஆரம்பித்திருந்தார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் புளொட்டில் இருந்த ஒரு முக்கியத் தளபதியான பரந்தன் ராஜன் என்பவர் இந்திய ‘ரோ’ அமைப்பினால்

உள்வாங்கப்பட்டு, முக்கியப் போராளிகள் அடங்கிய ஒரு குழுவுடன் ஈ.என்.டி.எல்.எஃப் (Eela National Democratic Liberation Front- ENDLF) என்ற அமைப்பை ஸ்தாபித்துச் சென்றுவிட, எஞ்சிய புளொட் அமைப்பு செயற்பட முடியாத அளவு தனித்து நிற்கவேண்டி இருந்தது. ஆரம்பம் முதலே புலிகளுக்கு எதிராகப் புளொட் மிகவும் தீவிரமாகச் செயற்பட்டுவந்த அமைப்பு என்ற காரணத்தினால், புலிகளுடனும் கைகோத்துக்கொள்ள முடியாத நிலை புளொட்டுக்கு இருந்தது. அத்தோடு, புலிகள் அமைப்பு மீது ஜென்மப் பகைகொண்ட ஓர் அமைப்பாகவே புளொட் அமைப்பும், அதன் தலைமையும் செயற்பட்டு வந்திருந்தது.

புளொட் அமைப்பின் இந்தக் கையறுநிலையை ஸ்ரீலங்கா அரசு நன்றாகப் பயன்படுத்திக்கொள்ளத் திட்டமிட்டது. இந்தியப் படையின் வருகையின் பின்னர், எதுவுமே செய்ய முடியாமல் தடுமாறிக்கொண்டிருந்த புளொட் தலைமையைத் தொடர்புகொண்ட ஸ்ரீலங்காவின் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி, புளொட் அமைப்புக்கு அபயம் அளிப்பதற்குத் தாம் விரும்புவதாகத் தெரிவித்தார். அப்போது ஈழ மண்ணில் ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருந்த புலிகள் மற்றும் இந்தியா என்ற தமது இரண்டு எதிரிகளையும் மீறி, எவ்வாறு அங்கு மீண்டும் கால்பதிப்பது என்று தடுமாறிக்கொண்டிருந்த புளொட் அமைப்பின் தலைமைக்கு, அத்துலத் முதலியின் அழைப்பு ஒரு பெரிய வரப்பிரசாதமாகவே இருந்தது.

ஸ்ரீலங்கா அரசின் அழைப்பின் பெயரில் புளொட் அமைப்பின் தலைவர் உமா மகேஸ்வரன் கொழும்புக்கு வந்தார். ஸ்ரீலங்காவின் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியுடன் பல பேச்சுவார்த்தைகளை நடத்தினார். இதனைத் தொடர்ந்து, புளொட் அமைப்புக் கொழும்பில் பல முகாம்களை அமைக்க ஆரம்பித்தது. பெருமளவு போராளிகள் அந்த முகாம்களில் தங்கவைக்கப்பட்டார்கள். அந்த அமைப்பைச் சேர்ந்த பல முக்கிய உறுப்பினர்கள் ஸ்ரீலங்கா படை அதிகாரிகளுடன் இணைந்து செயற்படவும் ஆரம்பித்தார்கள்.

வவுனியாவிலும் பல புளொட் முகாம்கள் அமைக்கப்பட்டன. அப்போது வவுனியாவில் தங்கியிருந்த

மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ, வவுனியாவில் புளொட் அமைப்பு முகாம்களை அமைக்க உதவி புரிந்தார். மாணிக்கதாசன் தலைமையில் வவுனியாவில் புளொட் அமைப்பு காலூன்ற ஆரம்பித்தது. இதேபோன்று மட்டக்களப்பிலும், புளொட் அமைப்பின் அரசியல் துறைச் செயலாளர் வாசுதேவா மற்றும் பொறுப்பாளர் சுபாஷ், சிவராம் போன்றவர்கள் தலைமையில் அந்த அமைப்பு காலூன்ற ஆரம்பித்திருந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த பெருமளவு போராளிகள் புளொட் அமைப்பில் இருந்ததால், அந்தப் போராளிகளின் பெற்றோர், உறவினர்களைச் சந்தித்துத் தமது அமைப்புக்கு ஆதரவு தேடிக்கொள்ளும் எண்ணத்துடனும், தமது அமைப்பை மீளவும் கட்டியெழுப்பும் நோக்கத்துடனும் செயற்பட ஆரம்பித்தார்கள்.

❍ ❍

# 29

**ப**ன்றிக் கெய்த முகாமில் தங்கியிருந்தபோது மீண்டும் அவனை முல்லைத் தீவு அலம்பில் காட்டு முகாமுக்கு வந்து சேரும்படி கட்டளை வந்தது. ஆறு பேர் கொண்ட தெரு சிறிய அணியைத் தயார் செய்தார்கள். வேண்டிய உணவுப் பொருட்கள் மற்றும் சிறிய கொமாண்டோ அணிக்குரிய இலகு ரக ஆயுதங்கள் அவர்கள் பயணிக்கும் ராக்கருக்கு வேண்டிய எரிபொருள் ஆகியவை தயார் செய்யப்பட்டன. இலங்கை ராணுவத்தின் சீருடைகளை அணிந்தபடி அலம்பில் நோக்கி சேமமடு ஊடாகச் சிங்கள கிரமங்களை அண்டி தண்ணி முறிப்புக் குளத்தை நோக்கி வயல்கள் காடுகள் ஊடாக டிராக்டரில் நகரத் தொடங்கினார்கள். தண்ணி முறிப்பு குளப் பகுதியில் இயங்கிய புலிகள் முகாமுக்குச் சென்று பின்னர் அங்கிருந்து அலம்பில் நோக்கி பயணத்தைத் தொடர்வதுதான் அவர்களது திட்டம்.

அன்றைய காலத்தில் பிரபாகரனைக் குறிவைத்து இந்தியப் படைகள் அலம்பில் பகுதில் சிறியதும் பெரியதுமாகப் பல முற்றுகைத் தாக்குதல்களை நடத்திக்கொண்டிருந்தார்கள். காஷ்மீரிய பனி மலைகளிலும் ராஜஸ்தான் பாலைவனத்திலும் பாகிஸ்தானோடு சண்டை பிடித்துப் பழகிய இந்திய ராணுவத்துக்குக் காடுகள் புதிதாகவே இருந்தது. அதைவிடப் புலிகளின் பொறி வெடிகள் அவர்களுக்குப் புதிதாகவும் பெரும் இழப்பையும் கொடுத்துக்கொண்டிருந்தது. அவர்கள் தண்ணி முறிப்புக் குளம் பகுதியை நெருங்கிக்கொண்டிருந்தபோது ஒரு சிறிய

வீதியை கடக்க வேண்டும். ஆனால், அவர்களின் பயணப் பாதை மாறிப்போகவே ரோந்து சென்றுகொண்டிருந்த ஓர் இந்திய ராணுவ அணியோடு மோதவேண்டிய நிலைமை ஏற்பட்டது. முடிந்தளவு குறைந்த அளவு துப்பாக்கிக் குண்டுகளைப் பாவித்துத் தற்காப்புத் தாக்குலை நடத்தி காட்டுக்குள் சென்று மறைந்துவிடுவதுதான் அவர்களது நோக்கம். தாக்குதலை நடத்தியபடி காட்டுக்குள் பின்வாங்கிக்கொண்டிருந்தபோது எங்கிருந்தோ வந்த இந்திய ராணுவத்தின் இரண்டு துப்பாக்கிக் குண்டுகளில் ஒன்று அவனது இடது கால் தொடைப் பகுதிக்கு மேலால் தசையைக் கிழித்துப் போக இன்னொரு குண்டு அதற்கும் மேல் பின் பகுதியில் புகுந்து உள்ளேயே நின்றுவிட்டது. “ஐயோ” எனக் கத்தியவன் பற்களை நெறுமியபடி கீழே இருந்துவிட்டான். குண்டடிபட்ட கவலையைவிட ஆமிக்காரன் பின்னாலை சுட்டு காத்தாலைகழுவ முடியாமல் பண்ணிட்டானே என்றதுதான் அவனுக்கு ஆத்திரமாக வந்தது.

அந்த மோசமான தாக்குதல்களுக்கு மத்தியிலும் மீண்டும் அவர்கள் பயணித்த டிராக்டரை காந்தன் மீட்டு வந்தான். காயமடைந்தவனைத் தூக்கி அதில் இருத்தி மீண்டும் பாதையைத் தேடிப் பிடித்துத் தண்ணி முறிப்பு முகாமுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அங்கு அவர்களால் முதலுதவி சிகிச்சை மட்டுமே கொடுக்க முடிந்தது. அங்கு வைத்து மேலதிக சிகிச்சை கொடுக்க முடியாத நிலைமை இந்தியாவுக்கும் அனுப்ப முடியாத நிலை. அதே நேரம் அவனது வெளித்தொடர்புகளும் தலைமைக்குத் தெரிந்திருந்தது. எனவே, அவனை அங்கிருந்து வெளியேறி சிகிச்சை பெற்றுக்கொண்டு மீண்டும் வரும்படி கட்டளை வந்தது.

அவனோடு சென்றிருந்த அதே குழுவில் காந்தனும் வவியனும் மீண்டும் அவனைத் தூக்கிக்கொண்டு வவுனியா நோக்கி பயணித்துத் தேசனின் முகாமுக்கு வந்து சேர்ந்தார்கள். அவனுக்குக் காயத்தில் இருந்து ரத்தம் தொடர்ந்து கசிந்துகொண்டே இருந்ததால் ஓமந்தை பகுதியில் இருந்த ஒரு தாதியிடம் காயத்துக்கு மருந்து கட்டிக்கொண்டு அவரிடம் மேலதிகமாக மருந்து, பண்டேஜ் எல்லாம் வாங்கிக்கொண்டு உடனடியாகவே அங்கிருந்து நீர்கொழும்பு நோக்கி பயணித்தார்கள்.

மதவாச்சிப் பகுதி வரை காந்தனும் வவியனும் அவனை நடுவில் இருந்தியபடி மோட்டார் சைக்கிளில் பாவற்குளம் பகுதிகள் ஊடாகக் குறுக்கு பாதைகளால் மதவாச்சி போய்ச் சேர்ந்தார்கள். மதவாச்சியில் அவனுக்குத் தெரிந்த ஒருவரின் வீட்டில் இருந்தபடி கொழும்புக்கு வினோதனோடு தொடர்புகொண்டு தொலைபேசியில் விவரங்களைச் சொன்னான். உடனடியாகவே அவனை ஏற்றிப்போவதற்காக வாகனம் அனுப்புவதாகவும், காலையில் வந்து சேரும் என்றும் தங்கியிருக்கும் இடத்தின் விலாசம் விவரங்களைப் பெற்றுக்கொண்டார். மறுநாள் இலங்கை அரச அதிகாரிகள் பாவிக்கும் ஜீப் ஒன்று முன்னால் சிங்கக் கொடி பறக்க, அவன் தங்கியிருந்த வீட்டுக்கு முன்னால் வந்து நின்றது. அதனை ஓட்டி வந்த சாரதி ஒரு சிங்களவர் கொஞ்சம் தமிழும் கதைப்பார். வந்தவர் சரியான ஆள்தானா என வினோதனுக்கு மீண்டும் தொலைபேசியடித்து உறுதி செய்தவன், காந்தனோடு ஜீப்பில் ஏறிக்கொள்ள வவியன் விடை பெற்றான். அவர்களின் வாகனத்தை எந்தச் சோதனைச் சாவடியிலும் இலங்கை காவல் துறையினர் நிறுத்தவில்லை. வாகனம், நீர்க்கொழும்பு கடற்கரை வீதியில் உள்ள ஓர் ஆடம்பர வீட்டில் அவர்களை இறக்கிவிட்டுப் போனது. அந்த வீடு ஊர்க்காவல் துயையைச் சேர்ந்த பிரபல வியாபாரிகளான சீனி சண்முகத்தின் சகோதரர் நல்லதம்பியினுடைய வீடு.

சண்முகம் பின்னர் அன்றைய இலங்கை அதிபராக இருந்த பிரேமதாசாவுடன் முரண்பட்டதால் சொத்தி உபாலி மற்றும் சுது மாத்தையா என்கிற பாதாள உலகக் குழுவினரை பாவித்துப் பிரேமதாசா போட்டுத் தள்ளிவிட்டு அதனை அந்தக் கொலையை ஜே.வி.பி–யினரின் தலையில் கட்டிவிட்டிருந்தார் (அடிக்குறிப்பு)

நீர் கொழும்பு வந்ததும் கடவுச்சீட்டு எடுக்கும் வேலை ஆரம்பமானது. இதற்காக கால தாமதம் செய்ய முடியாது. அவசரமாக எடுக்க வேண்டும். கடவுச்சீட்டுக்கு அடையாள அட்டை வேண்டும். இந்தச் சில்லறை வேலைகளில் தான் இறங்க முடியாது என்றும் அந்த வேலைகளில் இறங்கி ஏதாவது பிசகினால் தனக்குக் கெட்ட பெயர் வந்துவிடும் என வினோதன் சொன்னார். இதற்காக நிறையப் பேர் கொழும்பில் இருந்தார்கள். அவர்களில் பலரை அவருக்குத் தெரியும். ஒருவனைப் பிடித்தார். அவனுக்கு

அந்த ஆளை தெரியும். ஆலங்குழாயைச் சேர்ந்தவர். புளொட் அமைப்பின் அரசியல் துறை பொறுப்பாளராக இருந்தவர். புளொட் இயக்கத்தைக் கலைத்த பின்னர் அதில் இருந்து விலகி கொழும்பு புற்கோட்டை கேசர் வீதியில் பயண முகவர் அலுவலகம் திறந்திருந்தார். அன்றைய காலத்தில் அடையாள அட்டை கடவுச்சீட்டு எடுப்பதற்கு மாதக்கணக்காகும். ஆனால், அவரோ பிடிக்க வேண்டியவர்களைப் பிடித்துக் கொடுக்க வேண்டியதை கொடுத்து இரண்டு வாரத்துக்குள் அனைத்தும் கையில் கொடுத்தார். கூடவே, சிங்கப்பூருக்கான டிக்கெட்டும்.

அதுவரை ஒவ்வொரு நாளும் மருந்து கட்டியபடி, வலிக்குளிசைகளோடும் நாட்களைக் கடத்திக் கொண்டிருந்தான். ரத்தக்கசிவு நின்றபாடில்லை. கொழும்பில் ஏதாவது ஒரு வைத்தியசாலையில் சிகிச்சை பெறமுடியுமா என்றும் பரிசீலித்தார்கள். அது பெரிய சத்திர சிகிச்சை என்பதாலும், இலங்கை அரசும் கண்ணுக்குள் எண்ணெய்விட்டபடி புலிகளைத் தேடிக் கொண்டிருந்ததாலும். அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. விரைவாக நாட்டைவிட்டு வெளியேறு வதற்கான ஒரே வழியென அதற்கான வேலைகள் நடந்தன.

மீண்டும் ஒருநாள் அந்த ஜீப்பை அவன் தங்கியிருந்த நீர்க்கொழும்பு வீட்டுக்கு வந்தது. அதே வாகனச் சாரதிதான். அவன் வரவும், வினோதனிடம் இருந்து தொலைபேசி அழைப்பு வரவும் சரியாக இருந்தது. வினோதன் எல்லாவற்றையும் பக்காவாகத் திட்டமிட்டுத்தான் காரியமாற்றுகிறான் என நினைத்துகொண்டான். “ஏயாபோட்டிலை எந்தப் பிரச்னையும் இல்லை நான் சொல்லுற நம்பர் இமிக்கிரேஷனுக்குள்ளாலை போ. அதே நேரம் முடிந்த அளவு காயத்தைக் காட்டிக்கொள்ளாமல் நடக்கப்பார்” என்றவர் ஓர் இலக்கத்தைச் சொன்னார். காலில் இருந்து ரத்தக்கசிவு வந்தால் வெளியில் தெரிந்துவிடாமல் இருக்கக் காயத்தின் மீது பாலித்தீன் போட்டு ஒட்டி பண்டேஜ் சுற்றிக் கட்டினான்.

சிறிய பயணப் பொதியைத் தயார்செய்து காந்தனோடு ஜீப்பில் ஏறி அமர்ந்திருந்தான். கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் இறுதிச் சோதனைசாவடியில் காந்தன் இறங்கி விடை பெற்றான். விமான நிலையத்தில்

அவனை இறக்கிவிட்ட சாரதி, அவனது பெயர் எழுதிய சில பயணக் காசோலைகளைக் கையில் திணித்துவிட்டுக் கை காட்டிவிட்டு போய்விட்டான். குறிப்பிட்ட குடியகல்வு இலக்கத்தைப் பார்த்து வரிசையில் போய் நின்றான். கால் வலி. நடக்கச் சிரமமாக இருந்தது. இப்போது அவனது முறை. இதயம் கொஞ்சம் வேகமாகவே அடிக்கத் தொடங்கியது. கடவுச்சீட்டை நீட்ட அதை வாங்கிய அதிகாரி கீழே எதையோ குனிந்து பார்த்துவிட்டு ரப்பர் முத்திரையைக் குத்தினார். விமானத்தின் இருக்கையில் தொடர்ந்து இரண்டு மணித்தியாலங்கள் வலியைப் பொறுத்தபடி அசையாமல் இருப்பதே பெரிய பிரச்னையாக இருந்தது.

சிங்கப்பூரில் அவனை அழைத்துப்போவதற்காக ஒருவர் வந்திருந்தார். இருவருமாக ஒரு வாடகைக் காரில் ஏறிக்கொண்டார்கள். வாகனம் நேரடியாகச் சிங்கையின் பிரபல வைத்தியசாலை ஒன்றை நோக்கி போனது. ஆச்சர்யத்தோடு வானுயர்ந்த கட்டடங்களையும் நேர்த்தியான அழகான துடைத்து வைத்தது போன்ற சாலைகளையும் பார்த்துகொண்டிருந்தான். எல்லாமே வியப்பாக இருந்தது. எங்களுக்கும் நாடு கிடைத்ததும் இதுபோல எங்கடை நாட்டையும் கட்டியெழுப்ப வேண்டும் என்று மனதில் நினைத்தபடியே காரின் யன்னல் வழியாக இரண்டு பக்கமும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டேயிருக்க, கார் வைத்தியசலை வாசலில் வந்து நின்றது.

சத்திர சிகிச்சை முடிந்து கண் விழித்ததும் தாதி ஒருவர் சிறிய பிளாஸ்டிக் டப்பாவைக் கொண்டுவந்து நீட்ட அதை வாங்கிப் பார்த்தான். 7.62 Large ரகத் துப்பாக்கி ரவை அதில் இருந்தது. இந்தியனாமி எஸ்.எல்.ஆர் இல்லாட்டி எல்.எம்.ஜி யாலை சுட்டிருக்கிறான் நல்லவேளை தூரமா நிண்டு சுட்டிருக்கிறான். கால் எலும்பு உடையாமல் தப்பிவிட்டது. எலும்பை உடைக்காமல்விட்ட துப்பாக்கி ரவைக்கு நன்றி சொல்லி கண்ணில் ஒத்தி பாதுகாத்துக்கொண்டான். சில எக்ஸ்ரே கதிர் படங்களை எடுத்துக்காட்டிய தாதி, எலும்பில் வெடிப்பு ஏற்படுள்ளது. சில மாதங்களில் தானாக ஆறிவிடும் என்று ஆங்கிலத்தில் விளக்கம் கொடுத்தாள்.

ஒரு வாரம் வைத்தியசாலையில் இருக்க வேண்டும். அதே நேரம் சிங்கைக்கு இரண்டு வார கால விசாவே கொடுத்திருந்தார்கள். அவன் என்ன செய்யவேண்டும்

எங்கே போக வேண்டும் என்று எதையுமே அவன் தீர்மானிப்பதில்லை. யாராவது வருவார்கள். அவனது தேவைகளைக் கவனிப்பார்கள். அவர்கள் வரச்சொல்லும் இடங்களுக்குப் பின்னால் போவான். அவ்வளவுதான். இது போன்றவை அவனுக்குப் பழக்கப்பட்டுப்போனது என்பதால், யார், எவர், என்ன பெயர் என்று எதுவுமே அவனும் கேட்பதில்லை. 10 நாட்களின் பின்னர் ஒருவர் அவனைத் தாய்லாந்து போகும் விமானத்தில் ஏற்றிவிட்டார்.

பாங்காக்கில் வந்து இறங்கினான். தாய்லாந்தின் புறநகர் பகுதி வன்னியைப்போல இருந்தது, ஒரு சிறிய வீடு. சிறிய கலர் தொலைக்காட்சி, வீடியோ கேசட் பிளேயர்(டெக்), ஒரு டேப் ரெக்கார்டர், சில பாத்திரங்கள். அவனுக்காக அப்போதான் வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்தது தெரிந்தது. அவனை அங்கு கொண்டுவந்து இறக்கிவிட்டவர் சமையல் பொருட்களும், படுப்பதற்காகப் பாய் தலையணை எல்லாம் கொண்டுவந்து கொடுத்துக் கையில் கொஞ்சம் பாத்துக்களையும் (தாய்லாந்து பணம்) கொடுத்துவிட்டுப் போனான்.

வாழ்க்கையில் முதன்முதலாகத் தனியாகத் தங்கியிருக்கும் அனுபவம். அதுவும் தானே சமைத்து சாப்பிட வேண்டும். வாழ்க்கையே வெறுத்துப்போனது. அருகே வீடுகளில் இருந்தவர்களோடு கதைப்பதற்கு மொழி தெரியாது என்பதைவிடத் தேவை இல்லாமல் அக்கம் பக்கத்தோடு தொடர்பு வைக்க வேண்டாம் என்று வேறு எச்சரிக்கப்பட்டிருந்தான். சமைத்துச் சாப்பிடுவது, மருந்துக் குளிசையைப் போடுவது, தனது காயத்தைச் சுத்தமாக்கி மருந்து கட்டுவது, புரியாத மொழியில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பது, வீட்டுக்குள்ளேயே மெதுவாக நடப்பது இப்படியாக இரண்டு நாள் போய்விட்டன. கொண்டுவந்து விட்டவன் திரும்ப வருவானா இல்லை, இப்படியே அம்போ எண்டு விட்டிட்டு போயிடுவானா என்று யோசித்துக்கொண்டிருந்தான்.

ஒருநாள் திடீரென வந்து இறங்கினான். மோட்டார் சைக்கிளில் வந்தவன், சில தமிழ், ஆங்கிலப் படக் கேசட்டுகளையும் பணத்தையும் கொடுத்தான். தன்னால் அக்கடி வர முடியாது. எனவே, கால் நடக்கக்கூடியதாக இருந்தால் சிறிது தூரத்தில் இருக்கும் கடையில் போய்ச்

சமையலுக்கு வேண்டியவற்றை வாங்கச் சொல்லி பணத்தைக் கொடுத்தான். ஏதாவது அவசரம் என்றால் மட்டும் போனடிக்கச் சொல்லி ஓர் இலக்கத்தையும் கொடுத்தான். இரண்டு வாரத்துக்கு வர மாட்டடன், அதுவரைக்கும் அந்தப் பணத்தைச் சிக்கனமாகச் செலவழிக்கச் சொன்னவன், வெளியே போகும்போது பாஸ்போர்ட்டை மறக்காமல் கொண்டுபோகும்படி சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

ஒரு தனிவீட்டில் ஒன்றரை மாதங்கள் கழித்துவிட்டான். ஒருநாள் இன்னொரு புதியவன் வந்தான். அருகில் இருந்த புகைப்பட நிலையத்துக்கு அழைத்துச் சென்று, பாஸ்ர்போட் அளவு படங்களை எடுத்தனர். புகைப்படங்களைத் தன்னுடன் எடுத்துக்கொண்டு சென்றுவிட்டான். இரண்டு மாதங்களாகிவிட்டதால் அவனது காலும் காயம் மாறி நன்றாக நடக்கக்கூடிய நிலைக்கு வந்துவிட்டது. மீண்டும் பாங்காக் விமான நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டான். அவனது படத்தோடு வேறொரு கடவுச்சீட்டு. ஜெர்மனிக்கான விமான நிலைய டிக்கெட்டும் வழங்கப்பட்டது.

“ஜெர்மன் போனதும் இந்த இலக்கத்துக்குப் போனடி. ஒருவர் வந்து கூட்டிக்கொண்டு போய்ப் ஃபிரான்சிலை விட்டுவிடுவார். ஃபிரான்ஸ் போனதும் என்ன செய்யவேண்டும் என்று எல்லாம் அவர் சொல்லித்தருவார். அவரோடை தொடர்ந்து தொடர்பை வைத்துக்கொள். அதே நேரம் எவ்வளவு கெதியா ஃபிரெஞ்சும் ஸ்பானிஷும் படிக்க முடியுமோ அவ்வளவு கெதியா படிக்கச் சொல்லி மேற்படியான் உன்னட்டை சொல்லச் சொல்லிவிட்டவர். இப்போதைக்கு இதுதான் செய்தி. பிறகு என்ன செய்யவேணும் எண்டதை அப்பப்ப தகவல் வரும்” என்றபடி அவனை அழைத்து வந்தவர் விடைபெற்றார். அவனைச் சுமந்த தாய் ஏர்வேஸ் ஜெர்மன் பிராங்போட்டை நோக்கி வானில் கிளம்பியது.

# 30

ஜெர்மனியில் அவனை அழைத்துப் போக ஒருவர் வந்திருந்தார். ஊர்ப் பிரச்னைகள் இயக்க நிலவரங்களை ஆர்வத்தோடு கேட்டார். இரண்டாம் உலக யுத்தத்தில் ஜெர்மனி சந்தித்த அழிவு அதன் பின்னர் அதன் வளர்ச்சி பற்றி விரிவாகக் கதைத்துகொண்டு வந்தார். ஜெர்மனியின் அகன்ற அதிவேக வேக சாலைகள் கட்டடங்களையெல்லாம் காட்டி, “எங்கடை நாட்டையும் இப்பிடித்தான் கட்டியெழுப்பவேணும். அது தம்பியாலைதான் முடியும்” என்றார். இயக்கத்தின் பழைய உறுப்பினர்களைப் பற்றியெல்லாம் கதைத்துக்கொண்டு வந்தபோதுதான் அவரும் இயக்கத்தின் ஆரம்பகால உறுப்பினர் ஒருவர் என்பது அவனுக்குப் புரிந்தது. சாபுறுக்கன் என்கிற பகுதியில் கொண்டுபோய் அவனை இறக்கிவிட்டவர், இதை ஃபிரான்சிலை செலவுக்கு வைச்சிரு என்று அவனது கையில் ஆயிரம் டொச் மார்க் (பழைய ஜெர்மனிய பணம்) கையில் கொடுத்து, தனது தொலைபேசி இலக்கத்தையும் கொடுத்தார். “உன்னை ஃபிரான்சிலை ஒரு வீட்டிலை கொண்டுபோய் விடுவினம். பிறகு நீதான் உன்ரை வழியைப் பார்க்க வேணும். ஆனா, அடிக்கடி என்னோடை தொடர்பிலை இரு” என்றபோதுதான் அவரது பெயரை இதுவரை கேட்காமல்விட்டது உறைத்தது. கேட்டான். “என்ரை பேர் நடா” எனச் சுவாரஸ்யம் இல்லாமல் சொல்லிவிட்டுப் போனார்.

இவன் போன இரண்டு அடுக்குகளைகொண்ட வீட்டில் அனைத்து அறைகளிலும் எம்மவர்கள்

அடித்துப்பிடித்துகொண்டு குடியிருந்தார்கள். ஆண்கள் பெண்கள் என ஒரு கும்பலே இருந்தது. அவர்கள் சுவிஸ், ஃபிரான்ஸ், கொலண்ட், இங்கிலாந்து என்று போவதற்காகத் தங்கியிருந்தார்கள். அது ஒரு பிரபல ஆட்கடத்தல்காரரின் வீடு என்பது அப்போது அவனுக்குப் புரிந்திருந்தது. கொஞ்சம் மது போதையில் தள்ளாடியபடி வந்த ஒருவர் "எல்லாரும் கவனமா கேளுங்கோ. மாமா வாறான் எண்டு சத்தம் கேட்டால் எல்லாரும் கீழை ஓடிப்போய்ப் பின்னாலை உள்ள காட்டுக்கை மரங்களுக்குப் பின்னாலை ஒளிச்சிடவேணும். பிறகு விசில் சத்தம் வந்தாப் பிறகுதான் உள்ளை வரவேணும். உங்களுக்காக நான் சென்றி போட்டிருக்கிறன்" என்றார். அடக் கடவுளே ஊர்லதான் சென்றி எண்டால் ஜெர்மனியிலையுமா எண்டு நினைத்தவன், அவனுக்காகக் கொடுக்கப்பட்ட அறையில் போய்ப் பார்த்தான். சில ஆண்களும் பெண்களும் தமிழ்ப் படம் ஏதோ பார்த்துக்கொண்டு இருந்தார்கள். தனக்குக் கிடைத்த இடத்தில் உடுப்புப் பையைப் போட்டுவிட்டுப் படுத்துக்கொண்டான். இரவு 10 மணியளவில் அவனைத் தவிர மற்றவர்கள் அனைவரையும் அழைத்துப் போய்விட்டார்கள் அவர்கள் சுவிஸுக்குப் போகவேண்டியவர்கள்.

ஃபிரான்ஸுக்குப் போவதற்கு மேலும் ஆட்கள் சேர வேண்டும் என்பதற்காக அவன் இரண்டு நாட்கள் அங்குத் தங்கவேண்டி வந்தது. உணவு நேரத்துக்கு ஒருவர் கொண்டுவந்து கொடுத்துவிட்டுப் போவார். வீட்டைவிட்டு வெளியே போகக் கூடாது. எனவே அங்கு இருந்த வீடியோ கேசட்டுகளை மாத்தி போட்டு பார்த்துக்கொண்டிருந்தபோதுதான் ஒரு நீலப்படக் கசட் அகப்பட்டது. கதவை உள்பக்கமாகப் பூட்டி சத்தத்தைக் குறைத்து வைத்து பார்த்தபடி லேசாகக் கட்டிலில் சரிந்தபோது கதவு தட்டப்பட்டது. அவசரமாகப் படத்தை நிறுத்திவிட்டு கதவைத் திறந்தான். "தம்பி வெளிக்கிடும். ஃபிரான்ஸுக்கு இன்னொரு காரொண்டு போகுது. கொண்டுபோய் ஏத்திவிடுறன்" என வாட்டசாட்டமான ஒருவர் நின்றார். படத்தைப் பார்த்துவிட்டு ஆறுதலாகவே ஃபிரான்ஸுக்குப் போயிருக்கலாம் என மனதுக்குப்பட்டது. உடுப்புப் பையைத் தூக்கிக்கொண்டு புறப்பட்டான்.

அவனோடு மேலும் இரண்டு பேரை ஏற்றியபடி இரவிரவாகக் கார் ஓடியது. பாரிஸில் ஓர் இடத்தில் மற்றவர்களை இறக்கிவிட்டுத் தொடர்ந்து ஓடியது.

அதிகாலையளவில் ஒரு கட்டடத்தின் முன்னால் நின்றது. அங்குதான் அவன் இறங்க வேண்டும். கார்க்காரன் போய்விட்டான். அவனை அழைத்துபோக அங்கு ஒருவர் காத்திருந்தார். இவனை அடையாளம் கண்டு, கைலாகு கொடுத்து அருகில் இருந்த மாடிக் கட்டடத்துக்கு அழைத்துச் சென்றார். கட்டடத்தின் முதலாம் மாடியில் ஏறி கதவைத் திறந்தார். வாசலில் சப்பாத்துக்கள் குவிந்துபோய்க் கிடந்தன. ஒருவருக்கு இத்தனை சப்பாத்துக்களா? வசதியான ஆளாக இருப்பாரே என நினைத்து உள்ளே எட்டிப் பார்த்தான். நான்கு மீட்டர் நீளம், நான்கு மீட்டர் அகலம் கொண்ட ஓர் அறை. ஒரு மின் விளக்கு மின்னிக்கொண்டிருந்தது. பலர் நல்ல நித்திரையில் இருந்தார்கள். மெல்லிய வெளிச்சத்தில் படுத்திருந்தவர்களை எண்ணிப்பார்த்தான். 18 பேர். அவனை அழைத்து வந்தவர் 19–வது. இப்போது அவனோடு சேர்த்து 20. தம்பி சப்பாத்தைக் கழட்டிப்போட்டு வாரும் என்றார் அழைத்துப்போனவர். சப்பாத்தை கழற்றிவிட்டு உள்ளே நுழைந்தான்.

“தம்பி சாப்பிட்டாச்சோ” என்றார். அவனுக்குப் பசியாக இருந்தது.

“இல்லை சாப்பிடேல்லை. ஆனா, பரவாயில்லை” என்றான்.

“சாப்பாடு இருக்கு. குசினிக்கை வாரும். கவனம் ஒருத்தரையும் உழக்கிப்போடாமல் பத்திரமாய் வாரும்” என்றவர், படுத்திருந்தவர்களின் கால்களுக்கு இடையால் கவனமாகக் கடந்துபோனார்.

அவரைப்போலவே பின்தொடர்ந்தான். அடுத்தப் பக்கம் சிறியதொரு குசினி. அதற்குள் போனதும் லைட்டைப் போட்டார். அது இரண்டுக்கு இரண்டு நீளம் அகலம். அங்குச் சாப்பாடு இருந்த அடுப்பில் இருந்த கரப்பான் பூச்சிகளுக்கு வெளிச்சம் அலர்ச்சியைக் கொடுக்க மறைவிடம் தேடி ஓடத் தொடங்கின. சிலதை அவரே கைகளால் தட்டி காலால் நசித்தார். பக்கத்தில் குளியல் தொட்டி அதைக் காட்டி அந்தக் கட்டிலை இருங்கோ என்றார்.

மெல்லிய சிரிப்புடன், “ஏதும் பாவிக்கிற பழக்கம் இருக்கோ” என்றார்.

அந்தச் சூழ்நிலை, ஓடிய கரப்பான் பூச்சிகள் அவை ஏறிய விளையாடிய உணவை உண்ண வேண்டும். அதற்குப் பிறகு

நித்திரை கொள்ளவேணும். இதையெல்லாம் நினைத்தவன், "ஓ மண்ணைப் பாவிக்கிறனான்" என்றான்.

பிளாஸ்டிக் பெட்டியில் இருந்த ஒரு பெரிய பியர் போத்தலை எடுத்து மூடியை பல்லால் கடித்து உடைத்து அவனிடம் நீட்டினார். சோற்றையும் கறியையும் ஓர் அலுமினிய சட்டியில் போட்டு சூடாக்கி குழையல் போலப் போட்டுக் குடுத்தார். "தம்பி சாப்பிட்டிட்டு இங்கே கழுவு" என்று குளிக்கிற தொட்டியைக் காட்டிவிட்டுப் படுக்கப் போய்விட்டார்.

அங்கே இன்னுமொரு பியர் இருந்தது. அதையும் குடித்தவன், சாப்பாட்டைச் சிரமப்பட்டு மிண்டி விழுங்கிவிட்டுக் கோப்பையைக் குளியல் தொட்டியில் போட்டவன் தனது உடுப்புப் பையைத் தலைமாட்டில் வைத்தபடி குசினிக்குள் படுத்து நித்திரையாகிபோனான்.

# 31

அவனும் ஃபிரான்சில் விசா கேட்ட பின்னர் அகதி நிலையைப் பதியவேண்டும். அதற்காக அகதிகளின் கோரிக்கைகளைப் பரிசீலிக்கும் நிறுவனமான O.F.P.R.A.வுக்குத் தாங்கள் தங்கள் நாடுகளில் வசிக்க முடியாத தனிப்பட அவர்களுக்கான பாதுகாப்பு அல்லது உயிர் வாழ முடியாத காரணங்களைத் தெளிவாக அதுவும் ஃபிரெஞ்சு மொழியில் எழுதி அனுப்பவேண்டும். அன்றைய காலங்களில் தமிழ் ஃபிரெஞ்சு மொழிபெயர்ப்பு செய்யும் எம்மவர்கள் யாரும் ஃபிரான்ஸில் கிடையாது. சில பாண்டிச்சேரித் தமிழர்களே மொழிபெயர்ப்புச் செய்துகொண்டிருந்தார்கள். எமது தமிழில் எங்கள் பிரச்னையை எழுதிக்கொண்டு போய்க் கொடுத்தால், அதைச் சரியாகப் புரிந்துகொள்ளாத பாண்டிச்சேரி தமிழர்கள், தங்களுக்குத் தெரிந்த முறையில் மொழிபெயர்த்து தந்துவிடுவார்கள். கடைசியில் நாங்கள் சொல்ல வந்த விஷயம் வேறாகவும், அவர்களது மொழிபெயர்ப்பு வேறாகவும் இருக்கும். இதனால் பலருக்கு விசாவே கிடைக்காமல்போன சம்பவங்களும் நடந்திருந்தன. இதனால் அவன் தன்னுடைய அகதிக் கோரிக்கையை ஆங்கிலத்தில் எழுதி பின்னர் ஃபிரெஞ்சில் மொழிபெயர்த்து அனுப்பலாம் என நினைத்திருந்தான். அவனுக்கு ஆங்கிலத்தில் ஓரளவு புலமை இருந்தாலும் அகதி கோரிக்கையை எழுதும் அளவுக்குப் புலமை கிடையாது. என்ன செய்யலாம் என யோசித்தபோதுதான் அவனுக்கு ஃபிரான்ஸில் வசித்த ஜேம்ஸ் பாதிரியாரின் ஞாபகம்

வந்தது. பலரையும் தொடர்புகொண்டு பாதிரியாரின் தொலைபேசி இலக்கத்தை எடுத்தான். பாதிரியார் மன்னாரைச் சேர்ந்தவர். பாதிரியார், வசாவிளான் சந்தியில் அச்சுவேலி நோக்கி செல்லும் வீதியில் தோலகட்டி என்னும் இடத்தில் இருந்த கத்தோலிக்கக் குருமார் மடத்தில் இருந்தவர். 85-ம் ஆண்டின் நடுப்பகுதியில் யாழ்குடாவின் அனைத்து ராணுவ முகாம்களும் பல இயக்கங்களின் தாக்குதல்களினால் ராணுவம் முகாம்களில் முடங்கத் தொடங்கியிருந்த காலம். பலாலி முகாமின் முக்கிய வீதியான யாழ் பலாலி வீதியை மறிந்து வாசாவிளான் சந்தியில் காவல் நிலைகளைப் போட்டு ராணுவம் வெளியேறாதபடி கண்ணிவெடிகளைப் புதைக்குமாறு கிட்டுவால் சிறிய கெரில்லா குழுவுக்கு வேண்டியதான ஒரு எல்.எம்.ஜி., ஒரு ஆர்.பி.ஜி. என்பனவற்றோடு ஏ.கே-47 என இலகு ரக ஆயுதங்களோடு அனுப்பப்பட்ட 20 பேர் கொண்ட குழுவில் அவனும் ஒருவன். அவனது வேலை, கண்ணிகளைப் புதைப்பதுதான். ஆனால், அவர்கள் அங்குச் சென்றபோது வசாவிளான் சந்தியில் புளொட் அமைப்பினர் காவல் நின்றிருந்தார்கள். அவர்களின் முகாம்கள் ஒட்டகப்புலத்திலும் குட்டியப்புலத்திலும் அமைந்திருந்தன.

அவனது குழுவுக்குத் தலைமை தாங்கிப்போயிருந்த கோணேஸ் புளொட்காரரிடம் போய்க் கதைத்து நாங்கள் பலாலி ராணுவத்தினர் வெளியேறாமல் தடுப்பதற்காகக் காவல் நிலை அமைக்க வந்திருப்பதாகத் தெரிவித்தான். புளொட் காவல் நிலைக்குப் பொறுப்பாக இருந்த அரியம் என்பவர் எங்கள் பொறுப்பாளரிடம் போய்க் கேளுங்கள் என்றார். ஒட்டகப்புலத்தில் இருந்த அவர்களது முகாமுக்குப் போய் அந்த முகாம் பொறுப்பாளர் அப்பி என்பவரோடு கதைத்தார்கள். எங்களுக்கு ஏதாவது உதவி தேவைப்பட்டால் கேட்கிறோம் நீங்கள் போகலாம் என்று அனுப்பிவிட்டார். அந்தப் புளொட் முகாமில் சுமார் 60பேர் வரை இருந்தார்கள். ஆனால் அவர்களிடம் ஒரேயொரு எஸ்.எல்.ஆர் துப்பாக்கியும், பல கைக்குண்டுகளும் மட்டுமே இருந்தன. முழு ஆயுதபாணிகளாக நின்றிருந்த புலிகளை ஆச்சர்யத்தோடும் அச்சத்தோடும் புளொட் உறுப்பினர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். தேவைப்பட்டால் கூப்பிடுங்கள் இந்த ஊரில் நாங்கள் முகாம் அமைக்கிறோம்

எனக் கூறிவிட்டுப் புளொட் முகாமுக்கு அருகிலேயே சுமார் ஒரு கிலோமீட்டர் தூரத்தில் ஒட்டகப்புலத்தில் யாருமற்றிருந்த வீட்டை உடைத்து அதில் முகாம் அமைத்தார்கள். அந்தப் பகுதி மக்கள் முழுக்க முழுக்கப் புளொட் ஆதரவாளர்களாகவே இருந்தார்கள். புலிகள் அங்குப் போய் முகாம் அமைத்தது அங்கு யாருக்கும் விருப்பமானதாக இருக்கவில்லை. அங்குள்ள பொதுக் கிணறு ஒன்றில் புலிகள் தண்ணீர் அள்ளியதை பார்த்ததும் ஊர்க்காரர்கள் அங்குத் துலாவில் கட்டியிருந்த வாளியை கழற்றிக்கொண்டு போன சம்பவமும் நடந்தது.

புலிகள் முகாமை அமைத்து முகாமுக்கான காவல் நிலையை மட்டும் அமைத்துவிட்டு இருந்த ஒருநாள் காலை வசாவிளான் சந்தியில் துப்பாக்கி சூட்டுச் சத்தங்கள் கேட்கத் தொடங்கின. அங்குக் காவல் கடமையில் நின்றிருந்த புளொட் அமைப்பை சேர்ந்தவர்கள் கைக்குண்டுகளை வெடிக்கவைத்துவிட்டு, “ஆமி வாறான் ஓடுங்கோ” எனக் கத்தியபடி சைக்கிளில் அச்சுவேலி நோக்கி சைக்கிளில் ஓடிக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்குப் பின்னால் பொதுமக்களும் ஓடிக்கொண்டிருக்க, கத்தோலிக்கக் குருக்களும் பல பொதுமக்களும் தேவாலயத்தில் புகுந்திருந்தார்கள். அதே நேரம் ஆயுதங்களோடு புலிகள் வசாவிளான் சந்திநோக்கி ஓடிப்போனவர்கள், ராணுவத்தோடு மோதத் தொடங்கினார்கள். சில மணி நேரம் நடந்த சண்டையில் புலிகள் அமைப்பின் ஆதரவாளரான முருகதாசன் என்பவர் இறந்துபோக, ராணுவத்தினர் சிலரும் கொல்லப்பட ராணுவம் பலாலிக்குள் திரும்பிப் போனது. ஆனால், பலாலியில் இருந்து ராணுவம் வெளியேறி வந்துகொண்டிருக்கும்போது கத்தோலிக்க மடத்தில் இருந்தவர்கள் தேவாலயத்தில் புகுந்துகொள்ள மடத்தில் ஓர் ஊழியர் மட்டும் தங்கியிருந்திருக்கிறார். அவரை ராணுவம் சுட்டுக்கொன்றுவிட்டு போயிருந்தார்கள். பின்னர் புலிகள் அவரது உடலையும் எடுத்துப் பாதிரியார்களிடம் ஒப்படைத்திருந்ததோடு வசாவிளான் சந்தியில் தங்கள் புதிய காவல் நிலைகளை அமைத்து, கண்ணிகளையும் புதைத்தார்கள்.

அதற்குப் பின்னர் புளொட் அமைப்பினர் அங்கு வரவில்லை. ராணுவம் வந்தபோது அவசரத்தில் தங்களிடம்

இருந்த ஒரேயொரு எஸ்.எல்.ஆர் துப்பாக்கியையும் கைவிட்டுவிட்டு ஓடியிருந்தார்கள். அதற்குப் பின்னர் புளொட் அமைப்பிலும் உள்மோதல்கள் ஏற்படவே அங்கிருந்த தங்கள் முகாமையும் கலைத்துவிட்டுப் போய்விட்டார்கள். அப்போது அந்தக் கத்தோலிக்க மடத்தில் இருந்த ஜேம்ஸ் பாதிரியாரோடு அவனுக்குப் பழக்கம் ஏற்படத் தொடங்கியிருந்தது. அங்கே அருகிலேயே கத்தோலிக்கத் திருக்கன்னியர் மடம் ஒன்றும் இருந்தது. அதில் திருக்கன்னிகையாக இருந்த மன்னாரைச் சேர்ந்த ஒருவருக்கும் இந்த ஜேம்ஸ் பாதிரியாருக்கும் காதல் ஏற்பட்டிருந்தது. அவர்கள் தங்கள் துறவத்தையும் மதப் பதவிகளையும் துறந்து ஃபிரான்ஸுக்கு வந்து திருமணம் செய்து வாழ்ந்துகொண்டிருந்தார்கள். அந்தப் பாதிரியாரைத்தான் அவன் தேடிப் பிடித்துத் தன்னுடைய அகதி கோரிக்கையை ஆங்கிலத்தில் எழுதித் தரும்படி கேட்டிருந்தான். அதைப் பின்னர் ஃபிரெஞ்சு மொழியில் மொழிபெயர்த்து அகதி அந்தஸ்து பரிசீலனைக்காக அனுப்பினான்.

அவனது அகதிக் கோரிக்கை மூன்று மாதங்களுக்கு உள்ளாகவே பரிசீலிக்கப்பட்டுக் கோரிக்கையும் ஏற்கப்பட்டு நிரந்தர வதிவிட அனுமதியும் வழங்கப்பட்டது. பெரியதொரு பிரச்னை முடிந்துவிட்டது. நிரந்தர வதிவிட உரிமை கிடைத்ததால் அரச உதவிப் பணம் பெற முடியும். இனி தங்குவதற்குத் தனியான ஓர் இடம் தேடிப் பிடிப்பதோடு படிக்கவும் தொடங்க வேண்டும். காலில் முதல் காயம்பட்ட இடத்தில் மீண்டும் ஒரு சத்திர சிகிச்சையை முடித்துகொண்டான். பாரிஸ் புறநகர் பகுதியில் மாணவர்கள் மற்றும் தனியாக வாழ்பவர்கள் தங்கும் விடுதியில் இடமும் கிடைத்தது. Foyer என்றழைக்கப்படும் விடுதியில் சமையலறை, குளியலறை, கழிப்பறை என்பன பொதுவாக இருக்கும். சிறிய அறையில் அடுக்குக் கட்டிலில் இருவர் தங்கவேண்டும். அப்படியோர் அறை. அதுவும் இன்னொரு தமிழரோடு அறையைப் பகிர்ந்துகொள்ளவேண்டும். தமிழர் ஒருவர் கிடைத்து அவனுக்கு மகிழ்ச்சிதான். அவன் பெயர் வசந்தன். அவன் பகுதி நேரமாகப் படித்தபடி வேலையும் செய்துகொண்டிருந்தான். அடுத்ததாக இன்னோர் அறையில் தேவன் என்கிற இன்னொருவன். அவன் முழு நேரமாகப் பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருந்தான். இவர்கள்

மூவரும்தான் அங்கிருந்த தமிழர்கள். பாடசாலை ஆரம்பக் காலங்கள் ஃபிரெஞ்சு மொழி கற்பது கண்ணைக் கட்டி காட்டில் விட்டதைவிடக் கடினமாக இருந்தது. ஆனால், எப்படியாவது மொழியைப் படித்துவிட வேண்டும் என்ற ஆர்வத்தில் ஒரு மொழி படிக்கும் பாடசாலையில் பதிவுசெய்து சேர்ந்தவன் முதல் நாள் வகுப்புக்குச் சென்றிருந்தான்.

❍ ❍

# 32

படிக்கிற வேலையை ஊரிலையே ஒழுங்கா செய்திருக்கலாம். இப்ப இங்கே வந்து கொப்பியை தூக்கவேண்டியிருக்கு என்ற ஒரு சலிப்போடு அவனுக்கான வகுப்புக்குள் நுழைந்து ஒரு நோட்டம்விட்டான். அவனைப்போலவே ஃபிரான்ஸுக்குள் புதிதாக நுழைந்திருந்த பல வெளிநாட்டவர்களும் வயது வித்தியாசமின்றி வரிசையாக அமர்ந்திருந்தார்கள். வகுப்பின் கடைசியில் சேலையுடன் ஒரு பெண் கதைப் புத்தகத்தில் புதைந்துபோயிருந்தார். அவரது சுருள் முடி மட்டும் புத்தகத்துக்கு மேலால் தெரிந்தது. அவனுக்கு நலிமா ராணி நினைவுக்கு வந்தாலும் ‘சே... அவராக இருக்காது’ என்று நினைத்தபடி அருகில் போய்ப் பார்த்தான். அவர் கையில் இருந்த புத்தகம் தமிழ்ப் புத்தகம் என்கிறபடியால் தமிழர்தான் என முடிவெடுத்து வணக்கம் என்றான். புத்தகத்தைக் கீழ் இறக்கி நிமிர்ந்து பார்த்தார் இருவருக்குமே ஆச்சர்யம். அவர் நலீமாராணியேதான். எங்கேயோ இடையில் அறுந்துபோன நட்பு மீண்டும் ஏதோ ஒரு நாட்டில் மீண்டும் இங்கே தொடரத் தொடங்கியது.

அவனது நினைவுகள் அப்படியே மீண்டும் ஊரில் 82–ம் ஆண்டு அவனது பாடசாலைக் காலத்துக்குப் பின்நோக்கித் தள்ளப்பட்டது. அவன் பாடசாலைக் காலங்களில் வீட்டுக்குத் தெரியாமல் நண்பர்களுடன் களவாக யாழ் நகரப் பகுதிக்குப் போய்ப் படம் பார்ப்பது வழமை. வயதுக்கே உரித்தான குறும்பு அவனிடமும்

அவனது நண்பர்களிடமும் இருந்தது. அதுவும் யாழ் ரீகல் திரையரங்கில் வயதுக்கு வந்தவர்களுக்கு மட்டும் என்கிற அறிவிப்போடு போடப்படும் படங்களுக்குப் போக முயற்சித்து அரைக்கால்சட்டை போடாமல் சாரத்துடன் போய் வரிசையில் நின்று டிக்கெட் கொடுப்பவர் வயதை கேட்கும்போது கூட்டிச் சொன்னாலும் டிக்கெட் கொடுப்பவர் மேலும் கீழும் பார்த்துவிட்டு, “மீசையே முளைக்கேல்லை. உனக்கு இந்தப் படம் கேட்குதா” என்று துரத்திவிடுவார். அதற்காகவே கரியால் மெதுவாக மீசையைக் கீறிக்கொண்டுபோய் வரிசையில் நின்று டிக்கெட் எடுக்கும்போது வழிந்த வியர்வையில் கரி மீசை கரைந்துபோக, டிக்கெட் கிடைக்காது சில நேரங்களில் டிக்கெட் கிடைத்தாலும் வாசலில் டிக்கெட் கிழிப்பவர் டிக்கெடைப் பறித்துவிட்டு கலைத்துவிடுவார். பணமும் பறிபோய், படமும் பார்க்க முடியாமல் மனச்சோர்வு ஏற்பட்டாலும் சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தன் போல் மீண்டும் மீண்டும் முயற்சி செய்து ஒருசில படங்களைப் பார்த்துவிட்டிருந்தான்.

அப்படி ரீகல் தியேட்டரில் படம் பார்க்க முடியாமல்போன சந்தர்ப்பங்களில் வாடிய மனதை வளப்படுத்துவதற்காகப் போகும் இடம்தான் தென்கிழக்கு ஆசியாவிலேயே பெரிய நூலகம் என அறியப்பட்டுக் கம்பீரமாக நிமிர்ந்து நின்ற யாழ் நூலகம். அதுவும் தமிழ்நாட்டு எழுத்தாளர்களது புத்தகங்கள் அடங்கிய பிரிவுக்கே போய்ப் புத்தகங்களைப் படிக்கத் தொடங்குவான். ஆட்கள் நடக்கும் சத்தத்தைத் தவிர வேறு எதுவுமே கேட்காத அந்த அமைதியான சூழலின் நடுவே அந்தப் பகுதிக்கான நூலகர் மணலில் தலையைப் புதைத்த தீக்கோழியைப்போல் புத்தகம் ஒன்றில் முழுவதுமாக முகத்தைப் புதைத்து அவரது சுருள் தலைமுடி மட்டும் புத்தகத்துக்கு வெளியே தெரிய ஒருவர் அமர்ந்திருப்பார். யாராவது உள்ளே வரும்போதும் போகும்போதும் மட்டும் தலையைத் தூக்கி ஒரு புன்னகையை வீசும்போது மட்டுமே அவரது அழகிய முகத்தைப் பார்க்கலாம். அவர்தான் நலீமாராணி. தமிழ்நாட்டு பெரிய எழுத்தாளர்களது புத்தகங்களையே தேடிப் படித்துக்கொண்டிருந்த அவனுக்குப் பல ஈழத்து எழுத்தாளர்களையும் அவர்களது புத்தகங்களையும்

அறிமுகப்படுத்திப் படிக்கவைத்திருந்தார். அதே யாழ் நூலகம் எரிக்கப்பட்ட செய்தியறிந்து அடுத்தநாள் அதனைப் பார்க்க ஓடியவர்களில் அவனும் ஒருவன். புகைந்தபடியே குவிந்துகிடைந்த புத்தகச் சாம்பல் மேடுகளைத் தட்டிக் கிளறி பாதி எரிந்தும் எரியாமலும் கிடந்த புத்கங்களையும் எரியாது மிஞ்சிப்போன புத்தகங்களையெல்லம் ஓடியோடி அழுத கண்களோடு பொறுக்கிச் சேகரித்துத் கொண்டிருந்தவர்களில் நலீமாராணியும் புத்கங்களைப் பொறுக்கிக்கொண்டிருந்தார். எப்போதும் சிறிய புன்னகையோடு இருக்கும் அவரின் முகத்தில் அழுத கண்களோடு உறவு ஒன்றினை இழந்துவிட்ட சவக்களை மட்டுமே இருந்தது. மீதமிருந்த புத்தகங்களையெல்லாம் சேரித்துப் பின்னர் ஒரு சிறிய பகுதியில் வைத்து யாழ் நுலகம் இயங்கத் தொடங்கியிருந்தது. அங்கும் அவரே நூலகராக வேலையைத் தொடர்ந்துகொண்டிருந்தார். ஆனால், அவன் பின்னர் நூலகத்துக்குச் செல்வது குறைந்து காலப்போக்கில் 83-களின் பின்னர் அங்கு போகாமலேயே விட்டுவிட்ட பின்னர் நலீமாராணியை அவன் சந்திக்கவே இல்லை. இப்போது அவன் முன்னால். உலகம் எவ்வளவு விசித்திரமானது எனத் தனக்குத்தானே நினைத்துக்கொண்டான். இப்போது நலீமாராணிக்கு திருமணமாகி ஒரு பெண் குழந்தையும் பிறந்திருந்தது. அவனை வீட்டுக்கு அழைத்துக் கணவர் காதருக்கும் அறிமுகம் செய்து வைத்திருந்ததோடு நலீமாராணியின் குடும்பத்தோடு மீண்டும் ஓர் உறவாகிப்போயிருந்தான்.

# 33

வகுப்பு முடிந்த ஒருநாள் மாலை தனது விடுதிக்கு போவதற்காக நிலக்கீழ் ரயில் நிலையத்தில் நிறைந்த சன நெரிசலில் ரயிலுக்காகக் காத்திருந்த வேளை ரயில் வந்து கொண்டிருந்தது. தோளில் உள்ள பையில் Bazooka(பசூக்கா) குழாய் போன்றதொன்றை தாங்கியபடி அவள் படிகளில் வேகமாக ஓடியபடி இறங்கி வந்துகொண்டிருந்தாள். ரயிலில் ஏறிய அவனுக்கு ஓரமாக ஓர் இருக்கை கிடைத்துவிட அதில் அமர்ந்துகொண்டான். ரயிலும் சரியான நெரிசலாயிருந்தது. படிகளில் ஓடிவந்தவள் பாய்ந்து ரயிலில் ஏறிக்கொண்டாள். அவளையே கவனித்தபடி இருந்தவன், சன நெரிசலில் தனது தோளில் தொங்கிக்கொண்டிருந்த குழாய் நசிந்துவிடாமல் அதனைத் தனது மார்போடு அணைத்தபடி அதனைப் பாதுகாப்பதிலேயே கவனமாயிருந்தாள். அவள் அவனைக் கவனித்த நேரமாகப் பார்த்து அவளிடம் எனது இடத்தில் இருக்கப்போகிறாயா எனச் சைகையால் கேட்க அவளும் வேண்டாம் இதை வைத்திரு என்று கையில் இருந்த குழாயை அவனிடம் கொடுத்துவிட்டிருந்தாள். ரயில் பாரிஸைத் தாண்டி புறநகர் பகுதியில் ஓடத் தொடங்கியிருந்தது. இப்போது சன நெரிசல் குறைந்தது மட்டுமல்லாமல் அவனுக்குப் பக்கத்து இருக்கையில் இருந்தவரும் எழுந்து போக அதில் வந்து அமர்ந்தவள் நன்றி என்றபடி தனது குழாயை வாங்கிக்கொண்டாள்.

அவனுக்குள் இனம் புரியாத ஒரு மகிழ்ச்சி. வேகமாக ஓடிய ரயில் காற்று அடித்ததில் அவளது பொன்னிற தலை முடிகள் சில அவனது முகத்தில் தழுவிப் போகவே

பாரதிராஜாவின் படங்களில் வருகிற வெள்ளை உடைத் தேவதைகள் சிலர் ‘தந்தன தந்தன’ என்கிற கோரஸோடு ஆகாய வெளியில் ஸ்லோமோஷனில் தூக்கிக்கொண்டு போகத் தொடங்கியபோது அவனைத் திரும்பி பார்த்து, “நீ மொறிசியனா?” என்ற அவளது கேள்வியால் திரும்ப ரயில் இருக்கையில் தொம்மென வந்து விழுந்தவன், தட்டுத் தடுமாறி, “இல்லை ஸ்ரீலங்கா சிலோன் தமிழ் யவ்னா” என்றான். ஒன்றும் புரியமல் விழித்தவள், “இந்த நாடு எங்கே இருக்கு?” என்றாள். தன்னைச் சுதாரித்தவன், “இந்தியாவுக்குக் கீழே இந்து சமுத்திரத்தில் ஒரு தீவு தத்தளித்தக்கொண்டிருக்கே அதுதான் எனது நாடு” என்று தனக்குத் தெரிந்த ஃபிரெஞ்சு மொழியில் புரியவைத்தவன், “இந்தக் குழாயில் என்ன இருக்கு?” என்றான்.

அதற்கு அவள் சொன்ன பதில் ஒன்றும் புரியவில்லை. “ஓ படிக்கிறாயா” என்றவன், “நானும்தான் படிக்கிறன். ஆனால், இப்பிடி குழாயெல்லாம் தூக்கிற படிப்பு இல்லை. மொழி படிக்கிறேன்” என்று தனது புத்தகத்தைக் காட்டி புரியவைத்துவிட்டு அசடுவழிந்துகொண்டிருந்தபோதுதான் “டேய், அறிவு கெட்டவனே இவ்வளவு நேரமாகுது. முதல்லை அவளது பெயரைக் கேளடா’ என்று உள்மனது திட்ட, தலையைச் சொறிந்தபடி எனது பெயர் என்று தனது பெயரை சொல்ல அவளும் சிரித்தபடி “யூலியா” என்றாள். ஃபிரெஞ்சில் தொடர்ந்து கதைப்பது அவனுக்குச் சிரமமாக இருந்தது. அவள் படபடவென்று கதைத்தது பாதிப் புரியவில்லை. எனவே, அவளிடம் “உனக்கு ஆங்கிலம் தெரியுமா?”

“இல்லை கொஞ்சம் ஸ்பானிஷ் கதைப்பேன். ஆங்கிலம் இப்பதான் பழகுகிறேன். நீ ஸ்பானிஷ் கதைப்பாயா?”

“ஃபிரெஞ்சே இப்பதான் தொடங்கியிருக்கிறன். அதுவும் நீ இவ்வளவு வேகமாய்க் கதைச்சால் சுத்தம் ஒண்டுமே விளங்கேல்லை. இதுக்கை ஸ்பானிஷா அது இனிமேல்தான்.”

சிரித்தபடி “மன்னிக்கவும் நான் மெதுவாகக் கதைக்கிறேன்.”

“இந்தக் குழாய்க்குள் என்ன இருக்கு?” மீண்டும் கேட்டான்.

குழாயைத் திறந்து சுருளாக இருந்த சில மட்டைகளை விரித்து அதில் கீறியிருந்த படங்களைக் காட்டியபோதுதான்

அவள் கட்டடப் பொறியியல் படிக்கிறாள் என்பது புரிந்தது. அதுமட்டுமல்ல, அவன் இறங்கவேண்டிய தரிப்பிடத்தில் ரயில் நின்றது. இப்ப அறைக்குப் போய் என்ன வெட்டிப் புடுங்கிற வேலையா என நினைத்தவன், வரைபடங்களை ஆர்வமாகப் பார்ப்பதுபோல் பார்த்துக்கொண்டிருந்தான். ரயில் தொடர்ந்து ஓடத் தொடங்கியிருந்தது.

அடுத்தடுத்த நாட்களும் அவளுக்காகவே காத்திருந்தவன், ரயில் அவளோடு கடைசித் தரிப்பு வரை போய் பின்னர் மீண்டும் அடுத்த ரயிலை பிடித்து அவனது அறைக்குப் போகத் தொடங்கியிருந்தான். சில வாரங்கள் ஓடிப்போயிருந்தன. இப்போது தனியாக ரயில் பயணம் என்றில்லாமல் அவனும் யூலியாவும் வெளியிலும் சுற்றத்தொடங்கியிருந்தார்கள். யூலியாவிடம் தன்னுடைய காதலை சொல்ல வேண்டும் எனத் தீர்மானித்தான். ஆனால், எப்படிச் சொல்வது என்பதுதான் பிரச்னை. ஊரில் என்றால் கடிதத்தை எழுதி நண்பர்களிடம் கொடுத்துத் தூதுவிடலாம். ஃபிரெஞ்சுக் காரிக்கு தூது விடவும் ஏலாது. அதே நேரம் கடிதமாக எழுதிக் கொடுக்கிற அளவுக்கு ஃபிரெஞ்சு எழுதத் தெரிந்திருக்கவில்லை. எனவே, தேவனிடம் ஆலோசனை கேட்கலாம் என நினைத்தான். அதைவிடத் தேவனுக்கு அப்போது அவனோடு படிக்கும் ஒரு ஃபிரெஞ்சுக் காதலியும் இருந்தாள். ஆனால், தேவனின் ஆலோசனையோ “கடிதம் எல்லாம் எழுதி மெனக்கெடாதை. ஃபிரெஞ்சு ஸ்டைலில் ஒற்றைச் சிவப்பு ரோஜாப் பூ ஒன்றை வாங்கிக்கொண்டு போய் அவளிடம் ‘நான் உன்னைக் காதலிக்கிறேன்’ என்றபடி நீட்டு. சிரித்தபடி அவள் வாங்கினால் உடனேயே அவளைக் கட்டிப்பிடித்து அவளது உதட்டில் ஒரு முத்தம் கொடுத்துவிடு” என்றான். இது என்னவோ காதலைச் சொல்லக் கொடுத்த ஆலோசனை மாதிரி தெரியவில்லை. அடி வாங்கிக் குடுக்குறதுக்கு ஆலோசனை சொன்ன மாதிரி இருந்தது. “சரி அவள் பூவை வாங்காவிட்டால் என்ன செய்வது?” என்று தேவனிடம் கேட்டான். “அவள் பூவை வாங்காவிட்டால் நட்பாக மட்டும் பழகுகிறாள் என்று அர்த்தம். அப்படி அவள் மறுத்தால் நாகரிகமாக நீயும் நட்பாகப் பழகுவோம் என்றுவிட்டு அந்தப் பூவை உன்னுடைய காதில் வைத்துக்கொண்டு வந்துவிடு” என்றான்.

தேவன் சொன்னபடியே ஓர் ஒற்றை ரோஜாவை வாங்கிப் புத்தகப் பையில் பத்திரப்படுத்திக்கொண்டு

யூலியாவின் வருகைக்காகக் காத்திருந்தவன், அவளை நதிக்கரையோரமாக அழைத்துக்கொண்டு போயிருந்தான். ஆனால், பூவைக் கொடுத்து காதலை சொல்ல தயக்கமாக இருந்தது. வழைமையைவிட வார்த்தைகள் வெளிமர மறுத்துக்கொண்டிருந்தன.

"என்ன இன்று ஒரு மாதிரியாக இருக்கிறாய். ஏதாவது பிரச்னையா?" என யூலியாவே தொடங்கினாள். சுற்று முற்றும் பார்த்தான். யாரும் இல்லை அப்பாடா அடிவிழுந்தாலும் யாரும் பார்க்கமாட்டினம். அப்பிடியே ஆத்தங்கரை ஓரமாக ஓடிப்போயிடலாம் என்று நினைத்தபடி இதயத்துடிப்பு வேகமெடுக்க மெதுவாகப் புத்தகப் பையில் இருந்த சிவப்பு ரோஜாவை வெளியே எடுத்தான். பையில் இருந்ததால் பூ கொஞ்சம் வாடிப்போயிருந்தது. அவளுக்கு அருகில் நடந்துகொண்டிருந்தவன், திடீரென அவளுக்கு முன்னால் பாய்ந்து எதிராக நின்றபடி வாடிய பூவை நீட்டியபடி "யூலியா உன்னைக் காதலிக்கிறேன்" என்றான் (Je t'aime julia) ஃபிரெஞ்சில். பூவை வாங்காமல் கையை வாயில் வைத்து சிரித்தவள்,

"உனக்கென்ன பைத்தியமா?" என்றாள்.

பூவைவிட மோசமாக அவனது முகம் சட்டென்று வாடியது. ஆனாலும் சமாளித்தபடி "ஓம் யூலியா உன்மீது பைத்தியமாக இருக்கிறேன். இந்தப் பூவை வாங்கிக்கொள்" என்றான்.

"சரி வாங்கிக்கொள்கிறேன். அது உனது காதலை ஏற்று அல்ல. உன் மீது பரிதாபப்பட்டு. ஆனால், உன்னை எனக்குப் பிடித்திருக்கு. அது காதல் என்று சொல்ல முடியாது. இப்பதானே பழகத் தொடங்கியிருக்கிறோம். அது காதலாகச் சில நேரம் மாறலாம். மாறாமலும் போகலாம். ஆனால், அதுவரை நட்பாக இருப்போம்" என்றாள்.

'இப்பிடி குழப்புறாளே! பேசாமல் பூவை ஆத்திலையே எறிஞ்சிருக்கலாம்' என்று நினைத்தவன் 'சரி நட்பாக இருப்போம் என்றாளே வந்தவரை லாபம்' என நினைத்தவன், கொஞ்சம் சோகமாகவே அவளோடு நடக்கத் தொடங்கியிருந்தான். அன்றைய நிகழ்வுக்குப் பிறகு அடுத்தடுத்த நாட்கள் அவள் வழைமையைவிட அவனோடு நெருக்கமாக இருப்பதுபோலவே தெரிந்தது. அவன் அணியும் ஆடைகளின் நிறத்தில் இது பிடித்திருக்கு.

இது பிடிக்கவில்லை என்பதில் தொடங்கி அவனின் நடை, உடை, பாவனைகளில் அதிகளவு அக்கறை காட்டத் தொடங்கியிருந்தாள். ஆனாலும் காதலிக்கிறாளா இல்லையா என அவளைப் புரிந்துகொள்ள முடியாமல் இருந்தது. ஆனாலும் மகிழ்ச்சியாக இருந்தது. அப்படியே கடந்துபோன சில வாரங்களின் பின்னர் கோடைகால விடுமுறை தொடங்கும் முதல் நாள் வகுப்பின் இறுதி நாளன்று வகுப்புகள் முடிந்து அவனிடம் வந்திருந்தாள். வழமையான கலகலப்பு இல்லாமல், "ஒரு மாத விடுமுறை. நான் ஊருக்குப் போகவேண்டும்" என்றாள்.

"ஊருக்கா அது எங்கேயிருக்கு அப்ப இது உன்னுடைய ஊர் இல்லையா?"

"இல்லை நான் உறவினர் வீட்டில் இருந்துதான் இறுதி படிப்பைப் படித்தேன். எனது ஊர் கார்கசோன் அங்குதான் எனது குடும்பம் உள்ளது."

"அது எங்கே இருக்கு?"

"அது தெற்கு ஃபிரான்ஸில். அதை விடு. வழமையா ஊருக்கு போவதென்றால் மகிழ்ச்சியாகப் போவேன். ஆனால், இந்தத் தடவை சங்கடமாக இருக்கிறது."

அவனுடைய மனதுக்குள் மெதுவாக இளையராஜா கைகளை அசைக்கத் தொடங்க வயலின்களின் சத்தம் எழுவது போன்றதொரு பிரமை. அதை அடக்கியபடி "என்ன சங்கடம்?" என்றான்.

"உன்னைப் பிரிந்துபோவது சங்கடம்போல் இருக்கிறது. நானும் உன்னைக் காதலிக்கிறேன் என நினைக்கிறேன். நான் ஊருக்குப் போவதற்கு முதல் நாளையில் இருந்து 24 மணி நேரம் உன்னோடேயே கழிக்க விரும்புகிறேன். பகல் முழுவதும் உன்னோடு பாரிஸ் நகர் முழுதும் சுற்றுவோம். இரவு ஓர் இரவு விடுதியில் நன்றாகக் குடித்து நடனமாடிவிட்டு அன்றிரவு உன்னுடனேயே தங்கப்போகிறேன்" என்றுவிட்டுப் போய்விட்டாள்.

இப்போது மனதுக்குள் பறையடிக்கத் தொடங்கியிருந்தது. நடனம் ஆடியபடியே ஓடிப்போய்த் தனது அறை நண்பன் வசந்தனின் கையைப் பிடித்து அடுத்தநாள் இரவு வேறை எங்கேயாவது தங்கச் சொல்லிக் கெஞ்சிகேட்டிருந்தான். அடுத்த நாள் பகல் ஈஃபிள் கோபுரத்தின் மீது ஏறி நின்று

எந்தெந்த நாடுகள் எத்தனை கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது எனப் பார்த்தார்கள். செயின் நதி பாலத்தில் நின்று யாருடைய எச்சில் தூரம் போகிறதென்று எச்சில் துப்பிப் பார்த்துவிட்டுத் தங்கள் காதல் இறுக்கமாக இருக்கவேண்டும் என்று பாலத்தில் ஆமைப்பூட்டு வாங்கிப் பாலத்துக் கம்பிகளில் பூட்டினார்கள். வீதியோரக் கடைகளில் உணவு. இரவானது. இரவு விடுதியில் பியர் குடித்தபடி நடனம். அவனது ஒரு கை அவளது கையையும் மற்றைய கை அவளது இடையையும் பிடித்திருந்தது. நடனம் என்பது அவனுக்குத் தெரியாது. அவள் மீதான உரசல் நடனமானது. பியரைவிடப் போதையாக இருந்தது மட்டுமல்ல, நடனத்தைவிட விரைவாக அறைக்குப் போய்விட வேண்டும் என்கிற துடிப்பே அதிகமாக இருந்தது.

ஒரு மாதிரியாக நள்ளிரவு இறுதி ரயிலை பிடித்து அவனது அறைக்கு ஒரு கிலோமீட்டர் தூரம் நடந்துபோயிருந்தார்கள். சோர்ந்துபோய் அறைக் கட்டிலில் விழுந்தவள் கைகளை நீட்ட அவள் மீது விழுந்தவன் அவனினது கால் சட்டை பட்டியை அவிழ்க்கத் தொடங்கும்போது “ஏய் உன்னிடம் அது இருக்கா?”

“எது?”

“ஆணுறை...”

“இல்லையே”

“போய் வாங்கிகொண்டு வா..”

“இந்த நேரத்திலையா? போகணும் என்று தோணுறது எங்கே போறது என்று தெரியலையே?” என நினைத்தவன் தேவனின் நினைவு வந்தது. வார இறுதிநாள் அவனது நண்பி வந்திருப்பாள். கட்டாயம் அவனிடம் இருக்கும். நேரத்தைப் பார்த்தான். நள்ளிரவைத் தாண்டி அதிகாலை 2 மணி ஆகியிருந்தது. ஆபத்துக்குப் பாவமில்லை. எனவே கதவைத் தட்டுவதென முடிவெடுத்தான்.

கதவைத் தட்டியதும் அரைகுறை நித்திரையில் கதைவைத் திறந்த தேவன், பாதிக் கண்ணைத் திறந்தபடி “என்னடா இந்த நேரத்திலை. ஏதாவது பிரச்னையா?” என்றான்.

“பிரச்னை ஒண்டும் இல்லை. இரண்டு கொண்டொம் வேணும்” என்றதும் கண்ணை முழுவதுமாகத் திறந்தவன்

“என்னடா யாராவது தெருவிலை நிண்டதைகொண்டந்திட்டியா?”

“இல்லை மச்சான். யூலியா வந்திருக்கிறாள், அதுதான்” – தலையைச் சொறிந்தான்.

அவசரமாகப் போய் ஒரு பெட்டியைக் கொண்டுவந்து கொடுத்த தேவன், “இதிலை நாலு இருக்கு என்றவன் X.L அளவு மச்சான். உனக்குப் பெரிசாயிருக்கும்” சொல்லி சிரித்தான். அதற்குள் அவனுக்கு ஒரு பெருமை.

“எனக்கு XXL மச்சான். ஆனாலும் இழுத்துபோடுறன்” என்றபடி போய்விட்டிருந்தான்.

பகல் இரவானது. இரவு பகலானது. நேரத்தைப் பற்றிய கவலை இல்லை. அடுத்தநாள் இரவு அவள் விடைபெற்றபோது “உன்னைக் காதலிக்கிறேன்” என்று அவனது உதட்டில் உதடு பதித்துக் கண்கள் கலங்க விடைபெற்றாள்.

ஒரு மாத லீவு முடிந்து மீண்டும் வகுப்புகள் ஆரம்பித்திருந்தன. அவன் பாடசாலையில் படித்துப் பெற்ற மொழியறிவைவிட யூலியாவோடு கதைத்ததும் அவள் சொல்லிக் கொடுத்தும் நிறையக் கற்றிருந்தான். அவனும் அவளுக்கு ஆங்கிலம் சொல்லிக் கொடுத்திருந்தான். அதைவிட வார இறுதி நாட்களில் அவன் தனது அறை நண்பன் வசந்தனிடம் கெஞ்சி கூத்தாடவேண்டியும் இருந்தது.

❍ ❍

# 34

ஒருநாள் திடீரென அவனுக்கு ஓர் அறிவிப்பு வந்தது. புலிகளுக்கும் பிரேமதாசா அரசுக்கும் ரகசிய பேச்சுவார்த்தைகள் தொடங்கிவிட்டதாகவும் இயக்கத்தைவிட்டு விலகி தனிப்பட்ட வாழ்க்கையைத் தொடருவதானால் தொடரலாம் அல்லது வெளிநாடுகளில் வேலைத் திட்டங்களைச் செய்ய விரும்பினால் செய்யலாம் என.

அவன் மீண்டும் இயக்க வேலைகளுக்காகப் போவதற்குச் சம்மதம் என்று தெரிவித்திருந்தான். ஓரிரண்டு நாளிலேயே அவனது பெயருக்குச் சிங்கப்பூர் போவதற்கான விமான டிக்கெட் வந்தது. யூலியாவுக்கும் அந்த வருடத்தோடு படிப்பு முடிந்து ஊருக்குப் போய்விடுவாள். ஒரு வியாபார அலுவலாகச் சிங்கப்பூருக்குப் போவதாகச் சொல்லி அவளிடமிருந்து விடைபெற்றான்.

மீண்டும் ஒரு வருடம் கழித்துச் சிங்கப்பூர் செல்வது உண்மையில் மகிழ்ச்சியாகத்தான் இருந்தது. முதல் தடவை சிங்கப்பூர் சென்றபோது வைத்தியசாலையிலேயே கழித்திருந்ததால் வெளியே எங்கேயும் சுற்றி பார்க்கச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

அதே காலப் பகுதியில்தான் பிரேமதாசா அரசுக்கும் இயக்கத்துக்கும் ரகசிய பேச்சுவார்த்தைகள் பகிரங்கமாகத் தொடங்கியிருந்தது. சுவீடனில் தங்கியிருந்த தலைவரின் மனைவியும் இரண்டு பிள்ளைகளும் சிங்கை ஊடாகக் கொழும்புக்குப் புறப்பட்டிருந்தனர். பிரேமதாசா அரசில்

அங்கம் வகித்த ஏ.சி.எஸ்.க மீது அவர்களால் தொடர்பு ஏற்படுத்தபட்டு இலங்கை அரசோடு தொலைபேசி தொடர்புகள் மட்டும் வைத்துக்கொண்டிருந்த ஆன்டன் பலசிங்கம் அவரது மனைவியோடு பிரேமதாசா அரசோடு நேரடி பேச்சுவார்த்தைகளைத் தொடர்வதற்காகவும் கொழும்புக்குப் புறப்பட்டிருந்தார்.

இலங்கையில் இந்திய ராணுவம் ஆன்டன் பாலசிங்கத்தையும் அவரது மனைவியையும் தேடிக்கொண்டிருந்தபோது தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1987 மார்கழி 23-ம் தேதி மரணமடைந்திருந்ததார். அவரது மரணத்தையடுத்து இந்திய ராணுவம் அறிவித்த மோதல் தவிர்ப்பு அறிவித்தல் அன்று வடமராட்சி திக்கம் பகுதியில் இருந்து தப்பி சென்றவர்கள் தமிழ்நாட்டுக்குக் கடல்வழியாகச் சென்று பெங்களூரில் தங்கியிருந்தார்கள். ‘செத்தும் கொடுத்தான் சீதாக்காசி’ என்றொரு பழமொழி தமிழில் உண்டு. அதற்கு எம்.ஜி.ஆர் அவர்கள் ஓர் உதாரணம். புலிகள் அமைப்புக்கு எவ்வளவோ உதவிகள் செய்தவர், தனது மரணத்தின் மூலமும் ஓர் உதவியைச் செய்திருந்தார்.

இந்திய ராணுவம், ஆன்டன் பாலசிங்கம் அவர்களை இலங்கையில் வலைவீசித் தேடிக்கொண்டிருக்கும்போது அவர்கள் பெங்களூரில் யாரும் சந்தேகப்படாதபடி அவருக்கு நெருக்கமான காவல் துறை அதிகாரி ஒருவரின் உதவியோடு காவல் துறையினரின் குடியிருப்புப் பகுதி ஒன்றில் தங்கியிருந்தவர்கள், பின்னர் மீண்டும் சென்னை வந்து அங்கிருந்து லண்டனுக்குப் பயணித்திருந்தார்கள். ஆன்டன் பாலசிங்கம் அவர்களின் குடும்பம் மட்டுமல்லாது தலைமையின் குடும்பத்தினரையும் அவர்கள் இலங்கையைவிட்டு வெளியேறிய பின்னர் அவர்களைப் பத்திரமாக வெளிநாடுகளுக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தவர்கள், புலிகளின் வெளிநாட்டுக் கட்டமைப்பின் முக்கியமானதொரு பிரிவினரே. இப்போது அவர்கள் அனைவரும் மீண்டும் அதிஉயர் விருந்தாளிகளாக இலங்கை நோக்கி பயணத்தை மேற்கொண்டிருக்கிறார்கள்.

அப்படி இயக்கத்தின் முக்கியமானதும் ரகசியமாகவும் இயங்கிய அந்த வெளிநாட்டு கட்டமைப்புடன் இணைந்து வேலை செய்வதற்காகத்தான் இப்போது அவனும் ஃபிரான்ஸில் இருந்து புறப்பட்டுப் போயிருந்தான்.

அவனும் சிங்கை வந்ததிறங்கி, தன்னைச் சந்திப்பதாகச் சொன்னவருக்காகக் காத்திருந்தான். இந்தோனேசியாவில் இருந்து வந்த விமானத்தில் இருந்து இறங்கிய ஒருவர் அவனிடம் வந்தார். நெடிய கறுத்த உருவம். சுருள் முடி. கோட் சூட் அணிந்திருந்தார். சிரித்தபடி அவனிடம் வந்தார். "என்னோடை வாரும்" என்று இன்னொரு லோஞ்சுக்குள் அழைத்துச் சென்றார். "என்ன குடிக்கிறீங்கள்?" என்றார். பிளேன் டீ என்றதும், ஓடர் கொடுத்துவிட்டு "நான்தான் உதயன் உம்மடை கால் எப்பிடியிருக்கு. காது எல்லாம் சரியாயிட்டுதா" என்று விசாரித்த பொழுதே தன்னை பற்றிய அத்தனை விவரங்களும் அவர் கையில் உள்ளது என்று புரிந்தது.

அவரைப் பற்றி, அவரது சாகசங்கள் பற்றியெல்லாம் அவன் கேள்விபட்டிருக்கிறான். புலிகளின் சர்வதேசக் கட்டமைப்பு ஆயுதங்கள் வழங்கல்கள் என்பன அன்றைய காலத்தில் கே.பி கொம்பனி என்று அழைக்கப்பட்ட குமரன் பத்மநாதனின் பொறுப்பின் கீழ் இயங்கிக்கொண்டிருந்தன. அந்தப் பரந்த சர்வதேச கட்டமைப்பில் ஒரு சிறு பிரிவுக்குப் பொறுப்பாக இயங்கியவர்தான் உதயன் என்வர். பல மொழிகள் சரளமாகப் பேசக்கூடியவர். இந்த உலகப்பந்தில் அவர் கால்படாத இடங்களே இல்லையென்று கதை இருந்தது. இப்போது அவரே அவனுக்கு முன்னால் இருந்து கதைப்பது அவனாலேயே நம்ப முடியாத ஆச்சர்யமாக மட்டுமில்லாது, மகிழ்ச்சியாகவும் இருந்தது. ஃபிரெஞ்சு கதைக்கப் பழகிட்டியா என்று ஃபிரெஞ்சிலேயே கேட்டார். ஓமென்றவனுக்குப் ஃபிரெஞ்சிலேயே அவன் செய்யவேண்டி விஷயங்கள் பற்றி விவரித்தான். கையில் கொஞ்ச டொலர்களைக் கொடுத்துவிட்டு "கவனமாய்ச் செலவழிக்கவேணும். அடிக்கடி கேட்க்கக் கூடாது" என்று அவனது முகத்தை ஊடுருவி பார்த்தார். அவன் உணர்ச்சிகளை வெளிக்காட்டிக்கொள்ளாமல் இருந்தான். பிறகு ஒரு விலாசத்தைக் கொடுத்து, அங்குப் போய்ச் சந்திக்கும்படி சொல்லிவிட்டுப் புறப்பட்டார்.

வெளியே வந்து பஸ்சில் ஏறி அமர்ந்தான். யன்னலுக்குள்ளால் சிங்கப்பூரை மேய்ந்தான். இங்கு வருவது இரண்டாவது தடவை. முதல் தடவை வந்தபோது நான்கு நாட்கள் வைத்தியசாலையில். இரண்டு நாட்கள் விடுதி ஒன்றில் ஓய்வு. பின்னர் நாட்டைவிட்டு போய்விட்டான்.

பல மாடிகளைக்கொண்ட ஒரு வர்த்தக நிலையம். அதன் மாடிப் பகுதி ஒன்றில் இருந்த பெரிய எலெக்ட்ரானிக் கடைதான் அவன் தேடிப்போயிருந்த விலாசம். அங்கிருந்த பணியாள் ஒருவரிடம் 'அலி அகமத்' என்று கேட்டதும் கடைக்குள் இருந்த கண்ணாடி அலுவலகத்தைக் காட்டினான். ஆளைப் பார்த்ததும் முஸ்லிம் என்று தெரிந்தது. சிறு தாடியுடன் சிவந்த தடித்த மனிதர் ஒருவர் அமர்ந்திருந்தார். அலுவலகத்தினுள் நுழைந்தவன் தன்னை அறிமுகம் செய்தான். அவனுக்காகவே காத்திருந்தவர்போல, தயாராக வைத்திருந்த சில பத்திரங்களை எடுத்து நீட்டி, "நிரப்பி கையெழுத்து போட்டு குடுங்க தம்பி" என்றார். அவரது நடவடிக்கையில் ஓர் இயந்திரத்தனம் தெரிந்தது.

சிங்கையில் நீண்ட நாட்கள் தங்கவேண்டுமானால் ஒன்று வேலை அல்லது படிக்கிற விசா தேவை. அவன் வேலை எதுவும் செய்தாயில்லை. எனவேதான் இந்த ஏற்பாடு. மாணவ விசாவுக்கான அனுமதி பத்திரமும் எலெக்ரானிக் பொறியியல் படிப்பதற்குத் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றின் நுழைவு அனுமதி பத்திரங்களும் அவர் நீட்டிய கோப்பில் இருந்தன. விவரங்களைப் பதிந்து கையெழுத்திட்டு நீட்டினான். "போட்டோ" என்றார். எடுத்து நீட்டினான்.

"சரி தம்பி ஒரு வாரத்திலை வாங்க. எல்லாம் வந்திடும். என்ன தேவையென்னாலும் போனடிக்காதீங்க. நேரடியாவே வாங்க. நான் இல்லேன்னா அதோ அந்தப் பெண்கிட்டை விஷயத்தைச் சொல்லிட்டு போங்க" என்று கடையில் வரவேற்பு பகுதியில் இருந்த பெண்ணைக் காட்டினார்.

ஒரு விசிட்டிங் கார்டை எடுத்து நீட்டி, "இவரைப் போய்ப் பாருங்க. இவர் உங்களுக்கான அடுத்த ஒழுங்குகளைச் செய்து தருவார்" என்று சொல்லி அங்குபோவதற்கான வழியையும் சொன்னவர், சிறிது மௌனத்தின் பின்னர், "எப்பிடி போவிங்க?" என்றார்.

"பஸ்சிலைதான்" என்றான். சிரித்துவிட்டு "அவ்வளவு சிரமப் படவேண்டாம்" என 20 வெள்ளியை எடுத்து நீட்டி டாக்ஸியில் போகச் சொன்னார்.

உடனேயே அவர் சொன்ன விலாசத்துக்குப் பறப்பட்டான். ஒரு டாக்ஸியைப் பிடித்தான். விசிட்டிங் கார்டில் இருந்த விலாசத்தைக் காட்டினான். அதில்

தோ பாயோ (toa payoh) என்றிருந்தது. சில நிமிடங்கள் ஓடிய டாக்ஸி, ஒரு சீன விடுதியின் முன்னால் நின்றது. டாக்ஸிக்காரனின் கணக்கைத் தீர்த்துவிட்டு உள்ளே போனான். வரவேற்பு பகுதியில் ஒரு பெண் நின்றாள். சீனக்காரி என நினைத்தான். ஆங்கிலத்தில் "அலி அகமத் அனுப்பினார்" என்றான். அவள் ஒரு பெட்டியை எடுத்து நீட்டினாள். அதிலேயே வைத்துத் திறந்தான். ஒரு கைத் தொலைபேசி. மோட்டோரேலா மொடல். பற்றியுடன் சேர்த்துக் குறைந்தது ஒன்றரைக் கிலோ வரும். இப்ப உள்ள மாதிரி சிம்காடு சிஸ்டம் இல்லை. வேறை நாட்டுகாரர் சிங்கையில் இணைப்பு எடுக்க முடியாது. யாராவது சிங்கப்பூர்காரரின் பெயரில்தான் இணைப்பை எடுக்கலாம். அந்த விடுதி சீனரின் பெயரில்தான் இணைப்பு எடுக்கப்பட்டிருந்தது. கைத்தொலைபேசியை உருட்டி பார்த்துக்கொண்டிருந்தவனிடம் நீங்கள் போகலாம் என்றாள்.

"எங்கே போறது?"

"அதைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் இங்குத் தங்க முடியாது."

"மலிவான விடுதி ஏதாவது இங்கே கிடைக்குமா?"

"வெளியேறி வலது பக்கமாக நடந்து போ. 500 மீட்டரில் ஒரு லாட்ஜ் வரும். அங்கு 'இடமிருக்கா?' என்று கேட்டுப்பார். போய்வா" என்றாள்.

அங்குப் போனான். இவனது நல்ல காலம். இடமிருந்தது. அதுவும் ஒரு சீனனின் லாட்ஜ்தான். அவன் அறையைக் காட்டினான். ஒன்றரை மீட்டர் அகலம். இரண்டு மீட்டர் நீளம். சிறிய கட்டில். மேலே இரண்டு அறைக்குப் பொதுவாக ஒரு காத்தாடி. குளியலறை, கழிவறை எல்லாமே பொதுதான். "நாளுக்கு ஏழு வெள்ளி"யென்றான்.

கைத் தொலைபேசியைச் சார்ச்சரில் வைத்துவிட்டு, பொதியை கட்டிலுக்குக் கீழே தள்ளினான். கட்டிலில் பொத்தென் விழுந்தான். வாழ்க்கை ஒரு புதிர் மாதிரி அவனுக்குத் தோன்றியது. எங்கேயோ பிறந்து வளர்ந்து, தெரியாத உலகமெல்லாம் திரியும் காலத்தை நினைத்து வியந்தான். தனது வாழ்க்கையை நினைத்தே ஆச்சர்யப்பட்டு கொண்டிருந்தான். திடீரெனக் கைத் தொலைபேசி அடித்தது. வாழ்நாளில் முதன்முதலாகக் கைத்தொலைபேசியில் பேசப்

போகிறான் என்பதே ஒருவித குறுகுறுப்பை ஏற்படுத்தியது. எடுத்துக் காதில் வைத்து ஹலோ என்றதும், 'நான் உதயன்' என்றது குரல். ஏதும் தலைபோற அவசரம் எண்டால் மட்டும்தான் இந்தப் போனைப் பாவிக்கவேணும். மற்றபடி பாவிக்கக் கூடாது. நாளைக்குச் சனம் அதிகம் இல்லாத இடமாக இருக்கிற ஒரு பொதுப் போன் பூத் ஒன்றிலை போய்ப் பாத்து அதின்ரை நம்பரை எனக்குத் தந்துவிடு. மற்றாக்களுக்கும் அந்த நம்பரையே குடுத்துவிடு. இனி அந்த நம்பரிலை தொடர்பிலை இருப்பம்" என்றுவிட்டுத் தொடர்பைத் துண்டித்துவிட்டார்.

அடுத்த நாள் தோ.பாயோ சந்தைக் கட்டடப் பகுதியில் போய்ச் சுற்றிப் பார்த்தான். அது இரவும் பகலும் சனம் நிறைந்து கலகலப்பாக இருக்கும் இடம். ஓர் ஓரமாக வயதான மலேக்காரன் ஒருவரின் புத்தகக் கடை ஒன்றிருந்தது. பத்திரிகைகள் மற்றும் பாடசாலை உபகரணங்கள் கடை. மாலையில் பூட்டிவிடுவார். அதற்கு அருகில் ஒரு தொலைபேசிக் கூடு இருந்தது. அருகிலேயே சிமென்ட் வாங்கும் கடை ஒன்றும் இருந்தது. அந்தத் தொலைபேசிக் கூண்டை தெரிவுசெய்து அதன் இலக்கத்தைக் குறித்துக்கொண்டான். அதற்குப் பின்னர் தேவைக்கேற்ப அந்த இலக்கத்துக்கு அழைப்புகள் வரும். அவனும் வகுப்புக்கு போக ஆரம்பித்திருந்தான். காலை இரண்டு அல்லது மூண்டு மணி நேரம்தான் வகுப்பு. அது முடிய மதியம் அளவு சாப்பாடு.

ஆசையாக ஒரு பியர் குடிக்க நினைத்தால் அளவு சாப்பாடை கைவிட்டு 50 சதவிகிதத்துக்கு வெள்ளைச்சோறும் 50 சதவிகிதத்துக்குப் பருப்பு சாம்பாரும் பொலித்தீன் பையில் கட்டித்தருவார்கள். மிச்சக் காசில் ஒரு பியர் வாங்கலாம். சாப்பிட்டுவிட்டு லாட்ஜில் ஒரு குட்டித் தூக்கம். மாலையில் வந்து அந்தச் சிமென்ட் வாங்கில் குந்தினால் இரவு 10 அல்லது அதற்கு மேலும். நித்திரை வரும்வரை அங்கேயேதான் சுற்றிக்கொண்டிருப்பான். அது அவனது வெளிவேலைகளின் ஆரம்ப காலம் என்பதால் அதிக வேலைகளும் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. பொழுதை போக்குவதற்காக ரேடியோவுடன்கூடிய வோக்மன் ஒன்று வாங்கியிருந்தான்.

சிறிதுநாளின் பின்னர் முதன்முதலாக அவனிடம் பெரிய வேலையொன்று ஒப்படைக்கப்பட்டது. தொலைத்தொடர்பு

சாதனங்களைக் கொள்வனவு செய்து அவற்றைப் பத்திரமாக இயக்கத்திடம் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டும். தொலைத்தொடர்பு சாதனங்கள் பற்றிய அறிவு அவனுக்கு ஏற்கெனவே இருந்ததால் விஷயம் சிக்கலாக இல்லை.

ஒரு தடவை அவன் தொலைத்தொடர்பு சாதனங்கள் கொள்வனவு செய்தற்காகக் கொங்கொங் சென்றிருந்தான். அவன் கொள்வனவு செய்யும் பொருட்கள் சாதாரணமாகத் தனியார் ஒருவர் கொள்வனவு செய்ய முடியாது. ஏதாவது ஒரு நிறுவனத்தின் பெயரிலேயே கொள்வனவு செய்யவேண்டிய நிலைமை. உடனடியாக அவனால் உதயனையும் தொடர்புகொள்ள முடியவில்லை. என்ன செய்யலாம் என மண்டையைப் போட்டு உடைத்தவனுக்கு ஓர் ஐடியா தோன்றியது. உடனடியாகப் பெல்ஜியத்தில் இருந்த தயாவை தொடர்புகொண்டான். அங்கு இயங்கும் ஒரு பெரிய நிறுவனத்தின் தலைமை அலுவல விலாசம், அதன் லோகோ என்பனவற்றை எடுத்து அனுப்பச் சொன்னான். தயாவும் அவற்றை அனுப்பிவிட்டான். அந்த நிறுவனத்தின் பெயரில் ஆவணங்களைத் தயாரித்து ரப்பர் முத்திரை எல்லாம் செய்து குத்தி கையெழுத்திட்டுப் பொருட்களைக் கொள்வனவு செய்து தாய்லாந்துக்கும் கொண்டுபோய்ச் சேர்த்தான். அப்போதுதான் உதயனுக்கு மட்டுமல்ல, அவனுக்கே அவனில் நம்பிக்கை வந்தது.

அதற்குப் பின்னர் வெளிநாட்டு நடவடிக்கைகளுக்கு வேண்டிய ஆவணங்கள், கடிதத் தலைப்புகள், கடிதங்கள், கடவுச்சீட்டுக்கள், பல நாடுகளின் குடிவரவு குடியகல்வு மற்றும் தூதரக முத்திரைகளை அடித்து அதிகாரிகளின் கையெழுத்து போடுவது, கடவுச்சீட்டுக்களில் படங்களை மாற்றுவது, வீசா தயாரிக்கும் வேலைகள் செய்வதே அவனது பிரதான வேலையாகிப்போனது. உலகத்தின் பல வியாபார மற்றும் கப்பல் நிறுவனங்கள் தூதரகங்கள் குடிவரவு குடியகல்வு அலுவலகங்கள், கடவுச்சீட்டு அலுவலகங்கள் எல்லாமே அவனது ஒரு கைப்பையில் அடங்கத் தொடங்கியிருந்தது. அன்றைய காலத்தில்தான் அதிவிரைவு தபால் சேவையான D.H.L பிரபலமாகவும் வேகமாகவும் தனது சேவைகளை விரிவு செய்யத் தொடங்கிய காலங்கள். ஆசியாவில் சிங்கப்பூர் அவர்களது முக்கிய மையமாக இயங்கியது. அங்கிருந்து குறுகிய காலத்தில் அதே நேரம் பாதுகாப்பாகவும் ஆவணங்களை உலகம் முழுவதும் அங்கிருந்து அனுப்ப வசதியாக

இருந்ததால் சிங்கப்பூரிலேயே அவன் ஆரம்பங்களில் பெரும்பாலும் இருந்து வேலை செய்யவேண்டியிருந்தது. அதே நேரம் கொள்வனவு வேலைகளையும் அவ்வப்போது செய்துகொண்டேதான் இருந்தான்.

❍ ❍

# 35

சிங்கப்பூரில் நின்றவனுக்கு ருமேனியா போகும்படி உதயன் அண்ணையிடம் இருந்து தகவல் வந்திருந்தது. அங்குப் போய் கொன்ஸ்தாந்தா நகரத்தின் ஒதுக்குப்புறமான அறை ஒன்றில் தங்கியிருந்தவனுக்குத் திடீரென அழைப்பு வந்தது. இந்த முறையும் வழக்கம்போல உதயண்ணையிடம் இருந்துதான் வந்தது. சில ஆவணங்களைச் செய்து எடுத்துக்கொண்டு கம்போடியா வந்துசேரும்படி கூறியிருந்தார். ‘இந்தாளுக்கு என்னை அலைக்கழிக்கிறதே வேலையா போச்சு’ என்று நினைத்தவனுக்கு யூலியாவின் நினைவும் வந்திருந்தது. அப்போது கம்போடியாவுக்கு ரஷ்யாவின் AERO FLOTE விமானச் சேவை மட்டுமே இருந்தது. கம்போடியா போவதற்கு முதலில் BUGAREST போனான். அங்கிருந்து ஃபிரான்ஸ் போய்ப் பிறகு மாஸ்கோ போகலாமென முடிவெடுத்திருந்தான்.

ஃபிரான்ஸுக்கு வந்து யூலியாவை சந்தித்தவன், கொண்டுபோயிருந்த வெட்கா போத்தலை அவளிடம் நீட்டினான். கோபத்தோடு அவனது மார்பில் குத்தியவள் கண்ணீரோடு இழுத்து அணைத்துக்கொண்டாள். யூலியா இப்போது பிரபலமான கட்டடம் கட்டும் நிறுவனத்தில் வேலை செய்துகொண்டிருந்தாள். இரண்டு நாட்கள் மட்டுமே தங்கிவிட்டு கம்போடியா புறப்படவேண்டும். அதற்குள் ராணி அக்காவையும் ஒரு தடவை பார்த்துவிட்டு போகலாமென நினைத்தவன், அவரது வீட்டு அழைப்பு மணியை அழுத்தினான்.

அவனை வா என்று வரவேற்றதைத் தவிர அவரது வீட்டில் நலீமாராணியோ அவரது கணவரோ எதுவுமே பேசாமல் மௌனமாகவே இருந்தார்கள். யாழ் நூலக எரிப்பின் பின்னர் பார்த்த அதே அழுத கண்களுடனான சவக்களையை மீண்டும் அவன் நலீமாராணி முகத்தில் கண்டான். தயங்கியபடியே என்ன ஏதும் பிரச்னையோ என்றதும் ராணியக்கா தன்னைக் கட்டுப்படுத்த முடியாது அழத்தொடங்க காதர்தான் அவனிடம், "ஓம் ஊரிலை இருந்து எங்கடை குடும்பங்கள் எல்லாத்தையும் புலியள் வெளியேத்திப் போட்டாங்கள்" என்றார். அவனுக்கு ஏதும் புரியாமல், "உங்கடை குடும்பத்தை மட்டுமா?" என்றான். "இல்லை ஒட்டுமொத்தமா எல்லா முஸ்லிம்களையும்தான் வெளியேத்திட்டாங்கள்" என்றார். "இருக்காது. ஒட்டு மொத்தமா வெளியேத்தியிருக்க மாட்டாங்கள். யாராவது ஆமியோடை இல்லாட்டி இலங்கை அரசாங்கத்தோடை தொடர்புவைச்சு காட்டிக்குடுத்திருந்தா அவங்களை மட்டும் வெளியேத்தியிருப்பாங்கள். எதுக்கும் வடிவா விசாரிச்சு பாருங்கோ" என்றவனுக்கு

"டேய் பேய் கதை கதைக்காதை. இண்டைக்குக் காத்தாலை என்ரை தங்கச்சி வவுனியாவிலை வந்து நிண்டு போனடிச்சு எல்லாம் விவரமாச் சொன்னவள்" என்று ஆவேசமாகக் கண்களைத் துடைத்தபடியே நலீமாராணி நடந்ததை அவனுக்குச் சொல்லத் தொடங்குகிறார்.

❍ ❍

# 36

***1990***–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 30–ம் தேதி புதன்கிழைமை காலை புலிகள் அமைப்பின் கட்டுப்பாட்டில் இருந்த யாழ்குடா வழமைபோல விடிந்திருந்தது. ஆனால், யாழில் வசித்த முஸ்லிம்கள் மட்டும் காலை பள்ளிவாசலில் இருந்து எழும் பாங்கோசை சத்தத்தோடு எழுந்து தங்களுக்கு வழமைக்கு மாறானதொரு சம்பவம் நிகழப்போகின்றது என்று தெரியாமல் தங்கள் வேலைகளில் ஈடுபட்டிருந்தார்கள். யாழ் மானிப்பாய் விதியில் யாழ் நகரின் நுழைவாசலில் உள்ள ஐந்து சந்தியில் கலீலின் பிரபலமான உணவகம் ‘பிளவுஸ்’ என்ற உணவகம். இது யாழில் உள்ள அசைவப் பிரியர்களின் சொர்க்கம் என்றும் சொல்லாம். மாட்டு ரோஸ் கறி. மாட்டிறைச்சி கொத்துரொட்டி என்பன இங்கு பிரபலம். அதே நேரம் 80–களில் யாழில் தோன்றிய இயக்கங்களின் ஆரம்பகால உறுப்பினர்கள் எவனுமே இந்தக் கடையில் சாப்பிடாதவர் இல்லையென்றே சொல்லலாம். அனைவரையும் இயக்க பேதம் இன்றி நம்ம பையங்கள் என்று வரவேற்று உபசரிப்பவர் கலீல்.

நிசாவின் தாயார், சுகயீனமுற்றிருந்த சொந்தக்காரர் ஒருவரை பார்த்துவர கொழும்பு போயிருந்ததால் வீட்டு சமையல் பொறுப்பு நிசாவிடம் வீழ்ந்துவிட்டிருந்தது. அன்று காலை சமையல் செய்யப் பிடிக்காமல் நிசா காலை உணவுக்காகச் சித்தப்பா கலீலின் கடையில் போய் மாட்டுக்கறியும் சில ரொட்டிகளையும் வாங்கிக்கொண்டு வருகிற வழியில் வீட்டுக்குத் திரும்பும் சந்தி முடக்கில் வழமைபோல் காலை காவல் கடமையில் நிற்கும் பாபு நிற்கிறானா என்று பார்த்தாள். பாபுவை அன்று காணவில்லை

என்பது மட்டுமல்ல, எந்த ஓர் இயக்கக்காரரையுமே காணவில்லை. பெரும்பாலும் காலை நேரக்காவல் கடமையில் பாபுதான் இருப்பான். சினேகிதமாக ஒரு சிறிய புன்னகை அல்லது எப்பிடி இருக்கிறீங்கள் என்றொரு நலம் விசாரிப்பு. நிசாவும் பதிலுக்குப் புன்னகையோடு பாபுவுக்கு வணக்கம் சொல்லிவிட்டு போவாள். சில நேரங்களில் பாபுவுக்கு மாட்டு ரோஸ் கறியும் ரொட்டியும்கூடக் கிடைக்கும்.

அன்று யாரையுமே காணாததால் எங்கேயாவது ஆமி வெளிக்கிட்டிருக்கலாம். ஏதும் பிரச்னையாக இருக்கும் போயிருப்பாங்கள் என்று நினைத்தபடி வீட்டுக்குள் நுழைந்தபோது வீதியில் வாகனத்தில் பூட்டப்பட்ட ஒலிபெருக்கியில் ஏதோ அறிவித்துக்கொண்டிருந்தார்கள். வீட்டுக்குள் போனவள் மீண்டும் வீதிக்கு வந்து கவனித்தாள். முஸ்லிம் மதபோதகர்களையும் வீட்டு குடும்பத் தலைவர்கள் அல்லது வீட்டுக்கு ஒருவர் உடனடியாக ஓஸ்மேனியா கல்லூரியின் ஜின்னா மைதானத்துக்கு உடனடியாக வரும்படி திரும்பத் திரும்ப அறிவித்துக்கொண்டிருந்தார்கள். வாகனங்களுக்குள் ஆயுதம் தாங்கிய புலிகள் உறுப்பினர்கள் முகங்களைக் கடுமையாக்கியபடி அமர்ந்திருந்தார்கள். வீட்டுக்குள் இருந்து ஒலிபெருக்கி சத்தத்தைக் கேட்ட நிசாவின் தந்தை கலாம் நிசாவிடம், “என்னம்மா சொல்லுறாங்க?” என்றபடி வெளியே வந்தார்.

“தெரியேல்லை. சில நேரம் கோட்டையை விட்டுப்போன ஆமி திரும்ப வாறாங்களாக்கும். அதைப்பத்தி ஏதாவது அறிவித்தல் செய்யிறதுக்காக இயக்கக்காரங்கள் கூப்பிடுறாங்கள் போலை இருக்கு. போய் பாத்திட்டு வாங்கவாப்பா” என்றுவிட்டு வீட்டுக்குள் மீண்டும் நுழையப்போகும்போது பக்கத்து வீட்டில் நிசாவின் ஒன்றுவிட்ட சகோதரியின் மூன்று வயது மகள் “பொளசியா ஆன்ட்டி... எனக்கு ஐஸ்கிரீம் வாங்கித் தாங்கோ” என்றபடியே தன்னுடைய கரடி பொம்மையைக் கட்டிப் பிடித்தபடி ஓடிவந்துகொண்டிருந்தாள்.

“அது ஐஸ்கிரீம் வான் இல்லையம்மா. இயக்க மாமாக்கள் எல்லாரையும் ஓர் இடத்துக்கு வரச்சொல்லி அறிவிச்சுக்கொண்டு போறாங்கள். நான் பிள்ளைக்குப் பிறகு கடைக்குப் போய் ஐஸ்கிரீம் வாங்கித்தாறன்” என்று பொளசியாவை கட்டிப்பிடித்துக் கன்னத்தில் ஒரு முத்தம் கொடுத்து அவளைத் தூக்கிக்கொண்டு வீட்டுக்குள்

போனாள்.

சலாம் ஒஸ்மேனியா கல்லூரி நோக்கி போய்க்கொண்டிருந்தார்.

யாழ் முஸ்லிம் சமூகத்தின் பெரும்பாலான ஆண்கள் மதத் தலைவர்கள் சுமார் ஆயிரம் பேருக்கு மேல் ஒஸ்மேனியா கல்லூரி மைதானத்தில் கூடியிருந்தார்கள். மைதானத்தைச் சுற்றி ஆயுதம் தாங்கிய புலி உறுப்பினர்கள் காவல் காத்திருக்க மத்தியானம் அளவில் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் ஆஞ்சநேயர் (பின்னர் இவரது பெயர் இளம்பருதி) அங்கு வந்து சேருகிறார்.

ஆஞ்சநேயர் என்ன சொல்லப்போகிறார் என அனைவருமே கூர்ந்து கவனித்துக்கொண்டிருக்க அவரே, "யாழில் உள்ள முஸ்லிம்கள் எல்லோரும் பாதுகாப்புக் காரணங்களுக்காக உடனடியாக வெளியேவிட வேண்டும். அதுவும் இன்றைக்கே வெளியேற வேண்டும். அதற்குக் குறுகிய கால அவகாசம் மட்டுமே வழங்க முடியும்" எனச் சுருக்கமாகச் சொல்லிவிடுகிறார்.

இலங்கை ராணுவம் மீண்டும் கோட்டை பிடிக்க முயற்சிப்பதால் யாழ்குடா மக்கள் அனைவருக்கும் புலிகள் ஏதாவது அறிவித்தல் கொடுக்கப்போகிறார்கள். அதனால்தான் தங்களையும் தனியாக அழைத்திருக்கிறார்கள் என நினைத்துப்போன முஸ்லிம்களுக்குத் தங்களை மட்டுமே தனியாக யாழைவிட்டு வெளியேறச் சொன்னது அதிர்ச்சியாக இருக்கவே சிலர் ஆஞ்சநேயரிடம்,

"ஏன்... எதற்கு?"

"நாங்கள் செய்த தவறு என்ன, எதற்காக வெளியேற வேண்டும்?" எனக் கேள்விகளை அடுக்கக் கோபமான ஆஞ்சநேயர் தனது கைத் துப்பாக்கியை எடுத்து வானத்தை நோக்கி சுடுகிறார். அதனைத் தொடர்ந்து மைதானத்தைச் சுற்றிவர காவலில் நின்ற அனைத்து புலி உறுப்பினர்களும் வானத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களைத் தீக்க, மைதானத்தில் கூடியிருந்த அனைவரும் பதற்றத்தோடு அங்கிருந்து கலைந்துபோகத் தொடங்குகிறார்கள்.

# 37

நிசா கடையில் வாங்கிப்போன மாட்டுக் கறியையும் ரொட்டியையும் தம்பி யறின்னுக்கும் தனக்குமாகப் பகிர்ந்து கோப்பையில் போட்டுவிட்டு பௌசியாவின் வாயில் ஒரு துண்டு ரொட்டியையும் ஊட்டிவிட்டுக்கொண்டிருக்கபோதே 'முஸ்லிம்கள் அனைவரும் பாதுகாப்புக் கருதி உடனடியாக யாழைவிட்டு வெளியேறுங்கள்' மீண்டும் ஒலிபெருக்கியில் அறிவித்தல் போய்கொண்டிருந்தது.

அதைக் கேட்டு அதிர்ச்சியோடு கையைக் கழுவிவிட்டு வீதிக்கு வந்தபோது துப்பாக்கி சூட்டுச் சத்தங்கள் கேட்டது. வீடுகளில் இருந்த பெண்கள் அனைவருமே வீதிக்கு வந்திருந்தார்கள். துப்பாக்கி சூடுச் சத்தத்தைக் கேட்டு ஏதோ விபரீதமாக நடக்கிறது என நினைத்து வீட்டில் இருந்தவர்கள் ஒஸ்மேனியா கல்லூரி நோக்கி ஓடத்தொடங்க, ஒஸ்மேனியா கல்லூரியில் இருந்த ஆண்கள் வீடுகளை நோக்கி ஓடிவந்துகொண்டிருந்தார்கள். முஸ்லிம்கள் வசித்த பகுதி கலவர பூமியாகிக்கொண்டிருந்தது. 'உடனடியாக அனைவரும் வெளியேறவும்' என்கிற அறிவித்தல் ஒலிபெருக்கியில் ஒலித்துக்கொண்டே இருந்தது. மேலதிகமாக ஆயுதம் தாங்கிய புலி உறுப்பினர்கள் வாகனங்களில் வந்து வந்து இறங்கி முஸ்லிம்கள் வாழ்ந்த பகுதியான சோனக தெரு, ஓட்டுமடம் மற்றும் பொம்மைவெளி ஆகிய பகுதிகள் சுற்றி வளைக்கப்பட்டிருந்தன.

இதில் பொம்மைவெளி பகுதியில் வாழ்ந்த முஸ்லிம்கள் பெரும்பாலும் வறுமை நிலையில் குடிசைகளில் வாழ்ந்தவர்கள். இவர்களுக்கு மதம் ஒரு பிரச்னையாக இருந்ததே இல்லை. அவர்களது பிரச்னை அன்றாட

வாழ்க்கைப் பிரச்னை மட்டுமே. சோனகத் தெருப் பகுதியிலேயே பெரும் பணக்கார முஸ்லிம்கள் வாழ்ந்து வந்தார்கள். இந்தப் பெரும் வர்த்தகர்கள் தனியாகப் பிரித்தெடுக்கப்பட்டு அவர்களைப் புலிகள் கைது செய்துகொண்டு போய்விட்டிருந்தார்கள். முடிந்தளவு தங்கள் உடைமைகளை எடுத்தபடி அனைத்து முஸ்லிம் மக்களும் வெளியேறிக்கொண்டிருந்த பிற்பகல் நேரத்தில் மீண்டும் ஒலிபெருக்கியில் ஓர் அறிவித்தல் வெளியானது. 'யாழைவிட்டு வெளியேறும் முஸ்லிம்கள் அனைவரும் யாழ் ஐந்து முச்சந்திக்கு வந்து சேரும்படியும் அனைவரையும் சோதனை செய்த பின்னரே அவர்கள் வெளியேறலாம். அதே நேரம் சொந்த வாகனங்கள் வைத்திருப்பவர்கள் ஒரு வாகனம் மட்டுமே எடுத்துச் செல்லாம். அதில் யாழைவிட்டு வெளியேறும் மற்றவர்களையும் அழைத்துச் செல்லவேண்டும்' என்ற அறிவித்தல் வெளியாகிக்கொண்டிருக்கும்போதே முஸ்லிம்களின் வீடுகளுக்குள் புகுந்த ஆயுதம் தாங்கிய புலி உறுப்பினர்கள் மக்கள் பொருட்கள் எதையும் எடுத்துச் சொல்லக் கூடாது; மாற்றுத்துணிகளை மட்டுமே எடுத்துச் செல்ல வேண்டும் எனக் கட்டளையிட்டார்கள்.

நிசாவின் தந்தையிடம் ஒரு வாகனம் இருந்ததால் அவசர அவசரமாக வீட்டில் இருந்த விலை உயர்ந்த பொருட்களையெல்லாம் அதற்குள் திணித்துக்கொண்டிருந்த போது அங்குத் துப்பாக்கியைத் தூக்கிப் பிடித்தபடி வந்த ஒருவன், "பொருட்களை விட்டுவிட்டு துணிகளை மட்டுமே கொண்டுபோகலாம்" என்றான். அதைக் கேட்டு அனைவரும் அதிர்ச்சியில் நிற்க, கலாம் அந்தப் புலி உறுப்பினரிடம் கெஞ்சிப் பார்த்தார். ஆனால், அவனோ துப்பாக்கி நுனியை கலாமின் காதருகில் வைத்து, "சொன்னதை மட்டும் செய்" என்றான்.

அதனைப் பார்த்து ஆத்திரமடைந்த கலாமின் அம்மா ஆயிசா, "இதெல்லாம் என்ரை மகன் கஸ்ரப்பட்டுச் சம்பாதித்து வாங்கினது. அதை எவருக்கும் குடுக்க மாட்டம்" என்று சத்தம் போட்டவாறே வாகனத்தில் திணித்திருந்த பொருட்களை எல்லாம் கொண்டுபோய் வீட்டுக் கிணற்றுக்குள் போட தொடங்க அதைப் பார்த்த ஆயுததாரி, ஓடிப்போய் ஆயிசாவின் முதுகில் துப்பாக்கியால் ஓங்கி அடித்தான். "அல்லா.." என அலறியபடி விழுந்த ஆயிசாவை நிசாவும் கலாமும் ஓடிப்போய்த் தூக்க, ஆயிசாவோ மீண்டும் நிலத்தில் விழுந்து இரண்டு கைகளாலும் மண்ணை வாரி அள்ளி

அடித்தவனை நோக்கி வீசி எறிந்தபடி, “டேய்... அல்லா மேலை சத்தியமாகச் சொல்லுறண்டா. நீங்கள் எல்லாம் நல்லாவே இருக்க மாட்டீங்கள். நாசமாய்ப் போவீங்கள். அழிஞ்சுபோவீங்கள்” என்று திட்டிக்கொண்டிருக்க, அவரை அணைத்துப் பிடித்த நிசா, “அவங்களைத் திட்டி என்ன பிரயோசனம் எல்லாம் எங்களோடை தலைவிதி. எல்லாம் அல்லா பாத்துக்கொள்ளட்டும்” என்று அவரைச் சமாதானப்படுத்தி அழைத்துக்கொண்டு போனாள்.

துப்பாக்கியோடு நின்றிருந்தவன் பொருட்கள் ஏற்றப்பட்டிருந்த கலாமின் டொயோட்டா ரக வாகனத்தை ஒரு தடவை சுற்றிப் பார்த்தவன், வாகனத்தில் இருந்த திறப்பை எடுத்து தனது சட்டைப் பையில் போட்டுக்கொண்டபடி, “வேனும் எங்களுக்கு வேணும் வாகனத்தை விட்டிட்டுப் போகலாம். உங்களுக்கு ஊரைவிட்டு போறதுக்கு நாங்கள் வாகன ஏற்பாடு செய்திருக்கிறம்” என்றதும், “தம்பி, உம்மா வயசானவங்க” என்று கலாம் சொற்களை மென்று விழுங்கும்பேதே அவனது கையில் இருந்த ஏ.கே ரகத் துப்பாக்கி வானத்தை நோக்கி குண்டுகளைத் துப்பியது. துப்பாக்கி சத்தத்தில் மிரண்டுபோன பௌசியா அலறத் தொடங்க அவளை அள்ளி அணைத்தபடி யறின் அங்கிருந்து வெளியேறினான். நிசா தான் தவழ்ந்த வீடு நடைபழகிய முற்றம் ஓடியாடி விளையாடிய வீதிகள் எல்லாவற்றையும் கடைசியாக ஒரு தடவை பார்த்துவிடலாம் என நினைத்து அவற்றைத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடியே ஆயிசாவை அணைத்தபடி பிரதான வீதியை நோக்கி நடக்க ஆரம்பித்திருந்தாள்.

❍ ❍

# 38

**ச**ந்தியில் புலிகள் ஒரு சோதனை நிலையத்தை அமைத்திருந்தார்கள். சுமார் 15000–க்கும் அதிகமான முஸ்லிம்கள் ஆண்கள் தனியாகவும் பெண்கள் தனியாகவும் இரண்டு வரிசைகளாக நிறுத்தப்பட்டிந்தார்கள். கலீலின் பிளவுஸ் உணவகத்தினுள் புலிகள் அமர்ந்திருக்க, கலீல் வெளியே வரிசையில் நின்றிருந்தார். பெண்களை, பெண் புலிகள் சோதனையிட்டார்கள். சோதனை நிலையத்தில் சோதனை ஆரம்பமாகியது. ஒரு பெண்ணின் உடைப் பெட்டியைத் திறந்த புலி உறுப்பினர் ஒருவர், அதற்குள் இருந்த சேலைகளை எடுத்து நிலத்தில் விரித்தவன், “எல்லாரும் உங்களிட்டை இருக்கிற நகைகள் எல்லாத்தையுமே இதிலை போடவேணும். தனியாக்கள் 150 ரூபாவும், குடும்பங்கள் 500 ரூபாயும் மட்டுமே கொண்டுபோகலாம். மிச்சம் எல்லாமே இங்கே போடவேணும். அதையும் மீறி யாராவது கொண்டுபோய்ச் சோதனையிலை பிடிபட்டால் தண்டனை பலமாயிருக்கும்” என்று அறிவித்தான்.

ஆரம்பத்தில் இந்த வெளியேற்றம் தற்காலிமானதே என நினைத்த முஸ்லிம்களுக்குப் புலிகளின் புதுப் புது அறிவித்தல் கடுமையானதாக வெளியாகிக்கொண்டிருந்ததால் தாங்கள் நிரந்தரமாகவே தங்கள் மண்ணைவிட்டு வெளியேறப் போகிறோம் என்கிற கவலை. ஏதாவது கதைத்தால் கொல்லப்படலாம் என்ற மரணப் பயத்தில் கையாலாகாத் தனத்தோடும் பலியிடப்படப்போகும் ஆடுகளைப்போல் வரிசையில் நகர்ந்துகொண்டிருந்தார்கள். ஆரம்பத்தில்

முஸ்லிம் மக்களது உடைகளைப் பொதிகளில் இருந்து ஒவ்வொன்றாக எடுத்து உதறி சோதனை செய்து கொண்டிருந்ததில் சோதனை தாமதமாக வரிசை மெதுவாகவே நகர்ந்துகொண்டிருந்தது.

அன்றிரவுக்குள் அனைத்து முஸ்லிம்களும் யாழைவிட்டு வெளியேறி வவுனியா நகரை தாண்டிவிடவேண்டும் எனத் தலைமை கட்டளையிட்டிருந்ததால், அத்தனை ஆயிரம் பேரின் உடைமைகளையும் அன்றிரவுக்குள் பரிசோதனை செய்து முடித்து அவர்களை அனுப்பிவிட முடியாது என நினைத்த புலி உறுப்பினர்கள் திடீரெனப் புதிதாக இன்னோர் அறிவித்தலை வெளியிட்டார்கள். அதாவது ஒரு மாற்றுத்துணியை மட்டும் கையில் எடுத்துக்கொண்டு மற்றவற்றை அப்படியே வீதியோரத்தில் போட்டு வாருங்கள் என்பதே. தங்கள் மண்ணை இழந்து, வீட்டை இழந்து, உடைமைகளை இழந்து, இப்போ உடைகளையும் இழந்து உடலில் உயிரை மட்டுமே தக்கவைக்கவேண்டிய நிலை. தங்கள் உடை பெட்டிகளைத் திறந்து கணவன் ஆசையாக வாங்கித் தந்த முதலாவது சேலை, அப்பா பிறந்த நாளுக்கு வாங்கித் தந்த சட்டை, அம்மா வாங்கிக் கொடுத்த காற்சட்டை என அவரவர் தங்களுக்குப் பிடித்தமான தங்கள் உணர்வுகளோடு கலந்துவிட்ட அந்த ஓர் ஆடையை மட்டுமே எடுத்துத் தங்களோடு அணைத்து வைத்துக்கொண்டு மற்றவற்றை வீதி ஓரங்களில் எறியத் தொடங்கியிருந்தார்கள்.

நிசா தனது பிறந்த நாளன்று சகோதரி நலீமா வெளிநாட்டில் இருந்து அனுப்பிய பணத்தில் பல கடைகள் ஏறி இறங்கி ஆசையாக வாங்கிய சுடிதாரை எடுத்துக்கொண்டாள். அவளது குடும்பத்தில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் ஆடையை எடுத்து வாங்கி யறின் சிறிய பை ஒன்றில் போட்டு எடுத்துக் கொள்ள, பௌசியாவோ தனது அப்பா அம்மாவை தேடத் தொடங்கிச் சிணுங்கிக்கொண்டிருந்தாள். அவளின் அப்பா அம்மாவும் அந்த நீண்ட வரிசையில் எங்கோ ஓரிடத்தில் நின்றிருப்பார்கள். அவர்களை இப்போது தேடிக்கொண்டிருக்க முடியாத நிலை. பௌசியாவை நிசா தூக்கி இடுப்பில் வைத்தபடி “நாங்கள், இப்ப கொழும்புக்குப் போறமாம். அங்கே பௌசியா குட்டிக்கு இதுமாதிரி நிறையக் கரடி பொம்மை

வாங்கித் தருவனாம். வாப்பாவும் உம்மாவும் பின்னாடி வந்துகொண்டிருக்கிறாங்கள். அழக் கூடாது" என்று சமாதானப்படுத்த முயன்றுகொண்டிருந்தாள்.

"இது கரடி பொம்மை இல்லை. சுல்தான் (ராஜா)" என்றாள் பௌசியா.

அதற்கு அவள் வைத்திருந்த பெயர் சுல்தான். அதே நேரம் வரிசையில் நின்றவர்களை ஒவ்வொருவராக உற்றுப் பார்த்து அவர்கள் ஒரு சோடி உடுப்பை மட்டுமே கைகளில் எடுத்திருக்கிறார்களா எனச் சரிபார்த்தபடி வந்துகொண்டிருந்த ஒருவன் நிசாவை தாண்டிப் போகும்போது பௌசியாவின் கையில் இருந்த கரடி பொம்மையைக் காட்டி, "இதுக்குள்ளை என்ன இருக்கு?" என்றான். "அதுக்குள்ளை ஒண்டுமே இல்லை" என்று நிசா சொல்லும்போதே அதனைத் தனது மார்போடு பௌசியா இழுத்து அணைத்துக்கொள்ள "உள்ளுக்குள்ளை நகையை ஒளிச்சு வைச்சிருப்பீங்கள். உங்களை நம்பேலாது" என்றபடி பொம்மையைப் பிடுங்கியவன், இடுப்பில் இருந்த கத்தியை எடுத்துப் பொம்மையில் குத்தி இழுத்து உள்ளே இருந்த பஞ்சுகளை வெளியே இழுத்து பார்த்தவன், முகத்தைச் சுழித்துவிட்டு வயிறு பிளந்து பஞ்சு வெளியே வந்த பொம்மையை நிசாவின் கைகளில் திணித்துவிட்டு நகரத் தொடங்க "என்டை சுல்தான்... என்டை சுல்தான்" என்று பௌசியா அழத் தொடங்கியிருந்தாள்.

# 39

மாலை மூன்று மணியைத் தாண்டிக்கொண்டிருந்தது. மத்தியான சாப்பாட்டைக் குழந்தைகள் உள்பட எவருமே சாப்பிட்டிருக்கவில்லை. வீதியோரத்தில் இருந்த வீடுகளில் அவ்வப்போது புகுந்து தண்ணீரை குடித்துத் தங்கள் குழந்தைகளுக்கும் கொடுத்துவிட்டு மீண்டும் வரிசையில் வந்து நிற்கத் தொடங்கியிருந்தார்கள். பல குழந்தைகளின் பசி அலறல் சத்தம் அடங்கி அவர்கள் தூங்கியிருந்தார்கள். நிசா வீட்டில் நடந்த களேபரத்தில் காலில் செருப்பை மாட்டாமல் வந்துவிட்டிருந்தாள். கொளுத்தும் வெய்யிலில் வீதியின் தார் உருகி காலைப் பதம் பார்த்துக் கொண்டிருந்தது. வயிறு கிழிந்த சுல்தானுக்காக அழுதழுது பௌசியாவும் நிசாவின் தோளில் நித்திரையாகிப் போயிருந்தாள். தனது தலையிலும் பௌசியாவின் தலையிலும் துப்பட்டாவை போட்டபடி தன்னுடைய நிழலிலேயே தனது கால்களை மாற்றி மாற்றி ஒற்றைக்காலில் நின்றுகொண்டிருந்தபோது தூரத்தில் பாபு நிலத்தைப் பார்த்து நீட்டிய துப்பாக்கியோடு வந்துகொண்டிருந்தான்.

அவன் அந்த நீண்ட வரிசையில் யாரையோ தேடிக்கொண்டிருந்தான். பாவுவை கண்ட நிசாவுக்கு மனதின் ஓரத்தில் சிறியதாக ஒரு நம்பிக்கை. இல்லை நப்பாசை என்றே சொல்லாம். இவன் மட்டும் எல்லாரும் தங்கள் வீடுகளுக்குப் போகலாம் என்று அறிவித்தால் எவ்வளவு நல்லாயிருக்கும் என்று நினைத்துக்கொண்டிருக்கும்போதே குனிந்த தலையோடு

நிசாவின் அருகில் வந்தவன் அக்கம் பக்கம் பார்த்துவிட்டு தனது செருப்பை அவளருகில் கழற்றியவன், மெதுவாக தனது ரவைக் கூடுகளுக்கு இடையில் செருகியிருந்த ஒரு பிஸ்கட் பாக்கெட்டை நிசாவின் கைகளில் வைத்துவிட்டு போனவன், சிறிது தூரத்தில் நின்று திரும்பிப் பார்த்து நிசா தனது செருப்புகளை அணிந்திருக்கின்றாளா என உறுதி செய்துகொண்டுவிட்டுப் போய்கொண்டேயிருந்தான். நிசா நினைத்ததுபோல் அவனுக்கு முடிவெடுக்கும் அதிகாரம் எதுவுமே இல்லை. கட்டளைக்குக் கீழ்ப்படிந்து காவல் கடமையில் கண்விழித்திப்பதும் களத்தில் சண்டையிடுவது மட்டுமே அவனது கடமை.

கலாம் மணிக்கூட்டைப் பார்த்தார். அஸர்மாலை தொழுகைக்கான நேரமாகிவிட்டிருந்தது. அன்றைய பிரச்னைகளால் அவர் குளித்திருக்கவில்லை. எனவே, குளிக்காதவர்கள் தொழும் முன்னர் உளு செய்துவிட்டுத் தொழவேண்டும். உளு செய்வதற்காக ஒரு போத்தலில் தண்ணீரை எடுத்து வந்தவர், 'பிஸ்மில்லா' என்றபடியே அந்த நீரில் கை, கால், முகம் எல்லாம் கழுவி வாயைக் கொப்பளித்துவிட்டு வீதியிலேயே முழங்கலிட்டு "ஆயிஷ்ஹது அல்லா இலாஹ இல்லல்லாஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸுலுஹ்" என்றபடி அமர்ந்து தொழத் தொடங்கியிருந்தார். அவரைப் பார்த்த வேறு சிலரும் தொழுகை நடத்துவதற்காக வீதியில் முழங்காலிட்டபோது "ஏய்.. இதெல்லாம் வவுனியாவுக்கு அங்காலை வைச்சுக்கொள்ளுங்கோ. இப்ப ஒழுங்கு மரியாதையாக எழும்பி வரிசையிலை நில்லுங்கடா" என்று ஒரு குரல் அதட்டியது. "இன் ஷா அல்லா (கடவுள் இருக்கின்றார்)" என்றபடியே கலாம் எழுந்து வரிசையில் நின்றுகொண்டார்.

புலிகள் ஏற்பாடு செய்திருந்த வாகனங்களில் மிக நெருக்கமாக எவ்வளவு பேரை ஏற்ற முடியுமோ அவ்வளவுக்கு மக்களை விலங்குகளைப்போலவே அடைந்து ஏற்றிக்கொண்டிருந்தார்கள். நிசாவின் குடும்பத்தினருக்கும் பரிசோதனைகள் முடிந்த பின்னர் ஒரு லாரியில் இடம் கிடைத்திருந்தது. நிசாவும் அதே நேரம் சுமார் 2,000 பேரளவில் இறுதியாக வாகனங்கள் போதாமல் போகவே இரவாகியும்விட்டதால் தாங்கள் அங்கேயே

*தங்கியிருந்துவிட்டு மறுநாள் காலை யாழைவிட்டுப் போகிறோம் எனக் கேட்டுப் பார்த்தார்கள். 'இரவுக்குள் எல்லாருமே யாழ்குடாவைவிட்டு வெளியேறிவிடவேண்டும் என்று மேலிடத்து உத்தரவு. எனவே, யாழில யாரும் தங்க முடியாது. எனவே, வாகனங்கள் கிடைக்காதவர்கள் நடந்துபோய்விடுங்கள்' என்று கடுமையான உத்தரவு மட்டுமே வந்தது.*

*அதனால் மிகுதியாக இருந்தவர்கள் அனைவரும் நடையாக வந்து அன்றிரவு சாவகச்சேரி சந்தைப் பகுதியில் தங்கியிருந்துவிட்டு மறுநாள் வவுனியா நோக்கிய பயணத்தைத் தொடர்ந்தார்கள்.*

*முஸ்லிம்கள் யாழில் இருந்து வெளியேற்றப்பட்டு வவுனியா வருவதை அறிந்த இலங்கையரசு அதனைத் தனக்குச் சாதகமாக்க முடிவெடுத்து வவுனியா வருபவர்கள் அனைவருக்கும் அவசர அவசரமாகத் தற்காலிகத் தங்குமிடம் மற்றும் உணவு வசதிகளை வவுனியா பூந்தோட்டம் பகுதியில் ராணுவத்தைக்கொண்டு ஏற்பாடு செய்துகொடுத்திருந்தார்கள். யாழில் இருந்து வெறுங்கைகளோடு வெளியேறி வந்த முஸ்லிம்களுக்கு அது பெரும் ஆறுதலாக இருந்தது.*

*வவுனியா பூந்தோட்டம் பகுதியில் அன்றிரவு தங்கிருந்த அனைவரும் மறுநாள் காலை எழுந்து புத்தளம் நோக்கிய பயணத்துக்குத் தயாராகிக்கொண்டிருந்தார்கள். குளத்துப் பக்கமாக நிசாவையும் அழைத்துப்போய் பற்றைப் பக்கமாகத் தங்கள் காலைக்கடன்களை முடித்துவிட்டு வந்த கலாம், தனது தாயார் ஆயிசா இன்னமும் மரத்தடியில் தூங்கிக்கொண்டிருப்பதைப் பார்த்தவர், பாவம் ராத்திரி முழுவதும் புலிகளைத் திட்டிக்கொண்டும் அல்லாவை வேண்டிக்கொண்டும் இருந்தவர் காலையில்தான் தூங்கியிருப்பார். இன்னும் கொஞ்சநேரம் தூங்கட்டும் அதற்கிடையில் அனைவருக்கும் தேநீர் வாங்கிவரலாம் என நினைத்துப் போய்விட்டிருந்தார்.*

*அதற்கிடையில் தங்களோடு தங்கியிருந்த பொளசியாவை, அவளின் பெற்றோரைத் தேடிப்பிடித்து ஒப்படைத்து விட்டிருந்தாள் நிசா. புத்தளம் நோக்கிப் போவதற்கு வாகனங்கள் தயாராகிக்கொண்டிருந்தன. முதல் நாள்*

தாங்கள் ஏறி வந்திருந்த லாரிக்காரரிடம் தங்களை மறக்காமல் புத்தளம் வரை ஏற்றிப் போகுமாறு கலாம் சொல்லி வைத்திருந்தார். தேநீர் வாங்கிவந்த கலாம் ஆயிசாவைப் பார்த்தார். அவர் மீது வெய்யில் விழத் தொடங்கியிருந்தது. ஆனாலும் அவர் எழும்பாமல் தூங்கிக்கொண்டே இருந்தார். தேநீரை மற்றவர்களிடம் கொடுத்துவிட்டு ஆயிசாவின் அருகில் போய் "உம்மா, எந்திரிங்க நேரமாச்சு" என்று மெதுவாக அவரது கன்னத்தில் தட்டினார்.

ஆயிசா அசையவில்லை. கலாம் பலமாக உலுப்பிப் பார்த்தார். ஆயிசாவின் ஆவி பிரிந்துவிட்டிருந்தது. ஐயோ..! உம்மா போயிட்டியே... யா... அல்லா... நாங்க என்ன பாவம் செய்தோம்?" என்ற கலாமின் கதறலைக்கேட்ட அனைவருமே அங்குக் கூடிவிட்டிருந்தார்கள்.

அதே நேரம் பயணத்தைத் தொடர்வதற்காக வாகனங்கள் தயாராகிக் கோண் அடித்தபடி இருந்தார்கள். அழுதுகொண்டிருப்பதற்கான அவகாசம் இப்போது இல்லை. எனவே, அங்கேயே காரியங்களை வேகமாக முடித்துவிட்டுப் பயணத்தைத் தொடரச் சொல்லி பலரும் கலாமின் குடும்பத்தினருக்கு ஆலோசனை சொன்னார்கள். அங்கேயே பூந்தோட்டம் குளத்துக்கு அருகே சிலர் ஒரு குழியை வெட்டினார்கள். கலாம் பல மாதங்கள் தன்னைத் தூக்கி சுமந்த தாயாரை அணைத்து தூக்கி தோழில் தாங்கியபடி கொண்டுபோய்க் குழியில் கிடத்தியபோதுதான் கவனித்தார் ஆயிசாவின் கைகள் அவரது சேலைத் தலைப்பினை இறுக்கிப் பிடித்தபடி மார்போடு அணைத்திருந்தது. இறுக்கிப் பிடித்த கைகளைக் கொஞ்சம் பலத்தைப் பிரயோகித்து விரித்துச் சேலைத் தலைப்பை விடுவித்தவர் அதன் நுனியில் ஒரு முடிச்சு இருக்க, அதனை அவசரமாக அவிழ்த்துப் பார்த்தார். அதனுள் அவர் பாரம்பர்யமாக அவரது முன்னோர்களும், அவரும், அவரது பிள்ளைகளும் பிறந்து தவழ்ந்து வளர்ந்த அவர் நேசித்த யாழ்ப்பாணத்து மண்ணை எடுத்து முடிந்து வைத்திருந்தார். அழுகையை அடக்கியபடியே கலாம் அந்த மண்ணை எடுத்து அவரது முகம் முழுவதும் பூசியவர் குழியை நிரப்பிவிட்டு குழிக்கு மேல் ஒரு பெரிய கல்லை அடையாளமாக வைத்தவர், அவருக்காகவே காத்திருந்த வாகனத்தில் ஓடிப்போய் ஏறிக்கொள்கிறார்.

❍

அனைத்தையும் அவனுக்குச் சொல்லி முடித்த நலீமா கண்ணீர் வழிந்த விழிகளைத் துடைத்தபடியே, “இப்ப சொல்லு எதுக்காக எங்களை வெளியேத்தவேணும்? எங்களுக்கும் கிழக்கு முஸ்லிம்களுக்கும்கூட வியாபார தொடர்போ, உறவோ எதுவும் பெரியளவில் இல்லை. முஸ்லிம்கள் என்ற ஓர் அடையாளத்துக்காவே வெளியேற்றப் பட்டோமா? ஏதாவது சொல்லன்” என்றாள். அவனிடம் பதில் எதுவும் இல்லை தொண்டை அடைப்பதுபோல் இருந்தது. மேசையில் இருந்த தண்ணீரை எடுத்து மடக் மடக் எனக் குடித்தவன், அவர்களிடம் விடைபெறாமலே அங்கிருந்து வெளியேறிவிட்டான்.

❍ ❍

# 40

ஃபிரான்சில் இருந்து மாஸ்கோ ஊடாகக் கம்போடியா புறப்பட்டிருந்தான். விமானத்தில் படிப்பதற்காக சில புத்தகங்களையும் எடுத்துச் சென்றவன், விமானம் கிளம்பியதும் George Orwell எழுதிய விலங்குப் பண்ணை புத்தகத்தை எடுத்துப் பிரித்தான். ஆனால், படிக்க முடியவில்லை. ராணியக்காவின் அழுதகோலம்தான் திரும்பத் திரும்ப அவன் முன்னால் வந்து நின்றது. அதுமட்டுமல்லாமல் எதற்காக இப்படி நடந்திருக்கும் என்ற கேள்வியும் குடைந்துகொண்டேயிருந்தது. புத்தகத்தை மூடிவைத்துவிட்டுக் கண்களை மூடிக்கொண்டான். மாஸ்கோவில் இறங்கியதும் கம்போடியா நொம்பென் நகரத்துக்குப் போவதற்கான விமானத்துக்கு 30 மணித்தியாலங்களுக்கு மேலாக மாஸ்கோவில் காத்திருக்க வேண்டிய நிலைமை. வெளியே போனால் செலவாகும். கடும் குளிர் வேறு. விமான நிலையத்தின் உள்ளேயே இருந்தால் நீண்ட நேரமாக விமானங்களுக்குக் காத்திருப்பவர்களுக்கு ஒரு டிக்கெட் கொடுப்பார்கள். அதற்கு உணவும் இலவசமாகக் கிடைக்கும். குளிக்கலாம் அங்கேயே படுத்திருக்கலாம். அதனால் அங்கேயே தங்கியிருக்க முடிவுசெய்திருந்தான். போதும் போதாதற்காக விமான நிலையத்தைச் சுற்றி வந்துகொண்டிருந்தபோது ஓர் இடத்தில் ஆண்கள் – பெண்கள் என 25 பேருக்கும் மேல் எம்மவர்கள் ஓர் இடத்தில் சோர்ந்துபோய் இருந்தார்கள். அவர்களை சில நிமிடங்கள் பார்த்துக்கொண்டிருந்தான். கதைக்கலாமா... விடலாமா என்ற மனப்போராட்டம். ஏதாவது பிரச்னையாக

இருக்கலாம். முடிந்தால் ஏதாவது உதவி செய்யலாம் என நினைத்து அவர்கள் அருகில் போய் மெல்லிதாக ஒரு புன்னகைத்தான். ஆனால், அவர்களில் பலர் பார்வையைத் தவிர்த்தனர். சிலர் பயத்தோடு பார்த்தார்கள். ஒருவன் மட்டும் அருகில் வந்து, "அண்ணைத் தமிழா?" எனக் கதைக்கத் தொடங்கினான்.

அவர்கள் எல்லோரும் ஐரோப்பாவுக்குள் நுழைவதற்காக ஒரு முகவர் மூலம் செக் குடியரசுக்கு அனுப்பப் பட்டிருக்கிறார்கள். செக் குடியரசின் விசா அப்போது இறப்பர் முத்திரையால் குத்தப்பட்டதாக இருக்கும். அவர்களது முகவர் செக் குடியரசு விசாவை இறப்பர் முத்திரை தயாரித்துச் சரியாகத்தான் குத்தினான். ஆனால், எல்லோரது விசாவிலும் ஒரே இலக்கம் வாற மாதிரி குத்தி விமானத்தில் ஏற்றி அனுப்பிவிட்டான். செக் குடியரசு வரை போய், பிடிபட்டதால் திருப்பி அனுப்பப்பட்டு இப்போது ஊருக்குப் போவதற்காக மாஸ்கோ விமான நிலையத்தில் தங்கிருக்கிறார்கள்.

ஆரம்பத்தில் அவனோடு பேச தயங்கியவர்கள், பின்னர் சாதாரணமாகக் கதைக்கத் தொடங்கினார்கள். "நீங்களும் ஏஜென்சியா?" என்று கேட்டார்கள். வியாபார விஷயமாக மலேசியா போவதாகக் கூறினான். இந்த நிலையில் அவர்களுக்கு உதவ முடியாது. ஆனால், ஊருக்குத் திரும்பவும் போகிற கவலையில் இருப்பவர்களோடு அன்றிரவு மகிழ்ச்சியாகப் பொழுதைப் போகலாம். அவ்வளவுதான். இரவு பொழுதைப் பகிடியாக மாற்றினான். பகிடிக் கதைகள், பாட்டுக்குப் பாட்டு என்று அதிகாலை வரை நீண்டது. விடியும் பொழுதில், ஆளாளுக்கு ஒரு மூலையில் போய்ச் சுருண்டு படுக்கத் தொடங்கினார்கள். அவனும் ஓர் இடத்தில் படுத்துக்கொண்டான். மறுநாள் காலை பாதி நித்திரை கலக்கத்தோடும் சோகத்தோடும் அனைவரும் இலங்கைக்கான விமானத்தில் புறப்பட்டு போய்விட்டார்கள். அவனுக்கான விமானம் மத்தியானம் என்றபடியால் மீண்டும் சுருண்டு படுத்தான். மத்தியானம் எழுந்து முகத்தைக் கழுவி உணவையும் முடித்துக்கொண்டு தனக்கான விமானத்தில் ஏறிக்கொண்டான்.

விமானத்தில் பயணிகள் குறைவாகவே இருந்தார்கள். ரஷ்ய ராணுவத்தினர்தான் அதிகமாக இருந்தார்கள். ஐரோப்பாவில் இருந்து ஆசியா வரை நீண்டு விரிந்துகிடக்கும்

ரஷ்யா எல்லைக்குள்ளேயேதான் விமானம் அதிக நேரம் பறந்தது. மறுநாள் வியட்னாம் சாமோ பகுதியில் நின்றுகொள்ள விமானத்தில் வந்த ரஷ்ய ராணுவத்தினர் அனைவரும் சில பயணிகளும் இறங்கிக்கொண்டார்கள். இப்போது ஆறு அல்லது ஏழு பேரோடு கம்போடியா நொம்பென் விமான நிலையத்துக்கு விமானம் கிளம்பியது.

நொம்பென்னில் விமானம் தாழ்வாகப் பறக்கத் தொடங்கியது. எங்கும் பச்சைக் கம்பளம் போர்த்தியதுபோல் வயல்வெளிகள். இடையிடையே பனங்காடுகள். தூரத்தில் இருந்து பார்க்கும்போது அழகாகத்தான் இருந்தது. இந்தக் காட்சிகளைப் பார்க்க ஊர் நினைப்பு வந்தது. விமானத்தில் இருந்து ஊரை ஒருநாளும் பார்க்கவில்லைதான். ஆனால், அப்படித்தான் இருக்கும் என நம்பினான். யாழ்ப்பாணத்தைப் போலக் கம்போடியாவிலும் நிறையப் பனைகள் இருந்தன. விமானம் தரை இறங்கியதும் இரண்டு குடிவரவு அதிகாரிகள் ஒரு மேசையை விமானத்தின் இறங்கும் படிகளுக்கு அருகில் கொண்டுவந்து வைத்தார்கள். விசா அங்குதான் அடித்து உள்ளே விடுவார்கள். சாதா ரணமாக ஒரு மாதம் தருவார்கள். ஆனால், 5 டாலரை கடவுச்சீட்டுக்குள் வைத்துக் கொடுத்தால் மூன்று மாதங்களுக்கு அடித்துவிடுவார்கள்.

அவன் முறை வந்ததும் அவன் தனது படத்தோடு தயாரித்துக் கொண்டுபோயிருந்த சர்வதேச தொண்டு நிறுவனம் ஒன்றின் அடையாள அட்டையை எடுத்துக் காட்டிவிட்டுக் கடவுச்சீட்டை நீட்டினான். மூன்று மாதங்களுக்கான விசா கிடைத்தது. உள்நாட்டு யுத்தத்தால் சிதைவடைந்திருந்த சிறிய விமான நிலையத்தை அப்போதுதான் திருத்திக்கொண்டிருந்தார்கள். அதனால் விமானத்தில் ஏறுபவர்கள் பஸ்சில் ஏறுவதுபோல விமான ஓடுபாதைக்குப் போய் விமானத்தில் ஏறவேண்டியதுதூன். விமானத்தின் வாசலில் கீழே ஒரு மேசையைப் போட்டு ஒருவர் நிற்பார். அதுதான் இமிக்கிரேஷன். வாரத்துக்கு ஒரு தடவை AEROFLOTE மட்டும் சேவையைத் தொடங்கியிருந்தது. அடையாள அட்டையைக் கழுத்தில் கொழுவியபடியே வெளியே வந்தவனுக்கு தான் கொண்டுவந்த விலாசத்தைக் கையில் எடுத்து அங்கு நின்ற போலீஸ்காரரிடம் காட்டி, “எப்படிப் போகவேண்டும்?” எனக் கேட்டான். அவனது கழுத்தில் இருந்த அடையாள அட்டையைக் கவனித்தவர், மரியாதையோடு தானே கொண்டுபோய் விடுவதாகக்

கூறினார். டாக்ஸிக்கான பணத்தைத் தனக்குத் தருமாறு கூறித் தனது காரிலேயே ஏற்றிக்கொண்டுபோய்விட்டார்.

கடவுள் தூணிலும் இருப்பார், துரும்பிலும் இருப்பார் என்று சொல்வார்கள். அவனுக்குத் தெரிந்து தூணிலும் துரும்பிலும் இருக்கும் ஒருவர் உதயண்ணைதான். அவர் ஏற்கெனவே லாவேசில் இருந்து தரைவழியாக அங்கு வந்து சேர்ந்திருந்தார். வந்ததும் இருந்த இடத்திலேயே வியாபாரம் பண்ண தொடங்கிவிட்டார். கம்போடியாவில் நீண்ட காலம் யுத்தம் நடந்ததால் மின்சாரம் இருக்கவில்லை. நொம்பென் நகரத்தில் சில வசதியானவர்கள் டீசல் இயந்திரத்தை இயக்கி மின்சாரம் எடுத்தார்கள். அக்கம் பக்கத்து வீடுகளுக்கும் கொடுப்பார்கள். ஒரு நாளுக்கு இவ்வளவு பணம் என்று கட்டணம் அறவிட்டுவிடுவார்கள். உதயண்ணையும் மின்சார விற்பனையில் இறங்கிவிட்டார். பழைய டீசல் இயந்திரத்தை வாங்கித் திருத்தி ஓடவிட்டு சுமார் 15 வீடுகளுக்கு மின்சாரம் கொடுத்துப் பணம் வாங்கத் தொடங்கினார். அந்தப் பணத்தை வைத்துத் தங்கியிருந்த செலவை சமாளிக்கலாம் எனத் திட்டமிட்டார்.

அவர்கள் கம்போடியா வந்தது, ஒரு பெரும் திட்டத்துடன் என்பது போகப்போகத்தான் தெரிந்தது. கம்போடியா ஆட்சி அதிகாரத்தை இழந்து தாய்லாந்தின் எல்லையோரமாக இருக்கும் ‘கொங்யாய்’ என்ற மலைகளோடுகூடிய அடந்த காட்டுப் பகுதிக்கு பின்வாங்கி முகாம் அமைத்து தங்கியிருக்கும் செம் படை அமைப்பின் தளபதி ஒருவரை சந்திக்க வேண்டும். அந்தச் சந்திப்பை தாய்லாந்து ராணுவ அதிகாரி ஒருவனே ஏற்பாடு செய்திருந்தான். செம் படை ராணுவத்துக்கும் தாய்லாந்து ராணுவ அதிகாரிகளுக்கும் இடையில் நெருங்கிய வியாபாரத் தொடர்புகள் இருந்தன.

செம் படை அமைப்புப் பதுங்கியிருந்த தாய்லாந்து எல்லையை ஒட்டிய கொங்யாய் என்ற மலையும் காடு சார்ந்த இடம், காசு காய்க்கும் இடமாக இருந்தது. அந்தப் பகுதி கிரானைட் என்னும் கரும் பழுப்புப் பாறைகளை கொண்ட மலைத் தொடரைக் கொண்டது.

90–களில் தாய்லாந்து நாடு வேகமான வளர்ச்சியைக் கொண்ட நாடாக இருந்தது. அதன் நகரங்கள் அனைத்தும் பல மாடிக் கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டன. அந்தக் கட்டடங்களுக்குத் தேவையான பளிங்குக் கற்களைச் செம் படையினர் விற்பனை செய்தனர். கொங்யாய்

பகுதியில் இருந்து வெட்டி எடுத்து தாய்லாந்து கட்டட ஒப்பந்தக்காரர்களுக்குக் களவாக விற்பனை செய்யப்பட்டது. அந்தக் காட்டுப் பகுதிகளில் பெருமளவு கஞ்சாவும் பயிரிட்டு தாய்லாந்துக்கு அனுப்பிக்கொண்டிருந்தார்கள். அதற்கு தாய்லாந்து எல்லையோரம் இருந்த ராணுவ முகாமின் சில அதிகாரிகளே இடைத்தரகர்களாக இருந்தார்கள். இந்தப் பளிங்குக் கற்களை எல்லை கடந்து கடத்துவதற்குப் பெருமளவு லஞ்சமும் பெற்றுக்கொண்டிருந்தார்கள். அப்படி செம் படையோடு வியாபாரத் தொடர்புகளை வைத்திருந்த தாய்லாந்து ராணுவ அதிகாரி ஒருவனையே தன்னுடைய வெளிநாட்டுக் கட்டமைப்பு பொறுப்பாளர் ஊடாக உதயண்ணைத் தொடர்பு எடுத்துக் கம்போடியாவில் செம் படையோடு சந்திப்பை நடத்த திட்டமிட்டிருந்தார்.

செம் படை அமைப்பைச் சந்திக்கப்போவதற்காகத் தாய்லாந்து ராணுவ அதிகாரி, தனது ஆள் ஒருவரை அனுப்புவதாகக் கூறியிருந்தான். அவன் வந்து சேரும்வரை ஊரைச் சுற்றிப் பார்ப்பதும், கள்ளடிப்பதும், சமைத்துச் சாப்பிடுவதும், இரவில் வீடுகளுக்கு மின்சாரம் கொடுப்பதும்தான் அவர்களது வேலை. ‘போல் பொட்’டினால் சுமார் ஒரு லட்சம் பேர் கொல்லப்பட்ட கொலை நகரம் என வர்ணிக்கப்பட்ட இடத்தையும் போய்ப் பார்த்தார்கள். எங்குப் பார்த்தாலும் மண்டையோட்டுக் குவியலாக இருந்தன. பின்னர், அவை ஐ.நா படைகளால் அழிக்கபட்டது. அங்கோவாட் நகரில் சோழர்களால் கட்டப்பட்ட சூரியக்கோயிலையும் போய்ப் பார்த்தார்கள்.

கம்போடியா கள்ளு அவனுக்கு நன்றாகப் பிடித்திருந்தது. அங்கு கள்ளு இறக்குபவர்கள் எங்கள் ஊரைப்போல முட்டி பாவிப்பதில்லை. மூங்கில் மரத்தை குடைந்து, அதனாலான குடுவைகளையே பாவிப்பார்கள். நுரை பொங்க வரும் பனங்கள்ளு. நிலத்தில் ஒரு புற்பாயை போட்டு அமர்ந்து அவர்கள் ஆசை தீர ஒவ்வொரு நாளும் குடித்தார்கள். ஐந்து லிட்டர் கள்ளு வெறும் ஒரு டாலர்தான். கம்போடியாவில் பணவீக்கம் அதிகரித்து, கம்போடிய பணத்தின் பெறுமதி குறைவாக இருந்ததால் பெரும்பாலும் ஒன்று மற்றும் ஐந்து அமெரிக்க டாலர்களே பாவனையில் இருந்தது. நூறு டாலர் வைத்திருந்தவன் பெரிய பணக்காரன்.

செம் படை கம்போடியாவை பிடிப்பதற்கு முன்னேறிக்கொண்டிருந்த காலங்களில், கம்போடிய

அரசின் சார்பாக அமெரிக்க வான் படை களம் இறங்கியிருந்தது. அமெரிக்க விமானங்கள் மீது செம் படையினர் தாக்குவதற்கு ரஷ்யா ஆயுதங்களை அள்ளிக் கொடுத்தது. அது பனிப்போர் காலம். செம் படையினரும் ரஷ்யா ஏவுகணைகளைப் பாவித்துக் குருவி சுடுவதைப்போல அமெரிக்க விமானங்களைச் சுட்டு விழுத்திக்கொண்டிருந்தார்கள்.

செம் படையினரிடம் சாம் ரக ஏவுகணைகள் இருப்பதாக ஒரு கதை அடிப்பட்டது. செம் படையிடம் மோப்பம் பிடித்து, அந்த ஏவுகணைகளைப் பெற்றுக்கொள்வதே அவர்களது திட்டம். அதற்காகத்தான் உதயண்ணை அங்கு வந்திருந்தார். அந்தச் சமயத்தில் எதிர்பாராதவிதமாக இன்னொரு விஷயமும் நடந்தது. உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்ததையடுத்து ஆஸ்ரேலியாவின் செல்வந்தர் ஒருவர் நொம்பென் நகரத்தில் தனது முதலீடுகளைச் செய்வதற்காக வந்திருந்தார். சேதமடைந்திருந்த ஆறு மாடி கட்டடத்தை வாங்கி உல்லாச விடுதியாக மாற்றியதுடன், மற்றோர் ஐந்து நட்சத்திர விடுதியும் கட்டிக்கொண்டிருந்தார். இவற்றைவிட, வெறோர் இரவு விடுதியையும் தொடங்கியிருந்தார். அந்த ஆஸ்ரேலியருக்கும் கம்போடியாவின் அரசு பொறுப்பை ஏற்றிருந்தவருக்கும் நல்ல நெருக்கம் இருந்தது. புதிதாக ஓர் இரவு விடுதி தொடங்கப்பட்ட செய்தியறிந்து அங்கு ஆட்கள் நிறைந்து வழிந்தார்கள். பெரும்பாலும் தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்த வெளிநாட்டுக்காரர்தான். உள்ளூர் வசதி படைத்தவர்களும் வரத் தொடங்கியிருந்தார்கள்.

அந்த இரவு விடுதிக்கு ஒருநாள் பொழுது போகாமல் உதயண்ணையும் அவனும் போனார்கள். அது எதேச்சையான சந்திப்பு. அந்த ஆஸ்ரேலியரை சந்திக்க முடிந்தது. அவர் பகட்டாக நடந்துகொண்டார். அவருக்குச் சமமாகப் பகட்டுக் காட்ட வேண்டும் என்பதற்காக, இவர்களும் பல பொய் சொன்னார்கள். அதில் ஒரு பொய் நன்றாக எடுபட்டது. தாங்களும் கம்போடியாவில் முதலீடு செய்ய வந்தவர்கள்தான் என உதயண்ணைச் சொன்னதும், அந்த மனிதர் அவர்களுக்கு நிறைய மரியாதை கொடுத்தார்.

அதன் பின்னர் அந்த விடுதிக்கு அடிக்கடி செல்லத் தொடங்கினார்கள். அறிமுகமாகும் எல்லோரிடமும் முதலிட வந்ததாகச் சொன்ன பொய்யையே சொன்னார்கள். அங்குச் செல்லத் தொடங்கிய பின்னர் வெளிநாட்டு தொண்டு

நிறுவனத்தைச் சேர்ந்தவர்களின் அறிமுகங்களும் கிடைக்கத் தொடங்கியது.

இரவு விடுதியின் ஒரு பகுதியில் உடல் மசாஜ் என்ற போர்வையில் பாலியல் தொழில் நடந்துகொண்டிருந்தது. பெரும்பாலனவர்கள் யுத்தத்தின்போது இடம் பெயர்ந்த வியட்னாமியப் பெண்களாக இருந்தார்கள். ஒரு மசாஜ்ஜுக்கு வெறும் 5 அமெரிக்க டாலர்கள்தான். அந்த ஆஸ்ரேலியருக்கும் கம்போடிய அரசைச் சேர்ந்தவர்களுக்கும் நெருக்கம் இருந்ததை அறிந்த உதயண்ணைக்குத் திடீரென ஒரு திட்டம் உதித்திருந்தது. அந்த விடுதிக்கு அரசு உயர் அதிகாரிகள் சிலரும் வந்து போகத் தொடங்கியிருந்தார்கள். அவர்களுடனும் நெருக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கினார்கள்.

அப்போது புலிகளிடமும் கப்பல்கள் சில இருந்தன. அவை சர்வதேச சேவைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தன. அவை அனைத்தும் கிரேக்கத்திலும் பனாமாவிலுமே பதிவுகள் செய்யப்பட்டிருந்தன. அந்த நாடுகளில் கப்பல் பதிவுக்கான வாடகைகள் அதிமாக இருந்தன. அதுகூடப் பரவாயில்லை. சர்வதேச உளவுத் துறையினரும் இந்த விஷயத்தை மோப்பம் பிடித்திருந்தனர்.

பல உளவு நிறுவனங்கள் புலிகளின் கப்பல்கள் பதியப்பட்டிருக்கும் நிறுவனங்கள் மற்றும் கப்பல்களின் பெயர்களை நோட்டம்விடத் தொடங்கியிருந்தார்கள். ஆகவே, இந்தக் கப்பல்களைக் கம்போடியாவில் பதிவுசெய்வதுதான் உதயண்ணையின் திட்டமாக இருந்தது. கம்போடியாவில் பதிவு வாடகை குறைவு என்பதோடு உலக நாடுகளின் உளவுப் பிரிவுகளின் கவனத்தையும் திசை திருப்பிவிடலாம் என்பதுதான் திட்டம். அது வீண்போகவில்லை. கம்போடிய அதிகரிகளோடு ஏற்படுத்திய நெருக்கம் கை மேல் பலன் அளித்தது. வேறு நாடுகளில் பதிவில் இருந்த கப்பல்களின் பெயர்கள் மாற்றம் செய்து, நிறுவனங்களின் பெயரும் மாற்றம் செய்யப்பட்டது. புதிய ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுக் கம்போடியாவில் பதிவுசெய்யப்பட்டது.

இந்த வேலைகள் நடந்துகொண்டிருக்கும்போதே தாய்லாந்து ராணுவ அதிகாரி அனுப்பிய ஆள் ஆடிப்பாடி சாவகாசமாக வந்து சேர்ந்தான். செம் படையினரை சந்திக்கச் செல்வதற்காக வாகனம் ஒன்றை வாடகைக்கு

எடுத்தனர். டொயோட்டா ஜீப் ஒன்று கிடைத்தது. செம் படையினரை சந்திக்கச் செல்லும் இடத்தில் எரிபொருள் நிரப்ப முடியாது. அதனால் மேலதிகமாக எரிபொருள் எடுத்து சென்றனர். பெட்ரோல் நிரப்பிய பேரல்கள் வாகனத்தில் அடுக்கப்பட்டன.

இவர்கள் இரண்டு பேர், ராணுவ அதிகாரி அனுப்பிய ஆள், செம் படையோடு தொடர்புகளைக் கொண்டிருந்த ஒருவன் என நான்கு பேருமாகச் செம் படை ராணுவ அதிகாரிகளைச் சந்திப்பதற்காகப் பயணத்தைத் தொடங்கினார்கள். செம் படையினர் இருந்த காடு பல நூறு மைல்களுக்கு அப்பால் இருந்தது. வழியில் கள்ளும் சாப்பாடும் வாங்கிப் பத்திரப்படுத்திக்கொண்டார்கள்.

நீண்ட பயணம். பல சமயங்களில் இவன் தூங்கிப்போனான். ராணுவ அதிகாரி அனுப்பிய ஆளும், செம் படையின் தொடர்பாளனும் வளவளவெனக் கதைத்துகொண்டு வந்தார்கள். சமயங்களில் அவர்களின் பேச்சும் கெக்கட்டச் சிரிப்பும் அவனுக்கு எரிச்சலையும் கொடுத்தது.

இறுதியில் ஒருவழியாகச் செம் படையின் காட்டுப் பகுதிக்கு வந்து சேர்ந்தனர் செம் படை அதிகாரிகள். அவர்களை வரவேற்றனர். விறகுபோல் குவித்து வைக்கப்பட்டிருந்த ஏ.கே. ரக துப்பாக்கிகளைக் கொண்டுபோய்க் காட்டினார்கள். அவர்கள் எதிர்பார்த்து போன ஏவுகணை எதுவுமே அவர்களிடம் இல்லை. அமெரிக்கப் படைகளின் வான் தாக்குதல் முடிவடைந்ததுமே ரஷ்யாவின் உளவு முகவர்கள் தங்கள் ஏவுகணைகளை மீள பெற்றுக்கொண்டுவிட்டார்கள் என்பது அப்போதுதான் தெரிந்தது. ஆனால், சில 50 கலிபர் துப்பாக்கிகளும் எல்.எம்.ஜி மற்றும் நல்ல நிலையில் இருந்த ஏ.கே துப்பாக்கிகள், ரவைகள் எனக் கொஞ்ச சாமான்கள் வாங்க முடிந்தது.

பேரங்கள் முடிந்த பின்னர் செம் படை அதிகாரியின் தாய்லாந்து வங்கிக்கணக்கு ஒன்றில் பாதிப் பணத்தைப் போட்டதும் அவர்கள் ஆயுதங்களைத் தருவார்கள். காட்டுக்கு வெளியில் கொண்டுவந்து, கடற்கரைப் பகுதி ஒன்றில் ஒப்படைப்பார்கள். மீதி பணம் அந்தச் சந்திப்பை ஒழுங்கு செய்த தாய்லாந்து அதிகாரியிடம் கொடுக்க வேண்டும். நம்பிக்கையின் அடிப்படையில் ஒப்பந்தம் நிறைவேறியது. அந்தப் பேர விவரத்தை செம் படையின்

தொலைத்தொடர்பு கருவி மூலம் தாய்லாந்தில் இருந்த ஒருவருக்கு உதயண்ணை அனுப்பினார். பேரம்படிந்து வர 15 நாட்களுக்கு மேல் எடுத்தது. அதுவரை அவனும் உதயண்ணையும் அங்குதான் தங்கியிருக்கவேண்டும்.

ஆரம்பத்தில் அவனுக்கு ஏதோ சிறையில் இருந்தது போன்றதோர் உணர்வு இருந்தது. ஆனால், சில நாட்களில் பழகிபோய்விட்டது. அவர்களோடு சேர்ந்து கஞ்சா அடிப்பது, காட்டில் வேட்டையாடுவது என அவர்களோடு நட்பு வளர்ந்திருந்தது. சாதகமான செய்தி வந்து சேர்ந்ததும் அவர்கள் கொள்வனவு செய்த ஆயுதங்களைத் தாய்லாந்து வளைகுடாவில் அமைந்திருந்த சலோம் தீவில் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டும். அத்தோடு அவர்கள் வேலை முடிந்துவிடும்.

திட்டப்படியே எல்லாம் நடந்தது. அதன்படி சலோம் தீவில் ஆயுதங்களைப் படகுகள் மூலம் கொண்டுபோய்ச் சேர்த்தவர்கள். பிறகு நிம்மதியாக நெம்பென் நகருக்குத் திரும்பினார்கள்.

உதயண்ணை அவனிடம் இருந்து விடைபெற்றார். போக முதல் அவர் வாங்கி இயக்கிய டீசல் இயந்திரத்தை யாரிடமாவது விற்று பணத்தை எடுக்கச் சொன்னார். அவர் எங்கே போகிறார் என்பதெல்லாம் தெரியாது. அவன் கேட்டதும் இல்லை. சில நாட்களின் பின்னர் அவனும் கிழக்கு ஐரோப்பிய நாடு ஒன்றுக்குப் புறப்பட வேண்டும். டீசல் இயந்திரத்தையும், மின்சாரம் கொடுப்பதற்கான உரிமத்தையும் சேர்த்து 2,000 டாலர்களுக்கு உள்ளூர் செல்வந்தர் ஒருவருக்கு விற்றான்.

பணத்தை எடுத்துக்கொண்டு அவன் வழைமையாகக் கள்ளடிக்கும் இடத்துக்குப் போனான். அந்த கள் விற்பனையாளனின் மகளுடன் அவனுக்கு அறிமுகம் ஏற்பட்டிருந்தது. அதைக் காதல் என்றும் சொல்ல முடியாது. ஆனால், இருவருக்கும் இடையில் ஓர் அன்பு இழையோடியிருந்தது உண்மை. அவனைக் கண்டதும் தனது தகப்பனை அழைத்துக் கடையைக் கவனிக்கும்படி சொன்ன அவள், ஒரு கள்ளு குடுவையையும் புற்பாயையும் எடுத்தபடி வீட்டின் பின்னால் இருந்த பற்றையோரமாக மர நிழலுக்கு வந்தாள். பாயை விரித்துவிட்டு ஓடிப்போய் இறால் பொரியல்களையும் அள்ளி வந்து அவன் முன்னால் வைத்துவிட்டு, அவன் கை விரல்களைத் தனது விரல்களோடு

கோத்து அவன் தோள் மீது சரிந்துகொண்டாள். வழமையைவிட அவன் வேகமாகக் கள்ளை உறிஞ்சினான். கள்ளுக் குடித்து முடிந்ததும் வழமைபோலவே அவள் பாயில் சரிந்துகொள்ள வேண்டாம் என்றவன், கையில்கொண்டு வந்த பணத்தை அவளிடம் எடுத்து நீட்டினான். அவ்வளவு தொகைப் பணத்தையும் மிரட்சியோடு பார்த்தவளிடம் நான் போகப்போகிறேன். மீண்டும் சந்திக்க சந்தர்ப்பம் கிடையாது. இதை வைத்து ஏதாவது வியாபாரம் செய்து உனது வாழ்க்கையைக்கொண்டு நடத்து என்று விடைபெறப் போனதும் கலங்கிய கண்களோடு அவனது படம் ஒன்றையாவது தந்துவிட்டு போ என்றவளுக்கு எப்போதும் கடவுச்சீட்டுக்களை மாற்றுவதற்காகத் தயாராக வைத்திருக்கும் பாஸ்போர்ட் அளவு படம் ஒன்றை எடுத்து நீட்டிவிட்டு விடைபெற்றுக்கொண்டான்.

# 41

*அவனை ஒருவர் சந்திப்பார். அதற்கான இடத்தை அவனையே தெரிவுசெய்யும்படி செய்தி வந்தது. இப்போ அவன் அண்மைக்காலமாகக் கொழும்பில்தான் தங்கி நிற்கிறான். தனக்கென்று ஓர் அடித்தளத்தைக் கொழும்பில் உருவாக்கிவிட்டான். அவசரமாகச் சந்திப்பு, நல்ல சாப்பாடு, மகிழ்வான விடுதி, எது கேட்டாலும் கண்ணை மூடிக்கொண்டு அழைத்துச் செல்லும் பரிச்சயத்தை விரைவிலேயே அங்கு உருவாக்கிவிட்டான். கொழும்புக்கு வெளியில் வத்தளை பகுதிதான் அவனது மையமாக இருந்தது.*

*கொழும்பில் இருப்பதும், வெளிநாட்டில் இருப்பதும், யாழ்ப்பாணத்தில் இருப்பதும் அவனுக்கு ஒன்றுதான். இயக்கம் தந்த வேலையைச் செய்ய வேண்டும் என்பதுதான் ஒரே நோக்கமாக இருந்தது. ஆனால் என்ன கொழும்பில் இருக்கும்போது சற்று எச்சரிக்கையாக இருக்க வேண்டும். சிங்கப்பூரில் நின்று கொழும்புக்குப் புறப்படச் சொன்னபோது, அவனுக்குள் ஓர் உணர்சியும் இல்லை. எல்லாம் இயக்க வேலைதான். அவனுக்கு வெடிமருந்துப் பரிச்சயம் இருந்ததால் அந்த அறிவிப்பு வந்தது. கொழும்பில் ஏதோ முக்கிய வேலைலை எனச் சொல்லியிருந்தார்கள்.*

*பாம்பீச் நட்சத்திர விடுதியில் சந்திக்கலாம் என முடிவுசெய்தான். அது அவனுக்குப் பழக்கமான விடுதி. நாட்டின் அரசியல்வாதிகள், அதிகாரிகள், வியாபாரப் புள்ளிகள் எல்லாரும் வந்து போகின்ற ஒரு விடுதி அது. அந்த நாட்டின் சட்டம்–ஒழுங்கு, நீதி அனைத்தையும்*

நடைமுறைப்படுத்துகிறவர்கள் எல்லாம் அவிழ்த்துவிட்டு ஆட்டம்போடும் ஒரு விடுதி அது. நாகரிகமாக உடையணிந்து வரும் அனைவரும் அநாகரிகங்கள் அனைத்தையும் அரங்கேற்றும் ஓர் இடம். அங்குதான் அவனும் அடிக்கடி நாகரிகமாக உடையணிந்து செல்வான். அன்றும் உள்ளே நுழைந்தவன் கழுத்துப்பட்டியை லேசாக்கிவிட்டுக் காத்திருந்தான்.

வாசலிலேயே கவனத்தை வைத்திருந்தான். வந்து நிற்கும் ஒவ்வொரு காரையும் கவனமாகப் பார்த்துக்கொண்டு இருந்தான். உள்ளே நுழையும், வெளியேறும் ஒவ்வொரு மனிதரையும் கவனமாக ஆராய்ந்தபடியிருந்தான். கறுப்புக் கார் ஒன்று வழுக்கியபடி வந்து நின்றது. மேலோட்டமாக அந்தத் திசையில் பார்வையைச் சுழற்றினான். கதவைத் திறந்தபடி இறங்கியவரை எங்கோ கண்டதைப்போல இருந்தது. உற்றுப் பார்த்தான் சங்கரண்ணை. அவனுக்கு ஆச்சர்யம். எழும்பி அவரிடம் வேகமாகப் போனான். “அண்ணை நீங்களா?!” – ஆச்சர்யமாக அவரது கையைப் பற்றினான். அவர் சிரித்தார். “நீங்கள் வாறியள் ஏதும் பிரச்னை வராதே?” – மெதுவாக இழுத்தான்.

“என்னை ஒரு காக்கா, குருவிக்கும் தெரியாதுதானே. அங்கேயே இயக்கத்தில் வெளியில் தெரியாது. இங்கே யாருக்கு தெரியப்போகுது” எனச் சிரித்தார்.

சிறிய மேசை ஒன்றில் எதிர் எதிராக அமர்ந்திருந்தார்கள். சர்வர் வந்து மெனு மட்டையை வைத்துவிட்டு பணிவாக நின்றான். ஆங்கிலத்தில் அவர்களது உரையாடல் தொடர்ந்தது. “நல்லதொரு வைன் குடித்துப் பல காலங்கள். என்ன இருக்கு?” என்று மெனு மட்டையை மேய்ந்தவர், ‘‘bordeaux 6 years old’’ என்றார்.

“எனக்கு வெக்கைக்கு வைன் சரி வராது. பியர்” என்றான். அவர் திட்டங்களை விளக்கத் தொடங்கினார்.

“எலெக்ஷன் வரப்போகுது. அடுத்த தரம் அக்காச்சியைத்தான் வர வைக்கவேணும். அது சம்பந்தமா வெளிநாடு ஒண்டுலை பேச்சுவார்த்தை நடக்குது. அதுக்குதான் வந்தனான். நான் நாளைக்கே வெளிநாடு போயிடுவன்” என்றார்.

“எங்க மலேசியாக்குத்தானே?”

“அதெப்பிடி உனக்குத் தெரியும்?”

“வினோ மாமாக்குப் போனடிச்சனான். ஏதோ பிசினஸ் அலுவலாக மலேசியா போறனெண்டு சொன்னார். அதுதான்.”

சேவர், குடிபானங்களைக் கொண்டுவந்து வைத்துவிட்டுப் போனான்.

“இந்தத் திட்டம் கொஞ்சம் பிழைச்சாலும் அவங்கள்தான் வருவாங்கள். பிறகு, எங்கடை நிலைமை சிக்கலாயிடும். அக்காச்சி வந்தால்தான் பேச்சுவார்த்தை தொடங்கும். அதாலைதான் நாங்கள் வலு கவனமாகக் கையாள வேணும். இது சம்பந்தமா நீ அம்மானோடையும் நீலனோடை மட்டும்தான் தொடர்புகளை வைச்சிருக்கவேணும். அம்மான் உனக்கு வேண்டின சகலத்தையும் ஒழுங்கு பண்ணித் தருவார். இதிலை சில போன் நம்பர்கள் இருக்கு. உனக்கு வேண்டின தகவல்கள் எல்லாம் இவர்களும் சேத்துத் தருவினம். முக்கியமான பொறுப்புப் பிசகக் கூடாது. இன்னும் கொஞ்ச காலம்தான் இருக்கு. உன்னை நம்பித்தான் ஒப்படைச்சிருக்கு. சரி, நான் வரப்போறன். எனக்கு இங்கே இன்னமும் கொஞ்சம் வேலை இருக்கு.”

அவர் விடைபெற்றார். அதன் பின்னர் அவன் அவரைக் காணவேயில்லை.

❍

அவன் கேட்டவை கொழும்புக்கு அனுப்பிவைக்கப்படும் என அம்பாறையில் இருந்து அறிவிக்கப்பட்டது. என்றாலும் அவனுக்குத் திருப்தி இல்லை. நேரில் சென்றால்தான் பிசகில்லாமல் கொண்டுவரலாம் என நினைத்தான். உடனே புறப்பட்டான். அவனை ஜிம்கலி குடும்பி மலைப்பகுதியில் போராளிகளுக்குச் சமையல் செய்வதற்காக மட்டும் குடில்களால் அமைந்திருந்த அந்தச் சிறிய குமணனின் முகாமுக்கு அழைத்துப்போனவன், இங்கே தங்கியிருங்கோ நீலன் உங்களை வந்து சந்திப்பார் என்றுவிட்டு “டேய், கிச்சான் இரண்டு டீ கொண்டுவாடா..!” என்று கத்தியதும், அங்கு மரக்குற்றியில் குந்தியிருந்து புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந்த ஒரு சின்னப்பெடியன் எழும்பி வந்தான். நல்ல கலராக கொஞ்சம் குண்டாக இருந்தவன் இடுப்பில் கையை வைத்தபடி, “ரஜினி ஸ்டைலில் என்னை கிச்சான் எண்டு கூப்பிட வேண்டாம் எண்டு எத்தனை தரம்

சொல்லுறது. மை நேம் இஸ் இஸ்மாயில்'' என்றுவிட்டுப் போனவனிடம், ‘‘தம்பி எனக்குப் பிளேன் டீ பால் வேண்டாம்'' என்றான். ‘‘அண்ணே, நீங்கள் கேட்டாலும் பால் கிடையாது. பிளேன் டீதான்'' என்றுவிட்டுப்போனவன், சில நிமிடங்களில் இரண்டு கைகளிலும் கிளாசில் பிளேன் டீயை கொண்டுவந்து கிளாஸை பெரு விரலுக்கும் சுட்டு விரலுக்கும் இடையில் வைத்து லாகவமாக ஒரு சுற்று சுற்றி அவனிடம் நீட்டியபோது, ‘‘டேய், கவனமடா கீழே ஊத்தினால் அடிவாங்குவாய்'' என்ற ஜும்கலியில் அதட்டலுக்குப் பயப்படாமல் ‘‘எல்லாம் டிரெயினிங் அண்ணே டிரெயினிங்'' என்று சாதாரணமாகச் சொல்லி சிரித்தபடி ஜும்கலிக்கும் கிளாசை ஒரு சுற்று சுற்றிவிட்டு கொடுத்துவிட்டு போக முயற்சித்தவன், திரும்பி அவனது கை மணிக்கூட்டைப் பார்த்து, ‘‘அண்ணே, நல்லாயிருக்கண்ணே எங்கே யாழ்ப்பாணத்திலை வாங்கினதா'' என்றான். ‘‘இல்லை சிங்கப்பூரிலை வாங்கினது''. ‘‘சிங்கப்பூரா... அங்கேயெல்லாம் போயிருக்கிறீங்களா?'' என்று ஆச்சர்யப்பட்டவன், மணிக்கூட்டை ஒருமுறை தொட்டுத்தடவிப் பார்த்துவிட்டு, ‘‘உள்ளே லைட் எரியுமா?'' அவனது அடுத்தக் கேள்வி, ‘‘ஓ எரியும்'' என்றபடி லைட்டை எரியவிட்டுக் காட்டினான். ‘‘தண்ணிகூட உள்ளே போகாது இதைக் கட்டிக்கொண்டே குளிக்கலாம்'' என்றான்.

‘‘நல்லாத்தான் இருக்கு'' என்றபடி அங்கிருந்த மற்றவர்களுக்கும் தேநீரைக் கொடுத்துவிட்டு அங்கிருந்து போனவன், தனக்கும் ஒரு பிளேன் டீயை எடுத்தபடி போய் மீண்டும் புத்தகத்தைப் புரட்டத் தொடங்கியிருந்தான். அதுவரை அவனது செய்கைகளையே உற்று பார்த்துக்கொண்டிருந்தவன் அவனது பேச்சு, சுட்டித்தனம், எதையாவது சொன்னால் உடனே பட்டென்று ஏதாவது பதில் சொல்லும் திறைமை பிடித்திருந்தது. சைகை மூலம் ஜும்கலியிடம் ‘‘யாரது?'' என்றான்.

‘‘அவனின் பெயர் இஸ்மாயில். அப்பா ஆரோ பாகிஸ்தான் வியாபாரியாம். இவன் பிறந்த தோடை அவன் விட்டுட்டுபோயிட்டான். அவனின்ரை அம்மா வேறை கலியாணம் கட்டிபோயிட்டாளாம். இவனைத் துரத்திவிட்டிட்டாங்கள். இவன் போய் ஒரு தேத்தண்ணி கடையிலை வேலைக்குச் சேர்ந்திருக்கிறான். ஒருநாள் இவனின்ரை குளப்படி தாங்காமல் முதலாளிக்காரன் இவனுக்கு பிடரியிலை ஒண்டு போட, இவனும்

சுடுதண்ணியாலை முதலாளிக்கு எத்திப் போட்டு ஓடியந்து எங்களோடை வந்து சேந்திட்டான். இப்பதான் 11 வயசாகுது. அதாலை டிரெயினிங்குக்கும் அனுப்பவில்லை. இங்கே முகாமிலை வேலையள் செய்யட்டும் எண்டு விட்டிருக்கிறன். நல்ல கெட்டிக்காரப் பெடியன். அதைவிட நல்லா டீ போடுவான். இங்கேயிருந்தே படிக்கிறான்'' என்று சொல்லி முடித்தான் ஜும்கலி.

வாகனம் ஒன்று வரும் சத்தம் கேட்டது ஜீப்பில் நீலன் வந்துகொண்டிருந்தான். அங்கிருந்து புறப்படும்போது இஸ்மாயிலை அழைத்தவன், “உனக்கு சிங்களம் தெரியுமா?” என்றதும், “பொட்டக் பொட்டாக் தண்ணுவா அண்ணே” என்றான். (கொஞ்சம் கொஞ்சம் கதைப்பன்) “சரி சிங்களமும் இங்கிலீஸும் நல்லா படி. நல்லா கதைக்கவும் பழகு.

அப்பிடிப் பழகினால் என்னோடு வேலை செய்யலாம். சிங்கப்பூருக்குக்கூடப் போகலாம்” என்றதும், “சரிண்ணோ எனக்கும் படிக்கத்தான் விருப்பம்” என்று அவனது கை மணிக்கூட்டைப் பார்த்தபடியே பதில் சொல்ல, அவன் தனது மணிக்கூட்டைக் கழற்றி இஸ்மாயிலிடம், “இந்தா வைச்சிரு” என்று நீட்டினான். வெட்கப்பட்டவன் போல் ஜும்கலியையும் பார்த்துவிட்டு “இல்லை, வேண்டாமண்ணே சும்மாதான் பார்த்தனான்” என்று நெளிந்தான். “பரவாயில்லை வைச்சிரு. இது பெரிய விலை இல்லை, பிளாஸ்டிக்தான்'' என்று இஸ்மாயிலின் கையில் கொடுத்துவிட்டு ஜும்கலியிடம், “கிச்சானை கவனமெடுத்து படிக்கவை. நல்ல கெட்டிக்காரன். அதே நேரம் இவன்ரை நிறத்துக்கும் உருவத்துக்கும் இவனை வைச்சு கனக்க வேலையள் அங்காலை செய்யலாம்'' என்றபோது, நேரமாகுது போகலாமென நீலன் அவசரப்படுத்தினான்.

❍ ❍

# 42

கிரான் தரவையில் இருந்த புலிகளின் முகாம். இப்போது அவனுக்குத் தேவை ஒரு கரும்புலி. உறுதியானவன் என யாரையும் பார்த்து மதிப்பிட முடியாது என்பது அவனுக்கும் தெரியும்தான். என்றாலும் வாட்டசாட்டமான ஒருவன் வந்தால் நன்றாக இருக்கும் என நினைத்தான். கூடவே சிங்களம் கதைக்கக்கூடியவர்களாகவும் இருக்க வேண்டும். இந்தத் தகுதிகளை உடையவர்களை மட்டும் காட்டுமாறும், தேவையான ஒருவரைத்தானே தேர்வுசெய்கிறேன் என நீலனிடம் சொன்னான்.

ஆறு பேரை அனுப்பினார்கள். அதில் பெண்களும் இருந்தனர். ஒரு பெண்ணைப் பார்த்ததும், அவள்தான் பொருத்தமானவளாக இருப்பாள் என நினைத்தான். அவள் கைகளைப் பின்புறமாகக் கட்டியபடி கால்களைக் கொஞ்சம் அகல வைத்து நிமிர்ந்து நின்ற நிலையே அவனுக்குப் பிடித்துப் போயிருந்தது. அவளின் நிலையிலேயே உறுதி தென்பட்டது. எந்தக் காரியத்தையும் அவள் செய்து முடிப்பாள் எனப் பார்த்த மாத்திரத்திலேயே தோன்றியது. நல்ல உயரம் அளவான உடல்வாகு பின்னலிட்டு மடித்துக்கட்டியிருந்த தலைமுடி. மாநிறம். அவளைத் தனியாக அழைத்தான். அவனின் முன்பாக வந்து, கைகளைப் பின்னால் கட்டி, கால்களை நிலத்தில் உறுதியாக ஊன்றி விறைத்து நின்றாள். “இப்பிடி அணிவகுப்புக்கு நிக்கிற மாதிரி நிக்காமல் கொஞ்சம் இயல்பாக நில்லும் பாப்பம்.”

பின்னுக்குக் கட்டியிருந்த கைகளைத் தளர்த்திச் சாதாரணமாளாள்.

“உம்மடை பெயர் என்ன?”

“ரெஜினா”

“சிங்களம் தெரியுமா?”

“நல்லா தெரியும். அப்பா சிங்களர். அம்மா தமிழ்” – சிங்களத்தில் பதில் சொன்னாள். “சரி. கரும்புலியாகப் போக முடிவெடுத்ததுக்கு என்ன காரணம்?”

“அப்பா அம்மாவை காதலிச்சுக் கலியாணம் செய்தவர். அவரின்டை ஆக்களோடை தொடர்புகள் இல்லை. ஆனா, யாரோ அவரின்ரை சொந்தக்காரரின்ரை செத்த வீட்டுக்குப் போன இடத்தில் அவருக்குச் சாராயத்திலை நஞ்சு போட்டுக் குடுத்து கொலை செஞ்சிட்டாங்கள். அப்ப எனக்கு ஏழு வயசு. பிறகு, அம்மாதான் கூலி வேலையள் செஞ்சு குடும்பத்தை நடத்தினவா. பிறகு, அவாவும் வேற கலியாணம் செஞ்சிட்டா. ஆனா, என்னை நல்லபடியாத்தான் பாத்தவா. எங்கடை ஊர் மல்வத்தைச் சோனகரும் சிங்களரும் எங்கடை ஊருக்கே புகுந்து அட்டகாசம் பண்ணி வெட்டி கொத்தி எல்லாரையும் திரத்திட்டாங்கள். நாங்களும் அகதியா வந்து வீர முனை சித்தி விநாயகர் கோயில்லை குடியேறியிருந்தம். ஆனால், அவங்கள் அங்கேயும் விடேல்லை. சோனகர் அங்கேயும் புகுந்து அகதியா இருந்த சனங்களை வெட்டி கொத்தி கொலை செஞ்சாங்கள். அதிலை என்டை அம்மாவும் செத்துப்போனா. அதுதான் அவங்களுக்கு ஏதாவது செய்யவேணும் எண்டு இயக்கத்திலை சேர்ந்தன். அதுவும் சும்மா சண்டையிலை செத்துபோக விருப்பம் இல்லை. சாகிறதெண்டால் ஏதாவது பெரிசா செய்திட்டு சாகவேணும். அதுதான் கரும்புலிக்குப் போக விரும்பினான்” என்றுவிட்டு அவனையே அசையாமல் பார்த்தபடி நின்றாள்.

❍

நுவெரெலியாவின் மலைக்குன்று ஒன்றில் பச்சைக்கம்பளம் விரித்ததுபோல் பரவிநின்ற தேயிலைத் தோட்டங்களின் மத்தியில் தனியார் உல்லாச விடுதி ஒன்றின் முன்னால்

நின்ற காரில் இருந்து அவனும் அவளும் இறங்கினார்கள். ஏற்கெனவே அவர்கள் முன்பதிவுசெய்திருந்தார்கள். விடுதி முகாமையாளர் அவர்களது அடையாள அட்டைகளை வாங்கிப் பிரதியெடுத்து பதிவும்செய்துவிட்டு அறை சாவியை நீட்டியபடியே, "நல்லநாளாக அமையட்டும்" என்று ஆங்கிலத்தில் கூறினார்.

"இன் ஷா அல்லா" என்றபடி சாவியை வாங்கினான். அறையை நோக்கி நடக்கப் பயணப்பொதியை பணியாளன் தூக்கிக்கொண்டு பின்னாலேயே வந்தான். அறை இலக்கத்தை அடையாளம் கண்டு திறந்தான். பொதி தூக்கிவந்த பணியாளனின் கைகளில் ரூபாய் நோட்டு ஒன்றை திணித்து அவனை அனுப்பிவிட்டு கதைவைப் பூட்டினான். துப்பட்டாவால் தலையை மூடி, குனிந்துகொண்டே நின்றாள். "முஸ்லிம் பேரிலை ஐடென்டி செய்ததும் நல்லதாகப் போச்சு. இப்பிடிக் குனிஞ்சுகொண்டே நிக்கலாம். பிரச்னையில்லை. இனி துப்பட்டாவெல்லாம் தேவையில்லை. அதை எடுக்கலாம். பசிக்குதா" என்றான். ஆனால், அவளுக்கோ எல்லாம் புதியதானதாகவும் வித்தியாசமானதாகவும் இருந்ததால் மௌனமாகவே இருந்தாள்.

"என்ன பயமா இருக்குதோ? அப்பிடியெண்டால் இண்டைக்கே திருப்பி அனுப்பிவிடுறன்."

"பயமெல்லாம் இல்லை. இந்த நாட்டுக்காக எதையும் செய்வன்."

"உதையே திரும்பத்திரும்பச் சொல்லிக்கொண்டிருக்காதை. பழக்கதோஷத்திலை செக் பொயின்ட்லை போலீஸ்காரனிட்டையும் சொல்லி துலைக்கப் போறாய். சரி, எனக்குப் பசிக்குது. நீ சாப்பிடப்போறீயா?"

"ஓம் எனக்கும் பசிக்குது.."

"என்ன சாப்பிடுறாய்?"

"பண்ணியைத் தவிர என்னவெண்டாலும்!"

"பரவாயில்லையே. கெட்டிக்காரி" என்றபடி தொலைபேசியை எடுத்து உணவுவிடுதி இலக்கத்தை அழுத்தி, சில உணவு வகைகளையும் இரண்டு பெப்சி கோலாவையும்

சொன்னான்.

“போய்க் குளிச்சிட்டு வா” என்றான்.

“பிறகு குளிக்கிறனே!”

“பிறகு நான் குளிக்கவேணும். இப்ப நீ போய்க் குளி.”

குளியலறைக்குள் போனவள் சில கணங்களில் அலறினாள்.

“என்ன, கதைவை திற!”

“தண்ணி சரியான சூடா இருக்கு”

“அது சுடுதண்ணி. பைப்பைத் திருப்பிப் பார். இல்லாட்டி கதைவைத் திற”

கதவைத் தள்ளினான். கதவு திறந்தேதான் இருந்தது.

தண்ணிக் குழாயை அளவான வெதவெதப்பில் சரி செய்தவன், “இப்பிடி உடுப்போடைதான் குளிப்பியா. கழட்டிப் போட்டிட்டு வடிவாய் குளிச்சிட்டுவா” என்றுவிட்டு வெளியே வந்தான். இவளை வைச்சு இவ்வளவு பெரிய வேலையை ரிஸ்க் எடுக்கிறமே எங்கேயாவது சொதப்பிடுவாளோ என்றும் அவனுக்கு யோசனையாக இருந்தது. இதற்குள் உணவும் வந்தவிட்டது. எங்கடையள் என்னதான் துணிஞ்சுகள் எண்டாலும் அந்த விஷயத்திலை சரியான வெக்கறைப் பிடிச்சதுகள். இவளை வைச்சு இன்டர்நேஷனல் ஸ்பைரேஞ்சிலை ஒரு வேலையே தொடங்கியிருக்கிறன். புருஷன் – பெண்சாதி வேஷத்திலை வந்திருக்கிறம். சுடுதண்ணி பட்டதுமே ‘அண்ணா’ எண்டு கத்துறாள். எங்கே போய் முடியபோகுதோ என்று நினைத்தபடி இருக்கும்போதே ஈரத்தலையில் துவாயைச் சுற்றிக்கொண்டு உடை மாற்றி வந்தவள் அவனிடம், “நான் குளிசிட்டன் அண்ணா, நீங்கள் போய் குளியுங்கோ” என்றதும்.. “முதல்லை அண்ணா எண்டு கூப்புடுறதை நிப்பாட்டு” என்றதுவிட்டுப் போய்க் குளித்து முடித்து உடை மாற்றி வந்தவன் பெப்சிகளை உடைத்துக் கிளாசில் ஊற்றி ஒன்றை அவளிடம் நீட்டியபின் சாப்பிட்டு முடித்தனர்.

ஒரு சிகரட்டை எடுத்து யன்னலோரமாகப் போய் நின்று புகைத்து முடித்தவன், கட்டிலில் அவளருகில் வந்தமர்ந்தபடி

அவளிடம், “நீ முதல்லை என்னை அண்ணா எண்டு கூப்புடுறதை நிப்பாட்டு. இங்கே வந்ததும் இரண்டு தரம் என்னை அண்ணா எண்டு கூப்பிட்டிருகிறாய்” என்றதும் நாக்கை கடித்துத் தனது தலையில் லேசாய்தானே தட்டியவள் “சொறி, இங்கே ஒருத்தரும் இல்லைதானே. அதுதான் கூப்பிடிட்டன்” என்றவளிடம், “சரி, பிரச்னை இல்லை. ஆனா, நீ செய்யப்போகிற வேலைகள் எங்கடை விடுதலைக்காகச் செய்யப்போகிற சிரமமான ஆனால் உயர்ந்த உன்னதமான வேலை. எங்கடை சமூகத்திலை எந்த ஒரு பெண்ணும் செய்யாத வேலை. இந்த வேலையை எந்த ஓர் அண்ணனும் தன்ரை தங்கையைச் செய்ய விட மாட்டன். அதுதான் நீ என்னை அண்ணா எண்டு கூப்பிடுறது எனக்கு உறுத்தலா இருக்கு என்றபடி அவள் செய்யவேண்டிய வேலைகளை விவரித்துக்கொண்டிருந்தான். சில நேரங்களில் ஆர்வமாகவும்... சில இடங்களில் சலிப்போடும்... சில இடங்களில் உச்சு கொட்டியும் கேட்டுக்கொண்டிருந்தவளுக்கு, தூக்கம் கண்களைச் சுழற்ற கொட்டாவிவிட்டபடி மிச்சத்தை நாளைக்குச் சொல்லலாமே என்றபடி போர்வைக்குள் புகுந்துகொண்டாள். நேரத்தை பார்த்தன் அதிகாலையாகி இருந்தது. மீண்டும் எழுந்துபோய் ஒரு சிகரெட்டை பற்றவைத்துக்கொண்டான்.

மறுநாள் மதியம் தாண்டிய நேரத்தில் எழுந்தவள், ஆடைகளைச் சரிசெய்துவிட்டு முழங்காலை மடித்து முகத்தை அதில் புதைத்தபடி இருந்தாள். அவன் படித்துக்கொண்டிருந்த புத்தகத்தை மடித்து வைத்துவிட்டு, “என்ன பிடிக்கேல்லையோ? போறதெண்டால் இப்பவும் போகலாம். பிரச்னையில்லை.”

“அதில்லை சரியா தலை வலிக்குது. அதுதான் மற்றபடி நாட்டுக்காகவும்...” “வேண்டாம் நிப்பாட்டு” என்றவன், பையைத் திறந்து தலைவலி குளிசைகளை எடுத்து தண்ணீரையும் அவளிடம் நீட்டியபடி முதல் நாள் இரவுவிட்ட இடத்தில் இருந்து தொடங்கினான், “நீ தங்கப்போற பேகர் ஆன்ட்டி வீட்டைதான் பெரிய அரசியல்வாதியளிலை இருந்து போலீஸ் முக்கிய அதிகாரிகள் எல்லாரும் வந்து போறவங்கள். அங்கே வந்து போறவையளிட்டை நான் சொல்லுற பேர்வளியளோடைதான் முக்கியமா நீ நல்ல நெருக்கமான பழக்கத்தை ஏற்படுத்தவேணும். அப்பதான்

நாங்கள் செய்யப்போற விஷயம் சரியா நடக்கும். அதுவும் எங்களுக்குக் கொஞ்ச காலம்தான் இருக்கு. அதுக்குள்ளை அந்த நடவடிக்கையை சரியா செய்யிறதெண்டால் வேறை வழி இல்லை. அதுக்கு ஏற்ற மாதிரி உன்னை நீ மாத்திக்கொள்ளவேணும். அப்பதான் எங்கடை இலக்கு வெற்றியாகும். ஏன்... எதுக்கு.. எங்கே... யார்? என்ற வசனங்களை இனி நீ மறந்திடவேணும் சொன்னதைச் செய்ய வேணும் அவ்வளவுதான்'' என்றவனிடம்.

''அடிக்கடி எனக்குச் சொல்லிக்கொண்டிருக்கத் தேவையில்லை. ஒருக்கா சொன்னாபோதும்'' என்றவள் மீண்டும் படுக்கையில் சுருண்டுகொண்டாள். ஆறு நாட்கள் அவர்கள் அங்குத் தங்கியிருந்தார்கள். இடையிடையே அவனுக்குத் தொலைபேசி அழைப்புகள் வந்தது. தனியே போய்ப் பேசிக்கொண்டான். சில நேரம் அவளை மட்டும் அறையில் விட்டுவிட்டு வெளியே போய் வந்துகொண்டிருந்தான். அவளுக்குச் சாப்பிடுவதும் படுத்திருப்பதும்தான் வேலை. ஆறு நாட்களுக்குப் பின்னர்தான் அடுத்த திட்டங்களை அவன் விவரித்தான். ''நாங்கள் இண்டைக்கு நீர் கொழும்புக்குப் போறம். அங்கே ஆட்டோ ஓடுற ஒருத்தரோடை உன்னை அனுப்பிவிடுவன். அவர் உன்னை நான் சொன்ன ஆன்ட்டி வீட்டிலை கூட்டிக்கொண்டு போய்விடுவார். அங்கேதான் நீ தங்கியிருக்கப்போறாய். ஆன்ட்டி நல்ல மனிஷி. பிரச்னையில்லை. அவாவுக்குக் கொஞ்சமும் சந்தேகம் வராதபடி நீ நடந்துகொள்ளவேணும். அங்கேதான் பெரிய அரசியல்வாதிகளிலை இருந்து போலீஸ் பெரியாக்கள் எல்லாரும் வந்து போறவை. அவா, ஒரு சைனிஸ் ரெஸ்டாரன்ட்டும் விடுதியும் வைச்சிருக்கிறா. அங்கே சாதாரண ஆட்களுக்கு எண்டும் ஓர் இடம் வைச்சிருக்கிறா. நீ தொழிலுக்குப் புதிசு. அதைவிட வயதும் குறைவு. எண்டதாலை உன்னைத் தன்ரை வீட்டிலை வி.ஐ.பி–களுக்காகப் பாவிப்பா. அதுதான் எங்களின்ரை தேவை. அங்கே வாற அரசியல்வாதியள் போலீஸ்காரரிலை. நான் தாற பெயர் விவரக்காரரோடை நீ கூடுதலாப் பழக்கம் ஆகி நெருக்கத்தை ஏற்படுத்து. அடுத்தது என்ன செய்யவேணும் எண்டதை அப்பப்ப நான் உனக்கு அறிவிச்சபடி இருப்பன். இண்டைக்கு நீர்க் கொழும்புக்கு

*வெளிக்கிடுவம்'' என்றதும் அவள் தயாராகியிருந்தாள்.*

*நீர்க் கொழும்பின் புதிய பஸ் நிலையத்தில் இருவரும் வந்து இறங்கியபோது, அங்கு அவர்களுக்காகவே ஓர் ஆட்டோ காத்திருந்தது. ஆட்டோவில் ஏறி அமர்ந்ததும் ஆட்டோ கடற்கரை நோக்கி நகரத் தொடங்கியது. "இவர்தான் நான் சொன்ன ஆள். இவர் ஆன்ட்டி வீட்டை உன்னைக் கூட்டிக்கொண்டு போய்விடுவார். அதே நேரம் அங்கே அடிக்கடி வந்து போவார். உனக்கு என்ன பிரச்னை எண்டாலும் ஏதாவது எனக்குச் சொல்லவேணும் எண்டாலும் இவரிட்டை எழுதி குடுத்துவிடு. பிறகு நான் தொடர்புகொள்ளுவன். நான் சொன்ன விஷயங்கள் கவனம் அதோடை நான் சொன்ன பேர்வளியளோடை பழக்கத்தை ஏற்படுத்து. அதே நேரம் உன்னிலை கொஞ்சம் சந்தேகம் அவங்களுக்கு ஏற்பட்ட மாதிரி உனக்குத் தெரிஞ்சால் உடனேயே நீ அங்கேயிருந்து இவரோடை வெளிக்கிட்டிடவேணும். பயம் ஒண்டும் இல்லைத்தானே?"*

*'இல்லை'யென்று தலையாட்டினாள். "சரி, பிறகு சந்திப்பம்'' என்றவன், மெயின் வீதியில் உள்ள புனித மரியாள் பாடசாலைக்கு அருகில் இறங்கிக்கொள்ள, ஆட்டோ அவளுடன் தொடர்ந்து போய்க்கொண்டிருந்தது.*

*மூன்று வாரங்கள் கடந்துவிட்டிருந்த நிலையில் அவளின் செய்திகள் அவனுக்குத் தொடர்ந்து கிடைத்துக்கொண்டிருந்தன. அவன் நினைத்தைவிட அவள் கெட்டிக்காரியாக இருந்தாள். அவன் கொடுத்திருந்த பெயர் பட்டியலில் பெரும்பாலானவர்களுடன் நல்ல நெருக்கத்தை ஏற்படுத்திவிட்டிருந்தாள். அப்படியொரு நாளில் நீர்க்கொழும்பின் கடற்கரை உல்லாச விடுதி ஒன்றில் அறை பதிவுசெய்துவிட்டு பேகர் ஆன்ட்டியின் தரகர் ஒருவருக்குப் போனடித்து ஓர் அரசியல்வாதியின் பெயரைச் சொல்லி அவரின் நண்பன் என அறிமுகம் செய்தவன் அவளின் பெயரைச் சொல்லி அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொண்டான். அன்றிரவு அறைக்கு வந்தவளை இடுப்புக்கு மேல் பல கேணங்களில் மாறி மாறி அளவெடுத்தான். கடைசியாகக் கழுத்தைச் சுற்றியும் தலையின் பின் பகுதியையும் அளவெடுத்தான். "எதுக்குக் கழுத்து தலையெல்லாம்?" என்று அவளே சந்தேகமாகக்*

கேட்டாள்.

"ஒவ்வொரு தரமும் தலையை வைச்சு அடையாளம் கண்டுபிடிச்சிடுறாங்கள். இந்த முறை தலையைகூட வைச்சு அடையாளம் காணக் கூடாது. அதுக்குத்தான்" என்றான். அன்றிரவு விடுதியில் இருந்த உணவகத்தில் அவள் விரும்பிய உணவுகள் எல்லாம் வாங்கிப் பரிமாறினான்.

"இண்டைக்கு உனக்கு லீவு. வாடிவாய் படுத்து நித்திரை கொள்ளலாம். நான் காத்தாலை வேளைக்கே போயிடுவன். நீ ஆறுதலாய் எழும்பினதும் அந்த ஆட்டோக்காரன் வருவான். அவனோடை ஆன்ட்டி வீட்டை போ. விரைவிலை திரும்ப உன்னைக் கூப்பிடுவன்" என அவளை அறைக்கு அனுப்பிவிட்டான்.

# 43

கிரீன் வீதியில் இருந்த ஒரு சாதாரண லாட்ஜில் அறை எடுத்திருந்தான். மாலை நேரம் அவள் அதே ஆட்டோக்காரனின் ஆட்டோவில் வந்து இறங்கியிருந்தாள். அறைக்கு அழைத்துப்போனவன், அவளது மேலாடைகளை முழுவதுமாக நீக்கிவிட்டு அவன் பையில் தயாராக இருந்த கொஞ்சம் தடித்தமான அந்தக் கேன்வாஸ் துணியாலான ஆடையை அணிவித்தவன், கழுத்தை சுற்றி ஒரு பட்டியையும் சுற்றி பட்டனை பூட்டினான். அது தலையில் பிடரியில் பாதித் தலையைத் தொடும் அளவுக்கு வடிவமைக்கப்பட்டிருந்தது. சலோ ரேப்பினால் இணைத்து ஒட்டப்பட்டிருந்த நான்கு சிறிய பேட்டரிகளை எடுத்தான். அவை ஏற்கெனவே சிறிய வொயர்களால் ஒழுங்காக இணைக்கப்பட்டிருந்தன. அதனை அவளது மார்புகளுக்கு இடையில் செருகி கழுத்துப் பட்டியில் இணைக்கப்பட்டிருந்த வொயரை அளவாக வெட்டியவன், மேலாடையாக அணிந்திருந்த ஆடையில் இருந்த வொயர்களோடு இணைத்து, பின்னர் அதில் ஒரு கிளிப் போன்றதொரு கருவியை இணைத்தான். பேட்டரியோடு இருந்த வொயரில் சிறிய பட்டன் ஒன்றையும் இணைத்தவன், அவளிடம், “இதை வடிவாய் பார். நான் இப்ப கனெக்ஷனை குடுக்கேல்லை. ஏனென்றால் பட்டன் சில நேரம் தவறுதலாக அழுத்தி விட்டாலும் எல்லாம் பிழைச்சுப்போகும். அதாலை சரியான நேரத்துக்கு நீ இந்தக் கிளிப்பை இந்தப் பேட்டரியோடை இருக்கிற வொயரிலை குடுத்து வைச்சிட்டு சரியான நேரத்துக்குப் பட்டனை அமத்தினால் சரி” என்றவனுக்கு ஓமென்று தலையாட்டினாள்.

வொயரின் இரண்டு முனைகளும் ஒன்றோடு ஒன்று முட்டிவிடாதபடியும் அவள் இலகுவாக இணைப்பை ஏற்படுத்த வசதியாகவும் சில மில்லிமீட்டர் இடைவெளிவிட்டு அவற்றை அவளின் மார்புகளின் வலம் இடமாக இருபக்க மேற்பரப்புகளிலும் டேப் போட்டு ஒட்டியவன், சுடிதாரை அணியச் சொல்லிவிட்டு அவளை ஒருமுறை சுற்றிப் பார்த்தவன், “ஒரு வித்தியாசமும் தெரியேல்லை; எல்லாம் அந்த மாதிரி இருக்கு” என்றான். கழுத்து பட்டியை மறைக்க, துப்பட்டாவை எடுத்து அவள் கழுத்தில் சுற்றி தலையிலும் முக்காடுபோல் போட்டுவிட்டு நேரத்தைப் பார்த்தான்.

“சரி நேரமாயிட்டுக் கிளம்புவம்” என்றவன், அவளை அழைத்துக்கொண்டு வெளியே வந்து தயாராக நின்ற ஆட்டோவில் ஏறி “போ” என்றான். ஆட்டோ நகர்ந்தது.

அவளைப் பார்த்து “என்ன பேசாமல் இருக்கிறாய். பயம் ஒண்டும் இல்லைத்தானே?” என்று கேட்டதற்கு, ‘இல்லை’ என்று தலையாட்டியவள், “இந்த நாட்டுக்காகவும் தலைவ...” அவள் சொல்லி முடிப்பதற்குள் அவள் உதடுகளில் அவன் விரலை வைத்து அழுத்தி “உஸ்..” என்றவன்,

“கூட்டத்துக்குப் பாதுகாப்புப் பொறுப்பு உனக்குத் தெரிஞ்ச ஆள்தான். நந்தி ஏக்கநாயக்கா. அதாலை உனக்கு உள்ளே போறதிலை எந்தப் பிரச்னையும் இல்லை. மற்றது உனக்கு மேடைக்கு முன்னாலையே வி.ஐ.பி பகுதியிலை இடம் ஒதுக்கியிருக்கு. மேடையிலை இருக்கிறவையிலை உனக்குப் பழக்கமான ஆக்களும் இருப்பினம். உள்ளே போக முதல் இந்தப் பேட்சை குத்திக்கொள்” என்று பையில் இருந்த பெரிய பச்சைக் கலர் பேட்ச் ஒன்றை எடுத்து அவளிடம் கொடுத்துவிட்டு ஆட்டோவை ஒரு கடையின் முன்னால் நிறுத்தி தண்ணிப் போத்தலும் ஒரு பிஸ்கட் பாக்கெட்டும் வாங்கிவந்து ஒரு பையில் போட்டு அவளிடம் நீட்டினான்.

“இதுதான் கடைசிக் கூட்டம். அதாலை கூட்டம் முடிய கனநேரம் ஆகும். இதை வைச்சுக்கொள்” என நீட்டியவன், “என்ரை வேலை இதோடை முடிஞ்சுது. இனி உன்ரை கையிலைதான் எல்லாம்” என்று அவர்களை வழியனுப்பி வைத்தவன், சில நிமிடங்கள் கழித்து இன்னொரு ஆட்டோவில் ஏறி அவளைப் பின்தொடர்ந்தான்.

இவர்கள் அங்கே போனபோது கூட்டம்

தொடங்கியிருந்தது. சரவெடிகள் காதைப் பிளந்தன. எங்கும் ஒரே பச்சை மயமான தோரணங்கள். வரவேற்பு வளைவுகள் என அலங்கரித்திருந்தார்கள். கட்சி வேட்பாளரின் பிரமாண்டமான கட்டவுட்டுகளும் மற்றவர்களின் சிறிய கட்டவுட்டுகள், வண்ண விளக்குகள் என எனத் தேர்தல் திருவிழா களைகட்டி இருந்தது. பச்சை நிற பேட்சை இடது பக்க மார்பில் குத்திக்கொண்டு தலையைத் துப்பட்டாவால் போத்தியபடி ஆட்டோவில் வந்து இறங்கியவள் சுற்றி ஒரு நோட்டம்விட்டாள்.

அங்கே ஜீப்புக்கு அருகில் வோக்கியும் கையுமாக நின்றிருந்த பாதுகாப்புக்குப் பொறுப்பாயிருந்த நந்தி ஏக்கநாயக்காவை நோக்கிப் போய்ச் சிறிது நேரம் கதைத்தவள், திரண்டிருந்த கூட்டத்தில் முன்பக்கமாக வி.ஐ.பி–க்களுக்கு என மேடைக்கு முன்னால் ஒதுக்கப்பட்ட இடத்தை நோக்கி நடந்தாள். பாதுகாப்பு வேலிக்கு அருகில் நின்றிருந்த போலீஸ்காரர்களுக்கு அருகில் வந்து பாதுகாப்பு அதிகாரியைத் திரும்பிப் பார்த்தாள். கையை அவளை நோக்கி ஆட்டியவர் காவலுக்கு நின்றிருந்த போலீஸ்காரர்களிடம் நம்ம ஆள்தான் என்று சைகை செய்ததும் அவளது கையில் இருந்த பையை மட்டும் பார்த்துவிட்டு அவளைச் சோதனை போடாமல் மரியாதையோடு உள்ளே அனுமதித்தார்கள். உள்ளே சென்றவள் முதல் வரிவரிசையில் இருந்த கதிரையில் அமர்ந்தாள். மேடையில் இருந்த வயதான அரசியல்வாதி ஒருவர் அவளைப் பார்த்து மெதுவாகப் புன்னகைத்துவிட்டு அக்கம்பக்கம் பார்த்தார். அவளும் அவருக்கு ஒரு மெல்லிய புன்னகையை வீசிவிட்டு நேரத்தைப் பார்த்தாள். நேரம் 9... 10... 11–யும் தாண்டிப் போய்க்கொண்டிருந்தது. இன்னோர் இடத்தில் கூட்டத்தை முடித்த தலைவர் வரும் உலங்குவானூர்தியில் ஏதோ கோளாறாம். கொஞ்சம் தாமதமாக வருவார் என அறிவித்தார்கள்.

ஒரு மாதிரியாகத் தலைவர் வந்து சேர்ந்தார். மேடையில் ஏறி தனது மணிக்கூட்டில் நேரத்தைப் பார்த்தார். நேரம் சரியாக 12:17 மக்களைப் பார்த்து கையை அசைத்தவர் மைக்கைப் பிடித்து, “அனைவருக்கும் காலை வணக்கம்” என்றார். கரவொலியும் ‘தலைவர் வாழ்க’ என்ற ஒலிகளுக்கு இடையில் தயாராக வைத்திருந்த சரவெடிகளில் ஒருவன் நெருப்பை வைத்தான். வெடிச்சத்தம் காதைப் பிளக்க, அவள் தனது இரு பக்க மார்புகளிலும் தனித்தனியாக ஒட்டப்பட்டிருந்த வொயர்களை இழுத்து ஒன்றாக

இணைத்தவள் மேடையின் மீது வேகமாகப் பாய்ந்து ஏறினாள். சரவெடிகளுக்கு இடையில் பெரியதொரு வெடிச்சத்தம். மேடை தீப்பிடித்து எரிந்துகொண்டிருந்தது. ஆனாலும் யாழ் நூலகம் எரிந்த தீயைவிட அது சிறிதாகவே இருந்தது. மக்கள் நான்கு பக்கமும் சிதறி ஓடிக்கொண்டிருந்தனர். அவனும் ஓடிக்கொண்டிருந்த சனங்களிடையே மறைந்துபோனான்.

அடுத்த நாள் செய்திகளில், 'பச்சைக் கட்சி வேட்பாளரோடு அவரது கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர்' – இதுதான் தலைப்புச் செய்திகள்.

தற்கொலை குண்டுதாரி பெண் எனவும், ஒரு பெண் மேடையில் ஏறியதைப் பார்த்ததாகப் பலர் போலீசாரிடம் தெரிவித்துள்ளனர். ஆனாலும் தற்கொலை குண்டுதாரி ஆணா, பெண்ணா என்று அடையாளம் காண முடியாத அளவுக்கு தலை உள்பட உடல் சிதறிப்போயுள்ளது எனப் பத்திரிகைகள் எழுதின. தற்கொலை குண்டுதாரியை இனம் காண்பதற்காக இலங்கை புலனாய்வுப் பிரிவினர் ஸ்காட்லாண்டு யாட்டின் உதவியை நாடியுள்ளனர். பத்துப் பேர் கொண்ட அதிகாரிகள் தடயவியல் நிபுணர்கள் கொழும்பு வர உள்ளனர்.

ஸ்காட்லாண்டு யாட்டின் அதிகாரிகளுடன் மேற்கொள்ளப்பட்ட தடயவியல் பரிசோதனைகளின்படி தற்கொலை குண்டுதாரி பெண் எனவும், பெண்ணின் மாதிரி உருவத்தையும் கணினி உதவி மூலம் வரைந்து கொடுத்துள்ளனர். 'இந்தப் பெண்ணைப் பற்றிய விவரங்கள் தெரிந்தவர்கள் அருகில் உள்ள காவல் நிலையங்களுடன் தொடர்புகொள்ளவும்' என வரையப்பட்ட படம் ஒன்று பத்திரிகையில் வெளியாகியிருந்தது. ஸ்காட்லாண்ட்காரன் பரவாயில்லையே என்றபடி தனது கடவுச்சீட்டையும் விமானப் பயணச்சீட்டையும் எடுத்துச் சட்டைப்பையில் வைத்தான்.

❍ ❍

# 44

**தா**ய்லாந்தின் தலைநகருக்கு வெளியே ஒரு கிராமத்தில் தங்கியிருந்த அவனுக்கு மீண்டும் இலங்கைக்குப் போகும்படி உத்தரவு கிடைத்தது. தன்னிடமிருந்த கடவுச்சீட்டுக்களை எல்லாம் எடுத்து வரிசையாக அடுக்கிப் பிரித்துப் பார்த்து அதில் இரண்டைத் தெரிவுசெய்தான். இந்த முறை சிங்கப்பூர் கிரீன்கார்டு, இலங்கை பாஸ்போட்டிலையே போவம். அது நல்லது எண்டு முடிவுசெய்தான். வேறொரு கடவுச்சீட்டில் தாய்லாந்தில் இருந்து வெளியேறியவன், சிங்கப்பூரில் ஸ்ரீலங்கா கடவுச்சீட்டில் உள்நுழைந்தான். அன்றிரவே மீண்டும் சிங்கப்பூரில் இருந்து கொழும்பு செல்லவேண்டும். இலங்கையில் சிலருக்குப் பரிசு கொடுப்பதற்காக வாசனை திரவியங்கள் சிலவற்றை வாங்கினான். “உலகத்திலை எத்தனை விதமான நல்ல வாசனைத் திரவியங்கள் விதவிதமாக இருந்தாலும் எங்கடையளுக்கும் சிங்களவனுக்கும் சாளியைவிட்டால் வேறையொண்டும் தெரியாது” என்று நினைத்தபடி சாளி பெர்ஃபியூம் நலைந்து, லோக்கல் ரே–பன் கூலிங்கிளாஸ் நாலைந்து, லஞ்சம் எல்லாம் வாங்கியாச்சு என்று நினைத்தான். அனைத்தையும் சரி செய்தபடி விமானம் ஏறினான்.

கொழும்பு விமான நிலையத்தில் வெளியே வந்தவன் ஆட்டோ ஒன்றைப் பிடித்தான். தன்னை ஏதாவது நல்லதொரு லாட்ஜில் இறக்கிவிடச் சொன்னான். ஜம்பட்டா வீதியில் ஒரு லாட்ஜ் இருப்பதாகச் சொல்லி, அங்கு இறக்கிவிட்டான் ஆட்டோக்காரன். கொழும்பு

போய்க்கொண்டிருக்கும் பொழுதே தான் வந்துவிட்ட செய்தியைச் சிலருக்குக் கைத் தொலைபேசி மூலமாகத் தெரிவித்துவிட்டிருந்தான்.

அன்றிரவு ஜிந்துப் பிட்டியில் இருந்த வேணிபாரில் ஒரு சந்திப்பு. அங்குச் சந்தித்தவர்களுடன் தண்ணியடித்துவிட்டு அங்கேயே கோழி பிரியாணியும் சாப்பிட்டான். நல்ல போதை. ஆட்டோ ஒன்றைப் பிடித்து லாட்ஜுக்கு வந்தான். தள்ளாடியபடி வந்து கட்டிலில் அப்படியே விழுந்தான். கண் அயர்ந்து போகும்போதே யாரோ கதவில் பலமாகத் தட்டினார்கள். 'எவண்டா இந்த நேரத்திலை?' என்று நினைத்தபடி கதவைத் திறந்தான். கதவருகில் காத்திருந்த இருவர், பாய்ந்து அவனைக் கட்டிலில் தள்ளி கையில் விலங்கைப் போட்டார்கள். அவனின் உடுப்பு பையை ஒருவன் துளாவ மற்றவன் அவனின் கைத் தொலைபேசியை நோண்டினான். இவனுக்கு விஷயம் ஓரளவுக்குப் புரிந்தது. ஆனால், எப்படி என்று புரியவில்லை. எது எப்பிடியானாலும் ஆங்கிலத்திலேயே கதைப்பதாக முடிவெடுத்தான். ஆங்கிலத்தில், "நீங்கள் யார், என்ன வேணும்?" எனக் கத்தினான். "கள்ள நாயே!" என்றபடி ஓர் உதைதான் விழுந்தது. அதற்குமேல் எதுவும் பேசாதவர்கள். அவனது கடவுச்சீட்டையும் பையையும் எடுத்துக்கொண்டு வெளியில் வந்து அங்கு நின்ற டொயோட்டா டொல்பின் ரக வானில் உள்ளே தள்ளினார்கள். உள்ளே இன்னொருத்தனும் ஒரு பெண்ணும் இருந்தார்கள்.

உள்ளை இருந்த பெண் அவனின்ரை நாடியை ஒரு கையாலை பிடிச்சு வலம் இடமாகத் திருப்பிப் பார்த்திட்டுச் சிங்களத்தில் "இவனைத் தெரியேல்லை" என்றாள்.

"டேய். பு....மகனே, நீ புலிதானே?"

"எக்ஸ்கியூஸ் மீ, ஐ டிடின்ட் அண்டர்ஸ்டாண்டு."

"தமிழிலை கதையடா வேசைமேனே" என்றபடி அவளின் பங்குக்கு அவனின் காதைப் பொத்தி ஓர் அறைவிட்டாள்.

அவனின் ஷர்ட் ஒன்றை எடுத்து ஒருத்தன் அவனது கண்ணைக் கட்டினான். வேன் 20 நிமிடங்களாக ஓடிக்கொண்டிருந்தது. இப்பிடித்தான் அவன் பார்த்த ஒரு இங்கிலீஷ் படத்திலை ஹீரோவை கண்ணைக் கட்டி கொண்டுப் போவார்கள். ஹீரோ, போகிற வழியை அக்கம் பக்கத்திலை கேக்கிற சத்தத்தை வைச்சு அடையாளம்

பிடிப்பார். பிறகு, அதே மாதிரி ரஜினியும் ஒரு படத்திலை நடிச்சிருந்தார். இவனும் அது மாதிரி வெளியிலை என்ன சத்தம் கேக்குதெண்டு காதை குடுத்து கவனித்தான். ஆனால், சிங்களன் புத்திசாலி. வானிலை சிங்களப் பாட்டைச் சத்தமாகப் போட்டிருந்தான். அதலை ஒண்டும் கேக்கேல்லை. கடைசியிலை டிரெயின் ஒண்டு கோணடிச்ச சத்தம் மட்டும் கேட்டது. அது ஏதோ அவனுக்குக் கடைசியா ஊதின சங்கு மாதிரியே இருந்தது.

வேன் ஓர் இடத்தில் நிண்டது. அவனை இறக்கிப் போனவர்கள் கண்கட்டை அவிழ்த்துவிட்டதும் சுத்திவரப் பார்த்தான். அது போலீஸ் நிலையம் அல்ல. சாதாரண ஒரு வீடுபோல இருந்தது. ஆனால், புலனாய்வு பிரிவின் ரகசிய சித்ரவதைக்கூடம் என்று மட்டும் புரிந்தது. அவனைக் கதிரையில் இருத்தியதும், அவள்தான் விசாரணையைத் தொடங்கினாள். “இதோ பார், ஒழுங்கா உண்மையை ஒப்புக்கொண்டா நீ உயிரோடை போகலாம்.” கணினியில் கிராபிக் செய்த ஒரு படத்தையும் அதே படத்தைக் கையால் ஓவியமாகக் கீறியிருந்த படத்தையும் காட்டியபடி

“சொல்றா இந்தப் பெடிச்சியை உனக்கு எப்படித் தெரியும்? நீ புலிதானே..?” அவளின் வட்டார வழக்கு பேச்சில் இருந்து அவள் மட்டக்கிளப்பு அல்லது அம்பாறை எண்டு புரிந்தது.

“நோ சிஸ்டர்” எண்டவனுக்கு “பேந்தும் பார் இங்கிலீஸு” என்று இன்னோர் அறை விழுந்தது.

“சொறி... வளர்ந்தது, படிச்சது எல்லாமே சிங்கப்பூர். வேணுண்ணா என்னோடை டாக்குமென்ட்ஸ் செக் பண்ணி பாருங்க. எனக்குத் தமிழ் இப்பிடித்தான் வரும்” என்றான்.

அவளின் விசாரணை நடந்துகொண்டிருந்தபோதே அங்கிருந்த மேசையில் அவனது பொருட்களைப் பரப்பி வைத்து அவனிடம் இருந்த விசிட்டிங் கார்டுகள். அவனது சிங்கப்பூர் ஆவணங்களை மற்றவன் பரிசோதித்துக்கொண்டிருந்தான்.

“இனி சரி வராது. எங்கடை வழைமையான விசாரணையைத் தொடங்க வேண்டியதுதான்” என்று அவள் சிங்களத்தில் சொன்னதும்.

இருவர் வந்து அவனது உடுப்புகளைக் கழற்றி நிர்வாணமாக்கி இரண்டு தூண்களுக்கு இடையில் அவனது கைகளையும் காலையும் அகட்டி கட்டினார்கள். டவின்சியின் மேன் பவர்(man power) ஓவியத்தைப் போன்ற நிலையில் தொங்கிக்கொண்டிருந்தவனை ஒருவன் வளைந்து கொடுக்கும் ஒருவித பிளாஸ்டிக் குழாயால் அவனது பின்பக்கம் முழுவதும் முடிந்தவரை ஓங்கி அடித்துக்கொண்டிருந்தான். ஏற்கெனவே தண்ணியடித் திருந்ததால் அடி வாங்கியதோ, நிர்வாணமாக்கப்பட்ட கூச்சமோ அவ்வளவாகத் தெரிந்திருக்கவில்லை. ஆனால், அவன் வாய் மட்டும் ஆங்கிலத்தில் கெட்டவார்த்தைகளைச் சொல்லிக்கொண்டிருந்தது.

அப்போது ஒருத்தன் சாராயப் போத்தலுடனும் சாப்பாட்டு பார்சல்களுடனும் உள்ளே நுழைந்தான். "வாங்கோ காசிம் நானா" என்று வரவேற்றார்கள். சாப்பாட்டைக் கண்டதும், அவர்கள் சித்ரவதையை நிறுத்தினார்கள். இலையான்களைப் போலக் காசிம் நானாவை மொய்த்துக்கொண்டு உட்கார்ந்தார்கள். இவனை மறந்து, தண்ணியடிக்கத் தொடங்கினார்கள். அவர்களின் சிங்கள உரையாடல்களில் இருந்து சிலவற்றைத் தெரிந்துகொண்டான். அங்கிருந்தவளின் பெயர் ராணி. தடித்து உருண்டையாக இருந்தவன் உடுகொல. இவன்தான் அந்தக் குழுவின் பொறுப்பாளர். மற்றவன் குள்ளமானவன், பெர்னான்டோ. அடுத்தவன் ரஜித் என்பது மட்டும் அவனுக்குப் புரிந்தது. கையில் சாராயக் கிளாஸுடன் வந்த ராணி அவனின் வாயில் வைத்துப் பருக்கினாள். அவனுக்கும் அது தேவையாக இருந்தது. அவனது முகத்தின் நேராகக் கைகளை வைத்துக் காட்டினாள். பாதி மயக்கத்துடன் விரல்களைப் பார்த்துக்கொண்டிருந்தான். அவனது உதட்டில் விரலை வைத்தாள். நீலப்படங்களில் வரும் நடிகைகளின் அபிநயத்துடன், விரல்களால் அவனது உடலை அளந்தபடி கீழ்நோக்கி விரல்களை இறக்கினாள். அவனது உறுப்பை விரலால் தட்டியபடி "நீ எப்பவுமே இப்பிடித்தான் கிரீன் ஷேவ் செய்வியா?" என்றாள். கூட்டத்தில் யாரோ பெரிதாகச் சிரித்தான். இவன் பார்க்கவில்லை.

"கிரீன் ஷேவ் இல்லை, கிளீன் ஷேவ்... ராணி தன்ர வேலையைத் தொடங்கிட்டாள்" எனச் சொல்லிச் சிரித்தான்.

மீண்டும் மேசைக்குப் போய் ஒரு கிளாஸ் சாராயத்தை ஒரு மடக்கில் குடித்துவிட்டு திரும்ப வந்தது "இனி உனக்குத் தமிழ் தானாய் வரும்" என்றபடி ஒற்றைக் கையைக் கீழேகொண்டு போனாள். இப்போது அவளது உள்ளங்கையில் அவனது இரண்டு விதைகளும் உள்ளடங்கியிருந்தன. மெதுவாகக் கையை இறுக்கி பிசையத் தொடங்கினாள். வலி உச்சத்தில் ஏறிக்கொண்டிருக்க அவன் கால்கள் நெம்பி பெருவிரல்கள் தூணைத்தொட்டன. வானத்தில் இருந்த நட்சத்திரங்கள் இறங்கிவந்து அவனது தலையைச் சுற்றி வட்டமிட கண்கள் இருண்டன. மீண்டும் கண்விழித்தபோது அவர்கள் உணவருந்தியபடி இருந்தார்கள். ஆனாலும் அசையாமல் அவர்கள் பேசுவதைக் கேட்டான்.

"தவறான ஆளைப் பிடிச்சிட்டமோ?"

"ஏன் அப்படிச் சொல்லுறாய்..?"

"அவனிட்டை இருந்த விசிட்டிங் கார்டுகள் எல்லாம் பெரிய பிசினஸ் ஆட்கள். அரசியல்வாதிகள். போலீஸ் அதிகாரிகள் பெயர்கள் இருக்கு"

"சும்மா எங்கேயாவது பொறுக்கி எடுத்து சேர்த்து வெச்சிருந்திருப்பான். எதுக்கும் நாளைக்கு அந்த இலக்கங்களுக்குத் தொடர்புகொண்டு கேட்டு முடிவு செய்வம்."

"எதுக்கும் சலாவுதீன் வரட்டும். அவனுக்குத்தான் யாப்பாணியளைத் தெரியும்... இல்லாட்டி குணாளனுக்குக் கட்டாயம் தெரியும்."

"குணாளன் இப்ப சி.பி.சி.ஐ.டி பதியுதீனோடையல்லோ. அவங்களிட்டை குடுக்கக் கூடாது. நாங்களே கண்டுபிடிக்க வேணும்"

"சில நேரம் இவனின்ரை தொடர்புகள் பெரிய இடமெண்டால் எங்களுக்கும் பிரச்னை. இவனை அந்தப் பெண்ணோடை சிலர் பார்த்திருக்கிறதா சொல்லியிருக்கிறாங்கள். எதற்கும் நாளைக்கு அந்த லொச்சுக்கு நேரடியா அவனையும் கொண்டுபோய் விசாரிக்கலாம். காசிம் நானா நீங்கள் இவனைப் படமெடுத்து மட்டக்களப்புக்குப் போய் விசாரிச்சுட்டு வாங்கோ."

அவனுக்கு இருமல் வந்தது. இருமி அவர்களின் பேச்சைக் குழப்ப வேண்டாம் என்றுதான் நினைத்தான்.

ஆனால், முடியவில்லை. அவனது இருமல் அவர்கள் பார்வையைத் திருப்பியது. தொங்கிய தலையை நிமிர்த்தி “ப்ளீஸ் வோட்டர்.... வோட்டர்...” என்றான்.

“இவனுக்கு எப்பிடி அடிச்சாலும் தமிழ் வருதில்லை” என்றபடி ராணி திரும்பவும் சாராயத்தைப் போத்தலோடு எடுத்துப்போய் அவன் தலையை நிமிர்த்தி வாயில் வைத்து பருக்கினாள்.

❍ ❍

# 45

அதிகாலையில் கண் விழித்திருந்தான். அவன் மயங்கியிருந்தானா அல்லது நித்திரையாகிப் போயிருந்தானா... என்பது நினைவில் இல்லை. அவன் எடுத்திருந்த சத்தியின் நாத்தம் அந்த அறையெங்கும் பரவியிருந்தது. தாகமாக இருந்தது. அப்போதுதான் அவனுக்கு உடல் வலி அனைத்தும் தெரிந்தது. தலையில் பெரியதொரு பாறாங்கல்லைக் கட்டிவிட்டதுபோலப் பாரமாக இருந்ததோடு தலை வெடித்துவிடுகிற அளவுக்கு வலியெடுத்தது. மூத்திரம் பெய்யவேண்டும் போல் முட்டியிருந்தது. ஆனாலும் முடியவில்லை. அவனது விதைகள் இரண்டும் வீங்கி நாவல் நிறமாக மாறிவிட்டன. மெதுவாக முக்கியபடி சொட்டுச் சொட்டாகப் பெய்து முடித்தவனுக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருந்தது.

ஆனால், அந்த இடத்திலேயே பெய்ததால் மீண்டும் அடிவிழலாம் என அவன் எதிர்பார்த்தான். அடுத்து என்ன செய்வார்கள். கொலைசெய்து எங்காவது வீசிவிடுவார்களா? அல்லது நான் யாரென்பதைக் கண்டுபிடித்துச் சிறையில் வாழ்க்கை கழியப்போகிறதா? நேற்று அவனைச் சந்தித்தவர்கள் அவனைத் தேடியிருப்பார்களா? சிங்கப்பூருக்குச் செய்தி போயிருக்குமா? இப்படி ஆயிரம் கேள்விகளைத் திரும்பத் திரும்ப அவன் மனதில் கேட்டுக்கொண்டிருக்கும்போதே விடிந்துகொண்டிருந்தது.

காலை கதவைத் திறந்த ஒருத்தன் நாற்றத்தில் முகத்தைச் சுழித்தபடி மீண்டும் கதவைச் சாத்தினான்.

சில நிமிட நேரத்தில் மீண்டும் கதவு திறந்தது அவனுடன் இன்னொருத்தன் கையில் வாளித் தண்ணீரும் துணியோடும் வந்தான். வந்தவன் “சே! இவங்கள் என்ன மனிசரா, மிருகங்களா. இரவு முழுக்கத் தொங்கவிட்டிருக்கிறாங்கள்” எனச் சிங்களத்தில் திட்டியபடியே அவனது கட்டுகளை அவிழ்த்துக்கிழே இறக்கினான். அவனால் நிற்க முடியவில்லை. கீழே விழுந்து படுத்துக்கொண்டான். வந்தவன் அவனை ஆதரவாகத் தூக்கியபடி “சிங்களம் தெரியுமா?” என்றான். அவன் பேசாமல் இருக்க “யு ஸ்பீக் சிங்களம்?” என்றான். அவன் ‘இல்லை’ எனத் தலையாட்டிவிட்டு, ‘தண்ணி குடிக்க வேணும்’ எனச் சைகை மட்டும் செய்தான். அவனைக் கதிரையில் இருத்தி ஒரு போத்தலில் தண்ணியைக்கொண்டு வந்து கொடுத்தான். மெதுமெதுவாகக் குடித்தான். தண்ணீர் ஓர் அமிர்தபானம்போல மெதுமெதுவாக இறங்கிக்கொண்டிருந்தது. வந்தவன், அந்த இடத்தைத் துப்பரவு செய்யத் தொடங்கினான். அங்கு வந்த விசாரணைக்காரன் ஒருவன், இவனைக் குளிக்க வார்க்குமாறு சொன்னான். துப்பரவு செய்துவிட்டு, குளிக்கக் கூட்டிப்போனான்.

குளிக்க வார்த்துகொண்டிருந்தபோது கதை கொடுத்தான்.

“நான் வடமராச்சி. பிடிச்சு அஞ்சு மாதமாகிது டீ..ஓ. போட்டிட்டு இங்கே வேலைக்கு வைச்சிருக்கிறாங்கள். வெளிநாடு போக வந்தனான். சந்தேகத்திலைதான் பிடிச்சவங்கள். நீங்கள் ஊரிலை எந்த இடம்?

“சிங்கப்பூர்”

“ஊரிலை சிங்கப்பூரா.. அது எங்கேயிருக்கு?”

“சிங்கப்பூரிலை இருக்கு.”

“இந்த வாய்க்கொழுப்புக்குத்தான் பிடிச்சிருப்பாங்கள். பேசாமல் குளி.”

குளித்து முடித்து வர, முதல் நாள் அவனைப் பிடித்த குழுவினருடன் மேலும் இருவர் வந்திருந்தனர். புதிதாக வந்தவர்களில் ஒருவன் “என்ன மச்சான் எப்பிடி இருக்கிறாய்? என்னை ஞாபகம் இருக்கா?” என்றபடி வந்தான். நீண்ட நாள் சினேகிதத்தின் பாவனையை வெளிக்காட்டினான். இவன் முகத்தைச் சுருக்கி நினைவில்

தேடிப்பார்ப்பதைபோலப் பாவனைப் பண்ணினான். பிறகு, 'இல்லை' என்று தலையாட்டினான்.

"நான் நம்பத் திறீயிலை.. செல்வா வீட்டில் எல்லோரும் இருந்தனான். என்னைத் தெரியாதா?" என ஆச்சர்யத்தைக் கூட்டிக் கேட்டான்.

மீண்டும் 'தெரியாது' எனத் தலையை மட்டும் அசைத்தான். கேள்வி கேட்டவனுக்கு முகத்தில் சிறிய எரிச்சல் படர்ந்ததைக் கண்டான். தோல்வியடைந்த பாவம் அப்படியே தெரிந்தது. ஆனாலும் வெற்றியின் பரவசத்தை இவன் வெளிக்காட்ட முடியாது. சில விநாடிகள் முகத்தைச் சுருக்கியபடி யோசனை செய்தான். திடீரென உடுகொல அறையைவிட்டு வெளியில் போனான்.

சிறிது நேரத்தில் உடுகொல திரும்பி வந்தான். வரும்போதே "சலாவுதீனுக்கும் தெரியாதாம்" என்றபடி வந்தான் புதிதாக வந்தவன். அவனைச் சுவரோடு நிற்க வைத்துக் கையில் ஒரு சிலேட்டில் சில இலக்கங்களை எழுதிக்கொடுத்துப் பிடிக்கச் சொல்லி பல கோணங்களில் படம் எடுத்தான்.

"காசிம் நானா நீங்கள் படங்களைப் பிரின்ட் போட்டு மட்டக்களப்புக்குப் போய் விசாரிச்சு விவரங்களைக் கொண்டுவாங்கோ" என்று உத்தரவிட்ட உடுகொல, "ராணி, நாங்கள் இவனை அந்த லாட்ஜுக்கு அழைத்துப் போகலாம்" என்றான்.

இவனைக் கூட்டிவந்து போலீஸ் ஜீப்பில் ஏற்றினார்கள். கறுத்தத் துணி ஒன்றினால் கண்களைக் கட்டினார்கள். ஜீப் பறப்பட்டது. ஏதோ ஒரு சிங்களப் பாட்டு ஒலித்தது. எவ்வளவு நேரம் ஓடியது எனத் தெரியவில்லை. சிறிது நேரத்தில் ஜீப் நின்றது. அவனது கண்களை அவிழ்த்தனர். போலீஸ் ஜீப் கிரீன் வீதியில் இருந்த பாரிஸ் லாட்ஜின் முன்னால் நின்றது. யாழ்ப்பாணத்து ஏஜென்சிக்காரன் ஒருவருக்குச் சொந்தமான விடுதி அது. போலீஸ் ஜீப்பைப் பார்த்துமே விடுதியில் கூடியிருந்தவர்கள் அறைகளுக்குள் பதுங்கிக்கொண்டனர். காரணம், அங்கிருந்தவர்கள் அனைவருமே வெளிநாடு போவதற்காக ஏஜென்சிகளிடம் காசு கட்டிவிட்டுக் காத்திருந்தவர்கள். கைவிலங்கிட்ட நிலையில் அவனை இறக்கினார்கள். லாட்ஜ் மேனேஜரிடம் போய் விவரத்தைச் சொல்லி உடுகொல தன் கையில் இருந்த

அந்தப் பெண்ணின் படத்தையும் அவனையும் காட்டி "இவர்கள் இங்கு தங்கியிருந்தார்களா?" என்றான். பழைய மேனேஜர் காசைச் சுருட்டிக்கொண்டு ஓடிவிட்டதால், தான் புது ஆள் வேலைக்குச் சேர்ந்து கொஞ்சக் காலம்தான். அங்கே இருக்கிற பழைய ஆட்களைக் கேட்கச் சொல்லிச் சொன்னார்.

அப்போது அங்கு வந்த ரூம் பராமரிப்பாளன் அவனிடமும் அதே கேள்வியைக் கேட்டார்கள். சில விநாடிகள் புகைப்படத்தை ஆழமாகப் பார்த்தான். அவன் தாமதிக்க இவனுக்குள் இருதயம் பெரிதாக இடிக்கத் தொடங்கியது. சில கணத் தாமதத்தின் பின்னர் 'இல்லை' என்று தலையாட்டிவிட்டு, லாட்ஜில் இருந்த மற்றவர்களைக் கதவைத் தட்டி வெளியே வரும்படி சொல்லிக்கொண்டே போனான். வெளியே வந்த பலரும் "அவனைத் தெரியாது" என்றே சொன்னவர்கள், பெண்ணின் ஓவியத்தைப் பார்த்து தலையைச் சொறிந்தனர். ஒருத்தி மட்டும் அவனை அங்குக் கண்டதாகவும். ஆனால், "அந்தப் பெண்ணைத் தெரியாது" என்றும் சொன்னாள். அவனைத் தெரியும் என்றதுமே 'இருடி வெளியாலை வந்ததும் முதல் வேலையா வந்து உனக்குக் காதைப்பொத்தி போடுறன்' என்று மனதில் நினைத்துக்கொண்டான். அங்கிருந்து புறப்படும்போது ரூம் போயைப் பார்த்து கண்களால் நன்றி சொன்னான். செய்தி சிங்கப்பூருக்குப் போய்விடும் என்பது அவனுக்குத் தெரியும்.

அருகில் இருந்த பியூட்டி லாட்ஜ், விவேகானந்தர் லாட்ச் ஆகியவற்றிலும் விசாரித்தார்கள். பெரும்பாலானவர்கள் 'தெரியாது' என்றே சொன்னார்கள். ஒருசிலர் 'எங்கேயோ பார்த்த மாதிரி இருக்குது' என இழுத்தார்களே தவிர, நினைவுபடுத்த முடியாமல் தவித்தார்கள்.

அங்கு விசாரித்துப் பயனில்லை என்பதைத் தெரிந்ததும் புறப்பட்டார்கள். இப்போது கண்கள் கட்டப்படவில்லை. ஜீப் மருதானை காவல் நிலையத்துக்கு அருகில் இருந்த காவல் துறையினரின் குடியிருப்பில் நுழைந்தது. அறையில் நுழைந்தபோது, முதல் நாள் இரவு அங்குதான் தங்கவைக்கப்பட்டிருந்தான் என்பது புரிந்தது. கண்கட்டை அவிழ்த்துவிட்டு கூட்டி வந்ததால், அவனுக்குச் சிறிது நம்பிக்கை பிறந்தது. தன்னில இருந்த சந்தேகம் நீங்கிச் சென்றுவிட்டதாக உணர்ந்தான். பயம் மறைய

இப்போதுதான் உடல்வலியை உணரத் தொடங்கினான். அத்துடன் பசி வேறு.

அப்போது உடுகொலவின் கைத் தொலைபேசி அடித்தது. அதை எடுத்துக்கொண்டு வெளியே போனான். உள்ளே இருப்பவர்களுக்குக் கேட்காமல் குசுகுசுத்த குரலில் எதுவோ பேசினான். பிறகு, உள்ளே வந்தவன் மற்றவர்களையும் வெளியே அழைத்தான். ‘சிங்கப்பூருக்குத் தொலைபேசி போயிருக்குமோ?’ என்ற சந்தேகம் வந்தது. சிறிது நேரத்தின் பிறகு மீண்டும் உள்ளே வந்தவர்கள். உடுகொல அவனை நெருங்கி வந்தான். இவனுக்கு மீண்டும் மனது அடிக்கத் தொடங்கியது. “வினோதனை உனக்கு எப்படித் தெரியும்?”

“அவர் என்னுடைய ரிலேஷன், அங்கிள் முறை.”

“ஓ.. அப்பிடியா?”

அவனது முகம் மாறியது “உன்னைத் தேடி எல்லாப் போலீஸ் ஸ்டேஷனுக்கும் போன் போயிருக்கு”

“ஓ ரியலி?”

“என்ன சாப்பிடுகிறாய்”

“பிரியாணி”

# 46

அன்றிரவு பொறளை ராணுவ மற்றும் காவல் துறைக் குடியிருப்பின் ஒரு தொடர்மாடிக் குடியிருப்பில் தங்கவைக்கப்பட்டான். ஒற்றைக் கை மட்டும் ஜன்னலுடன் சேர்த்து விலங்கிடப்பட்டிருந்தது. அறைக்குள் யாரும் இல்லை. ராணி மட்டும் சற்று முன்னர் வந்தாள். வந்த வேகத்தில், குளித்துவிட்டு வருவதாகச் சொல்லிவிட்டுப் போனாள். 'அவள் குளித்தால் என்ன... குளிக்காவிட்டால் என்ன?' என மனதுக்குள் கறுவிக்கொண்டான்.

சற்றைக்கெல்லாம் கதவைப் படாரென அடித்துத் திறந்துகொண்டு ராணி திரும்பி வந்தாள். கதவு அடித்துத் திறந்தாலே மனது அடித்துக்கொள்கிறது. அதிர்ச்சியில் மனம் ஒருமுறை கனத்து, பிறகு ராணியைக் கண்டதும் லேசானது.

ராணி சுடிதார் அணிந்திருந்தாள். முன்னால் நின்று, கைகளை உயர்த்தி ஒருமுறை சுழன்றாள். "நான் எப்பிடி இருக்கிறன்?" முகத்தில் வெட்கத்தின் பாவத்தை வரவழைத்துக்கொண்டு கேட்டாள். அந்த ராணியா இந்த ராணி என நினைக்க இவனுக்கு ஆச்சர்யமாக இருந்தது. ஒரு வேட்டை விலங்கின் மூர்க்கத்துடன் அங்கு அலைந்தவள், இங்குப் பெண்மையின் இலக்கணங்கள் மிளிர காமத்தீ கொளுந்துவிட்டு எரிய நிற்கிறாள்.

"பெரிய நதியா எண்டு நினைப்பு. கோயில் தேருக்குச் சீலையால் போர்த்ததுபோல இருக்கு" என்று சொல்லாம் என நினைத்தாலும், இடம் கருதிப் பேசாமல் இருந்தான்.

வெறும் ஒரு வார்த்தையில் “சூப்பர்” என்றான்.

கதவைத் தட்டிய ஒரு போலீஸ்காரன் சாராயம், பியர், சோடா, இரண்டு பிரியாணி பார்சலைக் கொடுத்துவிட்டுப் பவ்வியமாக விடைபெற்றான். கைவிலங்கைக் கழற்றியவள், விலங்கின் இரண்டு பக்கங்களையும் காப்பு போல் ஒரு கையிலேயே பூட்டினாள். “இன்றிரவு நீ என்னுடைய பாதுகாப்பில்தான் இருக்கப்போகிறாய். ஒத்துழைத்தால் உனக்கு நல்லது. இல்லாட்டில் நேற்றைய இடத்தில் தொங்கவேண்டிவரும்'' என்றாள்.

“என்ன வேணும்... பியரா சாராயமா?”

‘‘fist பாத்ரூம் next பசி” சைகையுடன் சேர்த்தே சொன்னான்.

வீட்டையும் நோட்டம்விட்டான். யாரும் தப்பி ஓடிவிடாதபடி யன்னல் வெளியே இரும்புக் கம்பிகளால் ஒட்டப்பட்டிருந்தது. துணி எல்லாவற்றையும் கழற்றிவிட்டுப் போகச் சொன்னாள். கழிவறைக்குப் போனவன், அப்படியே குளிர்ந்த நீரில் குளித்துவிட்டு அங்கிருந்த புளிச்ச நாற்றமெடுத்த துவாயால் முன்பக்கம் மட்டும் மறைத்தபடி வந்தான். அவனை விசித்தரமாகப் பார்ப்பவளைப்போல ஏற–இறங்க பார்த்த ராணி , சட்டென எழுந்து துவாயைப் பறித்தெடுத்தாள். கைகளைப் பின்பக்கமாக விலங்கிட்டுக் கதிரையில் தள்ளினாள். தொலைக்காட்சியில் நீலப்படம் ஓடிக்கொண்டிருந்தது. இப்போது அவனது விதைகள் அவளது உள்ளங்கைகளில். ஆனால் நசக்கவில்லை.

“அசையாதை அசையாதை... கொச்சிக்கடை அந்தோணியாரே வெள்ளவத்தைப் பிள்ளையாரே” நேத்திக்கடன் வைத்தான்.

இரண்டு பேருமே கைவிட்டுவிட்டனர். விலங்கிட்டிருந்த கைகளைச் சில விநாடிகள் இறுக்கப் பொத்திப் பிடித்தான். கைகளை விலங்கு அழுத்தியது. மீண்டும் கைகள் லேசானது. அவளது பெருத்த உடம்புக்கான காரணம் இப்போது அவனுக்குப் புரிந்தது. ம்... பரவாயில்லையே என எழுந்தவள் வாயைத் துடைத்தபடி பியரை உடைத்து சில மடக்குகள் குடித்துவிட்டு அவனது ஒரு கை விலங்கை அகற்றி அவனது கையில் பியரை கொடுத்தாள். விலங்கின் திறப்பை ஒவ்வொரு தடவையும். பாதுகாப்பாக அங்கிருந்த

அறையில் கொண்டுபோய் வைத்து கதவைப் பூட்டிவிடுவாள். அவளின் செய்கைகள் நன்கு பயிற்றுவிக்கப்பட்டதொரு புலனாய்வுக்காரி என்பதைக் காட்டியது.

❍

நேரம் நள்ளிரவைத் தாண்டிக்கொண்டிருந்தது. வீதி விளக்கின் வெளிச்சம் மெல்லிதாக அறையை நிறைத்திருந்தது. படுக்கையறையின் கட்டிலில் அவனின் இடக்கை கட்டிலோடு மேற்பக்கமாக விலங்கிட்ட நிலையில் இருந்தது. அந்த நிலையிலேயே கலந்து முடித்த இருவருக்கும் மூச்சுவாங்கியது. அவளின் பருத்த உடல் அவன் மீது படர்ந்திருந்தது. அவன் கன்னத்துக்குழியை விரலால் மெதுவாக வருடிக்கொண்டிருந்தாள். "எனக்கு உன்னிலை பிடிச்சதே இந்தக் குழிதான்!" அவன் பேசாமல் படுத்திருந்தான்.

"நீ புலியில்லை எண்டு விசாரணயள்ளை தெரியுது."

"அப்ப விடவேண்டியதுதானே?"

"காசிம் நானா மட்டக்கிளப்பாலை விசாரணை முடிச்சு வரட்டும். அங்கேயும் உன்னைத் தெரியாதெண்டு சொல்லியிருந்தா உன்னைக் கோட்டிலைகொண்டுபோய் ஒரு ஜட்ஜுக்கு முன்னாலை ஒரு லோக்கல் போலீசிடம் குடுத்திடுவம். பிறகு, உன்ரை சொந்தக்காரங்கள் யாராவது வந்து கையெழுத்து போட்டுக் கூட்டிக்கொண்டு போகலாம்"

"எதுக்கு என்னை அரஸ்ட் பண்ணீங்க"

"பட்டிலங்தையிலை வெடிச்சு செத்த பெட்டையோடை கடைசியா ஒருத்தன் இரண்டுநாள் பாரிஸ் லாட்ஜில் தங்கியிருக்கிறான். அவள் மட்டக்கிளப்பு மாமங்கம். அதுதான் காசிம் அங்கே பேயிருக்கிறார். அவனின்ரை போலீஸ் பதிவு ஐடென்டி காட்டிலை திருக்குமார் எண்டு பெயர் இருக்கு. அந்த ஐடென்ட்டி படத்தை எடுத்து எல்லா லாட்ஜ் ஹோட்டல்கள் போலீஸ் ஸ்டேஷன்கள் எல்லாம் அனுப்பிவைச்சனாங்கள். அப்பதான் ஒரு லாட்ஜிலை அதே மாதிரி ஒருத்தன் தங்கியிருக்கிறதாத் தகவல் வந்திச்சு. அதுதான் நீ"

இது லாட்ஜ் காக்காவின்ரை வேலையா? என மனதுக்குள் நினைத்தவன், "பட்டிலந்தை, லேடி திருக்குமார் ..வெடிச்சது

*எதுவுமே புரியல்லை. என்னைப் பாத்தா அவன் மாதிரி இருக்கா?"*

*"உனக்கு எதுவுமே விளங்க வேண்டாம். அதுதான் நல்லது"*

*"ஒண்ணு கேட்டா கோவிச்சுக்க மாட்டீங்களே?"*

*"நீங்க சி.ஐ.டி.யா"*

*"இப்ப அப்பிடித்தான். ஆனால் மின்னை அப்பிடியில்லை"*

*"அப்பிடின்னா?"*

*அவள் கைகள் அவனது மார்பை வருடியபடியே. நானும் சிங்களனுக்கு எதிராது வாக்கு தூக்கினவள்தான். எங்கடை ஊரிலை ஈ.பி.ஆர்.எல்.எஃப்–வுக்குப் போன முதல் பெடிச்சி நான்தான். இயக்கத்திலையே ஒருத்தரை காதலிச்சிருந்தனான். புலியள் ஈ.பி–யை தடை செஞ்சாப்பிறகு என்னையும் அவரையும் விசாரிச்சிட்டு விட்டிட்டாங்கள். நாங்கள் கலியாணம் செய்து எனக்குப் பிள்ளையும் பிறக்க அவர் கட்டாறுக்கு போயிற்றார். எல்லாம் நல்லபடியாய்தான் போய்கொண்டிருந்தது. என்ரை அவரும் லீவிலை ஊருக்கு வந்திருந்தார். அந்த நேரம் இந்தியனாமிக்கும் புலியளுக்கும் சண்டை நடந்துகொண்டிருந்தது. இந்தியாவிலை நிண்ட பழைய இவற்ரை சினேதங்கள் ஈ.பி பெடியளும் ஊருக்கை இந்தியனாமியோடை திரிஞ்சவங்கள். இவர் வந்து நிண்டதை கேள்விப்பட்டு அடிக்கடி வந்திட்டுப் போவாங்கள். நாங்களும் வராதையெண்டு சொல்லோது. ஒருநாள் இரவு இதே மாதிரித்தான் நானும் அவரும் படுத்திருந்த நேரம் எங்கடை சொந்தக்கார பெடியன் ஒருத்தன் புலியிலை இருந்தவன். தீசன் எண்டு பேர். கதவிலை தட்டி என்ரை பேரைச் சொல்லிக் கூப்பிட்டான். அவசரமா துணியைச் சுத்திக்கொண்டு நான்தான் போய்க் கதைவை திறந்தன். 'இவரோடை கதைக்கவேணும் வரச்சொல்லுங்கோ' எண்ட அவரும் பின்னாலை வந்திட்டார். 'என்னவெண்டாலும் இங்கே கதை. அவர் வெளியிலை வர மாட்டார்' எண்டு நான் அடம்பிடிக்க, 'ஐயோ... அக்கா! ஒரு பிரச்னையும் இல்லை. கதைக்கத்தான்' எண்டு அவனும் அடம்பிடிக்க, சொந்தக்கார பெடியன்தானே ஒண்டும் செய்ய மாட்டானெண்டு அவரை வெளியாலைவிட்டாலும் நானும் கொஞ்சம் பின்னாலை போனன். படலையடிக்குப்*

போனதும் வெடிச்சத்தம் கேட்டிச்சு. மண்டை வெடி அவர் அதிலையே... என்று சொல்லும்போது ராணியின் குரல் தழுதழுத்தது. கை நின்றுபோய் அவனது மார்பில் சூடான சில கண்ணீர்த்துளிகள் விழுந்ததை அவன் உணர்ந்தான். சில நிமிட அமைதியை அவனே கலைத்தான்.

“அப்புறம் என்னாச்சு?”

“அதோடை என்ரை விதியும் மாறிப்போச்சு. என்ரை மனிஷனைச் சுட்டவனைக் கொல்லாமல் விடுறெல்லை யெண்டு முடிவெடுத்தன். என்ரை புள்ளையை அம்மாட்டைக் குடுத்திட்டு ஆமியோடை போய்ச் சேந்திட்டன். அவனை மட்டுமே தேடினேன். ஒன்பது மாதங்களுக்குப் பிறகு அவனைப் போட்டப் பிறகுதான் என்ரை மனசு கொஞ்சம் ஆறிச்சிது.”

“ஓ அவனும் குளோசா? பிறகெதுக்கு இப்பிடி நீங்க தொடந்தும்...” – இழுத்தான்.

“பிறகு எங்கேயாவது போய் என்ரை பிளையோடை வாழலாம் எண்டுதான் நினைச்சனான். ஆனா, புலியைப் பத்தி உனக்குத் தெரியாது. அது எங்கே போனாலும் விடாது. ஏதாவது அரபு நாட்டுக்கு போகலாம் எண்டு நினைச்சன். அதற்கு என்னட்டை வசதியும் இல்லை. வெளிநாடு போனாலும் உன்னை மாதிரி நான் படிச்ச ஆளும் இல்லை. ஏதாவது வீட்டு வேலையள்தான் செய்யவேணும். அதோடை முதல்லை வெறும் மெசேச் குடுக்கிற ஆளாக இருந்த என்னைச் சி.ஐ.டி–யிலை சேர்த்து பயிற்சியளும் தந்து குவாட்டஸ், சம்பளம் எல்லாம் தாறாங்கள்.”

“என்னவோ ஒண்ணும் புரியல்லை. ஆனா, உங்களோடை ஸ்டோரி ஃபீலிங்கா இருக்கு, சொறி. எனக்கு நீங்க அடிச்ச அடி ஒரே வலியா இருக்கு. இன்னும் கொஞ்சம் விஸ்கி ப்ளீஸ்.. அப்பதான் தூங்கலாம்.”

“இப்ப எனக்கும் கவலையாத்தான் இருக்கு. ஆனால், ஒண்டுமே செய்யேலாது” என்றவள், அவன் மீதிருந்த நிரம்பிய ஆணுறையை உருவியெடுத்தவாறே துணியால் தன்னைச் சுற்றிக்கொண்டு அறையைவிட்டு வெளியேறினாள்.

ஒரு கிளாஸ் நிரப்பிச் சாராயத்தை ஊற்றிவந்து அவனிடம் நீட்டினாள். அவன் குடித்து முடியும் வரை

காத்திருந்து கிளாஸை வாங்கியபடி, "உனக்கு இன்னொரு விஷயத்தையும் சொல்லவேணும். நாளைக்கு உன்னை ஜட்ஜுக்கு முன்னாலை விடுதலை செய்யேக்கை நான் இப்பிடி நடந்ததா நீ வாயே திறக்கக் கூடாது. அதுதான் உனக்கு நல்லது. அப்பிடி ஏதாவது நடந்தால் நீ எப்பிடியும் எங்களோடை கண்காணிப்லைதான் இருப்பாய். பிறகு கடல்லையோ களனி ஆத்திலையோ மிதக்கவேண்டிவரும்" எனக் கண்ணடித்தவள், அவன்மீது போர்வையைப் போத்திவிட்டு "சரி, படு நான் இஞ்சை வெளியிலைதான் படுத்திருப்பன்" என்றபடி விலங்கு சரியாக பூட்டியிருக்கா என்று பார்த்து உறுதி செய்தவள், கதைவைப் பூட்டிவிட்டுப் போய்விட்டாள்.

❍

காசிம்மின் மட்டக்கிளப்பு அறிக்கை N.I.B அறிக்கை எல்லாம் வந்தது. அனைத்தும் அவனைக் காப்பாற்றின. அவனை மருதானை நீதவான் முன்னிலையில் புறக்கோட்டை போலீஸாரிடம் C.I.D–யினர் கையளித்தனர். அங்கேயே தயாராக நின்ற வக்கீல் கையெழுத்திட்டு அவனை விடுதலை செய்தார். அங்கு வந்த ராணி அவனிடம் தனது கைத் தொலைபேசி இலக்கத்தைக் கொடுத்து, "உனக்கு எங்கே என்ன உதவி தேவையோ தராளமாக எனக்குப் போனடி" எனத் தனது இலக்கத்தைக் கொடுத்துவிட்டுப் போனாள்.

அதன் பின்னர் அவனும் பாகிஸ்தானுக்குத் தேங்காய் ஏற்றுமதி வியாபாரத்தினை அவனது பங்காளி சுமானந்த தேரரோடு தங்குதடை இல்லாமல் தொடர்ந்தான். அடிக்கடி பொரளை ராணியின் குவாட்டஸுக்குப் பியரோடும், ஓல்ட் அரக்கோடும் போய்வந்தான். அந்த நட்பை விட விரும்பவில்லை.

❍ ❍

# 47

ஜிம்கலி லாரி ஒன்றை மட்டக்கிளப்பில் இருந்து கண்டி ஊடாகக் கொண்டுவந்து வத்தளைப் பகுதியில் அவன் சொன்ன இடத்தில் நிறுத்திவிட்டு அவனைச் சந்திக்க வந்திருந்தான். சில விஷயங்களைக் கதைத்துவிட்டு ஜிம்கலி புறப்படும்போதுதான் அவனுக்குக் கிச்சானின் ஞாபகம் வந்தால் அதைப் பற்றி விசாரித்தான். "அது வேறை கதையடா..!" என்றபடி தொடங்கினவன், "தெரியும்தானே மச்சான். இயக்கம் உள்ளை ஜிகாத் புகுந்திட்டுதெண்டு எல்லா சோனகரையும் களையெடுப்பு நடத்தினது. அண்டைக்குக் கரிகாலன் முகாமுக்கு வந்தவன். அவனுக்குக் கிச்சான்தான் டீ கொண்டுபோய்க் குடுத்தவன்" என்று சொல்லத் தொடங்கினான்.

டீயை வாங்கிய கரிகாலன், அவனை உற்றுப் பார்த்திட்டு, "டேய், நீ துலுக்கன்தானே?" கிச்சான் பேசாமல் தலையைக் குனிந்தபடி நிக்க, முகாம் பொறுப்பாளராக இருந்த குமணனைக் கூப்பிட்ட கரிகாலன், "டேய், இவனைக் கொண்டுபோ... கொண்டுபோய்ப் போடு" என்று கத்தினான்.

அவன் தயங்கியபடி "அண்ணைக் கிச்சான் சின்ன வயசிலை இஞ்சை வந்திட்டான். அதைவிட அவன் இஞ்சை வந்ததிலையிருந்தே வெளியாலை ஊருக்குள்ளை போறேல்லை. இவனுக்கும் ஜிகாத்துக்கும் தொடர்பு ஒண்டும் இருக்காது எண்டு எங்களுக்கு நல்லாத் தெரியும். அதுதான் அவனை ஒண்டும் செய்யேல்லை. பாவம் சின்னப்

பெடியன். வேணுமெண்டால் அவனை வெளியாலை அனுப்பிவிடலாம்” என்றான்.

கோபத்திலை கரிகாலன் “டேய், சொன்னதைச் செய்!” என்று கத்தினான்.

ஆனால், குமணன் மீண்டும் கிச்சானுக்காக வாதாடிப் பார்த்தான். ஒரு பிரயோசனமும் இல்லை. அவனைக் கொண்டுபோய்க் கிடங்கு வெட்டச் சொல்லு. வெட்டி முடிஞ்சதும் வந்து சொல்லு, நானே வந்து போடுறன்” என்று கறாராகக் கரிகாலன் சொல்லி அனுப்பிவிட்டான். அதுவரை பேசாமல் தலையைத் தொங்கப் போட்டபடியே நின்றுகொண்டிருந்த கிச்சான், பேசாமல் குமணனுக்குப் பின்னால நடந்துபோனான். பிக்கானையும் மண்வெட்டி யையும் எடுத்த குமணன் முகாமுக்குப் பின்புறம் இருந்த பற்றைப் பகுதியில் கிச்சானிடம் கிடங்கை வெட்டச் சொன்னவன், அவனுக்கு உதவியாக இன்னொருவனையும் அழைத்துக் கிடங்கை வெட்டச் சொன்னான்.

கிடங்கை வெட்டி முடித்த வியர்வையோடு மூச்சு வாங்க குமணனை கிச்சான் பார்க்க, மௌனமாக நின்ற குமணன், கரிகாலனை அழைத்துவரப் புறப்படும்போது, “அண்ணோய்..!” கிச்சானின் குரல் கேட்டுத் திரும்பியவனிடம், “அண்ணே... எனக்கு அப்பா யாரெண்டே தெரியாது. அம்மாவும் துரத்திவிட்டா. பிறகு எங்கேயெல்லாமே அலைஞ்சு திரிஞ்சன். ஆனா, நான் இஞ்சை வந்தாப் பிறகு உங்களைத்தான் ஒரு சகோதரமா நினைச்சு பழகியிருக்கிறன். சரியான தாகமா இருக்கு. கடைசியா உங்கடை கையாலை கொஞ்சம் தண்ணி தாங்கண்ணே” என்றதும் குமணன் கொண்டுவந்து கொடுத்த தண்ணீரை வாங்கிக் குடித்தவன், “அண்ணே, நான் இங்கே வந்தபிறகு தொழுறதைக்கூடக் கைவிட்டிட்டன். நான் ஒரு முஸ்லிம் எண்டதைக்கூட மறந்தேபோயிற்றுது. அதாலைதான் இது அல்லா தந்த தண்டையா இருக்கும். நான் தொழுகை நடத்துறன். அண்ணே, நீங்கள் போய்க் கரிகாலன் அண்ணையைக் கூட்டி வாங்கோ” என்றுவிட்டுக் கிடங்கின் முன்னால் முழந்தாளிட்டுத் தொழுகை நடத்தத் தொடங்கினான்.

குமணன் கரிகாலனிடம் போய் விஷயத்தைச் சொன்னதும், அங்கு வந்த கரிகாலனின் பிஸ்டல் தொழுகை

நடத்திவிட்டு நிமிர்ந்த கிச்சானின் பிடரியில் அழுத்தியது. கிச்சானின் கண்கள் மூடிக்கொள்ளத் துப்பாக்கி குண்டைத் துப்புகின்றது. கிச்சான் கிடங்கினுள் தலைகுப்புற விழுந்தான். கரிகாலனின் பிஸ்டல் மேலும் சில குண்டுகளைத் துப்பித் துளைத்துப் போக, “கிடங்கை மூடுங்கடா” என்றுவிட்டு கரிகாலன் அங்கிருந்து போய்விட்டார். குமணனும் மற்றவர்களும் கிச்சானின் உடலை கிடங்கினுள் நேராகக் கிடத்தி மண்ணால் நிரப்பிவிடுகிறார்கள் என்று ஜம்கலி சொல்லி முடித்ததும், கிச்சான் என்கிற இஸ்மாயிலின் கதையைக் கேட்டு முடித்த அவனால் அப்போதைக்குப் பெருமூச்சைத் தவிர வேறு எதுவும் செய்ய முடியாத நிலைமை. பிளேன் டீ கிளாஸை ஒரு சுழற்று சுழற்றிச் சிரித்தபடி அவனிடம் நீட்டிய கிச்சானின் முகம் நிழலாக வந்து போனது. ஜிம்கலி அவனின் கையைப் பிடித்து விடைபெற்றான்.

❍ ❍

# 48

*அன்றைய அதிகாலை. மீன்கள் பதனிடும் தொழிற்சாலை ஒன்றினுள் நின்றான். வாகனத்தரிப்பிடத்தில் வரிசையாக நிறுத்தப்பட்டிருந்த ஒரு லாரி ஒன்றுக்குள் நின்றான். லாரிக்குள் யாரும் இல்லை. அவன் மட்டுமே நின்றான். உடம்பில் வெறும் ஜட்டி மட்டும் அணிந்திருந்தான். வியர்வையும் புழுதியுமாக ஆளே மாறியிருந்தான். ஒரு பரபரப்பான பொழுது. இயந்திரத்தனமாக இயங்கிக்கொண்டிருந்தான். சத்தமிட்டு வேலை செய்ய முடியாது. அவன் லாரிக்குள் நிற்பது பக்கத்து லாரிக்காரனுக்குக்கூடத் தெரியக் கூடாது. அப்படியான வேலை அது. லாரியின் உள்பக்க மின்குமிழ் வெளிச்சம் மெல்லிய ஒளியைத்தான் பரப்பிக்கொண்டிருந்தது. அந்த ஒளியில் துல்லியமாக வேலை செய்ய வேண்டும். பரபரப்புக்கு இடையில் நேரத்தைப் பார்த்தான். அதிகாலை இரண்டைத் தொட்டுக்கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் மசாயிர் வந்து சேர்ந்தான். அவன் வந்தால் கை உதவிகள் செய்து தருவான். "சரி மச்சான்.. எல்லாம் முடிஞ்சுது. இனி பின்னாலை கருவாட்டுக் கூடையளை அடுக்கினால் சரி" என அடுத்த வேலையில் தீவிரம் காட்டினான். அருகில் நின்ற லாரியை ஸ்டார்ட் செய்து, இந்த லாரியின் பின்பக்கத்துடன் அணைத்தான். இரண்டு லாரிகளின் பின்பக்கங்களும் ஒன்றுடன் ஒன்று ஒட்டியபடி நின்றதால், கருவாட்டை மாற்றுவதில் பெரிய சிரமம் இல்லை. மின்னலாக வேலை முடிந்தது.*

அதன் பிறகுதான் நிம்மதியாக இருந்தது. விழுந்து படுக்க வேண்டும்போல இருந்தது. ஆனால், முடியாது. ஓயும் பொழுதல்ல அது. "மச்சான் நேரமாகுது.. நீ லாரியை எடு. நான் காரிலை முன்னாலை போறன்" என்றான்.

"மச்சான்.. உன்னை நம்பித்தான் இருக்கிரன். ஒண்டும் பிசவாதுதானே?!"

"ஒண்டுக்கும் பயப்பிடாதை. ஒண்டும் பிசவாது. நான் இருக்கிறன். லாரியை எடு" என அவனது தோளில் கை வைத்தான். மசாயிர் மெதுவாகத் தலையசைத்தான். அவனைக் கவனிக்காமல், காருக்குப் போய் jony walker போத்தலை திறந்து சில மிடறுகள் விழுங்கி தொண்டையைக் கனைத்துவிட்டு திரும்பிப் பார்த்தான். கைக்குட்டையை நிலத்தில் விரித்து மசாயிர் முழந்தாளிட்டுத் தொழுதுகொண்டிருந்தான். "இவன் வேறை, நேரம்... காலம் தெரியாதவன்" என்று சலித்துக்கொண்டான்.

தொழுது முடிந்த மசாயிரிடம் "டேய், உன்ரை அல்லா பகிடி வெற்றி தெரியாதவர். கவனம். எல்லாம் பிழைக்கப்போகுது."

"அதில்லடா மனசாட்சி யெண்டு இருக்கல்லே. அதுதான்" முணுமுணுத்தபடி மசாயிர் லாரியில் ஏறினான்.

அவர்களது வாகனங்கள் கொழும்பு நகரினுள் நுழையும் முக்கியச் சோதனை சாவடியை நெருங்கியது. காவல் அரணில் இருந்த இரண்டு ராணுவ சிப்பாய்களில் ஒருத்தன், டார்ச் லைட் வெளிச்சத்தைக் காட்டி முன்னால் வந்த காரை மறித்தான். அவனும் அவர்களும் சிங்களத்தில் உரையாடிக்கொண்டிருக்கும்போதே லாரி அவர்களைத் தாண்டிப் போய்க்கொண்டிருந்தது. அதுதான் திட்டம். காருக்குள் முக்கால்வாசி அளவில் இருந்த போத்தலை எடுத்துச்சிப்பாயிடம் நீட்டினான். சிப்பாய் முகமலர்ச்சியுடன் போகுமாறு சொன்னான். சற்று வேகத்தைக் கூட்டி மீண்டும் மசாயிருடன் இணைந்துகொண்டான். புறக்கோட்டையில் காலை சந்தைக்காக லாரிகள் பொருட்களுடன் வந்து நிறுத்தப்பட்டுக்கொண்டிருந்தன. மசாயிரும் அந்த லாரிகளுக்கு இடையில் ஓர் இடத்தில் நிறுத்தினான். அந்த லாரியை ஒருவனிடம் கையளித்துவிட்டால் இவர்களது

வேலை முடிந்துவிடும்.

காரை ஓர் ஓரமாக நிறுத்தியவன், அடுத்த வேலையில் இறங்கினான். பொறுப்பு கொடுக்கப்பட வேண்டியவனின் தொலைபேசி இலக்கம் மட்டும் இருந்தது. ஆளைத் தெரியாது. அந்த இலக்கத்துக்கு அழைத்தான்.

பொறுப்பு எடுக்க வேண்டியவன் அங்கே அருகிலேயேதான் படுத்துக்கிடந்தான். மேம்பாலத்துக்கு அருகில் சாறத்தால் போர்த்துக்கொண்டு சுருண்டு படுத்திருந்தவன், தொலைபேசி அழைப்பைத் தொடர்ந்து எழுந்து வந்தான். தன்னை நோக்கி வந்த எல்லோரையும் உற்றுப் பார்த்துகொண்டிருந்தான். வருபவன் பகட்டு உடையுடன் வருவானா, பரதேசியாக வருவானா என்பதே தெரியாமல்தான் நின்றான்.

சாரத்தால் உடம்பைப் போத்தியபடி சோம்பல் முறித்தபடி வந்தவன் தன்னை நெருங்கி வருவதைக் கண்டு, ‘அவனாகத்தான் இருக்கலாம்’ என முடிவுசெய்தான். திட்டத்தின்படியான முதலாவது சைகையைச் செய்தான். பதில் சைகை வந்தது. சங்கேத மொழியைச் சொன்னான். பதில் வந்தது. ஆளை உறுதி செய்துகொண்டான். அவனை லாரிக்கு அழைத்துப்போனான். இருவரும் வருவதைக் கண்ட மாசாயிர் எதுவும் பேசாமல் கீழே இறங்கினான். இந்த விஷயத்தில் சம்பந்தமே இல்லாதவனைப்போலச் சற்று தள்ளி நின்றுகொண்டான்.

இருவரும் லாரிக்குள் ஏறினார்கள். “இங்கே சீற்றுக்குப் பக்கத்திலைதான் சுவிட்ச் வைச்சிருக்கிறன். பிழைக்காது. அப்பிடி சில நேரம் ஏதாவது பிழைச்சாலும் பின்பக்கமாக ஓர் அடிகுடுத்தா போதும்” என்றுவிட்டு புதியவனின் முகத்தைப் பார்த்தான். அதில் சலனம் இல்லை. வெறும் ம்.. மட்டும் கொட்டினான். பொறுப்புக் கொடுத்தாயிற்று. விடைபெறும் முன்னர் அவனது பெயரை கேட்கலாமா என யோசித்தாலும் அது அவனது வேலையல்ல என நினைத்தபடி இறங்கினான்.

காரில் ஏறி உட்கார, மசாயிரும் வந்து உட்கார்ந்துகொண்டான். அவனது முகத்தில் கலவரம் தெரிந்தது. ‘தாமதிக்காமல் கிளம்பு’ எனக் கண்களால்

சைகை தந்தான். சிரித்தபடி காரை ஸ்டார்ட் செய்தான்.

கார் கொழும்புக்கு வெளியே பேலியகொடை பாலத்தைத் தாண்டி ஓடியது. கந்தானை பகுதியில் ஒதுக்குப்புறமாக ஒரு தென்னந்தோப்பில் நின்றது. கைக்கடிகாரத்தில் அலாரம் வைத்துவிட்டு இருவரும் நித்திரையாகிப் போனார்கள்.

# 49

*அவர்களது காரை யாரோ உலுப்புவதுபோல் இருக்கவே திடுக்கிட்டு விழித்தார்கள். எருமை மாடு ஒன்று காரில் சொறிதேய்த்தபடி நின்றது. அவன் ‘எருமை மாடு’ என்று திட்டிவிட்டு நேரத்தைப் பார்தான். 6:30 மணியாகியிருந்தது. “சே இன்னம் கொஞ்ச நேரம் நித்திரைகொண்டிருக்கலாம்” என்றவன், காரை இயக்கி பிரதான வீதி நோக்கி ஓடிக்கொண்டிருக்க, மசாயிர் திரும்பவும் சுருண்டு படுத்துக்கொண்டான். கந்தானை சந்திக்கு வந்தவர்கள் அங்கிருந்த முஸ்லிம் சாப்பாட்டுக் கடையில் போய் முகம் கழுவி காலைக்கடன்களை முடித்துவிட்டு டீயும் மாலுபணிசும் சாப்பிட்டார்கள். கார் இப்போது கட்டுநாயக்கா விமான நிலையத்தை நோக்கி போய்க்கொண்டிருந்தது. மசாயிர் காரை ஓடிக்கொண்டிருந்தான்.*

*“மசாயிர் இதுவரைக்கும் என்னோடை இருந்து செய்த உதவிக்குத் தேங்ஸ்சடா மச்சான்.”*

*“என்ன இப்பிடி சொல்லிட்ட. நீ எனக்கு எவ்வளோ உதவி செஞ்சிரிக்காய். நானும் இன்னும் மூண்டு நாளிலை துபாய் போயிடுவன்.”*

*“நீ போறவரைக்கும் காரை வைச்சிரு. இன்னும் 10 நாளைக்குக் காசு கட்டியிருக்கு. நீ போற அண்டைக்குக் கொண்டுபோய் விடு.”*

கட்டுநாயக்கா விமான நிலையத்தின் இறுதிச் சோதனைச்சாவடி.. “சரி மச்சான். இதிலை நான் இறங்கிறன். தேவையில்லாமல் கொழும்புக்கு உள்ள போகாதை கவனம். ஏதும் அவசரம் எண்டால் மட்டும் சிங்கப்பூர் நம்பருக்கு போனடி இல்லாட்டி துபாய்ப் போனதும் போனடி.”

“சரி மச்சான் சந்திப்பம்.” மசாயிரிடமிருந்து விடைபெற்றான். காரில் தயாராக வைத்திருந்த பொதியை எடுத்து அதில் இருந்த ஆவணங்களைக் கையில் எடுத்துக்கொண்டு விமான நிலையத்தில் நுழைந்தான். வழைமையான சோதனைகளை முடித்துவிட்டு விமானத்தில் ஏறுவதற்காகப் பயணிகள் தங்கியிருக்கும் கூடத்தில் தங்கியிருந்தபோது அவன் எதிர்பார்த்திருந்த ராணியின் அழைப்பு வந்தது. விமான நிலைய அறிவித்தல் ஏதும் மறுமுனையில் கெட்டுவிடக் கூடாது என்ற எச்சரிக்கையுடன் “கலோ..” என்றான்.

“டேய், நீ சொன்ன இடத்துக்கு வந்திட்டன்.. ஏதோ அவசரமா வரச்சொன்னாய். என்ன ஏது எண்டும் சொல்லேல்லை. எங்கே நிற்கிறாய்?”

நேரத்தைப் பார்த்தான். “ஓ..! வந்திட்டீங்களா. நான் இங்கே பக்கத்திலைதான். சதாம் ஸ்லுக்றிலை நிக்கிறன். ஒரே டிராஃபிக் 10 நிமிஷத்திலை வந்துடறன்.”

“என்ன விஷயம் எண்டாவது சொல்லன்.”

“அதை நேரிலை சொல்லுறன். அங்கே நீங்கள் 1st Floor போய் money exchange பண்ணிற இடத்திலை நில்லுங்கோ. வந்ததும் சொல்லுறன்.”

“சரி கெதியாய் வா.”

‘‘1st Floor-லையே நில்லுங்க. பிறகு உங்களைத் தேட ஏலாது.”

“சரி சரி.. அங்கேயே நிக்கிறன். எத்தினையோ பேரை நான் ஓடவைக்கிறன். நீ என்னை ஓடவைக்கிறாய். எல்லாம் என்ரை விதி.”

தொலைபேசியை அவன் முழுவதுமாக நிறுத்தினான். சிங்கப்பூர் விமானத்துக்கான பயணிகளைத் தயாராகும்படி அறிவித்தார்கள். விமானத்தில் ஏறி அமர்ந்துகொண்டான்.

விமானம் ஓடுபாதையில் உருளத்தொடங்கியது. நேரத்தைப் பார்த்தான். கொழும்பு நகரம் ஒருமுறை அதிர்ந்து அமைதியானது. இந்த அதிர்ச்சியில்.. புகைமண்டலத்தில் யார் யார் எல்லாம் கரியாகியிருப்பார்கள் என நினைத்தான். கொழும்பில் அவனுக்கு யாரை தெரியும்? யார் இறந்திருப்பார்கள் என்பதை எப்படி யூகிப்பது? ஆனால், அவனிடம் லாரியைப் பொறுப்பேற்றவனும், ராணியும் இறந்திருப்பார்கள் என்பது உறுதியாகத் தெரிந்தது.

❍ ❍

# 50

உலகில் போதைப் பொருள் கடத்தலுக்கு நிகராக அதிகளவு பணம் சம்பாதிக்கும் ஒரு தொழில் ஆயுத பேரம். போதைப் பொருள் வியாபாரம், முழுக்க முழுக்கச் சட்டவிரோதமானது. ஆனால், ஆயுத வியாபாரம் என்பது சட்டப்படியே பெரும் தொகை பணத்தைச் சுருட்டும் ஒரு தொழில். இந்த ஆயுத பேரங்களை உலக நாடுகளின் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களில் தொடங்கி ராணுவ அதிகாரிகள், இடைத்தரகர்கள் என்று அதன் பட்டியல் நீண்டுகொண்டே போகும். ஆயுதங்களைச் சட்டப்படி தயாரிக்கும் பெரிய நிறுவனங்கள் தொடக்கம் சட்டவிரோதமாகத்தயாரிப்புகள்செய்யும்சிறிய நிறுவனங்கள் வரை தங்கள் ஆயுதங்களைச் சந்தைப்படுத்துவதற்கான இடைத்தரகர்களையும் கொண்டிருப்பார்கள். இந்த இடைத்தரகர்களின் முதலாவது குறியே, உள்நாட்டுக் கலவரங்கள் நடக்கும் ஆசிய, ஆப்பிரிக்க, தென் அமெரிக்க நாடுகளே. இவர்கள் உள்நாட்டுக் கலவரங்கள் நடக்கும் அரசுக்கும் அதே நேரம் அரசோடு எதிர்த்துச் சண்டையிடும் ஆயுதக் குழுக்களுக்கும் ஒரே நேரத்தில் ஆயுதங்களை விற்பனை செய்துகொண்டிருப்பார்கள். அதேபோலத்தான் இலங்கை அரசுக்கு ஆயுதங்களை விற்கும் சில தரகர்களே புலிகளுக்கும் ஆயுதங்களை விற்றிருக்கிறார்கள். இவை மேற்குலக நாடுகளுக்குத் தெளிவாகத் தெரிந்தாலும் ஆயுத வியாபாரம் மூலம் வருகின்ற வருமானத்துக்காக இவை கண்டும் காணாமல் இருப்பார்கள். அரசுகளுக்கு

விற்கப்படும் ஆயுதங்களைவிட ஆயுதக் குழுக்களுக்கு விற்கப்படும் ஆயுதங்கள் மீது சில கட்டுப்பாடுகளை மட்டும் கொண்டிருப்பார்கள். அதே நேரம் மேற்குலக நாடுகள் தாங்கள் தயாரிக்கும் ஆயுதங்களின் வீரியங்களையும் பரிசோதிக்கும் பரிசோதனைக்களுமாக உள்நாட்டுக் கலவரங்கள் நடக்கும் நாடுகளையே பெரும்பாலும் நம்பியிருக்கிறார்கள்.

புலிகளுடனான இரண்டாம் கட்ட ஈழப்போர் தெடங்கிய காலத்தில் ஸ்ரீலங்கா அரசு நெடுந்தூர ஆட்லெறிகளைப் பெரிதும் நம்பியிருந்த காலம். ஸ்ரீலங்காவும் ஒரு தரகர் மூலம் குறைந்த விலையில் உலக ஆயுத சந்தைகளில் ஆட்லெறி எறிகணைகள் மற்றும் கனரக ஆயுதங்கள் வாங்குவதற்கான ஒரு பட்டியலை ஒப்படைத்திருந்தார்கள். அந்தப் பட்டியல் அந்தத் தரகர் மூலமாக உலகநாடுகளில் உள்ள பல இடைத்தரகர்களுக்கு அனுப்பப்பட்டது. பல இடங்களில் இருந்தும் அதற்கான கேள்வி விண்ணப்பங்கள் விலைப்பட்டியலோடு பிரதான தரகர் மூலமாக இலங்கை அரசிடம் ஒப்படைக்கப்பட்டது. இலங்கை அரசுக்குக் கிடைத்த விலைப்பட்டியலில் தென்னாப்பிரிக்க ஆயுத நிறுவனம் ஒன்றின் விலைப்பட்டியல் மலிவாக இருந்தது. ஓர் இந்திய வம்சாவளி இடைத்தரகர் மூலம் கிடைத்த பட்டியல் கிடைத்திருந்தது. அவரைத் தெரிவுசெய்து தங்களுக்கு வேண்டிய பட்டியலில் உள்ள எறிகணைகளையும் கனரக ஆயுதங்களையும் பெற்றுத் தரும்படி அவரோடு ஒப்பந்தம் போட்டார்கள்.

இலங்கை அரசின் பட்டியலில் உள்ள ஆயுதங்களை வாங்கும் அனுமதியைப் பெற்றுக்கொண்ட அந்த இந்திய வம்சாவளி இடைத்தரகர் ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் வேலையில் இறங்கினார். அதே நேரம் இவர் புலிகளுக்கும் ஆயுதங்களை விற்று வந்தார். இலங்கையரசு தென்னாப்பிரிக்காவிடம் ஆயுதம் வாங்கும் தகவல் இவர் மூலமாகப் புலிகளின் சர்வதேச கட்டமைப்பின் பொறுப்பாளருக்குக் கசிந்துவிட்டது. அப்போதுதான் அவரது மூளையில் திடீரென ஒரு திட்டம் பொறியாக உதித்தது. உடனடியாக உதயண்ணையும் ரோகனையும் தொடர்புகொண்டவர், இருவரையும் தாய்லாந்துக்கு நேரடியாக அழைத்து நோகாது நொங்கு குடிக்கும்

திட்டத்தை விளக்குகிறார்.

உடனே உதண்ணைக் காரியத்தில் இறங்கினார். அவனையும் கூப்பிட்டுத் திட்டத்தை விளக்கினார். தேவையான ஆவணங்களைக் குறிப்பிட்டு, அவற்றை உடனடியாகச் செய்து முடிக்கும்படி சொன்னார். மிக முக்கியமான இந்தத் திட்டம் செய்து முடிக்கப்படும் வரை எங்கள் குழுவைத் தவிர வேறு எவருக்குமே தெரியக் கூடாது என இறுக்கமாகச் சொன்னார். இது நடந்து முடிந்தால் உலக நாடுகளையே ஆச்சர்யத்தில் உறையவைக்கும் என்பது நிச்சயம். எனவே, அவதானமாகச் செயற்படும்படி கூறி அதற்கு உதவிகள் செய்வதற்காகத் தென்னாப்பிரிக்கா டர்பன் நகரில் வசிக்கும் ஒரு வைத்தியரைப் போய்ச் சந்திக்கும்படியும் ரோகனோடு சேர்ந்து இயங்கும்படியும் தான் இடையில் வந்து இணைந்துகொள்வதாகச் சொல்லி வழியனுப்பினார்.

தாமதிக்காமல் உடனடியாக ஜொகானஸ்பேர்க் பறந்தான். உதயண்ணைச் சொன்னபடி டர்பனில் வைத்தியரைப் போய்ச் சந்தித்திருந்தான். யாழ் வடமராச்சிப் பகுதியைச் சேர்ந்த அந்த வைத்தியர் அங்குப் பிரபலமானவர். செல்வாக்கு மிகுந்தவராகவும் இருந்தார். வைத்தியரிடம் அவரது மனைவி அல்லது வேறு யாருடைய பெயரிலாவது ஒரு கப்பல் ஏற்றுமதி இறக்குமதி சேவை நிறுவனம் ஒன்றை பதிவுசெய்தபடி சொன்னான். அவர் சம்மதித்ததும், அதற்கான ஆவணங்களைத் தயாரிக்கத் தொடங்கினான். இலங்கையரசு ஆயுதங்களைக் கொள்வனவு செய்து முடித்த வேளை, அவனும் தனது வேலைகள் அனைத்தையும் பூர்த்திச் செய்திருந்தான்.

அவர்கள் திட்டமிட்டபடியே இலங்கையரசு தான் வாங்கிய ஆயுதங்களை இலங்கைக்குக் கொண்டுவந்து சேர்ப்பதற்கான கப்பல் சேவை நிறுவனங்களிடம் அவர்களது கட்டண விவரங்களை அனுப்பி வைக்குமாறு விண்ணப்பங்களைக் கோரியது. பொதுவாக, ஆயுதங்களை வாங்கும் நாடுகள் தங்கள் நாட்டு நிறுவனங்களின் சரக்கு கப்பல்களிலேயேதான் ஆயுதங்களைக் கொண்டு சேர்ப்பது வழமை. ஆனால், இலங்கையில் அந்தளவுக்கு வசதியான சரக்கு கப்பல் நிறுவனங்கள் எதுவும் இல்லை. சாதாரண

சரக்குகளை ஏற்றி இறக்குவதைவிட ஆயுதங்களை ஏற்றி இறக்குவதில் கப்பல் நிறுவனங்களுக்கு இரட்டிப்பு லாபம் கிடைக்கும். அதே நேரம் அதற்காக ஆயுதம் வாங்கும் நாடுகள் கப்பலுக்கான தனிக் காப்புறுதி கட்டாயம் செய்திருக்கவேண்டும்.

இந்த ஆயுதம் ஏற்றப்படும் காப்புறுதி விஷயம் கொஞ்சம் சிக்கலானது. ஏதாவது விபத்து ஏற்பட்டால் கப்பலின் பெறுமதி, அந்தக் கப்பலில் வேலை செய்யும் பணியாளர்களுக்கு உயிர் ஆபத்து ஏற்பட்டால் அவர்கள் குடும்பங்களுக்கான இழப்பீடு, பணியாளர்கள் காயமடைந்து அல்லது அங்கவீனர்களானால் அவர்களுக்கான வாழ்நாள் கொடுப்பனவு என்று பெருந்தொகைப் பணத்தைக் காப்புறுதி நிறுவனங்கள் கறந்துவிடும். ஆயுதங்கள் பத்திரமாக ஏற்றி இறக்கி முடிந்தாலும் வரிக்கழிவு என்று மேலும் ஏதாவது சாக்குப் போக்குகளைச் சொல்லி பாதிப் பணம்தான் மீளக் கொடுப்பார்கள்.

இதில் இன்னொரு வியாபாரத் தந்திரம் என்னவென்றால், இந்தக் காப்புறுதியைத் தனியாக வேறு இடத்தில் செய்வதற்குக் கப்பல் நிறுவனங்கள் அனுமதிக்காது. தங்கள் கப்பல்கள் எந்த நிறுவனத்தில் காப்புறுதி செய்யப்பட்டிருக்கிறதோ அதே நிறுவனத்தில்தான் ஆயுதங்களை ஏற்றுபவர்கள் காப்புறுதி எடுக்கவேண்டும். இதன்மூலம் கப்பல் நிறுவனத்துக்கும் கப்பல் காப்புறுதி பணத்தில் கழிவு கிடைக்கும். இதெல்லாம் கூட்டிக் கழித்துப் பார்த்தால் காப்புறுதி பணமே ஆயுதங்கள் வாங்கிய பணத்தின் தொகையைத் தொட்டு நிற்கும்.

ஏற்கெனவே கடன் வாங்கி ஆயுதம் வாங்கிய இலங்கையரசுக்கு அதேயளவு காப்புறுதி பணமும் செலுத்துவது சிரமமான காரியம். ஆயுத பேரத்தில் சம்பந்தப்பட்டிருக்கும் பாதுகாப்பு அமைச்சு அல்லது ராணுவ அதிகாரிகளின் முக்கியமான சுருட்டல் பணமே இந்தக் காப்புறுதிப் பணம்தான். காப்புறுதி செய்யும்போது காட்டப்படும் கணக்கை, அதை மீளப் பெறும்போது காட்டாமல் அப்படியே தங்கள் பையில் போட்டுவிடுவார்கள். காப்புறுதியே செய்யாமல்விட்டால் அல்லது குறைந்த காப்புறுதி செய்திருந்தால் அதற்கு

ஒரு பெரிய தொகையைப் போட்டு கணக்கு காட்டிச் சுருட்டிவிடலாம். எனவே, குறைந்தளவு காப்புறுதி பணம் அல்லது காப்புறுதியே கோராமல் ஏதாவது கப்பல் நிறுவனம் ஆயுதங்களை ஏற்றி இறக்குமா என்பதுதான் இலங்கையரசின் எதிர்பார்ப்பு.

பல கப்பல் சேவை நிறுவனங்களும் தங்கள் கட்டண விவரங்களை இலங்கை அரசுக்கு அனுப்பிக் கொண்டிருந்தார்கள். தென்னாப்பிரிக்காவில் இருந்தும் ஒரு கப்பல் சேவை நிறுவனம் தனது கட்டண விவரத்தை அனுப்பியிருந்தது. அனைத்து கப்பல் சேவை நிறுவனங்களின் கட்டண விவரங்களையும் ஆராய்ந்த இலங்கை அரசு, குறைந்த கட்டண சேவையை அறிவித்திருந்த தென்னாப்பிரிக்காவின் பதிவில் இயங்கிய கப்பல் சேவை நிறுவனத்துக்குத் தனது ஆயுதங்களை ஏற்றி இறக்கும் அனுமதியை வழங்கி அதற்குரிய பணத்தைப் பெறும் அனுமதியையும் அனுப்பியிருந்தார்கள்.

# 51

டர்பன் நகரின் ஒரு மதுச்சாலையில் மேசையில் இருந்த சில ஆவணங்களை அவனுக்குக் காட்டிய வைத்தியர், கையில் இருந்த விஸ்கி கிளாஸை அவனது விஸ்கி கிளாஸோடு மோதிவிட்டு ஒரே மடக்கில் குடித்து முடித்தவர் “தம்பி, மனுஷியின்ரை பேரிலைதான் சிப்பிங் ஏஜென்சியை (கப்பல் முகவர் நிறுவனம்) பதிந்து தந்திருக்கிறன். எனக்கு ஒரு பிரச்னையும் வராதுதானே?” என்றார்.

“அண்ணை, நீங்கள் பிரச்னை இல்லாத வரைக்கும் எந்தப் பிரச்னையும் இல்லை. கப்பல் வெளிக்கிட்ட உடனையே உங்கடை கப்பல் ஏஜென்சியை இழுத்து பூட்டிவிடுங்கோ. பிரச்னை முடிஞ்சுது” என்றுவிட்டு, “மீண்டும் சந்தர்ப்பம் கிடைத்தால் சந்திக்கலாம்” என வலது கை கட்டை விரலை உயர்த்திக் காட்டி விடைபெற்றான்.

எல்லாம் நல்லபடியாகவே நடந்துகொண்டிருந்தது. இலங்கை அரசின் ஆயுதங்கள் புலிகளின் கப்பலில் ஏற்றப்பட்டுக் கப்பல் புறப்படத் தயாரானது. கப்பல் புறப்பட்ட இரண்டு நாட்களில் கப்பலுடனான வெளித்தொடர்புகள் அனைத்தும் நிறுத்தபட்டுத் தனியாகத் தங்கள் பொறுப்பாளருடனும் அவனும் மட்டும் தொடர்புகொள்ளத் தொலைத்தொடர்பில் ஓர் அலை வரிசையைப் பாவிப்பார்கள். கப்பலில் கப்பல் சிப்பந்திகள் ஏழு பேரோடு ரோகனும் பயணிப்பான். கப்பல் றெயூனியன் தீவுப் பகுதி துறைமுகம் ஒன்றை அடைந்ததும் அவன்

ஏற்கெனவே விமானம் மூலம் அங்கு வந்து வந்து கப்பலின் பெயர் ஆவணங்கள் என்பனவற்றை மாற்றிவிட்டு கப்பல் தொடர்ந்தும் பயணித்து முல்லைத்தீவை நோக்கி செல்லும். திட்டம் இதுதான். ஆனால், கப்பல் புறப்பட்டதுமே அவர்களுக்குக் கிடைத்த தகவல் அதிர்ச்சியானதாக இருந்தது. மும்பையில் இருந்து பெருமளவு போதைப் பொருட்களோடு ஐரோப்பா நோக்கி புறப்பட்டு வந்துகொண்டிருந்த ஒரு சரக்கு கப்பலை அரேபிய கடற்பகுதில் வைத்து ஐரோப்பிய அமெரிக்கப் போதைப் பொருள் எதிர்ப்பு கூட்டுக் கடற்படையினர் மறித்துச் சோதனை செய்திருக்கிறார்கள். பல நாட்களாகக் கப்பலை அக்கு வேறு ஆணி வேறாகத் தேடுதல் நடத்தி போதைப் பொருட்கள் கண்டுபிடிக்கப்படும் தருணத்தில் கப்பல் சிப்பந்திகள் கப்பலில் இருந்த சிறிய படகு ஒன்றில் அதிவேக இயந்திரங்களைப் பூட்டி தப்பித்துச் சென்றுவிட்டார்கள். கப்பலில் பல மில்லியன் பெருமதியான பெருந்தொகை போதைப் பொருட்கள் பிடிபட்டிருந்தது. கப்பலை கூட்டுப் படையினர் டியாகோ தீவுக்குக் கொண்டு சென்றது மட்டுமல்லாமல், தப்பிச் சென்றவர்களைக் கண்டுபிடிப்பதற்காக கடல் ரோந்தில் ஈடுபட்டிருந்தார்கள். டியாகோ தீவில் இருந்த அமெரிக்கத் தளத்தின் உதவியும் கோரப்பட்டிருந்தது.

இந்தச் செய்திதான் அவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கி இருந்தது. புறப்பட்ட கப்பலை நிறுத்த முடியாது. தங்கள் பொறுப்பாளர்களுடன் தொடர்புகொள்ள முயற்சித்தார்கள். முடியவில்லை. றெயூயன் நோக்கி தொடர்ந்து பயணிப்பது ஆபத்தானது. கப்பலை ஒழுங்கு செய்த முகவர் நிலையம் பூட்டப்பட்டு கப்பலுடனான தொடர்புகளும் இல்லாது போனதும் ஆயுதக் கப்பல் காணாமல்போன செய்திகள் வெளியாகும். இலங்கையரசு காணாமல்போன கப்பலைக் கண்டுபிடிக்க உலக நாடுகளின் உதவியை நாடும். தப்பிப் போன கடத்தல்காரரைத் தேடும் பன்னாட்டுக் கடற்படையினர் டியாகோ தீவில் இருக்கும் அமெரிக்கத் தளத்தின் சக்தி வாய்ந்த ராடர்கள் உன்னிப்பாக இந்து சமுத்திர பிராந்தியத்தில் போகும் கப்பல்கள் அனைத்தையும் கண்காணிக்கும். ஆகவே, திட்டத்தை மாற்றியாக வேண்டும். உடனே ரோகனும் அவனும் கப்பல் மாலுமியுமாகக் கதைத்துத் திட்டத்தை மாற்றினார்கள். கப்பல் இப்போது

நேரெதிர் திசையில் ஆப்பிரிக்கக் கண்டத்தைச் சுற்றிப் பயணிக்க ஆரம்பித்தது. இது தலையைச் சுற்றி மூக்கைத் தொடும் வேலைதான். ஆனால், வேறு வழி இல்லை. அப்போதைக்கு நிலைமையைச் சமாளித்தாக வேண்டும். றெயூனியன் தீவில் மாற்றத் திட்டமிட்டிருந்த விஷயங்களைச் சீறாலியோனில் உள்ள துறைமுகம் ஒன்றுக்கு அருகில் வைத்து மாற்றுவதாகத் திட்டமிடப்பட்டது. கப்பலும் புறப்பட்டுவிட்டது. இப்போது அவன் சீறாலியோன் நாட்டை நோக்கிப் பறக்கத் தொடங்கினான்.

❍

சீறாலியொான் எல்லைக் கடலில் தள்ளாடியபடி தரித்து நின்ற கப்பலைக் குறிவைத்து சிறிய படகில் பயணப்பட்டுகொண்டிருந்தார்கள். கப்பலில் இருந்து எறியப்பட்ட கயிற்று ஏணியில் தனது பொருட்களைக் கட்டியவன், ஏணியில் ஏறி கப்பலில் நுழைந்ததும் ரோகனும் மற்றவர்களுமாக ஓடிவந்து அவனைக் கட்டிப்பிடித்துத் தூக்கி மகிழ்ச்சியைக் கொண்டாடினார்கள். கொண்டுவந்த பையைத் திறந்து அதில் இருந்த மல்போறோ சிகரெட் பெட்டிகளை எடுத்து அனைவரையும் நோக்கி வீசியவன், இரண்டு கைகளிலும் சிவாஸ் விஸ்கி போத்தல்களைத் தூக்கி காட்டியதும் எல்லோருமே ‘ஓ..!’ என்று மகிழ்ச்சியில் கத்தினார்கள். கைகளில் மதுக்கிண்ணம் சிகரெட் புகையை ஆழ இழுத்து விட்டபடி அடுத்த திட்டத்தைப் பற்றிப் பேசத் தொடங்கினார்கள்.

“நாளைக்கேகப்பலைகடலுக்கைதூரமாகக்கொண்டுபோய் நிப்பாட்டிட்டு பெயரை மாத்தத் தொடங்கிறம். மாத்தி முடிஞ் சதும் பயணத்தைத் தொடருவம். நாங்கள் நினைச்சபடி இலங்கை அரசு இன்னமும் கப்பல் காணாமல்போன விஷயத்தைத் தெரிஞ்சு கொள்ளவே இல்லை. அல்லது தெரிஞ்சும் கௌரவப் பிரச்னையாலை செய்தியை வெளியே விடாமல் ரகசியமா வைச்சிருக்கினம். கப்பலைக் கண்டுபிடிக்க உலக நாடுகளிடையே உதவிகேட்டிருக்கலாம். அந்தச் செய்தியும் இன்னமும் வெளிவரேல்லை. எதுக்கும் நாங்கள் கவனமா இருக்கிறது நல்லது” என்று இவன் சொல்ல, “பேசாமல் நேர் வழியாகவே போயிருக்கலாம்” என்று சலித்துக்கொண்டான் மாலுமி.

மறுநாள் நடுக்கடலில் கயிறுகளில் பலகைகளைக் கட்டித் தொங்கவிட்டு பெயர் மாற்றும் வேலைகளைத் தொடங்கினார்கள். பழைய பெயரை அழிக்காமல் அதற்கு மேல் புதுப்பெயரை எழுதினால் பெயின்ட் காய்ந்துபோனதும் பழைய பெயர் வெளியே லேசாகத் தெரியத் தொடங்கிவிடும். அடிக்கடி அழித்து மாற்ற வசதியாக ஸ்டிக்கர் போன்றே தயாரித்து ஒட்டுவது வழைமை. அதனை அயன் பாக்ஸ் போன்றதோர் இயந்திரத்தை சூடாக்கி எழுத்துக்களில் வைத்து அழுத்தியதும் அவை கழரத் தொடங்கும். பின்னர் பெயின்ட்டை அடித்துவிட்டுப் புதிய எழுத்துக்களை ஒட்டவேண்டும். ஆனால், கடலில் தள்ளாடும் கப்பலில் கயிறுகளில் தொங்கியபடி பிரமாண்டமான அந்த எழுத்துக்களை அழித்து, பெயின்ட் அடித்துப் புதுப்பெயரை எழுதுவது என்பது மிகச் சிரமமான காரியம். அதனை நன்கு பழக்கப்பட்டவர்களே செய்யலாம். கால நிலையும் ஒத்துழைக்க வேண்டும். சில நேரங்களில் தவறி கடலில் விழுந்து விபத்துகளும் ஏற்பட்டிருக்கின்றன. எனவேதான் கப்பலின் பெயரில் முழுப் பெயரையும் அழித்து மாற்றும் சிரமத்தை குறைத்து இருக்கின்ற பெயரில் சில எழுத்துக்களை மட்டும் அழித்துச் சில எழுத்துக்களை மாற்றும் தந்திரமே கடைப்பிடிக்கப்படும்.

அன்னா மரியா (ANNA.MARIYA) என்றிருந்த கிறிஸ்துவக் கப்பலை ஏ. என்.ரியாஸ் (A.N. RIYAS) என்று முஸ்லிமாக மதம் மாற்றினார்கள். சுமார் நான்கு நாட்கள் பெயர் மாற்றுவதிலேயே முடிந்தது. அனைத்து வேலைகளும் முடிந்ததும் கப்பலில் மேல் தளத்தில் ஒரு வெற்றுத் தகரப் பேணியை வைத்து அதற்குள் அன்னா மரியாவின் பதிவு ஆவணங்கள் அனைத்தையும் போட்டுக் கொளுத்திச் சாம்பலாக்கி அதைத் தூக்கிக் கடலில் எறிந்தான். ஏ.என்.ரியாஸின் ஆவணங்களைக் கப்பல் மாலுமியிடம் கொடுத்ததும் கப்பல் தனது பயணத்தைத் தொடரத் தொடங்கியது.

இனி கப்பல் இரண்டு கண்டத்தைத் தாண்டியாக வேண்டும். அது ஆப்பிரிக்கா ஐரோப்பா கண்டம் மட்டுமல்ல. சாத்திரக்காரர்கள் சொல்கின்ற ஆபத்துக் கண்டம் இரண்டையும் தாண்ட வேண்டும். முதலாவது

ஸ்பெயினையும் மொராக்கோவையும் பிரிக்கும் மத்தியதரை கிப்ரால்றர் சிறிய கடல் பகுதி. அடுத்த கண்டம் எகிப்தையும் பிரிக்கும் சூயெஸ் கால்வாய். இந்த இரண்டு கண்டத்தையும் தாண்டிச் செங்கடல் ஊடாக மீண்டும் அரேபியக் கடலுக்குள் புகவேண்டும். இந்த இரண்டு பகுதிகளிலுமே ஐரோப்பாவுக்குள் போதைப் பொருட்கள் கடத்தப்படுவதைத் தடுப்பதற்காகப் பாதுகாப்புக் கெடுபிடி அதிகம் போன்றதொரு தோற்றப்பாடு இருந்தாலும், இந்த இரண்டு பகுதிகளிலுமே உள்ள அதிகாரிகள் உள்பட இந்தப் பகுதிகள் உலகின் சட்டவிரோத மாஃபியா குழுக்களின் கட்டுப்பாட்டில்தான் இயங்கிக்கொண்டிருந்தது. ஆனால், மற்றைய நாட்டுக் கடற்படையினரைவிடக் குறிப்பாகப் ஃபிரான்ஸுக்குள் போதைப் பொருள் கடத்தப்படுவதைத் தடுப்பதற்காக நீரிலும் நிலத்திலும் தாக்குதல் நடத்தும் ஃபிரான்ஸின் விசேஷ மரைன் கொமாண்டோ படையினர் அதிவேகப் படகுகளில் வந்து சந்தேகத்துக்கு இடமான அல்லது உளவாளிகளின் தகவல்களைப் பெற்றுக் கப்பல்களைச் சோதனை செய்வது வழமை.

இவர்களின் கண்களில் இருந்து தப்பிவிட்டால் போதும். மற்றபடி பயப்பட எதுவும் இல்லை. திடீரெனப் ஃபிரெஞ்சு மரைன் படையினரின் சோதனைகள் ஏதாவது இந்தப் பகுதிகளில் நடந்தாலும் அதனை அறிந்த கப்பல் மாலுமிகள் தங்களுக்கு உள்ள தொடர்புகளால் அதனை மற்றைய மாலுமிகளுக்கும் சங்கேத மொழியில் அறிவித்துவிடுவார்கள். கொடியைத் தலைகீழாகப் பறக்கவிட்டோ, கப்பலின் ஏதாவது ஒரு பகுதியில் சிறிய சிவப்புக் கொடியை கட்டிவிட்டோ சங்கேத முறையில் வழமைக்கு மாறாக எதையாவது செய்து சமிக்ஞை கொடுத்துவிடுவார்கள். இந்தச் சங்கேத முறையையும் காலத்துக்குக் காலம் மாற்றிக்கொண்டே இருப்பார்கள்.

கப்பலை துறைமுகங்களில் நிறுத்தி வைக்கும்போது கப்பல் கரையோடு மோதாமல் இருக்க, கப்பலை சுற்றிப் பெரிய ரப்பர் வளையங்களைத் தொங்கவிட்டிருப்பார்கள். அந்த வளையங்களுக்கு வெள்ளை மற்றும் சிவப்பு நிறத்தில் சம அளவில் பெயின்ட் அடித்திருப்பார்கள். ஆனால், சிவப்புக் கொஞ்சம் அதிக அளவில் அடிக்கப்பட்டிருந்த வளையத்தைக் கப்பலின் முன்பக்கமாகக் கட்டியிருந்தால்

*பிரெஞ்சு படைகள் நிற்கிறார்கள் என்று அர்த்தம். இதுதான் அப்போது சமிக்கையாக இருந்தது. அவர்கள் மத்திய தரைக் கடற்பகுதியில் இயங்கும் பெரிய மாஃபியாக் குழுக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி நிலவரங்களை அறிந்துகொண்டும் பைனாகுலரில் எதிரே நகர்ந்துகொண்டிருக்கும் கப்பல்களில் சிவப்பு அதிகமாக அடிக்கப்பட்ட வளையம் கட்டப்பட்டிருக்கிறதா எனக் கவனித்தபடியும் நகர்ந்துகொண்டிருந்தார்கள். எந்தப் பிரச்னையும் இல்லாமல் கப்பல் இரண்டு கண்டங்களையும் கடந்து செங்கடல் பகுதியில் நுழைந்ததும் அவன் மீண்டும் ஆப்பிரிக்காவின் எரித்திய நாட்டு கரை ஒன்றில் இறங்கிக்கொண்டான். கப்பல் தொடர்ந்து பயணித்து முல்லைக் கடலில் புகுந்துகொண்டது.*

# 52

**ஓ**யாத அலைகள் நடவடிக்கை நேரம். ஓயாத அலைகள் இரண்டு முடிந்துவிட்டது. கிளிநொச்சி முழுமையாகப் புலிகளின் கைகளில் வந்துவிட்டது. ஜெயசிக்குறுவும் இறுகி நின்றது. மாங்குளத்துக்கு அப்பால் நகர முடியாமல் ராணுவம் படுத்துவிட்டது. இந்த நேரம் அடுத்த அடி கொடுக்கப் புலிகள் திட்டமிட்டனர். ஓயாத அலைகள் மூன்று அது. சண்டைக்கு முன்னர் மருத்துவ ஏற்பாடுகளைப் பக்காவாகக் கவனிப்பார்கள். தொடர் சண்டைகள் காரணமாக மருத்துவ இருப்புத் தீர்ந்துவிட்டது. இனி மருந்துகளை இறக்குமதி செய்தால்தான் காயமடைந்தவர்களைக் காப்பாற்றலாம். சாதாரணமாக ராணுவம் முன்னேறும் சண்டை ஒன்றையே சமாளிப்பது சிரமம். இதற்குள் புலிகள் பெரும் நடவடிக்கை ஒன்றை செய்வது என்பதை நினைத்தே பார்க்க முடியாது. மருந்து பொருட்களை எங்கிருந்து பெறலாம் என ஆலோசனைகள் நடத்தப்பட்டன. சிலர் “இந்தோனோசியா” என்றார்கள். சிலர் மலேசியாவில் இருந்தும் பகுதி பகுதியாகக் கொண்டு வரலாம். மிகுதியைக் காயங்களுக்குக் கட்டும் மருந்துகள் பஞ்சு பண்டேஜுகள் என்பனவற்றைச் சிறிய அளவுகளில் இந்தியாவில் இருந்தும் கொண்டுவந்து சேர்க்கலாம் எனத் திட்டமிட்டிருந்தார்கள். கோடிக்கணக்கான பெறுமதி வாய்ந்த அத்தியாவசிய மருந்துப் பொருட்களை ஒரேயடியாகக் கொண்டுவந்து சேர்ப்பதற்கான சாத்தியங்கள் குறைவாகவே இருந்தன. அப்போதுதான் மருந்து தருவிப்பது தொடர்பாக இயக்கம் ஆலோசனையில் ஈடுபட்டிருப்பதைப் பர்மாவில்

தங்கியிருந்து வேலைகள் செய்துகொண்டிருந்த அவனது குழு அறிந்தது.

உடனடியாக உற்சாகமாகக் காரியத்தில் இறங்கினார்கள். அந்தப் பொறுப்பைத் தங்களிடம் விட்டுவிடுமாறும் தேவையான மருந்துப் பொருட்கள், அதன் தொகை அடங்கிய பட்டியலை அனுப்பிவிடுமாறும் கேட்டார்கள். அதற்காக அமைக்கப்பட்ட பொறுப்பாளரோடு தொடர்பை அவன் ஏற்படுத்தினான். காயங்களுக்கான மருந்துப் பொருட்கள், அதுவும் சாதாரணமாக வெளியிடங்களில் கொள்வனவு செய்ய முடியாத மயக்க மருந்துகள், உடலின் பாகங்களை மட்டும் தேவையான இடங்களில் விறைப்பை ஏற்படுத்தும் மற்றும் வலிகொல்லி ஊசி மருந்துகள் ஒரேயடியாகக் கொண்டுவந்து இறக்குவது சாத்தியமாகாது. “எங்கிருந்து கொண்டுவரப் போகிறாய்?” எனக் கேட்டார்கள். “இந்தியாவில் இருந்து கொண்டுவருவேன்” என்றான். இந்தியாவில் தமிழ்நாட்டுக் கரைகளில் இருந்து சாதாரணமாகச் சிறிய வள்ளங்களில் மற்றும் மீனவர்கள் மூலமாகப் பொருட்களை கொண்டுவருவதே சிரமமாக இருக்கும்போது எப்படிப் பெரிய அளவிலானதொரு மருந்து பொருட்களை கொண்டு வர முடியும்? அது ஆபத்தானது என ஆரம்பத்தில் அதற்குப் பொறுப்பானவர்களால் நிராகரிக்கப்பட்டது. எனினும் அவனது குழுவின் கோரிக்கை இயக்கத்தின் தலைமைக்குப் போய்விட்டது. ஏற்கெனவே இவர்கள் செய்த காரியங்களின் நம்பிக்கை தலைமைக்கு இருந்திருக்க வேண்டும். அவர்கள் எப்படியும் செய்து முடிப்பாங்கள் என்று அதன் பொறுப்பு அவனிடம் ஒப்படைக்கப்பட்டது.

மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களின் பட்டியலை அவனுக்கு அனுப்பி வைத்தவர்கள். ஏதாவது உதவிகள் தேவைப்பட்டால் ஏற்பாடு செய்து தருவதாகவும் சொன்னார்கள். தமிழ்நாட்டில் இருந்தோ அல்லது கேரளாவில் இருந்தோதான் அவன் மருந்துப் பொருட்களைக் கொள்வனவு செய்து அனுப்பப்போவதாகப் பொறுப்பைக் கொடுத்தவர்கள் நினைத்துப் பயந்து அவனது கோரிக்கையை நிராகரித்திருந்தார்கள். பின்னர் பொறுப்புக் கொடுக்கப்பட்ட பின்னரும் அங்கிருந்துதான் வரப்போவதாக நினைத்துக்கொண்டிருந்தார்கள்.

ஏற்பாட்டாளர்களைத் தொடர்புகொண்டு, ஓர்

உதவி கேட்டான். யாராவது ஓரளவு ஆங்கிலம் பேசத் தெரிந்த ஒருவரைத் தந்துதவுமாறு கேட்டான். “வருபவர் அப்பாவித்தனமான நம்பிக்கையுள்ள ஒருவராக இருக்க வேண்டும்” என்றான். அதே சமயம் இலங்கை விமான நிலையம் ஊடாகப் பெங்களூர் விமான நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். அப்போதுதான் அவன் கர்நாடகாவில் இருந்து இயங்கப்போவது அவர்களுக்குப் புரிந்தது.

அவன் கேட்டதுபோலவே ‘நவம்’ என்பவரைப் புலிகளின் புலனாய்வு பிரிவினர் பெங்களூருக்கு அனுப்பி வைத்திருந்தார்கள். வந்து சேர்ந்தவரை அவனது நண்பர் ஒருவர் வரவேற்றுப் பெங்களூரில் நட்சத்திர விடுதி ஒன்றில் தங்கவைத்தார். வந்து சேர்ந்தவருக்கோ ஏன் வந்தேன்? எதற்கு வந்தேன்? என்று எதுவும் தெரியாது. தன்னை ஏதோ பெரியதொரு ரகசிய நடவடிக்கைக்கு அனுப்பியிருப்பதாக நினைத்து ஒருவித டென்ஷனிலேயே இருந்தார். தனக்கான உணவையும் அறைக்கே தருவித்துச் சாப்பிட்டுவிட்டு அறையைவிட்டு வெளியே வருவதில்லை. அவரை அங்கு கொண்டு வந்து விட்ட பின்னர் அவரை ஒருவன் கண்காணித்தபடியே இருந்தானே தவிர, யாரும் அவரைப் போய்ச் சந்திக்கவில்லை.

மியன்மாரில் இருந்து அவன் புறப்படும்போதே அவனது ஃபிரெஞ்சுக்கார காதலி யூலியாவை உடனடியாக மும்பை வந்து சேரும்படி சொல்லியிருந்தான். யூலியா அங்குவந்து சேர்ந்ததுமே அவன் திட்டங்களைச் செயற்படுத்தத் தொடங்கினான். அவனது திட்டம் என்னவெனில், அப்போது ஆப்பிரிக்காவில் உள்நாட்டுக் கலவரம் நடந்துகொண்டிருந்த ஒரு நாட்டுக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்காகச் சர்வதேச உதவி நிறுவனம் ஒன்றின் பெயரிலேயே அனைத்து மருந்துகளையும் கொள்வனவு செய்யவேண்டும். எனவே, யூலியாவை ஒரு சர்வதேச உதவி நிறுவனம் ஒன்றின் பணியாளர் ஆக்கினான். அதற்கான ஆவணங்களையும் அவளுக்கு ஓர் அடையாள அட்டையையும் தயாரித்து முடித்தான். இவை நடந்துகொண்டிருக்கும்போதே அவனது குழுவில் இருந்த இன்னொருவன் கர்நாடகாவின் ஊப்ளி பகுதியில் தனியார் மருத்துவமனை ஒன்றின் உதவியோடு அவர்களின் தேவைகளுக்காகக் கொள்வனவு செய்வது போன்று சாதாரணமான காயங்களுக்கான மருந்து பொருட்கள் மற்றும் சிறிய அளவு மயக்க

மற்றும் வலி கொல்லி morphine ஊசி மருந்துகளையும் கொள்வனவு செய்து முடித்தான். அடுத்ததாகப் பெருமளவு மோர்பின் குளிசைகள், ஊசி மருந்துகளைச் சர்வதேச தொண்டு நிறுவனத்தின் பெயரிலேயே மும்பையில் உள்ள ஒரு மருந்துவ நிறுவனத்தில் அவனும் யூலியாவுமாகச் சென்று கொள்வனவு செய்தார்கள். அதற்குரிய பணம் வெளிநாடுகளில் இருந்து அவர்களது வங்கி கணக்குக்கு வழங்கப்பட்டது. மருந்து நிறுவனங்களுக்கும் பணம்தான் குறியாக இருந்ததே தவிர, அது எங்கிருந்து வருகிறது என்பது பற்றியெல்லாம் கவலைப்படவில்லை.

10 நாட்களிலேயே வேகமாக மருந்துக் கொள்வனவுகள் முடிந்துவிட்டன. அவற்றில் பத்திரமாகப் பாதுகாக்கப் படவேண்டிய மருந்துகள் கர்நாடகா உடுப்பிப் பகுதியில் உள்ள பிரபல தனியார் மருத்துவமனை ஒன்றின் சேமிப்பு அறைகளிலும் சாதாரணக் குளிசை மருந்துகள் மற்றும் பழுதடையாத மருத்துவ உபகரணங்கள் என்பன வாடகைக்கு எடுக்கப்பட்ட வீடு ஒன்றிலும் சேமிக்கப்பட்டன. இப்போது அடுத்த பிரச்னை. அந்த மருந்துகளை நாட்டைவிட்டு வெளியே கொண்டு போவதென்றால் சுங்க இலாகா மற்றும் சில பாதுகாப்பு அதிகாரிகளின் கடிதங்களைப் பெற்ற பின்னர்தான் கப்பலில் ஏற்றலாம். ஆனால், அதனையும் முடித்தார்கள். பாதுகாப்பு மருத்துவ ஆவணங்கள் அனைத்தும் தயாரிப்பவை தயாரித்து நேரடியாகக் கையெழுத்து எடுப்பவர்களிடம் எல்லாம் எடுத்தாகிவிட்டது. சுங்கத் துறை அதிகாரியின் கையெழுத்து அனுமதி தேவை. அதனை களவாகத் தயாரித்துவிடலாமா எனவும் யோசித்தான். ஆனால், எல்லாம் நல்லபடியாக முடிந்து கடைசி நேரத்தில் அந்த ஒரு கையெழுத்தால் எல்லாம் குழம்பிவிடக் கூடாது என்ற காரணத்தால் அதனைச் சம்பந்தப்பட்டவரிடம் நேரடியாகவே வாங்கி விடுவது என நினைத்தான்.

சம்பந்தப்பட்ட அதிகாரியோ சில வருடங்களில் ஓய்வுபெறப் போகும் கண்டிப்பான பேர்வழி என்றொரு தகவலும் கிடைத்தது. அதுமட்டுமல்ல, அவன் ஆவணங்கள் தயாரித்திருந்த அந்த சர்வதேச உதவி நிறுவனத்தின் கிளைகள் மும்பையிலும் டெல்லியிலும் இருந்தன. அந்த அதிகாரி அந்த நிறுவனத்தின் கிளைகளுடன் தொடர்புகொண்டு ஏதாவது கேட்டால் எல்லாம் கிழிந்துவிடும். ஆனால், அந்த உதவி நிறுவனத்தின் ஆப்பிரிக்கக் கிளை ஒன்றின் இலக்கம்

*அவன் தயாரித்த ஆவணங்களில் இருந்தது அதற்குப் போனடித்தோ பாக்ஸ் அனுப்பியோ விவரங்கள் கேட்டால் எந்தப் பிரச்னையும் இல்லை. அதற்கான ஏற்பாடுகளை அவன் ஏற்கெனவே செய்திருந்தான்.*

*சுங்கத் துறை அதிகாரியை கவிழ்க்க என்ன செய்யலாம் என யோசித்தான். எடுத்த எடுப்பிலேயே லஞ்சம் கொடுக்க அவனுக்கு விருப்பம் இல்லை. அதை அந்த அதிகாரி மறுத்துவிட்டால் வேறு சிக்கலாகவும் மாறிவிடும் அபாயமும் இருந்தது. சாதாரணமாகச் சபலத்துக்கு அடிமையாகாத ஆண்கள் கிடையாது. அதுவும் அங்கமெல்லாம் அழகு கொட்டிக்கிடக்கும் யூலியா போன்றதொரு வெள்ளைகாரப் பெண்ணைப் பார்த்து உள்ளூர் இந்தியர் ஒருவர் சபலப்படாமல் இருப்பார் என்பது நடக்கவே நடக்காது. எனவே, யூலியாவைத் தனியாக அவரிடம் அனுப்புவது. அதற்கும் மசியாதுவிட்டால் பின்னர் லஞ்சம் கொடுப்பதற்கான பேச்சுவார்த்தைகளில் இறங்கலாம் என நினைத்தான். யூலியா இப்போதெல்லாம் சரளமாக ஆங்கிலம் கதைக்கப் பழகியிருப்பதால் எந்தப் பிரச்னையும் வராது. எனவே, யூலியாவை அனுப்புவது என்று முடிவானது.*

*யூலியாவை ஒரு விமானப் பணிப்பெண்ணைப் போல ஆடையணிவித்தான். குதிக்கால் உயர்ந்த காலணி. குட்டைப் பாவாடை மேலே சேட் அணிந்து அவளது இடது பக்க மார்பு பகுதியில் அடையாள அட்டை. அதில் அவளது ஒரு போலிப் பெயர் மற்றும் படம் இலக்கம்.*

*அவளது விசிட்டிங் கார்டுகளையும் ஒழுங்காக அடுக்கி ஃபைலில் போடப்பட்ட ஆவணங்களையும் அவள் கையில் கொடுத்தவன், விடைபெறப் போனவளின் மேற்சட்டையில் மேலும் இரண்டு பட்டன்களை அகற்றிவிட்டு முடிந்தவரை அதிகாரி முன்னால் குனிந்து கதைக்கும்படி ஆலோசனை சொல்லி அனுப்பினான்.*

*அதிகாரியின் அறைக்குள் நுழைந்த யூலியா அதிகாரியைப் பார்த்து கைகூப்பி வணக்கம் தெரிவித்து விஷயத்தைச் சொன்னாள். அவளைக் கண்டதும் அதிகாரி ஒரு முகமலர்ச்சியுடனே நடந்துகொண்டார். சந்திப்புச் சுமுகமாகச் சென்றுகொண்டிருப்பதை யூலியா உணர்ந்துவிட்டாள். வெற்றிபெற்ற களம் ஒன்றில் ஓடிக்கொண்டிருக்கும் ஓட்டப் பந்தய வீராங்கனையைப்போல அவள் இருந்தாள். அவரது*

அனுமதிக் கையெழுத்து வேண்டும் என்றபடி பருத்த மார்புகள் பாதி வெளியே தெரிய அவர் முன்னால் குனிந்து கையில் இருந்த கோப்புக்களை நீட்டினாள். அதிகாரியின் கண்கள் கோப்புக்களைப் பார்க்கிறதா அல்லது தனது மார்புகளைக் கவனிக்கின்றதா எனக் கவனித்தாள். அதிகாரியின் கைகள் மெதுவான நடுக்கத்தோடு கோப்புக்களை வாங்கின. அந்தச் சமயத்தில் கண்கள் அவளது மார்புகளினுள் புதைந்திருந்தன.

அந்தச் சமயத்தில் அவள் கதிரையில் அமர்ந்துகொண்டாள். கோப்பில் இருந்த ஆவணங்களை மேலோட்டமாகப் புரட்டியபடியே கொஞ்சம் ஊர் விவகாரங்கள், அவளது நிறுவனத்தின் சேவைகள் பற்றியெல்லாம் கேட்டவர் அவளைப் பற்றியும் விசாரித்துவிட்டு, "எல்லாம் சரிபார்த்து உறுதிப்படுத்த இரண்டு நாட்களாகும். அதன் பின்னர்தான் கையெழுத்துப் போடலாம். எல்லாம் முடிந்ததும் போனடிக்கிறேன். வந்து ஆவணத்தை எடுத்துப் போங்கள்" என்றார். அவள் அதிர்ந்துபோனாள். விஷயம் தனது கட்டுப்பாட்டில் உள்ளதாகத்தான் இதுவரை நினைத்திருந்தாள். ஆனால், வேறு திசைக்குத் திரும்புகிறதே! ஆனால், அதைக் காட்டிக்கொள்ளாமல் சமாளித்தபடியே, "சரி. தாராளமாக உங்கள் நேரத்தை எடுத்துக்கொள்ளுங்கள்" என்றவள், தனது விசிட்டிங் கார்ட்டை எடுத்து அவரிடம் நீட்டினாள். "இந்த இலக்கத்துடன் தொடர்புகொள்ளுங்கள். அதுமட்டுமல்ல, உங்களுக்கு ஏதும் சந்தேகங்கள் ஏற்பட்டாலும் தாராளமாக என்னுடன் தொடர்புகொள்ளலாம்" என்றுவிட்டு விடைபெற கைகூப்பியவளுக்குத் தனது கையை நீட்டிய அதிகாரிக்கு தனது கையைக் கொடுத்து மெதுவாகக் குலுக்கிவிட்டு விடைபெற்றாள்.

அவள் கையெழுத்து வாங்கிய ஆவணத்தோடு வருவாள் என அங்குள்ள ஓர் உணவு விடுதியில் காத்திருந்தவனுக்கு, யூலியா கையை ஆட்டியபடி வந்தது குழப்பமாக இருந்தது. வந்தவள் சிரித்துக்கொண்டே விஷயத்தைச் சொன்னாள். அவனுக்கோ எரிச்சலாக இருந்தது. "வேணுமெண்டால் சட்டையில் இன்னும் இரண்டு பட்டனை கழட்டிவிட்டிட்டாவது கையெழுத்தை வாங்கிகொண்டு வராமல் இப்பிடி எல்லாத்தையும் கிழவனிட்டை கொடுத்திட்டு வந்து நிக்கிறியே. கிழவன் தொண்டு நிறுவனக் கிளைக்குப் போனடிச்சுப் பார்த்தால் எல்லாம் நாசம்" என்று அவள் மீது கோபமானான்.

"டென்ஷன் ஆகாதை. அப்பிடி எதுவும் நடக்காது. கிழவனுக்கு என்னோடை காதல் வந்திட்டுது. அதுதான் உடனே கையெழுத்துப் போடேல்லை" என்றாள்.

"எப்பிடிச் சொல்லுறாய்?" புருவத்தை உயர்த்திக் கேட்டான்.

"கிழவன் ஃபைலிலை இருந்த ஆவணங்களைப் பற்றியோ மருந்து பற்றியோ எந்தக் கேள்வியுமே கேக்காமல் என்னைப் பற்றி மட்டுமே விசாரித்துக்கொண்டிருந்தான். அதுதான் சொல்லுறன். வேணுமெண்டால் பார். இன்று கிழவனிடம் இருந்து எனக்குப் போன் வரும்" என்றாள்.

"சரி, எல்லாம் நல்லபடியா நடந்தால் சரி" என்றபடி அவர்கள் தங்கியிருந்த குடியிருப்புக்குக் கிளம்பினார்கள்.

யூலியா சொன்னதுபோலவே அன்று மாலை அழைப்பு வந்தது. அவள் தொலைபேசியின் சத்தத்தை அதிகரித்து அவனும் கேட்கக்கூடியதாகச் செய்துவிட்டுக் கதைத்தாள். "இந்த இளம் வயதில் தொண்டு நிறுவனத்தில் சேர்ந்து சேவைகள் செய்யும் ஒரு பெண்ணைச் சந்தித்தது தனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது" என்று வழியத் தொடங்கியவர், "எங்கள் நட்பு தொடரவேண்டும். எனவே, நான் உனக்கு விருந்து தர விரும்புகிறேன். தயவுசெய்து மறுக்கக் கூடாது" என்று கெஞ்சினார். அவள் பேசவேண்டியவற்றை அவன் அவ்வப்போது ஒரு பேப்பரில் எழுதி அவளிடம் காட்டிக்கொண்டேயிருந்தான். விருந்துக்குச் சம்மதித்தாள். அதுவும் இரவு விருந்து. ஆனால் இன்றில்லை. "கொஞ்சம் வேலை அதிகம். அதனால் இரண்டு நாள் கழித்து வார இறுதி நாளில் ஒரு நட்சத்திர விடுதியில் விருந்தை வைக்கலாம்" என்றாள் குரலை குழைந்து குழைந்து. அந்தக் குழைவில் அவர் சர்வநிச்சயமாகத் தகர்ந்துபோயிருப்பார் என நம்பினான். அதே குழைவில் "அந்தப் ஃபைல் பார்த்தீங்களா? உங்கள் கடிதமும் கையெழுத்தும் என்ன மாதிரி" என்றாள்.

"ஓ அதுவா. ஒரு தொண்டு நிறுவனத்தின் சேவைகளை இழுத்தடிக்கக் கூடாது. அதுவும் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கானது. அதனால் நான் அதனை நீ போன உடனேயே சரி பார்த்துவிட்டேன். எனது கடிதம் தயார்செய்து கையெழுத்தும் போட்டும்விட்டேன். நாளையே நீ வந்து எடுத்துப் போகலாம் என்றார்" உற்சாகமான குரலில்.

"சரி நாளை சந்திக்கலாம்" என்றபடி அவள் தொலைபேசியை நிறுத்தியதும் தனது கைகளை முன்னால் நீட்டி பொத்திப் பிடித்து 'யெஸ்' எனப் பின்னால் இழுத்தவன், அப்படியே யூலியாவை கட்டிப்பிடித்து உதட்டில் ஒரு முத்தத்தை அழுத்திக்கொடுத்து நன்றி தெரிவித்தான்.

மறுநாளும் குதிக்கால் உயர்ந்த காலணி, கவர்ச்சியான உடையோடு சென்ற யூலியாவுக்குக் குளிர்பானம் கொடுத்து அதிகாரி வரவேற்றார். அவளிடம் தனது கடிதத்துடன் கோப்புகளைக் கொடுத்து, துறைமுகத்தில் சுங்கத் துறையால் ஏதாவது பிரச்னைகள் வந்தால் தனது பெயரைச் சொல்லுமாறு அல்லது தனக்குப் போனடிக்கச் சொன்னார். கடைசியில் அவள் சம்மதம் தெரிவித்த இரவு விருந்தை நினைவூட்டினார். "எப்போது எந்த விடுதியில் சந்திக்கலாம்?" என்றும் கேட்டார். "பெங்களூரின் மத்தியில் இருக்கும் Elanza நட்சத்திர விடுதியில் வெள்ளிக்கிழமை இரவு சந்திக்கலாம்" என்றாள். "தனியாகத்தான் வருவாயா? அல்லது உனது நண்பர்கள் யாரும் கூடவே வருவார்களா?" மெல்லிய சிரிப்புடன் "தனியாகத்தான்" என்றாள்.

# 53

உடுப்பித் துறைமுகம் பழமை வாய்ந்த ஒரு மீன்பிடித் துறைமுகம். அங்குச் சிறிய சரக்குக் கப்பல்களும் வந்து தரித்துச் செல்வது வழைமை. அவர்களது மருந்துப் பொருட்களை ஏற்றவேண்டிய கப்பலும் வந்து அவற்றில் ஒன்றாக நின்றது. ஆவணங்கள் கைக்குக் கிடைத்ததும் பொருட்களை ஏற்றவேண்டியதுதான். ஆவணங்கள் அன்று கைக்குக் கிடைத்துவிடும் என்பதால் பொருட்களை ஏற்றிச்செல்வதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. பொருட்கள் எல்லாம் ஏற்றப்பட்டுக் கப்பல் சர்வதேச கடலுக்குள் நுழைவதற்கு எப்படியும் நான்கு நாட்களாவது எடுக்கும். எனவே, அதுவரை எந்தச் சந்தேகமும் அந்தச் சுங்க இலாகா அதிகாரிக்கு வராமல் பார்த்துக்கொண்டாலே போதுமானது. எனவே, மருந்துப் பொருட்கள் எல்லாம் துறைமுகத்துக்குக் கொண்டு சென்று ஏற்றி முடித்து வெள்ளி மாலை கப்பல் புறப்பட்டுவிடும். ஆனாலும் அந்த அதிகாரிக்கு சொன்னபடி அன்று மாலை யூலியா சந்திப்பது என முடிவு செய்தார்கள்.

இரவு விடுதியில் பதிவுசெய்யப்பட்டிருந்த மேசையில் யூலியா தனியாகக் காத்திருந்தாள். சற்று தள்ளி ஒரு மூலையில் அவன் நண்பன் ஒருவனோடு யூலியாவைக் கவனித்தபடி பியரடித்துக்கொண்டிருந்தான்.

கிழவர் கோட் சூட் எல்லாம் போட்டு அட்டகாசமாக வந்தார். வரும்போது கையில் அழகாகப் பார்சல்

செய்யப்பட்ட ஏதோ பொருள் ஒன்றையும் கொண்டுவந்து அவளிடம் நீட்டினார். யூலியா அதை வாங்கிப் பிரித்துப் பார்த்தாள். மரத்தால் செய்யப்பட்ட அழகான ராதாகிருஷ்ணரின் சிலையொன்று. அதைப் பார்த்து ஆச்சர்யப்பட்டவள்போல் கிழவரின் அருகில் போய்க் கன்னத்தில் ஒரு முத்தத்தை வைத்து “நன்றி” என்றாள். அவர்கள் போட்ட திட்டப்படி யூலியாவே உயர்ரக விஸ்கி போத்தல் ஒன்றை ஓடர் கொடுத்தாள். பணியாள் கொண்டுவந்த விஸ்கியை வாங்கியவள், அவனைப் போகச் சொன்னாள். அவளே இரண்டு கிளாஸில் ஊற்றி ஒன்றை அவரிடம் நீட்டிவிட்டு தனது மது கோப்பையை உயர்த்திச் ‘சிங்’ என்று கிழவரின் கோப்பையுடன் மெதுவாக மோதிவிட்டு விழுங்கத் தொடங்கினாள். அவள் விஸ்கி அருந்தவதில் நிதானமாக இருந்தாள். அதே சமயத்தில் கிழவரின் கோப்பையை நிறைத்துக்கொண்டே இருந்தாள்.

செக்கெண்டுகள் நிமிடங்களாகி நேரத்தை விழுங்கிக்கொண்டிருந்தன. மணித்தியாலங்கள் கடந்து கிழவருக்குப் போதை தலை கிறுகிறுக்கத் தொடங்கியது. ஆரம்பத்தில் தவறுதலாக யூலியாவின் கைகளைத் தட்டுப்பட்டதுபோல் தொட்டவர், அவள் பிரச்னை இல்லை என்றதும் அவளது கைகளை வருடியபடி அவளது கைகளைத் தொட்டதே தனது வாழ்வின் பெரும் பாக்கியம் என்றெல்லாம் புலம்பத் தொடங்கினார். வந்து சேர்ந்த உணவை கொஞ்சம் ஒப்புக்குச் சாப்பிட்டு முடித்தார். அவளிடம் மன்னிப்பு கேட்டுவிட்டு தள்ளாடியபடி எழுந்து கழிவறைக்குப் போனார். யூலியா அவனைப் பார்த்து புன்னகைத்தாள். கழிவறை அறையொன்றில் புகுந்தவர் வாந்தி எடுக்கும் சத்தம் கேட்டது. மூத்திரம் பெய்துவிட்டு வெளியே வந்தவன் மெதுவாக யூலியாவின் காதில் “எல்லாம் ஓகே. இன்னமும் கொஞ்சம் கொடுத்தால்போதும். பிறகு அறைக்கு அழைத்துப் போ” என்றுவிட்டு நகர்ந்தான்.

வாந்தியெடுத்து வாயெல்லாம் கழுவிவிட்டு தள்ளாடியபடி வந்து அமர்ந்தவருக்கு இன்னொரு மதுக் கோப்பையை நீட்டினாள். “வேண்டாம்” என்றவருக்கு, “இறுதியாக எனக்காக” என்றாள். அதனை வாங்கியவரால் ஒரு வாய் மட்டுமே குடிக்க முடிந்தது. யூலியாவை பார்த்து “இங்கேயே அறையில் தங்கலாமா? நான் அறை கேட்டுப்

பார்க்கிறேன்'' என்றார். ''ஓ! தாராளமாக'' என்றவள், ''நான் போய் அறை இருக்கிறதா எனக் கேட்டு வருகிறேன்'' என எழுந்து போனாள். அவர்கள் ஏற்கெனவே ஓர் அறையைப் வேறொரு பெயரில் பதிவுசெய்து வைத்திருந்தார்கள். அன்று இரவு குறிப்பிட்ட நேரத்துக்குள் வராவிட்டால் அதனை ரத்து செய்யும்படியும் சொல்லியிருந்தார்கள். எனவே, ஓர் அறை நிச்சயம் அப்போது காலியாக இருக்கும்.

எழுந்து போனவள், ஒரு பணியாளுடன் திரும்பி வந்தாள். வந்தவன் பணிவாக, ''சார் அறை இருக்கிறது. ஆனால், பதிவுசெய்வதற்கு உங்கள் அடையாளம் (identy) ஏதாவது தேவை'' என்றான். உடனே கோபமானவர் ''நான் யார் தெரியுமா?'' என்றபடி தனது பட்டம் படிப்புப் பதவி எல்லாம் சொல்லி தனது வேலை அடையாள அட்டையை எடுத்து வீசிவிட்டு அறைக்கான பணத்தையும் வீசினார். அவற்றை பவ்வியமாக எடுத்துப்போன பணியாள், அறைத் திறப்போடு திரும்பி வந்தான். அதற்கிடையில் கோப்பையில் மீதம் இருந்த மதுவை யூலியாவே அவருக்குப் பருக்கிவிட்டிருந்தாள். திறப்போடு வந்தவன் அவளிடம் திறப்பைக் கொடுத்துவிட்டு அவரது அடையாள அட்டையை மறுநாள் பெற்றுக்கொள்ளச் சொல்லிவிட்டுப் போனான்.

கிழவரைக் கைத்தாங்கலாக லிஃப்ட்டில் ஏற்றி அறைக்கு அழைத்துப்போனதும் அறை கழிவறைக்குள் புகுந்து கிழவர் மீண்டும் வாந்தியெடுக்கத் தொடங்கினார். உடனே தனது கைத் தொலைபேசியில் யூலியா அவனோடு தொடர்பை ஏற்படுத்தினாள். கிழவர் வந்து படுத்ததும் நித்திரையாகிவிடுவார். அதுவரை தொலைபேசியைத் தொடர்பில் வைத்திருக்குமாறு கூறினான். ஆனால், கிழவர் கழிவறையால் வெளியே வந்ததும் என்னைப் பிடித்து இழுத்தால் என்ன செய்வது. இது அவளது சந்தேகம். ''அவர் வெளியே வந்ததும் அவரைத் தயாராகச் சொல்லிவிட்டு, நீ கழிவறையில் புகுந்து கதவைச் சாத்திவிட்டுக் கொஞ்ச நேரம் காத்திரு. அவர் நித்திரையாகிவிடுவார்'' என்றான்.

அவன் சொன்னதுபோலவே வெளியே வந்த கிழவர் அவளைக் கட்டியணைக்க முற்பட்டதும் அவரைப் பிடித்துப்

பக்குவமாகக் கட்டிலில் இருந்தியவள், "தயாராக இருங்கள். நான் குளித்துவிட்டு வருகிறேன்" என்று குளியலறைக்குள் புகுந்தாள். உள்பக்கமாகப் பூட்டிவிட்டுத் தண்ணீரை திறந்துவிட்டுவிட்டு கொஞ்ச நேரம் காத்திருந்தாள். கிழவரின் எந்தச் சத்தத்தமும் கேட்கவில்லை. கதவை திறந்து பார்த்தாள். மேல் சட்டையைக் கழற்றிவிட்டுக் குறட்டைவிட்டுக்கொண்டிருந்தார். இணைப்பிலேயே நின்றவனிடம் "கிழவன் தூங்கிட்டான்" என்றாள்.

"ஓ! அப்பிடியா நல்லது அவர் உடை என்ன நிலையில் இருக்கிறது?"

"மேல் சட்டை மட்டும் கழற்றியபடி படுத்திருக்கிறார்."

"கிழவனை முழு நிர்வாணமாக்கு."

"எதுக்கு?"

"சொல்லுறதை மட்டும் செய்.."

அவசரமாக அவரது காற்சட்டை, உள்ளாடை எல்லாவற்றையும் இழுத்துக் கழற்றினாள். "சரி கழற்றிட்டன் இனி என்ன செய்ய?"

"உனது கீழ் உள்ளாடையைக் கழற்று.."

"எதுக்கடா?" அவளது குரலில் கோபம் தெரிந்தது.

"சொல்வதை மட்டும் செய்"

"சரி கழற்றிட்டன், இனி என்ன செய்ய? அவரின் துணிகளோடு கலந்து கட்டிலுக்குக் கீழ் பக்கமாகத் தள்ளிவிட்டுவிட்டு உனது கைப் பையைத் திறந்து உதட்டுச் சாயத்தை எடுத்து உனது உதடுகளில் நன்றாகத் தடவி அவரது கழுத்து, கன்னம், மார்பு, தொடை பகுதிகளில் பதித்துக் கொஞ்சம் தேய்த்துவிட்டு வெளியே வா."

சிறிது நேரத்தின் பின்னர் விடுதிக்கு வெளியில் யூலியா வந்தாள். அவளுக்காக அவன் அங்குக் காத்திருந்தான். தயாராக நின்ற காரில் இருவரும் ஏறிக்கொள்ள அவனது நண்பன் காரை இயக்கினான். அவனது கையில் கிழவர் யூலியாவுக்குக் கொடுத்த ராதா கிருஷ்ணர் சிலை இருந்தது. யூலியா அவனிடம் "எதற்கு என்னுடைய உள்ளாடையைக் கழற்றிப்போட சொன்னாய்?" என்று கேட்டாள். "நாளைக்குக்

காத்தாலை கிழவர் எழும்பி தலையிடியோடு தன்னுடைய உடுப்பைத் தேடுவார். அப்ப உனது உள்ளாடையைப் பார்த்ததும் உங்களுக்குள்ளை அது நடந்திருக்கு என்று சந்தோஷப்பட்டுக் கொள்ளுவார். நாளையும் உனக்குப் போன் வரும். இன்னும் இரண்டு நாளை கடத்திட்டால் கப்பல் கடல் எல்லையைத் தாண்டிவிடும். பிறகு, உனது போன் சிம்கார்டைக் கழற்றி எறிஞ்சால் சரி'' என்றபடி கார் யன்னலை இறக்கிக் கையில் இருந்த ராதாகிருஷ்ணர் சிலையை வீசியெறிந்தான்.

மறுநாள் மத்தியானமளவில் மீண்டும் அவர் யூலியாவுக்குப் போனடித்தார். அப்போதும் அந்த விடுதியில்தான் படுத்துக்கிடக்கிறாராம்.

"இப்பதான் எழுந்து பார்த்தேன். நீ எங்கே நிக்கிறாய்?" என்றார். "கொஞ்சம் வேலை இருந்தது. அதுதான் காலை நேரத்தோடு வந்துவிட்டேன். ஆனாலும் நீங்கள் பொல்லாத ஆள்தான். புரட்டி எடுத்துவிட்டீர்கள்" என்றாள். "அப்படியா? அதுதான் இந்தியன் ஆண்கள்" என்று பெருமிதத்தோடு சொன்னார். பேச்சு நீண்டுகொண்டேபோனது. அவர் எதையோ குறிவைத்துப் பேசிக்கொண்டிருப்பதாக அவனுக்குப்பட்டது. இறுதியில் விஷயத்துக்கு வந்தார். "நீ ஒரு பொருளை மறந்துவிட்டுப் போய்விட்டாய்" என்றார். "அவசரத்தில் மறந்துவிட்டேன். எறிந்துவிடுங்கள்" என்றாள்.

"இல்லை, அதனை எனது பொக்கிஷமாகப் பாதுகாத்து வைத்திருப்பேன். இனி எப்போது சந்திக்கலாம்?" என்றார். "அவசரமாக எங்கள் டெல்லி கிளை அழைத்திருக்கிறார்கள். அங்குப் போய்த் திரும்ப வந்ததும் உங்களுடன் தொடர்புகொள்கிறேன்" என்று சொல்லிச் சமாளித்தாள்.

உடனேயே தொலைபேசியை வாங்கி சிம்மை கழற்றிப் பல்லால் இரண்டாகக் கடித்து எறிந்தான். "நாங்கள் இப்போது எல்லாவற்றையும் மறந்து நீ விரும்பிய ராஜஸ்தானுக்குப் போகப்போகிறோம்'' என்றதும், யூலியா துள்ளியெழுந்து அவனைக் கட்டியணைத்தவள், "அதுசரி நீ ஒருவரை அழைத்துப் பெங்களூரில் ஒரு விடுதியில் தங்க வைத்திருக்கிறாயே. அது எதற்கு?'' என்றாள். "ஓ! அதுவா நாங்கள் ராஜஸ்தான் போய்ச் சேர்ந்ததும் அவருக்குப்

போனடித்து அவரை ஊருக்கு அல்லது தமிழ்நாட்டுக்கு போகச்சொல்லிவிட வேண்டும் அவ்வளவுதான்'' என்றான்.

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை என்று அவனுக்குப் புரிந்தது. "அவரை எதற்கு அழைத்தேன் தெரியுமா? பொதுவாகவே விடுதிகளில் தங்கும் வெளிநாட்டவர்களின் கடவுச்சீட்டுக்களைப் பதிவுசெய்வது வழைமைதானே? ஆனால், ராஜீவ் காந்தியின் கொலைக்குப் பின்னர் இந்தியாவுக்கு இலங்கையில் இருந்து வந்து தங்கும் இலங்கையர்கள் குறிப்பாக தமிழர்கள் வந்து தங்கினால் விடுதிக்காரர்கள் கடவுச்சீட்டைப் பதிவுசெய்வதோடு அங்கு அருகில் உள்ள காவல் நிலையத்துக்கும் தகவல் தெரிவிக்கவேண்டும். பின்னர் மாநில உளவுத் துறை அதிகாரி ஒருவர் வந்து விடுதியில் தங்கியிருப்பவர் என்ன நோக்கத்துக்காக வந்தார். எத்தனை நாள் தங்கியிருப்பார் என்ற சம்பிரதாய விசாரணை நடத்தி விவரங்களைப் பெற்றுக்கொண்டு போவார்கள். அதைப்போல நான் வருவித்த நவத்தையும் விசாரித்துப்போயிருந்தார்கள்.

எங்கள் திட்டத்தில் எங்காவது சிறு பிசகு ஏற்பட்டிருந்தால் அவர்கள் முதலாவதாக விடுதிகளில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழர்களைத்தான் குறிவைத்து விசாரணைகளை ஆரம்பிப்பார்கள். அப்படிப் பார்த்தால் நவத்தை விசாரித்தால் அவர் வந்ததில் இருந்து விடுதியிலேயே முடங்கிக் கிடக்கிறார். அவருக்கு ஏன் வந்தேன்? எதற்கு வந்தேன்? என்றும் தெரியாது. எனவே விசாரணைகளில் அவர் எதையாவது மாற்றி மாற்றிச் சொல்லி உளறத் தொடங்க அவர் மீதே சந்தேகம் அதிகரித்து உளவுத் துறை அவரைப் போட்டு நோண்டி நொங்கெடுத்துகொண்டிருக்கும். அவருக்கும் சொல்வதற்கு எதுவுமே தெரியாது. இப்படியாக ஓர், இரண்டு நாளாவது போயிடும். அதற்குள் நாங்கள் எங்கள் திட்டத்தை முடித்துவிட்டோ அல்லது கைவிட்டுவிட்டோ முடிந்தால் இந்தியாவைவிட்டு அல்லது கர்நாடகா மாநிலத்தை விட்டுத் தப்பிச் சென்றுவிடலாம். அதற்கான ஓர் ஏற்பாடுதான் நான் அவரை வருவித்தது. எப்படி எனது ஐடியா?'' என்று சொல்லி கண்ணடித்துச் சிரித்தான்.

"என்ன இருந்தாலும் அவர் பாவம் இல்லையா? இப்படி

ஓர் அப்பாவியை மாட்டிவிடலாமா? இப்படித்தானே ஏதாவது பிரச்னையென்றால் என்னையும் மாட்டிவிட்டு ஓடிவிடுவாய்'' என்றாள் செல்லக் கோபத்தோடு. எங்கள் இலக்கை அடையவேண்டுமென்றால் இடையில் இப்படியான விஷயங்களையெல்லாம் தவிர்க்க முடியாதது. மனதை இறுக்கிக் கல்லாக்கியபடி உணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்காமல் வந்த வேலையை முடிக்கவேண்டும். ஆனால், நல்லபடியா எல்லாம் முடிஞ்சுது. எந்தப் பிரச்னையும் வரவில்லைத்தானே. பிறகேன் நாங்கள் சண்டை பிடிப்பான். கப்பல் சர்வதேச கடல் எல்லைக்குள் நுழையும்போது நாங்கள் ராஜஸ்தானில் பாலைவனத்தில் ஒட்டகத்தின் மீது இருப்போம். பிறகென்ன கவலை?'' என்று அவளைச் சமாதானப்படுத்தி முடித்தான்.

அவன் ராஜஸ்தான் ஜெய்சல்மார் கிராமத்தில் நின்றபோது கப்பல் சர்வதேச எல்லைக்குள் நுழைந்து தனது பாதையை மாற்றி முல்லைக்கடலை நோக்கிப் பயணத்தைத் தொடங்கிவிட்ட செய்தி வந்து சேர்ந்தது. உடனடியாகப் பெங்களூர் விடுதியில் தங்கியிருந்த நவத்துக்குப் போனடித்து, “அண்ணை நீங்கள் இனி போகலாம்'' என்றான். அவருக்கோ ஒன்றும் புரியவில்லை.

“தம்பி, ஏதோ வேலை செய்யச் சொல்லி உங்களிட்டை அனுப்பினவை. ஆனால், நீங்கள் போகச் சொல்லுறீங்கள். உங்களை நம்பி கொம்பனி பெரிய வேலை எதையோ தந்திருக்கும் எண்டு நினைக்கிறன். ஆனால், விளையாட்டுத்தனமா இருக்கிறீங்கள்” எண்டு அவர் வேறை கோபமாகக் கதைத்தார்.

“அண்ணை உங்களுக்கு மதுரையிலை இருந்து போன் வரும்'' என்றுவிட்டு வைத்துவிட்டான். பின்னர் மதுரையில் இருந்து அவரைத் தமிழ்நாட்டுக்கு வரும்படி அழைப்பு வந்து அவர் மதுரை போய்ச் சேர்ந்திருந்தார்.

**பி.கு:**

*அன்றைய காலங்களில் மியான்மர் ராணுவ அரசுடன் புலிகள் அமைப்பு மிக நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தார்கள். ஆனால், அனைத்துலகத்தின் புதிய கட்டமைப்பை சேர்ந்தவர்கள்*

மியான்மருடனான தொடர்புகளைச் சரியாகப் பேணவில்லை என்பது மட்டுமல்ல விலகியே நின்றிருந்தார்கள். அதே நேரம் இறுதி யுத்த முடிவின்போது புலிகளின் தலைமையும் முக்கியமான தளபதிகளும் மியான்மருக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பது பற்றியும் ஒரு முயற்சி நடந்திருந்தது. புலிகளுக்கான உதவிகளைக் கொடுக்கக் கூடாதென மியான்மர் அரசு மீது உலக நாடுகளின் அழுத்தங்கள் இருந்திருக்கலாம். ஆனால், அமெரிக்க அரசின் மியான்மர் மீதான அழுத்தங்கள் புலிகளின் முடிவுக்குப் பின்னர்த் தளர்த்தப்பட்டிருந்தன.

# 54

கிழக்கு ஐரோப்பாவின் பழைமைவாய்ந்த சிறிய நாடு குரோஷியா. பல தீவுகளையும் ஐரோப்பாவுக்கான அண்மித்த கடல்வழிப் போக்குவரத்து வசதிகளையும் கொண்டதொரு நாடு. குறுக்காக இத்தாலித் துறைமுகங்களுக்குக் குறுகிய நேரத்தில் பயணம் செய்யலாம். பொஸ்னிய நாட்டுக்கும் குரோஷியாவுக்கும் அருகில் உள்ள துறைமுக நகர் ஒன்றில் கொடும் குளிரைக் குறைப்பதற்காக வெட்கா அடித்துவிட்டு குரோஷிய விபசார அழகி ஒருத்தியின் மார்புகளுக்கு மத்தியில் குறுக்காகத் தலை புதைத்துப் படுத்திருந்தவனுக்கு அதிகாலை ஒரு தொலைபேசி அழைப்பு. கதகதப்பான மார்புகளின் இதமான சூட்டில் இருந்து விடுபட மனம் இல்லாது பாதித் தூக்கத்தோடு கைத் தொலைபேசியை எடுத்துக் காதில் வைத்தான். மறுமுனையில் அவனுக்குப் பழக்கமானதொரு குரல். ஆச்சர்யத்தோடு "திலகரண்ணைச் சொல்லுங்கோ. என்ன திடீரெண்டு என்ரை நம்பரை தேடிப்பிடிச்சு அடிக்கிறீங்கள். ஏதும் முக்கியமான அலுவலோ?" என்றான்.

"ஓம் முக்கியமான அலுவல். அதைவிட ரகசியமான வேலை யாரை அனுப்பலாம் எண்டு யோசிச்சுக்கொண்டு இருக்கேக்கைதான் நீ உங்கை நிக்கிறதா தகவலும் உன்ரை இலக்கமும் அனுப்பினவை. பெல்ஜியத்துக்கு வந்த ஒருத்தன் மாஸ்கோவிலை பிடிபட்டுபோய் நிக்கிறான். ஆள் உள்ளேதான் நிக்கிது. ஆள் தாய்லாந்தாலை வந்தது. தாய்லாந்துக்குத் திருப்பி அனுப்பினால் பரவாயில்லை. ஆனால், ஆள் வந்தது சிங்கப்பூர் புத்தகம். அதாலை

ஆளை சிங்கப்பூருக்கு அனுப்பப்போறாங்களாம். அங்கே அனுப்பினால் ஆளை உள்ளை போட்டிட்டுப் பிறகு ஸ்ரீலங்காவுக்கு ஏத்திடுவாங்கள். அதாலை ஆளை எப்பிடியும் வெளியாலை எடுத்துப் பத்திரமாகக் கொண்டுவந்து சேர்க்கவேண்டியது உன்ரை பொறுப்பு. இங்கே முக்கியமானதொரு வேலைக்காகச் சந்தனம் (பொட்டம்மான்) அனுப்பி வைச்சது. அதாலை கொஞ்சம் கவனமெடுத்து ஆளை கையோடை நீ கொண்டுவந்து என்னட்டைச் சேர்த்து விடு" என்றது திலகரின் குரல்.

"சரியண்ணை. அவனின்ரை பெயர் விவரம், அவன் வந்த புத்தகத்தின்ரை பெயர் விவரம் தாங்கோ" என்றவன் அவசரமாக எழுந்து லைட்டைப் போடவும் முனகியபடி அவள் போர்வையால் முகத்தை இழுத்து போத்தியபடி புரண்டு படுத்துக்கொள்ள "இவள் வேறை" என்று சலித்துக்கொண்டபடி அவசரமாகப் பேனைவை எடுத்துக் கிடைத்த பேப்பரில் விவரங்களை எழுதியவன்,

"சரி மாஸ்கோவிலை ஆளை வெளியாலை எடுக்கலாம். சிங்கப்பூர் புத்தகத்துக்கு ரஷ்யா விசா தேவை. அதெல்லாம் நான் பார்க்கிறன். ஆனால், இமிக்கிரேஷன்காரன் இரண்டாயிரம் டொலராவது கேட்பான். வந்தவன் கையிலை எவ்வளவு வைச்சிருக்கிறான்?" என்று விசாரித்து விவரங்களை எடுத்தவன், "நான் ஆளோடை ஃபிரான்ஸ் வரை வர ஏலாது. எனக்கு முக்கியமான வேறை வேலையொண்டு இருக்கு. முடிஞ்சால் போலந்து வரை கொண்டுவந்து அங்காலை பத்திரமாக அனுப்பிவிடுறன். சரி சந்திப்பம்" என்றபடி போனை வைத்தான். இப்போது அவனது நித்திரை முழுவதுமாக முறிந்துபோயிருந்தது. நேரத்தைப் பார்த்தான். ஆறு மணியாகிக்கொண்டிருந்தது. இப்ப போனடிச்சா ரஷ்யாக்காரன் உறுமுவான். கொஞ்சம் பொறுத்து அடிக்கலாமென நினைத்தபடி சிகரெட் ஒன்றை எடுத்து பற்ற வைத்து புகையை இழுத்து ஊதியபடி யோசிக்கத் தொடங்கினான்.

திலகரை அவனுக்கு ஏற்கெனவே தெரியும். இந்தியப் படைக்காலத்தில் திலகர் அவனது பாதுகாப்பில்தான் சண்டிலிப்பாய் கிராமத்தில் இருந்து பின்னர் இந்தியாவுக்கு அனுப்பி வைத்திருந்தான். பின்னர் ஃபிரான்ஸ் வந்து சேர்ந்த திலகருக்குப் புலிகளின் அனைத்துலகச் செயலகப் பரப்புரைப் பொறுப்பு வழங்கப்பட்டிருந்தது. திலகரே

அவனைத் தேடித் தொலைபேசியடித்து விவரத்தைச் சொல்லியிருப்பதால் வருகிற சந்தானத்தின் ஆள் முக்கியமான ஆளாகத்தான் இருக்கும் என யூகித்தவன், நேரத்தைப் பார்த்துவிட்டு மாஸ்கோ விமான நிலையத்தில் அவனுக்குப் பழக்கப்பட்ட குடிவரவு குடியகல்வு பகுதி அதிகாரியின் இலக்கத்துக்குப் போனடித்து விவரத்தைச் சொல்லி ஆளை வெளியில் எடுப்பதற்கான பேரத்தைப் பேசி முடித்தான். பேரம் 2,000 அமெரிக்க டொலருக்குப் படிந்தது. தான் மாஸ்கொ விமான நிலையத்தினுள் வந்து சேர்ந்ததும் மீண்டும் தொடர்புகொள்வதாகவும் அதுவரை சம்பந்தப்பட்டனை சிங்கப்பூருக்குத் திருப்பி அனுப்பாமல் பார்த்துக்கொள்ளுமாறும் சொல்லி தொடர்பைத் துண்டித்தான். அதே நேரம் அவன் மாஸ்கோ விமான நிலையத்தினுள் போய் இறங்கி, தடுத்து வைக்கப்பட்டிருப்பவனின் கடவுச்சீட்டை வாங்கி அதில் ரஷ்யாவுக்கான விசா அடித்தால்தான் அவனை வெளியில் எடுக்கலாம்.

அன்று மாலை splite விமான நிலையத்தில் இருந்து மாஸ்கொவுக்கு ஒரு விமானம் இருந்தது. அதில் டிக்கெட்டைப் போட்டுவிட்டு, தன்னிடமிருந்த சிறிய பையில் இருந்த உலக நாடுகளின் விசா முத்திரைகளில் ரஷ்ய விசா முத்திரையை எடுத்து (அன்றைய காலங்களில் அனைத்து நாட்டு விசாக்களும் ரப்பர் முத்திரைகளிலேயே இருக்கும்) அது மலேசியாவில் உள்ள ரஷ்ய தூதரகத்தால் வழங்கப்பட்டதுபோல் மாற்றங்கள் செய்தவன், அதை ஒரு என்வெலப்பில் போட்டு ஒட்டி ஒரு விலாசத்தையும் எழுதிவிட்டு அதில் தடவுவதற்கு வேண்டிய விசேஷ மையைத் தனது பேனாவில் நிரப்பிக்கொண்டு அன்று மாலை விமானத்தைப் பிடித்து மாஸ்கோ விமான நிலையத்தில் போய் இறங்கியவன், உள்ளே விமானம் மாறும் பயணிகள் தங்கியிருக்கும் இடத்தில் போய்த் தேடிக்கொண்டிருந்தவனுக்கு ஆச்சர்யம். “அட... ஆன்டனி!” என்றான். ஆன்டனி, புலிகள் அமைப்பின் அரியாலைப் பகுதியைச் சேர்ந்தவன். அவனை இந்தியப் படை காலங்களின் பழக்கமாகியிருந்தவன். அவனையே ஃபிரான்ஸில் ஒரு நடவடிக்கைக்காகப் புலனாய்வு பிரிவு பொறுப்பாளர் அனுப்பிருந்தார். கடவுச்சீட்டு ஆன்டனியின் கையில் இல்லை. அதிகாரிகள் வாங்கி வைத்திருந்தார்கள். அவன் மீண்டும் தனக்குப் பழக்கமான

குடிவரவு, குடியகல்வு அதிகாரிக்குப் போனடித்து விவரத்தை கூறிவிட்டு ஆன்டனியிடம் எப்படிப் பிடிபட்டான் என விவரம் கேட்டான்.

தாய்லாந்தில் வைத்துத் தலை மாத்திய (கடவுச்சீட்டில் படம் மாத்துவது) சிங்கப்பூர் பாஸ்போட்டில் அவர்களுக்குப் பழக்கமான ஒரு முகவர் ஏத்திவிட்டிருக்கிறார். சிங்கப்பூர் பாஸ்போர்ட்டில் ஒரு வசதி என்னவென்றால், ஐரோப்பா, அமெரிக்கா, கனடா எனப் பல நாடுகளுக்கு விசா தேவையில்லை. அங்குத் தமிழர்களும் கணிசமான அளவு வாழ்வதால் எம்மவர்கள் பலர் அன்றைய காலங்களில் சிங்கப்பூர் பாஸ்போட்டைப் பயன்படுத்தி வெளிநாடுகளுக்குள் புகுந்துகொண்டிருந்தார்கள். அதே நேரம் யாராவது பிடிபட்டால் அவர்கள் சிங்கப்பூருக்கு அனுப்பப்பட்டு அங்கு ஒன்றரை வருட சிறையும், மொட்டையடித்து ஆறு பிரம்படியும் தண்டனை கொடுத்துப் பின்னர் ஸ்ரீலங்காவுக்கு நாடு கடத்துவார்கள். பெண்கள் என்றால் பிரம்படி இருக்காது. ஆனால், மொட்டை அடித்துவிடுவார்கள். ஆன்டனிக்குப் பாஸ்போட் செய்தவன் அந்தப் பாஸ்போட் ஏற்கெனவே கனடாவுக்கு யாரோ பயணித்துப் பிடிபட்டதால் அதில் நாடு கடத்தும் சிவப்பு சீல் அடித்து அனுப்பியிருக்கிறார்கள்.

ஒரு நாடு சிவப்பு சீல் அடித்திருந்தால் அந்தக் கடவுச்சீட்டில் மற்றைய நாடுகளுக்குப் பயணம் செய்வது சிரமம். பல கேள்விகள் அல்லது திருப்பியே அனுப்பிவிடுவார்கள். அதனால் சிவப்பு சீல் அடிக்கப்பட்ட ஒற்றையை (பக்கத்தை) மட்டும் கழற்றிவிட்டு வேறொரு, ஆனால் சிங்கப்பூர் பாஸ்போட் அதே பக்க இலக்கத்தோடு உள்ள ஒற்றையை வைத்துக் கட்டிவிட்டிருக்கிறான். மாஸ்கோவில் ஆன்டனி பெல்ஜியம் செல்வதற்காக விமானம் மாறி ஏறப்போகும்போது ஓர் அதிகாரி அவனில் சந்தேகப்பட்டு அவனைக் கூட்டிப்போய் விசாரணை செய்து கடவுச்சீட்டையும் புரட்டிப் புரட்டிப் பார்த்திருக்கிறார். எதுவும் பிடிபடவில்லை. படம் எல்லாம் பிடிபாடாத அளவுக்கு மாத்தியிருந்திருந்தது. ஆனால், அந்த அதிகாரி கொஞ்சம் புத்திசாலி. ஓர் ஊசியை எடுத்துப் பாஸ்போட்டை மூடி அதன் இலக்கங்கள் பதியப் பட்டிருக்கும் ஓட்டைக்குள்ளால் நுழைத்திருக்கிறார் (பழைய பாஸ்போட்டுக்களில் அதன் இலக்கம் அனைத்து பக்கத்திலும் சிறிய துளைகளாகப் பதிவாக்கியிருப்பார்கள்)

உள்ளே போன ஊசி ஓர் இடத்தில் மேலே போக முடியாமல் தட்டுப்பட்டு நின்றிருக்கிறது அப்படியே வைத்தபடி பாஸ்போட்டை திறந்திருக்கிறார் அது வேறொரு பாஸ்போட்டின் பக்கம் அதன் இலக்கம் மாறுபட்டிருந்ததால் ஊசி நேராகச் செல்லவில்லை பக்கம் மாற்றியிருந்தது பிடிபட்டுப்போய்விட்டிருந்தது.

ஆன்டனியிடம் அவன் விவரங்கள் கேட்டுக்கொண்டிருந்தபோதே ஓர் அதிகாரி ஆன்டனியின் பாஸ்போட்டைக் கொண்டுவந்து கொடுத்ததோடு அவர்கள் மாஸ்கோ விமான நிலையத்தைவிட்டு வெளியேற வேண்டிய குடியகல்வுப் பாதை இலக்கத்தையும் (இமிகிரேஷன் கவுன்ட்டர்) சொல்லிவிட்டுப் போயிருந்தான். கடவுச்சீட்டை வாங்கியவன், கழிவறை ஒன்றில் போய்ப் புகுந்து சாவகாசமாகக் குந்தியிருந்து சட்டைப் பையில் இருந்த ரஷ்ய விசா என்வெலப்பைப் பிரித்து ரப்பர் முத்திரையை உள்ளங்கையில் வைத்து அவனது பேனாவில் நிரப்பியிருந்த மையைத் தடவி பாஸ்போர்ட் பக்கத்தில் சிறிது நேரம் அழுத்தியவன், அதை எடுத்துவிட்டு மை காயும் வரை வாயால் ஊதிவிட்டு இன்னொரு பேனாவை எடுத்து தேதி, மாதம், வருடத்தை எழுதி தூதரக அதிகாரிபோல் ஒரு கையெழுத்தை இழுத்தான். ரப்பர் முத்திரையை இன்னொரு என்வெலப்பில் போட்டு ஒட்டி மீண்டும் ஒரு விலாசத்தை எழுதி பத்திரப்படுத்திவிட்டு பழைய என்வெலப்பைக் கழிவுப்பையில் போட்டுவிட்டுத் தண்ணீரை இழுத்துவிட்டு வெளியே வந்தவன், ஆன்டனியோடு அவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்த இலக்க இமிகிரேஷனில் போய் நின்றார்கள். கடவுச்சீட்டை வாங்கிய அதிகாரி ஒரு தடவை அவனை நிமிர்ந்து பார்த்துவிட்டு இருவருடைய கடவுச்சீட்டிலும் வெளியேறும் முத்திரையை ஓங்கி அடித்தார்.

அவர்கள் வெளியே வரும்போதே அவனுக்கு ஆன்டனியை வெளியே எடுப்பதற்கான ஒழுங்குகள் செய்த அந்த ரகசிய அதிகாரி சாதாரண உடையில் பணத்துக்காகக் காவல் நின்றிருந்தான். அவனை ஓர் உணவுவிடுதிக்கு அழைத்துப்போய்ப் பணத்தைக் கொடுத்துவிட்டு ஆன்டனியை அழைத்தபடி அங்கிருந்து வெளியேறிவிட்டான். அன்றிரவு மாஸ்கோவிலேயே ஒரு விடுதியில் தங்கியிருந்துவிட்டு போலந்து பயணத்தை மேற்கொள்ளவேண்டும். பெல்றுஸ் வழியாகப் போலந்துக்குள்

போவது அங்கு அவனுக்குத் தெரிந்த சுனில என்கிற சிங்களவர் போலந்தில் இருந்து ஜெர்மனிக்கு ரகசியமாக ஆட்கடத்தல் செய்பவனிடம் ஆன்டனியை ஒப்படைத்தால் அவன் பாரிஸ் வரை கொண்டுபோய் விட்டுவிடுவான். இதுதான் அவனது திட்டம். அன்றிரவு விடுதி அறையொன்றை எடுத்த இருவரும் வொட்கா அடித்தபடியே பழைய கதைகளைக் கதைத்துக்கொண்டிருந்தார்கள். ஆன்டனிக்கு வொட்கா புதுப் பழக்கம் என்பதால், சத்தியெடுத்துவிட்டு (வாந்தி) நித்திரையாகிப்போயிருந்தான். மறுநாள் ரயிலிலும் பஸ்ஸிலுமாகத் தொடர்ந்த அவர்களது பயணம் மூன்றாவது நாளில் ஆன்டனியை சுனிலிடம் ஒப்படைத்தவன், பத்திரமாகக் கொண்டுபோய்ச் சேர்க்கச் சொல்லிவிட்டு திலகருக்கும் செய்தியைச் சொல்லி ஆன்டனி பாரிஸ் வந்து சேர்ந்ததும் தனக்குத் தகவல் தர சொன்னவன், ஆன்டனியிடம் விடை பெற்றுக்கொண்டு மீண்டும் குரோஷியா நோக்கிய பயணத்தைத் தொடர்ந்தான்.

❍ ❍

# 55

**26**–ம் தேதி அக்டோபர் மாதம் மெள்ளக் குளிர் தொடங்கியிருந்த காலம், மாலை ஐந்தைத் தாண்டிக்கொண்டிருந்த வேளை பாரிஸின் புறநகர் பகுதி ஒன்றில் நின்றிருந்தவனுக்கு அவனது நண்பன் ஒருவனின் தொலைபேசி அழைப்பு. எடுத்துக் காதில் வைத்தான். “டேய், நாதனையும் கஜனையும் லா சப்பலிலை (பாரிஸில் தமிழர் வர்த்தகர் நிலையங்கள் அதிகமுள்ள பகுதி) வைச்சு யாரோ போட்டிட்டாங்களாம். போலீஸ் கொஞ்சப் பேரை பிடிச்சிருக்கு. யாரெண்டு தெரியேல்லை” என்று விஷயத்தைச் சொல்லிவிட்டு வைத்துவிட்டான். செய்தியை கேட்டவன் கொஞ்சம் குழம்பித்தான் போயிருந்தான். உடனடியாகத் திலகருடன் தொடர்பை ஏற்படுத்த முயன்றான். தொலைபேசி நிறுத்தியிருந்தது. திரும்ப அழைக்கவும் என்கிற செய்தியைப் பதிவுசெய்துவிட்டு வைத்துவிட்டான். பாரிஸில் மட்டுமல்ல ஐரோப்பாவில் எந்த நாட்டிலுமே புலிகள் அமைப்பின் அனைத்துலகச் செயலகத்தில் இயங்குபவர்களோடு அவன் எந்தத் தொடர்புகளையும் வைத்திருந்தது கிடையாது. அது அவனது தேவையும் இல்லை. அதேபோல் அவனையும் யாரென்று அவர்களுக்கும் தெரியாது. எனவே அவன் வேறு யாருடனும் தொடர்புகளை ஏற்படுத்த விரும்பவில்லை. நீண்ட நேரத்தின் பின்னர் நள்ளிரவாகிக்கொண்டிருக்கும்போது வேறோர் இலக்கத்தில் இருந்து திலகரின் அழைப்பு அவனுக்கு வந்தது. பாரிஸில் உணவு விடுதி ஒன்றில் சந்திப்பதாகச் சொல்லியிருந்தார்.

உணவு விடுதி மேசையில் தனக்காக ஒரு பியரும் திலகருக்காக ஒரு கோப்பியும் கொண்டுவரச் சொல்லிவிட்டு திலகரை உற்றுப் பார்த்தான். "சின்னதொரு பிரச்னை நடந்திட்டுது" என்றபடி திலகர் பேசத் தொடங்கினார். "நாதன் மட்டும்தான் இலக்கு. ஆனால், தவறுதலா கஜனையும் போடவேண்டி வந்திட்டுது. அலுவல் முடிஞ்ச உடனை ஆளை ஊருக்கு அனுப்பிவிடச் சொல்லி ஓடர். ஆனால், இப்ப உடனடியா அவனை எங்கேயாவது பத்திரமா அனுப்பவேணும். விடியிறதுக்கிடையிலை நாட்டைவிட்டுப் பத்திரமா அனுப்பிவிடவேணும். பிடிபட்டா எல்லாம் நாறிடும்" என்று படபடப்பாகச் சொல்லி முடித்தார். "சரி, தற்சமயம் ஸ்கன்டிநேவியன் நாடு ஒண்டுதான் பாதுகாப்பு. அதே நேரம் எந்த நாட்டிலையும் இயக்கக் காரரோடை அவன் தொடர்பு வைக்கக் கூடாது. ஒரு போன்கூட அடிக்கக் கூடாது. நிலைமை சரி வந்ததும் ஊருக்கு அனுப்பலாம். ஆளை ஸ்கன்டிநேவியன் நாட்டுக்கு அனுப்பி எனக்குத் தெரிஞ்ச ஒருவரின்ரை வீட்டை தங்கை வைக்கிறன். அங்கே போறதுக்குப் பாஸ்போட் வேணும். அதுவரை இண்டைக்கு இரவுக்கு ஆளை ஜெர்மனியிலை ஒரு வீட்டிலை தங்க வைப்பம்'' என்று சொன்னதும், "ஜெர்மன் கொண்டுபோய் விடுறதெண்டால் அதுக்கு ஆட்கள் இருக்கணும்'' என்றார் திலகர்.

"உங்கடை ஆட்கள் ஒருதரும் இதிலை சம்பந்தப்படவேண்டாம். நானே ஒழுங்கு பண்ணுறன்'' என்றவன், ஓர் இலக்கத்தை அழுத்தி ஃபிரெஞ்சு மொழியில் கதைத்து முடித்துவிட்டுத் திலகரிடம் "நீங்கள் ஆளை இங்கேகொண்டு வாங்கோ. ஒரு ஃபிரெஞ்சுக்காரி ஆளை ஜெர்மனியிலை நான் சொல்லுற இடத்திலை கொண்டுபோய் விடுவாள். அதே நேரம் எனக்கு ஒரு எங்கடையாக்களின்ரை ஃபிரெஞ்சு ரவல் டொக்கிமன் (கடவுச்சீட்டுக்கு நிகரானது. அகதி அந்தஸ்த்து அங்கீகரிக்கப்பட்டவர்களுக்குப் பயணம் செய்வதற்குக் கொடுக்கப்படும் கடவுச்சீட்டு) ஆளின்ரை படமும் வேணும்'' என்றான். ஒரு மணி நேரத்தில் ஃபிரெஞ்சுக்காரியின் கார், உணவுவிடுதி முன்னால் நின்றது. அவனது தொலைபேசி ஒலித்தது. "அவளை உள்ளை வரவேண்டாம். ஒருவர் வந்து காரில் ஏறுவார். நீ ஜெர்மனிக்குள்ளை போனதும் திரும்பப் போனடி விலாசம்

தரலாமென்றவன், திலகரிடம் அந்தக் கார் இலக்கத்தைச் சொல்லி, கார் இந்த ரோட்டிலை நிக்குது. ஆளை மட்டும் தனியா போய் காரிலை ஏற சொல்லிவிடுங்கோ'' என்றான். திலகர் தொலைபேசியில் விவரம் சொல்லி முடித்ததும் சிறிது நேரத்தில் அங்கு வந்த ஒருவன் ஒரு என்வெலப்பை திலகரிடம் நீட்டிவிட்டுப் போயிருந்தான். அதனைத் திலகர் அவனிடம் தள்ளினார். உள்ளேயிருந்ததை இழுத்துப் பார்த்தான். நீல நிறக் கடவுச்சீட்டும் படமும் இருந்தன. படத்தைப் பார்த்தவன் நிமிர்ந்து "ஆன்டனியா?" என்றான். திலகர் தலையை ஆட்டினார். நினைச்சனான் என்றவன், "சரி, மிச்சம் நான் பார்த்துக்கொள்ளுறன்'' என்று விடை பெற்றான்.

❍ ❍

# 56

***80***–களில் ஊரில் இயங்கங்களின் தோற்றத்தின்போது வெளிநாடுகளிலும் அவர்களுக்கு உதவுவதற்காகச் சிலர் ஒவ்வோர் இயக்கத்தின் சார்பிலும் நிதி சேகரிப்புகள் செய்து அனுப்பினார்கள். ஆனால், அதில் பாதி அங்கும் மீதி இவர்கள் பைகளுக்குள்ளும் போய்க்கொண்டிருந்தன. பின்னர் மற்ற இயக்கங்கள் அழிக்கப்பட்டுப் புலிகள் மட்டும் நிலைத்து நின்றபோது ஃபிரான்ஸில் புலிகளுக்காக நிதி சேகரிப்புச் செய்தவர்களில் நாதன், ரங்கன். (டி.ஆர்.டி வானொலி) மாணிக்ஸ் ஆகியோர் முக்கியமானவர்கள். அதே நேரம் புலிகள் அமைப்புக்காகப் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டுச் சிறையில் இருந்த மனோவும் ஒருவர். அவர் பல ஆண்டுகள் சிறையில் இருந்து வெளியே வந்து பின்னர் அனைத்துலகப் பொறுப்பில் இருந்தவர். ஆரம்பக் காலங்களில் இவர்கள் நிதியைச் சேகரித்துப் புலிகளுக்கு அனுப்புவார்கள். எவ்வளவு சேகரித்தார்கள். எவ்வளவு அனுப்பினார்கள் என்ற கணக்கெல்லாம் யாருக்கும் தெரியாது. புலிகள் அமைப்புக்கோ வந்தவரை லாபம் என்ற நிலை அங்கிருந்து வெளிநாட்டில் நடப்பவற்றைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமை. நாதனே ஃபிரான்ஸில் நிதி பொறுப்பை வகித்தார். அவரது கையாடல்கள் தெரிந்து ரங்கனும் மாணிக்சும் புலிகள் இயக்க தலைமைக்குக் கடிதம் எழுதியும் இருந்தார்கள். ஆனால், அவர்களால் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது என்பதால் பேசாமல் இருந்துவிட, கடிதம் எழுதியவர்கள் வெறுப்படைந்து நிதி சேகரிப்புகளில் இருந்து

விலகிவிட்டார்கள். பின்னர் தனிச் சக்தியாக உருவெடுத்த நாதன், ஃபிரான்ஸில் சேகரிக்கப்பட்ட நிதியில் பெருமளவை தான் எடுத்துக்கொண்டு சிறிய அளவை மட்டுமே இயக்கத்துக்கு அனுப்பிக்கொண்டிருந்தார். யாராவது அவரை எதிர்த்துக் கேள்வி கேட்டால் அடியாட்களை வைத்து மிரட்டுவார்.

இது நாதன் மட்டுமல்ல, அன்றைய காலங்களில் வெளிநாடுகளில் புலிகள் சார்பாக வேலை செய்த அனைவருமே செய்த செயல்தான். பலர் சேகரிக்கப்பட்ட நிதியோடு வேறு நாட்டுக்கு தப்பியோடி வாழ்கிறார்கள். அதில் முக்கியமாக ஜெர்மனியில் நிதி சேகரித்தவர் ஒருவர் இன்று லண்டனில் பெரும் பணக்காரர். சுவிஸில் நிதி சேகரித்தவர் இன்று கனடாவில் வாழ்கிறார். ஆனால் இப்படியான நிதி மோசடிகளை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்காகக் கிட்டு ஐரோப்பாவுக்கு வந்திருந்த காலங்களில் கவனம் செலுத்தியதோடு, இங்குள்ள செயற்பாடுகளையும் ஓர் ஒழுங்கான கட்டமைப்புக்குள் கொண்டுவர பெரும் முயற்சி எடுத்ததோடு, பலர் வெளிநாட்டுக் கிளைகளில் இருந்து நீக்கப்பட்டும் இருந்தனர். அதோடு வெளிநாடுகளில் சேகரிக்கப்படும் நிதியில் 30 சதவிகிதத்தை இங்குள்ள நிர்வாகச் செலவுகளுக்கும், வேலை செய்தவர்களுக்குச் சம்பளம் கொடுக்கவும் எடுத்துக்கொண்டு மிகுதி 70 சதவிகிதத்தை இயக்கத்துக்கு அனுப்பச் சொல்லி கட்டளையிட்டிருந்தார்.

இங்குக் கவனிக்கப் படவேண்டிய விஷயம் என்னவெனில், இயக்கத்துக்காக வீடு வீடாகப் போய் அர்ப்பணிப்போடு அலைந்து திரிந்து நிதி சேகரித்தவர்களைத் தவிர அனைத்து நாடுகளிலும் நிர்வாகப் பொறுப்பில் இருந்தவர்கள் தங்கள் சம்பளம் மற்றும் நிர்வாகச் செலவுகளுக்குப் பணம் பெற்றுக்கொண்டுதான் வேலை செய்தார்கள். ஆனால், கிட்டு, ஐரோப்பாவைவிட்டுப் போனதும் மீண்டும் நிலைமை தலைகீழாக மாறியிருந்தது. கிட்டுவால் வெளியேற்றப்பட்ட பலரும் மீண்டும் உள்ளே வந்ததோடு மட்டுமல்லாமல், பழையபடி நிதி கையாடல்கள் தொடர்ந்துகொண்டுதான் இருந்தன. அப்படிக் கையாடல் செய்தவர்களில் ஃபிரான்ஸின் நிதிப் பொறுப்பாளராக இருந்த நாதன் முதன்மையானவராக இருந்தார். பாரிஸ் நகரில் அவருக்குச் சொந்தமாக இரண்டு

உணவு விடுதி. பாரிஸின் புறநகர் பகுதியில் பல வீடுகள் எனச் சொத்துக்களைக் குவித்திருந்தார்.

இவரைக் கட்டுப்படுத்த முடியாமல் புலிகள் அமைப்புத் திண்டாடியது. அதே நேரம் ஃபிரான்ஸில் இவரை மிரட்டவும் முடியாமல் இருந்தது. காரணம், அவருக்குக் கீழ் ஒரு வன்முறை குழுவையும் இயக்கிக்கொண்டிருந்தார். அதே நேரம் இவருடன் கடுமையாக நடந்துகொண்டால் அப்படியே இயக்கத்துக்கு எதிராகத் திரும்பி ஃபிரெஞ்சு அல்லது இலங்கை புலனாய்வு பிரிவுகளுக்குப் புலிகள் அமைப்பின் வெளிநாட்டுப் பிரிவு ரகசியங்களைக் கொடுத்துவிடலாம் என்கிற பயமும் புலிகளுக்கு இருந்தது. நாதனை ஊருக்கு வரும்படி புலிகள் அழைப்புவிடுத்திருந்தனர். அதனை நாதன் நிராகரித்துவிடவே ஒரு தடவை இவரைச் சிங்கப்பூருக்கு அழைத்து அங்குப் புலிகளின் உறுப்பினர் ஒருவர் மென்மையாகக் கண்டித்து அனுப்பியும் பார்தார்கள். ஆனாலும் நாதன் திருந்தவில்லை. எனவேதான் புலிகளின் புலனாய்வு பிரிவு நாதனை போடுவது எனத் தீர்மானித்தார்கள்.

நாதனை போடுவதன் மூலம் மூன்று விஷயங்களை நிறைவேற்றலாம் எனப் புலிகளின் புலனாய்வு பிரிவு கணக்குப்போட்டது. ஒன்று, இந்த விஷயத்தை இயக்கத்தின் வெளிநாட்டு அனைத்துலகப் பிரிவு பொறுப்பாளர்களிடம் கசியவிட்டு இயக்கத்தின் நிதியை கையாடல் செய்பவர்களுக்கு ஓர் எச்சரிக்கையைக் கொடுப்பது. இரண்டாவது. சாதாரணப் புலம் பெயர் தமிழர்களிடம் இந்தக் கொலை இலங்கை புலனாய்வாளர்களால் செய்யப்பட்டது என ஓர் அனுதாப அலையை உருவாக்குதல். மூன்றாவது ஏற்படுத்தப்பட்ட அனுதாப அலையை வைத்து உணர்ச்சி தளத்தில் உள்ள மக்களிடம் மேலதிகமாக நிதி சேரிப்பைச் செய்வது. உதாரணமாக, நாதன் கஜனது மரணச்சடங்கில் பெருமளவான பெண்கள் தங்கள் தாலிகளே கழற்றிக்கொடுத்த சம்பவமும் நடந்திருந்தது. இந்த மூன்று நோக்கங்களையும் நிறைவேற்றுவதற்காக நாதனைப் போடுவதற்காக விசேஷமாகப் ஃபிரான்ஸுக்கு அனுப்பப் பட்டவன்தான் ஆன்டனி. காரணம், அவன் இந்தியப் படை காலத்தில் யாழ் நகரப் பகுதியில் இந்தியப் படைகளோடு சேர்ந்து இயங்கிய பலரை பதற்றப்படமால் குறி தவறாது

போட்டுத் தள்ளியதில் அனுபவசாலி. குறி தவறாது நேரே ஒருவரை சுட்டுப்போடுவதில் கெட்டிக்காரன். எனவேதான் அவனைப் புலிகளின் புலனாய்வு பொறுப்பாளர் தெரிவு செய்திருந்தார். நாதனை போடும் திட்டத்தைத் திலகர் திட்டமிட்டு அதனைக் கச்சிதமாகச் செய்து முடித்ததும் ஆன்டனியை மீண்டும் ஊருக்கு அனுப்பி வைக்கவேண்டும். திட்டம் இதுதான். ஆனால் நடந்து முடிந்தது வேறாக இருந்தது.

பாரிஸுக்கு ஆன்டனி வந்து சேர்ந்ததும் திலகருடன் மட்டும் ரகசியமான தொடர்புகளை வைத்திருந்தான். அவனைப் ஃபிரான்ஸின் புலிகள் அலுவலகத்தில் வேலை செய்தவர்களுக்கு யாரென்றே தெரிந்திருக்கவில்லை. அவன் பாரிஸின் லா சப்பல் பகுதியில் தனது ஊர் நண்பர்களுடன் திரிந்து நாதனின் நடமாட்டங்களை உளவுப் பார்த்துக்கொண்டு திரிந்தான். அவனுக்கு நாதனைப் போடுவதற்கான கைத் துப்பாக்கி சுவிஸில் இருந்து கொண்டுவரப்பட்டிருந்தது. நாதனைப் போடுவதற்கான நாளையும் இடத்தையும் நேரத்தையும் ஆன்டனியே தெரிவுசெய்திருந்தான். அவன் தெரிவுசெய்திருந்த இடம் லா சப்பலில் மெட்ரோ நிலையத்துக்குப் பின்னால் அதிக சன நடமாட்டம் இல்லாத பகுதி. அங்குப் பாரிஸின் வீதிகளை நன்கு அறிந்த ஒருவன் அவனுக்கு வாகன ஓட்டியாக இருந்தான்.

இலக்கத் தகடு மாற்றப்பட்டதொரு காரில் வந்து அங்கு நிறுத்திவிட்டு ஆன்டனி தனது கைத் துப்பாக்கியில் குண்டினை ஏற்றி தயாராக வைத்தபடி திலகருக்குக் கைத் தொலைபேசியில் அழைப்பை ஏற்படுத்தி நிறுத்தினான். அதே நேரம் லா சப்பல் பகுதியில் ஓர் உணவு விடுதியில் தேநீர் அருந்திக்கொண்டிருந்த நாதனுக்கு ஒரு தொலைபேசி அழைப்பு. அழைப்பை ஏற்படுத்தியிருந்தவர் திலகர். முக்கிய விஷயம் பேச வேண்டும். எனவே லா சப்பலின் மெட்ரோ ரயில் நிலையத்துக்குப் பின்னால் வருமாறு சொல்லிவிட்டு இணைப்பைத் துண்டிக்கிறார். திலகர் அழைத்ததால் முக்கியமாகத்தான் இருக்கும் என நினைத்த நாதன், உடனடியாகத் தனியாகத் திலகர் சொன்ன இடத்துக்கு rue perdonnet என்ற வீதியில் போய்க்கொண்டு இருந்தபோது, அதே நேரம் அதே வீதியில் இருந்த ஈழமுரசு

காரியாலயத்தில் இருந்து அதன் ஆசிரியர் கஜன் மாலை நேரத் தேநீர் அருந்துவதற்காகக் கடைக்குப் போவதற்கு எதிரே வந்துகொண்டிருந்தார். அவரது கெட்டகாலம் நாதனைக் கண்டதும் எங்கே போகிறார் என விசாரித்து, நாதனோடு சேர்ந்து இருவருமாகத் திலகர் அழைத்த இடத்துக்குப் போகிறார்கள்.

காரின் உள்ளே இருந்தபடி காரின் பக்கக் கண்ணாடியில் நாதனின் வரவை எதிர்பார்த்திருந்த ஆன்டனிக்கு, நாதனோடு கஜனை பார்த்தும் குழப்பம். என்ன செய்யலாம் என யோசித்தான். இதனைத் தவறவிட்டால் நாதன் எச்சரிக்கையாகிவிடக்கூடிய சந்தர்ப்பமும் உள்ளது. அதே நேரம் அதை விட்டால் அவனுக்கு வேறு சந்தர்பமும் இல்லை. அவர்கள் இருவரும் ஆன்டனி இருந்த காரை நெருங்கி வந்துகொண்டிருந்தார்கள். திடீரென கார் கதவை திறந்த ஆன்டனி பிஸ்டலை நீட்டி இயக்குகிறான். நாதனின் நெற்றியை குண்டு துளைத்து பாய, நாதன் நிலத்தில் சரிந்தார். அதைப் பார்த்த அதிர்ச்சியில் நின்ற கஜனின் நெற்றியில் சுட விரும்பாத ஆன்டனி, துப்பாக்கியைக் கீழே இறக்கி மார்பில் சுட்டான். மற்றவன் காரை இயக்க அங்கிருந்து வேகமாகப் பாரிஸைச் சுற்றி ஓடும் பெரு வீதியில் கார் நுழைந்தது. அங்கு ஓரமாக நிறுத்தி வைக்கப்பட்டுத் தயாராகக் கண்ணாடி திறந்து வைந்திருந்த ஜன்னல் ஊடாகத் தனது கைத் துப்பாக்கியை வீசிவிட்டு அந்தக் கார் பாரிஸின் புறநகர் பகுதியொன்றில் ஆன்டனியை இறக்கிவிட்டுச் சென்றுவிடுகிறது. இப்போது ஆன்டனி ஜெர்மனி நோக்கிப் போய்க்கொண்டிருந்தான்.

❍

புலிகளின் புலனாய்வு பிரிவு போட்ட திட்டம் கச்சிதமாக நிறைவேறியிருந்தது. நாதனோடு சேர்த்து தவிர்க்க முடியாத காரணத்தினால் கஜனும் மாவீரராகியிருந்தார். இதனால் வெளிநாட்டு நிதி சேகரிப்பாளர்கள் கலங்கித்தான் போயிருந்தார்கள். இலங்கை புலனாய்வாளர்கள் கொன்றார்கள் என்ற பிரசாரம் மக்களிடம் எடுபட்டது மட்டுமல்லாமல் பெருமளவில் நிதியும் சேர்ந்தது. நாதன் கஜனுக்குப் புலிகளின் தரவரிசை கேணல், லெப்கேணல் பட்டமும் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால், அவன்

ஸ்கன்டினேவியாவுக்கு அனுப்பி வைத்த ஆன்டனி ஊருக்குப் போகவில்லை. தனது உறவுகளின் தொடர்பு மூலம் வேறு நாட்டுக்கு தப்பியோடி விட்டிருந்தான். நாதன், கஜன் கொலையை விசாரித்த ஃபிரெஞ்சு புலனாய்வு துறை பல கோணங்களிலும் விசாரித்து யார் கொலை செய்தார்கள் என்பதை நெருங்கிவிட்டிருந்தார்கள். திலகருக்கு விசாரணைக்கு வரும்படி அழைப்பும் வந்தபோது திலகரை ஊருக்கு வந்துசேரும்படி ஓர் அறிவித்தலும் வருகின்றது.

ஆன்டனியை ஸ்கன்டிநேவிய நாட்டில் இறக்கிவிட்டுத் தென்னாப்பிரிக்கா போய் நின்றவனுக்கு இன்னோர் ஆச்சர்யம். திலகரும் இன்னொருவரும் அங்கு வருவார்கள் அவர்களை ஊருக்கு அனுப்பி வைக்கவும் என்ற செய்தி. அந்த மற்றவர் சுவிஸ் நாட்டில் புலிகளின் பொறுப்பாளராக இருந்து மக்களை மிரட்டி நிதி சேகரித்த குற்றச்சாட்டுக்காகச் சுவிஸ் சிறையிலிருந்து வெளியில் எடுக்கப்பட்ட சுவிஸ் பொறுப்பாளரும் கூடவே வருவார். இருவரையும் ஊருக்கு அனுப்பிவைக்கும் பொறுப்பு அவனுக்கு வழங்கப்பட்டிருந்தது. ஆனால், திலகர் மட்டுமே தனியாக வந்திருந்தார். சுவிஸ் பொறுப்பாளரோ புலிகளுக்குத் தண்ணி காட்டிவிட்டு ஃபிரான்ஸுக்குச் சென்று அங்கிருந்து கனடாவுக்குத் தப்பிச்சென்று தனது குடும்பத்துடன் இணைந்துவிட்டிருந்தார். ஊருக்குப் போயிருந்த திலகர் அங்குப் புலிகளின் புலனாய்வு பிரிவால் விசாரணை நடத்தப்பட்டு அவரது பதவி நிலைகள் பொறுப்புகள் எல்லாம் பறிக்கப்பட்டு சாதாரணமான ஒருவராக இருந்தார், இறுதி யுத்தத்தின்போது இறந்துபோயிருக்கலாம்.

❍ ❍

# 57

இந்தோனேசியாவின் யாவா பகுதியில் உள்ள பயண முகவர் நிலையம் ஒன்றில் உதயண்ணை அனுப்புவதாகச் சொன்ன Faxசுக்காகக் காத்திருந்தான். அதில் அவன் தயாரிக்கவேண்டிய ஆவணங்களும் அதற்கான குறிப்புகளும் இருந்தன. அதுமட்டுமல்ல ரோகனுக்குச் சீராலியோனுக்குப் போவதற்காக ஒரு பாஸ்போட்டும் செய்துகொடுக்கச் சொல்லியிருந்தார். சிறிது நேரத்தில் Faxல் வந்த பேப்பர்களை எடுத்துக்கொண்டவன், தாய்லாந்தில் இருந்த ரோகனுக்குத் தொடர்புகொண்டு அவனது பாஸ்போர்ட் சைஸ் படங்கள் சிலவற்றை உடனடியாக அனுப்பி வைக்கும்படி சொன்னதும் நியும்மையும் சீராலியோனுக்கு அழைத்துப் போவதாகவும் அவளுக்கும் சேர்த்தே ஆவணங்களைச் செய்யச் சொன்னான் ரோகன். நியும்மினது படங்களையும் அனுப்பிவைக்கச் சொல்லிவிட்டு அறைக்குத் திரும்பி வேலையில் மூழ்கிப்போனான்.

இது ரோகனுக்கு முக்கியமான பயணம். ஆப்பிரிக்காவின் பாதாள உலகக் குழுக்களில் முக்கியமான ஒருவருடனான சந்திப்பு. ஆப்பிரிக்க நாடுகளின் கள்ளச்சந்தையில் அமெரிக்க ஆயுதங்களில் இருந்து சீனாக்காரனின் போலி மார்க் பேனா வரை நடக்கும் வியாபாரங்களில் அவனுக்குத் தெரியாமல் எதுவும் அசையாது. சிராலியோனில் அப்போ உள்நாட்டுக் கலவரம் நடந்துகொண்டிருந்ததால் அவன் தனது ஆயுத சந்தையை அங்குத் திறந்திருந்தான். அப்படியான ஒருவனுடன் சந்திப்பை நடத்தி அவனோடு சில பேரம்பேசல்களைச் செய்யவேண்டும். அதற்காக ரோகனை

தெரிவுசெய்திருந்தார்கள். சீராலியொன் போகும் ரோகன் மீது வெளிநாட்டு உள்நாட்டு உளவு அமைப்புக்களுக்குச் சந்தேகம் வராதபடி அங்கு நடக்கும் நவீன முறை கூட்டுப்பண்ணை விவசாய மாநாடு ஒன்றுக்கு போவது போன்ற ஆவணங்களைத் தயாரித்துக்கொடுப்பதுதான் அவனது வேலை.

அனைத்து ஆவணங்களையும் பாஸ்போர்ட்டையும் சில நாட்களில் தயார்செய்து முடித்தவன், ரோகனுக்கு அனுப்பிவிட்டு தன்னுடன் அடிக்கடி தொடர்பில் இருக்குமாறு கூறிவிட்டிருந்தான். தாய்லாந்தில் இருந்து தனது நண்பி நியும்முடன் புறப்பட்டுவிட்டிருந்தான்.

❍

சீறா லியோனின் லுங்கி விமான நிலையம். நைஜீரியாவில் இருந்து வந்த விமானம் தரை தட்டியது. ரோகன் சோம்பல் முறித்தபடி பக்கத்தில் இருந்த தாய்லாந்து அழகி நியும்மைப் பார்த்து "வந்துவிட்டோம். உனக்கு இந்தத் தடவை புதுவிதமான அனுபவங்களாக இருக்கப்போகிறது. எந்தச் சந்தர்ப்பத்திலும் சோர்வோ கோபமோ அடைந்துவிடாதே. எனக்காக எல்லாத்தையும் அனுசரித்து நடந்துகொள்" என்றான்.

மெல்லிதாகப் புன்னகைத்தவள். ரோகனின் தோளில் சாய்ந்தாள். "உனக்கொன்று தெரியுமா? நான் எத்தனையோ ஆண்களுடன் உறவு வைத்திருக்கிறேன். எத்தனை பேர் என்கிற கணக்குக்கூடத் தெரியாது. ஆனால், உன்னை மட்டும்தான் நம்பி இப்படித் தனியாக நாடுவிட்டு வந்திருக்கிறேன். உனக்காக நான் மரணம் வரை வரவும் தயார்" என்றாள் காதல் ததும்பும் குரலில்.

எங்கோ பார்த்தபடி "என்னுடைய ஒவ்வொரு பயணமுமே மரணம் வரையிலானதுதான்" என்றான். பயணிகள் தங்கள் பொருட்களை அவசர அவசரமாக எடுத்துக்கொண்டு இறங்கத் தயாரானார்கள். பல மணி நேரம் விமானத்தில் பொறுமையாகப் பயணிப்பவர்களால் விமானத்தை நிறுத்திச் சரியாகக் கதவு திறக்கப்படும் வரை ஒருசில நிமிடங்கள் பொறுக்க முடியவதில்லை. எவ்வளவு அவசரம். ஏதோ பல மில்லியன் வியாபாரம் பேசப்போகிறவர்களைப்போல ஓடுகிறார்கள் என மனதில் நினைத்தபடி பொறுமையாக இருந்தான்.

பிறகு நிதானமாகத் தனது உடைகளைச் சரி செய்துவிட்டு நியும்மின் கைகளைக் கோத்துக்கொண்டு விமானத்தில் இருந்து இறங்கிப்போனான். பெரும்பாலும் ஆசியர்கள்தான் எதற்காக இங்கு குவிந்து நிற்கிறார்கள் என் நினைத்தபடி நியுமின் கைகளை இறுகப் பற்றியபடி நடந்தான். குடிவரவுப் பகுதியில் அதிகாரியிடம் இருவரது கடவுச்சீட்டுகளையும் புன்னகையுடன் நீட்டினான். அவனுடைய மலேசிய கடவுச்சீட்டையும் அவளுடைய தாய்லாந்து கடவுச்சீட்டையும் அதிகாரி புரட்டிப் புரட்டிப் பார்த்துவிட்டு, முத்திரைக் குத்திவிட்டுத் தந்தான். வெளியே வரும்போது நியும் உற்சாகமாக இருந்தாள். புது நாடு என்பதால் இருக்கலாம். பிறந்ததில் இருந்தே தாய்லாந்தைவிட்டு வெளியில் வராதவள். வயதுக்கு வந்த பின்னர், கண்ணாடியிலான விடுதிகளுக்குள் காட்சிப் பொருளாகி இருந்தவளுக்கு இந்தப் பயணம் உற்சாகத்தைக் கொடுத்திருக்கலாம். வாசலில் பெயர் மட்டைகளைத் தாங்கிப் பிடித்தபடி நின்றவர்களை நோட்டம்விட்டான்.

ஒருவன் மட்டையில் பன்னிச்செல்வம் என எழுதிய அட்டையைப் பிடித்தபடி நின்றான். சிரித்தபடி அவனிடம் போய், தன்னை அறிமுகம் செய்தான். இவர்களுக்காகத்தான் அவன் காத்திருந்தான். தனது பெயர் பன்னிச்செல்வம் இல்லை, பன்னீர்செல்வம் என்றான். அவன் விழுந்து விழுந்து சிரித்தான். மூவருமாக வெளியில் வந்தனர். அவன் கார் கொண்டு வந்திருந்தான். விடுதிக்குப் புறப்பட்டனர். ஏதோ ஒரு விடுதியை அவன்தான் பதிவுசெய்திருந்தான். 15 நிமிட பயணத்தில் விடுதி வந்தது. ஓரளவு பழைய கட்டடம். ஆனாலும் விடுதி நன்றாக இருப்பதாகப்பட்டது. வரவேற்பாளினி ஓடிவந்து வரவேற்றாள். “கறுப்பி எண்டாலும் வடிவாயிருக்கிறாள்” என்றான். நியுமிற்கு விளங்கவில்லை. என்ன என்பதைப்போலப் பார்த்தாள். சிரித்தபடி, “அவளுக்கு அழகானத் தலைமுடி” என்றான். நியும் உதட்டைச் சுழித்தபடி தனது நாய்வால் தலைமுடியை ஒரு சுற்று சுற்றினாள்.

அறைக்கு வந்ததும் உடம்பு அடித்துப் போட்டதைப்போல இருந்தது. தாய்லாந்து, தென்னாப்பிரிக்கா, நைஜீரியா என்று சுற்றியடித்து வந்த பயணக்களைப்பு. நல்ல வெது வெதுப்பான நீரில் குளித்துவிட்டு வந்தபோதுதான் சற்று நிம்மதியாக இருந்தது. நியும் குளிக்கப்போயிருந்தாள். கட்டிலில் அப்படியே விழுந்தது முகட்டை பார்த்துகொண்டிருந்தான்.

இப்படியே பார்த்துக்கொண்டிருக்கப் பொழுதில்லை என்று மூளை அலாரம் அடித்தது. துள்ளி எழுந்து, பிரீஃப்கேஸைத் திறந்து சில ஆவணங்களையும் வேறொரு கடவுச்சீட்டையும் எடுத்து மேசையில் வைத்தான். அன்றிரவு நடக்கவிருக்கும் சந்திப்பை மனதில் ஒத்திகை பார்க்கத் தொடங்கினான்.

குளியலறைக் கதவை சத்தமில்லாமல் திறந்து ஒரு பூனைப்போல நடந்து வந்தாள் நியும். குறுக்குக் கட்டாக ஒரு துவாய் கட்டியிருந்தாள். தலையில் இன்னும் ஈரமிருந்தது. அவளைப் பார்க்க, மழையில் நனைந்த செவ்வரளிப் பூதான் நினைவில் வந்தது. இப்படியெல்லாம் தனக்கு நினைப்பு வருகின்றதே என்பதை நினைக்கவும் அவனுக்கு ஆச்சர்யமாக இருந்தது. வாழ்க்கை எவ்வளவு கடினமானவனாகத் தன்னை மாற்றிவிட்டதென நினைத்துகொண்டிருந்தபோதே நியும் கெஞ்சலாக "என்ன இப்போதுதான் புதிதாய்ப் புசிப்பதுபோலவே பார்க்கின்றாயே..." என்றாள். "உனக் கொன்று சொல்லட்டுமா? என் வாழ்வில் எத்தனையோ பெண்களில் புகுந்திருக்கிறேன். மறுதடவை அவர்கள் புறமுதுகைக்கூடத் தொட்டதில்லை. ஆனால், நீ மட்டும்தான் எனக்குப் புதிது புதிதாகப் பிறந்தவள் போல் தெரிகின்றாய். அதன் மர்மம்தான் எனக்கு மனதில் தோன்றவில்லை."

"அதுவா, அவர்களைப்போல நான் அன்னியமாய் உடலோடு மட்டும் உறவாடுவதில்லை, உள்அன்போடு உறவாடுவது காரணமாயிருக்கலாம்."

"என்னவோ போடி. உன்னை அப்படியே தின்னவேணும் போல் உள்ளது."

"பார்த்தாயா? ஆப்பிரிக்கா வந்ததுமே நீ நரமாமிச பட்சணியாகிவிட்டாயோ?"

"இல்லை நான் சைவப் புலி. உன்னைக் கொல்லாமலேயே உண்ணப்போகிறேன்."

"இங்கேயும் புலிதானா?"

"நான் எங்கேயும் புலிதான். புலி, வேட்டைக்குத் தயாராகிவிட்டது" என்று பற்களை வெளியே காட்டி 'உர்' என்று உறுமியபடி கைகள் இரண்டையும் புலியின் கால்களைப்போல முன்னே நீட்டி விரல்களைப் பிராண்டுவதுபோல் அவளது மார்புகளை நோக்கி நகர்ந்தவனை அவள் செல்லமாய்த் தள்ளிவிட, அவனோ

அவளைக் கட்டிலில் இழுத்துச் சரித்து அவள்மீது படர்ந்து அவன் இயங்க அவளோ அகம் மயங்க புறம் கயங்க ஈருடலும் ஓருயிராய் முயங்கிய முடிவில் மான் புலியை வேட்டையாடிவிட்டது என்றபடி அவனின் மூச்சு மேலும் கீழுமாய் முட்டிமோத அவள் அவனுக்கு முத்தங்கள் இட்டுக்கொண்டிருந்தாள். முத்தமாரி பெய்துவிட்டு எழுந்தவள், தளர்ந்த நடையுடன் மேசைக்குப் போனாள். இரண்டு சிகரெட்டுகளை எடுத்து இரண்டையும் ஒரே தடவை உதட்டில் புகுத்திப் பற்ற வைத்தாள். மீண்டும் கட்டிலுக்கு வந்து ஒன்றை அவனின் உதட்டில் பொருத்திவிட்டு ஜன்னல் ஓரமாகப் போய்ப் புகையை உள்ளிழுத்து ஊதிவிட்டாள். சிறிது நேர மௌனத்தின் பின், "இரவு நிகழ்வுகள் எல்லாம் ஏற்பாடாகிவிட்டதா?" என்றாள். "நீ சிறிது ஓய்வெடுத்துக்கொள். நான் மீண்டும் குளித்துவிட்டு வெளியே போய் வாடகைக் கார் ஒன்றை எடுத்துக்கொண்டு தகவலும் அனுப்பிவிட்டு வருகிறேன்" என்றான்.

அவசரமாகக் குளித்து உடைமாற்றிக்கொண்டு தயாராக வைத்திருந்த கடவுச்சீட்டை எடுத்துக்கொண்டு வெளியேறினான். விலை உயர்ந்த வாடகைக் கார் ஒன்றைப் பிடித்தான். நேரத்தைப் பார்த்தான். இப்போது நேரம் சரியானதாயிருந்தது. இப்போது அவன் காத்திருப்பான். போனடிக்கலாம் என நினைத்தவன், வீதியோர தொலைபேசிக் கூண்டு ஒன்றில் புகுந்து ஒரு கிரெடிட் கார்டைச் செருகிவிட்டு இலக்கங்களை அழுத்தினான். இந்தோனேசியாவின் யலாங்பாரு பகுதியில் வீதியோரத்தில் இருந்த ஒரு தொலைபேசிக் கூண்டின் மணி அடித்தது. அதனருகே தயாராக நின்றிருந்த அவன் தொலைபேசியை எடுத்ததும், "என்ன பயணம் எல்லாம் நல்லபடியாய் முடிஞ்சதா?" எனவும்.

"ஓம்... அதெல்லாம் நல்லபடி முடிஞ்சுது. இரவு சந்திப்பு முடிஞ்சதும் காலைமை உன்னுடைய நேரம் ஆறு மணிக்கெல்லாம் இதே நம்பருக்கு திரும்ப அடிக்கிறன்."

"இந்த முறை நீ சந்திக்கிறவன்தான் பெரிய ஆள். இப்பதான் முதன்முதலாக நாங்கள் அவனைச் சந்திக்கிறம். அவனோடை கதைக்கிற ஒவ்வொரு வசனமும் கவனமாய்க் கதைக்கவேணும். அதுக்காகத்தான் உன்னை அனுப்பியிருக்கு. கொஞ்சம் கதை பிழைச்சு அவங்களுக்குச்

*சந்தேகம் வந்தாலும் உன்னை அங்கேயே புதைச்சிடுவாங்கள். கவனம்"*

*"அதெல்லாம் பிரச்னையில்லை மச்சான். நான் கதைச்சே கவுத்திடுவன்."*

*"அது தெரியும். ஆனால், இந்த முறை கட்டாயம் பெரிய சாமான் ஒன்று, இரண்டு மூன்றாவது எடுக்கிறதுக்கு டிரை பண்ணு. அதுக்காக எவ்வளவு ரிஸ்க் எடுக்கவும் தயாரெண்டு சொல்லு."*

*"கட்டாயம் முயற்சி செய்யிறன்."*

*"இவனாலை ஏலும் எண்டுதான் நினைக்கிறன் பார்க்கலாம்."*

*"நட்சத்திர நாய்களும் மணந்துகொண்டு திரியிறாங்கள். உடைஞ்ச நாட்டிலை இப்ப அவங்களே தரகரா மாறியிருக்கிறாங்கள். எண்டு அறிஞ்சனான் எதுக்கும் கவனம்."*

*"நானும் அறிஞ்சனான் நான் பார்த்துக்கொள்ளுறன்."*

*"சரி, நியும் எப்பிடி இருக்கிறாள். ஒண்டும் பயப்பிடேல்லைத்தானே. கடைசி நேரத்திலை ஒண்டும் சொதப்பிப்போடாமல் பார்த்துக்கொள்."*

*"அவள் பிரச்னையில்லை. அவளுக்கென்ன ஊர் சுத்துற சந்தோஷம். தனக்குப் ஃபிரான்ஸும் இங்கிலாந்தும் பார்க்கவேணுமாம். ஒரே நச்சரிப்பு. அவ்வளவுதான்."*

*"சரி, நாளைக்கு நல்ல செய்தியோடை திரும்பத் தொடர்பிலை வா."*

தொலைபேசி துண்டிக்கப்படுகின்றது.

❍ ❍

# 58

**ரோ**கன் வெள்ளை நிற நீளக்காற்சட்டையும் வெள்ளை நிற மேற்சட்டையையும் அணிந்தான். அதற்குச் சிவப்பு நிறக் கழுத்துப் பட்டி பொருத்தமாக இருக்கும் என நினைத்து ஏற்கெனவே வாங்கி வந்திருந்தான். அதை எடுத்து அணிந்தான். சிவப்பு நிறக் கோட்டை எடுத்து அணிந்தபடி "எப்படி இருக்கிறேன்?" என நியும்மைப் பார்த்துக் கேட்டான். கிளுக்கெனச் சிரித்தவள், "இதென்ன நிறக்கலவை? ஆனாலும் பரவாயில்லை" என்றாள். அவள் ஒரு விமானப் பணிப்பெண்ணைப்போலக் கறுப்பு நிறத்தில் குட்டைப் பாவாடை சட்டையோடு தயாராகியிருந்தாள். "நான் எப்படி இருக்கிறேன்?" என்றாள். கட்டை விரலை உயர்த்திக் காட்டினான்.

இருவரும் விடுதியைவிட்டு வெளியே வந்தார்கள். இவர்களுக்காகவே அங்கு டாக்ஸியில் ஒருவன் காவல் நின்றான். தன்னுடைய டாக்ஸியைப் பின்தொடருமாறு சைகை செய்தான். ரோகன் தன்னுடைய வாடகைக் காரில் அவனைப் பின்தொடர அது கடற்கரையோரமாக இருந்த பெரிய ஆடம்பர பங்களா ஒன்றின் முன்னால் போய் நின்றது.

டாக்ஸியை ஓட்டிவந்தவன் இதுதான் இடமெனச் சைகையிலேயே காட்டிவிட்டு நிற்காமல் போய்விட்டான். ரோகனின் கார் பங்களாவினுள் நுழைய முற்படும்போது வாசலில் நின்ற காவற்காரன் மறித்து அவர்களை இறங்கச் சொல்லிப் பணிவாய்க் கேட்டுக்கொண்டான். மெமேயை (முகமட்) சந்திக்க வந்திருப்பதாகச் சொல்லி சட்டைப்

பையில் இருந்த ஒரு கடுதாசியை எடுத்துக் காவற்காரனிடம் நீட்டினான். அதை வாங்கிப் பார்த்துவிட்டு, “ நீங்கள் மெமேயை சந்திக்க வந்திருப்பது எனக்குத் தெரியும். ஆனால், சிறிது நேரம் பொறுங்கள்” என்றவன் இன்னொருத்தனை அழைத்து அந்தக் கடுதாசியைக் கொடுத்தனுப்பினான்.

கடுதாசியுடன் உள்ளே போனவன், இன்னொரு பெண்ணுடன் திரும்பவும் வந்தான். அவர்களைப் பரிசோதித்துவிட்டு உள்ளே அனுப்பச் சொன்னான். அந்தப் பெண் நியும்மை பரிசோதித்தாள். காவற்காரன் ரோகனையும் காலில் இருந்து தலைவரை தடவிப்பார்த்து ஆயுதம் எதுவும் இல்லையென்று உறுதிசெய்தான். அவர்களது கைப்பையையும் பரிசோதித்துப் பிரச்னையில்லை என உறுதி செய்தவிட்டு புன்னகைத்தார்கள். அந்தப் பெண்ணே அவர்களைப் பிரமாண்டமான சொகுசு பங்களாவினுள் அழைத்துச்சென்றாள். உள்ளே போகும்போதே ரோகன் அந்தப் பங்களாவின் சுற்றாடலை நோட்டம் விட்டான். விறைப்பான காவலர்கள் சுற்றிவந்துகொண்டிருந்தனர். கைகளில் ஆயுதங்கள் எதுவும் இல்லை அவற்றை அவங்கள் மறைத்து வைத்திருந்திருக்கலாம். பங்களாவின் நடுவில் பிரமாண்டமான நீச்சல் தடாகம். எவளையும் காணவில்லை. ஓர் அறையைக் காண்பித்து அதற்குள் தங்கியிருக்குமாறும் மொமே வந்ததும் அழைப்பதாகப் பவ்வியமாகக் கூறினான் ஒரு காவலன்.

அறைக்குள் பலவகையான குடிபானங்கள் சுக்றுண்டிகள் என்பன அழகாக அடுக்கிவைக்கப்பட்டு மொமேயினது நல்வரவு இவை உங்களுக்கானவை என ஒரு வரவேற்பு அட்டையும் வைக்கப்பட்டிருந்தது. அறையில் நுழைந்ததுமே அதன் ஜன்னலை திறந்து அந்தப் பங்களாவின் புக் பகுதியை கவனித்தான். பங்களாவின் புக் பகுதி ஒரு கால்வாய் கடலுடன் இணைக்கப்பட்டிருந்தது. அந்தக் கால்வாய் வள்ளங்கள் வந்துபோக வசதியாக வெட்டப்பட்டிருந்தது தெரிந்தது. அங்கே ஓர் ஆடம்பர வள்ளமும் நின்றது.

ஜன்னலைச் சாத்திவிட்டு அங்கிருந்து பெரிய கண்ணாடியில் தன்னை ஒரு தடவை பார்த்தான். ட்ரேயைச் சரி செய்தபடி, “என்ன நியும் எதுவும் பேசாமல் இருக்கின்றாய், பயமாக இருக்கிறதா?” என்றான். “பயமா எனக்கா. நீ அருகில் இருக்கும்போது என்னையே எனக்கு ஞாபகம் இருக்காது. பயம் என்னுள் எப்படி வரும். இந்தப்

புதுச் சப்பாத்து வலிக்கிறது” என்றபடி தன்னுடைய குதிக்கால் சப்பாத்துக்களைக் காலால் தட்டிக் கழற்றியவள், வெறும் கால்களைச் சுழற்றியபடி உட்கார்ந்திருந்தாள்.

சிறிது நேரத்தில் அறைக் கதவு தட்டப்பட்டது. ஒருத்தன் பணிவாக மோமே வந்துவிட்டார். நீங்கள் மட்டும் வாருங்கள் என ரோகனை அழைத்தான். எப்படி மெமேக்கு வணக்கம் சொல்வதென மனதில் ஒத்திகை பார்த்தபடியே நடந்து வரவேற்பறைக்குள் நுழைந்தான்.

அங்கே மெமே அமர்ந்திருந்தான். நன்கு உடற்பயிற்சி செய்து முறுக்கேற்றிய உடல். அதனைக் காண்பதற்காகவே அரைக்கை பனியன் ஜீன்ஸ் அணிந்த சாராசரி உயரத்துடன் இருந்திருந்தான். அவன்தான் மெமேயென்பதற்கு எந்த அடையாளமும் இல்லை. ஆனால், அவனாகத்தான் இருப்பான் என நினைத்த மாத்திரத்தில், “வணக்கம் வாருங்கள் இந்த மொமே உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறான்” என்றபடி அவன் எழுந்தான். வாய்நிறைந்த புன்னகையுடன் கையை நீட்டினான். “உங்களைச் சந்தித்தில் எனக்கும் மகிழ்ச்சி” என்று ரோகன் சொல்லிக்கொண்டிருந்தபோதே, மெமே அவனை இழுத்து தோளோடு தோள் மாற்றி அணைத்தான்.

அறிமுகம் முடிந்ததும் அமர்ந்து பேசத் தொடங்கினார்கள். அவர்கள் இருவரைத் தவிர வேறு யாரும் அங்கு இல்லை. மெமேயே பேசத் தொடங்கினான். “உங்கள் பொருட்களின் பட்டியல்கள் எனக்குக் கிடைத்தன. அதில் நீங்கள் திரும்பத் திரும்பக் கேட்கின்ற இலகு ஏவுகணைகள் மட்டும் பெற்றுக்கொள்ள முடியாது. அது தவிர்த்த அனைத்தும் ஒழுங்கு செய்யலாம்.

“மொமே நீங்கள் முயற்சித்தால் முடியாதது என்று இல்லை அந்த நம்பிக்கை எமக்குள்ளது.”

“ஒன்றை மட்டும் புரிந்துகொள்ளுங்கள். எதிரெதிரான வல்லரசு நாடுகளே எழுதப்படாத ஓர் ஒப்பந்தத்தில் ஒன்றுபட்டு நிற்கின்றனர். எந்தப் போராட்டக் குழுக்களோ அல்லது ஆயுத குழுக்களின் கைகளில் ஆகாய எதிர்ப்பு ஏவுகணைகளைக் கொடுப்பதில்லை என்பதுதான் அது. ஆனால், யுத்தம் நடைபெறும் இடங்களில் அவர்களின் ரகசிய முகவர்களேதான் அதனைப் பயன்படுத்துவார்கள். உதாரணத்துக்கு வியட்நாமில் பாவிக்கபட்ட ஏவுகணைகளை

ரஷ்யா கே.ஜி.பி முகவர்களும் ஆப்கானில் சி.ஐ.ஏ முகவர்களுமே கையாண்டனர். கியுபாவிலும் அதுவே நடந்தது. இங்கெல்லாம் யுத்தம் முடிவுக்கு வந்ததுமே முதல் வேலையாக அவர்கள் ஏவுகணைகளைத் திரும்பப் பெற்றுக்கொண்டுவிட்டனர்."

"ஏன்?"

"அவை தீவிரவாத குழுக்களுக்குக் கிடைத்து, தங்கள் பயணிகளின் விமானங்களின் மீது பயன்படுத்தப்படலாம் என்ற அச்சம் காரணமாக இருக்கலாம். பயணிகள் விமானம் மீது இலகுவாக அவற்றைக்கொண்டு தாக்கலாம்."

"உங்களிடமிருந்து முன்னர் நாங்கள் பெற்றுக் கொண்டிருக்கிறோமே!?"

"அவை சாம் பழைய தயாரிப்புக்கள்தானே. உடைந்த ரஷ்யாவில் எம்மால் முடிந்தது அவ்வளவுதான். அதனால் நவீன குண்டு வீச்சு விமானங்களை ஒன்றும் செய்ய முடியாதே உங்களால். அங்கேயும் நீங்கள் தவறிழைத்திருக்கிறீர்கள். ஒரு பயணிகள் விமானத்தை விழுத்திய செய்தி."

"அது ஏதோ தவறாக நடந்துவிட்டது."

"அதேதான். அதுதான் தவறு. இனிமேலும் அதற்கு முயற்சிக்காதீர்கள். அப்படி முயற்சித்தால் நீங்கள் உளவமைப்பு முகவர்களிடம் மாட்டிவிடும் அபாயம் உள்ளது. அடுத்த விஷயங்களுக்கு வருவோம். இந்தத் தடவை பணத்தைவிடப் பொருட்களாகவே எதிர்பார்க்கிறோம். என்னதான் தென் அமெரிக்கா கெக்கெயின் கிடைத்தாலும் ஆசியா கெறோயினுக்கும் கஞ்சாவுக்கும் உள்ள மதிப்பே தனியானது. அதோடு ஓர் உதவியும் வேண்டும். எங்கள் பொருட்கள் சிலவற்றை வட அமெரிக்கக் கரையொன்றில் நீங்கள் இறக்கிவிடவேண்டும். அவ்வளவுதான் நீங்கள் சரி சொன்னால் மிகுதி சரி"

"பொருட்கள் சரி. ஆனால், உங்கள் பொருட்களை இறக்குவது நான் முடிவெடுக்க முடியாது. அதனைக் கேட்டுத்தான் சொல்லவேண்டும். ஆப்பிரிக்காவின் பாதாள அரசனால் அங்குப் போக முடியாதா?"

"நான் என்னதான் பாதாள அரசனாக இருந்தாலும் உங்கள் கடல் வலையமைப்பு என்பது பிரமாண்டமானது. உலக நாடுகளுக்கே தலைவலியைக் கொடுக்கின்றது.

அந்தளவுக்கு இன்னமும் என்னால் முடியவில்லை. அது எப்படி உங்களால் சாத்தியம்?”

“எல்லாம் எங்கள் தலைவனின் திறமை. அதற்கெனத் தேர்ந்தெடுத்துத் திறமையானவர்களை நியமித்திருக்கிறார்.”

“இப்போது எங்கள் பேரம் முடிந்துவிட்டது. சாவகாசமாகப் பேசலாமா? உங்கள் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நீங்களே உற்பத்தி செய்யலாமே. ஏன் வேறு நாடுகளில் இருந்து கடத்த வேண்டும்?”

“எங்களது தேசம் உன்னதமான தேசமாக உருவாக்குகிறோம். அங்கு போதைப் பொருட்கள் கிடையாது; விலைமாந்தர் கிடையாது; பிச்சையெடுப்பவர் கிடையாது; அநாதைகள் கிடையாது.”

மெமே சத்தமாகச் சிரித்தபடி, “என்ன சொல்கிறாய்? உங்கள் தேசம் உருவானால் அதில் முதலில் பாதிக்கப்படபோவது நீதான்.”

“அது எனக்கும் தெரியும். எனது தேசம் உருவாகின்ற அந்தப் பொழுதே நான் தற்கொலை செய்துகொள்வேன். அங்கு என் போன்றவர்கள் வாழ மாட்டார்கள்.”

“சரி, எதற்கு இப்படி. மிகுதி முடிவை பின்னர் சொல். இனி நாங்கள் வாழ்க்கையை அனுபவிக்கலாம். அடுத்த பகுதியில் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது உங்கள் நண்பியையும் அழைத்து வாருங்கள் போகலாம்” என்றான்.

அந்த அறையில் விருந்து ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. தேவைக்கு அதிகமானதாகவே உணவும் குடிவகைகளும் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. நியும் முடன் உள்ளே நுழைந்தான். “என்ன குடிக்கிறாய் சம்பெயினா? கொக்டெயிலா?” என்றான் மெமே. ஒரு கணமும் தாமதிக்காமல் “சம்பெயின்” என்றான்.

“சம்பெயினோடு உனக்கு ஓர் அழகியையும் சேர்த்துத் தருகிறேன். இதோ அந்த அழகி மக்கும்பா. இவள் உனக்காக” என ஒருத்தியை நோக்கி கையைக் காட்டினான் மொமே. இவன் அங்குப் பார்க்க ஒருத்தி சற்றே நாணியபடி பார்த்துக்கொண்டு நின்றாள். “கறுப்பழகிகளை உரித்துப் பார்த்திருக்கிறாயா?” “அதெல்லாம் சர்வதேச ரீதியிலேயே உரித்திருக்கிறேன். ஆனால், இவள் பேரழகியாகத் தெரிகிறாள்” மேடையில் வலம்வரும் மாடல் அழகியைப்போலச்

சம்பெயினைக் கையில் ஏந்தியபடி ரோகனை நோக்கி அவள் வந்தாள். அவளைப் பார்த்தால் பிறந்து வளர்ந்தவள் போல தெரியவில்லை. அங்கங்கள் எல்லாம் அளந்து செய்து அச்சில் வார்த்தெடுக்கப்பட்டவள் போல இருந்தாள். இதோ என்னுடைய பரிசு என்று நியும்மை மொமேக்கு அறிமுகம் செய்தான் ரோகன்.

“எனக்கு ஆசிய அழகி இதுதான் முதற்தடவை நன்றிகள்” என்றான் மெமே. மதுக்கிண்ணங்கள் ஒன்றோடொன்று உரசிக்கொண்டன. ஒருவன் சிறிய பொட்டலம் ஒன்றைக் கொண்டுவந்து அங்கிருந்த கண்ணாடி மேசையில் பிரித்துப் பரப்பி, பின்னர் அதனை மெல்லிய நீள் கோடாக்கிவிட்டுக் கொக்டெயில் கிண்ணத்தில் இருந்த ஒரு ஸ்டாவை எடுத்து அதை இரண்டாக வெட்டி ஒன்றை ரோகனிடமும் மற்றயதை மொமேயிடமும் நீட்டிவிட்டுப் போனான். நேராக உறுஞ்சிய இரு குழாய்களும் ஒரு புள்ளியில் வந்து முட்டி நின்றுகொண்டது. அழகிய சுருட்டுப் பெட்டி ஒன்றைத் திறந்து ரோகனிடம் நீட்டிய மொமே “இவை கியூபா விசேஷ சுருட்டுகள். ஒன்றைப் பிடித்துப்பார்” என்றான். சிவந்துபோயிருந்த கண்களுடன் ஒரு சுருட்டை எடுத்து மூக்கின் குறுக்கே வைத்துக் கண்களை மூடி ஆழமாக அதன் வாசனையை உள்ளேயிழுத்தான். அவனின் தந்தையின் மார்பில் தவழ்ந்ததுபோலவே ஓர் உணர்வு.

“என்ன, சுருட்டை உருட்டி உருட்டிப் பார்த்துக்கொண்டிருக்கிறாய்” என்றபடி மக்கும்பா சுருட்டின் நுனியை வெட்டி அதில் நெருப்பை மூட்டிவிட்டாள். அன்றிரவு அளவுக்கு அதிகமாகப் போதையேறியிருந்தது. ஏதோ ஒப்புக்காகக் கொஞ்சம் சாப்பிட்ட ரோகன் கறுப்பழகியை அழைத்துக்கொண்டு அறைக்குள் நுழைந்தான். பேரங்கள் நல்லபடியாக முடிந்த விஷயத்தை அவனுக்குத் தெரியப்படுத்தவேண்டும். தூங்கிவிடக் கூடாது என்று நினைத்தவன், கைக்கடிகாரத்தில் 20 நிமிடங்கள் கழித்து அலாரம் வைக்கலாமா என யோசித்தான். ‘சே இப்படியொரு பேரழகியுடன் வெறும் 20 நிமிடங்களா! இன்னொரு 20 நிமிடங்கள் என்று 40 நிமிடங்கள் கழித்து அலாரத்தை வைத்தான்.

அலாரம் அடிக்க முன்பே அவன் வியர்த்து களைத்து ஓய்ந்துபோனான். எழுந்து உடைகளை அள்ளி அணிந்துகொண்டவன், கொஞ்சம் போதையும்

இறங்கியதுபோல இருந்தது. சிறிது நேரத்தில் வருகிறேன் என்று அவளிடம் சொல்லிவிட்டு வெளியேறினான். மீண்டும் விடுதிக்கு வந்து போனடிக்க வேண்டிய நேரம் வரும் வரை காத்திருந்து இலக்கங்களை அழுத்தினான். இந்தோனேசியா யலாங்பாரு வீதியோரத்து தொலைபேசி கூண்டு மணி அடித்தது. அவன் தொலைபேசியை எடுத்தான்.

“என்ன மாதிரி?”

“எல்லாம் நல்லபடியா முடிஞ்சுது. ஆனால், ஒரு புது டீலை போடுறான். அது சரியெண்டால் மிச்சம் சரி.”

“என்னது புது டீல்?”

“ஆப்பிரிக்க நாடு ஒண்டிலை உள்ள அவனது பொருட்களை வடஅமெரிக்கா கரை ஒன்றில் இறக்கிவிடவேணுமாம்.”

“அது முடியாதெண்டால்...?”

“அதைத்தான் அவன் முதலாவதாக எங்களிட்டை எதிர்பார்க்கிறான். சரியெண்டால் எல்லாம் சுலபமாகும். உடைஞ்ச கிழக்கு நாட்டிலை பாதியும் மிச்சம் வறுமையான கறுப்பு நாட்டிலையும் போய் ஏத்தவேண்டியதுதான்.”

“சரி பெரியது கிடைச்சதா?”

“அதைப் பற்றிக் கதைக்க வேண்டாம் எண்டிட்டான். முடியாதாம்.”

“சரி, நான் முடிவு சொல்ல முடியாது. அங்கே கேட்டுச் சொல்லுறன். 15 நிமிஷம் கழிச்சு திரும்ப எடு!”

கட்டிலில் விழுந்து கண்ணை மூடினான். ஆனால், மூட முடியவில்லை. ஒவ்வொரு நிமிடமும் நேரத்தைப் பார்த்தான். இறுதியில் நேரத்தைப் பார்த்தபடியே படுத்திருந்தான். 15 நிமிடங்கள் கடந்தன. மீண்டும் தொடர்பை ஏற்படுத்தினான்.

“என்னவாம்?”

“டீல் ஓகேயாம். ஏத்தி இறக்கிற இடம் விவரங்களை அனுப்பிவிடு.”

“சரி மச்சான். அதோடை இந்த முறை நானும் ஒருக்கா ஊருக்கு போயிட்டு வரலாமெண்டு நினைக்கிறன். அம்மாவை பாத்து கனகாலமாகுது. நான் எங்கே எப்பிடி இருக்கிறன் எண்டு கலைப்பட்டுக்கொண்டிருப்பா. நான்

*வாறன் எண்டு அங்கே அறிவிச்சுவிடு.”*

*“சரி, நியும்மை பத்திரமா திருப்பி அனுப்பிட்டு நீ வழைமையான தீவுக்குப் போய் நில். அங்கே வண்டிவாற நேரம் நான் உனக்குச் செய்தியனுப்பிறன்.”*

*“மிச்சம் குடுக்க வேண்டியது எங்கேயாம்?”*

*“மொரீஷியஸில் ஒரு பாங்கிலை போட்டால் சரி. அந்த விவரமும் அனுப்பிவிடுறன். சரி, மச்சான் சந்திப்பம்..”*

*ஒரு மாதம் கழித்துப் புலிகளின் இரண்டு ஆயுதம் தாங்கிய கப்பல்கள் முல்லைத்தீவு கடலில் சில நாட்கள் நங்கூரமிட்டுவிட்டு திரும்பவும் சர்வதேச கடலில் இறங்கிப் போய்க்கொண்டிருந்தன. வன்னியில் ஓயாத அலை மூன்று சுழன்றடித்துக்கொண்டிருந்தன.*

**அடிக்குறிப்புக்கள்:**

***நட்சத்திர நாடு அமெரிக்கா.***

***நட்சத்திர நாய்கள். அமெரிக்கா சி.ஐ.ஏ உளவமைப்பு மற்றும் அவர்களுக்காகப் பணத்துக்கு வேலை செய்பவர்கள்.***

***உடைந்த நாடு.. ரஷ்யா.***

# 59

ஆப்பிரிக்காவில் மொமேயுடனான டீல் முடிந்த பின்னர், இயக்கத்தின் போதைப் பொருள் வியாபாரம் ஆயுதப் போக்குவரத்துகள்... என்பன சுமுகமாக நடந்துகொண்டிருந்தன. அதனால் அவன் ஆப்பிரிக்க நாடுகளில் இருந்து இயங்கவேண்டிய தேவை ஏற்பட்டிருந்தது. வன்னியில் இருந்து வெற்றிச் செய்திகளாகவே வந்துகொண்டிருக்க அந்த உற்சாகத்துடன் எரித்தியா, கோமர், நைஜீரியா, சிராலியேன் என விமானத்தில் பறந்துகொண்டிருந்தான். அவனோடு புதிதாக நைஜீரியாவில் இருந்து ஆனந்தனும் இணைந்துவிட்டிருந்தான். கேமர் நாட்டில் ஆனந்தனோடு தங்கியிருந்தபோது உதயண்ணையிடம் இருந்து அந்தத் தொலைபேசி அழைப்பு வந்தது.

கொஞ்ச காலத்துக்கு எல்லா நடவடிக்கைகளையும் நிறுத்தி வைக்குமாறு தலைமையிடம் இருந்து அறிவித்தல் வந்திருப்பதாகத் தயக்கத்தோடு உதயண்ணைச் சொன்னார். அந்த அறிவித்தல் அவனுக்குக் கொஞ்சம் அதிர்ச்சி கலந்த ஆச்சர்யமாக இருந்தது.

“எல்லாம் ஒழுங்காக நடந்துகெண்டிருக்கு. ஏன் தலை இப்பிடி திடீரெண்டு நிப்பாட்டச் சொன்னது?”

“பேச்சுவார்த்தை தொடங்கியிருக்கு...”

“பேச்சுவார்த்தை அடிக்கடி நடக்கிறது வழைமைதானே.

ஆனால், ஒரு தரம்கூட எங்கடை வேலைய நிப்பாட்டினது கிடையாதே?"

"ஓமடா இந்தத் தரம் வெளிநாடுகள் சம்பந்தப்பட்டிருக் கிறபடியா அவங்களும் கையெழுத்து போட்டிருக்கிறதாலை நிப்பாட்டச் சொல்லியிருக்கலாம். எதுக்கும் கொஞ்ச நாளைக்குப் பொறுத்துப் பாப்பம்" என்றுவிட்டுப் போனை வைத்துவிட்டார்.

அவன் உடனடியாகச் சிலருடன் தொடர்புகொண்டு நிலவரத்தைச் சொல்லிவிட்டிருந்தான். அதற்குப் பிறகு எந்த வேலையும் இல்லாததால் அவனுக்கும் ஆனந்தனுக்கும் பார்களில் புகுந்து தண்ணியடித்துவிட்டு ஊர் சுற்றுவதுதான் வேலை. நாட்கள் மாதங்களாகிக்கொண்டிருந்தன. ஆனால், உருப்படியான எந்தத் தகவலும் அவனுக்குக் கிடைக்கவில்லை. அதே நேரம் கையில் இருந்த காசும் கரைந்துகொண்டிருந்தது. காசை மிச்சம் பிடிப்பதற்காகப் பார்களுக்குப் போவதில்லை. மலிவான சோழன் பியரும், சோழன் மாவை வாங்கியந்து புட்டு அவித்துச் சாப்பிட்டு பொழுதைப் போக்கினார்கள். எல்லாமே சோழன் மயமாகிவிட்டதால் வெறுப்படைந்து போயிருந்த ஆனந்தனுக்கு, "டேய், நாங்கள்தானடா உண்மையான சோழர் பரம்பரை. கொஞ்ச நாள் பொறு" என்று ஆறுதல்படுத்தியிருந்தான்.

இரண்டாவது மாதமும் முடிந்த நிலையில் சோழர் பரம்பரையினரிடம் சோளம் வாங்கக்கூடப் பணம் இல்லை. வீட்டு வாடகையும் கட்டாததால் ஆனந்தனின் ரோலெக்ஸ் கைக்கடிகாரம் வீட்டு ஓனர் ஓலரா ஒட்டுண்ணுவின் கைகளில் மின்னிக்கொண்டிருந்தது. அது ஓடுகிறதா என அவன் அடிக்கடி காதில் வைத்துப்பார்த்துக்கொண்டிருந்தான். "நேரம் பார்க்கத் தெரியாத நாறப்பயல். ஓடுதா எண்டு காதிலை காதிலை வைச்சுப்பார்க்கிறான். உவனுக்கு ரோலெக்ஸ் எண்டால் என்னவெண்டு தெரியுமோ? அதை வித்தால் இங்கே ஒரு வீடே வாங்கலாம்" என்று புறுபுறுத்தவனிடம் பொறுமையா இருடா. அடுத்தத் தரம் உதயண்ணைக் கதைக்கேக்கை நிலைமையைச் சொல்லி காசு அனுப்பச் சொல்லுவம். காசு வந்ததும் வாடகையைக் குடுத்திட்டு மணிக்கூட்டை வாங்கிடலாம்

என்றதும், "ஓமடா நைஜீரியா விலை நிம்மதியா ஏ.பி.சி.டி சொல்லிக் குடுத்துக்கொண்டிருந்தனான். வேலையையும் விட்டிட்டு உங்களுக்குப் பின்னாலை வந்ததுக்கு இதுவும் வேணும்; இன்னமும் வேணும் என்று கோபமாகச் சொல்லிய ஆனந்தன் சோழன் பியரை மடமடவெனக் குடிக்கத்தொடங்கினான்.

❍

இரண்டு நாள் கழித்து மீண்டும் உதயண்ணைத் தொடர்புகொண்டிருந்தார். அவரது குரல் வழைமைக்கு மாறாகக் கிணத்துக்குள் இருந்து வருவதுபோல இருந்தது. "டேய், எங்கடை கட்டமைப்பைக் கலைச்சிட்டு எல்லாரும் ஏதாவது நாடுகளிலை தங்கடை சொந்த வாழ்க்கைக்குப் போகலாம்" என்று தலைமை அறிவிச்சிருக்கு என்று வசனங்களை நிறுத்தி நிறுத்திப் பேசினார். "என்ன அண்ணைப் பகிடிவிடுறியளோ?" என்று கொஞ்சம் கோபமாகத்தான் கேட்டான்.

"இல்லையடா எனக்கும் என்ன செய்யிறதெண்டு தெரியேல்லை. உங்களிட்டை எப்பிடி சொல்லுறதெண்டு தெரியாமல் இரண்டு கிழைமையா தவிச்சு இண்டைக்குச் சொல்லுறதெண்டு முடிவெடுத்தனான். மற்றாக்களுக்கும் சொல்லிட்டன். எனக்கும் செலவுக்குக் காசு இல்லாமல் தம்பிக்கு போனடிச்சு அவன்தான் கனடாவில் இருந்து அனுப்பிவிட்டவன். நானும் எங்கேயாவது போவம் எண்டு முடிவெடுத்திருக்கிறன். எல்லாருக்கும் அதிர்ச்சியாத்தான் இருக்கும். எல்லாரும் கெட்டிக்கார பெடியள். எப்பிடியாவது உங்கடை எதிர்காலத்தை கொண்டு நடத்துவீங்கள் எண்டு எனக்குத் தெரியும். என்னைத் தயவுசெய்து மன்னிச்சுடுங்கோடா" என்று சொல்லும்போதே அவர் குரல் கம்மியது. அதோடு போனும் கட்டாகிவிட்டது.

சுவரோடு சாய்ந்தபடி தலையைக் குனிந்து நின்றவனின் தோளில் கையை வைத்து "யோசிக்காதை. ஓனரிட்டை மணிக்கூட்டை வாங்கி வித்திட்டு அவரின்ரை கடனையும் அடைச்சிட்டு இரண்டு பேரும் நைஜீரியா போவம். அங்கே எனக்கு எப்பிடியும் வாத்தியார் வேலை கிடைக்கும். நீ கொஞ்ச நாளைக்கு அங்கே தங்கியிருதால் உனக்கும் ஒரு மாற்றமாயிருக்கும்" என்று ஆனந்தன் ஆறுதல் சொல்ல

முயற்சித்துக்கொண்டிருந்தான்.

அவனே வேறு மாதிரி யோசித்துக்கொண்டிருந்தான். யூலியாவுக்குப் போனடிக்கலாம். ஆனால், அவளிட்டை ஏற்கெனவே பல தரம் பணம் வாங்கியாச்சு. வேறை யாருக்குப் போனடிக்கலாம் என வெளிநாடுகளில் இருந்த அவனது நண்பர்கள் அனைவரையும் ஒவ்வொருத்தர் முகத்தையும் மனத்திரையில் தட்டிப்பார்த்துக்கொண்டிருந்தவனுக்குத் தர்மினியின் முகம் வந்ததும் நிறுத்தினான். தர்மினி சுவிஸில் இருக்கிறாள். ஊரில் அவளின் காதலுக்கு நிறைய உதவியிருக்கிறான். காசு கேட்டால் மறுக்க மாட்டாள். போனடித்தான். நான்கு நாட்களில் பணம் கைக்குக் கிடைத்திருந்தது. ஓனரிடம் இருந்து கைக்கடிகாரத்தை மீட்டு ஆனந்தனை நைஜீரியாவுக்கு அனுப்பியவன், அறைக்கு வந்து அவனது படத்தோடு இருந்த அனைத்து பாஸ்போட்டுகளையும் எடுத்து அடுக்கி ஒவ்வொன்றாக பார்த்தவன் அதில் ஒன்றை எடுத்து அதில் இரண்டு ரப்பர் முத்திரையைக் குத்தியவன், மிகுதி அனைத்தையும் மளமளவெனக் கிழித்து முடித்துவிட்டு வெளியே வந்து ஒரு கிடங்கை வெட்டியவன் அதற்குள் அவனிடமிருந்த ரப்பர் ஸ்டாம்புகள் கிழித்து முடித்த பாஸ்போட்டுகள் அனைத்தையும் போட்டு கொளுத்தி அவை சாம்பலானதும் கிடங்கை மூடிவிட்டு வீட்டு ஓனரிடம் விடை பெற்றவன் பெல்ஜியம் ஊடாக ஃபிரான்ஸ் வந்து சேர்ந்திருந்தான்.

❍ ❍

# 60

**அ**ழைப்பு மணிச் சத்தம் கேட்டு கதவைத் திறந்து ஆச்சர்யத்தில் உறைந்துபோய் நின்ற யூலியாவை அப்படியே கட்டியணைத்தான். சில நிமிடங்கள் அழுகையுடனான மெளனங்களாகக் கழிந்தன. எல்லாம் முடிந்துவிட்டது. இனி எங்கும் போகப்போவதில்லை என யூலியாவிடம் சொன்னதும் அவளுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. ஒரு வாரமாக வீட்டுக்குள்ளேயே T.V-யை பார்த்தபடி இருந்தவனுக்குப் போரடிக்கத் தொடங்கியது. பியர், சிகரெட் என யூலியா வாங்கிக்கொண்டு வந்து கொடுத்துக்கொண்டிருந்தது அவனுக்குச் சங்கடமாக இருக்க, வேலை தேடத் தொடங்கினான். பல நண்பர்களிடமும் வேலைக்குச் சொல்லி வைத்திருந்தான். அப்போதுதான் நண்பன் ஒருத்தன் வேலையிருப்பதாகச் சொல்ல ஆவலாக ஓடிப்போயிருந்தான். உணவு விடுதி ஒன்றில் கோப்பைகள் கழுவும் வேலைதான் கிடைத்ததே அவனுக்கு நிம்மதியாக இருந்தது. ஒவ்வொரு கோப்பையாகக் கழுவும்போதும் ‘ஊர் சுத்தாமல் படியடா படியடா’ என்று அப்பா திட்டிய திட்டுக்கள் திரும்பத் திரும்ப நினைவுக்கு வந்துபோய்க்கொண்டிருந்தன.

ஆரம்பத்தில் சிரமமாகவும் இடுப்பு நோவும் எடுத்தது. அதுவே பிறகு பழகிப்போய்விட்டிருந்தது. அதன் பிறகு அவன் ஊர் நிலைமைகளைச் செய்திகளில் மட்டுமே பார்த்துக்கொண்டிருந்தான். மாவிலாறு பூட்டியாச்சாம் என்று தொடங்கி மடு, கிளிநொச்சி, சாலைக்கடற்கரை விழுத்திட்டுதாம் என்று இழப்பும் இழவுச் செய்திகளாக மட்டுமே வந்துகொண்டிருந்தபோது, அன்று ஒரு செய்தி

உலகம் முழுவதும் அனைத்து தொலைக்காட்சிகளும் திரும்பத் திரும்பக் காட்டிக்கொண்டிருந்தார்கள். அதில் மண்டை பிளந்த நிலையில் இறந்துபோயிருந்தவரின் உடலைக் காட்டி இலங்கையில் பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டு உள்நாட்டு ஆயுதப்போர் முடிவுக்கு வந்ததாகச் சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

அதைப் பார்த்தும் கடும் மன உளைச்சலில் இருந்தவன் வேலைக்கும் செல்லவில்லை. அன்றிரவு மலைப் பகுதி ஒன்றில் அமைதியான பகுதியில் அமைந்திருந்த அவனது நண்பன் ஒருவனின் மதுச்சாலைக்குச் சென்றான். மது அருந்தியபடியே தனது மனப் பாரங்களை நண்பனிடம் பரிமாறலாம் என நினைத்துப் போய்க்கொண்டிருந்தபோது லேசாக மழையும் தூற ஆரம்பித்திருந்தது. நண்பனோடு உரையாடியபடியே நிறையவே மது அருந்தினான். வெளியே தூறல் பெருமழையாகியது.

நள்ளிரவைத் தாண்டி நண்பனிடம் விடை பெற்றான். இவனைக் கொண்டுவந்து வீட்டில் விடுவதாக நண்பன் சொன்னான். இவன் மறுத்துவிட்டான். தள்ளாடியபடி வந்து காரில் ஏறினான்.

**காரில் சி.டி பிளேயரை சுழலவிட்டான் "கல்லறைகள் விடை திறக்கும். அங்கு மெல்லிய காற்றது இருக்கும். பாலிலை சொரிந்திடும் நிலவு. ஒரு பாடலை எழுதிடும் இரவு" சாந்தன் பாடிக்கொண்டிருந்தார். கார் கண்ணாடியில் தண்ணீரை வழித்துக்கொண்டிருந்த வைப்பர்களின் சத்தத்தை மீறி பாடலின் சத்தத்தை அதிகமாக்கினான். வளைந்த மலைச் சரிவுகளில் கார் வேகமெடுகத் தொடங்கியது. அந்தச் சமயத்தில் கைத் தொலைபேசி அலறியது. பார்த்தான், அது யூலியா அதனை எடுத்துக் காதில் வைத்து ஹலோ என்றபோது, அது கை நழுவி விழுந்துவிட அதைக் குனிந்து எடுத்தபடி நிமிர்ந்தான். எதிரே பெரிய வீதி வளைவு. காரைக் கட்டுப்படுத்த பிரேக்கை அழுத்தினான். வெளியே பெய்த பெருமழை கார் கட்டுப்பட மறுத்துச் சறுக்கியபடி வீதிப் பாதுகாப்புச் சுவரை உடைத்துக்கொண்டு பள்ளத்தாக்கில் உருளத் தொடங்கியிருந்தது.**

❍ ❍